தென்னிந்தியத் திருச்சபை

கன்னியாகுமரிப் பேராயம்

அருளுரைக் கையேடு 2025

இந்த இறைவாக்குகளைப் படிப்போரும்
இவற்றைக் கேட்போரும் இந்நூலில் எழுதியுள்ளவற்றைக்
கடைபிடிப்போரும் பேறு பெற்றோர் (திவெ.1: 3).

தென்னிந்தியத் திருச்சபை

கன்னியாகுமரிப் பேராயம்

அருளுரைக் கையேடு

2025

வெளியீடு

தொடர்புத் துறை

கன்னியாகுமரிப் பேராயம்

ஆசியுரை

“தமது சொந்த இரத்தத்தால் தமதாக்கிக் கொண்ட கடவுளின் திருச்சபையை மேய்ப்பதற்குத் தூய ஆவியார் உங்களைக் கண்காணிப்பாளராக ஏற்படுத்தியுள்ளதால் உங்களையும், மந்தை முழுவதையும் கவனமுடன் காத்துக் கொள்ளங்கள்” (திருத்தூதர் பணிகள் 20: 28).

கடவுளின் வார்த்தை உயிருள்ளது, ஆற்றல் வாய்ந்தது. இதனை இறைமக்கள் எளிதாகப் புரிந்து கொள்ள உதவிடும் இந்த அருளுரைக் கையேடு. இந்நூலில் குருவானவர்கள் மற்றும் திருப்பணிவிடையாளர்கள் தகுந்த ஆயத்தத்தோடும், ஜெபத்தோடும் அருளுரைகளை எழுதியுள்ளனர். இறைமக்கள் இறைநம்பிக்கையில் வளர்ச்சியும், வாழ்வும் பெற்று வளர்ந்திடவும், இறைமக்களைக் கவனமுடன் காத்து நடத்திடவும் இவ்வருளுரைக் கையேடு உதவிட ஆண்டவர் அருள் செய்வாராக.

2025-ஆம் ஆண்டின் அருளுரைக் கையேடு உரிய நேரத்தில் வெளியிட உதவிய அனைவரையும் அன்போடு வாழ்த்துகிறேன். இந்தப் பொறுப்பினை நிறைவேற்றிட தன்னை அர்ப்பணித்த தொடர்புத்துறை இயக்குநர் குருவானவர் முனைவர் O. **டென்சிங்,** இதனை முறைப்படுத்திய குருவானவர் S. **கிரீஷ் குமார்,** பேராய அச்சகங்களின் கண்காணிப்பாளர் குருவானவர் A. **மகேர் ஷால் அஸ்பாஸ்** மற்றும் உழைத்த அனைவரையும் பாராட்டி, தந்தை, மைந்தர், தூய ஆவியார் திருப்பெயரில் ஆசி கூறுகின்றேன்.

ஜெபத்துடன் இறைப்பணியில்

Rt Revd Dr A.R. செல்லையா
பேராயர், கன்னியாகுமரிப் பேராயம்

தொடர்புத்துறை இயக்குநரிடமிருந்து . . .

“கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது, ஆற்றல் வாய்ந்தது . . . உள்ளத்தின் சிந்தனைகளையும் சீர்தூக்கிப்பார்க்கிறது” (எபி. 4: 12).

அன்பர்களே! காணக்கூடாதக் கடவுள் தன்னைத் திருமறை வார்த்தைகளினூடாய் மனுக்குலத்துக்கு வெளிப்படுத்தினார். தூய ஆவியாரின் துணையோடு எழுதப்பட்ட திருமறை எக்காலத்திலும் மானுடவாழ்விற்கு வழிகாட்டியாய்த் திகழ்கிறது. புதிதாய்ப் பிறந்த குழந்தைகள்போல வஞ்சகமற்ற வார்த்தையாகிய பாலை அருந்த ஆர்வமுள்ளவர்களாயிருங்கள். இதை அருந்துவதால் நீங்கள் மீட்பில் வளருவீர்கள் (1 பேதுரு 2: 3) என்கிறார் பேதுரு. எனக்கு எல்லாம் தெரியும் என்ற எண்ணத்தோடு திருமறையை ஆராய்வது பயன்தராது. “A frlsh reading/ rereading of the Bibile” நமக்கு புதுப்புது அர்த்தங்களை தரும். இத்திருவார்த்தைகளை மக்கள் வாழும் சூழலோடு புரிந்து நாம் அருளுரையாற்றும்போது திருச்சபை பயனடைகிறது.

தென்னிந்தியத் திருச்சபை அருளுரை அட்டவணையைப் பின்பற்றி ஞாயிறு அருளுரைகள் எழுதப்பட்டுள்ளன. அத்தோடு பல்வேறு சிறப்பு நாட்களுக்கான அருளுரைகளும் இதில் இடம்பெற்றுள்ளது.

இவ்வருட “அருளுரை கையேடு 2025” தொகுப்புப் பணியில் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயல்பட்டு உழைத்த நண்பர் அருள்திரு. **S. கிரீஷ் குமார்** அவர்ளுக்கு மனமார்ந்த நன்றி கூறுகிறேன். ஒவ்வொரு அருளுரைகளையும் தகுந்த ஆயத்தத்தோடும் ஜெபத்தோடும் எழுதி தந்த சேகர ஆயர்கள், ஆயர்கள் மற்றும் திருப்பணிவிடையாளர்களைப் பாராட்டுகிறேன். தொடர்புத்துறை பணிகளில் என்னோடு உழைக்கும் உதவி இயக்குநர் Mr. **M.R. மில்ட்டன் மார்க்** அவர்களைப் பாராட்டுகிறேன். இந்நூல் வெளிவர உதவிய பேராய அச்சக மேலாளர் அருள்திரு. **A. மகேர் ஷால் அஸ்பாஸ்** மற்றும் உழைத்த அச்சகப் பணியாளர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

இறையருள் நம் அனைவரோடும் இருப்பதாக!

அருள்திரு. முனைவர். **O. பெஞ்சிங்**
இயக்குநர், தொடர்புத்துறை

தொகுப்பாசிரியரிடமிருந்து . . .

"மோசே முதல் இறைவாக்கினர் வரை அனைவரின் நூல்களிலும் தம்மைக் குறித்து எழுதப்பட்ட யாவற்றையும் அவர் அவர்களுக்கு விளக்கினார்" (லூக். 24: 27).

இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் அன்பின் வாழ்த்துகள். 2025-ஆம் ஆண்டிற்கான அருளுரைகளைத் தொகுத்து வழங்குவதில் மிக்க மகிழ்ச்சி.

கடவுளின் வாக்கு அனைத்துத் காலங்களுக்கும் உரியவை. இறைவேண்டலுடனும், விவிலியப் பின்னணியத்துடனும், சூழல் சார்ந்து ஆண்டவரின் வாக்குகளை இறைமக்களுக்கு விளக்கி கூற ஆண்டவர் நம்மை அழைத்திருக்கிறார் என்பதைப் புரிந்து, அருளுரைகளை ஆயத்தம் செய்து மக்கள் உள்ளங்களில் பதிய வைப்போம். அவைகள் இறையரசுக்குரிய வைரங்களாய் ஒளிரட்டும்.

அருளுரைகளைத் தொகுத்து, நெறிப்படுத்தும் பணியினை எம் கரங்களில் தவழவிட்ட அன்புக்கும் மதிப்புக்குமுரிய நம் பேராயர் **பேரருள்திரு. அறிவர் A.R. செல்லையா** அவர்களுக்கும், நேர்கோட்டுப் பாதையில் அருளுரைகள் தடம் பதிக்க வழிகாட்டிய தொடர்புத்துறை இயக்குநர் **அருள்திரு. முனைவர். O. டென்சிங்** அவர்களுக்கும், அட்டைப்படத்தை வடிவமைத்து உதவிகள் செய்த இணை இயக்குநர் **திரு. M.R. மில்ட்டன் மார்க்** மற்றும் வசன மலர்களைத் தலைப்புக்கேற்ப அருளுரை மாலையாய் தொகுத்து அழகுப்படுத்திய பேராயர், பேராயரம்மா, சேகர ஆயர்கள், ஆயர்கள், திருப்பணிவிடையாளர்கள் அனைவருக்கும் உளமார்ந்த நன்றிகள்.

இவ்வாண்டைய அருளுரையுடன் தென்னிந்தியத் திருச்சபை சினாட் வழங்கியுள்ள இறைவேண்டல்களும் இடம் பெற்றுள்ளன. ஆங்கில மொழித்தலைப்புகள் மற்றும் இறைவேண்டல்களைத் தமிழில் மொழியாக்கம் செய்ய உதவிய நாகர்கோவில் மகளிர் கிறிஸ்தவக் கல்லூரிப் பேராசிரியைகளான **முனைவர் G.J. ஹேம்லின், முனைவர் J. சுபிதா பெர்சிஸ், முனைவர் S.N. லீனா நெல்சன்** ஆகியோருக்கும் அருளுரைக்கேற்ற பாடல்களை வரிசைப்படுத்திய **அருள்திரு. D. ஒனேசிமஸ் சகாயம்** (ஆயர், அச்சன்குளம்)அவர்களுக்கும், தமிழ் எழுத்துப் பிழை திருத்தம் செய்து உதவிய பணிநிறைவு தலைமை ஆசிரியர் **திரு. N. தாசையன்** மற்றும் பணிநிறைவு ஆசிரியை **திருமதி. Y. விமல லதா** ஆகியோருக்கும், அச்சுப்பணியைத் திட்டமிட்டு மெருகூட்டிய அச்சக மேலாளர் **அருள்திரு. A. மகேர் ஷால் அஸ்பாஸ்** மற்றும் இன்முகத்துடன் சோராது பணியாற்றிய நாகர்கோவில் அச்சகப் பணியாளர்கள் அனைவருக்கும் சொற்களைத் தொகுத்து நன்றி என்ற சொல்மாலைச் சூட்டுவதன்றி கைம்மாறு செய்ய அறியேன்.

"அல்லேலூயா! மீட்பும், மாட்சியும் வல்லமையும் நம் கடவுளுக்கே உரியன" (தி.வெ. 19: 1).

அன்புடன்

அருள்திரு. S. கிரீஷ் குமார்

(தொகுப்பாசிரியர்)

பழைய ஏற்பாட்டு நூல்கள்

பெயர்	சுருக்கக்குறியீடு
தொடக்க நூல்(ஆதியாகமம்)	தொ.நூ.
விடுதலைப் பயணம் (யாத்திராகமம்).	வி.ப.
லேவியர் (லேவியராகமம்)	லேவி.
எண்ணிக்கை (எண்ணாகமம்)	எண்.
இணைச் சட்டம் (உபாகமம்)	இ.ச.
யோசுவா	யோசு.
நீதித் தலைவர்கள் (நியாயாதிபதிகள்)	நீ.த.
ரூத்து (ரூத்)	ரூத்
சாமுவேல் - முதல் நூல்	1 சாமு.
சாமுவேல் - இரண்டாம் நூல்	2 சாமு.
அரசர்கள் (இராஜாக்கள்) - முதல் நூல்	1 அர.
அரசர்கள் (இராஜாக்கள்) - இரண்டாம் நூல்	2 அர.
குறிப்பேடு (நாளாகமம்) - முதல் நூல்	1 குறி.
குறிப்பேடு (நாளாகமம்) - இரண்டாம் நூல்	2 குறி.
எஸ்ரா (எஸ்றா)	எஸ்ரா
நெகேமியா	நெகே.
எஸ்தர்	எஸ்.
யோபு	யோபு
திருப்பாடல்கள் (சங்கீதம்)	தி.பா.
நீதிமொழிகள்	நீ.மொ.
சபை உரையாளர் (பிரசங்கி)	ச.உ.
இனிமைமிகு பாடல் (உன்னதப்பாட்டு)	இ.பா.
எசாயா	எசா.
எரேமியா	எரே.
புலம்பல்	புல.
எசேக்கியேல்	எசே.
தானியேல்	தானி.
ஓசேயா (ஓசியா)	ஓசே.
யோவேல்	யோவே.
ஆமோஸ்	ஆமோ.
ஒபதியா	ஓப.
யோனா	யோனா.
பெயர்	சுருக்கக்குறியீடு

மீக்கா (மீகா)	மீக்.
நாகூம்	நாகூ.
அபக்கூக்கு (அபகூக்)	அப.
செப்பனியா	செப்.
ஆகாய்	ஆகா.
செக்கரியா (சகரியா)	செக்.
மலாக்கி (மல்கியா)	மலா.

புதிய ஏற்பாட்டு நூல்கள்

மத்தேயு நற்செய்தி	மத்.
மாற்கு நற்செய்தி	மாற்.
லூக்கா நற்செய்தி	லூக்.
யோவான் நற்செய்தி	யோவா.
திருத்தூதர் பணிகள் (அப்போஸ்தலர்)	தி.ப.
உரோமையருக்கு எழுதிய திருமுகம் (ரோமர்)	உரோ.
கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகம்	1 கொரி.
கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் திருமுகம்	2 கொரி.
கலாத்தியருக்கு எழுதிய திருமுகம்	கலா.
எபேசியருக்கு எழுதிய திருமுகம்	எபே.
பிலிப்பியருக்கு எழுதிய திருமுகம்	பிலி.
கொலோசையருக்கு எழுதிய திருமுகம்	கொலோ.
தெசலோனிக்கருக்கு எழுதிய முதல் திருமுகம்	1 தெச.
தெசலோனிக்கருக்கு எழுதிய இரண்டாம் திருமுகம்	2 தெச.
திமொத்தேயுவுக்கு எழுதிய முதல் திருமுகம்	1 திமொ.
திமொத்தேயுவுக்கு எழுதிய இரண்டாம் திருமுகம்	2 திமொ.
தீத்துக்கு எழுதிய திருமுகம்	தீத்.
பிலமோனுக்கு எழுதிய திருமுகம்	பில.
எபிரேயருக்கு எழுதிய திருமுகம்	எபி.
யாக்கோபு திருமுகம்	யாக்.
பேதுரு முதல் திருமுகம்	1 பேது.
பேதுரு இரண்டாம் திருமுகம்	2 பேது.
யோவான் முதல் திருமுகம்	1 யோவா.
யோவான் இரண்டாம் திருமுகம்	2 யோவா.
யோவான் மூன்றாம் திருமுகம்	3 யோவா.
யூதா திருமுகம்	யூதா.
திருவெளிப்பாடு (வெளி.)	தி.வெ.

பொருளடக்கம்

வ. எண்	நாள்	தலைப்பு	பக்கம்
1	01.01.2025	ஒப்படைப்புடைய கூட்டாண்மைக்கு கடவுளின் அழைப்பு	1
		கிறிஸ்தவ ஒன்றிப்பு வார இறைவேண்டல் அறிமுகம்	4
2	நாள் 1	பாருலகாளும் பரம தந்தையின் பராமரிப்பு	6
3	நாள் 2	படைப்பு கடவுளின் செயல்பாடு	9
4	நாள் 3	மனுவுருவான இறைமகன்	12
5	நாள் 4	பஸ்காவின் பரம இரகசியம்: கிறிஸ்துவின் பாடுமரணம் மற்றும் உயிர்த்தெழுதல்	15
6	நாள் 5	வாழ்வும் மகிழ்வும் அருளும் தூயாவியார்	18
7	நாள் 6	திருச்சபை: நம்பிக்கையாளர்களின் சமூகம்	21
8	நாள் 7	ஆண்டவரின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலில் திருமுழுக்கு	24
9	05.01.2025	மீட்புக்கான வெளிப்பாடு	28
10	12.01.2025	தூயவராய் இருங்கள்	31
11	19.01.2025	ஒரே உடலும் ஒரே திருமுழுக்கும்	35
12	26.01.1025	அன்பில் ஒன்றித்திருத்தல்	38
13	01.02.2025	ஆற்றலருளும் ஆண்டவர்	42
14	02.02.2025	ஆண்டவரைப் போற்றுங்கள்	44
15	02.02.205	இறை ஆன்மிக நறுமணம்: இளையோர்	48
16	09.02.2025	நோயில் நலம் பெறுதல்	52
17	16.02..2025	படைப்பில் கூட்டுச் சார்பு நிலை	57
18	23.02.2025	படைப்பின் சீர்கேடு	61
19	01.03.2025	ஒற்றுமையருளும் ஆண்டவர்	64
20	02.03.2025	தவக்காலம்: ஒரு மீட்பின் காலம்	66
21	05.03..2025	சிலுவை: பிறர் பொருட்டுத் துன்புற ஓர் அழைப்பு	70

வ. எண்	நாள்	தலைப்பு	பக்கம்
		தவக்கால புதன், வெள்ளி தியான அறிமுகம்	74
22	07.03.2025	அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி	76
23	09.03.2025	மாற்றுருவாகத்தில் பெண்கள்	79
24	09.03.2025	ஒடுக்கப்பட்டோரோடும் ஓரங்கப்பட்டோரோடும் இருத்தல்	83
25	12.03.2025	இறையரசின் புதிய இரசம்	87
26	14.03.2025	நம்பிக்கையில் நலம் பெறுதல்	90
27	16.03.2025	பாவச் சுமையிலிருந்து விடுவித்தல்	93
28	16.03.2025	இறையாட்சிக்குட்படுத்தப்படும் சிறுமந்தை	97
29	19.03.2025	நலமருளும் வாக்கு	101
30	21.03.2025	வாழ்வாகும் உணவு	105
31	23.03.2025	எல்லைகளைக் கடந்து இறை நம்பிக்கையை ஒப்புக்கொள்ளல்	108
32	26.03.2025	தீமைகள் மேல் வெற்றி	112
33	28.03.2025	உள்ளொளி தரும் உன்னதர்	114
34	30.03.2025	ஒடுக்கும் கட்டமைப்புகளை மாற்றுருவாக்கம் செய்தல்	117
35	01.04.2025	நம்பிக்கையருளும் ஆண்டவர்	122
36	02.04.2025	நம்பிக்கையால் வாழ்வு	125
37	04.04.2025	திருப்பணிக்கான பயிற்சி	128
38	06.04.2025	சிலுவையும் சீடத்துவத்துக்கு ஒரு புதிய முன் உதாரணமும்	131
39	09.04.2025	உயர்த்தப்பட்ட மானிடமகன்	135
40	11.04.2025	விளைச்சல் தரும் கோதுமை மணி	138
41	13.04.2025	ஓசன்னா: ஆண்டவரே எம்மை மீட்டருளும்	141
42	14.04.2025	அடையாளமாகும் அத்திமரம்	144
43	15.04.2025	விடியலுக்கான விடைகள்	148
44	16.04.2025	அர்ப்பணிப்பும் அங்கீகாரமும்	150

வ. எண்	நாள்	தலைப்பு	பக்கம்
45	17.-4.2025	திருவிருந்து:	
		துன்புறும் மானிடத்தின் ஒன்றிப்பு	153
46	18.04.2025	சிலுவை: மீட்பின் நிறைவேறுதல்	156
		<u>சிலுவைத் திருமொழிகள்</u>	
47		அன்பின் குரல்	160
48		அங்கீகரிப்பின் குரல்	164
49		அரவணைப்பின் குரல்	167
50		அங்கலாய்ப்பின் குரல்	170
51		ஆசையின் குரல்	172
52		அமைதியின் குரல்	175
53		அர்ப்பணிப்பின் குரல்	177
54	20.04.2025	உயிர்ப்பு : எல்லையில்லா	
		மாற்றுருவாக்கத்தைக் கொண்டாடுதல்	180
55	27.04.2025	உயிர்த்த ஆண்டவரால் ஆற்றல்படுத்தப்படல்	185
56	01.05.2025	ஆசியருளும் ஆண்டவர்	190
57	04.05.2025	உயிர்த்த ஆண்டவருடன்	
		திருமறையை மீள்படித்தல்	193
58	11.05.2025	உயிர்த்த ஆண்டவரால் அதிகாரப்படுத்தப்படல்	197
59	18.05.2025	கிறிஸ்துவில் நம்பிக்கைக் கொள்ளல்: உண்மை	200
60	25.05.2025	கிறிஸ்துவின் சிந்தையோடு அருட்பணி	204
61	01.06.2025	ஞானமருளும் ஆண்டவர்	208
62	01.06.2025	ஆண்டவருக்கு அஞ்சுதல்	
		ஞானத்தின் தொடக்கம்	210
63	08.06.2025	வாரும் தூய ஆவியாரே,	
		எம்மை விடுதலையாக்கும்	212
64	08.06.2025	அருட்பணி: அனைவருக்கும் நற்செய்தி	217
65	08.06.2025	கடவுளின் படைப்பைப் பேணி வளர்த்தல்	221
66	15.06.2025	திரித்துவம்: அன்பின் கூட்டமைப்பு	225

வ. எண்	நாள்	தலைப்பு	பக்கம்
67	22.06.2025	வழிபாட்டில் கடவுளின் வெளிப்பாடு	228
68	29.06.2025	சீடர்களை உருவாக்குங்கள்	233
69	01.07.2025	நலமருளும் ஆண்டவர்	238
70	06.07.2025	கணக்குப் பார்க்காமல் கொடுத்தல்	240
71	13.07.2025	இறையியல் கல்வி: நம்பிக்கைக்குரியவர்களை உருவாக்குதல்	245
72	20.07.2025	கடவுளின் மக்கள்: கிறிஸ்துவின் மந்தை	249
73	27.07.2025	அருட்பொழிவு திருப்பணி : கிறிஸ்துவின் நறுமணம்	254
74	01.08.2025	விடுதலையருளும் ஆண்டவர்	258
75	03.08.2025	அருட்பணி: எல்லா இடங்களிலிருந்தும் எங்கும்	262
76	10.08.2025	திருமணம்: அன்பால் நீடிக்கும் வாழ்வு	266
77	15.08.2025	முடிவெடுப்பதில் பங்கேற்பு	270
78	17.08.2025	திருமுழுக்கு: விண்ணிலிருந்து பிறத்தல்	272
79	24.08.2025	சிதைந்த சமூகங்களில் கடவுளின் சாயலை மீட்டெடுத்தல்	275
80	31.08.2025	திருவிருந்தென்னும் திருவருட்சாதனம்	279
81	01.09.2025	அமைதியருளும் ஆண்டவர்	283
82	07.09.2025	திருச்சபையின் திருப்பணியாகக் கல்விப்பணி	287
83	14.09.2025	பெண்களின் திருப்பணியை நினைவுகூர்தலும் கொண்டாடுதலும்	290
84	21.09.2025	கடவுளும் அனைத்துப் பற்றுறுதியாளர்களும்	294
85	27.09.2025	பணிவிடையில் ஒன்றிப்பு	297
86	28.09.2025	முதியோரைப் பேணுதலும் ஏற்றுக்கொள்ளுதலும்	299
87	01.10.2025	பாதுகாக்கும் ஆண்டவர்	303
88	05.10.2025	பற்றுறுதியில் சான்றாகும் ஆண்கள்	306

வ. எண்	நாள்	தலைப்பு	பக்கம்
89	05.10.2025	அனைத்து இறைமக்களின் குருத்துவம்	310
90	12.10.2025	இயலாமை: பராமரித்தலும் மதிப்பளித்தலும்	312
91	19.10.2025	செயலில் கிறிஸ்துவுடன் இளையோர்	316
92	26.10.2025	கடவுளின் இறையாண்மையின் கொண்டாட்டம், நீதியும் அமைதியும்	320
93	01.11.2025	உயர்வருளும் ஆண்டவர்	324
94	02.11.2025	இந்தக் குழந்தை என்னவாகப் போகிறதோ?	327
95	09.11.2025	திராட்சைச் செடியும் கொடிகளும்	331
96	16.11.2025	பெண்குழந்தையின் மதிப்பை உறுதிச் செய்தல்	335
97	23.11.2025	வன்முறைச் சூழலில் அமைதி	339
98	30.11.2025	கடவுளின் பேரருள்: தாழ்நிலையினருக்கான நம்பிக்கை	345
99	01.12.2025	இருளில் ஒளியாகும் ஆண்டவர்	349
100	07.12.2025	இருப்புநிலையைச் சவால் செய்யும் இறைவாக்கு	352
101	14.12.2025	அச்சத்தின் பிடியிலிருந்து விடுதலை	356
102	21.12.2025	ஆண்டவரே வருக: காத்திருத்தலில் வாழ்வு	360
103	24.12.2025	உலகிற்கு மகிழ்ச்சி	364
104	25.12.2025	கிறிஸ்து: வழிகாட்டும் நம்பிக்கையின் ஒளி	368
105	28.12.2025	குடும்பம்: வன்முறையில்லா வாழ்விடம்	372
106	31.12.2025	கடவுளின் ஆசிகளை எண்ணிப் பார்த்தல்	377
107		சங்கப் பண்டிகை : 1 பெருந்தன்மையோடு ஆண்டவருக்குக் கொடுத்தல்	380
108		சங்கப் பண்டிகை : 2 சங்க நாளில் சிந்தியுங்கள்	383
109		திருச்சபை நாள் பற்றுறுதியில் கட்டப்படும் திருச்சபை	386

ஒப்படைப்புடைய கூட்டாண்மைக்கு கடவுளின் அழைப்பும்

God's Call for Committed Partnership

இ.ச. 10: 12 - 22 I தெச. 4: 1 - 8

தி.பா. 23 மாற்கு 10: 35 - 45

> *"உங்கள் கடவுளாகிய ஆண்டவருக்கே அஞ்சுங்கள்; அவருக்கே பணி புரிந்து அவரைப் பற்றிக்கொள்ளுங்கள். அவர் பெயராலே ஆணையிடுங்கள்"* (இ.ச. 10: 20).

ஆண்டவரின் பேரன்பினால் புதிய வருடத்தினை காண அருள் செய்தார். ஆதலால் ஆண்டவரோடு நித்தமும் பயணிக்கவும், அர்ப்பணிப்புடன் அவரது ஆளுமையில் நமது நல்ல பங்களிப்பு நிறைவேற்ற அழைப்பும், கடமையும் நாம் பெற்றிருக்கின்றோம். இதற்கு அடிப்படையாக அவரது வார்த்தைகள் அனுதின வாழ்வில், அலுவல்களில் பாதையாக, வழியாக அமையட்டும்.

கடவுளோடு உடன்பாடு கொண்டு, நம்மில் கடவுள் எதிர்பார்க்கும் மூன்று முக்கிய பங்களிப்பினைப் பகிர்ந்து கொள்வோம்.

1. ஆண்டவருக்குப் பயப்படுங்கள்
2. ஆண்டவருக்குப் பணி செய்யுங்கள்
3. ஆண்டவரையே பற்றிக்கொள்ளுங்கள்

இம்மூன்று பங்களிப்பினைக் கடவுளோடு கொண்ட அன்பினால் அர்ப்பணிப்புடன் செயல்பட அனுதினமும் எதிர்பார்க்கப்படுகின்றோம்.

1. ஆண்டவருக்குப் பயப்படுங்கள் (Fear to the Lord)

கடவுள் நம்மில் எதிர்பார்க்கும் இந்த தெய்வீகமானச் செயலை செயல்படுத்திட திருமறை திரளான எடுத்துக்காட்டுகள், நிகழ்வுகள் சுட்டிக் காட்டுகிறது. கடவுளுக்கு அஞ்சி நடக்கும் ஓர் சமூகம் உருவாக நமது பங்களிப்பினை அர்ப்பணத்தோடு செய்யும்போது அதன் நன்மைகள் எல்லாம், நாம் அறிந்திருக்கின்றோம்.

ஞானத்தில் சிறந்தவர் சாலமோன்; அவர் தமது சபை உரையாளர் (பிரசங்கி) 12: 13-இல் "இவையனைத்திற்கும் முடிவுரையாக ஒன்று கூறுகிறேன்;

கடவுளுக்கு அஞ்சி நட; அவருடைய கட்டளைக்குக் கீழ்படி" எனக் கூறுகிறார்.

இதனை கடவுள் மீது கொண்ட அன்பினால்தான் நாம் செயல்படுத்த இயலும். இயேசுகிறிஸ்து தாம் வாழ்ந்த நாட்களில் கடவுளின் வார்த்தையினை முழுமைபடுத்த அர்ப்பணிப்போடு செயல்பட்டார். யோவா. 15: 10-இல் நான் என் தந்தையின் கட்டளைகளைக் கடைபிடித்து அவரது அன்பில் நிலைத்திருப்பதுபோல நீங்களும் என் கட்டளைகளைக் கடைபிடித்தால் என் அன்பில் நிலைத்திருப்பீர்கள் என்று கூறுகிறார்.

கடவுளுக்கு அஞ்சுதல் என்பது கட்டாயத்தினால் அல்ல; அன்பினால் நடந்திட விரும்புகின்றார். கடவுளிடம் உள்ள அன்பு பிறரன்பிலும் வெளிப்படுத்தல் தேவை, எப்போதும் உண்மை பேசுவதும், ஒளிவு மறைவு இல்லாதிருத்தல், மேலும் பிறரது இன்னல்களில் பங்குபெறும் கரிசனை, இன்னும் பல...

2. ஆண்டவருக்குப் பணி செய்யுங்கள் (Serve to the Lord)

"ஏனெனில் மானிட மகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல; மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கும், பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரை கொடுப்பதற்கும் வந்தார்" என்று கூறினார் (மாற்கு 10: 45).

கடவுளின் கருணையில் நாம் அனைவரும் அனுதின அலுவல்களை செய்ய நம்மை பணித்திருக்கின்றார். நாம் செய்யும் பணிகள் நோக்கம் எத்தன்மையாக இருக்க வேண்டுமென இத்திருமறைப்பகுதி கற்று தருகிறது. இவ்வசனத்தை அடிப்படை நோக்கமாக கொண்டு நமது நாட்டில் வேலூரில் உள்ள C.M.C. மருத்துவமனைச் செயல்பட்டு வருகிறது. 1900-இல் இதனை ஆரம்பித்தபோது டாக்டர். ஐடா ஸ்கடர் அம்மையார் கூறியது. "நாங்கள் மருத்துவ படிப்புக்கானப் பள்ளியினை கட்டவில்லை, மாறாக கடவுளின் ஆளுகைக்கானக் காரியங்களை கட்டுகின்றோம்" என்று கூறினார்கள்.

அர்ப்பணிப்போடு மேலைநாட்டு அருட்பணியாளர்கள், நம்நாட்டு அருட்பணியாளர்கள் தங்கள் பங்களிப்பினை அளித்தபடியால் நாம் தொடர் சேவைகளை பல்வேறு நிலையில் செய்கின்றோம். கடவுளுக்கு நாம் செய்யும் பணி எந்தவித பலனையும் எதிர்பார்த்து அல்ல; அவரோடு இணைந்து பணி செய்ய வாய்ப்பினைத் தந்தார் என்று மகிழ்வோம்.

3. ஆண்டவரையே பற்றிக்கொள்ளுங்கள் (Trust in the Lord)

"கடவுள் நம்மை ஒழுக்கக் கேட்டிற்கு அல்ல; தூய வாழ்வுக்கே அழைத்தார்" (1 தெச. 4: 7).

கடவுள் மீது பற்றுடைய நம்மை அழைத்து அழகு பார்ப்பதெல்லாம் தூய வாழ்வு வாழ்வதற்கே. கடவுளைப் பற்றிய புரிந்துணர்வோடு நமது செயல்கள்

அனைத்தும் தூயவைகளாய் இருக்க வேண்டும். எங்கெல்லாம் தூய்மை, உண்மை, நேர்மை, நீதி, அமைதி மற்றும் ஒழுக்கம் உள்ளதோ அங்கே கடவுள் இருக்கின்றார். கடவுள் மோசேயிடம் தூய்மை, நீதி குறித்த சட்டங்களைக் குறிப்பிடுகின்றார். ஆண்டவர் மோசேயிடம் கூறியது: "நீ இஸ்ரயேல் மக்களிடம் கூற வேண்டியது; தூயோராய் இருங்கள். ஏனெனில், உங்கள் கடவுளும் ஆண்டவருமாகிய நான் தூயவர்". ஆண்டவர் தாம் வாழ்ந்த நாட்களில் கூறியது, "தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர்; ஏனெனில், அவர்கள் கடவுளைக் காண்பர்" (மத். 5: 8). எனவே, மானிடரிடம் கடவுள் எதிர்பார்க்கும் நிலை தூயவராய் இருந்து அவரை பற்றிக்கொள்ள வேண்டும்.

மனுக்குலத்தைத் தூய்மை பெறச் செய்வதும், உடலாலும் உள்ளத்தாலும் செய்த குற்றங்களை, பழிச் சொற்களை அகற்றி, ஆண்டவரை பின்பற்ற அவர் நமக்கு அருள் செய்கின்றார். இதனை பவுலடியார் எபே. 2: 8, 9-இல் "நீங்கள் அந்த அருளாலே நம்பிக்கையின் வழியாக மீட்கப்பட்டிருக்கின்றீர்கள். இது உங்கள் செயல் அல்ல; மாறாக இது கடவுளின் கொடை. இது மனிதச் செயல்களால் ஆனது அல்ல; எனவே, எவரும் பெருமை பாராட்ட இயலாது" என்கிறார். எனவே, இவ்வருட அனுதின பயணத்தில் ஆண்டவருக்கு நமது நல்ல பங்களிப்பினைத் தந்து அவருக்கு உகந்த செயல்களைச் செய்ய அவரை பற்றி அச்சத்தோடு, அவருக்குப் பணி செய்து, அவரைப் பற்றி நம்பிக்கையில் உறுதியுடன் திகழ்வோம்".

இறையருள் நம்மில் என்றும் தங்கியிருப்பதாக.

இறைப்பணியில்

ப	ஞா. 20	கீர். 134

பேரருள்திரு. அறிவர் A.R. செல்லையா

பேராயர், கன்னியாகுமரிப் பேராயம்

இறைவேண்டல்

கருணையும், அருளும் நிறைந்த கடவுளே, உமது குமாரன் இயேசு கிறிஸ்து வழியாக எங்களிடம் வந்தற்காகவும் புதிய உடன்படிக்கையின் மக்களாக எங்களை ஏற்றுக்கொண்டதற்காகவும் நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். உமது குமாரன் உமக்கு கீழ்ப்படிந்து, எங்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருப்பதைப் போல, நாங்களும் இந்த ஆண்டு முழுவதும் உமது உடன்படிக்கையின் அன்பில் நிலைத்திருப்பதற்கு, எங்களுக்கு அருள் தாரும். உமக்கு கீழ்ப்படிந்து உமக்கு சேவைச் செய்யும் தூய்மையான மற்றும் உகந்த மனப்பான்மையை ஏற்படுத்துமாறு உம்மிடம் மன்றாடுகிறோம். உங்களோடும், தூய ஆவியானவரோடும் முடிவில்லாத ஒரே கடவுளாய் உலகில் வாழ்ந்து ஆட்சி செய்யும் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மூலமாக, மன்றாடுகிறோம். ஆமென்.

கிறிஸ்தவ ஒன்றிப்பு வார இறைவேண்டல் அறிமுகம்

யோவா. 11: 17-27

கருப்பொருள் : **இதை நீ நம்புகிறாயா? (Do you believe this?)**

(யோவா. 11: 26)

ஆழமாய் வேரூன்றி நிற்கும் மரம் காற்றைக் கண்டு அஞ்சாமல் உறுதியாய் நிற்கும். அதனைப் போன்று ஆண்டவர் இயேசுவில் நம்பிக்கையால் வேரூன்றி நிற்கும் மனிதர் உலகத் தீமைகளைக் கண்டு அஞ்சுவதில்லை. இயேசுவைக் குறித்த அவரது நம்பிக்கையும் ஆழப்படும்.

முதல் மூன்று நூற்றாண்டு கிறிஸ்தவம் எதிர்நீச்சலிட்டுச் செல்லும் மீன்களைப் போல் பலவித தடைகளைத்தாண்டி வளர்ந்தாலும், சில தவறான புரிதல்களும் சபைத்தலைவர்களால் சபைக்குள் நுழைந்தன. குறிப்பாக கி.பி. 318-ஆம் ஆண்டு எகிப்து நாட்டு அலெக்சாந்திரியாவில் ஆயராக இருந்த ஆரியுசு (Arius) என்பவர் கடவுள்; தந்தை, மகன், தூயாவியார் என்றிருந்தாலும், மகன் தந்தைக்கு நிகரானவர் என்றோ நித்தியமானவர் என்றோ கூறுவது தவறு. மகன் தந்தைக்குத் தாழ்வானவரே என்று கூறினார். இக்கொள்கையால் அலெக்சாந்திரியா நகரில் வன்முறைகளும், குழப்பங்களும் ஏற்பட்டன.

காண்ஸ்டண்டைன் பேரரசரால் கி.பி. 325-ஆம் ஆண்டு நிசேயா (இவ்விடம் தற்போது துருக்கி நாட்டில் ஈஸ்னிக் என்னுமிடமாகும்) என்னும் இடத்தில் பொது சங்கம் கூட்டப்பட்டது. இக்கூடுகையில் உரோமப் பேரரசின் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளிலிருந்து கிறிஸ்தவ சமயத்தலைவர்களான ஆயர்கள் கலந்து கொண்டனர். வரலாற்றுச் சிறப்புமிக்க அக்கூடுகையில் திரித்துவக் கடவுளாக விளங்கும் தந்தை, மகன், தூயாவியார் ஆகிய மூவரும் கடவுள் தன்மையில் ஒன்றாக இருக்கிறார்கள் என்ற கொள்கை கிறிஸ்தவத்தின் உண்மைக் கொள்கையாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. மேலும் நிசேயா மன்றத்தில் நிசேயா பற்றுறுதியறிக்கை தொகுக்கப்பட்டு கிறிஸ்தவ அடிப்படைக் கோட்பாடாக அறிவிக்கப்பட்டது. கடவுளின் பேரருளால் கிறிஸ்தவப் பற்றுறுதியின் உறுதிப்பாடான தீர்மானம் எடுக்க நிசேயா மன்றம் கூடிய 1700-ஆம் ஆண்டினை இவ்வாண்டு கொண்டாடுகிறோம். எனவே கிறிஸ்தவ ஒன்றிப்பு வார இறைவேண்டல் இந்தக் கருப்பொருளை மையமாகக் கொண்டு அமைகிறது.

கடவுளின் படைப்பும், பராமரிப்பும் அவரது ஆற்றலையும், அன்பையும் வெளிப்படுத்துகின்றன. படைப்புகள் பாவததினால் வீழ்ச்சியடைந்தபோது

மனுவுருவாக வந்த கடவுளின் மகனான கிறிஸ்து தமது பாடுகளினால் மீட்பருளி கடவுளோடு படைப்புகளை மறுபடியும் ஒப்புரவாக்கினார். இத்தகைய பற்றுறுதியாளர்களைக் கொண்ட திருச்சபை இன்றும் பாவிகளைத் தூய்மைக்கு நேராக வழிநடத்தும் தூண்டுதலாய் உள்ளது. கிறிஸ்துவின் பாடு, மரண, உயிர்த்தெழுதலில் பங்கு கொண்டு புதுப்பிக்கப்படும் ஒரே திருமுழுக்கை அனுபவ அடையாளமாகக் கொண்டிருக்கும் நமது பற்றுறுதி இன்னும் ஆழங்களுக்குள் செல்ல வேண்டும் என்ற கருத்துக் கோவையுடன் இந்நாட்களுக்கான தியானங்களை இறைமக்களின் உள்ளங்களில் சிந்தனை எழுத்துக்களால் பதிய வைப்போம்.

உயிர்த்தெழுதலும், வாழ்வும், ஆண்டவர் இயேசுவுக்குள் இருக்கிறது. இவை நிகழ்காலத்துக்கு மட்டுமன்று, எதிர்காலத்துக்கும் உரியவை. இயேசு இல்லாமல் உயிர்த்தெழுதலும் இல்லை, வாழ்வும் இல்லை (யோவா. 11: 26). இயேசுவில் தொடங்கப்பட்ட நிலைவாழ்வில் நம்பிக்கை கொண்டு நிலைவாழ்வுக்குரியோராவோம், ஆமென்.

அருள்திரு. S. கிரீஷ் குமார்

ஆயர், புல்லுவிளை

பாருலகாளும் பரம தந்தையின் பராமரிப்பு

The Fatherhood and Care of God who Rules the Universe

எசாயா 63: 15-17 I கொரி. 8:5-6

தி.பா. 139: 1-3, 13, 23, 24b

என் மீது நீர் கொண்ட நெஞ்சுருக்கும் அன்பும் இரக்கப் பெருக்கும் எங்கே? (எசாயா 63: 15)

இறைவனின் கரிசனையைச் சிறப்பு வாய்ந்த சில உருவகங்களான தாய், தந்தை, நண்பன் என்று பல நிலைகளில் நாம் புரிந்து கொள்ளுகிறோம். உலகப் பிரகாரமான தந்தையின் மூலமாக இறைத்தந்தையின் அன்பினைப் புரிந்து கொள்ளுகிறோம். இந்தியாவின் தேசத்தந்தை என்றழைக்கப்படும் மகாத்மா காந்தி, தென் திருவிதாங்கூர் மிஷனின் தந்தை சார்லஸ் மீட் (Father of the South Travancore Mission), "தற்கால அருட்பணியின் தந்தை" (Father of modern missions) எனப் போற்றப்படும் வில்லியம் கேரி, "கனவுகளின் தந்தை" (Father of Dreams) என்று அழைக்கப்படும் ஏ.பி.ஜே. அப்துல் கலாம், தந்தை பெரியார், தந்தை பேராயர், என்று பல நிலைகளில் தாங்கள் செய்த நற்காரியங்களுக்காக தந்தை என்று அழைக்கப்படும்போது அருள் நிறைந்த தந்தையாக நம் ஆண்டவர்இருக்கிறார். பாருலகாளும் பரம தந்தை எப்படி அன்புத் தந்தையாக, அருட்தந்தையாகச் செயல்படுகிறார் என்பதை, எசாயா 63:15-17- வசனங்களை மையமாக வைத்துச் சிந்திப்போம்.

1. அன்புத்தந்தை (Loving God) (ஏசாயா 63: 15)

துன்புறுகிற இறைமக்களுக்காக இரக்கமும், துணையும் வேண்டி எசாயா இறைவாக்கினர் மன்றாடின மன்றாட்டுதான் இது. கடந்த காலத்தில் கடவுளின் மாபெரும் அன்பின் செயல்களை நினைவுபடுத்துவதன் மூலம் இம்மன்றாட்டு தொடங்குகிறது (ஏசா. 63: 7). கடவுள் இஸ்ரவேல் மக்களை எகிப்தில் அடிமைத்தனத்திலிருந்து காப்பாற்றினார். அவர்கள் அவருக்கு எதிராகக் கலகம் செய்தபோது, அவர்கள் தண்டிக்கப்பட்டனர் (ஏசா. 63: 8-10). இருப்பினும், கடவுள் அவர்களை மன்னித்தார். எனவே, இறைவாக்கினர் கடவுளிடம் ஒரு கேள்விகேட்கிறார். என் மீது நீர் கொண்ட நெஞ்சுருக்கும் அன்பும், இரக்கப்பெருக்கும் எங்கே? (ஏசாயா 63:15). கடந்த காலத்தில் இஸ்ரவேலுக்காக இவ்வளவு பெரிய காரியங்களைச் செய்த இந்த இரக்கமும் அன்பும் கொண்ட கடவுளால், இப்போது பாபிலோனின் சிறையிருப்பிலிருந்து தனது மக்களைக் காப்பாற்ற முடியவில்லையா? (ஏசா. 63: 11-14) என்கிறார். ஆனால், விண்ணகத்தினின்று கண்ணோக்கும் விண்ணகத் தந்தை (வ. 15) விசாரிக்கும் தந்தையாக இருக்கிறார். ஏனெனில், நீரே எங்கள் தந்தை;

ஆண்டவரே, நீர் தான் எங்கள் தந்தை; பண்டை நாளிலிருந்து "எம் மீட்பர்" என்பதே உம் பெயராம் (ஏசா. 63:16) என்று அதே இறைவாக்கினர் கூறுகிறார். நெஞ்சுருக்கம் (நெஞ்சு+உருக்கம்) நிறைந்த தந்தை, இருதயம் முழுவதும் உருக்கம் நிறைந்தவர். இதயபூர்வமாக, அடி மனதில், உள்ளத்தின் ஆழத்திலிருந்து தன் மக்களை நேசிக்கிறார். தகப்பனின் தன்னிகரில்லா அன்பு தகுதியில்லாதப் பிள்ளைகளையும் நேசிக்கிறது. தகப்பனைப் போல கரிசனை கொள்ளும் கடவுள். தாயின் அன்பு உணர்வுப்பூர்வமானது. தாயின் அன்பு பிள்ளைக்காக குடல் துடிக்கும். நெஞ்சம் பதறுகிற அன்பு. உயிரோடிருந்த பிள்ளையின் தாய் தன் மகனுக்காக நெஞ்சம் பதறி அரசரிடம், "வேண்டாம் என் தலைவரே ! கொல்ல வேண்டாம். உயிரோடிருக்கும் குழந்தையை அவளிடமே கொடுத்து விடுங்கள்" என்று வேண்டினாள் (I அர. 3: 26). தூரம் போன இளையமகனுக்காக வழி மேல் விழி வைத்து காத்திருந்த தந்தையின் பரிவு கொண்ட அன்பு (லூக்கா 15: 20). இது பரிதாபமல்ல (Not sympathy) ஆனால் அனுதாபம் (but empathy). தந்தையின் அன்புக்கு அளவேயில்லை. தூரத்தில், விண்ணகத்தில் இருந்தாலும் நெஞ்சுருகி, நெருக்கமாக நேசிக்கும் குணம் தந்தையினுடையது.

அமெரிக்காவில் வாழ்ந்த சாமுவேல் என்பவரின் மகன் அர்னால்டு. 1988-ஆம் வருடம் டிசம்பர் 7-ஆம் தேதி ஏற்பட்ட நிலநடுக்கத்தில் அர்னால்டு படித்து வந்த பள்ளிக் கட்டடம் முழுவதுமாக மண்ணுக்குள் புதைந்தது. அர்னால்டு தனது சக மாணவர்களுடன் கட்டட இடிபாடுகளுக்குள் உயிருடன் சிக்கிக் கொண்டான். புதைந்து கிடந்த கட்டடத்திற்குள் யாரும் உயிர் பிழைத்திருக்க முடியாது என்று எண்ணி எல்லா மாணவர்களின் பெற்றோர்களும் தங்கள் குழந்தைகளுக்கு மலர் வளையங்களை வைக்க தொடங்கினர். கட்டட இடிபாடுகளுக்குள் இருக்கும் தனது மகனைக் கண்ணீருடன் தோண்டிக் கொண்டிருந்த சாமுவேலை பார்த்து மற்றவர்கள் ஏளனம் செய்தனர். காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்!! என்ற முனகல் சத்தத்தைக் கேட்ட சாமுவேல் அது தனது மகனின் குரல் என்பதை அறிந்த அவர் வேகமாகக் கற்களை அகற்றினார். அப்போது அர்னால்டு, "அப்பா, நீங்கள் எப்படியும் என்னைத் தேடிக் கண்டுபிடித்துக் காப்பாற்றுவீர்கள், நீங்கள் எந்தச் சூழ்நிலையிலும் எனக்காக வருவீர்கள் என்று தனது தகப்பன் கழுத்தைக் கட்டிக் கொண்டு அழுதான்.

கடவுள் நம் மேல் அன்புகூருவது நாம் செய்கிற நல்ல காரியங்களுக்காகவோ, அவருக்காக நாம் படுகிற பாடுகளுக்காகவோ அல்ல, நாம் அவருடைய பிள்ளைகளாய் இருப்பதினால் மாத்திரமே அவர் நம் மேல் அன்பு கூறுகிறார். "கிறிஸ்துவின் நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் கடவுளுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்" (யோவா. 1: 12). ஒரு உலகத் தந்தை தனது மகனுக்காக தனது உயிரைப் பணயம் வைத்து மீட்கையில் நம் பரம தந்தை இயேசு கிறிஸ்து நம்மை மீட்பது எவ்வளவு நிச்சயம்.

2. அருட்தந்தை (Merciful God) (ஏசாயா 63: 15)

இரண்டாவதாக, ஆண்டவர் அன்புத் தந்தை மட்டுமல்ல அவர் விந்தையான அருட்தந்தையாக இருக்கிறார். அருட்தந்தை இரக்கங்களை, ஆசீர்வாதங்களை ஒன்று இரண்டு என்று எண்ணி கொடுப்பவரல்லர். முடிவில்லாத இரக்கங்களால் முடிசூட்டுபவர். அவர் இரக்கங்களின் பிதா! ஆண்டவரின் பேரன்பு முடிவுறவில்லை. அவரது இரக்கம் தீர்ந்து போகவில்லை (புல. 3: 22). அன்னை தன் வயிற்றில் பத்து மாதங்கள் நம்மைச் சுமந்தாலும், ஆயுள்வரை நெஞ்சில் சுமப்பவர் தந்தை. எத்தனையோ இன்னல்கள் வந்தாலும் அதை வெளிக்காட்டாமல், துன்பத்தின் சாயல் தம் பிள்ளைகள் மீது படாமல், அனைத்தையும் தம் தோளில் சுமப்பவரே தந்தை.

மனதுருக்கம் மிகுந்த உங்கள் கடவுள்: "அவர் அருள் நிறைந்தவர், இரக்கம்மிக்கவர்; நீடிய பொறுமையுள்ளவர், பேரன்புமிக்கவர் (யோவேல் 2: 26). தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார் (தி.பா. 103: 13). ஒரு மாம்சீக தந்தை தன்னுடைய பிள்ளைக்கு இரங்குவது போல பரலோகத்திலிருக்கும் கடவுளும் இரங்குகிறார் என்று குறிப்பிடுகிறார் (வச. 17). கடவுள் தன் ஜனங்கள் மீது மனதுருகும் இரக்கமுள்ள தந்தை. நாம் நேசிக்கப்படாதவர்களாயும் பெலவீனர்களாயும் உணரும்போது, நம் மீதான பரலோக தந்தையின் அன்பை விசுவாசத்தால் பெற்றுக்கொள்ளலாம். "அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே," (1யோவா 3: 16) நம்முடைய இரட்சிப்பிற்கேதுவான இரக்கத்தை அவருடைய சிலுவையினூடாய் வெளிப்படுத்தினார்.

"மணலில் கால் தடங்கள்" (Foot Prints in the sand) என அழைக்கப்படும் கிறிஸ்தவக் கவிதையில், ஒருவர் கடவுளுடன் கடற்கரையில் நடந்து செல்லும் அனுபவத்தை விவரிக்கிறார். கடற்கரை மணலில் இரண்டு ஜோடி கால் தடங்களில் ஒன்று கடவுளுக்கும் மற்றொன்று தனக்கும் சொந்தமானது என்று நம்பும் அவர், ஒரு சில இடங்களில் இரண்டு ஜோடி கால் தடங்கள் ஒன்றாகக் குறைந்துவிடும்போது, குறிப்பாக அவரின் வாழ்க்கையின் நம்பிக்கையற்ற தருணங்களில் இறைவன் தன்னை கை விட்டு விட்டு எங்கோ சென்றுவிட்டார் என்று கடவுளை கேள்வி கேட்கும்போது, உன் சோதனை மற்றும் துன்ப காலங்களில், ஒரே ஒரு ஜோடி காலடித்தடத்தை நீ காணும்போது, நான் உன்னைச் சுமந்தேன் அது என் காலடிகள் மட்டுமே என்று கடவுள் விளக்கமளிக்கிறார். ஒரு மனிதன் தன் பிள்ளையைச் சுமந்து கொண்டுபோவது போல, நீங்கள் இவ்விடத்திற்கு வருகிறவரைக்கும், நடந்து வந்த வழிகள் எல்லாவற்றிலும், உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சுமந்து கொண்டு வந்ததைக் கண்டீர்களே! (இ.ச. 1:31). நம்மோடு பயணிக்கும் பரம தந்தையின் ஆழமான அன்புக்கு ஆதாரம் தேடாமல், சில சமயங்களில் மறைமுகமாக செயல்படுகிற அன்புத் தந்தையின், அருட்தந்தையின் நெஞ்சுருக்கத்தை, இரக்கப் பெருக்கத்தை அனுபவித்து முன்னேறி செல்லுவோம்! ஆமென்.

முனைவர். திருமதி. ஷோபனா கின்சன் பெல்

திருப்பணிவிடையாளர், மீட்நகர்

படைப்பு கடவுளின் செயல்பாடு

Creation as God's Work

தொ.நூ. 1: 1-5 உரோ. 8: 19-23

தி.பா. 148:1, 3, 9-14

" அப்பொழுது கடவுள்; ஒளி தோன்றுக!" என்றார். ஒளி தோன்றிற்று."

(தொ.நூ. 1: 3)

படைப்பின் சிற்பியான இறைவன் தனது செயல்களின் மூலம் படைப்பின் மகுடமான (crown of creation) மனிதர்கள் தன்னை அறிந்து கொள்ள உதவுகிறார். இறைவனின் உறைவிடமான இயற்கை, அவரின் வேலைத்திறனின் கறைபடியாக் கண்ணாடி விரிந்தவானம், படர்ந்த மரங்கள், வீசும் தென்றல் காற்று, சுவாசிக்கும் ஆக்சிசன் என எல்லாம் வல்லவரது மகிமையொளியுடன் முடிவில்லா ஒளியின் எதிரொளி.படைப்பின் பிரதிபலிப்பான இறை மகிமைக்காட்சியெல்லாம் மாசில்லா இறைவனின் உன்னதமான படைப்புகளின் சில அதிசயங்கள்.

அதிசயமான படைப்பான நாம் பிரமிக்கத்தக்க அதிசயமாய், விசித்திர விநோதமாய் அதிசயமே அசந்து போகும் முறையில் படைக்கப்பட்டிருக்கிறோம் (தி.பா. 139: 14, 15). தமது செயல்களால் படைக்கப்பட்ட இவையெல்லாம் இறைவனின் கை வண்ணம்! இவை இறைவனின் கொடை. இறைமாட்சியை வெளிப்படுத்தும் இறைப்படைப்பு எப்படி நன்றாக ஒன்றாக சான்றாக இருக்கிறது என்பதை இங்குசங சிந்திப்போம்.

1. நன்றாகப் படைக்கப்பட்டுச் சான்றாக இருக்கும் படைப்பு Goodness of Creation) (தொ.நூ. 1: 4, 9, 10, 13, 18, 21, 24, 31)

தொடக்க நூலில் உள்ள இரண்டு படைப்பின் வரலாற்று நிகழ்வுகளில் (தொ.நூ. 1-2:4 (அ)), (தொ.நூ, 2: 4(ஆ)-3) கடவுள் படைப்பாளர், படைப்பு கடவுளின் செயல்பாடு எனும் நம்பிக்கையை வலியுறுத்துகின்றன. கிறிஸ்தவ பற்றுறுதி அறிக்கைகளும் இதை உறுதி செய்கின்றன.

எபிரேய மொழியில் இறைப்படைப்பு தெய்வீக அனுபவம். இறைப்படைப்பிற்கும், மனித செயலுக்கும் வேறுவேறு வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இறைவன் படைக்கிறார் (bara) (God creates) மனிதன் செய்கிறான் (asa) (Man makes). கடவுள் படைத்த படைப்பு அனைத்தும் நன்றாக (தொ.நூ. 1: 4, 9, 10, 13, 18, 21, 24), மிக நன்றாயிருக்க (தொ.நூ. 1:31), அதில் குறைகள் ஒன்றுமில்லை. படைப்பனைத்தையும் நன்றாக படைத்த இறைவனுக்கு இயற்கையை அழிக்கும் எண்ணம் சிறிதும் இருந்ததில்லை. கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார், அவை மிகவும் நன்றாய் இருந்தன (தொ.நூ. 1: 31). நன்றாக இருந்த அனைத்தும், இன்னும் நன்றாக இருக்கின்றன.

மனிதரைத் தம்-சாயலில் படைத்த இறைவன் அவர்கள் பலுகிப் பெருகி உலகை நிரப்பவும் ஆசி வழங்கினார். கை வினைஞரான இறைவன் தன் கரத்தின் கை வண்ணத்தினாலே (Finger of God) படைத்தது என்பது அவருடைய அளவிட முடியாத நிகரற்ற வல்லமைக்கு ஆற்றலுக்கு உறுதியான உத்தரவாதச் சான்றாக இருக்கிறது. செயல்கள் என்னும் சொல் அசைவு, உழைப்பு என்றும், இறைசெயல் என்னும் போது அவரது அனைத்து செயல்களின் வெளிப்பாட்டைப் புரிந்து கொள்ள உதவுகிறது. இயற்கையின் அழகு இந்த உலகில் இறைவனின் படைப்பு, செயற்கையின் அழகு மண்ணில் மனிதனின் உழைப்பு. ஒப்பிட முடியாத இறைச்செயலான படைப்பில் தம் "சாயலில்" படைத்தவரை அறிந்து அவரின் மாட்சிக்காக நன்றாக வாழவேண்டாமா?

2013-ஆம் ஆண்டு நியுயார்க்கில் சிசில் வில்லியமஸ் (Cecil Williams) என்ற 61 வயது கண் பார்வையற்றவர் பல் மருத்துவரைப் பார்ப்பதற்காக தன் செல்ல பிராணி நாயுடன் சென்றார். ரயில் நிலையத்தில் நடைமேடையில் நின்றபோது சிசிலுக்கு மயக்கம் ஏற்பட்டது. தன் எஜமானின் உயிருக்கு ஏற்பட்ட ஆபத்தைப் புரிந்துகொண்டு, சிசிலை நடைமேடையிலிருந்து தண்டவாளத்தில் விழுந்து விடாமல் பாதுகாக்க, வேகமாக ஒலியெழுப்பி குரைத்து அவரை எழுப்ப முயற்சித்தது. ஆனாலும் சிசில் மயங்கித் தண்டவாளத்தில் விழுந்துவிட்டார். உடனடியாக அந்த நாயும் எஜமானனைக் காப்பாற்ற தண்டவாளத்தில் குதித்தது. அப்பொழுது அந்தத் தண்டவாளத்தில் வந்து கொண்டிருந்த ரயிலின் ஓட்டுநர், அந்த நாயின் அபயக் குரலைக் கேட்டு ரயிலின் வேகத்தைக் குறைத்தார். இதனால் சிசிலும், அந்த நாயும் சிறு காயங்களுடன் உயிர் தப்பினார்கள். ஒரு நாய்க்குத் தன்னை வளர்த்த எஜமானின் மேல் எத்தனை பாசம்! ஆனால் நம்மை படைத்த இறைவனை அறிந்திருக்கிறோமா? சிந்திக்கத் தெரிந்த நம்மை நன்றாகப் படைத்தவரை நாம் அறியாதிருந்தால், அது எத்தனை பரிதாபம்!

2. ஒன்றாக படைக்கப்பட்டு சான்றாக இயங்கும் படைப்பு (Witness of Creation) (தொ.நூ. 1: 27)

இரண்டாவதாக, படைப்பு நன்றாக மட்டுமல்ல பிணைப்பாகவும் (Inter connectedness) படைக்கப்பட்டிருக்கிறது. இறைப்படைப்பில் ஒரு ஒழுங்கும், எல்லாப் படைப்புகளும் ஒன்றையொன்று சார்ந்தும், இசைந்தும் வாழ வழி செய்யப்பட்டுள்ளது. மனிதர் செய்யும் ஆளுகை (dominion) அதில் நிறைகள் இருந்ததில்லை. உயிரினங்களுக்கிடையே ஒற்றுமைகள் வேற்றுமைகளோடு மட்டுமல்ல ஒன்றை ஒன்று சார்த்திருக்கின்ற விசித்திரமான வியக்கவைக்கும் அமைப்பு தான் இறைப்படைப்பு!

மொரீசியஸ் தீவில் அடர்ந்த காட்டில் காணப்பட்ட ஒரு வகையான மரம் நாளடைவில் அழிந்து வருகின்றன. மரத்திலிருந்து விழும் விதைகளும் அப்படியே முளைக்காமலே இருக்கின்றன. தற்சமயம் 13 மரங்கள் மட்டுமே காணப்படுகின்றன. மிகுந்த கவனமான ஆராய்ச்சியில் ஆச்சரியமான தகவல் ஒன்று வெளியிடப்பட்டது. 300 வருடங்களாக வாழ்ந்து வந்த சாம்பல் மற்றும் வெள்ளை நிறம் கலந்த டோடோ பறவைகளின் உடலிலிருந்து வரும் ஒருவித

திரவமே இந்த மரங்களின் விதைகள் முளைக்க உதவியுள்ளன. போர்ச்சுக்கீசியர்கள் உட்புகுந்து இந்தப் பறவைகளை வேட்டையாடி விட்டதால் பறவைகள் அழிந்துவிட்டன. மரத்தின் விதைகளும் முளைப்பதில்லை. இந்தக் காரியம் படைப்பில் இருக்கும் நெருங்கிய நேரடியானத் தொடர்பை பிரதிபலிப்பதாக இருக்கிறது.

கடவுள் மனிதரைத் தனியாகப் படைக்கவில்லை. ஏனெனில், தொடக்கத்திலிருந்தே "ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்" (தொ.நூ. 1: 27). அவர்களுடைய சார்பு வாழ்க்கை மனிதர்களிடையே எழும் ஒன்றிப்பின் முதல் வெளிப்பாடாகும். ஏனெனில், மனிதர் தம் இயல்பிலேயே சமூகப் பண்புடையவர்கள். பிறரோடும் பிற படைப்புகளோடும் உறவு கொள்ளாமல் அவர்களால் வாழ, வளர முடியாது. படைத்த இறைவனுக்கு மட்டுமே படைப்பின் மீது முழு அதிகாரம் உண்டு. இறைமாட்சியும், வேலைப்பாடும், ஆர்ப்பாட்டமில்லாமல் அமைதியாக வெளிப்படுகிறது. எடுத்துக்காட்டாக, இறைவனின் மிக அழகிய வேலைப்பாடுகளில் ஒன்றான விடியற்காலை, எவ்வித ஆர்ப்பாட்டமுமின்றி, மௌனமாகப் புலர்கிறது. ஒவ்வொரு விடியலும், வெவ்வேறு வடிவங்களில், வண்ணங்களில் இறைவனின் கலைத்திறனை, கீழ் வானில் பதிக்கின்றது. இறைவன் இயற்கை வழியே வழங்கும் அமைதியானச் செய்திகளை உணர மறுக்கும் மனிதர்களாகிய நாம், அவரது வேலைப்பாடுகளைச் சிதைத்து வருகிறோம். நம் கரங்களில் சிக்கி, மூச்சு விடவும் இயலாமல் தவிக்கும் படைப்பும், அதன் விளைவாக துன்புறும் நாமும், மீண்டும் கடவுளின் உண்மையான மாட்சியைக் காணவிழைவதை, பேறுகால வேதனைக்கு ஒப்பிட்டு, பவுல் உரோ 8: 18-22-இல் குறிப்பிடுகிறார்.

இயற்கை பேரிடர்கள் என்றவார்த்தைகளில் இடர் என்றால் துன்பம். பேரிடர் என்றால் பெருந்துன்பம். இயற்கை பேரிடர் என்பதை இயற்கையால் ஏற்படும் பேரிடர் என கூறுவர். ஆனால் இயற்கைக்கு ஏற்பட்ட பேரிடரே அது. இயற்கையானது சமநிலை தவறும் பட்சத்தில் இயற்கைக்கு ஏற்படும் பிரச்சனையே இது. இதனை சரி படுத்திக் கொள்ள அது எடுக்கும் முயற்சிகள் மற்ற உயிரிகளைப் பாதிக்கின்றன. இயற்கை தன்னைச் சமநிலைப்படுத்த தனக்கு ஏற்பட்ட இடரை நீக்க முயற்சிப்பதே இயற்கைப் பேரிடர். இக்காலத்தில் நாம் படும் துன்பங்கள் எதிர்காலத்தில் நமக்காக வெளிப்படப் போகிற மாட்சியோடு ஒப்பிடத்தகுதியற்றவை. இம்மாட்சியுடன் இறைமக்கள் வெளிப்படுவதைக் காண்பதற்காகப் படைப்பே பேராவலோடு காத்திருக்கிறது. ஏனெனில், படைப்பு அழிவுக்கு அடிமைப்பட்டிருக்கும் நிலையிலிருந்து விடுவிக்கப்படும் என்கிற எதிர்நோக்கோடு இருக்கிறது. இந்நாள் வரை, படைப்பு அனைத்தும் ஒருங்கே பேறுகால வேதனையுற்றுத் தவிக்கின்றது. படைப்பை மாசுபடுத்தாமல் அ டுத்த தலைமுறைக்கும் கொடுக்க மனிதனைத் தன்னுடைய முடிசூடாப் பிரதிநிதியாக பூமியில் படைத்துள்ளார் இறைவன் (தி.பா. 8: 4-6). இதனைப் புரிந்து நன்றாக, ஒன்றாக, சான்றாக இருக்கிற இறைப்படைப்பின் இறைசாயலாக என்றும் வாழ்வோம்! ஆமென்.

முனைவர். திருமதி. **ஷோபனா கின்சன் பெல்**

திருப்பணிவிடையாளர், மீட்நகர்

மனுவுருவான இறைமகன்

The Incarnation of the Son

எரே. 33: 14-16 யோவா. 1: 1-14

தி.பா. 72: 7,12, 16-17

படைப்பாளரான கடவுளுக்கும் படைப்புகளான நமக்கும் இடையிலான இடைவெளியை மனுவுருவான இயேசு கிறிஸ்து இணைக்கிறார். ஆதியிலே அவர் ஜீவவார்த்தையாக இருந்தார். ஒளியாகவோ அல்லது எழுதப்பட்ட எழுத்தாகவோ அல்ல. கிறிஸ்து தான் மனுவுருவெடுப்பதற்கு முன்பு பிதாவாகிய கடவுளின் நித்திய வார்த்தையாக இருந்தார். அவர் இல்லாதிருந்த காலமே இருந்ததில்லை. அவர் இல்லாதிருக்கப்போகும் காலமும், இனி வரப்போவதில்லை. அவர் நித்திய காலமாக வாழ்பவர். அவருக்குத் தொடக்கமும் முடிவும் இல்லை. அவரது மனுவுருவேற்புக்கு மட்டுமே தொடக்கமும் முடிவும் இருக்கிறது. அவர் நித்தியமானவர். இயேசு கிறிஸ்து தெய்வீகத் தன்மை நிறைந்தவர் என்பது கிறிஸ்தவத்தின் நம்பிக்கை. அவர் எப்படி மாம்சமாகி நம்மிடையே வாசம் செய்தார் என்பதை இங்குச் சிந்திப்போம்.

1. மாம்சமான வார்த்தை (Incarnated Word) (யோவா. 1: 1)

தொடக்கத்தில் வாக்கு இருந்தது; அவ்வாக்கு கடவுளோடு இருந்தது; அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது (யோவா. 1: 1). கடவுள் உலகினர் மேல் கொண்ட அளவிட முடியாத அன்பை வெளிப்படுத்த விரும்பித் தம் மகனை மனித சாயலில் பிறக்க திருவுளம் கொண்டார். இதையே "வார்த்தை மனுவுருவானார் நம்மிடையே குடிகொண்டார்" (யோவா. 1: 14) என்று திருமறை கூறுகிறது. கிறிஸ்து என்ற சொல் இறைமகன், மனுமகன், ஆண்டவர் என்ற கருத்துகளையெல்லாம் உள்ளடக்கியது. கிறிஸ்துவின் இறைத்தன்மையைப் போல் மனிதத்தன்மையையும் கிறிஸ்தவர்கள் உறுதியாக விசுவாசித்தனர். கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மை தொடர்ந்து முடிவில்லாமல் இருக்கிறது. கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றினார் (பிலி 2: 6-7). மனிதர்களோடு ஒன்றிணைந்து வாழ்ந்து மனிதத்தைப் புனிதமாக்க வேண்டும் என்பதற்காக கிறிஸ்து மனித உருவை ஏற்றுக்கொண்டார்.

பழைய ஏற்பாட்டில் "யாவே கடவுள் தான் தேர்ந்தெடுத்த இனமாகிய இஸ்ரேல் மக்களோடு இணைந்து வாழ்பவராகச் சித்தரிக்கப்படுகிறார்.

காலங்களைக் கடந்து வாழ்வோரின் கடவுளாக தன்னையே மோசேக்கு அறிமுகம் செய்து கொள்கிறார். உங்கள் மூதாதையரின் கடவுள், ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள் நானே(வி.ப.3: 6). "அவர் இறந்தோரின் கடவுள் அல்ல, மாறாக, வாழ்வோரின் கடவுள் (மத் 22: 32)' என்று இயேசு தந்தையாம் கடவுளுக்குச் சான்று பகர்ந்தார்.

ஆதித் திருவார்த்தை திவ்ய
அற்புத பாலனாகப் பிறந்தார்
ஆதாம் தம் பாவத்தில் சாபத்தைத் தீர்த்திட
ஆதிரையோரை யீடேற்றிட - என்ற புகழ் பெற்ற பாடலில் இயேசு கிறிஸ்து ஆதியிலே வார்த்தையாக இருந்ததையும், மனிதர்கள் மீது பரிவு கொண்டு இப்பூவுலகில் மனிதனாக வந்ததையும் தெளிவாகக் கூறுகிறது.

2. வாசமான வார்த்தை (Inhabited God) (யோவா. 1: 14)

இயேசு கிறிஸ்து மாம்சமான வார்த்தை மட்டுமல்ல. அவர் மனிதர்களிடையே வாசமான இறைமகன். வாக்கு மனிதர் ஆனார்; நம்மிடையே குடிகொண்டார். அவரது மாட்சியை நாங்கள் கண்டோம். அருளும் உண்மையும் நிறைந்து விளங்கிய அவர் தந்தையின் ஒரே மகன் என்னும் நிலையில் இம்மாட்சியைப் பெற்றிருந்தார் (யோவா. 1: 14). "இம்மானுவேல் என்றால் கடவுள் நம்முடன் இருக்கிறார் என்பது பொருள்" (மத் 1:23). தனது பெயருக்கேற்ப வாழ்ந்து காட்டியவர் இயேசு. நமது தெய்வம் எங்கோ ஆகாயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு தெய்வமல்ல. கல்லாக உணர்வுகளற்ற தெய்வமுமல்ல. மாறாக, தான் படைத்து உருவாக்கிய மனிதர்களோடு கூட உறைபவர். கடவுளின் தன்மையே தனித்து வாழ்வதல்ல. மாறாக நம்முடன் இணைந்து வாழ்வதுதான். ஆகவே தான் கடவுள் ஒருவர் என்றாலும் மூன்று ஆள்தத்துவமாக இணைந்து செயல்படுகிறார் என்று நாம் விசுவசிக்கிறோம்.

தனது மக்களாகிய இஸ்ராயேலர் எகிப்தில் பட்ட வேதனைகளை, கொடுமைகளை அவர்களோடு உடனிருந்து உணர்ந்தவராக கடவுள் வெளிப்படுத்துகிறார் (வி.ப. 3: 7-8). மனிதர்கள் படும் துன்பத்தை உணர்ந்து இறங்கி வந்து மீட்பதுதான் கடவுளின் தன்மை. பாலைவனத்தில் பகலில் மேகத்தூணாகவும், இரவில் நெருப்பாகவும் அவர்களோடு உடனிருக்கிறார் (வி.ப. 40:38). இஸ்ராயேலரைத் தனது பாதையில் வழிநடத்திச் செல்வதற்காக, மோசே, யோசுவாவைத் தொடர்ந்து நீதித் தலைவர்கள், அரசர்கள், இறைவாக்கினர்கள் கடவுளின் பிரசன்னத்தை இஸ்ரேல் மக்கள் உணருமாறு செய்தார்கள்.

பழைய ஏற்பாட்டில் நாம் காணும் இந்த "உடனிருப்பு" புதிய ஏற்பாட்டில் புதிய பரிணாமம் பெறுகிறது. அந்தப் புதிய பரிணாமத்தின்

தொடர்ச்சி நற்கருணை. கிறிஸ்மஸ், நற்கருணை இரண்டுமே கடவுளின் உடனிருப்பின் அருளடையாளங்களாக உள்ளன. -நாம் வாழ்வு பெறும் பொருட்டு கடவுள் தம் ஒரே மகனை உலகிற்கு அனுப்பினார்" (1 யோவா. 4: 9). அதையே உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில் -ஊனியல்பு கொண்ட மனிதரைப் போன்றவராய்த் தம் சொந்த மகனை அனுப்பி மனிதரிடமுள்ள பாவத்திற்கு முடிவு கட்டினார்" (உரோ 8: 3). -வாழ்வு பெறும் பொருட்டு அதிலும் நிறைவாக பெறும் பொருட்டு" (யோவா 10: 10) கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்தார். அந்த வாழ்வை நாம் நிறைவாக வாழ கிறிஸ்து தனது உடலையும், இரத்தத்தையும் நமக்கு உணவாக விட்டுச்சென்றுள்ளார். மனிதருக்கு வாழ்வு தருவதற்காக கடவுள் மனிதரோடு உடன் உறைகிறார். பழைய ஏற்பாட்டு யாவே கடவுள் இஸ்ரேல் மக்களோடு செய்த உடன்படிக்கை அதுவே. கிறிஸ்து மனிதர் ஆனதன் மூலம் அந்த உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டது. கிறிஸ்து தன்னையே உணவாக நற்கருணையில் தந்தபோது இந்த உடன்படிக்கை தொடருகிறது. இவ்வுலகில் இயேசுவின் இறுதி வார்த்தைகளில் அந்த வாக்குறுதி நமக்குத் தரப்படுகிறது. -இதோ! உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்."

இந்தோனேசியாவில் பூகம்பம் இடர்பாடுகளின் நடுவே ஒரு குழந்தை உயிரோடு மீட்கப்பட்டது. அந்தக் குழந்தையின் அருகில் ஒரு கையடக்கத் தொலைபேசி கிடந்திருக்கின்றது. அதில் ஒரு செய்தி "கண்ணே நீ உயிரோடு இருந்தால் ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக்கொள்! உன் அம்மாவிற்கு உன்னை ரொம்பப் பிடிக்கும்" என்ற செய்தி இருந்தது. நம் கடவுளுக்கு நம்மை மிகவும் பிடிக்கும். அதிகமாக நேசித்ததினால் தான் அவர் நமக்காக இந்த மண்ணுலகில் பிறந்தார். மாம்சமான வார்த்தையாகி, நம்மிடையே வாசமான இறைமகனை நம் வாழ்வில் அனுபவித்து அவரோடு இணைந்து வாழுவோம்! ஆமென்.

முனைவர். திருமதி. ஷோபனா கின்சன் பெல்

திருப்பணிவிடையாளர், மீட்நகர்

பஸ்காவின் பரம இரகசியம்: கிறிஸ்துவின் பாடு, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல்

(The Paschal Mystery: Passion, Death and Resurrection of Jesus)

வி.ப. 3: 7-8 பிலி. 2: 5-11

தி.ப.ா 16: 5, 7, 10, 11

பொதுவாக இயேசு கிறிஸ்துவின் பாடுகள் என்பது இறுதி நாட்களில் நடந்த அவரது இறுதி இரவுணவு, கெத்சமனே தோட்ட வேதனை, கைதியாக்கப்படுதல், விசாரணை, மரணம், அடக்கம் ஆகியவற்றை குறிக்கின்றன. புதிய ஏற்பாட்டில், இயேசுவின் பாடுகள் பற்றி இருவகையானக் குறிப்புகள் காணப்படுகின்றன. அவை

1. இயேசு தான் படப்போகும் பாடுகளைப் பற்றிக் கூறியவை.

2. அவரது பாடுகளைப் பற்றிக் கூறப்பட்டவை

தமது துன்பங்கள் மரணம் மற்றும் உயிர்ப்பு பற்றி இயேசு மும்முறை தம் சீடர்களுக்கு முன்னறிவித்தார். நான் பாடுபடுவதற்கு முன் உங்களோடு இந்தப் பஸ்கா உணவை உண்ண ஆசைமேல் ஆசையாய் இருந்தேன் (லூக்கா 22: 15). என் அடக்கத்தைக் குறித்து முன்னதாகவே என் உடலுக்குத் தைலம் பூசினாள் (மாற் 14: 8, மத் 26: 12) ஆகிய வசனங்கள் இயேசு கிறிஸ்து தன்னுடைய பாடு, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் பற்றி நன்கு அறிந்திருந்தார் என்பதை வெளிப்படுத்துகின்றன. இயேசு கிறிஸ்துவின் வாழ்வின் மையமானச் சிலுவை எப்படிப் பரிகார சின்னமாக, அபிமானச் சின்னமாக மாறியது என்று இங்கு சிந்திப்போம்.

1. பரிகாச சின்னம் பரிகார சின்னமாகிய பரம இரகசியம் (பிலி. 2: 8)

முதலாவதாக, பரிகார சின்னமாக மாறிய சிலுவை. பரிகாரம் என்றால் இயேசு கிறிஸ்து பாவிகளுக்குப் பதிலாக அவர்கள் இடத்தில் சிலுவையில் அறையப்பட்டு மரித்ததாகும். எல்லா மனிதரும் பாவிகள் (உரோ. 3: 9-18, 23), பாவத்திற்கு தண்டனை மரணம், (உரோ. 6: 25). கிறிஸ்து மூலமாக நமக்கு நித்திய வாழ்வு உண்டு என்பதே அவர் நமக்குச் செய்த பரிகாரம். நாம் வாழ்ந்த பாவ வாழ்க்கைக்கு, நாமே சிலுவையில் அறையப்பட்டு மரித்திருக்கவேண்டும். ஆனால் கிறிஸ்து அந்தத் தண்டனையை அவர் தம்மேல் ஏற்றுக் கொண்டு, தம்மைத் தாமே பதிலாகச் கொடுத்தார். "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்குப் பாவம் அறியாத அவரை நமக்காக பாவமாக்கினார்" (2 கொரி. 5: 21). கிறிஸ்து நமக்குப் பதிலாக மரித்தார் என்பதுமட்டுமல்ல பரிகாரமாகவும் அதாவது மனிதனின் பாவத்திற்கு உண்டான விலைகிரயத்தை முழுவதும் செலுத்தினார் என்று உணர்த்துகின்றன.

இயேசு இவ்வுலகில் பிறந்த நோக்கம் தன்னிகரற்றது; தனித்துவமானது. இந்த உலகத்தில் அநேக மகான்களும், மதத்தலைவர்களும், அரசியல்

தலைவர்களும் பிறந்திருக்கிறார்கள். அவர்கள் அனைவருமே வாழ்வதற்காகப் பிறந்தவர்கள். ஆனால் மரிப்பதற்காகவே பிறந்தவர் இயேசு கிறிஸ்து. அந்தக் காலத்தில் பாலஸ்தீனாவில் பாவம் செய்தவர்கள், ஓர் ஆட்டுக்குட்டியை எடுத்து அதன் மேல் கைகளை வைத்து, தமது பாவங்களை அதன் மேல் சுமத்தி, கொலை செய்வது மரபு. பாவத்தைச் சுமத்துகிறவனுடைய பாவங்களை, அந்த ஆடு சுமந்து அவனுக்குப் பதிலாக மரிப்பதுண்டு. இயேசு கிறிஸ்து ஒரு மனிதனுடைய பாவத்தையல்ல, முழு உலகத்தின் பாவத்தையும் சுமந்து தீர்த்தார். எனவேதான் திருமுழுக்கினர் யோவான் இயேசுவை,

"இதோ.. உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" (யோவான் 1: 29)" என்றார். "நாம் பாவிகளாய் இருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே கடவுள் நம்மேல் வைத்த அன்பை விளங்கப்பண்ணினார்" (ரோமர் 5: 8). ஒருவர் செய்யும் தவறுக்கு, இன்னொருவர் அதற்கானத் தண்டனையை ஏற்று சிறைக்குச் செல்வது போல, நாம் செய்த பாவங்களுக்கானத் தண்டனையை ஏற்று, இயேசு சிலுவையில் மரித்தார். எனவே தான் திருமறை "மெய்யாகவே அவர் (இயேசு) நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு நம்முடைய துக்கங்களைச் சுமந்தார். நம்முடைய மீறுதல்களின் நிமித்தம் (பாவங்கள்) அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களின் நிமித்தம் நொறுக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம் (ஏசா 53: 45)" என்று கூறுகிறது. பாவத்திலிருந்து விடுதலை பெற, அதற்குப் பரிகாரம் தேட, இஸ்ரவேலர் பறவை, மிருகங்களைக் கடவுளுக்குப் பலி செலுத்தி பாவமன்னிப்பு பெற்றதாக திருப்தி அடைந்தனர். இருப்பினும், கொடிய பாவ வழிகளில் இருந்து விடுபடமுடியாத சூழலில் கடவுள் தன் சொந்தக் குமாரனைப் பரிகாரமாக தந்தார். இயேசு சிலுவையில் மரிப்பதற்கு முன்பாக அவரைக் கேலி-கிண்டல், அவமானம், நரக வேதனையானச் சித்திரவதைகள் செய்து இறுதியாக சிலுவையிலறைந்து கொன்றனர். பரிகாச சிலுவை பரிகார சிலுவையாக மாறியதில் வியப்பொன்றுமில்லை!!

இயேசு கிறிஸ்துவுக்காகப் பல வேளைகளில் பகை, எதிர்ப்பைச் சந்தித்த சாது சுந்தர் சிங் பசியோடு விரட்டப்பட்ட நிலமையில் குளிர்ந்த காற்றிற்கும், மழைக்கும் தன்னைத் தப்புவிப்பதற்காகக் காடுகளிலே உள்ள குகைகளில் அவர் தங்கினார். இமயமலைப் பகுதிகளில் உள்ள கணவாய் வழியாகப் பிரயாணம்பண்ணும் போது அவர் எப்போதுமே வெறுங்கால்களோடுதான் தன் பிரயாணத்தை மேற்கொண்டார். ஆனபடியினால், கற்கள், பனிக்கட்டிகள் போன்றவற்றினால் அவர் கால்கள் கிழிக்கப்பட்டு அவர் கால்களிருலிந்து இரத்தம் கசிந்து கொண்டே இருக்கும். ஆகையால் (Apostle of bleeding feet) இரத்தம் சிந்தும் பாதங்களின் அப்போஸ்தலன் என்று அழைக்கப்பட்டார். (It's easy to die for Christ. It's hard to live for Him. Dying takes only an hour or two, but to live for Christ means to die daily) கிறிஸ்துவுக்காக இறப்பது எளிது. ஆனால் அவருக்காக வாழ்வது கடினம். இறப்பதற்கு ஒன்றோ இரண்டோ மணி நேரம் மட்டுமே ஆகும். ஆனால் அவருக்காக வாழ்வது தினசரி சாவதாகும், என்ற சுந்தர் சிங்கின் கூற்று நாம் எப்படி ஆண்டவரோடு பாடுபட்டு வாழ வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது

2. அவமானச் சின்னம் அபிமான சின்னமாகிய பரம இரகசியம் (பிலி. 2: 8)

இரண்டாவதாக, அவமானத்தின் சின்னமாகிய சிலுவையில் சாவை ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே இயேசு தாழ்த்தினார் (பிலி. 2: 8). உலகத்தாருக்குச் சிலுவை என்பது ஒரு தோல்வியின் சின்னம், ஆனால் ஆண்டவருடைய பிள்ளைகளுக்குச் சிலுவை வெற்றியின் சின்னம், நம்மில் எவருமே அவமானப்பட விரும்புவதில்லை. நாம் இரகசியமாகச் செய்த தவறுகள் கூட, மற்றவர்களுக்குத் தெரிந்தால் அவமானப்பட வேண்டுமே என நாம் அவற்றை மூடி மறைக்கிறோம். இயேசு கிறிஸ்துவோ தவறு என்று ஒன்றைக்கூட செய்யவில்லை. ஆனாலும் அவரை அவமானப்படுத்தினார்கள். சிலுவையில்லாமல் கிரீடமில்லை (Without cross there is no crown). சிலுவையின் மேன்மையை உணராதவன் மீட்பைப் பெற முடியாது. ஏனெனில் சிலுவை மரணம் இயேசு கிறிஸ்துவின் வாழ்வின் உச்சக்கட்டமும், நமது வாழ்வின் ஆரம்பமும் ஆகும். சிலுவை கிறிஸ்தவ விசுவாசத்தில் முக்கிய இடத்தை வகிக்கிறது. இயேசு கிறிஸ்துவின் மரணத்தின்பின் நடைபெற்ற சம்பவங்களைக் கண்ணால் கண்டவர்கள் அவர் உயிருடன் இருக்கின்றார் என சாட்சி கொடுத்தார்கள். இயேசுகிறிஸ்து சிலுவையில் மரிக்கவில்லையானால் கிறிஸ்தவ விசுவாசமே ஒரு தெளிவில்லாத கட்டுக்கதையாகியிருக்கும். மரணமின்றி உயிர்த்தெழலில்லை. ஆகையால் இயேசுகிறிஸ்துவும் சுபாவத்தின்படியே மனிதனுக்கு நியமிக்கப்பட்ட மரணத்தைத் தழுவிக்கொண்டார். இயேசு கிறிஸ்து இவ்விதமான பாடுகள் உள்ள மரணத்தை ஏற்றுக்கொள்ளாது நீதிமான்களைப்போல அமைதியாக மரித்திருந்தால் மரணத்தை ஜெயித்து உயிர்த்தெழுதல் என்ற சம்பவம் ஒன்று நடந்து இருக்காது.

கி.பி. 69 முதல் 156 வரை வாழ்ந்த போலிகார்ப்பிடம் உரோம அரசர் இயேசுவைப் பழித்து ஒரு வார்த்தை கூறும் உம்மை விட்டுவிடுகிறேன் என்று கிறிஸ்துவை நிந்திக்கும்படி கட்டாயப்படுத்திய போது போலிகார்ப்பின் பதில் இது: "எண்பத்தாறு ஆண்டுகளாக நான் அவரைச் சேவித்திருக்கிறேன். அவர் எனக்கு ஒரு தீங்கும் செய்ததில்லை. என்னை இரட்சித்த மன்னனை நான் எவ்வாறு தூசிக்க முடியும்?" என்று அவர் மூவொரு கடவுளின் பெயரில் பிரார்த்தனைச் செய்த பின்னர் அவர் ஈட்டியால் குத்தகப்பட்டு இரத்த சாட்சியாக மரித்தார்.

மனுக்குலத்தின் மீட்பு இயேசுவின் பிறப்பில் தோன்றி, சிலுவையில் இயேசு மரித்த வேளையில் முழுமையானது. இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவத்திலிருந்து மன்னிப்பு பெறுவது இயலாது. இயேசு தன்னுடைய சொந்த இரத்தத்தினால் கொல்கொதா மலையில் பாடுபட்டு தன்னுடைய இரத்தத்தைச் சிந்தினார். பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தம் இஸ்ரவேல் ஜனங்களைப் பாதுகாத்தது போல, இயேசுவின் இரத்தம் ஒவ்வொருவரையும் பாதுகாக்க வல்லமையுள்ளது. எனவே இயேசுவின் பாடு மரணம் உயிர்தெழுதலின் மையமான சிலுவையை நோக்கிப்பார்த்து மீட்ப்படைவோம்.

முனைவர். திருமதி. ஷோபனா கின்சன் பெல்
திருப்பணிவிடையாளர், மீட்நகர்

வாழ்வும் மகிழ்வும் அருளும் தூயாவியார்

The Holy Spirit, the giver of life and joy

எசே. 36: 24-28 யோவா. 3: 4-8

தி.பா. 104: 24-25, 27-29, 33-34

திருமறையில் தூய ஆவியார் நெருப்பு, பேரிரைச்சலான காற்று, புறா மற்றும் பெருமூச்சாக வெளிப்படுத்தப்படுகிறார். எபிரேய மொழியில் ரூவா என்பதே மூச்சு அல்லது சுவாசக்காற்று ஆகும். இதையே கிரேக்க மொழியில் நூமா அருகிலிருந்து வழிகாட்டும் துணையாளர் என்பதாகும். நீண்டநாள் சிகிச்சையிலிருப்போருக்கு உயிரைக் காப்பாற்றிய மருத்துவரே உயிர்! இளையோருக்கு இணையதளங்களும் அலைபேசிகளுமே உயிர்! சிலருக்கு இசையும் பாடல்களும் உயிர்! நம்மில் அல்ல நமக்கு வெளியே உயிராக, நம்மை வாழவைக்கும் உயிராக நாம் பல பொருள்களை நிகழ்வுகளை, நபர்களைக் காண்கிறோம். இவைகள் நிலையில்லாதவைகள், மாறக்கூடியவைகள், மடியக்கூடியவைகள். நம்மை வாழவைக்கும் உயிர்மூச்சாக நம்மை என்றும் இயக்கி வாழவைப்பவர் உன்னத ஆவியாரே. அவர் எப்படிப்பட்ட வாழ்வும் மகிழ்வும் அருளுகின்றார் என்பதை இங்குச் சிந்திப்போம்.

1. தூய ஆவியார் நம் வாழ்வின் உயிர்மூச்சு (Holy Spirit the giver of Life)

முதலாவதாக, வாழுகின்ற ஆவியாரால் நாம் சுவாசிக்கிறோம். மனித வாழ்வுக்குச் சுவாசிக்கும் மூச்சு மிக மிக அவசிமானதாகும். நாம் உள்வாங்கி வெளிவிடுகிற சுவாசம், மூச்சு தான் நாம் உயிர்வாழ்வதின் அடையாளமாகும். மூச்சு நின்றுவிட்டால், சுவாசம் இல்லையென்றால் நாம் பிணம், மனித வாழ்வின் முடிவு என்று உறுதியாகிறது. தொ.நூ. 2: 7 “அப்பொழுது ஆண்டவராகிய கடவுள் நிலத்தின் மண்ணால் மனிதனை உருவாக்கி அவன் நாசிகளில் உயிர்மூச்சை ஊத மனிதன் உயிர் உள்ளவன் ஆனான். இந்த இறை சுவாசத்தினால் உயிருள்ள மனிதமாக இறைச்சாயலை தாங்கி உலகத்தில் இறைத் திட்டத்தின் உடன் உழைப்பாளர்கள் என்ற பொறுப்புள்ளவர்களாகிறோம். சர்வ வல்லவர் நம்மைப் படைத்தவர், அவர் நம்மைப் படைத்ததோடு நம்மைப் பாதுகாத்து வாழ்விக்கிறார். “எல்லாம் வல்லவரின் மூச்சு என்னை வாழ்விக்கின்றது” (யோபு 33: 4) என்று எலிகூ கூறுவது, அவருடைய மூச்சினாலே, சுவாசத்தினாலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெளிவாக்குகிறது.

ஒவ்வொரு மனிதனுக்கு மட்டுமல்ல மிருகங்களுக்கும் கூட உயிர்வாழ்வதற்கு அடிப்படையானது சுவாசமே. நீர் உமது முகத்தை மறைக்க, திகைக்கும்; நீர் அவைகளின் சுவாசத்தை வாங்கிக்கொள்ள, அவைகள் மாண்டு, தங்கள் மண்ணுக்குத் திரும்பும் (தி.பா. 104: 29). உயிரோடு இருக்கும்

ஆவியாரால் தான் நம்மை மீட்டு வாழவைக்க முடியும். ஏனெனில் ஆவியானவர் வாழுபவர் மட்டுமல்ல, நம்மை வாழ்விப்பவராக நம்மிலே செயல்படுகிறார். ஜெபிக்ககூட உயிர்மூச்சாகச் செயல்படுபவர் ஆவியாரே என்பதை உரோ. 8: 26 கூறுகிறது. "தூய ஆவியார் நம் வலுவற்ற நிலையில் நமக்குத் துணைநிற்கிறார். ஏனெனில் எதற்காக எப்படி நாம் இறைவனிடம் வேண்டுவது என்று நமக்குத்தெரியாது. தூய ஆவியார் தாமே சொல் வடிவம் பெறமுடியாத நம்முடைய பெருமூச்சுகளின் வாயிலாய் நமக்காகப் பரிந்து பேசுகிறார்." நாம் பற்றுறுதி அறிக்கையில் வாழ்வளிப்பவராகிய தூய ஆவியாரை நம்புகிறோம் என்று அறிக்கையிடுகிறோம். எந்நாளும் இயங்கிக் கொண்டிருக்கும் ஆவியார் நம்மையும் உயிருளுள்ளவர்களாக உயிரோட்டமுள்ளவர்களாக இயக்குகிறார் என நாம் உணர வேண்டும்.

கொரோனா வைரஸ் பரவிய காலத்தில் சுவாசிக்க இயலாமல் தவித்த எத்தனையோ மக்களுக்குச் செயற்கை சுவாசம் (Vendilator, breathing machine) கொடுக்கப்பட்டது. பிராண வாயு என்ற ஆக்சிஜன் பல லட்ச ரூபாய்க்கு விற்கப்பட்டது. சுவாசத்திற்கு விலை கொடுத்து செயற்கையாக சுவாசித்தார்கள். தட்டுப்பாடு வந்தபோது அநேகர் சுவாசிக்க முடியாமல் மரித்துப் போனார்கள். அப்போது தான் நம் இறைவன் நமக்குச் சுவாசிக்க இலவசமாக தந்திருக்கும் பிராண வாயுவின் அருமை தெரிந்தது, விலை மதிப்பும் புரிந்தது. என் சுவாசம் ஒழிகிறது, என் நாட்கள் முடிகிறது; பிரேதக்குழி எனக்கு ஆயத்தமாயிருக்கிறது (யோபு 17: 11), என்ற யோபுவின் வார்த்தைகள் கொரோனா பரவலின் காலகட்டத்தில், சுவாசம் நின்றுவிடுமோ என்ற ஒருவித மரண பயத்தை மக்களிடையே ஏற்படுத்தியது. என் சுவாசம் என்னிலும், கடவுள் தந்த ஆவி என் நாசியிலும் இருக்குமட்டும் (யோபு 27:2) ஜீவனோடு வாழமுடியும் என்கிறார் யோபு. நம் நாசியில் கடவுளின் மூச்சு இருக்கும் வரை நம்முடைய பெருமூச்சுகளை உயிர்மூச்சாக மாற்றுகிறார் அதனால் தான் உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்து, அவர்கள் மேல் ஊதி: பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள் (யோவா. 20: 22) என்றார். அவர் ஜீவ சுவாசத்தோடு வாழ்கின்ற மீட்பராக இருக்கிறதால் நம்மையும் சுவாசத்தோடு வாழ்விக்கிறார். நாம் சுவாசிக்கிறதற்கு உயிருள்ள ஆவியார் தந்திருக்கிற வாய்ப்புக்கு நன்றி சொல்லியிருக்கிறோமா?

2. தூய ஆவியார் மகிழ்வின் ஊற்று (Holy Spirit the giver of Joy)

இரண்டாவதாக, தூய ஆவியார் மகிழ்வின் ஊற்றாக இருக்கின்றார். தூய ஆவியார் நம் வாழ்வின் உயிர்மூச்சு மட்டுமல்ல, அவர், மகிழ்வின் ஊற்று ஏனெனில், நம்மை ஒருபோதும் கைவிடாதவர். அவர் தனது அமைதி நிறைந்த உடனிருப்பால் நம்மை ஆறுதல்படுத்துபவர், அன்புடன் நம்முடன் பயணிப்பவர், போராட்டங்களிலும் சிரமங்களிலும் நம்மை ஆதரிப்பவர், நமது அழகானக் கனவுகள் உள்ளத்தின் ஆழமான ஆசைகளை ஊக்குவிப்பவர், மற்றும் வாழ்க்கையின் அதிசயங்களையும் அழகையும் நமக்குத் திறப்பவர். தூய ஆவி உங்களிடம் வரும்போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று எருசலேமிலும் யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடையெல்லை வரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள் என்று தி.ப. 1: 8-இல்

படிக்கிறோம். எனவே, ஆவியானவர் உள்ள இடத்தில், இதயத்தில் விடுதலையும், மகிழ்ச்சியும் இருக்கும்.

ஆவியாரை நம் இதயத்தில் மையமாக வைத்து வாழ்கின்றபோது, நம்மிலே இறைவல்லமை, அன்பு பெருகும். தூய ஆவியார் அருளும் இந்த மகிழ்ச்சியைக் கண்டுணர்ந்து அதனைச் சமூகத்தில் அனுபவித்த நாம், இந்த மகிழ்வைப் பிறருக்குக் கொடுப்பதன் வழியாகத் தான் அதனை வளர்ச்சியடையச் செய்யமுடியும். கிறிஸ்தவ மகிழ்ச்சி என்பது இயற்கையாக ஒருவரை ஒருவர் தொற்றிகொள்ளக்கூடியது. ஏனென்றால், மகிழ்வின் நற்செய்தி நம்மைக் கடந்து, கடவுளின் அன்பின் அழகைப் பகிர்ந்து கொள்ளச் செய்கிறது. மகிழ்வின் நற்செய்தியை மிகுந்த ஆர்வமுடன் பரப்புவது முக்கியம். கிறிஸ்தவ மகிழ்ச்சியை நாம் நமக்குள்ளேயே வைத்துக் கொள்ளமுடியாது. நம்மைச்சுற்றி அதனைப் பரப்பத் தொடங்கிய உடனேயே அது பெருகி வளரத் தொடங்கிவிடும். பேராயர் ஆஸ்கர்ரோமேரோ "பெந்தகோஸ்தே என்ற நினைவு கொண்டாட்டம் ஒருநாள் திருநாள் அல்ல; மாறாக இது அனுதின கொண்டாட்டமாகும். காரணம் மூச்சு சுவாசமில்லா வாழ்வு இல்லை. அதுபோல தூய ஆவியாரில்லாத் திருச்சபை காய்ந்து கிடக்கும் செத்துப்போன எலும்புகள் நிரம்பிய நிலத்துக்குச் சமம் என்கிறார்.

நற்செய்தி அறிவிக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் நியூயார்க்கிலிருந்து இந்தியாவிற்குக் கப்பலில் ஜான் ஹைட் (John Hyde) வந்து கொண்டிருந்தபோது இவரது நெருகிய நண்பர் இவருக்கு எழுதிய ஒரு கடித்தத்தில், "இந்தியாவிற்கு நற்செய்தி அறிவிக்கச் செல்லும் நீ தூய ஆவியாரால் நிரப்பப்பட்டிருக்கின்றாயா?" என்ற வார்த்தைகளைப் படித்ததும், இவர், "நான் எவ்வளவு படித்திருக்கின்றேன். தூய ஆவியாரால் நிரப்பப்பட்டிருக்கின்றாயா? என்று கேட்கின்றானே இவன் என்று அந்தக் கடிதத்தைக் கசக்கிப்போட்டார். இவர் இந்தியாவிற்கு வந்து நற்செய்தியை அறிவிக்கத் தொடங்கியபோதும் தூய ஆவியாரின் முக்கியத்துவத்தை உணராமலேயே நற்செய்தி அறிவித்தார். இதனால் மக்கள் நடுவில் எந்தவொரு மாற்றமும் ஏற்படவில்லை. அப்போது தான் இவர் தூய ஆவியாரின் முக்கியத்துவத்தை உணர்ந்தார். உடனே இவர் கடவுளிடம் தூய ஆவியைத் தன் மீது பொழியுமாறு மன்றாடினார். கடவுளும் இவர் மீது தூய ஆவியைப் பொழியவே மகிழ்ச்சியோடு இவர் நற்செய்தி அறிவித்து, ஆயிரக்கணக்கான மக்களை ஆண்டவர் மீது நம்பிக்கை கொள்ளச் செய்தார். நற்செய்திப் பணியாளரான ஜான்ஹைட் தூய ஆவியைப் பெறும் வரை பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியவில்லை. எப்போது இவர் தூய ஆவியைப் பெற்றுக் கொண்டாரோ, அப்போது, இவரால் மகிழ்ச்சியோடு நற்செய்தியை அறிவிக்க முடிந்தது. ஆவியாரின் வருகை மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது.

தூய ஆவியார் நம் வாழ்வின் உயிர்மூச்சு மற்றும் நம் மகிழ்வின் ஊற்று என உணர்ந்து என்றும் அவர் வழி நடப்போம், ஆமென்.

முனைவர். திருமதி. ஷோபனா கின்சன் பெல்

திருப்பணிவிடையாளர், மீட்நகர்

திருச்சபை: நம்பிக்கையாளர்களின் சமூகம்

The Church: Community of Believers

எசா. 2: 2-4 எபே. 4: 1-6

தி. ப. 133

"எக்ளேசியா" என்னும் கிரேக்க வார்த்தையைத் "திருச்சபை" என மொழிபெயர்கின்றனர். இந்த வார்த்தையின் பொருள்" அழைக்கப்பட்டவர்களின் சமூகம்" என்பதாகும். திருச்சபை என்பது நம்பிக்கையாளர்களின் கூட்டமைப்பு எனப் பொருள்படும். புதிய ஏற்பாட்டில் இச்சொல் ((εκκλησία)) ஸ்தல விசுவாசிகளையும் (local), அகில உலக விசுவாசிகளையும் (Universal) குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. "கடவுளுக்குஉரியது," எனும் பொருள்படும் வார்த்தையானத் திருச்சபை என்பதில் திரு என்பது "புனிதத்தை"யும் சபை என்பது "மக்கள் குழுவை"யும் குறித்து "திரு+சபை=திருச்சபை" என்ற சொல் உருவாகி உள்ளது. இதற்குப் "புனித மக்கள் கூட்டம்" அல்லது "இறைமக்கள் சமூகம்" என்றும் பொருள் கொள்ளலாம். ஒரே, பரிசுத்த, பொதுவான, அப்போஸ்தல சபை மட்டுமே திருச்சபையாகும் என விசுவாசஅறிக்கை கூறுகின்றது.

திருச்சபையைப் பற்றிப் பலவகையான எடுத்துக்காட்டுகள் திருமறையில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தாவீது அரசர் திருச்சபையை ஆண்டவரின் நகரமென்றும், செக்கரியா இறைவாக்கினர் திருச்சபையைத் தூய்மையின் பலிபீடம் என்றும் அழைக்கின்றனர். புதிய ஏற்பாட்டில் திருச்சபையைக் குறிக்கவும், திருச்சபைக்கும், இயேசுவுக்கும் இடையேயான உறவினை வெளிப்படுத்தவும் பல்வறு உவமைகளை நாம் காணமுடிகிறது. எடுத்துக்காட்டாக, மேய்ப்பரும் ஆடுகளும் (யோவா. 10: 1-21), திராட்சசெடி (யோவா. 15: 1-10), கட்டடத்தின் மூலைக்கல்லும் பிற கற்களும் (எபே. 2: 20-22) உடலும் உறுப்புகளும் (1 கொரி. 12:12-31), மணமகனும், மணமகளும் (எபே. 5: 22-33). திருச்சபை எப்படிப்பட்ட நம்பிக்கையாளர்களின் சமூகம் என்பதைப் பற்றிச் சிந்திக்கலாம்.

1. திருச்சபை புனிதர்களின் இருப்பிடமல்ல பாவிகளின் புகலிடம் :
(Church is not the place of saints but refuge of sinners)

திருச்சபை என்பது புனிதமானது. எனெனில், கிறிஸ்துவே அதன் தலைவர். திருச்சபை கிறிஸ்துவின் தொடர்ச்சியே ஆகும். தூயோராய் இருங்கள். ஏனெனில், உங்கள் கடவுளும் ஆண்டவருமாகிய நான் தூயவர் (லேவி. 19: 1), என்பதிலிருந்து பாவிகளான நாம் பரிசுத்தர்களாக, புனிதர்களாக வாழ இறைவன் நம்மில் எதிர்பார்க்கிறார். கிறிஸ்துவின் திருச்சபை பரிசுத்தமானதாக இருந்தாலும், இறைவன் பரிசுத்தமானவராக இருந்தாலும், திருச்சபை

பாவிகளின் புகலிடமாக இருக்கிறது. “ஐயோ, நான் அழிந்தேன். ஏனெனில் தூய்மையற்ற உதடுகளைக் கொண்ட மனிதன் நான்; தூய்மையற்ற உதடுகள் கொண்ட மக்கள் நடுவில் வாழ்பவன் நான்” (எசா. 6: 5), கடவுளே, பாவியாகிய என் மீது இரங்கியருளும் (லூக்கா 18: 13), என்று தன்னிலை உணருகிற ஒரு இடமாக இருக்கிறது. புனிதமானத் திருச்சபை எந்தப் பாகுபாடுமின்றி அனைவருக்கும் மீட்பைத் தர வல்லது. ஏனெனில் திருச்சபையின் தலைவராகிய கிறிஸ்துவே மீட்பின் முழுமையைத் திருச்சபைக்குக் கொடுத்திருக்கின்றார். சவுல் என்று அழைக்கப்பட்ட பவுல் கடவுளின் திருச்சபையைத் துன்புறுத்தி வந்த காலத்தில் இயேசு அவருக்குத் தோன்றி இவ்வாறு கூறினார். “நீ துன்புறுத்தும் இயேசு நானே” (தி.ப. 9: 5). திருச்சபையைத் துன்புறுத்தும்போது கிறிஸ்து துன்புறுத்தப்படுகிறார் என்று சவுல் உணர்ந்தார். இவ்வாறு கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இடையே பிரிக்க முடியாத ஓர் உறவு உள்ளது. திருச்சபை உலகளாவியது. ஏனெனில் திருச்சபையின் தலையாய பணி உலகெங்கும் நற்செய்தி அறிவித்தலே ஆகும். திருத்தூதுவர்களின் வழியில் திருச்சபையானது கிறிஸ்துவின் மீட்புப் பணியை உலகெங்கும் தொடர்ந்து ஆற்றிக்கொண்டு வருகிறது. மக்களினங்கள் அதை நோக்கிச் சாரைசாரையாய் வருவார்கள் (எசா. 2: 2). தவறிழைத்தோரின் தஞ்சமாக, அடைக்கலப் பட்டணமாகத் திகழ வேண்டிய திருச்சபை இன்று எப்படி இருக்கிறது?

போதகர் ஒருவரிடம் ஒரு பெண்மணி நான் இனி இந்த ஆலய ஆராதனைகளில் பங்குபெற மாட்டேன் இந்த ஆலயத்தில் யாரும் நல்லவர்களாக இல்லை என்றபோது, போதகர் அவளிடம் தண்ணீர் நிறைந்த கண்ணாடிக் குவளைக்கொடுத்து தண்ணீர் சிந்தாமல் சிதறாமல் மூன்று முறை இந்த ஆலயத்தைச் சுற்றி நடந்துவரச் சொன்னார். நடந்து முடித்து வந்த அந்தப் பெண்மணிடம் போதகர் மூன்று கேள்விகளை: 1. நீங்கள், யாராவது அவர்களின் கைப்பேசியில் பேசுவதைப் பார்த்தீர்களா? 2. யாராவது மற்றவர்களோடு கிசுகிசுப்பதைப் பார்த்தீர்களா? 3. யாராவது தவறு செய்வதைப் பார்த்தீர்களா? என்று கேட்டார். அந்தப் பெண்ணின் கவனம் முழுவதும் தண்ணீர் நிறைந்த கண்ணாடி குவளையின் மீது இருந்ததால் எதையும் பார்க்கவில்லை என்று பதிலளித்தார். ஆலய ஆராதனையில் பங்குபெறும்போது, ஒருவர் கடவுளிடம் கவனம் செலுத்த வேண்டுமே தவிர, மற்றவர்கள் கடவுளுடன் எவ்வாறு தொடர்பு கொள்கிறார்கள் என்பதில் அல்ல என்று போதகர் அவளிடம்கூறினார்.

2. திருச்சபை பரிபூரணரின் இருப்பிடமல்ல பரதேசிகளின் புகலிடம்
(Church is not the place of perfect people but a place of refugees)

இரண்டாவதாக, திருச்சபை பரதேசிகளின் புகலிடம். பாவிகளின் புகலிடமான திருச்சபையின் தலைவர் கிறிஸ்துவே. அவரே பரிபூரணமானவர். நாம் அனைவரும் குறைவுள்ளவர்கள். திருச்சபை ஓரினத்தாரின் இருப்பிடமல்ல, பிற இனத்தவரின் புகலிடம். வேற்றினத்தார் பலர் அங்கு வந்து சேர்ந்து “புறப்படுங்கள் ஆண்டவரின் மலைக்குச் செல்வோம்; யாக்கோபின் கடவுளின் கோவிலுக்குப் போவோம். அவர் தம் வழிகளை நமக்குக் கற்பிப்பார்; நாமும் அவர் நெறிகளில் நடப்போம்” என்பார்கள். அவர் வேற்றினத்தாரிடையே

உள்ள வழக்குகளைத் தீர்த்து வைப்பார்; பல இனமக்களுக்கும் தீர்ப்பளிப்பார் (எசா. 2: 3). நற்கருணை அனுபவத்தில் பங்குகொள்கின்ற விசுவாசிகள் கிறிஸ்துவின் திருஉடலையும், திருஇரத்தத்தையும் உட்கொண்டு கிறிஸ்துவின் உடன் உறுப்புக்களாக மாறுகின்றனர். "அப்பம் ஒன்றே ஆனால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம்" (1 கொரி. 10: 17). திருச்சபை ஒன்றே, ஏனெனில் தந்தை, மைந்தன், தூயாவியார் என்னும் மூன்று ஆட்களான ஒரே கடவுள்தான் அதன் ஆதாரம். இந்த ஒரே ஆதாரத்திலிருந்துதான் ஒரே விசுவாசம், ஒரே நம்பிக்கை, ஒரே திருமுழுக்கு, ஒரே திருவிருந்து மற்றும் திருவருட்சாதனங்களை நாம் பெறுகிறோம்.

கத்தோலிக்க திருச்சபையில் பேராயர் ஆஸ்கார் ரோமெரோ 1970-களில் மத்திய அமெரிக்காவில் அமைந்துள்ள எல்-சால்வடாரில் ஏழைகள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் மனித உரிமைகளுக்காக, குறிப்பாக விவசாயிகளுக்காகப் போராடினார். தனது சகோதரர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளைப் பற்றி பிரசங்கங்கள் மற்றும் உரைகளை வழங்கினார். அவைகளில் ஒன்று இது: "I would like to make a special appeal to the men of the National Guard, the police and the military. Brothers, you come from our own people. You are killing your own brother peasants. No one has not to obey an immoral law. I implore you, I beg you, I order you in the name of God: stop the repression." ("தேசிய காவலர், காவல்துறை மற்றும் ராணுவ வீரர்களுக்கு நான் ஒரு சிறப்பு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். சகோதரர்களே, நீங்கள் நம் சொந்த மக்களிலிருந்து வந்தவர்கள். உங்கள் சொந்த சகோதர விவசாயிகளைக் கொன்று விடுகிறீர்கள். ஒழுக்கக்கேடான சட்டத்திற்கு யாரும் கீழ்ப்படிய வேண்டியதில்லை. நான் உங்களிடம் கெஞ்சுகிறேன், கெஞ்சுகிறேன், கடவுளின் பெயரால் நான் உங்களுக்கு உத்தரவிடுகிறேன்: அடக்குமுறையை நிறுத்துங்கள்"). இந்தச் செய்தியை பேசிய அடுத்த நாள், மார்ச் 24, 1980 அன்று, மருத்துவமனைச் சிற்றாலயத்தில் பேராயர் ரொமேரோ திருவிருந்து ஆராதனை நடத்திக்கொண்டிருந்தபோது ஒரு கொலையாளியால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார். தேவாலயத்தில், திருவிருந்தில் "தானே" திருப்பலியானது வன்முறைக்கு வைக்கப்பட்ட முற்றுப்புள்ளி அல்லவா?

வாள்களைக் கலப்பைக் கொழுக்களாகவும்
ஈட்டிகளைக் கருக்கரி வாள்களாகவும் அடித்து
ஓரினத்திற்கெதிராக மற்றோரினம் வாளெடுக்கக்காத
ஒருபோதும் போர்ப்பயிற்சி பெறாத (எசா. 2: 4)
அமைதியின் இருப்பிடங்களாகத் திருச்சபை
அமைய ஆண்டவரிடம் மன்றாடுவோம்! ஆமென்.

முனைவர். திருமதி. ஷோபனா கின்சன் பெல்
திருப்பணிவிடையாளர், மீட்நகர்

ஆண்டவரின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலில் திருமுழுக்கு

Baptism into the Death and Resurrection of the Lord

மீக்கா 7: 18-19 மத். 28: 16-20

தி. பா 51: 1, 7, 10, 12

கிறிஸ்தவ அருளடையாளங்களில் முதன்மையானதும் முக்கியமானதும் திருமுழுக்கு ஆகும். கிரேக்க மொழியில் திருமுழுக்கு என்ற சொல்லின் பொருள் "முழ்குதல், சுத்திகரித்தல் அல்லது கழுவுதல்" என்பது. இயேசு கிறிஸ்து திருமுழுக்கு பெற்றதைப் போலவே, நாமும் திருமுழுக்கு பெறுவதன் மூலம் அவருடன் இணைகிறோம். இயேசு கிறிஸ்து தம் சீடர்களுக்கு, "நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்; தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள் என்று கட்டளையிட்டார்," (மத். 28: 19). திருமுழுக்கு ஒரு சடங்கோ சடங்காச்சாரமோவல்ல. இது ஒரு சாக்கிரமெந்து (sacrament), ஏனெனில், உள்ளார்ந்த கருணையின் வெளிப்புற அடையாளம். எங்கு, யாரால், எப்படிப் பெறுகிறோம் என்பதல்ல, ஆனால் ஒரே ஒரு முறை தான் நாம் திருமுழுக்கு பெறவேண்டும். இயேசுகிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலில் பெறப்படும் திருமுழுக்கு எப்படிப்பட்டது என்பதை இங்குச் சிந்திப்போம்.

1. திருமுழுக்கு அருளடையாளம் (Baptism is Outward Sign of Inward Grace)

முதலாவதாக நாம் பெறும் திருமுழுக்கு அருளடையாளம் (inward Grace), வெறும் அடையாளமல்ல (Symbol), நம்முடைய பாவம் கழுவப்பட்டிருக்கிறது என்பதின் அருளடையாளம். திருமுழுக்கில் பல்வேறு அர்த்தமுள்ள அடையாளங்களான தண்ணீர், வெள்ளுடை, கழுவுதல், பெயர் மாற்றம் போன்றவை உறுதிப்படுத்துகின்றன. திருமுழுக்கு பெற வந்தவர் ஏன் வெள்ளுடையை அணியவில்லை? ஏன் பெயர் மாற்றம் செய்யவில்லை? என்பதே ஆராதனையில் அநேகரின் விமர்சனமாக இருக்கின்றன. திருமுழுக்கு என்பது ஆடையின் நிறமாற்றமல்ல, வாழ்வின் நிஜமாற்றம். பெயர் மாற்றமல்ல, கிறிஸ்துவின் பிள்ளைகள் என்கிற அங்கீகாரம். சாதாரண அழுக்கிலிருந்து மட்டுமல்ல, பாவ அழுக்கிலிருந்தும் தூய்மைப்படுத்தும் ஆற்றல் தண்ணீருக்கு இருக்கிறதால், கங்கை ஆற்றில், காவேரி நதியில், கன்னியாகுமரி கடலில் குளித்தால் பாவம் நீங்கும் என்ற இந்து சமய நம்பிக்கை இத்துடன் ஒப்பிடத்தக்கது. திருமுழுக்கு பெறுவோர் இயேசுவின் இறப்பு-உயிர்ப்பு

நிகழ்வில் பங்கேற்கிறார். இதன் வழியாக மாயை வாழ்வுக்கு (பாவவாழ்வுக்கு) இறந்து புதியவாழ்வுக்கு (அருள் வாழ்வுக்கு) உயிர்த்தெழுகிறார் (உரோ 6:1-4). திருமுழுக்குப் பழைய படைப்பு நிலையிலிருந்து புதிய படைப்பு (New Creation) என்ற நிலைக்கு நம்மை உயர்த்துகிறது. நாம் திருமுழுக்கு பெறும்போது மனந்திரும்பி நமது பழைய வாழ்க்கையை அடக்கம் செய்து, இயேசு கிறிஸ்து அடக்கம் செய்யப்பட்டு மீண்டும் உயிர்த்தெழுந்ததைப் போலவே நாமும் ஒரு புதிய வாழ்க்கையை ஆரம்பிக்கிறோம் (உரோ 6: 1-11).

பாவம்செய்வதுமனிதசுபாவம். தவறுவது மனித இயற்கை மன்னிப்பது தெய்வீகம் (To err is human, to forgive is divine). பாவம் செய்வது மாம்சத்திலுள்ள பாவ சுபாவத்தினால் என்று தி.பா 51: 5-இல் என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்" என தாவீது கூறுகிறார். என் மாம்சத்தில், நன்மை வாசமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன்'' என்று பவுல் உரோ 7: 18-இல் கூறுகிறார். ஆகவே, கடவுளே, தன்னைச் சுத்திகரிக்க முடியும் என்று தாவீது என்னை ஈசோப்பினால் சுத்திகரியும்" என தி.பா. 51: 7-இல் மன்றாடுகிறார். ஈசோப்பு என்ற செடி பலியின் இரத்தத்தை மீட்புக்காக எடுத்துத் தெளிக்க, பூசிக் கொள்ள பயன்படுத்தப்பட்டது என்று வி.ப. 12: 22-இல் வாசிக்கிறோம். பவுலும் கூட இயேசு கிறிஸ்து ஒருவரே பாவ சுபாவத்திலிருந்து விடுவித்து பாவத்தை மன்னித்து தன்னைச் சுத்திகரிக்க முடியும் என்பதை உரோ 7 மற்றும் 8-ஆம் அதிகாரத்தில் கூறுகிறார். லூக்கா 15:21-இல் இளைய குமாரன் தான் செய்த பாவம் பரத்திற்கு விரோதமானது என்று மனஸ்தாபப்பட்டு அறிக்கையிடுகிறான்.

தாவீதின் பாவத்தை மன்னித்து உறை பனி வெண்மையாக மாற்றிய ஆண்டவரின் இரக்கமும், இளைய குமாரனின் தகப்பனின் மன்னிப்பும் தான் முக்கியமே தவிர அடையாளங்கள் அல்ல என்பதை புரிந்து கொள்கிறோம். ஏனெனில், திருமுழுக்கு பாவமன்னிப்பை வழங்குகின்றது (தி.ப. 2: 38). பாவங்களிருந்து கழுவித் தூய்மைபடுத்துகின்றது (தி.ப. 22: 16). இறந்த, உயிர்த்த கிறிஸ்துவோடு ஒரு புதிய ஒன்றிப்பையும், உறவையும் உருவாக்குகின்றது (கலா. 3: 27, உரோ. 6: 3, கொலோ. 2: 11). பாவம், குற்ற உணர்வு ஆகியவற்றிலிருந்து விடுதலை தந்து உயிர்த்த இயேசுவின் வாழ்வில் பங்கேற்கும் உரிமையை வழங்குகின்றது (உரோ 6:1-11). கடவுளுக்கு நம்மையே அர்ப்பணிக்கின்றது (1கொரி. 6: 11). புதிய குடும்பத்தில் இயேசு கிறிஸ்துவின் முன் மாதிரியால் வழி நடத்தப்பட்டு மறையுடலின் உறுப்பினராக்குகின்றது (1கொரி. 1: 12-13). எனவே, திருமுழுக்குப் புது வாழ்வில் நம்மை இணைக்கிறது. தண்ணீரில் கழுவுதல் அல்லது மூழ்குதல் பாவத்திலிருந்து சுத்தப்படுத்தலை மட்டுமல்ல, மாறாக, உயிரோட்டமுள்ள தண்ணீர் தரும் உயிருள்ள செயல்பாட்டையும் வெளிப்படுத்துகிறது. நோவா தண்ணீரினால், மோசே பாறையிலிருந்த தண்ணீரினால், இஸ்ரவேல் மக்கள் செங்கடலின் தண்ணீரினால், விடுதலையின் புது உயிரைப் பெற்றனர். திருமுழுக்கு பெற்ற நம்மில் அந்த உயிரோட்டம் புது வாழ்வு, அருளடையாளம் இருக்கிறதா?

2. திருமுழுக்கு அனுபவடையாளம் (Baptism is outward sign of Inward Experience)

திருமுழுக்கு அருளடையாளமாய் நம்மைப் புது வாழ்வில் இணைப்பதோடு புது வாழ்வியல் அனுபவமாகிறது. குறைகளில் கறைகளில் இருந்த மக்களோடு பாவமற்ற இயேசுவின் ஒன்றிப்பு, நம்மோடு இணைந்து நம்மில் ஒருவராக ஒன்றிக்கவே திருமுழுக்கின் வழியாக நம்மில்-நம்மோடு உறவு கொண்டார். திருமுழுக்கு ஒரு நிகழ்வல்ல, அது ஒரு அனுபவம்.

புறந்தூய்மை நீரான் அமையும்

அகந்தூய்மை வாய்மையால் காணப்படும் என்ற திருக்குறளின்படி, வெளிச்சுத்தம் தண்ணீரால் ஏற்படும். உள்ளத்தின் சுத்தம் வாய்மையால் அறியப்படும். 2 சாமு 12: 1-13-இல் நாத்தான் இறைவாக்கினர் தாவீதின் பாவத்தைக் குறித்து கண்டித்தபோது, தான் பத்சேபாளிடம் செய்த பாவத்திற்கு முழுப்பொறுப்பையும் ஏற்று, கடவுள் ஒருவரே தன்னைச் சுத்திகரிக்க முடியும் என உணர்ந்து பாவத்தை அறிக்கையிட்டு மனந்திரும்பியதால் கடவுளுடைய கிருபை, இரக்கம் பெற்றுக்கொண்டார். தி.பா. 51: 7-இல் காணப்படும் அகந்தூய்மை அனுபவத்தின் எடுத்துக்கட்டுகள் சில: உள்ளத்தில் உண்மை (வச.6), சுத்த இருதயம் (வச.10), நொறுங்குண்ட ஆவி (வச.17), நீதியின் பலிகள் (வச.19). குற்றங்களைத் துடைத்தல், ஈசோப்பினால் கழுவுதல், தூய்மையாதல், உறைபனியிலும் வெண்மையாதல். தூயதோர் உள்ளம், உறுதி தரும் ஆவி, புதுப்பிக்கும் ஆவி, மீட்பின் மகிழ்ச்சி, தன்னார்வ மனம் ஆகியவை தாவீதின் வாழ்வில் தலை கீழ் மாற்றத்தைக் கொண்டு வந்தன. கடவுள் தன் பாவங்களை மன்னித்து தனக்குச் சுத்த இருதயத்தையும், மீட்பின் சந்தோஷத்தையும், உற்சாகமான ஆவியையும் திரும்பக் கொடுப்பாரானால் தான் மற்ற பாவிகள் மனந்திரும்பும்படி கடவுளுடைய வழிகளை உபதேசித்து, அவருடைய நீதியைக் கெம்பீரமாகப்பாடி, கடவுளுடைய புகழை மீண்டும் அறிவிப்பேன் என்ற பொருத்தனை விண்ணப்பத்தை (வச. 10,12,13,14,15) வாஞ்சையுடன் ஏறெடுக்கிறார். இதுதான் அருளடையாளம் அனுபவடையாளமாக மாறும் திருக்காட்சி!

யூத வழக்கத்தில், பிற இனத்தவர்க்குத் திருமுழுக்கின் சுத்தப்படுத்துதல் தேவை. கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாகிய தங்களுக்குத் தேவையில்லை என்று பிரித்து வேறுபடுத்தி வாழ்ந்த சூழலில் இயேசு திருமுழுக்கின் வழியாக அனைத்துப் பிரிவினைகளை, வேறுபாடுகளை உடைத்தார். தொழுகைக்கூடங்கள், செபக்கூடங்கள், பொது இடங்கள், பாவிகள், நோயுற்றோர், பெண்கள், குழந்தைகளோடு ஈடுபட்டு ஒன்றிப்பதன் வழியாக திருமுழுக்கு நம்மைச் சமமாக ஒரே தந்தையின் அன்பு பிள்ளைகளாக்குகிறது. இயேசுவின் திருமுழுக்கு மனிதர்களோடு அவர் கொண்ட தோழமையின் அடையாளமாக அமைகிறது. இத்திருமுழுக்கின்

வழியாக இயேசு தூய ஆவியின் அனுபவம் பெறுகிறார். இதன் வாயிலாக இயேசு தான் இறைமகன் என்ற ஆழ்ந்த தன்மையுள்ள அனுபவமும் பெறுகிறார். அதே சமயம் தனது பாதிக்கப்பட்ட சகோதர சகோதரிகளில் தன்னையும் ஒருவராக அவர் ஐக்கியப்படுத்திக் கொண்ட நிகழ்வாக அது அமைகிறது. பாதிக்கப்பட்ட மானுடத்தின் பிரதிநிதியாக புதிய அனுபவத்தில் நுழைகிறார். ஒரு வகையில் இயேசுவின் இறப்பு-உயிர்ப்பு நிகழ்வை முன்னறிவிக்கும் நிகழ்வாகவும் அவரது திருமுழுக்கு அமைகிறது. இயேசுவின் திருமுழுக்கு நம்மையும் குணப்படுத்தும், அறிவிக்கும் பணியில், திருச்சபையின் ஓர் அங்கமாக பணியாற்ற வேண்டும் என்பதையே எடுத்துரைக்கிறது. கி.பி. 240-312-இல் வாழ்ந்த அந்தியோக்கியாவைச் சார்ந்த லூசியன் திருமுழுக்கு பெற்ற கிறிஸ்தவனின் ஒரே உறவு புனிதர்களே! புனிதர்களின் குடும்பத்தில் விண்ணகத்திலும் மண்ணகத்திலும் ஒன்றிப்பதே திருமுழுக்காகும் என்றார். மற்றவர்களோடு ஒன்றிக்க வழி நடத்துவதோடு சமூகத்தில் எந்தக் குழுவில் எந்தச் செயல்பாட்டில் நாம் நம்மை ஈடுபடுத்தி நம்மை அடையாளப்படுத்தி ஒன்றிக்கின்றோம்?

பிறந்து இரண்டு வாரங்களே ஆன குழந்தைக்கு இருதய அறுவை சிகிட்சை செய்ய வேண்டும் என்ற மருத்துவரின் ஆலோசனை ஒரு பெற்றோரைத் துயரத்தில் ஆழ்த்தியது. ஆடம்பரமாக வீட்டில் கொண்டாட வேண்டிய திருமுழுக்கை, குழந்தைக்கு மருத்துவமனையில் வைத்து கொடுப்பீர்களா என்று போதகரிடம் கேட்டார்கள். ஏன் அறுவை சிகிச்சைக்கு முன்பு திருமுழுக்கு கேட்கிறீர்கள் என்று போதகர் கேட்டது அவர்கள் சொன்ன பதில்: எங்கள் குழந்தை இறைவனின் குழந்தையாக வேண்டும். திருமுழுக்குத் தண்ணீரால் உயிரோட்டம் பெறவேண்டும். ஆபத்தான அறுவை சிகிச்சையில் இறைத்தந்தை குழந்தையைக் கரங்களில் பாதுகாப்பார், என்றார்கள். திருமுழுக்கும் கொடுக்கப்பட்டது 11 மணிநேர அறுவை சிகிச்சைக்குப் பிறகு குழந்தை குணம்பெற்று இன்றும் உயிரோடிருக்கிறது. குழந்தையின் திருமுழுக்கு பெற்றோரின் வாழ்வில் அனுபவடையாளமாக மாறியது.

நாம் பெற்றிருக்கிற திருமுழுக்கு என்னும் அருளடையாளம், அனுபவடையாளமாக மாறும்படி வாழ்ந்து இயேசு கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுக்குச் சான்றாக வாழ்வோம்!

முனைவர். திருமதி. ஷோபனா கின்சன் பெல்

திருப்பணிவிடையாளர், மீட்நகர்

05.01.2025 கிறிஸ்து பிறப்புக்குப் பின் வரும் இரண்டாம் ஞாயிறு

மீட்புக்கான வெளிப்பாடு

Revelation for Salvation

வி.ப. 3: 1-14 தி.ப. 16: 6-10

தி.பா. 27 யோவா. 12: 20-32

"ஆண்டவரே என் ஒளி; அவரே என் மீட்பு". (தி.பா. 27: 1a)

மனிதர் தங்கள் வாழ்வில் கடினங்களுக்குள், அடிமைதனங்களுக்குள், அடக்குமுறைக்குள், பாதுகாப்பற்ற சூழ்நிலைகளுக்குள் சிக்கித் தவிக்கும்போது யார் எனக்கு உதவி செய்வார்? யார் என்னை விடுவிப்பார்? என்கின்ற எதிர்நோக்கு அதிகமாய் இருக்கும். பல வேளைகளில் மனிதர்களின் உதவியை நம்பி நாம் ஏமாந்து போகின்றோம். இந்த ஏமாற்றம் நம்மை அதிகமாய்ச் சோர்படையச் செய்யும். ஆனால், உண்மையாய் நமது பிரச்சனைகளைப் புரிந்துகொண்டு அதற்குரிய வழிகாட்டுதலை நமக்குத் தந்து, நமது வாழ்வில் நாம் விடுதலை பெற நமக்கு உதவி செய்ய எப்போதும் ஆயத்தமாய் இருப்பவர் கடவுள். எனவே தான் கடவுளைப் பற்றிச் சங்கீதக்காரர் தாவீது கூறும்போது, தி.பா. 7: 1-இல் ஆண்டவரே என் ஒளி, அவரே என் மீட்பு, நான் யாருக்கு அஞ்ச வேண்டும். ஆண்டவரே என் உயிருக்கு அடைக்கலம், யாருக்கு நான் அஞ்சி நடுங்க வேண்டும் என்று கூறுகிறார். திருமறையை நாம் உற்று நோக்குகின்றபோது கடவுள் எப்போதும் விடுதலை கொடுப்பவராக, மீட்பராக, சுட்டிக் காட்டப்பட்டுள்ளார். இந்த உலகம் அழிவை நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது ஆபிரகாமுக்குத் தன்னை வெளிப்படுத்தி அவர்மூலம் இந்த உலகை மீட்கும் அவரது திட்டத்தை வெளிப்படுத்துகின்றார். தொ.நூ. 12: 8-இல் உன் வழியாக மண்ணுலகின் மக்களினங்கள் அனைத்தும் ஆசி பெறும் என்கின்ற வார்த்தை இதை உறுதி செய்கிறது. எகிப்தில் இஸ்ரவேல் மக்கள் துன்பப்படுத்தப்பட்டபோது அவர்களை மீட்பதற்காக தன்னை மோசேக்கு வெளிப்படுத்துகிறார். இந்த உலகம் தொடர்ந்து பாவத்தில் அழிந்தபோது தமது தீர்க்கர்கள் மூலம் தனது மீட்புச் செயலைக் காலாகாலங்களில் வெளிப்படுத்தினார். நிறைவாக இயேசு கிறிஸ்துவில் தனது மீட்பை நிறைவேற்றி இந்த முழு உலக மக்களுக்கும் மீட்பை உரிதாக்குகின்றார். இந்த நாளில் மனிதனை மீட்கும் தனது திட்டத்தில் கடவுள் எவ்விதம் தன்னை வெளிப்படுத்துகின்றார் என்பதைக் கொடுக்கப்பட்ட திருமறைப் பகுதிகள் மூலம் காண்போம்.

1. துன்புறும் மக்களுடன் தன்னை இணைத்துக்கொண்டு அவர்களை மீட்கும் கடவுள் : (வி.ப. 3: 2)

இஸ்ரவேல் மக்களைப் பார்வோன் அடிமைப்படுத்தித் துன்பப்படுத்துகின்றான். அவர்களது வேதனை மிகக் கொடியது. இதை

விடுதலைப் பயணம் முதல் அதிகாரம் கூறுகிறது. அந்த நிலையில் எரிகிற, ஆனால் வெந்துபோகாதிருக்கிற முட்செடியின் நடுவில் இருந்து மோசேக்குக் கடவுள் தன்னை வெளிப்படுத்துகிறார். இங்கு வெந்துபோகாமல் எரிகிற முட்செடி, வாழவும் முடியாமல், சாகவும் முடியாமல் வேதனைப்படுகிற இஸ்ரவேல் மக்களுடன் தானும் ஒன்றுபட்டு நிற்பதை அடையாளமாகக் காட்டுகிறார். மீட்புக்கான தனது திருக்காட்சியின் நோக்கம் பற்றி இறைவன் கூறும்போது (வி.ப. 3: 7, 8), இந்த வார்த்தைகள் இஸ்ரவேலரின் துன்பம் எந்த அளவு இறைவனின் உள்ளத்தைப் பாதித்திருக்கிறது என்றும், அந்தப் பாதிப்பு அவர்களுக்கு மீட்பைக் கொண்டுவர தான் இறங்கிவரக் காரணமாகிறதாகவும் கூறுகிறார். கடவுளும் அவர்களுடன் துன்புறுவதால் அவர்கள் அழிந்து போவதில்லை என்ற நம்பிக்கையும் கொடுக்கிறார் (வி.ப. 3: 2). நமது வாழ்விலும் நாம் அநியாயமாய்த் துன்பப்படுத்தப்படும்போது, நமது கண்கள் இறைவனை நோக்கிப் பார்க்கட்டும். அவர் நமது பக்கமாய் சாய்ந்து நமது கூப்பிடுதலைக் கேட்டு நமது வாழ்வில் மீட்பராய்ச் செயல்படுவார்.

2. உலகின் மீட்புக்காக தன்னையே அர்ப்பணிக்கும் கிறிஸ்து :

(யோவா. 12: 23)

இயேசு கிறிஸ்துவின் பணி பலதரப்பட்ட மக்களைச் சென்றடைகிறது. எருசலேம் பண்டிகைக்கு வந்திருந்த கிரேக்கர் சிலர் இயேசுவைப் பார்க்க ஆசைப்பட்டு இயேசுவின் சீடன் பிலிப்புவிடம் கூறுகின்றனர். அவன் அதை அந்திரேயாவுக்கு அறிவித்தான். அந்திரோவும், பிலிப்புவும் இணைந்து இயேசுவுக்கு அதை அறிவிக்கிறார்கள். இதைக் கண்ட இயேசு மனுஷகுமாரன் மகிமைப்படும்படியான வேளை வந்தது என்றார். இயேசு இப்படிக் கூறுவதின் காரணம், தான் இந்த உலகத்தை மீட்பதற்காகவே இந்த உலகத்திற்கு வந்தேன். யூத இனத்தைக் கடந்து என்னை மக்கள் மீட்பராகப் புரிந்துகொள்ள, ஏற்றுக்கொள்ள ஆயத்தமாகிவிட்டனர். எனவே, கடவுளின் மீட்புத் திட்டத்தை இந்த உலகில் நிறைவேற்ற வேண்டிய காலம் வந்துவிட்டது என்கின்றார் (யோவா. 12: 27, 28).

இயேசு கிறிஸ்து உலகத்தின் மீட்பர், அவர் ஒரு தனி இனத்திற்கோ, குழுவுக்கோ, மதத்திற்கோ உரியவர் அல்லர். உண்மையாய் அவரைத் தேடுகிறவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேரும் மீட்புற அவர் தன்னையே இந்த உலகத்தில் தந்தார் (யோவா. 1: 12). நாம் இயேசு கிறிஸ்துவுக்கு நம்மைச் சொந்தமாக்கி அவரது மீட்பை நமக்குச் சொந்தமாக்குவோம்.

3. மக்களின் எதிர்பார்ப்பை அறிந்து வழிநடத்தும் தூய ஆவியர் :

(தி.ப. 16: 7, 9)

பவுலடியாரின் தொடக்க காலத் திருப்பணி முழுமையாக ஆசிய கண்டத்திலேயே அமைந்தது. தொடர்ந்து ஆசிய கண்டத்தின் ஒரு பகுதியாகிய பிந்தினியா நாட்டிற்குப் போகப் புறப்பட்டார். ஆனால், ஆவியானவர் அவரைத் தடை செய்கிறார். அன்று இரவில் பவுல் கண்ட காட்சியில் மக்கதோனியா

நாட்டைச் சேர்ந்த ஒருவர் தங்கள் நாட்டிற்கு வந்து உதவி செய்ய அழைப்பதாகக் கண்டார். இந்தக் காட்சியினால் ஆவியானவர் தனது பிந்தினியா பயணத்தைத் தடை செய்து ஐரோப்பாக் கண்டத்தில் உள்ள மக்கதோனியா நாட்டிற்குப் போகச் சொல்கிறார் என்பதைப் பவுலடியார் அறிந்து கொண்டார் எனவே, அவர் மக்கதோனியா நாட்டிற்கு நற்செய்தி அறிவிக்கச் சென்றார். இதனால் நற்செய்தி ஆசியா நாட்டைக் கடந்து ஐரோப்பாக் கண்டத்திற்குள் நுழைந்தது. இந்த நாட்களில் ஐரோப்பாவில் குறிப்பாக மக்கதோனியா பகுதியில் பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்ற தத்துவ அறிஞர்களின் தாக்கத்தால் மக்கள் தங்கள் மூட நம்பிக்கைகளைக் குறித்து கேள்வி எழுப்பினர். எனவே, சரியான ஒரு மார்க்கத்தைத் தேடி அலைந்தனர். கொரிந்துவிலே பவுல் கண்ட மார்ஸ்மேடை அப்படிப்பட்ட விவாதங்கள் நடைபெற்ற ஒரு இடம். உண்மையைத் தேடி அலைந்து கொண்டிருந்த மக்கள் உண்மையை அறிய, அவர்கள் மீட்புபெற தூய ஆவியானவர் தனது திட்டத்தைப் பவுலுக்கு வெளிப்படுத்தி அவர் மூலமாக அந்த மக்கள் நற்செய்தியை அறியவும், அதைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ளவும் வழிநடத்தினார்.

நமது வரலாற்றிலும் உண்மையைத் தேடின மகாராசன் வேதமாணிக்கத்தின் வாஞ்சையை அறிந்த தூய ஆவியானவர் ரிங்கல்தௌபே ஐயர் மூலமாக அந்த வாஞ்சையை நிறைவேற்றினார். நாமும் தூய ஆவியாரின் வழிநடத்துதலைப் புரிந்துகொண்டால் நம்மையும் தமது கருவிகளாக்கித் தமது மீட்பின் திட்டத்தை உலகில் இறைவன் நிறைவேற்றுவார்.

மீட்புக்கான இறைவனின் வெளிப்பாடு இந்த உலகத்தின் அனைத்து மக்களிடமும் தொடர்ந்து வெளிப்பட்டுக் கொண்டே இருக்கின்றது. அடிமைத்தனத்திற்கு உட்பட்ட மக்களிடையேயும், உண்மையைத் தேடி அலையும் மக்களிடையேயும் கடவுள் தனது மீட்பின் ஆற்றலை இன்றும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றார். அதின் கருவிகளாக நம்மையும் அழைக்கிறார். அவரது மீட்பின் திட்டத்தைப் புரிந்து கொண்டு அவருடன் இணைந்து செயல்படுவோம், ஆமென்.

ப	ஞா. 79	கீர். 269

அருள்திரு. **J. விக்டர் ஞானராஜ்**
சேகர ஆயர், மார்த்தாண்டம்

இறைவேண்டல்

மீட்பின் கடவுளே, உமது குமாரனாகிய எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மூலமாக உமது அன்பையும் மீட்பையும் வெளிப்படுத்தியதற்காக உமக்கு நன்றியையும் ஸ்தோத்திரத்தையும் செலுத்துகிறோம். சிலுவையில் பாவத்தின் அச்சுகளை உடைத்து, எங்களுடைய மீட்புக்காய்ப் பரிசாக ஆண்டவராகிய இயேசுவை மரணத்திலிருந்து எழுப்பிய உமது வல்லமையைக் காண எங்கள் கண்களைத் திறந்தருளும். உம்மோடும் தூய ஆவியரோடும் ஒரே கடவுளாக இப்போதும் என்றென்றும் ஆட்சி செய்யும் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் வேண்டிக் கொள்கிறோம், ஆமென்.

12.01.2025 திருத்தோற்றத் திருநாளுக்குப் பின்வரும் முதலாம் ஞாயிறு

தூயவராய் இருங்கள்

Be Holy

இ.ச. 7: 1-11 | எபே. 5: 18-20

தி.பா. 5 | யோவா. 17: 13-17

"உண்மையினால் அவர்களை உமக்கு அர்ப்பணமாக்கியருளும் உமது வார்த்தையே உண்மை!" (யோவா. 17: 17)

தூயவர் கடவுள் ஒருவரே. நாம் தூயவராக வேண்டுமென்றால், தூயவரான கடவுளுக்கு அஞ்சி (பயந்து) நீதியோடும், நேர்மையோடும் வாழ்வது தூய வாழ்வாகும்.

மத்தேயு 5: 8 - தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர். தூய்மையான வாழ்வு என்பது, ஆண்டவர் வெறுப்பதை நாம் வெறுக்க வேண்டும். ஆண்டவர் விரும்புவதை நாம் விரும்பி, ஆண்டவர் நேசிப்பதை நாம் நேசித்து வாழும் வாழ்வாகும்.

நாம் ஒவ்வொருவரும், ஆவி, ஆன்மா, உடலில் தூய்மையுடன் வாழவேண்டும் என்று ஆண்டவர் விரும்புகிறார்

தூய்மை வாழ்வு என்றால், தனி மனிதன், குடும்பம், சமூகம் என்ற எல்லா நிலையிலும் நமது வாழ்வில் தூய்மை வேண்டும்.

வேற்று நாட்டினரால் சிறைப்பிடிக்கப்பட்டாலும், வேற்று நாட்டுக் கலாச்சாரத் தாக்கத்திலும் அமிழ்ந்து போகாமல், தனக்கென்று கட்டுப்பாட்டை வைத்துக்கெண்டவராக "தானியேல்" தூய்மை வாழ்வு வாழ்ந்தார் (தானி. 1: 8).

பாவ நிலைகளைப் புறந்தள்ளி, சூழ்நிலைகளைச் சாத்தியமாக்காமல், நற்சிந்தையுடன், நல்ல தெளிவுடன், தூய்மையானவராக யோசேப்பு தன்னைக் காத்துக்கொண்டார். கனிதரும் திராட்சையாக உயர்ந்து நின்றார் (தொ.நூ. 39: 9).

ஆன்மிக வழிகாட்டி வேதாந்த மகரிஷி - ஒரு வெற்றுப்பானையைக் கவிழ்த்துப் போட்டார். சீடர்களிடம் இதில் என்ன இருக்கிறது என்றுகேட்டார். சீடர்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பதில்களைச் சொன்னார்கள். ஒருவர் ஒன்றுமில்லை என்றும், மற்றொருவர் எதுவும் இல்லை என்றும், வேறு ஒருவர் விஷயம் ஒன்றுமில்லை என்றும் பதில்களைச் சொன்னார்கள். மகரிஷி சீடரிடம் பானையில் காற்று இருக்கிறது. அதை வெளியேற்ற முடியுமா? என்று கேட்டார்.

அதற்கும் சில சீடர்கள், முடியாது என்றும் சிலர், முடியவே முடியாது என்றும் இன்னும் சிலர் இயலவே இயலாது என்றும் பலப் பதில்களைத் தந்தார்கள். மகரிஷி சீடர்களில் ஒருவரிடம் ஒரு வாளி நிறைய தண்ணீர் கொண்டுவந்து, இந்தப் பானையை நிரப்புங்கள் என்று சொன்னார். குருவின் வார்த்தைப்படி சீடரும் செய்தார். அப்போது மகரிஷி தனது சீடர்களிடம் சொன்னார். பானையில் இருந்த காற்றுப்போல் நம் மனம் எதிரிடையான சிந்தனைகளால் நிரம்பி வழிகிறது. அதுவாக போகாது முயன்று விரட்டி, முயற்சி என்னும் நன்மை என்னும் தண்ணீரை வைத்து நிரப்பும்போது, தீமை, அநீதி அகலும், தூய்மை வாழ்வு மலரும். முடியாது என்ற சுயநலத்தோடு இருந்தால் முடியாதுதான். முடியும் என முயன்றால் முடியும் என்று கூறினார். இந்நிகழ்வைப்போன்று இன்று சமூகத்தில், சபையில் தூயவராக வாழ முடியுமா? என்றால் முடியும். ஆனால், எந்த முயற்சியும் செய்யவில்லை என்றால் கடினமாகதான் தோன்றும்.

நாம் தூய்மையானவர்களாக வாழ விரும்பும்போது நமக்குள் பல கேள்விகள் வருவதுண்டு. நான் தூய்மையற்றவரா? நான் எப்படி வாழ்ந்தால் தூயவராகலாம்? நான் தூயவராக என்னச் செய்ய வேண்டும்?

இக்கேள்விகளுக்குப் பதில் காண வேண்டுமானால், மனிதன் தன்னுடைய நிலையையும், கடவுளின் நோக்கத்தையும் அறிந்து, தெளிவு நிலையைப் பெற வேண்டும். நாம் கடவுளால் தெரிவுச்செய்யப்பட்டவர்என்ற சிந்தை வேண்டும் (இ.ச. 7: 6).

கடவுள் தூயவராய் இருப்பதைப் போன்று நாமும் தூயவராயிருக்க வேண்டும் (லேவியர் 11: 44).

தூயவர் என்றால் ஆண்டவர் ஒருவர் மட்டுமே. அப்படித் தூயவராகத் திகழ்கின்ற தூயாதித் தூயவரோடு நாமும் தூயவராக வேண்டும் என்றால், நாம் செய்ய வேண்டியவை.

1. சார்ந்து வாழ வேண்டும்

மாற்கு 3: 14 -இல் இயேசு தம் சீடர்களைத் தெரிந்துகொண்டு, அவர்களுக்கு அருளிய முதல் அருளுரையில், சீடர்கள் தம்மோடு இணைந்து இருந்து, மக்களுக்கு நற்செய்தி சொல்ல வேண்டும் என்றார்.

கிறிஸ்துவோடு சார்ந்திருந்தால் . . .

i) கனி கொடுக்கலாம் (யோவான் 15: 5)

ii) சாட்சி வாழ்வு வாழலாம் (தி.ப. 2: 32)

iii) கிறிஸ்துவை நம்மூலம் காண்பிக்கலாம் (யோ. 15: 8)

iv) தூய உள்ளமுடையவராக வாழலாம் (மத் 5: 8)

v) நிலை வாழ்வின் நம்பிக்கையை மானுடர்க்கு வழங்கலாம்.

2. சான்று பகர வேண்டும்

திருத்தூதுவர் இயேசுவின் மேல் நம்பிக்கை கொண்டு, தூயவராக மாற்றம் பெற்றபின் பல நாடுகளுக்குச் சென்று தூயவரைக் குறித்து சான்று பகர்ந்தனர். அவ்வரிசையில் தோமா இந்தியா வந்து கிறிஸ்துவின் மீட்பைக் குறித்து, தூய வாழ்வு குறித்து சான்று பகர்ந்தார். தூயவர் கடவுள் ஒருவரே, அவர் அன்பு நிறைந்தவர், நம்மை தூய்மைப்படுத்துகிறவர், அவரே நம்மை விடுவிக்கிறவர் (இ.ச. 7: 8). என்று கடவுள் செய்த நன்மைகளையும் நாம் தூய்மையாக்கப்பட்டு, தூயவராக வாழ்வதையும் குறித்து சான்று பகர வேண்டும். பவுலின் சான்று (கலாத் 2: 20) கிறிஸ்துவைப் பற்றும் நம்பிக்கையினால் பிழைத்திருக்கிறேன் என்பதாகும்.

சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் கடவுளைக் குறித்து சான்று பகருகின்றபோது, எந்தச் சூழ்நிலையிலும் நம்மைத் தப்புவிக்க வல்லவராக நம்முடைய கடவுள் இருக்கின்றார் என்கின்றனர்.

தி.ப. 16: 16-40 - பிலிப்பி நகரில் சிறையிடப்பட்ட பவுலும், சீலாவும் கடவுளைத் துதித்து பாடினபோது, தங்கள் கட்டுகள் மட்டுமல்ல, கைதிகள் கட்டுகளும் அவிழ்ந்தது. சிறைசாலைகாரன் மனமாற்றம் பெற்றான்.

3. சாத்தியமாக்க வேண்டும் (இ.ச. 7: 11)

நிலை வாழ்வைப் பெற்றுக்கொள்வதுதான் நமது இலட்சியம் அதற்குப் பின்வரும் பண்பு நலன்கள் மிகவும் தேவையானவை.

i) தூய்மையுடன் வாழ்தல்

ii) அன்பு செய்து வாழ்தல்

iii) பிறரை நேசித்து வாழ்தல்

iv) தீமை செய்யாமல் வாழ்தல்

v) தீமை செய்வோருக்கு நன்மை செய்து வாழ்தல்

கடவுளின் பிள்ளைகளின் இலக்கு

- ❖ இஸ்ரவேலர் கானானைச் சுதந்தரிப்பது
- ❖ யோபு - சொந்த கண்ணால் கடவுளைக் காண்பது (யோபு 19: 27)
- ❖ திருத்தூதுவர்கள் - கிறிஸ்துவையும் அவரது உயிர்த்தெழுதலின் வல்லமையையும் குறித்துச் சான்று பகர்வது.
- ❖ பவுல் - நல்ல போராட்டத்தைப் போராடி நிலை வாழ்வைப் பெற்றுக்கொள்வது (1 தீமோ. 6: 12).

தன்னை அனுப்பின தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதை ஆண்டவர் இயேசுவும் தன் இலக்காகக் கொண்டிருந்தார்.

இன்று நம்முடைய இலக்கு என்ன?

தேவையற்ற செயல்களைச் செய்யத் தூண்டும் ஐம்புலன்களையும் அடக்கி ஆள தூயவாழ்வு வாழவேண்டும். அத்தகையத் தூய வாழ்வைத் தரும் நம்முடைய அருள்நாதரைப் பற்றிக்கொண்டு வாழ்வதாகும்.நமது பார்வை, பேச்சு, செயல்பாடுகளில் தூயவரை வெளிக்காட்டவேண்டும்.

கேடு விளைவிக்கும் செயல்களை விட்டுவிட்டு நித்தியத்தைக் குறித்த நம்பிக்கையுடன் வாழ்ந்து இவ்வுலகில் கிறிஸ்துவோடு இணைந்து பயணித்து, கிறிஸ்துவைச் சான்று பகர்ந்து, நமது இலட்சியமாம் நிலை வாழ்வைப் பெற்றுக்கொள்வோம் என்ற நம்பிக்கையுடன் வாழ்வோம். இப்படிப்பட்ட அழியாத வாழ்வைப் பெற்றுக்கொள்ள எல்லா சூழ்நிலையிலும் தூயவராக வாழ்வோம், ஆமென்.

பு	ஞா. 61	கீர். 388

அருள்திரு. E. சாம் ஜெபசிங்

ஆயர், பேரின்பபுரம்

இறைவேண்டல்

அருள் நிறைந்த கடவுளே உமது சாயலைப் பிரதிபலிக்கும் பொருட்டு எங்களைத் தூய மக்களாகத் தேர்ந்தெடுத்ததற்கு நன்றி. எங்கள் வார்த்தைகளும் செயல்களும் தூய்மையாயிருக்கவும் உமது தூய பிரசன்னத்தை உணர்ந்து கொள்ளவும் எங்களுக்கு உதவி செய்யும். இன்றும் என்றும் எங்களோடு வாழ்ந்து அரசாளும் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் வேண்டுகிறோம், ஆமென்.

19.01.2025 திருத்தோற்றத் திருநாளுக்குப் பின்வரும் இரண்டாம் ஞாயிறு

ஒரே உடலும் ஒரே திருமுழுக்கும்

One Body and One Baptism

ஆமோ. 9: 5-12 எபே. 4: 1-6

திபா. 115 மத். 16: 13-20

"ஆண்டவர் ஒருவரே, நாம் கொண்டுள்ள நம்பிக்கை ஒன்றே; திருமுழுக்கு ஒன்றே" எபே. 4: 5

திருமுழுக்கும், திருவிருந்தும் சாக்ரமெந்துகளாக அழைக்கப்படுகின்றன. இயேசு கிறிஸ்துவைக் கடவுளின் மகனாகிய கிறிஸ்து என்று அறிக்கை செய்வதுடன், அவரே பாவத்திலிருந்து நம்மை விடுவிப்பவர் என்பதைத் திருமுழுக்கின் வாயிலாகப் புரிந்து வாழவும் திருமறை நமக்கு வழிகாட்டுகிறது. திருமுழுக்கிற்கு நாம் தண்ணீரைப் பயன்படுத்துவோம். தண்ணீருக்கும் மனித உடலுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. உடலானது பல விதமான உறுப்புகளின் இணைப்பு. தண்ணீர் என்பது தாது உப்புகளின் கலவையாகும். நம் முன்னோர் கலங்கிய தண்ணீரைத் குழம்பிய மனதுக்கு ஒப்பிடுவர். தெளிவானத் தண்ணீர் உடலைக் குளிர்விப்பதனைப் போன்று தண்ணீரினால் திருமுழுக்குச் செய்யப்பட்டிருகின்ற நாமும் கனிவான வார்த்தையால் கசப்பான உள்ளங்களுக்கு மதுரமாய் இருக்க ஆண்டவர் விரும்புகிறார். இதற்கு நம்மிடையே இருக்க வேண்டிய முக்கியமான ஒன்று ஒற்றுமையுணர்வு. கிறிஸ்துவை நம்புகிறவர்கள் ஒரே கடவுள் ஒரே நம்பிக்கை ஒரே திருமுழுக்கு இவைகளை ஏற்றுள்ளனர் (எபே. 4: 5) என்று பவுலார் கூறும்போது, இறைமக்கள் சிந்தை மற்றும் செயல்களில் அனைவரையும் ஏற்று ஒற்றுமையுணர்வை வெளிப்படுத்த வேண்டும் என்பதாகும். நாம் பெற்றிருக்கின்ற உடலும், திருமுழுக்கும் நமக்குக் கற்று தரும், பாடங்கள எவை என்பதனைக் குறித்து சிந்தனை செய்ய முற்படுவோம்.

1. சமத்துவத்தின் அடையாளம் (A Sign of Equality) (எபே. 4: 4)

"உடலும் ஒன்றே ; தூய ஆவியும் ஒன்றே."

மனிதனுக்குக் கடவுள் உடலையும் அதை இயக்குகின்ற உயிரையும் கொடுத்திருக்கிறார். உடலும், உயிரும் தனித்தனியாகச் செயல்பட முடியாது. அதனைப் போன்று திருச்சபை ஒன்று அதனை இயக்குகின்றவர் கிறிஸ்து. தனக்கு மட்டும் தான் கடவுள் உடலையும் உயிரையும் கொடுத்திருக்கிறார் என்று எவரும் பெருமை பாராட்ட முடியாது. இது அனைவருக்கும் கடவுளால் கொடுக்கப்பட்டுள்ளவை என்பதனை அனைவரும் புரித்துகொள்ள அழைக்கப்படுகிறோம். கடவுளின் மக்கள் என்று அறியப்பட்ட இஸ்ராயேல்

மக்களுக்குக் கடவுள் தனிச் சலுகை கொடுக்கவில்லை. அடிமைப்பட்ட அனைவரையும் விடுவித்தவர் கடவுள். எனவே அவர்களும் பிறரைப் போலவே, கடவுளால் பார்க்கப்படுகிறவர்கள் (ஆமோ. 9: 7) என்கிற செய்தியை ஆமோஸ் இறைவாக்கினர் வாயிலாக கடவுள் கொடுக்கிறார். கடவுள் நல்லோர் மேலும் தீயோர் மேலும் தம் கதிரவனை உதித்தெழச் செய்வதாக கடவுளின் பண்பாகிய சமத்துவப் போங்கினைக் குறித்து இயேசு கிறிஸ்து குறிப்பிட்டார் (மத். 6: 45). அனைவரையும் உள்ளடக்கிய சமத்துவச் சமூகமாக ஒற்றுமையுடன் வாழ அழைக்கப்பட்டுள்ள நாம் சுயபெருமை மற்றும் தன்னலப் போக்கினால் பிரிந்து நிற்கிறோமா என்பதனைச் சிந்தனைச் செய்து சமத்துவத்தில் இணைய அழைக்கப்படுகிறோம். கடவுள் அனைவருக்குமுரிய பொது தந்தையாக இருக்கிறார். அவரின் பிள்ளைகளாகத் திருமுழுக்கினால் இணைக்கப்பட்டுள்ள நாம் ஒரே உடலாக அனைவரையும் ஏற்றுச் சமத்துவச் சிந்தையுடன் வாழ்வோம்.

2. சகோதரத்துவத்தின் அடையாளம் (A Sign of Brotherhood) (எபே. 4: 2)

"முழு மனத்தாழ்மையோடும் கனிவோடும் பொறுமையோடும் ஒருவரையொருவர் அன்புடன் தாங்கி . . . ."

பல உறுப்புகளைக் கொண்டுள்ள மனித உடலை அழகாகவும் அர்த்தமுள்ள முறையிலும் கடவுள் வடிமைத்துள்ளார். எந்த ஒரு உறுப்பும் உடல் இல்லாமல் செயல்பட இயலாது. அனைத்து உறுப்புகளும் செய்யும் வேலைகள் பலவாய் இருந்தாலும் அனைத்துமே முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். சர்க்கரை தயாரிக்கும் தொழிற்சாலையில் அமைந்திருக்கும் ஒவ்வொரு இயந்திரங்களும் இயக்கப்பட்டால் மட்டுமே பயனுள்ள, சுவையான சர்க்கரை நமக்குக் கிடைக்கும். அதனைப் போன்று நாம் பெற்றுள்ள உறுப்புகள் அனைத்தும் தெரிந்தோ, தெரியாமலோ இயங்கிக் கொண்டிருக்கின்றன. உடல் உறுப்புகளில் வலிமை குறைந்தவைகளை வலிமையுள்ளவைகள் தாங்குவதைப் போன்று அன்பினால் ஒருவரை ஒருவர் தாங்கும்படி எபே. 4: 2-இல் பவுலார் அழைப்பு கொடுக்கிறார். வலிமையுடையவை, வலிமை குறைந்தவற்றை அற்பமாய் எண்ணவோ அல்லது குறைத்து மதிப்பீடு செய்யவோ உரிமை வழங்கப்படவில்லை. சிறியோர் எனப்பட்ட வரிசையில் பார்க்கப்படும் ஏழைகள், வறியோர், அடிமைத்தனத்தில் இருப்போர், ஓரங்கட்டப்பட்டோர் என்று இருக்கின்ற ஒருவரையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு ஆண்டவர் எச்சரிப்பு கொடுத்ததையும் (மத். 18: 10) படிக்கிறோம். தூயாவியாரின் ஆற்றல் பெறும்போது அனைவரையும் சகோதர சகோதரிகளாக ஏற்றுச் சகோதரத்துவத்தில் வாழ முடியும் (எபே. 4: 3). ஒரே கடவுளை நமது தந்தையாக ஏற்று, ஒரே திருமுழுக்கினால் கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டுள்ளோம். சகோதரத்துவ பண்பில் வளர இணைந்து செயல்படுவோம்.

3. சான்றாகுதலின் அடையாளம் (A Sign of Authentication) (எபே. 4: 1)

"நீங்கள் பெற்றுக்கொண்ட அழைப்புக்கு ஏற்ப வாழுங்கள்"

ஒவ்வொருவரும் ஒற்றுமையுணர்வுடன் வாழ அழைக்கப்பட்டுள்ளோம் என்பதனைப் புரிந்து சான்றுடன் வாழ கடவுள் விரும்புகிறார். சான்று பகர்ந்து வாழ ஆண்டவர் சீடர்களைத் தெரிந்து கொண்டார். அவர்களில் முதன்மையாய் நிற்பவர்பேதுரு. சீமோனுக்கு ஆண்டவர் பேதுரு என்ற பெயரை அவரது அறிக்கையின்போது கொடுத்ததாக (மத். 16: 18) மத்தேயுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இயேசு யார் என்பது குறித்த குழப்பம் மக்களிடையே அதிகமாக இருந்தது. இயேசு பெத்லகேமில் தாவீதின் குடும்பத்தில் இருக்கவேண்டும் (யோவா. 7: 25-27), சிதறியிருப்போரைத் திரட்டித் தாய் நாட்டுக்குக் கூட்டி சேர்ப்பார் (யோவா. 7: 35), வரப்போகிற எலியா மட்டுமே அவரை அடையாளம் கண்டு உலகிற்கு உணர்த்துவார் (யோவா. 12: 34) என்றெல்லாம் கிறிஸ்துவைக் குறித்து பலவித எதிர்பார்ப்புகள் இருந்தன. இக்குழப்பச் சூழலில் சீடர்கள் தெளிவு பெற்றிருந்தார்கள் என்பதை உலகிற்கு இயேசு யார் என்பதை வெளிப்படுத்திய பேதுருவின் அறிக்கை வாயிலாகப் புரிகிறோம் (மத். 16: 16-17). நீர் மெசியா வாழும் கடவுளின் மகன் (மத். 16: 16) என்ற பேதுருவின் அறிக்கை அவரது மனித இயல்பால் வெளிப்படுத்தப்பட்டதன்று, மாறாக இறையருளால் வெளிப்படுத்தப்படடதாகும் (மத். 16: 17). இவ்வுலகில் சான்றுபகர்தல் என்பது கடவுளின் திட்டத்தைப் புரிந்து, கடவுளின் அருளினால் செயல்படும் பணியாகும் (மத். 16: 19). அவைகளைக் கடவுளும் அங்கீகரிப்பார். ஒற்றுமையாய் ஐக்கிய உணர்வுடன் வாழ அழைக்கப்பட்டுள்ள நாம் ஒரே கடவுள்; ஒரே திருமுழுக்கு என்னும் ஒன்றித்த சிந்தையுடன் சமத்துவத்துடனும், சகோதரத்துவத்துடனும், சான்று பகர்ந்து வாழ முற்படுவோம். தூயாவியார் நமக்குத் துணைபுரிவாராக, ஆமென்.

௨	ஞா. 367	கீர். 351

அருள்திரு. A. ஜான் பென்டிங்

சேகர ஆயர், முழுக்கோடு

இறைவேண்டல்

திருச்சபையைக் கிறிஸ்துவின் உடல் என்று வெளிப்படுத்திய இறையாண்மையுள்ள கடவுளே, ஒரே உடலிலும் ஒரே திருமுழுக்கிலும் எங்கள் நம்பிக்கையை உறுதிப்படுத்துவதற்கு எங்களுக்கு ஆற்றல் தாரும்.

நாங்கள் கிறிஸ்துவின் உடலுக்குள்ளான திருமுழுக்குப் பெற்றதினால், உம்முடைய உன்னத ஆற்றலை உணர்ந்து எங்களைச் சுற்றியுள்ள சமூகத்தை உள்ளடக்கி வாழ எங்களுக்கு உதவி செய்யும். நாங்கள் பெற்றுள்ள திருமுழுக்கின் அனுபவத்தால் ஒற்றுமை, நீதி மற்றும் அமைதியின் பாதையில் தொடர்ந்து வாழ்வதற்கு எங்களைப் புதுப்பியும். இன்றும் என்றும் எங்களோடும் தூய ஆவியரோடும் வாழ்ந்து அரசாளும் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் வேண்டுகிறோம், ஆமென்.

26.01.2025 திருத்தோற்றத் திருநாளுக்குப் பின்வரும் மூன்றாம் ஞாயிறு

அன்பில் ஒன்றித்திருத்தல்

United in Love

இ.ச. 4: 1 - 10 | 1 கொரி. 1: 10 - 18

தி.பா. 30 | யோவா. 15: 11 - 17

"சகோதர சகோதரிகளே, நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பெயரால் நான் உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்வது இதுவே; நீங்கள் ஒத்தக் கருத்துடையவர்களாய் இருங்கள்; உங்களிடையே பிளவுகள் வேண்டாம். ஒரே மனமும் ஒரே நோக்கமும் கொண்டிருங்கள்" (1 கொரி. 1: 10).

கிறிஸ்தவ வாழ்வின் சான்று நெறிக்கும், திருச்சபையின் தூதுரை அறிவிக்கும் பணிக்கும் அளவுகோலாகவும், தடயமாகவும் இருப்பதே ஒன்றிப்பாகும். இதன் ஆணிவேராகயிருப்பதே அன்பு எனும் இறைக்கொடையாகும். தன்னல நாட்டமும், தன்னை முன்னிலைப்படுத்தும் எண்ணமும் ஆன்மிக எழுச்சிக்குப் பெருந்தடையாக இருக்கும் இந்நாட்களில் ஒருவர் மற்றவருடையத் தனித்தன்மையை ஏற்று, மதித்து, பிறருக்கு முழுமையாக நம்மைக் கையளிக்கும்போதுதான் ஒன்றிணைவு வலுப்பெறுகிறது.

நிதானமும், சகிப்புத்தன்மையும், விட்டுக்கொடுத்தலும், ஒருவர் இன்னொருவருக்கு எதிராகச் செய்த தவறுகளை, அநீதமான செயல்களை மன்னிப்பதும், அன்பில் ஒன்றித்திருக்க நம்மைத் தகுதிப்படுத்துகிறது (1 யோவா. 3: 18). இத்தகைய பற்றுமையின் பார்வையோடு இதன் வழிமுறைகளை இன்றைய விவிலியப் பகுதிகள் சார்ந்து சிந்திப்போம். அன்பின் ஒன்றித்திருத்தலின் தளமாக இருப்பது,

1. இறை கட்டளைக்கேற்ப வாழ்தல் : (இ.ச. 4: 1-10)

"உங்கள் கடவுளாகிய ஆண்டவரின் கட்டளைகளை நான் உங்களுக்குக் கற்றுத் தருகிறேன். அவற்றைப் பின்பற்றுங்கள்" (இ.ச. 4: 2).

இஸ்ரயேல் மக்கள் அனைவரும் இறைகட்டளைக்கேற்ப நடந்துக்கொள்ளவும், தங்கள் வழித்தோன்றல்களுக்குக் கற்றுக்கொடுக்கவும் அனைத்து நாடுகளுக்கும் முன்மாதிரியாகவும் வாழவேண்டுமென்று மோசே அறிவுரைக் கூறுகிறார். அவர்கள் சிலைகளை உருவாக்கவோ அல்லது பாகாலை வழிபடவோ கூடாது. எப்போதும் கடவுளின் குரலுக்குச் சான்றாகயிருக்க வேண்டும். அதாவது அறம் சார்ந்து வாழ வேண்டும். அது என்னவெனில் இறையவரோடு ஒன்றித்து, இறை ஒழுங்குகளை மதித்து, இறை

அடையாளத்துடனும், இறை ஞானத்தாலும், இறையாவியாலும் நிறைக்கப்பெற்று பேறினமாக வாழும் வாழ்வாகும். இத்தகைய நிலையிலே இறையவரின் வியத்தகுச் செயல்கள் (வி.ப. 19: 17; 20: 1) வியப்புக்குரிய நடத்துதல்கள், வழித்தோன்றல்களுக்கு நியமமாகவும், ஒழுங்குநெறியாகவும் வழங்கப்படுதல் வரையறுக்கப்படுகிறது. அதற்கான ஒழுக்க விதிமுறைகளாகவே கட்டளைக் கொடுக்கப்பட்டது. மட்டுமன்று, பாகால் பேகோரில் ஆண்டவர் செய்ததை உங்கள் கண்களால் காண்பீர்கள் என்று குறிப்பிட்டு நிகழ்வை நினைவூட்டுகிறார். அது என்னவென்பதை எண். 25: 1-9 வரை கற்றுக்கொள்ளும்போது அறிந்து கொள்ளலாம்.

- முறைகேடான மற்றும் ஒழுக்கக்கேடான வாழ்க்கை (எண். 25: 1, 6).
- வேற்று தெய்வங்களின் பலிகளில் பங்கேற்று ஆண்டவருக்குச் சினமூட்டியது.
- இறை நெறியிலிருந்து அகன்றதால் கொள்ளைநோயினால் 24,000 பேர் மரணமடைதல்.

ஆனால் இத்தகையச் சூழலிலும் உண்மையுடனும், நேர்மையுடனும், பற்றுமையுடனும் நிலைத்திருந்தவர்கள் இன்றும் வாழ்கிறார்கள். இவர்களெல்லாம் கடவுளின் சினத்திற்குள் வராமல் தங்களைத் தூய்மையுடன் காத்துக் கொண்டார்கள் எனக் குறிப்பிடும் மோசே நீங்கள் நிலைநிற்பதற்கும் ஆசீரைப் பெறுவதற்கும் கடவுளின் நியமத்திற்கேற்ப வாழ்ந்தாக வேண்டுமென உணர்த்துகிறார். கிறிஸ்தவ வாழ்வு ஒழுங்குமுறைக்குட்பட்டு நல்லுறவுடன் இறை அன்பில் ஒன்றித்துப் பயணிப்பதாகும்.

2. இசைந்து வாழ்தல் : (1 கொரி. 1: 10-18)

இசைவு என்பது கருத்தொற்று, விருப்பு, வெறுப்புகள், இலட்சியங்கள், கனவுகள், எதிர்நோக்கு இவைகளைப் பகிர்ந்து அன்பையும், ஒன்றிப்பையும் உறுதிப்படுத்துவதாகும். ஆனால், இவைகளுக்கெதிரானச் செயல்கள் கொரிந்து திருச்சபையில் ஏற்பட்டிருந்ததை அறிந்த (1 கொரி. 1: 11-16) பவுலார் அவர்களை நல்வழிப்படுத்தும் நல்லுரைகளை வழங்குகிறார். அனைவரும் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். நம்பிக்கைக்குச் சான்றாளர்களாக வாழ்கிறீர்கள். ஆனால், உங்களது நடவடிக்கைகளெல்லாம் பற்றுமைத் தகர்க்கும் நிலையிலல்லவா அமைந்திருக்கிறது என உணர்த்தி பிளவுகளிலிருந்து பிணைப்புக்குள்ளாக வாழுங்கள் என அழைப்பு விடுக்கிறார். பிரிவினை அல்லது பிளவு என்பது பிசாசின் தந்திரம். பிணைப்பு அல்லது ஒன்றிப்பு இறையரசின் அடையாளத்துவம் மட்டுமன்று, அதுவே கிறிஸ்துவில் நம்மை இணைக்கும் பண்பும் ஆகும். இதையே பவுலார் உரோ. 12: 16-லும் குறிப்பிடுகிறார். பிரிவினைகளுக்குரிய பொறாமை, சண்டை சச்சரவு (1 கொரி. 3: 3) இவைகளைக் களைந்து ஒத்தக்கருத்துடையவர்களாக ஒரே மனமும், ஒரே

நோக்கமும் கொண்டவர்களாக இருக்க வேண்டுமென அறிவுரை கூறுகிறார். மட்டுமன்று திருச்சபைக்குள் தங்களைத் தாங்களே கட்சிகளாகப் பிரித்துக் கொண்டவர்கள் ஒவ்வொருவரும் சில திருத்தூதுவர்களின் பெயரால் தங்களை அழைத்துக் கொண்டிருந்தபடியால் மிகுந்த வேதனைகளுக்குள்ளான நிலையில் இத்தகைய இழிச் செயல்கள் நற்செய்தி அறிவிப்பின் நோக்கத்தைச் சிதைத்துவிடுமெனக் கூறுகிறார். ஏனெனில் கொரிந்துப்பட்டணம் துறைமுகப்பட்டணமானபடியால் பல இடங்களிலிருந்து வியாபாரத்திற்காகவும், இடத்தைப் பார்வையிடவும் வந்து செல்கிறவர்கள் அநேகர். அவர்கள் உங்களது முரண்பாடுகளையும், பிளவுகளையும் பார்த்து இயேசு கிறிஸ்துவே மீட்பர் என்னும் நற்செய்தியை மதிப்பற்றதாக நினைந்துவிடாமல் மதிப்புடனும், மாண்புடனும், ஏற்றுக்கொள்ள வேண்டும். உங்களது பிளவு இயேசு கிறிஸ்துவை உடைத்துத் துண்டாக்கியிருக்கிறது (1 கொரி. 1: 13) என்றும் மிகுந்த பாரத்தோடு வெளிப்படுத்தி ஒன்றிப்பில் இணைந்திட அழைக்கிறார்.

பிரிவினை எண்ணங்கள் திருச்சபை, இறைமக்கள் உறவு நிலைகளில் தொற்றிவிடாமல் மிகுந்த விழிப்போடும், இறைவேண்டலோடும், அன்பின் இதயத்தோடும் கிறிஸ்துவில் வேரூன்றி நிற்பதே இன்றையக் காலத்தின் கட்டாயம் என்பதை உணர்ந்து முன்னெடுப்போம்.

3. இறையவரில் வாழ்தல் : (யோவா. 15: 11-17)

இறையாட்சியைப் பற்றிய நற்செய்தியைக் கலிலேயாவில் பறைசாற்றிய இயேசுகிறிஸ்து பலரைத் தம் சீடராகத் தெரிந்துகொண்டார். எதற்காகவெனில் இறையரசுப் பணியைத் தொடர்ந்து நிறைவேற்றுவதற்கே. அந்நிலையிலே பணியாளர்களாக அல்ல, நண்பர்களாக அழைக்கிறார். யூத சமயத்தின் பார்வையிலே இயேசுவைச் சீடர்கள் குருவாக, நல்ல ஆசிரியராக இறைவாக்கினராகப் பார்த்தார்கள். ஆனால் ஆண்டவரோ, அவர்களது சிந்தையை மாற்றியதின் பலனாக இப்போது மெசியாவாகப் பார்த்தார்கள். இந்நிலையில்தான் சீடர்களைத் தம் நண்பர்கள் என அழைத்து நட்புறவுக்கு இலக்கணமாகிறார். மட்டுமன்று, இந்த உறவின் வாயிலாக ஒருவர் மற்றவருடைய சிந்தனைகளையும், உணர்வுகளையும் புரிந்துச் செயல்படுவது, துன்பங்களிலும், இன்பத்திலும் பங்கேற்பது எனும் தூய்மைமிகு அனுபவத்தை உணர்த்துகிறார். நண்பர் எனும் நட்புறவுகளால்தான் தனது சீடர்கள் தடம்புரண்டு தவறியபோதும் அவர்களை மன்னித்து, ஏற்றுக்கொண்டதோடு தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு எவரிடமும் இல்லை எனவும் கற்றுக்கொடுத்தார். தன்னைக் காட்டிக்கொடுத்த யூதாஸையும் தோழா, எதற்காக வந்தாய்? (மத். 26: 50) என்று உணர்ச்சி ததும்பக் கூறி நட்புறவின் உயரிய உண்மையைக் கற்றுக்கொடுக்கின்றார். நண்பர் என்ற

புனித உறவு பையையும், கையையும், பதவியையும் எதிர்பாராதது என்பதற்கு அடையாளமாகத் தாவீது யோனத்தான் நட்புறவு அமைகிறது (1 சாமு. 18: 1-5). இயேசு கிறிஸ்துவோடு ஒன்றிக்கப்படுதல் ஆழமிகு வாழ்வியல் உண்மைகளை உணர்த்துகிறது. அது தியாக அன்பாக (யோவா. 3: 16) மன்னிக்கும் மனமாக (லூக். 23: 34) ஏற்றுக்கொள்ளும் உறவாக (லூக். 23: 43) வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. கடவுளின் மக்களாகயில்லாமல் தொலைவில் இருந்த நாம் இரக்கத்தினால் (1 பேது. 2: 10) உரிமைப் பேற்றுக்குள் ஒன்றிக்கப்பட்டோம். நம்பிக்கையின்மையிலும், இருளின் பிடியிலும் இடறிய நாம் அன்பால் ஒன்றிக்கும் பேற்றைப் பெற்றிருக்கும் நிலையில் பிறரோடு நாம் எத்தகைய அடையாளத்தைக் கொண்டிருக்கிறோம்.

இந்த வாழ்வு நிரந்தரமானதல்ல என்பதை அறிந்திருக்கும் நாம் நமக்குள் ஏன் பகைமையை வளர்த்துக் கொண்டிருக்கிறோம். ஆய்ந்தறியும் அகவிழியில் அக இருளை அகற்றிடுவோம். அன்புறவின் ஆழத்துவத்தில் ஒன்றிப்பின் உயர்நிலையை எட்டுவோம். நிலை வாழ்வின் பயணத்தில் இடையூறின்றி முன்னெடுத்துச் செல்வோம், ஆமென்.

ᏏᏏ	ஞா. 43	கீர். 306

அருள்திரு. R. சாம் பிரின்ஸ்
ஆயர், கிறைஸ்ட் சர்ச், மைலோடு

இறைவேண்டல்

உலக மக்களை ஒற்றுமையுடன் வாழ அழைத்த கடவுளே, பன்முகத்தன்மையின் முக்கியத்துவத்தை நாங்கள் அறிந்து, அனைவரின் கண்ணியத்தையும் நாங்கள் உறுதிப்படுத்த எங்களுக்கு உதவி செய்யும். எங்களுக்குள் எந்தப் பிளவுகளும் ஏற்படாத வகையில் ஒருவரையொருவர் மதிக்கவும், சாதி, நிறம், மதம் மற்றும் பாலினம் அடிப்படையில் ஒருவரையொருவர் மதிக்கவும் எங்களுக்கு ஞானம் தாரும். உம்மோடும் தூய ஆவியரோடும், இப்போதும் எப்போதும் ஒரே கடவுளாயிருக்கிற எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மூலம் வேண்டுகிறோம், ஆமென்.

ஆற்றலருளும் ஆண்டவர்

2 அரசர்கள் 20: 1-7

"ஆண்டவரே! நான் எப்படி உம் திருமுன் முற்றிலும் நம்பிக்கைக்குரியவனாய் நடந்து கொண்டேன் என்பதையும், உமது பார்வையில் நேர்மையானதையே செய்தேன் என்பதையும் நினைத்தருளும்" என்று வேண்டுதல் செய்து கதறி அழுதார் (2 அரசர்கள் 20: 3).

அலெக்ஸிஸ் கேரல் என்கிற மருத்துவர் தனது அனுபவத்தை இவ்வாறு கூறுகின்றார். உயிரைக் காப்பாற்ற எல்லாவித உயிர்காக்கும் சிகிட்சைகளை முயன்றும் பலனளிக்காமல்போன அநேக மனிதர்கள் தங்களுடைய இறைவேண்டுதலினால் சுகம் பெற்று வந்ததாகக் கண்டிருக்கிறேன். இறைவேண்டல் மாத்திரமே எவ்விதமான இக்கட்டான சூழலையும் எதிர்கொள்ளும் ஆயுதமாக இருக்கின்றது. 2 அரசர்கள் 20: 1-7-இல் எசேக்கியா அரசரின் மரணத்தருவாயும், ஏசாயா இறைவாக்கினரின் வழியாய் மரணம் குறித்து அறிவிக்கப்பட்ட செய்தியும் அரசரை இன்னும் அதிகமாய் உடையச் செய்கிறது. எனினும் தனது இறைவேண்டுதலால் கடவுளிடமிருந்து மீண்டும் ஆயுளைப் பெற்றுக்கொள்கிறார். உடைந்த நிலையில் இருந்த எசேக்கியாவுக்கு கடவுள் எவ்வாறு ஆற்றல் அருளி பெலப்படுத்துகிறார் என்று சிந்திப்போம்

1. சூழல்களில் நம்பிக்கையருளி ஆற்றல் தருகிறார் (2 அர. 20: 3)

2 அரசர்கள் 20: 1-இல் அந்நாட்களில் என தொடங்குகின்றது. அந்நாட்களின் சூழல் என்ன? 2 அர. 18: 2-இன் படி தனது 25-ஆம் வயதில் எசேக்கியா எருசலேமின் அரசராக பொறுப்பேற்கிறார். 2 அரசர்கள் 19-இல் அசீரிய அரசர் சனகெரிபு-வை கடவுள் துணையால் வெற்றி பெறுகிறார். தேசத்தில் அமைதி திரும்புகிறது. ஆனால், அதைக் கொண்டாடும் சூழலில் அரசன் உடல்நலக்குறைவால் அவதிப்படுகிறார். 2 அர. 18: 2-இன் படி 14 வருட ஆட்சி, வயதும் 39 ,ஆனால் மரண தருவாய், 2 அரசர்கள் 21: 1-.ன் படி எசேக்கியா அரசன் மரணத் தருவாயில் இருந்த வேளை அவருக்குக் குழந்தை இருந்திருக்க வாய்ப்பில்லை. இப்படிப்பட்ட வாழ்வுச் சூழலில் வாழ்வின் இறுதி குறித்தச் செய்தி வருகிறது, நம்முடைய வாழ்விலும் இதுபோன்ற சூழ்நிலைகளை அநேக வேளையில் எதிர்கொள்கிறோம். என்னுடைய கடைமைகள், எதிர்காலத்திற்கான தேவைகள் இவைகளை நான் நிறைவேற்றவில்லை. ஆனால், வாழ்வின் அடுத்த கட்டத்திற்குள் செல்ல வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தில் இருக்கிறேன் என்று கூறுபவர்கள் உண்டு.

2. சூழல்களை நினைவுகூர்ந்து ஆற்றல் தருகிறார் (2 அர. 20: 3)

எசேக்கியா அரசர் கடவுளிடம் என்னை நினைத்தருளும் என்று கூறி தனது மன்றாட்டை முன்வைக்கிறார். இங்கு நினைத்தருளும் என்பதற்கான எபிரேய வார்த்தை ஷாக்கர் (Zakar). இவ்வார்த்தை மனதில் எதையாவது நினைவு கூர்வதை மாத்திரம் பொருட்படுத்தவில்லை. மாறாக, மனதில் எழும் நினைவுகளைக் கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்க சொல்லும் விதமாக அமைந்துள்ளது. உதாரணமாக, எரேமியா 31: 34-இல் "...அவர்களுடைய பாவங்களை இனிமேல் நினைவுகூரமாட்டேன்" என்று சொல்லுகிற வார்த்தை, "கடவுள் மக்கள் செய்த பாவங்களைக் குறித்து நியாயந்தீர்க்கமாட்டார்" என்று பொருள்படுகிறது. கடவுள் எசேக்கியா அரசரின் வேண்டுதலைக் கேட்கின்றார், உடனடியாகச் செயல்படுகிறார். மீண்டும் ஏசாயா இறைவாக்கினரை அழைத்து தமது பதிலைக் கூறுகிறார். எசேக்கியாவின் நல்வாழ்வை நினைவுகூர்ந்த கடவுள் தனது திட்டத்தை மாற்றி வாழ்நாளை நீட்டித்து வழங்குகிறார். ஆனால், 1 அரசர்கள் 14: 1-14 மற்றும் 2 அரசர்கள் 1-ஆம் அதிகாரங்களில் வாழ்வின் கடைசியில் இருக்கும் அரசர்களின் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது. காரணம், அவர்களின் சாட்சியற்ற வாழ்வாகும்.

கிறிஸ்துவில் மிகவும் அருமையானவர்களே! நோய், கடன், ஏழ்மை, சமுதாய, மத ஒடுக்குதல்கள் எனப் பலவற்றில் சோர்ந்து இனி என்ன செய்வது? அனைத்துப் பக்கமும் நெருக்கங்கள் என சோர்ந்து போய் இருக்கலாம். எசேக்கியா அரசரைப் போன்று நீங்கள் ஏறெடுக்கும் இறைவேண்டல் மற்றும் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு ஆண்டவர் உங்களை ஆற்றல்படுத்த வல்லவராக இருக்கின்றார். உங்கள் கிரியைகள் அப்படிப்பட்ட ஆற்றலை அருள வழிவகுக்கின்றதாக இருக்கிறதா சிந்தியுங்கள். இந்தியாவில் எல்லாச் சாலைகளிலும் வாழ்வின் எதிர்காலத்தை கணிக்கும் வல்லுநர்கள் இருக்கிறார்கள் என்று நம்பி நமது கரங்களைக் கொடுக்கிறோம். அவர்கள் கரங்களின் வரிகளைப் பார்த்து உங்கள் வாழ்நாள் அவ்வாறாக இருக்கும், இவ்வாறாக இருக்கும், இத்தனை நாட்கள் வாழ்வீர்கள் என்றெல்லாம் கூறுவார்கள். ஆனால், எசேக்கியா அரசரின் நிகழ்வு சரியாகக் கற்றுத்தருவது நமது வாழ்வு கடவுளின் கரங்களில் இருக்கிறது என்பதாகும். மேலும், ஆண்டவர் நமது உள்ளங்கையில் இருக்கும் வரிகளை வைத்து தமது ஆற்றலை அருளுவதில்லை. நமது கிரியைகளால் வரையப்பட்ட வரலாறு எனும் வரிகளை வைத்தே நம்மை ஆசீர்வதிக்கின்றவராக இருக்கின்றார். எசேக்கியா அரசரின் நற்கிரியையகள் கடவுளிடமிருந்து புதிய ஆற்றலைப் பெற்றுக்கொள்ள உதவியது. நாமும் இப்புதிய மாதத்தில் நற்கிரியைகளை நிறைவேற்றுவோம், ஆண்டவர் அருளும் ஆற்றலைக் கொண்டு இக்கட்டான வாழ்வின் சூழல்களையும் எதிர்கொண்டு முன்னேறிச் செல்வோம், ஆமென்.

உ	ஞா. 34	கீர். 243

திரு. A. அனிஷ் ராஜன்
இறையியல் மாணவர், U.T.C.

ஆண்டவரைப் போற்றுங்கள்

Praise the Lord (Worship)

வி.ப. 9: 1-7 | தி.வெ. 5: 1-14

தி.பா. 81 | யோவா. 2: 13-22

"அரியணையில் வீற்றிருப்பவருக்கும் ஆட்டுக்குட்டிக்கும் புகழ்ச்சியும் மாண்பும் . . . என்றென்றும் உரியன" (தி.வெ. 5: 13).

றிச்சர்ட் உம்ப்றான்ட் என்ற போதகர் கம்யூனிச அரசின் கொடுமையால் அடைந்த சிறை அனுபவங்களைத் தனது நூலில் எழுதியுள்ளார். அவரோடு சிறையிலடைக்கப்பட்டிருந்த சிலர் பாறைகளில் கல் உடைக்கும் வேலையில் ஈடுபடுத்தப்பட்டார்கள். அவர்கள் கடவுளைப் புகழ்ந்து போற்றிப் பாடல்களை பாடிக்கொண்டே பாரமானக் கூடத்தை ஓங்கி கல்லை உடைப்பார்கள். அவர்கள் அவ்வாறு கடவுளைப் போற்றித் துதிப்பது சிறை அதிகாரிகளுக்கு எரிச்சலை மூட்டியது. இதனால் பகலில் கல் உடைத்துக் களைத்துப் போயிருக்கும் அவர்களை, நள்ளிரவு 2.00 மணிக்கு எழுப்பி கடுங்குளிரில் வெளியில் நின்று பாடுங்கள் என்று கட்டளையிட்டனர். அவர்கள் அந்த குளிரிலும் இனிமையான கிறிஸ்தவப் பாடல்களைப் பாடினார்கள். காவலர்கள் பரிகாசம் செய்வதையும் பொருட்படுத்தாமல் உள்ளத்தின் ஆழத்திலிருந்து பாடிக் கடவுளைப் புகழ்ந்தார்கள். இது அந்தச் சிறை அதிகாரிக்கு ஆச்சரியமாயிருந்தது. ஆகவே, அவர் அவர்களைத் தனிமையாகச் சந்தித்து இயேசு கிறிஸ்துவைப் பற்றிக் கூறும்படி கேட்டார். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார் அந்த ரஷ்ய அதிகாரி. கிறிஸ்துவுக்குள் வழிநடத்தப்பட காரணமாகயிருந்தது என்னவெனில், நெருக்கடிச் சூழலிலும் கடவுளைப் போற்றுதலாகிய உண்மை வழிபாடேயாகும்.

"படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக மனுவை
படைத்தான் தன்னை வணங்க"

மனிதன் இவ்வுலகில் ஆற்ற வேண்டிய பல்வேறுபட்ட பணிகளைப் பற்றித் திருமறை கற்பிக்கின்றது. ஆனால், இவையெல்லாவற்றிலும் ஆண்டவரை வழிபடும் பணி ஒன்றே முக்கியமானதும், இறைவனைப் போற்றுவதே நிலையானதும், நித்தியத்திலும் தொடருவதுமாகக் கூறப்பட்டுள்ளது. கடவுளைப் போற்றுதல் வழியாக அநேக அருட்செயல்களை மக்கள் கண்டிருக்கின்றார்கள். கடவுள் நமக்குத் தாயும் தந்தையுமாக இருக்கிறார். அவர் மாட்சிமை பொருந்தியவராக இருக்கிறார். தூயவராக இருக்கிறார். விடுதலையளிப்பவராக இருக்கிறார். எனவே, அவரைப்

போற்றுவதற்கு நாம் கடனாளிகளாகயிருக்கிறோம். கடவுளைப் போற்றுதல் நன்றியுணர்வின் வெளிப்பாடு. ஆகவேதான் சங்கீதக்காரன் தி.பா. 81: 1, 2 வசனங்களில் கூறும்போது "நமது வலிமையாகிய கடவுளை மகிழ்ந்து பாடுங்கள்; யாக்கோபின் கடவுளைப் புகழ்ந்து ஏத்துங்கள்; இன்னிசை எழுப்புங்கள்; மத்தளம் கொட்டுங்கள்; யாழும் சுரமண்டலமும் இசைத்து இனிமையாய்ப் பாடுங்கள்" என்று பார்க்கின்றோம். கொடுக்கப்பட்ட திருமறைப் பகுதியின் அடிப்படையில் கடவுளை ஏன் போற்ற வேண்டும் என்பதைத் தியானிப்போம்.

1. விடுதலையருளும் ஆண்டவரைப் போற்றுங்கள் (வி.ப. 9: 1-7)

இஸ்ரயேல் மக்களைப் பொறுத்தவரை அவர்களின் வழிபாட்டிற்குத் தொடக்கமும் மையமும் கடவுள் எகிப்திலிருந்து அவர்களுக்கு அளித்த விடுதலையாகும். ஆகவே, இஸ்ராயேலரின் விடுதலைப் பயண வரலாறு இன்றுவரை மிக முக்கியத்துவமாகப் பார்க்கப்பட்டு வருகிறது. இதனைச் சார்ந்தே கிறிஸ்தவத்தில் விடுதலை இறையியல் என்ற கருத்தியல் பிரபலமாகியது. பஞ்சம் பிழைக்க எகிப்திற்குச் சென்ற இவர்கள் அங்குப் பலுகிப் பெருகினர். ஆனால், கொத்தடிமைகளைப் போன்று உழைத்தனரேயன்றி வேறு எந்த நலத்தையும் வாழ்வில் காணமுடியவில்லை. குறிப்பாகச் செங்கல் சூளைகளிலும், கட்டட வேலைகளிலும் அதிகமாய்ப் பயன்படுத்தப்பட்டனர். இம்மக்கள் தம் அடிமைத்தனத்திலிருந்து எழுப்பிய கூக்குரல் ஆண்டவரை எட்டியது. ஆண்டவர் மோசே, ஆரோன் என்பவர்கள் மூலம் விடுதலையளிக்கும் முயற்சியில் இறங்கினார். ஆனால், பார்வோன் தன்னைக் கடவுளாகவும், அரசனாகியதானே அனைத்து அதிகாரமிக்கவராகவும் தன்னைக் காட்டிக்கொள்கின்றார் (வி.ப. 5: 2). பார்வோன் அரசனின் அகந்தையும் இறுமாப்பும் இஸ்ரயேலரின் வேலைக்குத் தடையாக இருந்தது. ஆனால், கடவுள் ஒடுக்கப்பட்ட மக்களின் துன்பங்கள் நீங்க, மந்திரங்களும், கண்கட்டி வித்தைகளும் நிறைந்திருந்த எகிப்திய சமூகத்திலிருந்து இஸ்ரயேலர் விடுதலை பெற உதவி செய்கின்றார். இங்கு ஒடுக்கப்படும் மக்களுக்காக கடவுளின் கரிசனையும், மக்கள் தலைவர்களின் செயல்பாட்டையும் நாம் கவனிக்க அழைக்கப்படுகின்றோம். இங்குக் கடவுளின் வார்த்தையை நாம் பார்க்கிறோம். எனக்கு வழிபாடு செலுத்துவதற்காக என் மக்களைப் போகவிடு என்பதாகும் (வி.ப. 9: 1). அடிமைத்தனத்தில் இருக்கும் மக்களை மீட்க தம்மை விடுதலையின் ஆண்டவராக, மக்களின் துன்பத்தில் இருக்கின்றவராக வெளிப்படுத்துகின்றார் (வி.ப. 3: 4). நாமும் 200 ஆண்டுகளுக்கு முந்தைய காலத்தைக் கவனிக்கும்போது நமது முன்னோர்கள் சமூக ஒடுக்குமுறைகளுக்கு எப்படியெல்லாம் ஆளானார்கள் என்பதை அறிகின்றோம். நம்மை விடுவிக்க நற்செய்தியாளர்களை அனுப்பி நாம் அடிமைத்தன இருளிலிருந்து ஒளியைப்பெற கடவுள் அருள் செய்தார். இன்னும் இவ்வுலகில் அடிமைத்தனம் இருக்கின்றது. சாதி, இனம், பாலினப் பாகுபாடு, வரதட்சணை, வறுமை போன்றவற்றால் சமூகம் இன்றும் அடிமைநிலையில்

உள்ளது. இந்த நிலை மாறவும் புதுவாழ்வு மலரவும் கடவுளை முழு மனதுடன் ஆராதிப்போம்.

2. வேண்டல் கேட்கும் ஆண்டவரைப் போற்றுங்கள் : (யோவா. 2: 13-22)

இறைவேண்டலில் தான் கிறிஸ்தவ வாழ்க்கையின் உயிர்துடிப்பு அடங்கியிருக்கிறது. இறைவேண்டல் இல்லாத இடம் வறண்ட பூமிக்குச் சமம். இறைவேண்டல் நமது குழப்பத்தில் தெளிவையும், துன்பத்தில் நம்பிக்கையையும், பாடுகளைத் தாங்கும் ஆற்றலையும் அளிக்கிறது. திருமறையில் இறைபக்தர்களால் அநேக இறைவேண்டல்கள் ஏறெடுக்கப்பட்டதை அறிகின்றோம். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, மோசே, சாலொமோன், அன்னாள், எஸ்தர் போன்றோர் இதற்குச் சான்றாக உள்ளனர். இயேசு கிறிஸ்துவும் இறைவேண்டல் நிறைந்த வாழ்வு பெற்றிருந்தார். கெத்சமெனே தோட்டத்தில் துயரப்படும் நேரத்தில் தம் சீடர்கள் இறைவேண்டலில் விழித்திருக்க விரும்பினார் (மத். 26: 41). இறைவேண்டலில் நிலைத்திருக்க பவுலடியார் உரோமர் 12: 12-இல் நம்மை அழைக்கிறார்

ஆண்டவர் இயேசு எருசலேம் ஆலயத்தில் நுழைந்தார். ஆலயத்தில் விற்கின்றவர்களையும் வாங்குகின்றவர்களையும் வெளியேற்றினார். சில்லறை நாணய மாற்றம் செய்வோரின் மேசையையும், புறா விற்கிறவர்களின் இருக்கையையும் கவிழ்த்துப்போட்டார். ஜெபவீடாய் இருக்கவேண்டிய ஆலயம் வங்கியாகவும், விற்பனைக் கூடமாகவும் இருந்ததைக் கண்டித்தார். ஆலயத்தை வணிக மயமாக்குவதை எதிர்த்தார் இயேசு. இறைவேண்டலின் சத்தம் கேட்டுக்கொண்டிருந்த இடத்தில் வியாபாரத்தின் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. அந்த இடத்தில் இயேசு மறுபடியும் இறைவேண்டல் சத்தம் கேட்கச் செய்தார். இன்றும் நம் திருச்சபையில் காணப்படும் அதிகாரச் சண்டைகள், பகை, நீதிமன்ற வழக்குகள் தவறான மற்றும் இழிவான பழக்கங்கள் கடவுளை நாம் உண்மையாய்ப் போற்ற தடைசெய்கின்றன. ஆகவே, திருச்சபை அதன் சாரத்தை இழந்து கொண்டிருக்கின்றது. ஆகவே, உண்மையான இறைவேண்டலுடன் ஆண்டவரைப் போற்றுவோம்.

3. வெற்றிபெற்ற ஆண்டவரைப் போற்றுங்கள் : (தி.வெ. 5: 1-14)

ஆண்டவர் இயேசு கிறிஸ்து ஒரு ஆட்டுக்குட்டியானவர் என்ற அடையாள கருத்துத் திருமறையிலும், திருச்சபையிலும் பொதுவாக இருக்கின்றது. திருவெளிப்பாடு நூலும் ஆட்டுக்குட்டியானவர் குறித்து மிகத் துல்லியமாக அவர் பணியைத் தெரிவிக்கின்றது.ஆண்டவர் இயேசு உயிர்பெற்று எழுந்த பின்பு அவரைச் சார்ந்து உருவாகிய கிறிஸ்தவ இயக்கம் அரசாங்க சமயமாக எளிதாக மாற்றம் பெறவில்லை. மாறாக பெரும்பாலானக் கிறிஸ்தவ மக்கள் அரச விரோதிகளாகப் பார்க்கப்பட்டார்கள். கி.பி. 95-ஆம் காலக்கட்டத்தில் இக்கொடுமையை அனுபவித்த மக்கள் சின்னாபின்னமாக்கப்பட்டு மீதமிருந்த மக்கள் உரோம அரசனை வணங்க பணிக்கப்பட்டனர். இக்காலத்தில் கொடுமையைச் சந்தித்த கிறிஸ்தவர்களுக்கு விசுவாசத்தில் தொடர்ந்து உறுதியாயிருக்க எழுதப்பட்ட நூல் திருவெளிப்பாடு.

இங்கு அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி (5: 6), போராடும் ஆட்டுக்குட்டி (5: 9) என்பது கிறிஸ்தவத்தை எதிர்த்தோருக்குக் கிறிஸ்துவை ஆன்மிக வாழ்வின் மையமாய்க் கொண்டவர்களை இழிவுப்படுத்தவும், அவதூறு செய்யவும் காரணமாய் அமைந்த சூழலை குறிப்பிடுகின்றது. ஆனால், அப்படிப்பட்ட நகைப்புக்குரியவராக இருந்த ஆட்டுக்குட்டியானவர்தான் திறனுடையவரும், ஜெயம் கொண்டவருமாயிருக்கிறார் (5: 5) என்ற காட்சி தங்கள் கிறிஸ்தவ ஆன்மிக நிலையின் ஏமாற்றத்துக்குரியதல்ல; மாறாக அது மகிழ்விற்குரியதும், பெருமைக்குரியதும் என்ற செய்தியைச் சொல்கிறது. ஆட்டுக்குட்டியின் போராட்டத்தால் இன்னல்களும், இரத்த இழப்பும் நேரிட்டாலும் அவர் உலகம் அனைத்தையும் மீட்பிற்குள்ளாக்கியுள்ளார். மனிதருக்கு உயர்நிலை உருவாகியுள்ளது என்று பாடி கடவுளைப் போற்றகின்றனர் (5: 10). இன்றும் கிறிஸ்துவை தோல்வியின் அடையாளமாகவே பலர் காட்ட முனைகின்றனர். (சிலுவையில் என் தேவனே...) பல கிறிஸ்தவர்கள் துன்புறும் இயேசுநாதரை கவனிக்க விரும்பாதவர்களாயிருக்கின்றனர். ஆனால், பல்வேறு துன்பங்கள் வழியாய் கடந்து செல்லும் கிறிஸ்தவ ஆன்மிக வாழ்வு வெற்றிக்குரியது என்றும், அடிக்கப்படும் ஆட்டுக்குட்டியானவர் அனைத்து போற்றுதலுக்கும் தகுதி படைத்தவர் என்றும் நாம் அறிய வேண்டியது அவசியமாகிறது. உலகில் உங்களுக்குத் துன்பம் உண்டு. எனினும் துணிவுடன் இருங்கள். நான் உலகின்மீது வெற்றி கொண்டுவிட்டேன் என்று ஆண்டவர் கூறுகின்றார் (யோவா. 16: 35).

இன்று நாமும் நமது எதிர்காலத்தைக் குறித்து அச்சம் கொள்கிறோமா? கலங்குகிறோமோ? நாம் கலங்கவும் அச்சங்கொள்ளவும் அவசியமில்லை. நமது காலங்கள் உலகின் பாவத்தை சுமந்து தீர்த்த ஆட்டுக்குட்டியானவரின் கரத்தில் உள்ளது என்று நம்பிக்கை கொள்வோம். நம் ஆண்டவர் நமக்கு விடுதலை தருகின்றவராக இறைவேண்டலை கேட்கின்றவராக, வெற்றிபெற செய்கின்ற கடவுளாக இருக்கின்றார். ஆகவே, நாமும் ஆண்டவரைப் போற்றுவோம், இறையாசியை பெற்றுக்கொள்வோம், ஆமென்.

௨	ஞா. 11	கீர். 233

அருள்திரு. J. தேவ ராஜ ஜெபாஸ்டின்

ஆயர், இளஞ்சிறை

இறைவேண்டல்

வானத்தையும் பூமியையும் படைத்த கடவுளே, உலகைப் படைத்தவரும், பராமரிப்பவரும், மீட்பவருமாகிய நீர் மட்டுமே போற்றப்படத் தகுதியானவர். ஆன்மிகமாகவும் உண்மையாகவும் உம்மை வழிபடும் மன அமைதியை எங்களுக்குத் தாரும். கடவுளே, நாங்கள் உம்மைப் பின்பற்றும்படியாகவும், எங்கள் வார்த்தைகளிலும் செயலிலும் நாங்கள் உம்மை வெளிப்படுத்தவும் எங்களுக்கு அருள் புரியும். உம்மோடும் தூய ஆவியரோடும், ஒரே கடவுளாக, இப்போதும் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்யும் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாயிலாக வேண்டுகிறோம், ஆமென்.

இறை ஆன்மிக நறுமணம்: இளையோர்

Fragrance of Spirituality : Youths

தானி. 1: 1-9 | 1 திமொ. 4: 8-16

திபா. 119 : 1-16 | மத். 19: 16-26

"நீ இளைஞனாய் இருப்பதால் யாரும் உன்னைத்தாழ்வாக கருதாதிருக்கட்டும். பேச்சு, நடத்தை, அன்பு, நம்பிக்கை, தூய்மை ஆகியவற்றில் நீ விசுவாசிகளுக்கு முன் மாதிரியாய் விளங்கு"

1 தீமோ. 4: 12

"Let no one despise your youth, but set the believers an example inspeech and conduct, in love, in faith, in purity."

கிறிஸ்தவப் பக்தி முயற்சி சங்கமானது 1881-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2-ஆம் நாள் Rev. Dr. பிரான்சிஸ் எட்வர்ட் கிளர்க் (Rev. Dr. Francis Edward Clark) என்பவரால் அமெரிக்க நாட்டின் மேய்ன்ஸ் மாநிலத்தின் போர்ட்லாண்ட் நகரில் அமைந்துள்ள வில்லிஸ்டன் திருச்சபையில் "கிறிஸ்துவுக்காகவும் திருச்சபைக்காகவும் நல்முயற்சிகளை மேற்கொண்டு செயல்படுத்துதல்" (for Christ and the Church) என்ற குறிக்கோளுடன் ஆரம்பிக்கப்பட்டது. இளையோர், தங்கள் வாழ்வில், குடும்ப சூழல்களில், திருச்சபைத் திருப்பணிகளில், சமூக மாற்றுருவாக்கத்தில் இறை ஆன்மிக நறுமணம் பரப்புவதற்கு இயேசு கிறிஸ்து விரும்புகிறார். திருத்தூதுவர் பவுல், தன்னுடைய இறைப்பணியில், இளைஞர், தீமோத்தேயுவைப் பயிற்றுவித்து பல்வேறு இறை ஆலோசனைகளை வழங்கி இறை ஆன்மிக நறுமணம் வீசும்படி செய்தார். இறை அருட்பணியாளர் திமொத்தேயுவின் வாழ்வு, அவருக்கு வழங்கப்பட்ட அறிவுரைகள் ஆலோசனைகளின் ஐந்து இறையியல் தகவுகள் வழியாகச் சிந்திப்போம்.

1. பேச்சில் இறை ஆன்மிக நறுமணம் (In Speaking) (1 தீமோ. 4: 12)

"பேச்சு . . . நீ விசுவாசிகளுக்கு முன் மாதிரியாய் இரு."

இறை ஆன்மிக நறுமணம் வீசுவதற்குச் சிறுவர்கள் இளையோர்களுக்குச் சொல்லப்படும் முதல்படிநிலை பேசும் வார்த்தைகளாகும். பேசுதல் என்பது ஒரு கலையாகும். அளவோடு, சிறந்த எளிமையான வார்த்தைகளைக் கொண்டு பிறருடன் உரையாடுவது சிறப்பான ஆன்மிகச் சூழலாகும். தேவையில்லாத பேச்சும், பிறரைக் காயப்படுத்தும் வார்த்தைகளைத் தவிர்த்து அன்பான, ஆறுதலான, உற்சாகமூட்டும், இறை வார்த்தைகளைப் பேசுவது மிகுந்த பயன்தரும்.

1 சாமுவேல் 2: 3-இல் இறுமாப்புடன் இனிப் பேச வேண்டாம். உங்கள் வாயில் வீம்பு வெளிப்படவேண்டாம். யோபு 27: 3, 4-இல் என் உடலில் உயிர் இருக்கும் வரை, என் மூக்கில் கடவுளின் மூச்சு இருக்கும்வரை, என் உதடுகள் வஞ்சகம் உரையா, என் நாவும் பொய்யைப் புகலாது. தி.பா. 63: 11-இல் பொய் சொல்வோரின் வாய் அடைக்கப்படும். நீதிமொழிகள் 12: 18-இல் சிந்தனையற்ற பேச்சு வாள்போலப் புண்படுத்தும்; ஞானிகள் சொற்களோ புண்களை ஆற்றும். மத்தேயு 5: 37, 12: 36, 1 கொரி. 15: 33, எபே. 5: 4, 1 தெச. 2: 5 மேற்கண்ட திருமறை வசனங்களில் தேவையற்ற பேச்சு, வார்த்தைகளைத் தவிர்த்து இறை ஆன்மிகம் நம் சொல், சிந்தனையினால் வெளிப்படவேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது. நம் பேச்சு பிறரை ஆன்மிகத்தில் வளரச் செய்ய இறைவார்த்தைகளைப் பயன்படுத்தவேணடும் (1 தீமோ. 4: 9; 5: 13). "Talk Less listen More" அளவாகப் பேசுவதற்கும் செவி சாய்பதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவும் முயலவேண்டும்.

2. நடத்தையில் இறை ஆன்மிக நறுமணம் (In Conduct / Behaviours)

"நடத்தை ...ஆகியவற்றில் நீ விசுவாசிகளுக்கு முன்மாதிரியாய் விளங்கு" (I தீமோ. 4: 12).

நடத்தை என்பது சிறுவர்கள், இளையோர்களின் உட்புற, வெளிப்புற நடத்தையைக் குறிக்கிறது. எதை உள்வாங்கிச் சிந்திக்கிறார்கள், மனிதன் எண்ண ஓட்டங்கள், உட்காரும் முறை, நிற்கும் முறை, சாப்பிடும் முறை, பேசும் விதம், முக பாவனைகள் இவை சார்ந்து நடத்தையில் ஏற்படும் மாற்றங்கள் இறை ஆன்மிக நறுமணம் வீசுவதற்குரிய சாதக பாதக நிலையை வெளிப்படுத்துகிறது. சிறுவர்கள், இளையோர்கள், உடன் வாழ்பவர்களின் உணர்வுகளை மதித்து, அதைப் புரிந்துக்கொண்டு பணிவான அணுகுமுறையை வெளிப்படுத்தினால், அவர்கள் நல்ல நடத்தை உடையவராகக் கருதப்படுகிறார்கள். உரோ. 12: 2-இல் "இந்த உலகத்தின்படி ஒழுகாதீர்கள். மாறாக, உங்கள் உள்ளம் புதுப்பிக்கப்பெற்று மாற்றம் அடைவதாக". நீ.மொ. 3: 7-இல் "தீமையை அறவே விலக்கு". II தீமோ. 3: 15-இல் "நீ கடவுள் முன் ஏற்புடையோராக நிற்க முழு முயற்சி செய்". கொலோ. 3: 5-10 வரையில் சொல்லப்பட்ட திருவசனங்கள் நடத்தையினால் சிறுவர்கள், இளையோர்கள் இறை ஆன்மிக நறுமணம் வீசுவதற்கு வழிகாட்டுகிறது.

3. அன்புகூர்ந்து வாழ்வதால் இறை ஆன்மிக நறுமணம் (In living with Love)

"அன்பு ...ஆகியவற்றில் நீ விசுவாசிகளுக்கு முன்மாதிரியாய் விளங்கு" (I தீமோ. 4: 12).

இறைவனுடனும், இறை படைப்புகளுடனும் அன்புடன் வாழ கிறிஸ்து விரும்புகிறார். சிறுவர்கள் இளையோர்கள் அன்பின் விழுமியங்களைக் கற்று இறை ஆன்மிக நறுமணம் ஏற்படுவதற்கு அன்பை பரவச் செய்ய இறை தூண்டுதல் பெறுகிறோம். யோவான் 13: 34, 35-இல் "ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள் என்னும் புதிய கட்டளையை நான் உங்களுக்குக்

கொடுக்கிறேன். நீங்கள் ஒருவர் மற்றவருக்குச் செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லாரும் அறிந்துக் கொள்வர்" என்றார். நீங்கள் பெற்றுக்கொண்ட அழைப்புக்கு ஏற்ப வாழுங்கள், முழுமனத் தாழ்மையோடும் கனிவோடும் பொறுமையோடும் ஒருவரையொருவர் அன்புடன் தாங்கி... முழு முயற்சி செய்யுங்கள் (எபே. 4: 1, 2). பிறருக்கு அன்பினால் செய்யப்படும் பணிகளே இறை அருட்பணி என்று அன்னை தெரசா அவர்கள் குறிப்பிடும்போது "If you judge people you have no time to love them" நீங்கள் மக்களை நியாயந்தீர்த்தால் அவர்கள்மீது அன்பு செலுத்த உங்களுக்கு நேரம் கிடைக்காது. மேலும் "Not all of us can do great things, but we can do small things with great love" நம்மால் பெரிய பணித் திட்டங்களைச் செய்ய முடியாது. ஆனால், சிறிய பணிகளை மிகுந்த அன்புடன் செய்ய முடியும்.

4. நம்பிக்கையினால் இறை ஆன்மிக நறுமணம் (In Faith)

"நம்பிக்கை ...ஆகியவற்றில் நீ விசுவாசிகளுக்கு முன்மாதிரியாய் விளங்கு" (I தீமோ. 4: 12).

இறை நம்பிக்கையினால் சிறுவர் மற்றும் இளையோர் இறை ஆன்மிக நறுமணம் பரப்ப செய்ய முடியும். இறைவனில் நம்பிக்கை வைப்பவர்கள் பேறுபெற்றோர் (ஏசா. 40: 31). உலகில் இறை நம்பிக்கை இல்லாத வாழ்க்கை பயனற்ற வாழ்க்கையாகும். இயேசுவின் மேல் நம்பிக்கைக்கொள்பவர் இறப்பிலும் வாழ்வார் (யோவா. 11: 25). இறை நம்பிக்கை இறையரசில் பங்கேற்பதற்கான வாழ்வையும், மரணத்திற்குப் பிற்பாடுள்ள உயர் வாழ்வையும் இயேசுகிறிஸ்து நமக்கு அருளுகிறார். எபி. 11-ஆம் அதிகாரம் வசனம் 1 முதல் 40 வரையிலும், இறை நம்பிக்கையினால் பெற்றுக்கொள்ளும் இறை மேன்மைகளை நாம் அறிந்துக்கொள்ளலாம். எபி. 11: 6-இல் "நம்பிக்கையினாலன்றி எவரும் கடவுளுக்கு உகந்தவராயிருக்க இயலாது. ஏனெனில் கடவுளை அணுகிச் செல்வோர் அவர் இருக்கிறார் என்பதையும் அவரைத் தேடிச் செல்லோருக்குத் தக்க கைம்மாறு அளிக்கிறார் என்பதையும் நம்ப வேண்டும்". திருச்சபை சீர்த்திருத்த விடிவெள்ளி மார்டின் லுத்தர் குறிப்பிடும்போது, "We are saved by faith above, but me faith that saves is never alone" நாம் விசுவாசத்தினால் மட்டுமே இரட்சிக்கப்படுகிறோம். ஆனால், இரட்சிக்கும் விசுவாசம் ஒருபோதும் தனியாக இருக்காது.

5. தூய்மையான வாழ்க்கையினால் இறை ஆன்மிக நறுமணம் (In Holy life)

"தூய்மை ஆகியவற்றில் நீ விசுவாசிகளுக்கு முன்மாதிரியாய் விளங்கு" (I தீமோ. 4: 12).

தூய்மையான. வாழ்வுடன் இளையோர்கள் இறை ஆன்மிக நறுமணம் பரப்புவதற்கு இறைவன் விரும்புகிறார். தூய்மை வாழ்க்கை வெளிப்புறச் சடங்குகளுடன், பாரம்பரியத்துடன் தொடர்புடையது. இயேசுகிறிஸ்துவின் பணிக் காலத்தில், தூய்மை, தீட்டு விசயங்கள் கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டன. அதனால்தான் இயேசு கிறிஸ்துவின் சீடர்கள் கழுவாத

கைகளால் உணவு உண்பதைக் குற்றமாக சபைத் தலைவர்கள் குற்றம் சாட்டினார்கள். இயேசு கிறிஸ்து தூய்மைக் குறித்து, ஒருவர் தனது இதயத்தில் பேராசை, பொறாமை, செருக்கு போன்ற தீய உண்ர்வுகளையோ, வஞ்சகம், களவு, பாலுணர்வு இச்சை, பழிப்புரை போன்ற தீய எண்ணங்களையோ வைத்திருந்தால், மீண்டும் மீண்டும் கைகளைக் கழுவுவதினால் ஒரு பயனும் இல்லை என்றார். தி.பா. 51: 10-இல் "கடவுளே, தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும்". மத். 5: 8-இல் "தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர். ஏனெனில், அவர்கள் கடவுளைக் காண்பர்". லேவியர் 11: 44 "உங்களை தூய்மைப்படுத்தித் தூயவராயிருங்கள்". "நம் ஆன்மாவும், நம் வாழ்வும், தூய்மையானதாக இருந்தால், திருச்சபை, திருப்பணி, சமூகம், குடும்பம் முழுவதும் இறை ஆன்மிக நறுமணத்தினால் நிரம்பி இறையரசின் முன் அடையாளத்தைக் காண முடியும்". உலகில், பெருகிவரும் நீர் மாசு, நில மாசு, காற்று மண்டல மாசு, வளி மண்டல மாசு எல்லாமே மாசுபட்டுக் கிடக்கிறபோது, தூய்மையான நீர், நிலம், காற்று பெற்றுக்கொள்வது எப்படி? இது நம் முன்னுள்ள பெரும் சவாலாகும். சிறுவர், இளையோர் தம் தூய்மையான வாழ்க்கையினால், இறை ஆன்மிக நறுமணத்தால் தூய்மையை உலகில் பரவச் செய்ய முடியும்.

பேசும் வார்த்தைகளில், தெளிவும், அளவும் உடையதாக, நடத்தை, சிந்தை, செயல் ஆகியவற்றில் தூரக் காட்சியுடன், அன்புக்கு இலக்கணமாக இறை நம்பிக்கை, பற்றுறுதியின் இறையியல் தகவுகளுடன், தூய்மையாக வாழும் சிறுவர், இளையோர்களை நாம் ஆற்றல்படுத்துவோம், அவர்களை இறை ஆன்மிக உணர்வில் வளர செய்வோம். எபேசியர் 5: 1, 2-இல் "ஆகவே, நீங்கள் கடவுளின் அன்பார்ந்த பிள்ளைகளாய் அவரைப்போல் ஆகுங்கள். கிறிஸ்து உங்களுக்காகத் தம்மை நறுமணம் வீசும் பலியாய்க் காணிக்கையுமாகக் கடவுளிடம் ஒப்படைத்து உங்களிடம் அன்பு கூர்ந்ததுபோல, நீங்களும் அன்பு கொண்டு வாழுங்கள்". அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற பேராயர் டெஸ்ட் மன்ட் டுடு கூறும்போது, "இறை தூர காட்சியானது நாம் இறைவனின் குடும்பம் என்பதையும், நாம் ஒற்றுமை, இறை நன்மை, பிறர் மீதுள்ள இரக்கம் இவைகளுக்காக உருவாக்கப்பட்டுள்ளோம்" என்பதையும் உணர வேண்டும். "God's dream is that you and I and all of us will realize that we are family, that we are made for togetherness, for goodness and for Confession" இறை ஆன்மிக நறுமணம் இறை தகவுகளுடன் பரப்பச் செய்வோம். ஆமென்.

ப	ஞா. 74	கீர். 126

அருள்திரு. முனைவர். **S. டேவிட் ஜோசப் ராஜ்**

இயக்குநர், இளையோர் கரிசனைத்துறை

09.02.2025 குணமாக்கும் அருட்பணி ஞாயிறு

உயிர்ப்புத் திருநாளுக்கு முன்வரும் பத்தாம் ஞாயிறு

நோயில் நலம்பெறுதல்

Healing in Sickness

வி.ப. 4: 10-17 2 கொரி. 12: 1-10

தி.பா. 103: 1-10 யோவா. 9: 1-7

". . . ஏனெனில், நான் வலுவற்றிருக்கும்போது வல்லமை பெற்றவனாக இருக்கிறேன்" (2 கொரி. 12: 10).

மனித வாழ்க்கையில் நோய்கள், பலவீனங்கள் தவிர்க்க இயலாதவைகளாக மாறிவிட்ட காலத்தில் நாம் வாழ்ந்து வருகிறோம். மனிதன் உடல் சார்ந்த உள்ளம் சார்ந்த பல்வேறு நோய்களினால் பாதிக்கப்பட்டு தன் பொருளையும் பொறுமையையும் இழந்து தவிக்கிறான். "நோய் என்றவுடன் நம்மில் எழுகின்ற முதல் கேள்வி இந்த நோய்" எனக்கு ஏன் வந்தது என்பதுதான். நோய் ஏன்? என்னும் கேள்வி அரசிளங்குமாரன் சித்தார்த்தனை அரண்மனையையும் அரசபோகத்தையும் விட்டுவிட்டு காட்டிற்கே ஓடச்செய்தது என்பது வரலாறு. நோயை பொறுத்தவரையில் இது ஏன்? என்னும் கேள்வி குழப்பத்தையும் உளச்சோர்பையுமே தரும். மாறாக இனி என்ன? எப்படி? என்னும் கேள்விகளே நோயிலிருந்து நம்மை நலமாக்கும். டோனவூர் ஐக்கியத்தை உருவாக்கிய ஏமி கார்மிக்கேல் அம்மையார் அவர்கள் அன்னாரது நோயினிமித்தம் இருபது ஆண்டுகள் படுக்கையிலேயே இருந்தார். அவர் எழுதிய முப்பத்தெட்டு புத்தகங்களில் முப்பது புத்தகங்கள் அவர் படுக்கையில் இருந்தபோது எழுதியவைகளே. படுக்கையோடு பல இடங்களுக்குத் தூக்கிச்செல்லப்பட்டு தன்னுடைய அருள்பணிவிடைகளை நிறைவேற்றினார். தூய பவுலார் இச்சிந்தனையை மிகத்தெளிவாய் இந்த நாளுக்கான நிரூபப்பகுதியில் வெளிப்படுத்துவதை நாம் காண முடிகிறது (2 கொரி. 12:4-10). நோயிலும் நலமாயிருத்தல் எப்படி என்பதனைச் சுருக்கமாகச் சிந்திப்போம்.

1. உண்மை நிலையை ஏற்றுக்கொள்ளுதல் (2 கொரி. 12: 7)

நோயால் நமக்குச் சரீர வருத்தம் மற்றும் மன வருத்தம் ஏற்படுகிறது . இதனை வாழ்வின் வலியாக, முள்ளாக நாம் எண்ணுகிறோம். பவுலடியாரும் கூட தன்னுடைய வாழ்வின் நோயையே முள்ளாகக் குறிப்பிடுவதாய் அறிஞர்கள் விளக்கமளிக்கின்றனர். பவுலுக்குக் கண்ணில் கிட்டப்பார்வை, மலேரியா காய்ச்சல், காக்காய் வலிப்பு முதலிய நோய்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது. பவுல் தன்னுடைய நோயை ஏற்றுக்கொண்டதுமன்றி, அதுவும் தனக்கு

நன்மைக்கே எனக் குறிப்பிடுகிறார். “தன்னை உயர்த்தாதபடிக்கு அந்த நோய் தன்னைத் தலையில் கொட்டி அமர்த்துகிறது” அதாவது, தாழ்மையைக் கற்றுத்தருகிறது என்கிறார். அதாவது தான் ஒரு நல்ல மனிதனாக வாழ தனது “நோய்“ உதவுவதாகக் கூறுகிறார்.

ஒருமுறை சர்க்கரை நோய் சிகிச்சை நிபுணர் ஒருவரை சந்திக்கவேண்டியிருந்தது. அவருடன் பேசிக்கொண்டிருந்தபோது சர்க்கரை நோய் குறித்து பல்வேறு காரியங்களை அவர் பகிர்ந்துகொண்டார். அவருடைய பேராசிரியர், ஒருவேளை கடவுள் தனக்கு ஒரு வரம் தருவதாக இருந்தால் தனக்குச் சர்க்கரை நோய் வேண்டும் என கேட்ப்பேன் எனக் கூறியதாக சொன்னார். மேலும் சர்க்கரை நோய் உள்ள மனிதன் தனது நோயின் தன்மையை அறிந்து அந்நோயுடன் வாழப்பழகிக்கொள்ளவேண்டும். எப்டியெனில், ஒழுக்கம், உடற்பயிற்சி, உணவுக்கட்டுப்பாடு இவைகளைக் கைக்கொள்ளும்போது, நோயிலும் நலமுடன் வாழ முடியும். சர்க்கரை நோய் ஒரு ஆசீர்வாதமான நோய் (Blessed Disease) தெரியுமா என்று சொல்லி என்னை ஆச்சரியப்படுத்தினார். மேலும் அவர் தனக்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன் சர்க்கரை நோய் வந்ததாகவும், தன் வாழ்வில் கட்டுப்பாடுகளுடன் இருப்பதால் தான் அதற்கு முன் இருந்ததைக்கட்டிலும் தற்போது ஆரோக்கியமாகாக இருப்பதாகவும் கூறினார்.

நோயைக்குறித்த உண்மை நிலையை அறிந்து கொள்ளுதல் மனச்சோர்பு பயம் முதலியவற்றிலிருந்து நம்மைக் காக்கும். நோயின் வழியேயும் தனது சித்தத்தைச் செயல்படுத்த கடவுள் நம்மைப் பயன்படுத்துகிறார். நோய் என்பது எந்த அளவு உண்மையோ அதைப்போலவே நோயினூடேயும் சிறப்பாக வாழ்ந்து, இறைத்திட்டத்தை நம்மால் நிறைவேற்றவும் முடியும் என்பதும் உண்மை.

2. உன்னத அருளைப் பெற்றுக்கொள்ளுதல் (2 கொரி. 12: 9)

நம்முடைய நோயில் நலமுடன் திகழ, இறையருளைப் பெற்றுக் கொள்ளுவது அவசியம். வசனம் 8 இல் தனது பலவீனம் நீங்கும்படி பவுலடியார் மூன்று முறை ஜெபித்தாக நாம் வசிக்கிறோம். அவருடைய ஜெபத்திற்கு இறைவனிடமிருந்து கிடைத்த பதில்தான், “என் அருள் உனக்குப் போதும்; வலுவின்மையில்தான் வல்லமை நிறைவாய் வெளிப்படும்”. பலவீன வேளைகளில் கடவுளை நோக்கி ஜெபிக்க வேண்டிய கடமை நமக்கு உண்டு. நாம் ஜெபிக்கும்போது அந்தப் பெலவீனத்தில் பெலப்படுத்தப்பட கடவுள் நமக்குக் கிருபை செய்வார். இயேசு கிறிஸ்துவும் கூட தன் பலவீன நேரத்தில் “தந்தையே, இந்தப்பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படிசெய்யும்” என்று மூன்று முறை ஜெபித்ததை மத்தேயு 26: 39, 42, 44 & லூக்கா 22: 42 ஆகிய வசனங்களில் நாம் வாசிக்க முடிகிறது. இயேசு கிறிஸ்துவின் ஜெபத்திற்குப் பதில் கிடைத்ததா என்று நாம் சிந்தித்தால், ஆம் பதில் கிடைத்தது. ஆனால், எதிர்மறையான ஒரு பதில். இயேசு கிறிஸ்து தன்னைக் கஷ்ட்டப்படுத்தும் அந்தப்பாத்திரத்தைத் தன்னிடமிருந்து அகற்றும்

படி வேண்டிக்கொள்ள, அந்தப்பாத்திரத்தை ஏற்றுக்கொள்ள, சகித்துக்கொள்ள தேவையான பலத்தைக் கடவுள் அருளுகிறார் (லூக்கா 22: 43). இறை மனிதனான மோசேயைக் கடவுள் அழைத்தபோது "நான் திக்குவாயன், மந்த நாவை உடையவன்" என தன்னுடைய பலவீனத்தை மோசே கூறுகிறார். அதற்குக் கடவுள் "ஆரோன் உனக்குப் பதிலாக மக்களோடே பேசுவான்; அவன் உனக்கு வாயாக இருப்பான்" எனப் பதிலளிக்கிறார் (வி.ப. 4: 10-17). இறை கிருபையைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் கண்டிப்பாக நம்முடைய ஜெபங்களுக்குப் பதில் உண்டு என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். நம்முடைய ஜெபங்களுக்கு நாம் எதிர்பார்ப்பதின் படியே பதில்வேண்டும் என விரும்புகிறோம். ஆனால் நம்முடைய விருப்பத்தின்படியல்ல கடவுளுடைய சித்தத்தின் படி அவர் நமக்குப் பதிலளிக்கிறார் என்பதனை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

ஆலயத்தில் மணியடித்துவிட்டது. ஆராதனையில் கலந்து கொள்ளும்படியாய் ஒருவர் வேகமாய் ஆலயத்திற்கு நடந்து சென்று கொண்டிருந்தபோது திடீரென மழை பெய்ய ஆரம்பித்தது. இந்த மழை நின்று விடவேண்டும், மழை நின்றதும் நான் ஆலயத்திற்குப் போகவேண்டும் என்று ஜெபித்துக்கொண்டே, ஓரிடத்தில் ஒதுங்கி நின்றார். அந்த வேளையில் ஆலயத்திற்குச் சென்ற ஒருவர் தன்னுடைய கையில் குடையோடு அவனைக் கடந்து சென்றார். ஆலயத்திற்கு வரும்படியாய் அவர் காத்து நிற்பதைக் கண்டார். அவரிடத்திலே கேட்டார்: வாருங்கள் நாம் இருவரும் சேர்ந்து இந்தக் குடையில் ஆலயத்திற்குச் சென்றுவிடலாம் என்று சொன்னார். இவரோ, இல்லை மழை நிற்கட்டும் நான் வருகிறேன் என்று சொல்லி அவரை அனுப்பி விட்டார். சற்று நேரம் கழித்து வேறொருவர் நான்கு சக்கர வாகனத்தில் அந்த வழியாக வந்தார். இவர் மழைக்காக ஒதுங்கி நிற்பதைக் கண்டு காரில் வாருங்கள் நாம் ஆலயத்திற்குச் செல்லலாம் என்று அழைத்தார். அவர் அதையும் மறுத்து விட்டார். சற்று நேரம் பெய்த மழை பின்பு ஓய்ந்தது. ஓட்டமும் நடையுமாக ஆலயத்திற்குள்ளாக வந்து சேர்ந்தார். ஆலயத்திற்குள்ளாக வந்த பிறகு அவருடைய மனதில் ஒரே கோபம். ஆலய ஆராதனையில் நான் முழுமையாக பங்கு பெறாதபடிக்கு ஆண்டவர் என்னைத் தடை செய்துவிட்டார். ஆராதனையின் பெரும்பகுதி நிறைவடைந்து விட்டது. என்னால் சரியான நேரத்திற்கு வர முடியவில்லை. ஆலய ஆராதனையில் கலந்து கொள்ளுவதற்கு ஆண்டவர் தனக்கு உதவி செய்யவில்லை. அவர் என்னுடைய ஜெபத்தைக் கேட்கவில்லை என்று விசனப்பட்டார். ஆண்டவர் அவரைப் பார்த்து சொன்னார்: மகனே! நீ ஆலய ஆராதனையில் கலந்து கொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பமும் கூட. மழை வந்தது. அந்த மழையையும் மீறி, குடையின் மூலமாக நீ ஆலய ஆராதனையில் கலந்து கொள்ளுவதற்கு நான் ஒருவரைக் குடையோடு அனுப்பினேன். நீ அதை ஏற்றுக்கொள்ளவில்லை. உன்னைக் காரில் அழைத்து வரும்படியாக ஒருவரை அனுப்பினேன். அதையும் நீ ஏற்றுக்கொள்ளவில்லை. மழை நின்று தான் ஆலய ஆராதனைக்கு வர வேண்டும் என்ற உன்னுடைய விருப்பம் நிறைவேற நீ காத்திருந்தாய், என்னுடைய திட்டத்தை நீ ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொன்னார். அந்த

மனிதர் அப்போது தன்னுடைய தவறை உணர்ந்துகொண்டார். பல வேளைகளில் நாமும் ஆண்டவரிடத்தில் ஏறெடுத்த ஜெபங்களுக்கு நம்முடைய விருப்பத்தின்படி பதில் வேண்டும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆண்டவர் நம்முடைய வேண்டுதலுக்கானப் பதிலை அவருடைய விருப்பத்தின்படி தருவார் என்பதனை உணர்ந்துகொள்ள நாம் அழைக்கப்படுகிறோம். நம்முடைய வேண்டுதலினால் இறைவனருளும் கிருபை நம்முடைய பெலவீனங்களில் நம்மைப் பெலப்படுத்தும்.

3. உள்ளத்தில் மகிழ்ச்சி கொள்ளுதல் (2 கொரி. 12: 10)

பொதுவாக, நோய் நம்மைத் தாக்கும்போது நாம் வருத்தப்படுகிறோம். நோயின் வேதனையால் முறுமுறுக்கிறோம். சில வேளைகளில் இது இறைசித்தம் என யோபுவைப்போல சகித்துக்கொண்டாலும்கூட நோயினிமித்தம் நாம் மகிழ்ச்சியாயிருப்பது என்பது நம்மால் இயலுவதில்லை. ஆனால் தூய பவுலடியார் தன்னுடைய பலவீனங்களினிமித்தம் தான் மகிழ்ச்சிக்கொள்வதாகக் குறிப்பிடுகிறார். பவுலடியாரின் இந்த அணுகுமுறை நோயிலும் நலமாயிருப்பதற்கான வழிமுறையை நமக்குக் கற்றுத்தருகிறது. பலவீன வேளைகளில் தான் மகிழ்ச்சியாயிருப்பதற்கான காரணங்களைப் பவுலடியாரின் எழுத்துகளிலிருந்து நாம் தெளிவாகப் புரிந்துகொள்ளமுடியும். “பாடுகளின் வழியே கிறிஸ்துவின் ஆறுதல் பெருகுகிறது” (2 கொரி. 1: 5) என்றும் “சாவுக்குரிய துன்பங்களை எங்கள் உடலில் சுமந்து சென்றாலும் இயேசுவின் வாழ்வு எங்களில் வெளிப்படுகிறது” (2 கொரி. 4: 10) என்றும் “பலவீனங்களில் கிறிஸ்துவின் வல்லமை என்னில் தங்குகிறது” (2 கொரி. 12: 9) என்றும் பவுலடியார் குறிப்பிடுகின்றார். மேலும் “இந்த பலவீனங்கள் கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாது, இவற்றிலிருந்து ஜெயங்கொள்ளுவோம்” (உரோ. 8: 36,37), பலவீனங்களில் நமது கடமைகளை நிறைவேற்றவேண்டிய பெலனைக் கடவுள் நமக்குத்தருவார் (பிலி. 4: 13), என்னும் நம்பிக்கை நமது உள்ளத்தில் மகிழ்ச்சியைத்தரும்.

பலவீனங்கள், நோயின் பாடுகளை நாம் அனுபவித்திருக்கும் போது, அந்த அனுபவத்தைப் பலவீனமுள்ள, துன்பத்திலுள்ள மற்றவர்களின் உணர்வுகளை நாம் புரிந்துகொள்ளவும், வழிகாட்டவும், ஆலோசனை கூறவும், ஆறுதல் கூறவும் கடவுள் நம்மைப் பயன்படுத்துகிறார். பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட பெண்கள் மத்தியில் அருட்பணியை செய்யும் ஒரு அருட்பணித் தம்பதியரை ஒருமுறை சந்திக்க நேர்ந்தது. இப்படிப்பட்ட அருட்பணியை உங்களால் எப்படித் தெரிவு செய்ய முடிந்தது என்று அவர்களிடத்தில் கேட்டேன். அதற்கு அவர்கள் தங்களின் அருட்பணிப் பயணத்தின் போது ஒருமுறை, ஒரு பயங்கர கொள்ளைக் கூட்டத்தினரிடம் தாங்கள் மாட்டிக்கொண்டதாகவும், அக்கும்பல் அந்த ஆண் அருட்பணியாளரைக் கட்டிப்போட்டுவிட்டு, அவருடைய கண்களுக்கு முன்பாகவே அவரது மனைவியைப் பாலியல் பலாத்காரம் செய்து விட்டதாகவும், இதனால் சோர்ந்துபோய் அருட்பணியை விட்டே விலகி இருந்ததாகவும், பின்னர் சிலகாலம் கழித்து ஏதோ பெயரளவில் அருட்பணி

செய்துவந்ததாகவும் கூறினார்கள். இந்த நிலையில் பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளாக்கப்பட்ட ஒரு சகோதரி அவர்களிடத்தில் அழைத்துவரப்பட்டார். தனக்கு நேர்ந்த கொடுமையினிமித்தம் மிகவும் மனதளவிலும் உடலளவிலும் சோர்ந்து போயிருந்த அவரிடம், இவ்வருட்பணி சகோதரி எவ்வளவோ ஆறுதல் கூறியும் அவர் ஆறுதலடையவில்லை. "என்னுடைய வேதனை உங்களுக்குப் புரியாது" என்றார். அப்போது, இவ்வருட்பணி சகோதரி "நானும் உன்னைப்போல வேதனையை அனுபவித்தவள் தான்" என தனக்கு நடந்த துயரமான நிலையைக் கூறி வேத வசனங்களால் அவருக்கு ஆலோசனை கூறி ஆறுதல்படுத்தினார். அந்தச் சகோதரியும் மனஆறுதல்பெற்று இயல்பு வாழ்வுக்குத்திரும்பினார். இந்த நிகழ்வு தங்களுக்கு நேர்ந்த துயரம், பிறருக்கு ஆறுதல் கூறவும் ஆலோசனை கூறவும் கடவுளின் அருட்பணியில் இப்படிப் பாதிக்கப்பட்ட மக்கள், குறிப்பாகப் பெண்கள் மத்தியில் அருட்பணியை நிறைவேற்றவும் காரணமாக இருந்ததாகக் கூறினார்கள்.

நோய்கள் வாழ்வில் துன்பத்தையும் சோர்பையும் உருவாக்கி நம்முடைய அமைதியை அழித்துவிடும் ஆற்றலுடையவை. எனினும் உண்மை நிலையை ஏற்றுக்கொண்டு, உன்னத அருளைப் பெற்றுக்கொண்டு, உள்ளத்தில் மகிழ்ச்சி கொண்டவர்களாய் நோயிலும் நலமாயிருக்க கடவுள் தாமே நமக்கு அருள்புரிவராக! ஆமென்.

அருள்திரு. அறிவர் M. இம்மானுவேல் கின்சன் பெல்

ஆயர், மாறாங்கோணம்

ப	ஞா. 76	கீர். 134

இறைவேண்டல்

அருள் நிறைந்த கடவுளே, தம் ஆற்றலினால் குணப்படுத்துபவரே, எங்கள் துக்கத்திலும் நோயிலும் ஆறுதல் அளிக்கும் மீட்பர் நீரே. உமது அற்புதங்கள் எங்கள் வாழ்வில் சாட்சியாக அமைய எங்களுக்கு உதவி செய்யும். எங்கள் நோய்களை நீர் குணப்படுத்துகிறீர் என்பதை முழு உலகமும் அறியும் வகையில், உடைந்த உலகத்திற்கு கடவுளின் குணமாக்கும் வாயில்களாக எங்களைப் பயன்படுத்துமாறு வேண்டுகிறோம். இதை நாங்கள் மனதில் கொண்டு சிறந்த மனிதர்களாகத் திகழ, வாழ உதவி செய்யும். உம்மோடும் தூய ஆவியரோடும் இப்போதும் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்யும் எங்கள் ஆண்டவரும் மீட்பருமான இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம், ஆமென்.

படைப்பில் கூட்டுச் சார்பு நிலை

The Inter-dependence in Creation

தொ.நூ. 2: 1-15 கொலோ. 2: 16-23
தி.பா. 104: 24-35 மத். 13: 1-9

"நிலத்திலிருந்து மூடுபனி எழும்பி நிலம் முழுவதையும் நனைத்தது, ஆண்டவராகிய கடவுள் . . . எல்லா வகை மரங்களையும் மண்ணிலிருந்து வளரச் செய்தார்" (தொ.நூ. 2: 6, 9).

வரலாற்றைத் திரும்பி பார்த்தால் ஆதி மனித சமூகம் காடு மலைகளில் சுற்றித் திரிந்து வேட்டையாடி உணவு சேகரித்து வாழ்ந்து வந்தது. ஆரம்ப காலங்கள் இயற்கையோடு இசைந்து வாழ்ந்த உறவின் வாழ்வாக இருந்தது. தேவைக்கு அதிகமாக உணவுப் பொருட்கள் சேகரிப்பில் மனிதன் ஈடுபட்டபோது ஆண்டான் அடிமை சமூகம் உருவானது. ஆரம்பத்தில் இருந்த தாய்வழி சமூகம் தந்தைவழி சமூகமாக மாறியது. ஆணாதிக்க அடக்குமுறை இயற்கை மீதும் கட்டவிழ்த்துவிடப்பட்டது. இதன்பின் வந்த நில பிரபுத்துவ சமூகத்தில் சொத்துக்களைப் பெருக்கிக்கொள்ளும் போக்குப் பெருகி இன்றுவரை அதே பாதையில் உலகம் பயணிக்கிறது. இதன் உச்சகட்டமாக வந்ததே முதலாளித்துவ சமூக கட்டமைப்பு. தேவையில்லாத ஆடம்பர பொருள் உற்பத்தி பெருகி, லாபம் ஒன்றே குறிக்கோளாக மாறியது.

இப்போது வணிக நோக்கத்தில் படைப்பனைத்தையும், இயற்கை வளங்களையும் சூறையாடி பூமியை அழித்து நாசமாக்கி வருகின்றான் மனிதன். இதனால் படைப்பின் பல உயிரினங்கள் அழிந்துவிட்டன (டையனோசர், பயணி புறா). காண்டாமிருகம், மனிதக் குரங்கு, புலி இனங்கள், சிட்டுக்குருவி வகைகள், பட்டாம்பூச்சி இனங்கள் அழியும் தருவாயில் உள்ளன.

மலைப்பகுதிகளில் யானை போன்ற விலங்குகளின் வழித்தடங்கள் தடுக்கப்பட்டு விலங்கினங்கள் மரணமடைவது அன்றாடச் செய்தியாக உள்ளது. யானைகள் தங்கள் வாழ்நாட்களில் பல ஆயிரக்கணக்கான காடுகளை உண்டாக்குகின்றது என்ற அடிப்படை அறிவை மனிதன் மறந்துவிட்டான். இறைவனால் படைக்கப்பட்ட ஒவ்வொரு உயிரினங்களும் சுற்றுச்சூழலைக் காப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. மண்ணின் உயிர்ச்சத்தை உண்டு புல் துளிர்க்கின்றது. புல் தழைகளை உண்டு ஆடு, மாடு, முயல் போன்ற விலங்கினங்கள் வாழ்கின்றன. ஆடு, மாடு போன்ற விலங்கினங்களை உண்டு, புலி, சிங்கம் போன்ற விலங்கினங்கள் வாழ்கின்றன. விலங்கினங்கள் மடியும்போது, உயிர்சத்து புல் பூண்டுகளை முளைப்பிக்கின்றது. படைப்பின் உயிரினங்கள் ஒவ்வொன்றின் வாழ்விலும், முடிவிலும் மற்ற உயிரினங்கள் வாழ்கின்றன.

படைப்பில் உயிரினங்கள் அனைத்திற்கும் ஒரு தொடர்பு , சார்புநிலை உள்ளது. ஆனால், மனிதன் மட்டுமே இயற்கையை அழிக்கின்றான். காட்டை

அழித்து வணிக மயமாக்கிப் பெரிய நீர்தேக்கங்கள், தொழிற்சாலைகளை ஏற்படுத்தி இயற்கை சமநிலையைப் பாதிக்க வைக்கின்றான். இதனால் மழையின்மை அல்லது அதிக மழை, வறட்சி, நில அதிர்வு இவைகளால் படைப்பனைத்தும் பாதிப்புக்குள்ளாகின்றன. இதனால் அழியப்போவது இயற்கையும் மனிதனும்தான். படைப்பனைத்திற்கும் தேவையான கூட்டுச் சார்பு நிலைக்கு நமது பங்கு என்ன என்பதைச் சிந்திப்போம்.

1. சார்பு நிலையைக் கற்றுக்கொள்ளல்

"ஆண்டவரே! உம் வேலைப்பாடுகள் எத்தனை எத்தனை! நீர் அனைத்தையும் ஞானத்தோடு செய்துள்ளீர்!" (தி.பா. 104: 24)

தொ.நூ. 1: 2-இல் படைப்பின் முன்பு இருந்த நிலை கூறப்பட்டுள்ளது. பூமியானது ஒழுங்கின்மையும், வெறுமையுமாய் இருந்தது. கடவுள் ஒழுங்கற்ற உலகத்தை ஒழுங்குபடுத்தினார். பூமியில் தேவையான இயற்கை வளங்களை ஏற்படுத்தினார். நீர்நிலைகள், வெளிச்சம், செடி கொடிகள், மரங்கள், பூமியில் வாழும் உயிரினங்கள், நீர்நிலைகளில் வாழும் உயிரினங்கள், பறவையினங்கள், இறுதியாக மனிதனையும் தமது சாயலாக உருவாக்கி ஒழுங்குபடுத்தினார். அனைத்து உயிரினங்களும் ஒன்றை ஒன்று சார்ந்து வாழ்வதற்குக் கடவுள் ஒரு ஒழுங்கான சார்பு நிலையை உருவாக்கினார். தாவரம், நிலம், நீர் இவைகள் ஒளியைச் சார்ந்திருக்கிறது. ஒளியும் நீரும் நிலமும் இல்லாமல் தாவரங்கள் வாழ முடியாது. எனவேதான் முதலில் ஒளியைப் படைத்தார். பறவைகள், ஊரும் பிராணிகள், காட்டுமிருகங்கள், இவைகள் வாழ ஒளி, நீர், நிலம் முக்கிமாக தாவரங்கள் தேவை. தாவரங்கள் புல்பூண்டுகள் இவைகளைச் சார்ந்துதான் பறவை, மிருகங்கள் வாழ முடியும். செடி, கொடி, தாவரங்கள் அனைத்தும் வாழ மழை தேவை. மனிதனைப் படைத்து மேற்குறிப்பிட்டவை அழிந்துபோகாமல் பாதுகாக்கும் பொறுப்பை மனிதனிடம் வழங்கினார். இந்தச் சார்பு நிலைக்கான அடிப்படை அறிவை மனிதன் மறந்துபோனான். சார்பு நிலை உண்மையைக் கற்றுக்கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயம்.

சார்புநிலை கடமையை அனைத்து உயிரினங்களும் (மனிதனைத் தவிர) சரியாக, முறையாகப் பின்பற்றுகின்றன. ஆனால், மனிதன் மட்டும் பின்பற்றவில்லை என்பது வேதனையானது. எனவே, கிறிஸ்து அவைகளை மேற்கோள் காட்டி நமது தவறுகளைச் சுட்டிகாட்டியுள்ளார். ஆகாயத்துப் பறவைகளைக் கவனித்துப் பாருங்கள் என்றார் (மத். 6: 6). காட்டுப் புஷ்பங்களைக் கவனித்துப் பாருங்கள் என்றார் (மத். 6: 28). கோடைகாலத்தில் உணவைச் சேர்க்கும் எறும்பு, கன்மலையில் வீட்டை வைக்கும் குழிமுசல்கள், பவுஞ்சு பவுஞ்சாய் புறப்படும் வெட்டுக்கிளிகள், வலையைப் பின்னி வாழும் சிலந்தி பூச்சிகள் போன்ற ஞானமுள்ள நான்கு உயிரினங்களைக் குறித்தும் திருமறையில் குறிப்பிடப்பட்டுள்ளன (நீதி. 30: 24-28). தேனீக்களின் மகரந்த சேர்க்கையே உணவு உற்பத்திக்கு அடிப்படை. தாவரங்கள் கார்பன்டை ஆக்சைடை எடுத்துக்கொண்டு ஆக்சிஜனை நமக்குத் தருகின்றது. மனிதரோ நன்மை செய்யும் தாவரங்களை அழித்து வருகின்றனர். சார்பு நிலையின் உண்மையானத் தன்மையைப் பறவை, தாவரங்களிடமிருந்து மானிடர் கற்றுக்கொண்டு கூட்டு சார்பு நிலைக்கு உழைக்க, பிறர் நலன் நோக்க அழைக்கப்பட்டுள்ளோம் (பிலி. 2: 4).

1. கூட்டுச் சார்பு நிலைக்கான உடன்படிக்கை (பிலி. 2: 4)

"மனிதரை முன்னிட்டு நிலத்தை இனி நான் சபிக்கவே மாட்டேன்" (தொ.நூ. 8: 21).

உடன்படிக்கை என்பது இரு தரப்பினரிடையே ஏற்படும் நடைமுறை. தவறாத இணை ஒப்பந்தம். இயற்கையை, உயிரினங்களைப் பாதுகாப்பதில் இறைவனே முன் முயற்சி எடுத்து, சமமாக பொறுப்பெடுத்து உடன்படிக்கையை ஏற்படுத்துகிறார். உடன்படிக்கையில் கடமைகளும் உண்டு, சலுகைகளும் உண்டு. வேதத்தில் பல உடன்படிக்கைகள் உள்ளன. (ஆதாமோடு, நோவாவோடு, ஆபிரகாமோடு, சீனாய் மலையில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கைகள்). தொ.நூ. 1: 6-30 வரையுள்ள பகுதிகளில் விருட்சங்கள், கனிதரும் மரங்கள் புல்பூண்டுகள் விலங்கினங்களுக்கு ஆகாரமாகவும், மனிதருக்கு உணவாகவும் கொடுத்துள்ளார் எனக் கூறப்பட்டுள்ளது. மனிதருக்கும், இயற்கைக்குமிடையே உள்ள படைப்புக்கானச் சார்பு நிலையை இது உணர்த்துகிறது. மனிதரால் பாவம் பெருகி படைப்பின் சில பகுதிகள் அழிவைக் கண்டபோது, கடவுள் இரங்கி இயற்கையோடு உடன்படிக்கை செய்து கொள்ளுகிறார் (தொ.நூ. 8: 21).

தொ.நூ. 2: 15-இல் மனிதருக்கு நித்திய கட்டளையாகிய (உடன்படிக்கையின் அடையாளமாக) பண்படுத்த, பாதுகாக்கக்கூடிய பொறுப்பைக் கொடுத்தார். ஆனால், மனிதரோ தான் மண்ணினால் உருவாக்கப்பட்டவர் என்பது தெரிந்தும், மண்ணிற்குத் திரும்பவேண்டியவர் என்பதை அறிந்தும் மண்ணிற்குத் துரோகம் செய்துகொண்டே இருக்கின்றனர். நிலத்தில் ரசாயனக் கலவைகளைப் பயன்படுத்தி, பூமியைப் பாழாக்குகின்றனர். இதுவரை 600 முதல் 900 வரையான தாவர வகைகள், மிருக ஜீவன்கள் அழிக்கப்பட்டுள்ளன. 4,82,000 ஏக்கர் நிலங்கள் பாலைநிலமாக மாற்றப்பட்டுள்ளன. 1.17 மில்லியன் ஏக்கர் நிலங்களில் இருந்த காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. தொழிற்சாலைக் கழிவுகள் ஆற்றில் கலக்கப்பட்டு நன்னீர் உயிரினங்கள் அழிந்து, விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டு விவசாயம் முற்றிலும் அழிவை நோக்கிச் செல்கிறது. நச்சு புகைகளால் பூமியைப் பாதுகாக்கும் ஓசோன் மண்டலம் ஓட்டை விழுந்து பூமி வெப்ப மண்டலமாக மாறி உள்ளது. குடிக்கும் தண்ணீர் விஷமாகி உள்ளது. பூமியின் மீது விழும் சூரியனின் நேரடி வெப்பக் கதிர்களால் பூமியின் உயிர்கள், மனிதர்கள் பல்வேறு நோய் தாக்குதலுக்கு உள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

மனிதன் இயற்கையோடு, படைப்போடு உடன்படிக்கையைப் புதுப்பிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. நம் தலைமுறை பூமியில் பாதுகாப்போடு வாழ, மனிதன் மறுபடியும் உடன்படிக்கைக்குக் கீழ்ப்படிந்து வாழ கடவுள் எதிர்பார்க்கின்றார். இது என் நிலம், என் பூமி, என் இடம், எனது மாநிலம், என் நாடு, என் இனத்தின் வாழ்விடம் எனப் பூமியைப் பாழ்படுத்தி, பங்கு போட்டு அதிநவீன ஆயுதங்களால் அழித்து கொண்டிருக்கும் நிலையில் மனிதன் வாழ்கிறான். ஆனால் கடவுளே நிலத்தின், பூமியின், படைப்பின் சொந்தக்காரர் (தி.பா. 24: 1). மனிதனின் உள்ளம், உணர்வுகள் நல்ல நிலங்களாக இருக்க வேண்டும் என்பது கிறிஸ்துவின் போதனை (மத். 13: 1-9).

ஞானி ஒருவரிடம் 2 பெண்கள் சண்டையிட்டவண்ணமாக வந்தனர். ஒருவர் சிங்களப் பெண், ஒருவர் தமிழ்ப்பெண். எங்கள் பிரச்சனையைத் தீர்த்துவையும் என ஞானியிடம் கேட்டனர். உங்கள் பிரச்சனை என்ன என ஞானி

கேட்டார். உடனடி தமிழ்ப்பெண் சொன்னாள்; என்னுடைய நிலம் எனக்கு வேண்டும். இரத்தம் சிந்தி உழைத்து உருவாக்கப்பட்ட நிலம் இது. எனக்கு இவர்களோடு இணைந்து வாழ முடியாது என்றாள். சிங்களப் பெண் சொன்னாள்; நாங்கள் எங்கள் நிலத்தை எப்படிப் பிரிக்க முடியும். இது எங்கள் பரம்பரை சொத்து, இரக்கப்பட்டு இவர்களை வாழ அனுமதித்தோம். இனி இது ஒருபோதும் நடக்காது, நடக்கவும் விடமாட்டோம் என்றாள். ஞானி அன்போடு கேட்டார்; உங்களிடம் உண்பதற்கு ஏதாவது இருக்கிறதா, நான் பசியுடன், தாகத்துடன் இருக்கிறேன் என்றார். தமிழ்ப்பெண் கொஞ்சம் மாவு இருக்கிறது என்றாள். சிங்களப் பெண் என்னிடம் கொஞ்சம் எண்ணெய், வெங்காயம் இருக்கிறது என்றாள். ஞானியின் பசியை ஆற்ற இருவரும் இணைந்து உணவைத் தயாரித்தனர். ஞானியை அமரச்செய்து உணவைப் பரிமாறினர். சண்டையை மறந்தனர். ஞானி உணவு உண்பதைப் பக்தியோடு பார்த்து மகிழ்ந்தனர். வந்த வேலையை மறந்தனர். ஞானி வந்த வேலையை நினைவுபடுத்தினார். கேள்வி கேட்ட இருவரது கேள்வியையும் நினைவுபடுத்தினார். இறுதியாக ஞானி முழந்தாள்படியிட்டு, காதை நிலத்தில் வைத்து எதையோ கேட்டார், கவனித்தார், பின்பு புன்முறுவலோடு எழுந்தார். கேள்விக்கானப் பதிலைச் சொன்னார். பூமியிடம், நிலத்திடம் கேட்டேன். இந்த பூமி, படைப்புக்குச் சொந்தம் யார் என்று. பூமி சொன்னது கடவுளே பூமியின் சொந்தக்காரர், நீங்கள் இருவரும் பூமிக்கு சொந்தமானவர்கள், பூமியைப் பாதுகாக்கும் பொறுப்பு மட்டுமே உங்களுடையது; என பூமி சொன்னதாக ஞானி சொன்னார். பெண்கள் இருவரும் கேட்டார்கள்; நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று. ஞானி சொன்னார், எனக்குச் செய்தது போல தேவையுள்ள பிறருக்கும், பூமிக்கும் சேவைச் செய்யுங்கள், ஒருவர் மற்றவர்க்கு ஆதரவாக, ஆறுதலாக இருங்கள், பிறரோடு உணவைப் பகிர்ந்து கொள்ளுங்கள் என்றார். நம்மால் இது எப்படி முடியும் என்ற கேள்வியோடு பெண்கள் இருவரும் துக்கத்தோடு சென்றுவிட்டனர்.

இந்தப் படைப்பு, உலகம், பூமி, உயிரினங்கள் கடவுளுக்குச் சொந்தமானது. நாம் பூமியில் பயணம் செய்யும் பயணிகள் வாழ்கின்ற காலங்களில் கடவுளோடும், இயற்கையோடும் ஒன்றிணைந்து சார்பு நிலையைக் கற்றுக்கொண்டு படைப்புகளோடு இறைவன் செய்த உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டு, கீழ்ப்படிந்து, பண்படுத்திப் பாதுகாத்து வாழுவோம். இறையாசி நம்முடன் என்றும் நிறைவாய் இருப்பதாக, ஆமென்.

ᗡ	ஞா. 72	கீர். 72

அருள்திரு. S. கிறிஸ்டோபர் ஏசுமணி
சேகர ஆயர், ஆற்றூர்

இறைவேண்டல் படைப்பாளரான கடவுளே, உமது படைப்பில் உள்ள எல்லாவற்றிற்காகவும் நாங்கள் உம்மைப் புகழ்ந்து, உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகின்றோம். ஒருவரையொருவர் சார்ந்திருப்பதன் முக்கியத்துவத்தையும், எங்களை நீர் படைத்ததின் முக்கியத்துவத்தையும் நாங்கள் உணர எங்களுக்கு ஞானத்தைத் தந்தருளும். சுயநலம் மற்றும் பேராசையிலிருந்து எங்களை விடுவித்து, உமது படைப்பின் நல்ல பொறுப்பாளராக இருக்க எங்களுக்கு உதவி செய்யும். நாங்கள் ஒரு பொருளுள்ள வாழ்வு வாழவும், ஒருவரையொருவர் சார்ந்து இருக்கவும் போதுமான ஞானத்தையும் அறிவையும் எங்களுக்குத் தர வேண்டுகின்றோம். உம்மோடும் தூய ஆவியரோடும் வாழ்ந்து, ஒரே கடவுளாக, இப்போதும் என்றென்றும் ஆட்சி செய்யும் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம், ஆமென்.

படைப்பின் சீர்கேடு

The Corruption of Creation

எசா. 5: 1-13 கலா. 1: 5-10

தி.பா. 8 லூக். 10: 13-16

"உமது கை படைத்தவற்றை அவர்கள் ஆளும்படி செய்துள்ளீர்"

தி.பா. 8: 6

இறைவன் படைப்பாளர் (தொ.நூ. 1: 1). விண்ணுலகையும், மண்ணுலகையும், மரம், செடி, கொடி, பறவைகள், விலங்கினங்கள் என அனைத்தையும் தம் ஆற்றல்மிகு வார்த்தையினால் படைத்து, மானிடரை தம் உருவிலும் தம் சாயலிலும் உண்டாக்கினார். பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்பி, அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்தி, கடல் மீன்கள், வானத்துப் பறவைகள், நிலத்தில் உயிர் வாழ்வன என அனைத்தையும் ஆளுங்கள் (தொ.நூ. 1: 8) எனக் கூறி அதிகாரப்படுத்தி, ஆசி வழங்கினார். ஆயினும் மனிதர் தமது பேராசையினால் கீழ்ப்படியாமை (மீறுதல்) எனும் பாவச் செயலுக்குக் கீழ்ப்பட்டு, தனது அதிகாரத்தையும், அந்தஸ்தையும், ஆசியையும் இழந்து போயினர். இதன் விளைவாக வேதனை (வ. 16), வருத்தம் (வ. 17), சாவு (வ. 19) எனும் சாப நிலைக்கு ஆளானதுடன், ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டனர். இப்படியாக, இறைவனின் படைப்பில் பழுது ஏற்பட்டது. இதனைத் திருமறை "பாவம்" எனும் சொல்லினால் சுட்டுகிறது. தொ.நூ. 6: 11, 12-இன் படி பூமி சீர்கெட்டதாயிருந்தது. அவர்கள் படைக்கப்பட்டவைகளை வழிபட்டுப் படைத்தவரை மறந்தார்கள் (உரோ. 1: 5). மனிதர் படைப்புகளின் உக்கிராணக்காரர் எனும் நிலையை மறந்து உரிமையாளர் எனும் நிலைப்பாட்டை எடுத்துக்கொண்டது சீர்கேட்டுக்கு இட்டுச் சென்றது. மண்ணுலகில் மனிதரை உருவாக்கியதற்காக ஆண்டவர் மனம் வருந்தினார். அவர் உள்ளம் துயரமடைந்தது (தொ.நூ. 6: 6). இறைவனின் மனவருத்தம் மற்றும் துயரத்துக்கானக் காரணிகள் குறித்து இன்றைக்குரிய திருமறை பாடங்களின் துணையுடன் அறிந்துகொள்ள முயல்வோம்.

1. எதிர்பார்ப்பில் ஏமாற்றம் : (ஏசாயா 5: 2)

"நல்ல திராட்சைக்குலைகள் கிட்டுமென எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தார்; மாறாக காட்டுப் பழங்களையே அது தந்தது."

திராட்சைத் தோட்டம் பற்றிய கவிதையில் (ஏசா. 5: 17) ஏசாயா இறைவாக்கினர் இஸ்ராயேல் மக்களுக்கு இறைவன் செய்தவைகள் அனைத்தையும் பட்டியலிட்டுக் காட்டுகிறார். இஸ்ராயேல் மக்களைப் பற்றிச் சொல்லப்பட்ட அனைத்தும் நமக்கும் பொருந்தக்கூடியனவாகக் காணப்படுகின்றது. என் நண்பருக்குத் திராட்சைத் தோட்டம் ஒன்றிருந்தது

(ஏசா. 5: 1) எனும் கூற்று "நாம் இறைவனுக்குச் சொந்தமானவர்கள்" என்ற உண்மையை உணர்த்துகிறது. நன்றாகக் கொத்திக் கிளறி கற்களைக் களைந்தெடுத்தார் (ஏசா. 5: 2) என்ற வார்த்தைகள், இறைவன் நம்மிலிருந்து அவசியமற்றவைகள் அனைத்தையும், அதாவது பாவக்கறைகள் அனைத்தையும் அகற்றிச் சுத்தப்படுத்தும் செயலைச் சுட்டிக் காட்டுகின்றன. நம்முடைய வாழ்க்கையில் வேதனைகள், துன்பங்கள் வருவதன் நோக்கம் நாம் இன்னும் நம்பிக்கையுள்ளவர்களாக, பலம் மிக்கவர்களாக, பலன் கொடுப்பவர்களாக மாறவேண்டும் என்பதற்காகவே. இதையே இறைமகன் இயேசு "மிகுந்த கனி தரும்படி கழித்துவிடுவார்" (யோவா. 15: 2) எனக் குறிப்பிடுகிறார்.

நல்ல இனத் திராட்சைச் செடிகளை அதிலே நட்டுவைத்தார். கோபுரம் ஒன்றைக் கட்டிவைத்தார். சுற்றிலும் வேலியடைத்தார். திராட்சை பழம் பிழியும் ஆலை ஒன்றையும் அமைத்தார். அத்துடன் நல்ல திராட்சைக் கிடைக்கும் எனும் எதிர்பார்ப்புடன் காத்திருந்தார் (ஏசா. 5: 3). இறைவன் நம்மை நல்லவர்களாக, தூய்மையானவர்களாக, திறமையுள்ளவர்களாக படைத்துள்ளதை இவைகள் நினைவுபடுத்துகின்றன. இறைவனின் எதிர்பார்ப்பில் ஏமாற்றமே மிஞ்சினது. இதனால் கடுமையானப் பின்விளைவுகள் ஏற்படும் என எச்சரிக்கப்பட்டனர் (ஏசா. 5: 5, 6). நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை, நான்தான் உங்களைத் தேர்ந்துகொண்டேன். நீங்கள் கனி தரவும், நீங்கள் தரும் கனி நிலைத்திருக்கவும் உங்களை ஏற்படுத்தினேன் (யோவா. 15: 16) என்றார் இயேசு. இறைவனின் எதிர்பார்ப்பு நம்மில் நிறைவேற முயல்வோம்.

2. எதிர்நோக்கில் தடுமாற்றம் : (லூக்கா 10: 16)

"உங்களுக்குச் செவிசாய்ப்பவர் எனக்குச் செவிசாய்க்கிறார்; உங்களைப் புறக்கணிப்பவர் என்னைப் புறக்கணிக்கிறார்; என்னைப் புறக்கணிப்பவர் என்னை அனுப்பினவரைப் புறக்கணிக்கிறார்."

அருள்நாதர் இயேசு வேறு எழுபத்திரண்டு சீடர்களை நியமித்து தாம் போகவிருந்த எல்லா இடங்களுக்கும் தமக்குமுன்னே இருவர் இருவராக அனுப்பினார். அருட்பணியின் அவசியத்தையும், அவசரத்தையும், ஆபத்துக்களையும் குறித்து விளக்கிக் கூறினதுடன், உடல் நலம் குன்றியோரைக் குணமாக்கி இறையாட்சி அவர்களை நெருங்கி வந்துவிட்டது (லூக். 10: 9) எனச் சொல்லச் சொன்னார். இறையரசின் செய்தியை ஏற்றுக்கொள்ள மறுத்த நகரங்களுக்குச் சாபம் வரும் என எச்சரிக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தினார் (லூக். 10: 13-16). தாவீது மனிதரின் படைப்பைக் குறிப்பிடும்போது, இறைவன் மனிதரைத் தமது சாயலிலே படைத்து மாட்சியையும், மேன்மையையும் அவர்களுக்கு முடியாகச் சூட்டியுள்ளார். படைப்புகள் அனைத்தையும் அவர்களுக்கு கீழ்ப்படுத்தி அவர்கள் ஆளும்படிச் செய்துள்ளார் (தி.பா. 8: 5, 6). ஆயினும் மனிதரின் பேராசை, கீழ்ப்படியாமை போன்ற சீர்கேட்டின் விளைவாக கடும் பின்னடைவுகளைச் சந்திக்க நேரிடும் என்பதனைச் சீடர்களும் தமது திருப்பணியில் தீவிரமாக எடுத்துரைத்தனர்.

மனம்திரும்ப மறுத்தால் வானளவாக உயர்வுபெற்ற கப்பர்நாகூமாக இருந்தாலும் பாதாளம் வரை தாழ்த்தப்படும் (லூக். 10: 14, 15) என்பதை அறிவுறுத்தினர்.

நற்செய்தி ஒன்றே, அது கிறிஸ்துவாகிய நற்செய்தி, கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தி, கிறிஸ்து அறிவித்த நற்செய்தி, அச்செய்தியைத் திரித்துக்கூற விரும்புகின்றவர்கள் சபிக்கப்படுக (கலா. 1: 8, 9) எனப் பவுலடியார் கடிந்துரைக்கிறார். நற்செய்தியாகிய இயேசு கிறிஸ்துவிலே நம்பிக்கைக் கொள்வோர் மீட்படைவார்கள் (தி.ப. 16: 31), நம்பிக்கையின் குறிக்கோள் ஆன்ம மீட்பு (1 பேது. 1: 9). இத்தகைய சிறப்பு வாய்ந்த நற்செய்தியினின்று மாறுபட்ட ஒன்றை யாராவது உங்களுக்கு அறிவித்தால் (கலா. 1: 9) ஏற்றுக்கொள்ள வேண்டாம் எனக் கலாத்திய சபை விசுவாசிகளை எச்சரித்தார் பவுலடியார். விசுவாசிகள் இறைவனால் அழைக்கப்பட்டவர்கள் (கலா. 1: 6). எதிர்நோக்கு கொண்டுள்ளனர். அதனில் தடுமாற்றம் ஏற்படாதவாறு தற்காத்துக்கொள்ள வேண்டிய பெரும் பொறுப்பு நமக்கு உண்டு.

நற்செய்தியாகிய கிறிஸ்துவை உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் பறைசாற்ற வேண்டிய (மாற். 16: 15) பொறுப்பையும், பெரும் சிறப்பையும் பெற்றுள்ள திருச்சபையின் திருப்பணிக்குச் செவிசாய்ப்பவர் எனக்குச் செவிசாய்க்கிறார். நற்செய்திப் புறக்கணிப்பவர் என்னையும், என்னை அனுப்பினவரையும் புறக்கணிக்கிறார் (லூக். 10: 16) என்கிறார் இயேசு. ஆக, படைப்பின் சீர்கேடு "பாவம்" எனும் இழிநிலைக்கு இட்டுச் சென்று "சாபம்" எனும் அழிவு நிலைக்கு அதாவது எதிர்பார்ப்பில் ஏமாற்றத்தையும், எதிர்நோக்கில் தடுமாற்றத்தையும் ஏற்படுத்தி, நற்செய்தியில் நம்பிக்கை கொள்வதினால் ஏற்படுகிற மீட்பை (இரட்சிப்பு) இழக்கச் செய்யும் அபாயம் உள்ளது. விழிப்புடன் விசுவாச வாழ்வை முன்னெடுத்துச் செல்ல முயல்வோம். தூயாவியார் துணைபுரிவார், ஆமென்.

அருள்திரு. D. ஜான் ஜெபதாஸ்

சேகர ஆயர், சேனம்விளை

ப	ஞா. 43	கீர். 333

இறைவேண்டல்

அனைத்து ஆற்றல் நிறைந்த கடவுளே, உமது மகிமையைப் பறைசாற்றும் உம்முடைய அற்புதமான படைப்பிற்காக நாங்கள் உமக்கு நன்றி கூறுகிறோம். எங்களின் பேராசை மற்றும் தவறானச் செயல்களால் உமது படைப்புகள் அனைத்தும் சிதைந்து, முழுமையை இழந்து கொண்டுயிருப்பதை நாங்கள் உணர்ந்து வருந்தி மனந்திரும்பும், நல்ல இதயத்தை எங்களுக்குத் தருமாறு உம்மிடம் மன்றாடுகிறோம். உமது படைப்பின் நோக்கத்தை நாங்கள் உணர்ந்து கொள்ள, உமது ஞானத்தை எங்களுக்கு தாரும். சுற்றுச்சூழல் நீதிக்காக நாங்கள் பாடுபடவும், இந்த உலகத்தை அனைத்து உயிரினங்கள் வாழும் அழகானப் புகலிடமாக மாற்றவும் எங்களுக்கு ஞானத்தை தாரும். உம்மோடும் தூய ஆவியரோடும் வாழ்ந்து, இப்போதும் என்றென்றும், ஒரே கடவுளாக, ஆட்சி செய்யும் எங்கள் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம், ஆமென்.

ஒற்றுமையருளும் ஆண்டவர்

கலாத்தியர் : 3:11-29

"கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள நீங்கள் யாவரும் ஒன்றாய் இருக்கிறீர்கள்" கலா. 3: 28.

மனித வாழ்வில் ஒன்றிணைந்த வாழ்வு என்பது சிதைந்து கொண்டிருக்கிறது. தொடக்கக் காலத் திருச்சபையில் அனைவரும் ஒன்றிணைந்த சமுகமாகக் காணப்பட்டார்கள். ஆனால் தற்காலத்தில் திருச்சபைகள் பல பிரிவுகளாகவும், திருச்சபைகளுக்குள்ளாக பல பிரிவுகளாகவும் காணப்படுகின்றன. இதைப்போல் குடும்ப வாழ்வும் சிதைவடைந்துள்ளது. உடன் பிறந்த சகோதரனையும் பகைக்கும் உலகச் சூழல் பெருகி வருகிறது. ஆனால் இறைமைந்தன் இயேசு கிறிஸ்து அனைவரும் ஒன்றிணைந்து வாழ இறைவேண்டல் செய்கிறார் யோவான்.17:21-23. உலகிலும் ஒற்றுமை வலுப்பெற மே 24 சகோதரர்கள் தினமும், ஜூலை 30 நண்பர்கள் தினமும்; மற்றும் ஆகஸ்ட் 4 சகோதரிகள் தினமும்; கொண்டாடப்படுகிறது. தற்கால இந்திய அரசியல் சூழலிலும் சமத்துவம்; என்ற சொல் பேச்சளவில் காணப்படுகிறது.

எசாயா.11:6-10 வரையுள்ள வசனங்கள் இறையாளுகையில் ஒன்றிணைந்த வாழ்வைச் சுட்டிக்காட்டுகிறது. அதனைப்போன்று திருமறையில் சொல்லப்பட்டுள்ள ஒன்றிணைந்த வாழ்வு அனைத்தும் மகிழ்வின் தருணங்களாகப் பதிவுச் செய்யப்பட்டுள்ளது. இந்நாளிலும் கடவுளின் அருளினால் புதிய மாதத்தைத் தொடங்குகிற நம் வாழ்விலும் ஆண்டவர் ஒற்றுமை வாழ்வை வாக்குப்பண்ணுகிறார்.

I. உறுதியினால் ஒற்றுமையருளும் ஆண்டவர்: (கலா. 3: 26)

திருத்தூதுவராகிய பவுல் யூதர்களால் கலாத்துவிலே உண்டான வேற்றுமை எண்ணங்களைக் கேள்விப்பட்டு இந்த வார்த்தைகளைப் பதிவுச் செய்கிறார். கிறிஸ்து இயேசுவின் மீது கொண்டுள்ள நம்பிக்கையால் நீங்கள் அனைவரும் கடவுளின் மக்களாய் இருக்கிறீர்கள் கலா. 3: 26. ஆண்டவர் ஆபிரகாமைத் தம்முடையவனாகத் தெரிந்துக்கொள்ளும்போது முன் அறியப்படாத கடவுளாக காட்சித் தருகிறார். அப்பொழுது இறைவன் ஆபிரகாமுக்கு அருளும் வாக்குறுதிகளை நாம் படிக்கின்றபோது அது தனிமனிதனுக்காய் அல்லாமல் பெரும் மக்கள் கூட்டத்தாருக்குச் சொல்லப்பட்ட வாக்குறுதிகளாகக் காணப்படுகிறது. தொ.நூ. 12: 2-இல் "உன்னை நான் பெரிய இனமாக்குவேன்" மற்றும் தொ.நூ. 12: 3-இல் "உன் வழியாக மண்ணுலகின் மக்களினங்கள் அனைத்தும் ஆசி பெறும்" என்ற அழைப்பு ஆபிரகாமுக்கு

கொடுக்கப்பட்டபோது அவர் ஆண்டவரின் மீது கொண்ட உறுதியினாலே அவைகளைப் பெற்றுக்கொண்டவராகக் காணப்படுகிறார். தொடக்கக் காலத் திருச்சபை வரலாற்றில் கிறிஸ்துவை உறுதியாய்ப் பற்றி வாழ்ந்த மக்களின் ஐக்கியத்திற்கே "கிறிஸ்தவர்" என்ற பெயர் கொடுக்கப்பட்டதை அறிந்துக்கொள்ளலாம். யோவான் 1: 12-இல் "அவரிடம் நம்பிக்கை கொண்டு அவரை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவருக்கும் அவர் கடவுளின் பிள்ளைகள் ஆகும் உரிமையை அளித்தார்" என்று படிக்கிறோம். கடவுள் தம்மிடம் உறுதி கொண்டிருப்போரை ஒன்றிணைக்கிறார். இதனைப் பவுல் "யூதர் என்றும், கிரேக்கர் என்றும், அடிமைகள் என்றும், உரிமைக் குடிமக்கள் என்றும் இல்லை; ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு இல்லை; கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள நீங்கள் யாவரும் ஒன்றாயிருக்கிறீர்கள்" என்று கலா. 3: 28-இல் கூறுகிறார்.

II. உரிமையினால் ஒன்றிணைக்கப்பட்டிருக்கிறோம்: (கலா. 3: 29)

கடவுள் தாம் தெரிந்துக்கொண்டவர்களுக்கு உரிமை தந்து வழிநடத்துகிறார். ரோமர் 8: 15-ஆம் வசனம் கடவுளை "அப்பா, தந்தையே" என்று அழைக்கும் உரிமை வாழ்வை நாம் பெற்றிருப்பதை விவரிக்கிறது. கலாத்தியர் 4: 6-7-இல் கடவுளின் ஆவி நம் உள்ளத்திலிருந்து "அப்பா தந்தையே" என்று கூப்பிடச் செய்கிறது. ஆகவே நாம் அவரின் பிள்ளைகள் மற்றும் அவரிடம் உரிமை உள்ளவர்கள். ஆகையால் இது கடவுளின் செயல் என்றும் பவுல் குறிப்பிடுகிறார். தூய யோவான் தனது நிருபத்தில்; "அவர் நம் மீது கொண்ட அன்பு அவரின் பிள்ளைகளாக நாம் அழைக்கப்பட தகுதிப்படுத்தியுள்ளது" (1யோவான் 3: 1) என்கிறார். எனவே நமக்கு இறைவனிடமுள்ள உரிமையின் வெளிப்பாடு "இறை மக்கள்" என்கிற பெரும் ஐக்கியத்தில் நம்மை ஒன்றிணைத்துள்ளது. பவுல் இந்த ஒன்றிணைந்த வாழ்வை உடலோடு ஒப்பிடுகிறார். ஒரு இல்லத்தில் பிள்ளைகள் ஒன்றிணைந்து வாழ பெற்றோர்கள் விருப்பங்கொள்வதுபோல இறைவனும் இறைமக்களாகிய நாம் இணைந்து வாழ விருப்பங்கொள்கிறார் (யோவான் 17: 21-23). அதனையே தென்னிந்தியத் திருச்சபை அடித்தளமாய்க் கொண்டு தொடங்கப்பட்டது என்பது சிறப்புக்குரியது.

ஆண்டவர் தமது அருளினாலே நமக்கு ஈவாய்த் தந்திருக்கிற இந்தப் புதிய மாதத்தில் அவரிடத்தில் உறுதியும், உரிமையுமுள்ள மக்களாய் வேற்றுமை எண்ணங்களில்லாத ஒன்றிணைந்த வாழ்வைச் சுதந்தரித்து நலமுடன் வாழ தூய ஆவியானவர் நம் அனைவருக்கும் துணை செய்வராக, ஆமென்.

திரு. ஆரோன் ராபின்

திருப்பணிவிடையாளர், Y.M.C.A. **நகர்**

ப	ஞா. 22	கீர். 282

02.03.2025 உயிர்ப்புத் திருநாளுக்கு முன்வரும் ஏழாம் ஞாயிறு

தவக்காலம்: ஒரு மீட்பின் காலம்

Lent : A Time of Redemption

எசா. 58: 1-14 உரோ. 2: 1-13

தி.பா. 6 யோவா. 5: 1-9

"...அவரது அளவற்ற பரிவையும் சகிப்புத்தன்மையையும் பொறுமையையும் ஏளனம் செய்கிறீர்களா? உங்களை மனம்மாறச் செய்வதற்கே கடவுள் பரிவு காட்டுகிறார் என்பது உங்களுக்குத் தெரியாதா?" (உரோ. 2: 4).

தமிழில் பெரும் பொழுது ஆறு வகைப்படும். அவையாவன: இளவேனில், முதுவேனில், கார், கூதிர், முன்பனி மற்றும் பின்பனி. ஆங்கிலத்தில் நான்கு வகைப்படும். அவையாவன: Summer (கோடைக்காலம்), Winter (குளிர்காலம்), Autumn (இலையுதிர்காலம்) மற்றும் Spring (வசந்தகாலம்). அடுத்தடுத்து வரும் இலையுதிர் காலத்திற்கும் வசந்த காலத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. இலையுதிர்காலம் - உதிர்க்கும்காலம், வசந்தக்காலம் - துளிர்க்கும் காலம். இலையுதிர் காலத்தைக் குறித்துச் சொல்லப்படும் ஓர் அறிவியல் உண்மை, மரமானது இலைகளை உதிர்ப்பதன் மூலம் தன்னில் உள்ள வேண்டாத நச்சு நிறைந்த பொருட்களைத் தன்னிலிருந்து வெளியேற்றுகிறது என்பதாகும். பின்னர் வசந்த காலத்தில் புதிய இலைகளும், தளிர்களும் துளிர்விடுகின்றன. எனவேதான் பசுமையான வசந்த காலத்தை எல்லோரும் விரும்புகின்றனர்.

அதுபோல, கிறிஸ்தவ வாழ்வில் ஆகாத தீயச் சிந்தனைகளும், செயல்களும் உதிர்ந்து, நற்செயல்களும், நற்சிந்தனையும் மலரும், துளிர்க்கும் வசந்தகாலமே தவக்காலமாகும். தவக்காலத்தைக் குறிக்கும் ஆங்கில வார்த்தையான 'Lent' என்பதற்கு வசந்தகாலம் (Spring Season) என்பது பொருள். தமிழில் வசந்தம் என்றால் மீண்டும் (புதிதாய்) பிறத்தல், புதுப்பித்தல், மறு சீரமைப்பு மற்றும் மலர்தல் எனப் பல பொருள்கள் உள்ளன. ஆன்மிக வாழ்வில் வசந்த காலமாகிய தவக்காலத்தில் புதிதாய் பிறக்க, நம்மைப் புதுப்பிக்க, மறு சீரமைக்க, மலர நமக்கு அழைப்பு தரப்படுகிறது.

சபை உரையாளர் 3: 1-இல் நாம் இவ்வாறு படிக்கிறோம்: ஒவ்வொன்றுக்கும் ஒரு நேரமுண்டு, உலகில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஒரு காலமுண்டு. இத்தகைய எல்லாக் காலங்களையும் எதிர்கொள்வதற்கு நம்மைத் தயாரிக்கும் காலம் தவக்காலம் ஆகும். இந்தத்

தவக்காலத்தில் கிறிஸ்து நமக்காக அடைந்த சிலுவைத் துன்பத்தையும், மரணத்தையும், அவரது உயிர்ப்பையும் நினைவுகூர்ந்து, நமது பாவ வாழ்வுக்காக மனம் வருந்தி மனமாற்றமடைந்து மீட்பை சொந்தமாக்கிக்கொள்ளவும், மீட்பின் முழுமையை நோக்கி முன்னேறிச்செல்லவும் ஆண்டவர் நம்மை அழைக்கிறார். இந்தத் தவக்காலத்தின் நோக்கம் குறித்து தியானிப்போம்.

1. தவறுகளை உணர்ந்து திருத்தங்களை ஏற்படுத்தும் காலம்: (எசா. 58:1-14)

எசாயா 58-ஆம் அதிகாரத்தில் இஸ்ராயேல் மக்களின் பாவத்தை எடுத்துக்கூற கடவுள் இறைவாக்கினரைப் பணிக்கிறார். அதில் இஸ்ரயேலர் நேர்மையானவற்றை செய்யாமல் கடவுளை அணுகிவர விழைவதை கடவுள் சுட்டிக்காட்டுகின்றார். பொதுவாக கடவுளை அணுகிவர இஸ்ரயேலர் செய்த பக்தி செயல்கள், 1) நோன்பிருத்தல், 2) கடவுளின் முன் தங்களை தாழ்த்துதல், 3) நாணலைப்போலத் தங்கள் தலையை தாழ்த்தி சாக்கு உடையையும், சாம்பலையும் அணிந்து கொள்ளுதல் (எசா. 58: 3, 5) போன்றவையாகும். ஆனால், இறைவாக்கினரின் கற்பித்தலின்படி இவை மட்டுமே கடவுளை நெருங்கிச் சேர்வதற்கு உதவாது. நோன்பிருத்தல் என்பது உண்ணாமல் மட்டும் இருப்பதல்ல. மாறாக, கொடுமைத் தளைகளை அவிழ்ப்பது, நுகத்தின் பிணையல்களை அறுப்பது, ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்புவது, எவ்வகை நுகத்தையும் உடைப்பது, பசித்தோர்க்கு உணவைப் பகிர்ந்து கொடுப்பது, தங்க இடமில்லா வறியோரை இல்லத்திற்கு அழைத்து வருவது, உடையற்றோருக்கு உடுக்கக் கொடுப்பது, உங்கள் இனத்தாருக்கு உங்களை மறைத்துக் கொள்ளாதிருப்பது ஆகிய இவைகளை கடைப்பிடிப்பதே ஆண்டவர் விரும்பும் நோன்பாகும்.

இஸ்ரயேலர் மேற்கூறியவைகளைப் பின்பற்ற கடவுளை அணுக விரும்பாமல் பிறரை சுட்டிக்காட்டி குற்றம் சாட்டுவது, பிறர் குறித்து பொல்லாதன பேசுவது அதாவது, பிறரை குற்றப்படுத்தி தங்களை நியாயப்படுத்துவதன் வழியாக கடவுளை அணுகிச் சேரலாம் என எண்ணினர். ஆனால், பிறரைக் குற்றப்படுத்துவதல்ல; தன் குற்றம் உணர்ந்து தவறுகளைத் திருத்திக்கொள்வதே உண்மையான பக்தி செயற்பாடு எனக் கடவுள் இஸ்ராயேல் மக்களுக்கு கற்றுத்தருகிறார் (எசா. 58: 6, 7). இயேசுகிறிஸ்து தமது மலைப்பொழிவில் பிறரை குற்றவாளிகள் எனத் தீர்ப்பு செய்யாதிருங்கள் என்று சொன்னதோடு மட்டுமல்லாமல் அவ்வாறு தீர்ப்பு செய்வோரை வெளிவேடக்காரரே என்று அழைத்து அவரவர் தம் குற்றம் உணர தம் குற்றத்தை திருத்திக்கொள்ள அழைக்கிறார் (மத். 7: 1-5). இந்தத் தவக்காலம் தவறுகளை உணர்ந்து அவற்றை திருத்திக் கொள்ளும் காலமாக அமையட்டும்.

2. தகவுகளை வளர்த்துக்கொள்ளும் காலம்: (உரோ. 2: 1-13)

உரோமையர் 2-ஆம் அத்தியாயத்தில் பவுலடிகளார் கடவுள் பாரபட்சம் அற்றவர் என்பதையும், சட்டமல்ல நல்ல தகவுகளே, நல்ல பண்புகளே

ஒருவரைக் கடவுளுக்கு ஏற்புடையவராக்கும் எனப் போதிக்கிறார். யூதர்கள் சட்டங்களை முன்னிறுத்தி தங்களைப் பிற இனத்தவரைக் காட்டிலும் உயர்ந்தோராகக் கருதிக்கொண்டனர். ஆனால் தங்களுக்கு இருக்கும் சமய, சமூக, நாடு சார்ந்த அடையாளங்களால் ஒருவர் கடவுளுக்கு ஏற்புடையவராகிவிட முடியாது. மாறாக, நல்ல தகவுகளை, விழுமியங்களை வளர்த்துக்கொள்பவரால் மட்டுமே கடவுளுக்கு ஏற்புடையவராக முடியும் என பவுல் ஆலோசனை வழங்குகிறார். கடவுளின் பரிவு, சகிப்புதன்மை, பொறுமை இவை அனைத்துமே நாம் மனம் மாறி நல்ல தகவுகளை நாம் வளர்த்துக்கொள்வதற்கான வாய்ப்பாக இருக்கின்றன (உரோ. 2: 4).

ஒவ்வொரு கிறிஸ்தவரிடம் காணப்படவேண்டிய நல்ல தகவுகளான மனமாற்றம், மன உறுதி, நற்செயல் புரிதல், மாண்பு ஆகியவைகளைப் பவுல் கற்பிக்கிறார். கொலோசே திருச்சபைக்குப் பவுலடிகளார் கிறிஸ்தவ விழுமியங்களைக் குறித்து விளக்கிப் பேசுகிறார் (கொலோ. 3: 12-14). கிறிஸ்தவ நற்சான்று என்பது நற்பண்புகளால் அணி செய்வதாகும்.

ஆண்டவர் இயேசுகிறிஸ்து மரமானது அதன் கனியினால் அறியப்படும் என்கிறார் (மத் 12: 33). நாம் நல்ல விழுமியங்களால், நற்பண்புகளால் அறியப்பட வேண்டும் என்பதே கிறிஸ்துவின் எதிர்பார்ப்பு. நாம் இந்தத் தவக்காலத்தில் பகைமை, விரோதம், வன்முறை, பொறாமை, எரிச்சல் போன்ற தீயப் பண்புகளைக் களைந்துபோட்டு, உறவைக் கட்டும் ஆன்மிகத்துக்கு அழகு சேர்க்கும் ஆண்டவருக்கு ஏற்புடையவராக்கும் நன்மை செய்தல், மன்னித்தல், ஒப்புரவாகுதல், சகித்தல் உள்ளிட்ட நற்பண்புகளை, நல்ல தகவுகளை வளர்த்துக்கொள்ள வேண்டும் என விரும்புகிறார்.

3. தன்னிகரற்ற இறையருளைப் பெறும் காலம்: (யோவா. 5: 1-9)

கடவுள் நமக்கு வழங்குபவைகளில் அவரது அருளுக்கு நிகரானவை எதுவும் இல்லை. அவரது அருளாலே நாம் இருக்கிறோம், இயங்குகிறோம், இறையாற்றல் பெறுகிறோம். இறை அருள் உலகு சார்ந்த எண்ணங்களையும், அளவீடுகளையும் தாண்டி செயல்படக் கூடியது. அதைத்தான் பெதஸ்தா குளக்கரையில் 38 ஆண்டு காலமாய் காத்திருந்து கிறிஸ்துவால் நலமாக்கப்பெற்ற மனிதனின் வழியாக அறிந்து கொள்கிறோம். இம்மனிதன் இயேசுகிறிஸ்துவின் வழியாக இறையருளைப் பெற்றுக்கொண்டான். 38 ஆண்டு காலம் என்பது அவனுடைய வாழ்வின் பெரும் பகுதியைக் காட்டுகின்றது. நோய்மையும், நீண்ட கால காத்திருப்பும், குளத்தில் முந்தி இறங்க இயலா அவனது நிலையும் அவனுக்குப் பெரும் வேதனையைத் தந்தன (யோவா. 5: 6,7). ஆனால், அக்குளக்கரையில் அமர்ந்திருந்து குளத்தை தூதர் கலக்கும்போது முந்தி இறங்கி நலம் பெற்ற நோயாளர்களைக் காட்டிலும் இவரே நிறைவான அருளைப் பெற்றுக்கொண்டார். இந்த உலகம் எல்லாவற்றிலும் முந்தி வருபவர்களுக்கே முன்னுரிமை தருகிறது. ஆனால்,

கடவுளின் அருள் இயலாமையினாலும், நோய்மையினாலும் முந்திச் செல்ல முடியாதவர்களுக்கு வழங்கப்படுகிறது. குளத்தில் இறங்கி நலம் பெற்ற எத்தனையோ மனிதர்களுக்குக் கிறிஸ்துவை காணும் பேறு கிடைக்கவில்லை. ஆனால், இவரோ கிறிஸ்துவால் விசாரிக்கப்படுகின்ற, குணமாக்கப்படுகின்ற பேற்றைப் பெற்றுக்கொண்டார். இவர் கிறிஸ்துவால் நலம் பெற்ற இடம் பெதஸ்தா. பெதஸ்தா என்றால் இரக்கத்தின் வீடு என்று பொருள். இம்மனிதன் பெதஸ்தாவில் கடவுளின் இரக்கத்தையும், அருளையும் கிறிஸ்துவின் வழியாக பெற்றுக்கொண்டான்.

இந்தத் தவக்காலம் இறையருளில் வளருகின்ற காலமாகவும், இறை அருளால் வாழுகின்ற காலமாகவும் நமக்கு அமையட்டும். ஆண்டவருக்கு அஞ்சி, அவருடைய அருளுக்குக் காத்திருந்து அதை உடைமையாக்கி நமது வாழ்வில் திருத்தங்களை ஏற்படுத்தி நற்பண்புகளில் மிளிர்வோமாக, ஆமென்.

பு	ஞா. 115	கீர். 137

அருள்திரு. A. கால்வின் தேவநேசன்

ஆயர், பேரை

இறைவேண்டல்

அருள் நிறைந்த எங்கள் மீட்பரே, நீர் எங்களை நேசிப்பதால், உமது மகனின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலம் எங்களை மீட்டுக்கொள்வதற்காக உலகத்துக்கு அனுப்பினதினால் நாங்கள் உமக்கு நன்றி கூறுகிறோம். உமது தொடர்ச்சியான மீட்புச் செயல்களுக்காக நாங்கள் உம்மைப் போற்றுகிறோம். கிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்கப்பட்டவர்களாக நாங்கள் வாழவும், எப்போதும் இரக்கத்தை விரும்பவும், உம்மோடு பணிவாக நடக்கவும் எங்களுக்கு அருள் தாரும். உம்மோடும் பரிசுத்த ஆவியரோடும் வாழ்ந்து ஆட்சி செய்யும் எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்துவின் மூலம் வேண்டுகிறோம், ஆமென்.

சிலுவை: பிறர் பொருட்டுத் துன்புற ஓர் அழைப்பு

Cross: A call to vicarious suffering

1அர. 17:12-24 பிலி. 2:1-11

தி. பா.102 மாற். 8:31-38

“ என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும்” (மாற். 8: 34).

ஆண்டுதோறும் தவக்காலத்தைச் சந்திக்கின்றோம், தவக்காலம் நமக்கு கற்றுத் தரும் பாடம் பல்வேறு படிநிலைகளை உள்ளடக்கியது ஆகும். சாம்பல் புதன் ஆகிய இன்று “பிறர் பொருட்டு துன்புற ஓர் அழைப்பு” என்ற கருப்பொருளில் தரப்பட்ட மறை வார்த்தைகளை அடிப்படையாக வைத்து கற்றுக் கொள்ள அழைக்கப்படுகிறோம்.

நெல்சன் மண்டேலா ஆப்பிரிக்க கறுப்பின மக்களின் விடுதலைப் போராளி, அவர் ஒரு முறை தன்னுடைய மனைவி, பிள்ளைகளோடு அமெரிக்காவில் பாஸ்ட்டன் நகரில் தங்கி இருந்தார். அடுத்த நாள் கறுப்பின மக்கள் ஏற்படுத்தியிருந்த கூடுகையில் பேசுவதற்காக அழைக்கப்பட்டிருந்தார். அன்றைய தினம் இரவு தொலைபேசியில் ஒரு அழைப்பு வந்தது. கறுப்பினத்தவனே நாளை மாலைக்குள் இந்த இடத்தை விட்டு நீ செல்லாவிட்டால் கொலை செய்யப்படுவாய். மண்டேலா மனம் தளர்ந்து போனார். இரவு வேளை, மனைவி பிள்ளைகள் நல்ல தூக்கத்தில் இருந்தனர். அவர் அவர்களை எழுப்ப விரும்பவில்லை. அங்கிருந்து எழுந்து சமையலறைக்குள் சென்றார். முழங்கால் பதித்து ஆண்டவரை நோக்கி மன்றாடினார். இறைவா எனக்கு ஏன் இத்தனை துன்பம், என்னால் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியவில்லை, உம்முடைய விருப்பத்தை நிறைவேற்றத்தானே போராடிக் கொண்டிருக்கிறேன் என்று வேண்டினார். சிறிது நேரத்தில் தன்னுடைய மனதில் குழப்பங்கள் நீங்குவதையும் தனக்குள் ஒரு அமைதி ஏற்படுவதையும் அவர் உணர்ந்தார். தன்னையும் அறியாமல் தனக்குள் ஒரு துணிச்சல் ஏற்படுவதைப் புரிந்து கொண்டார். துணிந்து போராடி கறுப்பின மக்களுக்கு விடுதலை வாங்கினார். பிறர் வாழ வேண்டும் என்பதற்காக அதன் பொருட்டு வந்த அத்தனை அவமானங்களையும், எதிர்ப்புகளையும், சிறை அனுபவங்களையும் சந்தித்தார். பிறர் வாழ்வுக்காக துணிந்து சிலுவையை ஏற்றுக் கொண்டார். தவக்காலத்தை சந்திக்கயிருக்கிற நாம் பிறர் பொருட்டு துன்புற ஆயத்தமா?

1. பிறருக்காக தன் நலன் மறுப்பவர் (மாற். 8: 34(a))

தன் நலன் துறந்து தனக்கானவைகளை அல்ல பிறருக்கானவைகளை நோக்குவானாக.

நமது ஆடம்பரங்கள், உணர்ச்சிகள், உணர்வுகள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதே தன்னல மறுப்பாகும். அது சுய அர்ப்பணம் செய்யுமாறு நம்மைத் தூண்டுகிறது. மகத்தான அர்ப்பண ஈடுபாடு கொண்டவர்களால் தான் தன்னல மறுப்பு மதிப்பினை உருவாக்கிக் கொள்ள முடியும். அது உலக பொருள்களிலிருந்து முற்றிலுமாக ஒருவரை விலக்கிக் கொள்ள செய்கிறது. அவரது மனம் புலன்கள் அறிவு ஆகியவற்றை இறைவனுக்கும் மற்றவர்களின் சேவைக்கும் அர்ப்பணிக்க செய்கிறது.

இன்பங்களையும், மன நிறைவுகளையும் தன்னல மறுப்பு எதிர்பார்ப்பது இல்லை. உன்னத இலட்சியங்களுக்காக அனைத்தையும் தியாகம் செய்வதற்கு வேண்டிய துணிச்சலைத் தன்னல மறுப்பு வழங்குகிறது. "தான்" என்ற ஆணவத்தையும், ஆசையையும் வெற்றி கொள்வதற்கு சிறந்த வழி தன்னல மறுப்பே ஆகும். கிறிஸ்து போதிக்கின்ற தன்னலமறுப்பு என்பது பிறர் மீட்படைய தன்னலம் வெறுப்பது ஆகும். "Bonhoeffer" என்னும் இறையியலாளர் தன் சுயத்திற்கு மரித்துப் போன ஒருவரால் தான் கிறிஸ்துவை உண்மையாய்ப் பின்பற்ற முடியும் என்று குறிப்பிடுகின்றார். தம்மைத் தாமே வெறுத்து விடுதல் என்பது நமது விருப்பங்களையும், திட்டங்களையும் கிறிஸ்துவின் விருப்பத்தையும், திட்டத்தையும் நிறைவேற்றுவதற்காக தவிர்த்து விடுவது ஆகும். இதைத்தான் திருத்தூதுவர் யோவான் தன் முதலாம் திருமுகத்தில் குறிப்பிடுகிறபோது (1 யோவான் 2: 15-17) பழைய மனிதனுக்குரிய இயல்பைக் களைந்து விடுங்கள் எனவும், உலகின் மீதும் அதில் உள்ளவைகள் மீதும் அன்பு கொள்ளாதிருங்கள் எனவும் பதிவு செய்கிறார். மேலும் உலகத்தில் அன்பு கூறுகின்றவனிடம் கடவுளின் அன்பு இல்லை. ஏனென்றால் உலகத்தில் உள்ளவைகளெல்லாம் கடவுளால் உண்டானவைகள் அல்ல, அவைகள் உலகத்தினால் உண்டானவைகள். உலகமும் அதின் ஆசையும் அழிந்து போகும். கடவுளின் விருப்பத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான் என்பதனைக் கற்றுத் தருகின்றார். இப்படிப்பட்ட தன்னல மறுப்பு வழியாகத்தான் கடவுளின் திருவுளத்தை ஆழமாக அறிந்து கொள்ளவும், நம்மை அவருக்கு அர்ப்பணிக்கவும் துணை நிற்கிறது. இது ஒரு துன்பம் என்பதைக் காட்டிலும் மனநிறைவை ஏற்படுத்தும் அனுபவமே. புனித பவுலடிகளார் கொலோசெயருக்குக் கடிதம் எழுதுகின்ற போது கொலோசெயர் 2: 11இல் கிறிஸ்துவோடு இணைந்து இருப்பதினால் அவர் வழியாய் விருத்தசேதனம் செய்யப்பட்டு ஊன் இயல்பைக் களைந்துள்ளீர்கள் என்கிறார். மேலும் எளிதாகப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால் (லூக்கா 10: 25-37) எனக்குப் பிறர் யார் என்று கேட்ட திருச்சட்ட அறிஞருக்குக் கிறிஸ்து மறுமொழியாக உவமை ஒன்றை கூறினார். வழிப்பயணத்தில் ஒருவர் கள்ளர் கையில் அகப்பட்டு அடித்து குற்றுயிராக விடப்படுகின்றார். அவ்வழியாய் வந்த குருவும்,லேவியரும் உதவி செய்யாது கடந்து சென்றனர். ஆனால் தொலைதூரப் பயணத்திற்குச் செல்ல வேண்டிய சமாரியன் அவர் மீது பரிவு கொண்டு, தன் பயணத்திற்குரிய நேரத்தையும், தன் பயணத்தில் பயன்படுத்தப்பட வேண்டிய திராட்சை மதுவையும், எண்ணெயையும் வார்த்து, அவரை சாவடிப் பொறுப்பாளரிடம் ஒப்படைத்துத் தன் பயணத்திற்காக

வைத்திருந்த பணத்தையும் கொடுத்து, பாதுகாப்பை உறுதி செய்கின்றார். இங்கு ஆண்டவர் இயேசு கிறிஸ்து சுட்டிக்காட்டும் பிறர் என்பவர் ,தன் நலன் துறந்த சமாரியனாகக் கண்டு கொள்ள முடிகின்றது. இறை மக்களாகிய நாம் இந்தத் தவக்காலத்தில் தன்னலம் மறுத்து, பிறர் நலன் காத்து வாழ அழைக்கப்படுகின்றோம்.

2. பிறருக்காகத் தன் வாழ்வை கொடுப்பவர் (மாற்: 8: 35(b))

"என் பொருட்டும் நற்செய்தியின் பொருட்டும் தம் உயிரை இழக்கும் எவரும் அதைக் காத்துக் கொள்வார்." பவுலடிகளார் பிலிப்பியருக்கு எழுதின திருமுகத்தில் குறிப்பிடுகின்ற போது (பிலி. 2: 2-4) தம்மைத் தாமே உயர்த்திக் கொள்ளும் தன்னல போக்கை விடுத்து, தம்மையே பலியாக்கிய கிறிஸ்துவின் மனப்பான்மையைத் தமதாக்க வேண்டும் என்கிறார்.

பிலி. 2: 5-11இல் கிறிஸ்து விண்ணகத்தந்தைக்குக் கீழ்ப்படிந்து தம்மையே சிலுவை சாவுக்குக் கையளித்தது தியாகத்தின் உச்சநிலையாகும். தன்னலத்தை மறுத்து கிறிஸ்து தம் உடலையும், உதிரத்தையும் நமக்கு கொடுத்து மனிதனுக்கும், கடவுளுக்கும் உள்ள உறவை நிரந்தர உறவாக்கினார். புனிதப் பவுலடிகளார் தன்னல மறுப்பின் வழி உருவான இந்த இறை உறவின் நெருக்கத்தினைப் பறைசாற்றுகின்ற போது, நான் கடவுளுக்காக வாழ்கிறேன். கிறிஸ்துவுடன் சிலுவையில் அறையப்பட்டிருக்கின்றேன். இனி வாழ்கின்றவன் நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் வாழ்கிறார். இறைமகனே என்மீது அன்பு கூர்ந்தார். எனக்காக தம்மையே ஒப்புவித்தார் (கலா. 2: 19-20) என்று குறிப்பிடுகின்றார். இந்தச் செய்தி பவுலுக்கும் கிறிஸ்துவுக்கும் மட்டுமல்லாது கிறிஸ்தவப் பற்றுறுதியாளருக்கும் கிறிஸ்துவுக்கும் இடையே உள்ள ஆழமான அன்பையும், நெருங்கிய உறவையும், உறுதியான நம்பிக்கையையும் அழுத்தமாக கோடிட்டு காட்டுகின்றது. இது பவுலடிகளாரைக் கடவுளுக்கு ஏற்புடைய மனிதனாகவும் கடவுளோடு நல்லுறவுள்ள பற்றாளராகவும் மாற்றியது, மட்டுமல்லாமல் அவரை ஒரு ஒப்பற்ற திருத்தூதராய் இந்த உலகினில் உயர்த்தியதென்றால் மிகையாகாது. இதன் அடிப்படை என்னவென்றால், தன்னுடைய கல்வி, பணம், புகழ் போன்ற தன் நலன்களை மறுத்து பிறருக்காகவும், கிறிஸ்துவுக்காகவும் தன் வாழ்வையே அர்ப்பணித்த சிறந்த ஒப்படைப்பின் பண்பாகும். அதாவது (பிலி. 3: 7-10) தனக்கு லாபமான எல்லாவற்றையும் நஷ்டம் என்று எண்ணி கிறிஸ்துவுடன் வாழ்கிறேன் என்பதற்கு அடையாளமாய் அவருடைய மரணத்திற்கு ஒப்பான மரணத்திற்குள்ளாகி, அவருடன் எழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படி எல்லாவற்றையும் நஷ்டம் என்று விட்டு, குப்பையுமாக எண்ணினார்.

பிலி. 1: 1 இல் பவுலடிகளாரின் அழைப்பின் சிறப்பு இறைமக்களின் தாழ்ச்சியும், தாராள உள்ளத்தையும் பிறருக்குத் தம்மையே கையளிக்கும் மனநிலையைக் கைக்கொள்ளவேண்டும் என்பதாகும் . மத். 19: 16-22இல் நிலைவாழ்வை பெற்றுக் கொள்வதற்கு வந்த இளைஞன் தன்னுடையவைகளை இழப்பதற்கு மறுத்தது மட்டுமல்லாது, தன் வாழ்வையே கிறிஸ்துவுக்காய் அர்ப்பணிக்க மறுத்து விட்டான் என்பதை உணர முடிகிறது. இதனுடைய விளைவு, "தான்" பெற்றுக்கொள்ள வேண்டிய நிலைவாழ்வை இழந்துவிட்டான்.

ஆகவே நாமும் இத்தவக்காலத்தில் நம் வாழ்வை உயர்வாக எண்ணி, தன்னலன் கருதி வாழ்வோமாயின் நிலையான நிலை வாழ்வையும், அதனுடன் கூடிய உயர்வையும் இழந்து போக நேரிடும். எனவே, தன் நல மறுப்புடன் பிறருக்காய் வாழ்ந்து இறையாசி பெற அழைக்கப்படுகின்றோம்.

தன்னல மறுப்பிற்கும், தன் வாழ்வைக் கொடுப்பதற்கும் முன்மாதிரியாக திகழ்ந்தவர் இயேசு கிறிஸ்து. அவர் (யோவா. 12: 23-25) தன் வாழ்வைக் கொடுத்து மாட்சி பெற வேண்டிய நேரம் வந்த போது, கோதுமை மணியானது மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அப்படியே இருக்கும். மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும். தமக்கென்று வாழ்வோர் தம் வாழ்வை இழந்து விடுவார். இந்த உலகில் தம் வாழ்வை ஒரு பொருட்டாகக் கருதாதோர், நிலைவாழ்வுக்குத் தம்மை உரியவராக்குவார் என்று தன் வாழ்வியலை சான்றாக்குகின்றார். ஆண்டவர் இயேசுவுக்குபின் வாழ்ந்த விழுதுகளான செபதேயுவின் குமாரன் யாக்கோபு வாளால் வெட்டப்பட்டும், சீமோன் பேதுரு சிலுவையில் தலைகீழாக அறையப்பட்டும் அல்பேயுவின் குமாரன் யாக்கோபு கல்லெறிந்தும், தோமா ஈட்டியால் குத்தப்பட்டும், அந்திரேயா பெருக்கல் வடிவ சிலுவையில் அறையப்பட்டும் பர்தலெமேயு தலைகீழாகச் சிலுவையில் தொங்கவிடப்பட்டும், உடலில் தோல் உரிக்கப்பட்டும், பிலிப்பு தூக்கில் தொங்கவிடப்பட்டும், மத்தேயு தலை வெட்டப்பட்டும், யூதா என்கின்ற ததேயு அம்புகளால் துளைக்கப்பட்டு சிலுவையில் அறையப்பட்டும், மத்தியா கல்லால் எறியப்பட்டும், சீமோன் சிலுவையில் அறையப்பட்டும் யோவான் எரியும் எண்ணெய் கொப்பரையிலும், தீயிலும் போடப்பட்டும் கொல்லப்பட்டனர். இவர்கள் பிறருக்காய் வாழ்வைக் கொடுத்தவர்கள் ஆவார். இவர்களுடைய வெகுமதி நிலை வாழ்வைப் பெற்றுக் கொள்ளுதலாகும் (மத். 19: 27-29). கிறிஸ்து, தன் எல்லா மேன்மைகளையும் துறந்து, பிறருக்காய்த் தன் வாழ்வையே அர்ப்பணித்து கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றினார். அவரைப் பின்பற்றி அவர் வழியாய் கடவுளைத் தேடுகின்ற நாமும், இந்த ஆண்டின் தவக்காலத்தில் தன்னலம் மறுத்து, பிறர் நலம் பேணி, பிறருக்காய் நம் வாழ்வை அர்ப்பணித்து வாழ்வோம்; இறையாசி பெறுவோம்; ஆமென்.

அருள்திரு. T. ஷாஜன்
ஆயர், மால்ட்புரம், திடல்

௩	ஞா. 188	கீர். 138

இறைவேண்டல்

இரக்கத்தின் கடவுளே, சிலுவையின் பாதையைத் தானாக முன்வந்து தேர்ந்தெடுத்த உமது மகன் இயேசு கிறிஸ்துவின் சீடர்களாக இருக்க எங்களை அழைத்தீர். ஒவ்வொரு நாளும் நாங்கள் சிலுவையைச் சுமப்பதில் நித்திய வாழ்வின் மகிழ்ச்சியைச் சிந்தனை செய்ய எங்களுக்கு உதவி செய்யும். எங்கள் துன்பத்தில் பலர் மீட்பின் மகிழ்ச்சியைப் பெறுவதற்காக, உமது மகனின் மீட்புப் பணியில் தீவிரமாக பங்கேற்க எங்களுக்கு ஊக்கம் தாரும். உம்மோடும் தூய ஆவியரோடும் வாழ்ந்து இப்போதும் என்றென்றும் ஆட்சி செய்யும் ஒரே கடவுளான எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாயிலாக வேண்டுகிறோம், ஆமென்.

தவக்கால புதன், வெள்ளி தியான அறிமுகம்

கருப்பொருள் : **அடையாளங்களில் அடையாளமாகும் கிறிஸ்து**

"இஸ்ரயேல் மக்களே, நீங்கள் இந்த வார்த்தைகளைக் கேளுங்கள். கடவுள் நாசரேத்து இயேசுவின் வழியாக உங்கள் நடுவில் வல்ல செயல்களையும் அருஞ்செயல்களையும் அடையாளங்களையும் செய்து, அவரை இன்னாரென்று உறுதியாகக் காண்பித்தார்" (தி.ப. 2: 22).

தவக்காலம் கடவுள் நமக்குத் தந்திருக்கும் அருளின் காலம். வாழ்க்கைப் பயணத்தில் பழையன களைதலும், புதியன ஏற்றலும் இயல்பானதே. தொலைதூரப் பயணத்துக்குப் பயன்படுத்தப்படும் வாகனங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டு இயக்கப்படுவதனைப் போன்று கிறிஸ்தவப் பற்றுறுதி வாழ்வு சுயப் பரிசோதனை செய்யப்பட்டுச் சரியான நீதியின் பாதையில் பயணப்பட அழைக்கப்பட்டுள்ளோம். கிறிஸ்துவினால் மீட்புக்குட்படுத்தப்பட்ட கடவுளின் மக்கள் வசனத்தில் வேரூன்றிக் கிறிஸ்துவில் ஒன்றிணைந்து ஆவியாரின் கனி நிறைந்த வாழ்வு வாழ இந்த வசந்த காலம் நமக்கு அருளப்பட்டிருக்கிறது. இவ்வருட்காலத்தில் கிறிஸ்துவைக் குறித்த புரிதலை ஆழப்படுத்தி, உலகிற்கு மீட்பராகக் கடவுளால் அனுப்பப்பட்ட ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து யார்? என்பதை யோவான் நற்செய்தி நூலிலிருந்து புரிந்துகொள்ள முற்படுவோம்.

இயேசுவை நேர்முகமாகக் கண்டிராத, யூதர்களால் துன்புறுத்தப்பட்ட இரண்டாம் தலைமுறைக் கிறிஸ்தவர்களுக்கு இயேசுவைப் பல நிலைகளில் விளக்க பலரும் முற்பட்டனர். ஆனால், யோவான் நற்செய்தி இயேசுவை அடையாளங்களால் இரண்டாம் தலைமுறைக் கிறிஸ்தவர்களுக்கு விளக்குகிறது. யோவானில் வல்ல செயல்கள் இல்லையா? என்ற வினா எழும்புவது இயல்பானதே. வல்ல செயல்களைக் (Miracle) குறிக்க வருகிற கிரேக்கச் சொல் டுனமிஸ் (δυναμις) என்பதாகும். ஆனால், யோவான் நற்செய்தியில் வல்ல செயல்கள் நடைபெறும் இடங்களில் வல்ல செயல்களுக்குப் பதிலாக அடையாளத்தை (Sign) குறிக்க வருகின்ற செமயோன் (σημειον) என்ற கிரேக்க மொழிச் சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது. யோவான் நற்செய்தியில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஏழு அடையாளங்களும் (யோவா. 2: 1-12, 4:43-54, 5: 1-9, 6: 1-15, 6: 16-21, 9: 1-12,

11: 1-54), அதனுடன் பிற்சேர்க்கைப் பகுதியில் வருகின்ற அடையாளமும் (21: 4-8) இயேசு யார் என்பதை அடையாளப்படுத்துகின்றன.

இயேசு கிறிஸ்துவைக் குறித்த வெளிப்பாடுகளை இப்பகுதியுடன் இணைத்தும், மேலும் அவரைக் குறித்து குறிப்பிடப்பட்டிருக்கும் கிறிஸ்தியல் கருத்தமைவுச் செய்திகளைத் தொகுத்தும் நமது சிந்தனை மொட்டுக்களை மலர விடுவோம். அவ்வாசனையால் இறைமக்களின் வாழ்வு கிறிஸ்துவுக்குள் நறுமணம் வீசுவதால் அமையட்டும்.

யோவான் நற்செய்தியில் "நீங்கள் அறியாத ஒருவர் உங்களிடையே நிற்கிறார்" (யோவா. 1: 26) என்று திருமுழுக்குனர் யோவான் இயேசுவை முதலில் மக்களுக்கு அடையாளப்படுத்தியதாகக் குறிப்பிட்டு, நிறைவாக "இயேசுவே கடவுளின் மகன்" (யோவா. 20: 31) என்று சான்றளிக்கிறது. இவ் ஆன்மிக வசந்த காலங்களில் யோவான் நற்செய்தி நூலில் சொல்லப்பட்டுள்ள "அடையாளங்களில் அடையாளமாகும் கிறிஸ்துவை"க் குறித்த புரிதலில் எழுதப்பட்டிருக்கும் தியானங்களைச் சிந்தனை செய்து தியானிப்போம். ஆண்டவர் அருளும் நிலைவாழ்வுக்குரியவர்களாவோம்.

"உண்மையில், என்னைப் பொறுத்தமட்டில் என் ஆண்டவராம் கிறிஸ்து இயேசுவைப் பற்றிய அறிவே நான் பெறும் ஒப்பற்ற செல்வம்" (பிலி. 3: 8)

அருள்திரு. S. கிரீஷ் குமார்

ஆயர், புல்லுவிளை

அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி

யோவான் 1: 19-34

> *"இதோ! கடவுளின் ஆட்டுக்குட்டி! ஆட்டுக்குட்டியாம் இவரே உலகின் பாவத்தைப் போக்குபவர்"* (யோவா. 1: 29).

ஜெர்மன் நாட்டிற்குச் சென்ற சுற்றுலா பயணி ஒருவர் அந்நாட்டின் எழிலைக் கண்டு வியந்து போனார். குறிப்பாக அந்நாட்டிலுள்ள வெர்னர் நகரில் இருந்த பேராலயத்தின் கோபுர உச்சியில் காணப்பட்ட ஆட்டுக்குட்டியின் உருவச்சிலை இவரது உள்ளத்தில் பல கேள்விகளை எழுப்பியது. தனது வழிகாட்டியிடம் இது குறித்து கேட்டார். எல்லா திருச்சபைகளின் கோபுர உச்சியிலும் இயேசு கிறிஸ்துவின் சிலுவை மட்டும் காணப்படுகிறது. ஆனால் இந்தத் திருச்சபையில் மட்டும் ஆட்டுக்குட்டி ஏன்? இதற்குப் பதில் தந்த வழிகாட்டி ஒரு உண்மையை அவருக்கு விளக்கிச் சொன்னார்; இந்தப் பேராலய கட்டுமானப் பணி முடிவுறும் தருவாயில் கோபுர உச்சியில் இரண்டு பணியாளர்கள் மும்முரமாக இறுதிக் கட்ட பணிகளைச் செய்து கொண்டிருந்தனர். அப்போது எவரும் எதிர்பாரா வண்ணம் ஒரு பணியாளர் தவறிக் கீழே விழுந்துவிட்டார். உடன் பணியாளரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. எப்படியும் அவர் உடல் சிதைந்து மரித்துப்போயிருப்பார் என நினைத்து இறங்கி வரும்போது அந்தப் பணியாளர் எந்தவித காயமுமின்றி நலமாக இருப்பதைக் கண்டார். அவரிடம் நடந்ததைக் கேட்டறிந்தார். அவரோ தாம் ஒரு ஆட்டு மந்தையின் மேல் விழுந்ததாகவும், அந்த மந்தையில் தாம் விழுந்த ஆட்டுக்குட்டி மரணமடைந்ததால் தான் பிழைத்துக்கொண்டேன் என்றும் கூறினார். அவருக்காகப் பலியான ஆட்டுக்குட்டியின் உருவமே இந்தக் கோபுர உச்சியில் இருப்பது என விளக்கமளித்தார்.

நமது சிந்தனைப் பகுதியிலும் முழுக்கு முனிவர் யோவான் தம்மிடம் வந்த இயேசுவை மண்ணுலக மீட்புக்காக அடிக்கப்படும் ஆட்டுக்குட்டி என அடையாளம் காட்டுகிறார். ஏதோ ஒருமுறை மட்டுமல்ல, மறு நாளிலும் இப்படியே அவர் அடையாளப்படுத்தி (யோவா. 1: 36) அனைத்து மக்களுக்கும் சுட்டிக்காட்டுகிறார். யோவான் வெளிப்படுத்தும் அடிக்கப்படும் ஆட்டுக்குட்டியாகிய இயேசுவில் வெளிப்படும் அடையாளங்கள் என்ன என்பதையும் அந்த அடையாளங்கள் நம்மில் வெளிப்படுகிறதா என்பதையும் தொடர்ந்து சிந்திப்போம்.

1. மீட்பின் அடையாளம் : (தொ.நூ.22: 13)

முழுக்கு முனிவர் யோவான் சுட்டிக்காடடும்அடிக்கப்படும் ஆட்டுக்குட்டியாகிய இயேசு, உலக மீட்பர் என்பதே மிகச் சிறந்த அடையாளமாகும்.

இஸ்ரயேலரின் வரலாற்றின் துவக்கமே அதாவது ஆண்டவர் பெயர் சொல்லி அழைத்த மூதாதையரின் தந்தையாகிய ஆபிரகாம், ஈசாக்கின் வாழ்வின் தொடக்க முதலே அடிக்கப்படும் ஆட்டுக்குட்டி மீட்பின் அடையாளமாக வெளிப்படுவதை நாம் மறை நூலில் காணமுடிகிறது. தம் ஒரே மகனைக் கர்த்தருக்கு பலியிட ஆபிரகாம் முன் வந்தபோது கடவுள் குறுக்கிட்டுத் தடைசெய்து ஈசாக்கிற்குப் பதிலாக அங்கே புதரில் சிக்குண்ட ஆட்டுக்கிடாயைக் காண்பித்து அதனைப் பலியிடச் செய்தார். அதனால் ஈசாக்கு மீட்கப்பட்டார்.

விடுதலைப்பயண நூல் அதிகாரம் 2, வசனம் 23-இல் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரயேல் மக்கள் ஒவ்வொருவரும் மீட்கப்பட்டு, தங்கள் மூதாதையருக்கு ஆண்டவர் வாக்களித்த நாட்டில் வந்தடைய பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டு அதன் இரத்தம் இஸ்ரயேலரின் வீட்டு நிலைக்காலில் பூசப்பட்டது. சங்கரிக்கும் தூதன் இந்த வீடுகளைக் கடந்து போனார். இதனால் எகிப்தியர் குடும்பங்களில் தலைமகன் அடிக்கப்பட்டு இஸ்ரயேலர் விடுவிக்கப்பட்டனர்.

இம்மண்ணில் பல்வேறு சூழல்களினால் ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, ஓரங்கட்டப்பட்ட உரிமை மறுக்கப்பட்ட மக்களின் வாழ்வு மீட்கப்பட்டு வாழ்வு பெறுவதற்காக அடிக்கப்படும் ஆட்டுக்குட்டியாக மேசியா வருவார் என்று இறைவாக்கினர் எசாயா 61: 1-இல் குறிப்பிட்டுள்ள ஆட்டுக்குட்டி இயேசுவே என யோவான் சுட்டிக்காட்டுகிறார். அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாகிய இயேசுவே நமது மீட்பின் அடையாளம்.

2. மன்னிப்பின் அடையாளம் : (யோவான் 1: 29)

திருமறையின் மையச் செயதி இரத்தம் சிந்துவதின் வழி பாவ மன்னிப்பு, இதற்காகவே அன்றைய நாட்களில் மிருகங்கள், பறவைகள் பலியிடப்பட்டு அதன் இரத்தத்தினால் மனிதருக்குப் பாவ மன்னிப்பு அருளப்பட்டது. மானிடரின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது என்பதால் இரத்தம் சிந்துதலுக்கு இரத்தம் சிந்துதலே பதிலாக அமைந்தது.

இஸ்ரயேலரின் பாவம் போக்க குற்ற நிவாரண பலியாக அடிக்கப்படும் ஆட்டுக்குட்டியால் அவர்களின் பாவம் முழுவதும் மன்னிக்கப்படுகிறது என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது.

அடிக்கப்படும் ஆட்டுக்குட்டி மன்னிப்பின் அடையாளம் என்பது பிந்தைய கால கருத்து என எணணலாகாது. தொ.நூ. 3: 21-இல் முதல் பெற்றார் தவறிழைத்தபோது அவர்கள் இறை திருமுன்னில் நிற்கக்கூடாமல் ஒழிந்து கொண்டனர். தங்களுக்கு இலைகளால் ஆடை அமைத்தனர். அந்நேரம் அவர்களின் பாவம் மன்னிக்கப்பட்டு அவர்கள் வாழ்வுபெற அங்கு ஒரு ஆடு அடிக்கப்பட்டு அதன் தோல் இவர்களுக்கு உடையாகக் கொடுக்கப்பட்டது. ஆம் கடவுள் சினமுடையவராக இருந்தாலும்தம் மக்களின் மீது கருணையுடையவராக மன்னிக்கிறவராக பரிதபிக்கிறவராக இருக்கிறார்

(1 யோவா. 2:1). கிறிஸ்துவின் இரத்தத்தால் பாவம் மன்னிக்கப்பட்டவர்களாகிய நாம் மற்றவர்களையும் மன்னிக்க கடன்பட்டவர்கள் என்பதை அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி அடையாளமாகக் காட்டுகிறது.

3. மாட்சியின் அடையாளம் : (1 பேதுரு 5: 4)

மீட்பின் அடையாளமாகவும், மன்னிப்பின் அடையாளமாகவும் வெளிப்பட்ட இயேசு கிறிஸ்து இந்த உலகத்தோடு முற்றுப்பெறுபவரல்ல அவர் மகிமையின் அடையாளமாகவும் இருக்கிறார் என்பதை அந்த முதல் அறிக்கையிலேயே யோவான் குறிப்பிடுகிறார். மந்தையும் மேய்ப்பரும் இஸ்ரயேலரைச் சுற்றி வாழ்ந்த பிற நாட்டினருக்கு அருவருப்பானவர்கள். இப்படிப்பட்ட சூழலில்தான் இயேசுவின் பிறப்பின் நற்செய்தி மந்தை மேய்ப்பருக்கே முதலில் அறிவிக்கப்பட்டது. இயேசுவுக்குப் பாதை செவ்வை பண்ணுபவராக வந்த யோவான் எலியாவின் ஆவியும் பலமும் உள்ளவராக இயேசுவை மகிமையின் அடையாளமாகச் சுட்டிக்காட்டுகிறார். ஆகவேதான் இதைக்கேட்ட அவரது சீடர்களில் இருவர் இயேசுவுக்குப் பின் சென்று போதகரே நீர் எங்கே தங்கியிருக்கிறீர் என கேட்டு அவரது மாட்சியைக் காண விரும்பினர் (யோவா. 1: 38-39).

சாலமோன் நாட்களில் பலியிடப்பட்ட ஆட்டுக்குட்டியின் இரத்தம் ஆலயத்தில் சிந்தப்பட்ட அந்நேரமே கடவுளின் மாட்சிமை ஆலயத்தை நிரப்பிற்று (1 குறி. 29: 11, 2 குறி. 7: 12). அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் நம் பாவம் மன்னிக்கப்படும்போது, அவரது ஆலயமான நம் உடலை அவரது மாட்சியால் நம்மை நிரப்புகின்றார். இதுவே பெந்தேகோஸ்தேயின் அனுபவமாகும். கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மிகப்பெபரிய மாட்சியின் அடையாளம். ஆட்டுக்குட்டியானவரின் திருமணத்திற்குத் திருச்சபையாகிய மணவாட்டி ஆயத்தமாக இருந்தால் மாட்சியில் பங்கடைய முடியும், நாம் அவரது மாட்சியில் பங்கடையவே அவர் அடிக்கப்படும் ஆட்டுக்குட்டியாக வந்தார்.

1865 ஏப்ரல் 19-ஆம் நாள் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் அவர்களின் இறுதி ஊர்வலத்தின்போது ஒரு கறுப்பின பெண்ணின் குரல் கூடியிருந்த அனைவரது கவனத்தையும் ஈர்த்தது. அது என்னவெனில், தன் 3 வயது மகனை தனது தலைக்கு மேலே தூக்கியவாறு, “அதோ அவர்தான் நாம் விடுதலையுடன் வாழ, சம உரிமையுடன் வாழ தம்மையே இழந்தவர், உனக்காகவே அவர் படுகொலை செய்யப்பட்டார்” என்பதுதான். நமக்கு மன்னிப்பு, மீட்பு, மாட்சி தரவே இயேசு அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானார். அவரது திருத்திட்டத்தை உணர்வோம். அவருக்காகச் செயல்படுவோம், நிலைவாழ்வில் பங்கடைவோம், ஆமென்.

பா	ஞா. 441	கீர். 273

திரு. P. ஐசக் ஜேக்சன்
இணை இயக்குநர், திருப்பணியர் நல்வாழ்வுத்துறை

மாற்றுருவாக்கத்தில் பெண்கள்

Women in Transition

எண். 27: 1-11 2 தீமொ. 1: 1-8

தி.பா. 62 மத். 1: 1-16

“ . . . ஆண்டவர் மோசேக்குக் கட்டளையிட்டபடி இது இஸ்ரயேல் மக்களுக்கு நியமமாகவும், விதிமுறையாகவும் விளங்கும்” எண். 27: 11(b).

பெண்கள் குடும்பத்திலும், திருச்சபைகளிலும், சமூகத்திலும், வாழ்வின் சூழ்நிலைகள் எல்லாவற்றிலும் இன்றியமையாதவர்கள். என்றாலும், தொன்றுதொட்டே அவர்களுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் எங்கும், எதிலும் சற்று குறைவாகவே காணப்படுகிறது. கடவுள், பெண்களை அவர்களுக்கேற்ற தனிச் சிறப்புடன் படைத்து, அவருடைய ஆளுகைக்குட்படுத்தியிருக்கிறார். வாழ்வின் சூழ்நிலைகளில் பாதிப்புகளும், சவால்களும் சந்திக்கும்போது ஒவ்வொரு பெண்ணும் தன்னிலை உணர்ந்து, கடவுளின் திருச்சித்தம் அறிந்து, விவேகத்துடன் நிதானமாகச் செயல்படும்போது நீதியும், நியாயமும் நிலைநாட்டப்பட்டு ஆசீர்வாதமான வாழ்வு உருவாகும் என்பதனைத் திருமறை நமக்குத் திட்டமாகக் காண்பிக்கிறது.

1. சட்டத்தை மாற்றிய பெண்கள் (எண். 27: 1-8)

கானான் தேசம் பகுக்கப்படுவதற்காக மக்கள் தொகை கணக்கெடுக்கப்பட்டது. மனாசே கோத்திரத்தைச் சேர்ந்த செலொபுகாத் என்பவருக்குப் புதல்வர் இல்லாத காரணத்தால் அவருடைய பெயர் கணக்கில் சேர்க்கப்படவில்லை. அதனால் அவருடைய குடும்பம் சுதந்தரத்தில் பங்குபெற இயலவில்லை. ஆகவே, அவருடைய ஐந்து புதல்வியரான மக்லாள், நோவாள், ஒக்லாள், மில்காள், திர்சாள் என்பவர்கள் தங்கள் தகப்பனின் பெயர் நிலைக்கும்படித் தங்களுக்குச் சொத்தில் பங்கு கொடுக்கப்பட வேண்டும் என்று மோசேயிடம் வேண்டுதல் செய்தனர். மோசே, இதனைக் கடவுளின் சந்நிதியில் கொண்டு சென்றார்.

ஆண்டவர் மோசேயிடம், செலோபுகாதின் புதல்வியர் கேட்பது சரியே; புதல்வர் இல்லாதபடியால் புதல்வியர் தங்கள் தகப்பனின் சொத்தில் பங்கு

பெறுவார்கள் என்று பதிலுரைத்தார். மேலும், இஸ்ரவேலில் கடைப்பிடிக்கப்பட்ட சட்டமானது மாற்றப்பட்டு, ஒருவர் புதல்வர் இல்லாமல் மரித்தால், அவருடைய சொத்து புதல்வியரைச் சேரும்; புதல்வியரும் இல்லாதிருந்தால். அவருடைய சகோதரரைச் சேரும்; சகோதரரும் இல்லாதிருந்தால், நெருங்கிய உறவினனைச் சேரும் என்று அமைந்தது (எண். 27: 8-11).

புதல்வர் இல்லாத தகப்பனின் சொத்தில் புதல்வியருக்குப் பங்கு உண்டு என்பதால் அதன் பின்விளைவுகளை எடுத்தியம்ப மனாசேயின் பாதி கோத்திரத்தாரின் பிரபுக்கள் மோசேயிடம் வந்தார்கள் (எண். 36-ஆம் அதிகாரம்). செலொபுகாதின் புதல்வியர்கள் வேறு கோத்திரங்களில் திருமணம் செய்வார்களானால் அவர்களுடைய சொத்து வேறு கோத்திரத்தாரைச் சேர்ந்துவிடும். யூபிலி ஆண்டில் அந்தப் பங்கு அவர்கள் சென்ற கோத்திரத்திற்கு நிரந்தரமாகிவிடும் என்று முறையிட்டார்கள். இதற்குத் தீர்வாக இஸ்ரவேலில் எந்தக் கோத்திரத்திலாகிலும், பெண்கள் சொத்தில் உரிமை பெற்றிருந்தால் அவர்கள் தங்கள் தகப்பனின் கோத்திரத்தில்தான் திருமணம் செய்யவேண்டும். இதன் மூலமாக ஒரு கோத்திரத்தைச் சேர்ந்த பங்கு வேறு கோத்திரத்தைச் சேராது என்றார்கள் (எண். 36: 5-11). செலொபுகாதின் புதல்வியர்கள் இதற்குக் கீழ்ப்படிந்து மனாசே கோத்திரத்திலேயே திருமணம் செய்தார்கள்.

இந்நிகழ்வின் வாயிலாகக் கற்றுக் கொள்பவை:

* பிள்ளைகள் தங்கள் தந்தையையும் தாயையும் மதிக்க வேண்டும் (வி.ப. 20: 12).

* நம்முடைய எண்ணங்களையும், விருப்பங்களையும், ஆசைகளையும் ஆண்டவருக்குத் தெரிவிக்க வேண்டும். அவைகள் அவருக்கு உகந்ததாயும், சித்தமானதாயும் இருந்தால் வாய்க்கப்பண்ணுவார். வீணானப் போராட்டங்கள், சண்டைகள், கலவரங்கள் தவிர்க்கப்பட வேண்டும்.

* பெரியவர்கள், பெற்றோரின் கட்டுப்பாடுகள் நமது நன்மைக்கே என்பதால் கீழ்ப்படிதல் வேண்டும்.

2. சத்தியத்தைப் போதித்த ஐனிக்கேயாள் (2 திமொ. 1: 1-8)

ஐனிக்கேயாள் தீமோத்தேயுவின் தாய். இவள் ஒரு யூத பெண்மணி. இவர்களுடைய இல்லத்தில் முதலாவது மீட்கப்பட்டவர் ஐனிக்கேயாவின் தாய் லோவிசாள். தாயின் மூலம் மீட்பின் நற்செய்தியாகிய சத்தியத்தை அறிந்துகொண்ட ஐனிக்கேயாள், இயேசு கிறிஸ்துவை ஆண்டவராக ஏற்றுக்கொண்டாள். அவர் மீது உறுதியான நம்பிக்கையுடையவளாகக் காணப்பட்டாள் (தி.ப. 16: 1). திமொத்தேயு, தன் தாயின் போதனைகளால் கிறிஸ்தவ விசுவாசத்தில் மேலான சத்தியங்களைக் கற்றுக்கொண்டார்.

அவர்கள் வாழ்ந்த காலத்தில் கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிப்பது சட்டப்படி குற்றமாகக் கருதப்பட்டது. இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவர்களாக மாறியவர்கள் உரோம அரசாங்கத்தால் துன்புறுத்தப்பட்டார்கள். கிறிஸ்தவ விசுவாசிகள் பலர் கொலை செய்யப்பட்டார்கள். கிறிஸ்து இயேசுவைப் போதித்து வந்த பவுல் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டிருந்தார். உரோமாபுரியில் சிறையிலிருக்கும்போது பவுல் திமொத்தேயுவுக்கு நிருபங்களை எழுதினார்.

நற்செய்தியை அறிவிப்பது உபத்திரவத்தைக் கொண்டு வரும், துன்பப்படக்கூடும், மரணத்தைக்கூட வருவிக்கும் என்று அறிந்திருந்தும் அச்சமில்லாமல் தன் மகனைச் சத்தியத்தை அறிவிக்க ஐனிக்கேயாள் ஊக்கப்படுத்தினாள்.

“தாயைப்போலப் பிள்ளை; நூலைப்போல சேலை” என்பது பழமொழி. தாயைப்போலவே பிள்ளை திமொத்தேயுவும் விசுவாசத்தில் உறுதியாயிருந்ததைப் பவுலடியார் புகழ்ந்து எழுதினார்.

* ஐனிக்கேயாளைப் போல தாய்மார், இயேசு கிறிஸ்துவில் கொண்ட விசுவாசத்தில் தங்கள் பிள்ளைகளை வளர்த்தல் அவசியம்.

* சத்தியபரனாகிய இயேசு கிறிஸ்துவின் பண்புகளில் பிள்ளைகள் வளர போதிக்க வேண்டும்.

* வார்த்தைகளில் உண்மை, உழைப்பில் உண்மை, வாழ்வின் ஒவ்வொரு சூழ்நிலைகளிலும் உண்மை என்னும் உத்தம குணம் பிள்ளைகளில் உருவாகச் சத்தியத்தைப் போதிக்க வேண்டும்.

* பெண்களின் திருப்பணித் தளம் அவர்களுடைய இல்லம்தான். பிள்ளைகளின் ஆத்தும ஆதாயமே அவர்களின் திருப்பணி. பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்கள் என்று கேள்விப்படுவதே அவர்களுடைய சந்தோஷமாயிருக்க வேண்டும் (3 யோவா. 4).

3. சந்ததியை மாற்றிய மரியாள் (மத். 1: 1-16)

இயேசு கிறிஸ்துவின் வம்ச அட்டவணையில் அவருடைய தாய் மரியாளும் இடம் பெற்றிருப்பது சிறப்பு. மரியாள் தூய ஆவியினால் கருவுருவதற்குக் கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்ட பாத்திரமாயிருந்தாள். அண்டசராசரங்களையும் படைத்த சர்வ வல்லமை பொருந்திய தூயவரான ஆண்டவர் ஒரு கருவாய், சிசுவாய் மரியாளிடம் வளர, அவளுடைய ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் கடவுளின் பார்வையில் ஏற்றதாய் அமைந்திருந்தது. தாழ்மை, பொறுமை, அடக்கம் ஆகிய அவளுடைய நற்பண்புகள் போற்றுதற்குரியன.

மத்தேயு எழுதிய இசேகிறிஸ்துவின் வம்ச வரலாறு ஆபிரகாமிலிருந்தும் (மத். 1: 1), லூக்கா எழுதியதில் ஆதாமிலிருந்தும் (லூக். 3: 38) ஆரம்பமாகிறது. இந்தச் சந்ததி மரியாள் பெற்றெடுத்த இயேசுகிறிஸ்துவினால் மாற்றியமைக்கப்பட்டது. எப்படியெனில் "அவரிடம் நம்பிக்கை கொண்டு அவரை ஏற்றுக் கொண்ட ஒவ்வொருவருக்கும் அவர் கடவுளின் பிள்ளைகள் ஆகும் உரிமையை அளித்தார்" (யோவான் 1: 12) என்றும், "கிறிஸ்து இயேசுவின் மீது கொண்டுள்ள நம்பிக்கையால் நீங்கள் அனைவரும் கடவுளின் மக்களாய் இருக்கிறீர்கள்" (கலாத். 3: 26) என்றும் கூறப்பட்டிருப்பதிலிருந்து மரியாளின் மகன் இயேசுவை விசுவாசிப்பவர்கள் அனைவரும் கடவுளுடைய பிள்ளைகள் என்னும் புதிய சந்ததியார், என்பதைப் புரிந்து கொள்கிறோம்.

* மரியாளிடம் காணப்பட்ட தாழ்மை, பொறுமை, அடக்கம் நம்மில் காணப்பட்டால் இயேசுநாதர் நம்மிலிருந்தும் வெளிப்படுவார்.

* நம் வார்த்தைகள் மட்டுமல்ல, விசுவாச வாழ்க்கையும் அநேகரை விசுவாச சந்ததிகளாய் மாற்றட்டும், ஆமென்.

பேரா. முனைவர். திருமதி. J. பெல்சியா செல்லையா

பேராயப் பெண்கள் சங்கத் தலைவி

ப	ஞா. 13	கீர். 351

இறைவேண்டல்

ஆணையும், பெண்ணையும் சமமாகப் படைத்த கடவுளே, உம் மக்கள் அனைவரும் சமத்துவ உணர்வுடன் வாழ அருள்புரியும். நீதிக்காய் குரல் கொடுத்து, உண்மை பேசி, அனைவரையும் கடவுளின் மக்களாக மாற்றுருவாக்கம் செய்ய ஆற்றல் அருள வேண்டுமென உம்மோடும், தூயாவியரோடும் ஒன்றிணைந்து செயல்படுகிற எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாயிலாக வேண்டுகிறோம், ஆமென்.

ஒடுக்கப்பட்டோரோடும் ஓரங்கட்டப்பட்டோரோடும் இருத்தல்

Being with Outcasts and Marginalized

எஸ். 4: 1-17 தி.ப. 15: 12-21

தி.பா. 43 மாற்கு 1: 40-45

"சட்டத்திற்குப் புறம்பே எனினும் நான் மன்னரிடம் செல்வேன், அழிவதாயின் அழிகின்றேன்" எஸ். 4: 16b.

டோல்ஸ்டோய் என்ற நாவலாசிரியர் ஒருநாள் காலை நேரம் நடைப்பயிற்சி செல்லும் வழியில் பிச்சைக் கேட்கும் ஒரு நபரைச் சந்தித்தார். பிச்சைக் கேட்டவரிடம் சகோதரனே உனக்குத் தருவதற்கு இப்போது என்னிடம் எதுவும் இல்லை என்றார். இதைக் கேட்ட பிச்சைக்காரன் கண்ணீர் சிந்தி அழுகிறான். அழுதவனிடம் நான் தவறுதலாக எதுவும் உன்னைப் பேசவில்லையே ஏன் அழுகிறாய் என்றார். அதற்குப் பிச்சைக்காரன் ஐயா என்னை யாரும் சகோதரனே என்று அழைத்ததில்லை. நீங்கள் மட்டுமே என்னைச் சகோதரனே என அழைத்தீர்கள் என்றானாம்.

நாம் வாழும் சமூகம் பணம், பதவி, இனம், நிறம், மொழி எனப் பிளவுபட்டுக் கிடக்கிறது. மனிதன் மனிதனை ஒடுக்குகிறான், ஓரங்கட்டுகிறான். ஒரு கூட்ட மக்கள் புறக்கணிக்கப் பட்டவர்களாய்ச் சமூகத்தில் வாழ்ந்தாலும் சகோதர உறவுக்காய், உண்மையான அன்புக்காய் ஏங்கி வாழ்கின்றனர். இச்சூழலில் ஒடுக்கப்பட்டோரோடும் ஓரங்கட்டபட்டோரோடும் இருத்தல் என்பது என்ன என்பதை இணைந்து கற்றுக் கொள்வோம்.

1. அழிவின் விளிம்பில் வாழ்வோரோடு தம்மை இணைத்தல் (எஸ். 4:1-17)

எஸ்தர் அகஸ்வேரு மன்னனின் அரியணையில் அரசியாகத் தெரிவு செய்யப்பட்ட நாட்களில் சிறைபிடிக்கப்பட்ட யூதரை அழிக்க ஆமான் மேற்கொண்ட இரகசியத் திட்டத்தை மொர்தெகாய் வழியாக அறிந்து கொண்டாள். தனது மக்கள் சந்திக்கப்போகும் மாபெரும் அழிவை எண்ணி துக்கம் கொண்டாள். தனது மக்களைக் காப்பாற்ற தீர்மானித்துத் தன்னை, தன் வாழ்வை முழுவதும் அர்ப்பணித்தாள், தன் மக்களது வாழ்க்கை அழிவிலிருந்து மீட்கப்பட தம் மக்களுடன் தன்னை இணைத்தாள். ஒரு அரசியாக அரசனுடன் வாழ்ந்து மகிழும் வாழ்க்கையைக் கூட தன் மக்களுக்காக இழக்க நேரிட்டால் இழக்கவும் தீர்மானித்தாள். தன் மக்களை விழிப்படையச் செய்தாள்.

நோன்பிருந்து இறைவேண்டல் செய்ய சொன்னாள். இன்று வன்முறைகளுக்குள் சிக்குண்டோர், வாழ்விழந்த விதவைகள், பெற்றோரை இழந்த சிறார்கள், பாலியல் வன்கொடுமைகளைச் சந்திக்கும் பெண்குழந்தைகள் இவர்களெல்லாம் அழிவின் விளிம்பில் வாழ்பவர்கள் அல்லவா. இம்மக்களுடன் நம்மை எஸ்தரை போல இணைத்து கொள்ள ஒரு அழைப்புத் தரப்படுகிறது. இங்கு நாம் காட்டும் அன்பு, இரக்கம், தியாகம் இவைகளே நாம் இவர்களுடன் இருத்தலை உறுதிப்படுத்துகிறது.

கடந்த காலங்களில் சென்னை வாழ்மக்கள் சந்தித்த தண்ணீர் பெருக்கு, தூத்துக்குடி மாவட்ட ஏரல் மக்கள் சந்தித்த தண்ணீர் பெருக்கு, ஆந்திர மக்கள் சந்தித்த தண்ணீர் பெருக்கு, கேரள மாநிலம் வயனாடு மக்கள் சந்தித்த நிலச்சரிவு இவைகளில் தங்கள் உறவுகளை, உடமைகளை இழந்தோர். இவர்களோடு திருச்சபை தன்னை இணைத்தது அல்லவா? நாங்களும் உங்களுடன் இருக்கிறோம் என்பதை உறுதி செய்தது அல்லவா? இன்றும் நம் கண்கள் எதிரில் தீமைகளால் தீண்டப்பட்டு அழிவின் விளிம்பில் வாழ்வோரோடு நம்மை இணைப்பதற்கு அழைக்கப்படுகிறோம்.

2. அடையாளமில்லாதவருடன் தம்மை அடையாளப்படுத்தல் (தி.ப. 15: 12-21)

புற இனமக்கள் பழைய ஏற்பாட்டுக் காலத்திலும், இயேசு நாதரின் நாட்களிலும் அடையாளமில்லாதவர்களாய்க் காணப்பட்டனர். யூதர்களால் ஒதுக்கப்பட்டு, ஓரங்கட்டப்பட்டு பாவிகள் எனப் பார்க்கப்பட்டனர். பழைய ஏற்பாட்டில் புற இனத்தவர்கள் இறைவனின் எதிரிகள் என்றும் இஸ்ரவேலர் அவர்களிடமிருந்து பிரிந்து வாழ வேண்டும் என்ற புரிதல் காணப்பட்டது. ஆனால் இறைவாக்கினரின் நூற்களைப் படிக்கின்றபோது மீட்பு என்பது புறஇனத்தாருக்கும் உரியது. கடவுளின் மீட்பின் திட்டத்தில் புறஇனத்தாரும் இணைந்து வருவர் எனக் குறிப்பிடப்படுகிறது (ஏசா. 60:16, செக். 14:16, ஏசா. 19:16-25, 66:18-21). தி.ப. 15:12-21 வசனங்களில் புறஇனத்தார் மனந்திரும்பி மீட்படைதலைக் குறித்து பேதுரு பேச புற இனத்தாரை எப்படி ஏற்றுக்கொள்வது என குழப்பமடைவோருக்கு யாக்கோபு ஆமோஸ் 9:12-ஐ சுட்டிக்காட்டிச் சொல்லும் வார்த்தைகளைப் பார்க்கலாம். விழுந்து கிடக்கும் தாவீதின் கூடாரத்தை மீண்டும் எழுப்புவேன். இங்குத் தாவீதின் கூடாரம் அன்று வீழ்ந்து போனாலும் மறுபடியும் எழுப்பப்படும். கூடாரத்துக்குள் வேற்று இனத்தாரும் இணைக்கப்படுவர் என எடுத்துரைத்தார். இங்குக் கடவுள் ஒரு இனத்துக்குரியவர் அல்லர். அவர் பிரசன்னத்தை ஒரு இனத்துக்குரியது என மறைக்க இயலாது. இஸ்ரயேலின் கடவுள் முழு உலகிற்குரியவர். யூதர்கள் எதிர்பார்க்கும் மேசியாவும் ஒரு இனத்துக்குரியவர் அல்லர். அனைத்துலக மக்களுக்குரியவர். இயேசுநாதர் புறஇனத்தாராய் யூதர்களால் பார்க்கப்பட்ட அடையாளமிழந்த மக்களுக்கு அடையாளம் தந்தார். கானானியப் பெண் (மத். 15:21-28), நூற்றுவர் தலைவர் (மத். 8:10), சகேயு (லூக் 19: 1-10) ஆகியோரை ஆபிரகாமின் குமாரர், குமாரத்திகள் என அடையாளப்படுத்தினார். தென் ஆப்பிரிக்காவில் அடையாளம் தேடிய, ஓரங்கப்பட்ட கறுப்பின மக்களுக்காய்ப் போராடிய நெல்சன் மண்டேலா 28 வருடங்கள் சிறைச்சாலை சென்றார். அவரது

எதிர்பார்ப்பெல்லாம் வெள்ளை இன மக்களுடன் கறுப்பின மக்களும் இணைந்து வாழும் வாய்ப்பு பெற வேண்டும்.பேராயர் டெஸ்மன் டுட்டு கறுப்பின மக்களின் பிரதிநிதியாய் நின்று சொன்னது "எங்களுக்கு அடையாளமே இல்லை; எங்களுடன் அடையாளப்படுத்த யாரும் முன்வரவில்லை, ஆனால் இயேசுவின் திருக்கரமே எங்களை அடையாளப்படுத்தியது." இன்றும் நாம் வாழும் சமூகத்தில் கற்றவர்களாலும், செல்வந்தர்களாலும் இரண்டாம் நிலையினராய் பார்க்கப்படும் ஏழைகள், விதவைகள், பெற்றோரை இழந்த பிள்ளைகள், புலம்பெயர்ந்து வந்தவர்கள், தங்களுக்கு அடையாளம் தேடி நிற்கின்றனர். இங்குத் திருச்சபை அனைவரையும் ஏற்றுக்கொள்கிறது என்பதை நினைவில் கொண்டு ஏழைகள், கைவிடப்பட்டோரைச் சமூகத்தில் அடையாளப்படுத்துவோம்.

3. அருகில் வர அனுமதி மறுக்கப்பட்டோரை தம் பக்கமாய் அணைத்தல் (மாற். 1: 40-45)

தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள், சமூகத்தில் சபிக்கப்பட்டவர்களாய் முன் நாட்களில் பார்க்கப்பட்டனர். இயேசுநாதர் காலத்திலும் தொழுநோயாளிகள் ஊருக்கு வெளியே வாழ வேண்டிய கட்டாயத்திலிருந்தனர். அருகில் வருவதற்கு அனுமதி மறுக்கப்பட்டனர்; புறக்கணிக்கப்பட்டனர், தனிமைப்படுத்தப்பட்டனர். ஒருநாள் தொழுநோயாளி ஒருவர் இயேசுவிடம் வந்து நீர் விரும்பினால் என் நோயை நீக்க உம்மால் முடியும் என்றான் (மாற்கு 1:40). அருகில் வர அனுமதி மறுக்கப்பட்டவன், தூரத்தில் துரத்தப்பட்டவன் இயேசுவிடம் நம்பிக்கையுடன் நெருங்கி வந்தான். இயேசுவும் அவனை அணைத்தார்.தொடக்கூடாதவனை இயேசு தொட்டு அவனைக் குணப்படுத்தினார் (மாற்கு 1:41). இப்பகுதியைப் படிக்கும் போது இயேசு நாதரின் பார்வை சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டவன் மீது திரும்பியது. அருகில் தேடி வந்தவனை அணைத்தது, அற்புதம் செய்தது, ஆற்றல்படுத்தியது என்பதைக் காணலாம். தொழுநோயாளி இயேசுவின் தொடுதலை அனுபவித்தான், விடுவிக்கப்பட்டான். சமூகத்தில் துரத்தப்பட்டு தூரமாக்கப்பட்டவன், அங்கீகாரம் பெற்று அருகில் வந்தான்.

அன்று ஊருக்கு வெளியே நொந்து உடலில் காயங்களோடு வாழ்ந்தனர் தொழுநோயாளிகள். ஆனால் இன்று சமூகத் தீமைகள் நடுவில் ஊருக்குள்ளே உள்ளத்தில் காயங்களோடு வாழும் மக்கள் எத்தனை பேர். மனதளவில் தொழுநோய் போன்று நடைபிணமாய் இல்லத்தில் முடங்கி கிடப்போர் ஏராளம்.

அன்னை தெரசா அம்மையார் சொன்னார்கள், "வெறுப்பது யாராக இருந்தாலும் நேசிப்பது நீங்களாக இருங்கள்". இப்படிப்பட்ட மக்களை நேசிக்கவும், அணைக்கவும் நாம் முன்வர வேண்டும். பசிபிக் மகா சமுத்திரத்தில் காணப்படும் ஹவாய் தீவுகள் கூட்டத்தில் மொலாக்காய் என்ற சிறு தீவில் தொழுநோயாளிகள் துரத்துண்டு, தனித்து விடப்பட்டிருந்தனர். அவர்களை ஆதரிக்க, யாரும் முன்வராத போது 1840ஆம் ஆண்டு அம்மக்களின் துயர் துடைக்க, ஒரு நண்பனாக அருகில் வந்தார் ஜோசப் டி வெஸ்டர் என

இயற்பெயர் கொண்ட டாமியன். பலர் தடுத்தாலும் தீர்மானத்தில் உறுதியாயிருந்தார். தனக்கு வரப்போகும் ஆபத்தைக் குறித்து கவலை கொள்ளவில்லை. அத்தீவில் வாழ்வில் காயங்களுடன் நம்பிக்கையிழந்து வாழ்ந்த தொழுநோயாளிகளின் நண்பனானார், நம்பிக்கை தந்தார். வீதியில் அலைந்தவர்களுக்கு வீடுகள் கட்டினார், மருத்துவமனைகள் கட்டினார். துன்பத்தில் துணையானார். ஒருநாள் தன் உடலில் கொதிநீர் சிந்தியபோது உணர்ச்சியற்றிருப்பதைக் கண்டு தன்னையும் தொழுநோய் தொற்றிக் கொண்டதை உணர்ந்தார். அன்று பிரசங்கித்தார் தொழுநோயாளிகளாக இருக்கும் நம்மேல் ஆண்டவர் அன்பாயிருக்கிறார். 1889 ஜனவரி 3-ஆம் நாள் இறையழைப்பை பெற்றார்.

அன்பர்களே, இவ்வுலகப் பயணம் குறுகியது. எத்தனை நாட்கள் வாழ்ந்தோம் என்பதை விட எப்படி வாழ்ந்தோம் என்பதே முக்கியம். நாம் வாழும் சமூகத்தில் ஒடுக்கப்பட்டவரோடு, ஓரங்கட்டப்பட்டவருடன் நம்மை இணைப்பதற்குக் கடவுள் நம்மைத் தெரிந்து கொண்டார். அழிவின் விளிம்பில் வாழ்வோரோடு நம்மை இணைக்கவும், அடையாளமில்லாதவருடன் நம்மை அடையாளப்படுத்தவும், அருகில் வர அனுமதி மறுக்கப்பட்டோரை நம் பக்கமாய் அணைக்கவும் பணிக்கப்பட்டிருக்கிறோம். இதை உணர்ந்து வாழ்வோம், மனிதர்களாய் வாழ்வோம். வாழ்வில் கிறிஸ்துவில் வெளிப்பட்ட அன்பு, இரக்கம், தியாகம் இவற்றை வெளிப்படுத்தி வாழ்ந்து இறையரசின் பாக்கியம் பெறுவோம், ஆமென்.

ப	ஞா. 12	கீர். 405

அருள்திரு. Y. லாறன்ஸ்

இயக்குநர், எளியோர் நல்வாழ்வுத்துறை.

இறைவேண்டல்

ஒதுக்கப்பட்ட மக்களோடு இருக்கும் மக்களின் கடவுளே, எங்கள் வாழ்வின் மையமும் நம்பிக்கையுமானவரே, புறக்கணிக்கப்பட்டவர் களிடமும், ஒதுக்கப்பட்டவர்களிடமும் உமது அன்பை வெளிப்படுத்தி நீர் அவர்களுக்கு அருள் செய்வதால் நாங்கள் நன்றி கூறுகிறோம். அனைவரையும் அரவணைக்கும் கடவுளின் அரசின் நற்செய்தியுடன் விளிம்புகளை மேம்படுத்த உமது மகன் இயேசு கிறிஸ்துவை இவ்வுலகில் அனுப்பியதற்காக நாங்கள் உமக்கு நன்றி கூறுகிறோம். நாங்கள் சேவை செய்யும் சமூகங்களுக்கு முழுமையைக் கொண்டு வர உம் அழைப்புக்கு அர்ப்பணிப்புடன் இருக்க எங்களுக்கு உதவி செய்யும். உம்மோடும் தூய ஆவியரோடும் வாழ்ந்து, இப்போதும் என்றென்றும் ஆட்சி செய்யும் ஒரே கடவுளான எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் வேண்டுகிறோம், ஆமென்.

இறையரசின் புதிய இரசம்

யோவா. 2: 1-11

> *"நீர் நல்ல இரசத்தை இதுவரை பரிமாறாமல் ஏன் வைத்திருந்தீர்?"*
> யோவா. 2: 10

நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை அறிய திருமறை மிகப் பெரிய ஆதாரம். அது மட்டுமல்லாமல் அவரின் அடையாளங்கள் அவரை நமக்கு யார் என அறிய மிகவும் உதவுகின்றது. நம் ஆண்டவரின் முதல் அடையாளம் தண்ணீர் இரசமாய் மாறும் நிகழ்வு. இதனைக் கொண்டு நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து யார்? என்றும் இறையரசில் புதிய இரசத்தின் பங்கு என்ன? என்பதனைக் குறித்தும் தவக்காலத்தில் நாம் சிந்திப்பது சிறப்பு.

மேசியாவைக் குறித்த மக்களின் எதிர்பார்ப்பு திருமறையில் அதிகம் உள்ளன. ஏசாயா 9: 6-9 மேசியாவின் தலைமையிலான அரசில் இழந்த நன்மையை மீண்டும் தருவார். அவரது ஆட்சிக்கு முடிவிராது. இறையரசை நிலைநாட்ட வந்த நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து தாம் செய்த முதல் அடையாளத்தில் மிக அழகாக தமதுப் பணியினை நினைப்பூட்டுகின்றார். அவரின் அடையாளம் ஏதோ மக்களை ஆச்சரியப்படுத்த வேண்டும் என்றில்லாமல் அவரின் அற்புத அடையாளம் வழியாக இறையரசின் தன்மைகளை முன்வைக்கின்றார். அவரின் முதல் அடையாளத்தில் புதிய இரசம் வழி நம்முடன் இன்றும் பேச விரும்புகின்றார்.

இந்த முதல் அடையாளம் கூறும் செய்தி ஆறு கல்தொட்டிகளில் கிறிஸ்து இயேசுவின் வார்த்தைப்படி தண்ணீர் நிரப்பப்படுவதையும், அது சுவைமிகு இரசமாய் மாறுவதையும் பற்றிக் கூறுகின்றது. அடையாளங்களால் நமக்கு அடையாளமாகும் நம் ஆண்டவர் இறையரசின் புதிய இரசம் (யோவான் 2: 1-11) நமக்குத் தரும் செய்தி என்னவென்று சிந்திப்போம்.

1. சுவை தரும் இரசம்

உலகில் எவரும் சுவைக்காத புதிய சுவைமிக்க இரசமாய்த் தன்னை அடையாளப்படுத்தும் ஆண்டவர் இயேசு கிறிஸ்து

மீட்பின் பணியில் புதிய உதயம் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து. உலகை மீட்க விரும்பிய கடவுள் பல நிலைகளில் முயன்றதை நம் திருமறை கூறுகின்றது. நோவா, முற்பிதாக்கள், நியாயாதிபதிகள், இறைவாக்கினர்கள் வழியாக மானுடம் மீட்படைய தம் சாயலைத் தக்கவைக்க முயன்றவர் நிறைவில் தம் மகனையே தரும் அளவு அவரின் அன்பு மிகப் பெரியது என்பதனையும் உணர்த்தினார். அந்த ஆண்டவர் தன்னை முதலில் அடையாளப்படுத்தும் நிகழ்வே கானாவூர் திருமண நிகழ்வு. இங்கு சுவை மிகு இரசமாய் தம்மைக்

காண்பிக்கின்றார் குறைவோடு இருந்த மக்களுக்குச் சுவையாய் மாறுகின்றார். கடவுளைத் தவறாய்ப் புரிந்த சமுகத்துக்குக் கடவுளைச் சுவைமிகுந்தவராய் காண்பிக்க முன்வந்தார். காரணம் சமயத்தலைவர்களின் தவறான சுயநலப் போதனையே. நம் ஆண்டவர் மலைப்பொழிவின் போதும் அவரின் மற்ற போதனைகளின் போதும் அவர் அதனை மறுவரையறைச் செய்வதைக் காணலாம்.

மத்தேயு 5: 17-18 திருச்சட்டத்தையோ இறைவாக்குகளையோ நான் அழிக்க வந்தேன் என நீங்கள் எண்ண வேண்டாம்; அவற்றை அழிப்பதற்கல்ல, நிறைவேற்றுவதற்கே வந்தேன். விண்ணும் மண்ணும் ஒழிந்து போகும்முன் திருச்சட்டம் யாவும் நிறைவேறும். அதன் ஒரு சிற்றெழுத்தோ ஒரு புள்ளியோ ஒழியாது என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்.

ஆம், நம் ஆண்டவர் நியாயாப்பிரமாணத்தை அழிக்க அல்ல; மாறாக அதைத் தவறாய் இறைமக்களிடம் கொண்டுச் சென்ற சமயத்தலைவர்களைக் கடிந்து கொள்கின்றார். கடவுள் எல்லா மனிதர்களிடமும் எவ்வளவு அன்புள்ளவர் என்பதனைக் காண்பிக்க விரும்பினார் அதை நிறைவேற்றவும் செய்தார். புதிய இரசம் புதுச் சிந்தனையுடன் கூடியது.

எடுத்துக்காட்டாக, **சினம்** கொள்ளுதலையும் கொலைச் செய்வதற்கு இணையாக்கினார் (மத். 5: 21-22).

விபச்சாரம் மட்டுமல்ல காமஉணர்வும் வாழ்வைக் கறைப்படுத்தும். எனவே இதயத் தூய்மை மிகவும் அவசியம் என்றார் (மத். 5: 27-28).

கண்ணுக்குக் கண்; பல்லுக்குப் பல் என்ற பழைய சட்ட நிலையின் தீமைகளை மாற்றி புதிய இரசமாகிய அன்பைப் பிரகடனப்படுத்தினார்.

கடவுளின் அன்பு என்பது பகைவரிடமும் அன்பு காட்டுவதாகும். “உனக்கு அடுத்திருப்பவரிடம் அன்பு கூர்வாயாக, பகைவரிடம் வெறுப்புக் கொள்வாயாக எனக் கூறியிருப்பதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நம் ஆண்டவர் கூறுகின்றார் பகைவரிடம் அன்பு கூருங்கள்” (மத். 5: 38-48). புதிய இரசம் மனித நேயம் மிக்கது.

மாற்கு 2: 27-இல் ஓய்வு நாள் மனிதனுக்காக நியமிக்கப்பட்டது என்று மனித நேயத்தை முன்வைக்கின்றார். கடவுள் மனித நேயம் அற்றவர் அல்லர் என்பதை ஓய்வு நாளில் சுகப்படுத்தி அவரின் தன்மையை வெளிப்படுத்தினார்.

ஆம், இந்தப் புதிய சுவை முன்பு எவராலும் கொடுக்கப்படாத சுவை, முன்பு எவரும் சுவைத்துப் பார்க்காத ஒன்று. நம் ஆண்டவரின் போதனையைப்போல் அவரின் முதல் அடையாளமும் முன்பு ஒருபோதும் இல்லாத ஒன்றாய் அமைந்தது. அப்படிச் சுவையேற்றப்பட்ட இரசம்தான் பந்தி மேற்பார்வையாளரிடம் கொண்டு போனபோது அவர் வியந்துபோனார்! மட்டுமன்றி, இந்த இரசம் மணவீட்டாரால் பாதுகாக்கப்பட்டு வைக்கப்பட்டது என்பது அவரின் எண்ணம். ஆனால், பணியாளர் அறிந்தனர் இந்த இரசத்தின்

காரணர் திருமணவீட்டார் அல்ல; மாறாக, அது நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவே. இதனால் ஆண்டவரின் சீடர்கள் அவர்மேல் அதிகம் நம்பிக்கைக் கொண்டனர். தாங்கள் பின்பற்றும் ஆண்டவர் இறைமகன் என்பதையும் அவரால் புதிய வாழ்வைத் தரமுடியும் என்பதும் அவர்களால் முதல் அடையாளத்தால் உணர முடிந்தது. கிறிஸ்துவும் அவரின் மாட்சியை இவ்வண்ணமாய் வெளிப்படுத்தினார் (யோவா. 2: 11).

2. வாழ்வு தரும் இரசம்

சடங்கின் வழியாய் கால்களை மட்டுமல்ல; தங்கள் வாழ்வையும் துய்மையாக்க வேண்டும் என்பதை ஆண்டவர் இயேசு கிறிஸ்து அடையாளப்படுத்துகிறார்.

யோவான் 2: 6-இல் யூதரின் தூய்மைச் சடங்குகளுக்குத் தேவையான ஆறு கல்தொட்டிகள் அங்கே இருந்தன. அவை ஒவ்வொன்றும் இரண்டு மூன்று குடம் தண்ணீர் கொள்ளும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுவாக யூதர்கள் தங்களைத் தூய்மைப்படுத்தும் சடங்கிற்கு அதிகம் முக்கியத்துவம் தருபவர்கள். இயேசு கிறிஸ்து கூட தொழுநோயாளியான சீமோன் வீட்டில் பந்தியிருக்கும்போது என் கால்களைக் கழுவ தண்ணீர் தரவில்லை என்று அடையாளப்படுத்துவதை நாம் அறிவோம் (லூக்கா 7: 44). இங்குத் தங்கள் கால்களைத் தூய்மைப்படுத்த பயன்பட்ட கல்தொட்டிகள் வீட்டின் வெளியே வைக்கப்பட்டவை. அவைகளில் இருந்து இப்போது சுவை மிகு இரசம் வந்தது, அதன் தன்மை இப்போது மாற்றப்பட்டது. கவனிப்பார் அற்றுக் கிடந்த கல்தொட்டிகள் ஆண்டவரின் அற்புதத்திற்கு பயன்பட்டது. வரலாற்றில் மிக முக்கிய இடத்தையும் பெற்றது. நாம் வாழும் உலகில் கிறிஸ்துவின் வருகையால் தன் பாவத்தால் மாட்சிமை இழந்த மானுடம், கிறிஸ்து பெற்றுதந்த மீட்பால் மதிப்பு பெற்றது. பாவத்தால் இழந்த இறைச்சாயல் மீண்டும் நிறைவானது. இராவிருந்தின்போது தம் இரத்தத்தை அடையாளப்படுத்த திராட்சை இரசத்தை உயர்த்தினார். திராட்சை இரசத்தில் துவங்கிய ஆண்டவரின் அரும் அடையாளம் திராட்சை இரசத்துடன் நிறைவு பெற்றது. அது நமக்கு மீட்பின் அடையாளமாகவும் மாறியது.

இன்று நாமும் தேங்கிய நிலையில் நாற்றம் வீசுபவாரக அல்ல; நறுமணம் வீசுபவராக நல்ல சுவைமிகு இரசங்களாக உருவாக்க விரும்பும் ஆண்டவரிடம் அர்ப்பணித்து அவரின் நல் அடையாளங்களாய் மாறுவோம், ஆமென்.

ப	ஞா. 126	கீர். 137

அருள்திரு. **Y. ஆமோஸ் ஆல்பர்ட்**

ஆயர், ஆனக்குழி

14.03.2025 **தவக்கால இரண்டாம் வெள்ளி**

நம்பிக்கையில் நலம் பெறுதல்

யோவா. 4: 46-54

இயேசு அவரிடம், "நீர் புறப்பட்டுப்போம் உம் மகன் பிழைத்துக் கொள்வான்" என்றார். அவரும் இயேசு தம்மிடம் சொன்ன வார்த்தையை நம்பிப் புறப்பட்டுப் போனார் (யோவா. 4: 50).

மனித வாழ்வின் உயிர் நாடி நம்பிக்கையாகும். அதாவது ஒருவர் உயிர் வாழ்வதற்கும், கடினமான காலங்களில் ஒருவரை வழிநடத்துவதும் நம்பிக்கையே. உன் வழியைக்கர்த்தருக்கு ஒப்புவித்து அவர்மேல் நம்பிக்கையாயிரு. அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார் (தி.பா. 37: 5).

நம்பிக்கையில் மூன்று வகைகள் உள்ளன.

1. தன்னம்பிக்கை - தன் மீது வைக்கப்படும் நம்பிக்கை

2. பிறர் நம்பிக்கை - உலகின் மீதும் மக்கள் மீதும் வைக்கப்படும் நம்பிக்கை.

3. இறை நம்பிக்கை - இறைவன் மீது வைக்கப்படும் நம்பிக்கை

இவையனைத்தும் ஒன்றோடொன்று தொடர்புள்ளவைகள். இந்த மூன்று நம்பிக்கைகளுமே திடமாக இருத்தல் வேண்டும். கடவுள் நம்மைப் பாதுகாக்கின்றார் என்பதை அறிந்துணரலே நம்பிக்கையுடன் இருத்தல் என்பதாகும். வாழ்க்கையை முன்னோக்கி நகர்த்த இது தேவையானதாகவும் போதுமானதாகவும் ஆகின்றது.

கானாவூரில் (யோவா. 2: 1-12) நடந்த திருமணத்தில் யூதர்களின் சார்பாக இயேசு கிறிஸ்து தன் திருப்பணியைத் தொடங்குகிறார். அதனைத் தொடர்ந்து சமாரியர்களை அரவணைக்கும் நோக்கத்தை விரிவுபடுத்துகிறார் (யோவா. 4: 1-42). பின்பு இயேசு மறுபடியும் கலிலேயாவிலுள்ள கானா ஊருக்கு வந்தார். அப்பொழுது கப்பர்நகூமிலே ராஜாவின் மனுஷரில் ஒருவனுடைய குமாரன் வியாதியாயிருந்தான். இயேசு யூதேயாவிலிருந்து கலிலேயாவிற்கு வந்தாரென்று அந்த மனுஷன் கேள்விப்பட்டபோது அவரிடத்திற்குப் போய், தன் மகன் மரண அவஸ்தையாயிருந்தபடியினாலே, அவனைக் குணமாக்கும்படி வரவேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டான். இயேசுவிடம் வந்த அரசு அலுவலர் மகன் நலம் பெற காரணமாக இருந்த அசைக்கமுடியாத நம்பிக்கையை இரண்டு சிந்தனையின் வழியாக தியானிப்போம்.

1 நம்பிக்கையோடு நாடி வந்தார்

மனித மனங்களில் ஏற்படும் நம்பிக்கைகள் பல நிலைகளில் இருக்கின்றன. அவை அவரவர் பிறக்கும், வளரும், வாழும், சூழல் மற்றும் சமூக

சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பொறுத்து ஏற்படுகின்றன. ஒருவர் கொண்டுள்ள நம்பிக்கை இன்னொருவருக்கு மூடநம்பிக்கையாகவும், தான் நம்பும் நம்பிக்கையே உண்மையானதாகவும் நினைக்கும் அல்லது கருதும் நிலையில் மனித மனங்கள் உந்தப்படுகின்றன.

இங்கே அரசு அலுவலர் மனுஷர் மகன் மரணத்தருவாயிலிருந்தான். அவர் தனதுமகனை மீட்க பல முயற்சிகள் செய்திருக்கலாம். ஆனால் எதுவும் பலனளிக்கவில்லை. கடைசியில் இயேசு அருகில் இருப்பதைக் கேள்விப்பட்டபோது அவரிடம் வந்தார். தன் கடைசி நம்பிக்கையை இயேசுவிடம் வைத்துவிட்டார். இயேசு அரசு அலுவலரின் வீட்டிலிருந்து சுமார் இருபது மைல் தொலைவில் இருந்தார். அரசு அலுவலர் கலிலேயாவின் ஆட்சியாளராக இருந்த ஏரோது அன்டிபாசுக்காக அதிகாரியாக இருந்தார். இயேசுவைப் பார்க்க அரசு அலுவலர் இவ்வளவு தூரம் பயணம் செய்தது மக்களை ஆச்சரியப்படுத்தியிருக்கலாம். காரணம் இறைப்பணி தொடங்குவதற்கு முன்பு, இயேசு ஒரு தச்சராகவே இருந்தார். ஆனால் மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்று அதிகாரி கவலைப்படவில்லை. அவரது மகன் இறந்து கொண்டிருந்தான். இயேசு தன் மகனுக்கு உதவ முடியும் என்பதை அந்த அதிகாரி நம்பினார். அதனால் அவரைத் தேடி அவருடைய உதவிக்காக மன்றாட வேண்டும் என்று அவர் இதயத்தில் தீர்மானித்து இயேசுவை நம்பிக்கையோடு நாடி வந்தார். ஆனால் இயேசு அவனிடம் நீங்கள் அடையாளங்களையும் அற்புதங்களையும் காணாவிட்டால் விசுவாசிக்கமாட்டீர்கள் என்றார் (வ. 48). அதற்கு அரசு அலுவலர் ஆண்டவரே, என் பிள்ளை சாகிறதற்குமுன்னே வரவேண்டும் என்று நம்பிக்கை வைத்து மறுபடியும் வேண்டிக்கொண்டான்.

2. நம்பிக்கையோடு திரும்பி சென்றார்

மறைந்திருக்கும் தைரியத்தையும், ஆற்றலையும் ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் நம்பிக்கை வெளிக்கொண்டு வருகின்றது. நாம் நினைப்பது சரியானது என்று நாம் உண்மையிலேயே நம்பினால், நம்பிக்கையானது நம்மிடம் உள்ள அனைத்தையும் கொண்டு அதைப் பாதுகாக்கும். உறுதியான நம்பிக்கை என்பது கடவுளை அவருடைய வார்த்தையில் ஏற்றுக்கொள்வதாகும். இயேசு அவரிடம் தம் வழியில் செல்லும்படி சொன்னபோது, அவனுடைய மகன் உயிரோடிருக்கிறான். இவன் இயேசுவை அவருடைய வார்த்தையை ஏற்றுக்கொண்டு நம்பினான். மாறாக இயேசுவே, அது போதாது, நீர் என் வீட்டிற்கு வரவேண்டும் என்று இயேசுவிடம் இந்த மனிதன் ஒருபோதும் சண்டையிடவில்லை. இயேசு தன்னிடம் சொன்ன வார்த்தையை அவர் வெறுமனே நம்பினார். இது உண்மையான, உறுதியான நம்பிக்கையின் அடையாளம். கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான் (எரே. 17: 7). இறை நம்பிக்கையுள்ளவருக்கு, கண்ணுக்குபுலப்படாத சக்தி மிக உயர்ந்ததாக இருக்கும்.

3. நம்பிக்கையால் நலம் பெற்ற மகன்

ஆண்டவருடைய இரட்சிப்புக்கு நம்பிக்கையோடு காத்திருக்கிறது நல்லது (புல. 3: 26). அனைத்தும் சரியாகும் என்னும் நம்பிக்கையிருந்தால் அனைத்துமே சரியாகும். கடவுள் அவர் சொல்வதைச் செய்வார் என்று நம்புவது எப்போதும் அதன் பலன்களைக் கொண்டுள்ளது. இந்த மனிதன் இயேசுவை நம்பாமல் இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும்? அவரது மகன் இறந்திருக்க வாய்ப்புள்ளது. ஆனால் அது நடக்கவில்லை. இந்த மனிதன் கடவுளை நம்பினதினால் அவனுடைய மகன் நலம் பெற்றான். இயேசுவிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வர் (யோவா. 11: 25).

இங்கே இந்த அதிகாரியின் நம்பிக்கை எவ்வளவு அதிகரித்திருக்கிறது என்பதைப் பார்ப்பது அருமையாக இருக்கிறது. முதலாவதாக, இயேசு தனது மகனுக்கு உதவ முடியும் என்று அவர் நம்பினார். எனவே, இயேசுவை தன்னுடன் கப்பர்நகூமுக்கு வரும்படி அவர் கேட்டுக் கொண்டார். இரண்டாவதாக, தன் மகன் வாழ்வான் என்ற இயேசுவின் வார்த்தைகளை அவன் நம்பி, இயேசுவின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து தன் வீட்டிற்குத் திரும்பினான். மூன்றாவதாக, அவர் தனது மகனுக்கு என்ன நடந்தது என்பதைப் பார்த்தார். பின்பு அவன் இயேசுவை முழுவதுமாக நம்பினான். அவனுடைய குடும்பத்தாரும் நம்பினார்கள்.

நாம் இறைவேண்டல் செய்யும்போது நமக்கு நம்பிக்கை இல்லாததால், பல சமயங்களில் நம்முடைய விண்ணப்பங்களுக்கு பதில் கிடைப்பதில்லை. நம்முடைய வேண்டுதலுக்குப்பதில் கிடைக்க வேண்டுமென்றால், கடவுளிடம் முழு நம்பிக்கையுடன் இறைவேண்டல் செய்யவேண்டும் என்று திருமறை நமக்குக் கற்பிக்கிறது. ஆகையால், நான் உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் எதை விரும்புகிறீர்களோ, நீங்கள் ஜெபிக்கும்போது, அவைகளைப் பெறுவீர்கள் என்று நம்புங்கள், அவை உங்களுக்குக்கிடைக்கும் (மாற்கு 11: 24) என்று இயேசு குறிப்பிட்டார், ஆமென்.

அருள்திரு. **P. ஆஸ்டின் சேம்**

ஆயர், தாழக்கன்விளை

ᏼ	ஞா. 118	கீர். 138

16.03.2025 உயிர்ப்புத் திருநாளுக்கு முன்வரும் ஐந்தாம் ஞாயிறு

பாவச் சுமையிலிருந்து விடுவித்தல்

Releasing from the Burden of Sin

2 சாமு. 12: 1 - 14 தி.ப. 8: 9 - 25

தி.பா. 32 மாற். 2: 1 - 12

இயேசு அவர்களுடைய நம்பிக்கையைக் கண்டு, முடக்குவாதமுற்றவரிடம், "மகனே, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன" (மாற். 2: 5)

உலகம் முழுவதிலும் வியாபித்திருக்கின்ற தீமையின் ஆற்றல்தான் பாவம் என்பது. பாவத்தின் சுமை என்பது பாவத்தினால் உண்டாகும் பாதிப்பாகும். இந்தப் பாவம் கிறிஸ்துவில் ஒருவர் சுதந்தரமாய் வாழக்கூடாதபடி, சுய வாழ்வில் தன்னம்பிக்கையுடன் நிமிர்ந்து வாழ முடியாதபடி அவன் பாவம் அவனுக்கு அதைச் சுமையாக்கி, அவனைப் பாவ வாழ்க்கை என்னும் நுகத்தில் பிணைத்து வழிநடத்துகிறது. இந்தப் பாவத்தின் பன்முகத் தோற்றங்கள் குறித்து திருமறையில் பல இடங்களில் காண இயலும். மேட்டிமையானப் பார்வை, இறுமாப்புள்ள உள்ளம் இவை பொல்லாரிடம் பளிச்சென்று காணப்படும் பாவங்கள் (நீதி. 21: 4), மூடர்களின் திட்டமே பாவம் (நீதி. 24: 9), உறுதியான மனநிலையோடு செய்யப்படாததெல்லாம் பாவமே (உரோ. 14: 23), ஆள்பார்த்து செயல்படுதல் பாவம் (யாக். 2: 9), நன்மை செய்யத் தெரிந்திருந்தும் செய்யாதிருப்பது பாவம் (யாக். 4: 17), சட்டத்தை மீறுவது பாவம் (1 யோ. 3: 4) என்று குறிப்பிடுவதோடு பாவம் செய்பவர் பிசாசைச் சார்ந்தவர் என்றும் (1 யோ. 3: 8) திருமறை குறிப்பிடுகிறது. பாவத்தின் அகோரத்தைப் புரிந்த இயேசுநாதர் பாவத்திலிருந்து பாவ மானிடரைக் கரையேற்றிப் பரலோக வாழ்வின் மகிழ்ச்சியில் பங்குபெற அனைவரையும் அழைக்கும் நோக்கில் இவ்வுலகம் வந்தார். தன் நற்செய்திப் பணியைத் துவக்குகின்றபோது "மனம் திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்றது" என அனைவருக்கும் அழைப்பு விடுத்தார். ஆனால், மனிதரோ இன்றும் பரலோக ராஜ்யத்தைவிட பாவ ராஜ்யத்தையே நேசித்து வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஒரு யூத பழமொழி ஒன்று இவ்விதமாகக் கூறுகின்றது. சொர்க்கத்திற்குச் செல்லும் வாசல் திறந்தே இருக்கிறது. ஆனால், அதன் வழி செல்வோர் சுருக்கம். நரகத்திற்குச் செல்லும் வாசல் அடைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், எல்லோரும் நரகத்தின் சுவர் ஏறிக் குதிக்கிறார்கள். அந்த அளவில் பாவம் மனிதனை அழிவிற்கு நேராக இழுக்கிற ஆற்றல் கொண்டுள்ளது.

போதகர் ஒருவர் எதிர்வரும் ஓய்வுநாள் தொழுகையில் எதைக் குறித்துப் பேசலாம் என்று சிந்தித்தவாறே சாலையில் நடந்துச் சென்று கொண்டிருந்தார். அப்போது அவர் ஒரு வித்தியாசமானக் காட்சி ஒன்றைச் சாலையில் கண்டார். வாலிபன் ஒருவன் முன்செல்ல அவனைத் தொடர்ந்து ஒரு கூட்டம் பன்றிகள் அவனுக்குக் கீழ்ப்படிந்து செல்வதுபோல அணிவகுத்துச் சென்றுகொண்டிருந்தன. அதே வேளையில் தன் திருச்சபை மக்களின் தாறுமாறான நடத்தைகளும், சபையில் அவர்கள் கட்டுப்பாடற்று செயல்படுவதுமெல்லாம் அவர் நினைவுக்கு வந்தன. ஆனாலும், இந்த வாலிபன் எங்குச் செல்கிறான் என அறிய அவரும் இந்தப் பன்றிகளுக்குப் பின்னால் நடக்கத் தொடங்கினார். இறுதியில் அந்த வாலிபன் ஊரின் கடைசிப் பகுதியில் அமைந்திருந்த ஓர் சிறிய அறைக்குள் சென்றான். அந்தப் பன்றிகளும் அவனைத் தொடர்ந்து அந்த அறைக்குள் சென்றன. உடனே அவன் அந்த அறையின் கதவை அடைத்தான். போதகர் அந்த அறையை உற்று நோக்கியபொழுது அதில் பன்றி இறைச்சிக் கடை என எழுதப்பட்டிருந்தது. நிமிட நேரத்தில் அந்த வாலிபன் வேறொரு வாசல் வழியாக வெளியே வந்தான். அவனைக் கண்டவுடன் அப்போதகர் அவனிடம் தம்பி இந்தப் பன்றிகளெல்லாம் எங்கிருந்து வருகின்றன? உன்னுடைய வழிகாட்டுதலில் அவைகள் கீழ்ப்படிதலுடன் உன்னோடு நடந்து வருகிறதே எப்படி? என்று கேட்டார். அப்பொழுது அந்த வாலிபன் சொன்னான்; ஐயா, இந்தப் பன்றிகளெல்லாம் இறைச்சிக்காக வளர்க்கப்படுபவை. இவைகளைச் சும்மா இழுத்தால் வராது. அதனால் அவைகளுக்கு விருப்பமான மரவள்ளிக்கிழங்கை அவைகளின் கண்கள் காணும்படி வைத்துக்கொண்டு நடப்பேன். அவைகளும் தாங்கள் எங்குச் செல்கிறோம் என அறியாமல் மரவள்ளிக்கிழங்கிற்கு ஆசைப்பட்டு என் பின்னால் அணிவகுத்து வருகின்றன. நானும் எளிதில் அவைகளைச் கசாப்பு செய்துவிடுவேன் என்றான்.

இதைக்கேட்டப் போதகருக்கு அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கானச் செய்தி கிடைத்துவிட்டது. “பாவ மோகத்தின் விளைவு” என்ற பொருளில் அவர் அருளுரையாற்றினார். கடவுளின் படைப்பான மனிதன் பரலோகில் இடம் பிடித்துவிடாதபடி அவர்கள் எதில் ஆசை கொண்டிருக்கிறார்கள் எனப் பிசாசு அறிந்து, அதைக் கொடுத்து நித்திய நரகத்தில் சேர்க்கிறான். மனிதரும் தங்கள் இறுதி நிலையை அறியாத நிலையில் அவன் பின்னால் கீழ்ப்படிதலோடு அணிவகுத்து சென்றுகொண்டிருக்கிறார்கள். அந்த வாலிபன் வேறொரு வாசல் வழியாக அந்த அறையை விட்டு வெளியே வந்ததுபோல, ஆண்டவரும் தம் மக்கள் பாவ கட்டுகளிலிருந்து வெளியே வரும்படி தம் சிலுவை மரணத்தின்வழி இரட்சிப்பு என்னும் வேறொரு வாசலை ஏற்படுத்தினார்.

1. பாவத்தைக் குறித்த உணர்வு பாவச் சுமையிலிருந்து விடுதலை பெற காரணமாயுள்ளது : (2 சாமு. 12: 1-14)

பாவத்தைக் குறித்த உணர்வுள்ள இருதயம்தான் ஒருவருக்குப் பாவத்திலிருந்து விடுதலை பெறுவதற்கு அவசியமானது. ஆண்டவரிடம் நம்

பாவத்தை அறிக்கையிடும்போது அவர் நம் பாவங்களை மன்னிக்கிறார் (தி.பா. 32: 5). தாவீது செய்த பாவம் அவருக்குப் பெரும் சுமையாயிற்று. அதை உணர்ந்து அறிக்கைச் செய்யாவிடில் இனி வாழ்வில்லை என்ற நிலை ஏற்பட்டது. தாவீது செய்த பாவத்தைக் குறித்தும் அதற்காக அவர் செய்த பாவ அறிக்கை குறித்தும் நாம் நன்கு அறிந்திருக்கிறோம் (2 சாமு. 12: 1-14, தி.பா. 51). தாவீதுக்குண்டான பாவத்தைக் குறித்த சுய அனுதாபம் இன்றும் அனேகர் தங்கள் பாவத்தைக் குறித்து சுய அனுதாபம் கொள்ளும் நிலைக்கு வழிநடத்தும் ஓர் ஆவிக்குரிய அனுபவமாய் மாறியுள்ளது. நம்முடைய தொழுகைகளில் பாவத்தை அறிக்கைச் செய்வதும் பாவ மன்னிப்பு பெறுவதும் ஒரு முக்கியமான பகுதியாயுள்ளது. ஆனால், இந்தப் பகுதி தொழுகையில் இடம்பெறும்போது தொழுகைகளில் கலந்துகொள்ள வேண்டியவர்களில் பெரும்பான்மையான விசுவாசிகள் ஆலயத்திற்குள் இல்லாதிருப்பார்கள் என்பது வேதனை தரும் காரியமாகும். காரணம் ஒன்றில் அவர்கள் ஆலயம் வருவதில்லை, அல்லது தாமதமாக வீட்டிலிருந்து புறப்பட்டுத் தாமதமாக ஆலயம் வந்துசேரும் வழக்கமுடையவர்கள். ஆராதனையில் பாவ அறிக்கை செய்யும் அந்த ஆவிக்குரிய அனுபவத்தைத் தங்கள் சிறுபருவம் முதலே அறிந்திராதவர்களே இந்தப் பெரும்பான்மையான சபை விசுவாசிகள் என்பவர்கள். இவர்களால் உலகிலும், திருச்சபையிலும் கிறிஸ்தவ வட்டாரங்களிலும் பாவம் பெருகுகிறதே ஒழிய, பாவம் செய்வது குறையவேயில்லை. இதனால் திருச்சபை விசுவாசிகளால் திருச்சபை புதிய சிக்கல்களைச் சந்தித்து வருகிறது. இது ஒருபுறம் நடக்க, மறுபுறம் ஆலயத் தொழுகையில் கலந்துகொள்ளும் ஏனையவர்கள் இந்தக் குறிப்பிட்ட வேளைகளில் கவனமற்று அமர்ந்திருப்பது இன்னொரு ஆச்சரியம். இது குறித்து திருச்சபைக்கு ஒரு மறு சிந்தனை அவசியம். பல நிலைகளில் நாம் அனைவரும் பாவிகளே. ஆகவே, நாம் அனைவரும் நம்மையே ஆராய்ந்தறிந்து ஒவ்வொரு நாளும் நம் பாவங்களைக் குறித்து சுய அனுதாபம் கொண்டு புதுப்பித்தலுக்கு நேராக நாம் கடந்துவர தாவீது அரசரின் இந்தப் பாவஅறிக்கை அனுபவம் நமக்கு ஓர் தூண்டுதலாக அமைந்திருக்கிறது.

2. மனம் திரும்புதலுக்கான நம் இறைவேண்டல் பாவச்சுமையிலிருந்து நமக்கு விடுதலை தருகிறது : (தி.ப. 8: 9-25)

மனம்திரும்பி நாம் ஆண்டவரிடம் பாவ மன்னிப்புக்காக மன்றாடும்போது பாவச் சுமைகளிலிருந்து நாம் விடுதலை பெற்றுக்கொள்கிறோம் (லூக். 15: 11-24). இயேசுவின் பணியாளரான பிலிப்பு என்பவர் சமாரியா பட்டணத்தில் செய்த இறைப்பணியின் நிமித்தம் அனேகர் இயேசுவை ஏற்றுக்கொண்டனர். சீமோன் என்ற மாயவித்தைக்காரனும் இயேசுவை ஏற்றுக்கொண்டான். அந்நாட்களில் இயேசுவின் சீடரான பேதுருவும், யோவானும் சமாரியாவுக்கு வருகை தந்தனர். அவர்கள் அங்கு வந்தவர்கள்மேல் தங்கள் கைகளை வைத்தபொழுது அவர்கள் அனைவரும் தூய ஆவியாரால் நிரப்பப்பட்டனர். இதைக்கண்ட மாயவித்தைக் காரனாகிய

சீமோன் அப்போஸ்தலர்களான பேதுருவுக்கும் யோவானுக்கும் பணம் கொடுத்து, எனக்கும் இந்த அதிகாரம் வேண்டுமெனக் கேட்டான். அதற்குப் பேதுரு சீமோனை எச்சரித்து அனுப்பினார் (தி.ப. 8: 20-22). தன் பாவத்தை உணர்ந்த சீமோன் மனத்திரும்பி எனக்காக ஆண்டவரிடம் வேண்டிக்கொள்ளுங்கள் என்று கேட்டுக்கொண்டார் (தி.ப. 8: 24).

3. பாவச் சுமையிலிருந்து விடுதலை என்பது ஆண்டவரால் நமக்கு அருளப்படும் ஆசீர்வாதம் : (மாற்கு 2: 1-12)

ஆண்டவர் ஒருவருக்கு மட்டுமே மனிதரைப் பாவத்திலிருந்து விடுவிப்பதற்கான அதிகாரமுள்ளது. சமயச் சடங்குகளுக்கும் சமயம் சார்ந்த ஆசரிப்புகளுக்கும் பாவத்திலிருந்து விடுதலை தரும் ஆற்றல் இல்லை. ஒரே மனிதனாலே உலகில் பாவம் பிரவேசித்ததுபோல ஒரே ஒருவராலே உலகில் விடுதலையும் ஏற்பட்டது (உரோ. 5: 12-17). பாவத்தை, ஆதாமின் மீறுதல் (உரோ. 5: 14), ஒருவரின் மீறுதல் (உரோ. 5: 15), ஒருவரின் பாவம் (உரோ. 5: 16), ஒரே மீறுதல் (உரோ. 5: 18) என்று முந்தின ஆதாமின் பாவம் குறித்து திருமறையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், பிந்தின ஆதாமாகிய இயேசுகிறிஸ்து மனுக்குலம் முழுவதற்குமாக விடுதலையைத் தந்தார். முடக்குவாதமுற்றவரைக் குணமாக்கவே அவரை இயேசுவிடம் கொண்டு வந்தனர். ஆனால், இயேசு அவரைக் கொண்டுவந்தவர்களின் நோக்கம் நிறைவாகும் பொருட்டு முதலுதவி சிகிச்சை போன்று முதலாவது அவனுக்கு பாவத்திலிருந்து விடுதலை தருகிறார் (மாற்கு 2: 9). காரணம், அவன் பாவத்தின் சுமை அவனை மேற்கொண்டு செயல்படவிடாமல் முடக்கிப்போட்டிருந்தது. ஆண்டவருக்கென்று வாழ அழைக்கப்பட்டவர்களாகிய நாம் கிறிஸ்துவுக்கென்று செயல்பட முடியாதபடி முடங்கிக்கிடப்பதற்குக் காரணம் நம் பாவத்தின் சுமை என அறியவேண்டும். பாவத்திலிருந்து விடுதலை பெறுவதுதான் மனுக்குலம் அவசரமாய்ப் பெற்றுக்கொள்ள வேண்டிய ஆசீர்வாதம். இயேசுவின் வழியாய் வாக்களிக்கப்பட்டதும் அதுதான் (மத். 1: 21). ஆமென்

ப	ஞா. 117	கீர். 278

அருள்திரு. P. சேம் இம்மானுவேல் தோமஸ்

ஆயர், கிறிஸ்துநகர், எருத்தாவூர்

இறைவேண்டல்

எல்லா இதயங்களையும், எல்லா விருப்பங்களையும் அறியும், அனைத்தாற்றலுள்ள கடவுளே, நாங்கள் புதுப்பிறப்பு அடைவதற்கு எங்களுக்கு ஞானத்தைத் தாரும். எங்களுடைய சரீரங்களைப் பரிசுத்தமாக நீர் ஏற்றுக்கொள்ளும். எங்களை நாங்கள் உயிருள்ள பலியாக ஒப்புவிக்கவும், தினமும் புதுப்பிக்கப்படவும் எங்களுக்கு உதவி செய்யும். இதுவே நாங்கள் எமது ஆன்மிக வழிபாடாக கருத எங்களுக்கு அருள்தாரும். உம்மோடும் தூய ஆவியரோடும் வாழ்ந்து இப்போதும் என்றென்றும் ஆட்சி செய்யும் ஒரே கடவுளான எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் வேண்டுகிறோம், ஆமென்.

இறையாட்சிக்குட்படுத்தப்படும் சிறுமந்தை

A Small Flock Subject to Theocracy

வி.ப. 2: 23 - 3: 8 தி.வெ. 21: 1 - 7

தி.பா. 95 லூக். 12: 25 - 24

"சிறுமந்தையாகிய நீங்கள் அஞ்ச வேண்டாம்; உங்கள் தந்தை உங்களை தம் ஆட்சிக்கு உட்படுத்த திருவுளம் கொண்டுள்ளார்" (லூக். 12: 32).

ஆப்பிரிக்க தேசத்தில் அடிமைவியாபாரம் தலைத்தூக்கி இருந்த காலம் அது. விலங்குகள் விலைக்கு வாங்கப்படுவதைப் போல மனிதனே சக மனிதனை அடிமையாகப் பணத்திற்கு வாங்கிச் செல்லும் அவலநிலை. அவர்களின் உரிமையும் முற்றிலும் மறுக்கப்பட்ட நிலை. இப்படிப்பட்ட ஒரு காலத்திலே ஒரு சிறுப்பெண் ஏலம் விடப்படுவதற்காக சந்தைக்குக் கொண்டுவரப்படுகிறாள். அவளுடைய கனவுகள் அனைத்தும் உடைக்கப்பட்ட நிலையிலே தன் பெற்றோரைச் சந்திப்பதற்கு அவர்களோடு இணைந்து வாழ்வதற்கு இனி தன்னால் முடியாது என்ற வலியோடு உடைந்து போய் கண்ணீரோடு நிற்கின்ற வேளையிலே ஒரு தனவந்தன் இந்தச் சிறுமியை ஏலத்தில் எடுக்கின்றார். அந்த மனிதன் இந்தச் சிறுபெண்ணின் ஏக்கங்களை அறிந்தவராய் அவளிடம் வந்து சிறுமியே அழாதே நீ அடிமையில்லை இனிச் சுதந்தரவாளி என்றார்.

நவீன உலகிலே வாழ்ந்து வருகிறோம். ஆனால் இன்றும் வாழ்வின் கடைநிலையிலிருக்கும் மனிதர்களின் வாழ்வு நிலைகள் மிகமிக வேதனையான ஒன்று. சமூகத்தில் உயர்ந்தவர்கள் எனத் தங்களை எண்ணிக் கொள்ளும் ஒருசாரார் வாழ்வின் கடைமட்ட மனிதர்களை ஒடுக்கி ஓரங்கட்டி அவர்கள் உரிமைகளைப் பறித்திடும் அவலநிலை (Minority People are constantly being marginalized by the upper Class).

நம் இந்திய தேசத்திலும் சமீப நாட்களில் இந்த நிலைகள் அதிகரித்திருப்பது வேதனைக்குரியது. தலித் மக்களுக்கு எதிரான வன்முறைகள், மணிப்பூர் மாநிலத்திலே ஏற்பட்ட கலவரங்கள் போன்ற பல நிகழ்வுகள் நம் தேசத்தில் தொடர்ச்சியாக அரங்கேறிக்கொண்டிருக்க அரசாங்கமோ தன் கண்களையும் செவிகளையும் மூடின நிலையில் இருப்பதையும் புரிந்து கொள்கிறோம்.

உலகம் இப்படிப்பட்ட நிலையில் சென்று கொண்டிருக்க ஆண்டவர் ஒதுக்கப்பட்ட சிறுமந்தையாகிய தம்முடையவர்கள் மீது அதிக

கரிசனையுடையவராய் அவர்கள் வாழ்வு நிலைகளை மாற்றுருவாக்கம் செய்பவராக இருக்கிறார். லூக்கா 12 : 32-இல் சிறுமந்தை உயர்த்தப்படும் என்றும் 1 கொரிந்தியர் 1: 27-இல் கடவுள் ஞானிகளை வெட்கப்படுத்த மடமை என உலகம் கருதுபவற்றை தேர்ந்துக் கொண்டார். அவ்வாறே வலியோரை வெட்கப்படுத்த வலுவற்றவை என உலகம் கருதுபவற்றை தேர்ந்துகொண்டார் என காண்கிறோம்.

சிறுமந்தையாகிய தம் மக்களை ஆண்டவர் எந்த நிலையிலிருந்து இறைஆளுகைக்கு உட்படுத்துகிறார் என்பதை பின்வரும் குறுந்தலையகங் களின் வழியாக சிந்திப்போம்.

1. உணர்வடையச் செய்து இறையாட்சிக்குட்படுத்தும் ஆண்டவர்

எகிப்தில் என் மக்கள்படும் துன்பத்தை என் கண்களால் கண்டேன்; அடிமை வேலை வாங்கும் அதிகாரிகளை முன்னிட்டு அவர்கள் எழுப்பும் குரலையும் கேட்டேன், ஆம், அவர்களின் துயரங்களை நான் அறிவேன் (வி.ப. 3: 7).

இஸ்ரவேல் மக்கள் யோசேப்பின் காலத்தில் சிறு மந்தையாகக் கானானுக்குச் செல்கின்றார்கள். அங்குச் சென்றபின் ஆண்டவர் தம்முடையவர்களை ஆசீர்வதித்ததினால் சிறுமந்தைப் பெருங்கூட்டமாக மாறுகிறது. ஆனால் அவர்களோ கடவுளை மறந்து அவருடைய திட்டத்திற்கு மாறாக அந்நிய தேசமாம் எகிப்தில் தங்கியிருப்பதையே மகிழ்வாக எண்ணினார்கள். எகிப்தியரும் தங்களை ஒரு பெரிய இன்னலில் இருந்து காத்த யோசேப்பை மறந்தார்கள். அவன் சந்ததியாரையும் மறந்தார்கள். இப்படிப்பட்டச் சூழலில் இஸ்ரவேல் மக்கள் மிகவும் சிறுமைப்படுத்தப்படுகிறார்கள் (வி.ப 3 : 7). சிறுமைப்பட்ட போது உணர்வடைந்தோராய் தங்கள் ஆண்டவரை நோக்கி கூப்பிட ஆரம்பிக்கின்றார்கள்.

ஆண்டவர் தம் மக்களை உணர்வடையச் செய்து இறையாட்சிக்கு உட்படுத்த அவர்கள் மத்தியில் இருந்தே ஒரு மனிதரை உருவாக்குகின்றார். உயர்வான சூழல் பின்னணியில் வளர்க்கப்பட்டாலும் மோசே தான் ஒரு சிறுமந்தையின் பிரதிநிதி என்பதை உணர்ந்து கொள்ளுகின்றார் (எபி. 11: 25). சிறுமைபடுத்தப்பட்ட மக்கள் உணர்வடைய சிறுமைப்பட்டிருந்த ஒருவராகிய மோசையைத் தலைவனாக உருவாக்கி வழிநடத்துகின்றார்.

நாம் கடவுளை மறக்கும்போது நாம் சிறுமைப்படுத்தப்படுகிறோம். தி.பா 53: 2,3-இல் கடவுள் விண்ணகத்தினின்று மானிடரை உற்றுநோக்குகின்றார். மதிநுட்பமுள்ளவர், கடவுளை நாடுபவர் எவராவது உண்டோ என்று பார்க்கின்றார். எல்லோரும் நெறிபிறழ்ந்தனர். ஒருமிக்க கெட்டு போயினர். இறைஉறவு பிரிக்கப்பட்ட நிலையில் உலகத்தாலே சிறுமையாக்கப்படுகின்றார்கள்.

ஆனால் சிறுமந்தையாய் சிறுமைபடுத்தப்படுத்தபட்டிருக்கும் நிலையில் உணர்வடைந்து ஆண்டவரை நோக்கி மன்றாட வேண்டும். சிம்சோன் கடவுளை மறந்தான், அவரைவிட்டு விலகினான், சிறுமைப்படுத்தப்பட்டான்.

ஆனால் எப்பொழுது உணர்வடைந்தானோ அப்போது அவனுடைய வேண்டுதல் அவனுக்கு அருளப்பட்டது.

ஆனால் இன்று நாமும் இறைவனிடமிருந்து பல நன்மைகளைப் பெற்றிருந்தும் இஸ்ரவேல் மக்களைப் போல (தி.பா. 95: 10) கடவுளைக் குறித்து உணர்வில்லாத அவலநிலையில் உள்ளோம். உணர்வடைந்து ஆண்டவரை நோக்கிப் பார்ப்போம். சிறுமைப்படுத்தப்பட்ட சிறுமந்தையாகிய நம்மை இறையாட்சிக்கு உட்படுத்துவார்.

2. உடனிருந்து இறையாட்சிக்குட்படுத்தும் ஆண்டவர்

கடவுள் தாமே அவர்களோடிருப்பார் அவரே அவர்களுடைய கடவுளாயிருப்பார் (தி.வெ. 21 : 3b).

உலகிலே வாழுகின்ற நம் அனைவருக்கும் இறை உடனிருப்பும் ஒத்தாசையும் மிகமிக முக்கியமானது. திவ்விய வாசகனாகிய யோவானுக்கு வெளிப்படுத்துகின்ற பொழுது தி.வெ. 21 : 3-இல் ஆண்டவர் சிறுமந்தையாகிய தம்முடையவர்களுக்கு தம் உடனிருப்பை உறுதிப்படுத்துகிறார். யோவானுக்கு இந்த வார்த்தை வெளிப்படும்போது சீடர்கள் எல்லாருமே இரத்த சாட்சியாக உயர்த்தப்பட்ட நிலை. இவரோ பத்மூ தீவிலே தனிமையாக்கப்பட்ட நிலை. இப்படிப்பட்ட நிலையிலே ஆண்டவர் தம் உடனிருப்பைக் கொடுக்கின்றார்.

ஆண்டவர் தம் வார்த்தையின் வழியாக இறை உடனிருப்பை உறுதி செய்கின்ற பொழுது நம் வாழ்வின் நிலை முற்றிலுமாக மாற்றப்படுகின்றது. தி.வெ. 21 : 4 -இல் கண்ணீர் அனைத்தையும் அவர் துடைத்துத் துன்பத்தை மாற்றி முன்பு இருந்த வலிகள் அனைத்தையும் நீக்கி விடுகிறார். ஏசாயா 35 :10-இல் அசீரியரின் அடக்குமுறைக்குட்பட்டு உயிரற்ற நிலையில் வேதனையோடிருந்த இஸ்ரவேல் மக்களாகிய தம் சிறுமந்தையோடிருந்து அவர்களை இறை ஆளுகைக்குட்படுத்தி மகிழ்வைத் தருவார் என நம்பிக்கை அருளுகின்றார். ஏசாயா 65:19-ல் எருசலேமை முன்னிட்டு அவர் மகிழ்வார் எனவும் அங்கே இனி அழுகையும் கூக்குரலும் ஒருபோதும் கேட்கபடாது என நம்பிக்கை தருகின்றார்.

உலகிலே இந்த இறை உடனிருப்பை நாம் பெற்று கொள்ளவேண்டும். அற்பமாய் சிறுமையாய் எண்ணப்பட்ட மோசே யோசுவா போன்றோர் இந்த உடனிருப்பைப் பெற்றதால் வாழ்வின் உயர் நிலையை அடைந்தோராய்க் கடவுளின் சொந்த மக்களை வாக்குப்பண்ணப்பட்ட கானானுக்கு நேராய் வழிநடத்தும் பேறினைப் பெற்றார்கள்.

3. உற்சாகப்படுத்தி இறையாட்சிக்குட்படுத்தும் ஆண்டவர்

சிறுமந்தையாகிய நீங்கள் அஞ்ச வேண்டாம்: உங்கள் தந்தை உங்களை தம் ஆட்சிக்கு உட்படுத்த திருவுளம் கொண்டுள்ளார் (லூக்கா 12:32).

நம்பிக்கை இழந்த நிலையில் இருக்கும் மக்களுக்கு ஆண்டவர் புது நம்பிக்கையும் உற்சாகமும் கொடுக்கிறவர். இஸ்ரவேல் மக்கள் உரோமானிய அடிமைத்தனத்திற்கு உட்பட்டு வாழ்வின் பல நிலைகளில் கடினப்பாடுகளைச்

சந்திக்கின்ற சூழலில் எதிர்காலத்தைக் குறித்த கலக்கத்தோடு இருந்த தம்மக்களை ஆண்டவர் உற்சாகப்படுத்துகின்றார். லூக்கா 12 :32-இல் நீங்கள் இப்பொழுது சிறுமைப்படுத்தப்பட்டு கடினப்பாடுகளைச் சந்தித்தாலும் ஆண்டவர் சிறுமைப்படுத்தப்பட்ட தம் மக்களின் வாழ்வை மாற்றுவார் என நம்பிக்கைக் கொடுக்கின்றார்.

தம்முடைய ஜனங்கள் சோர்ந்து போகின்றபொழுது அவர் அமைதலாயிருப்பவர் அல்ல; மாறாக உற்சாகப்படுத்துகின்றவர். லூக்கா 12-ஆம் அதிகாரம் முழுமையும் ஆண்டவர் தம்முடைய வார்த்தையினால் தம்மக்களுக்கு நம்பிக்கைக் கொடுப்பதையும் பயப்படாதிருங்கள் என உற்சாகப்படுத்துவதையும் காண முடிகிறது. லூக்கா 12: 7, 29-ஆம் வசனங்களில் ஆண்டவர் நம்மை முழுவதும் அறிந்திருக்கிறார் எனவும் வாழ்வின் சூழலையும் தேவைகளையும் எண்ணி நீங்கள் கலங்காதிருங்கள் எனவும் அவர் சிறுமந்தைகளாகிய நம் நிலையை மாற்றுவார் எனவும் காண்கிறோம்.

தம்முடைய சீடர்கள் தங்கள் வாழ்வின் நிலைகளை எண்ணிச் சோர்ந்து போய் பயந்து கதவுகளைப் பூட்டிக் கொண்டு கலங்கியிருந்த வேளையிலே ஆண்டவர் தம் வார்த்தையினாலும் தம் பிரசன்னத்தினாலும் அவர்களை உற்சாகப்படுத்தி நீங்கள் அறைகளுக்குள் அடங்கியிருக்க வேண்டியவர்கள் அல்ல தூய ஆவியாரின் ஆற்றலோடு ஆண்டவரின் பணியைச் செய்ய அவர்களை உற்சாகப்படுத்துகின்றார் (யோவான் 20: 22).

சாதி சமயப் பொருளாதார அடிப்படையில் பல்வேறு ஏற்ற தாழ்வுகளை உள்ளடக்கியதான ஒரு சமூகத்திலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இத்தகையச் சமூகத்தில் அதிகாரமும் ஆளுமையும் முன்னிறுத்தப்பட்டுப் பணம் மட்டுமே வலிமைகொள்ளுகின்ற சூழலில் ஏழைகள் எளியவர்கள் ஒடுக்கப்பட்டு நெருங்கப்படுகின்ற நிலையில், இவர்களின் உழைப்புகள் சுரண்டப்பட்டு வாழ்விழந்து கலங்கிய நிலையில் வாழும் தம்முடைய மக்களுக்கு ஆண்டவர் நம்பிக்கை ஊட்டுகின்றார்.

சிறு மந்தையாகத் துவண்டு போய் இருக்கும் நம் அனைவருக்கும் தூயவரின் இதே அழைப்பு தரப்படுகிறது. அவருடைய அழைப்பை உணர்வுடையவர்களாய் ஏற்றுக்கொண்டு அவருடைய உடனிருப்பைப் பெற்றுக்கொண்டவர்களாய் உற்சாகத்தோடு இப்பாரில் அவர் பணிச் செய்வோம். நம்மை கொண்டும் அவர் சிறுமந்தைகளை இறையாட்சிக்குட்படுத்துவார்.

கடவுள் நமக்கு தந்திருக்கின்ற அருட்பணிகளுக்காய் நன்றி கூறுவோம். அருட்பணிகள் உணர்வடைதலுக்கும் உடனிருப்பவரோடு பணிச் செய்திடவும், உற்சாகபடுத்தும் ஆண்டவரோடு சோர்பின்றி பணிச்செய்து இறையாட்சிக்கு அநேகரை உட்படுத்துவோம். ஆமென்.

அருள்திரு. J. ஞானதாஸ்
H.M.S. **விசாரணைப் போதகர்**

ப	ஞா. 364	கீர். 416

நலமருளும் வாக்கு

யோவா. 5: 1-9

இயேசு அவரைக் கண்டு, நெடுங்காலமாக அவர் அந்நிலையில் இருந்துள்ளதை அறிந்து நலம்பெற விரும்புகிறீரா? என்று அவரிடம் கேட்டார் (யோவா. 5: 6).

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்", இது ஆன்றோர் சொல். அனைவரும் ஆரோக்கியமாக வாழவேண்டும் என்பது கடவுளின் விருப்பம். வி.ப. 15: 26-இல் நானே உன்னைக் குணமாக்கும் ஆண்டவர் எனக் கடவுள் திருவுளம் பற்றுகிறார். தி.பா. 103: 3, 4-இல் பக்தன் தாவீதும், அவர்உன் குற்றங்களையெல்லாம் மன்னிக்கின்றார்; உன் நோய்களையெல்லாம் குணமாக்குகின்றார். அவர் உன் உயிரைப் படுகுழியினின்று மீட்கின்றார்; அவர் உனக்குப் பேரன்பையும் இரக்கத்தையும் மணிமுடியாகச் சூட்டுகின்றார் என்று பாடுகின்றார்.

கடவுளின் மீட்பு பணியில் பாவமன்னிப்பும், குணமாக்கப்படுதலும் இடம் பெற்றுள்ளதை நற்செய்தி நூல்களில் காண்கின்றோம். குணமாக்கப்படுதல் அல்லது நலம் பெறுதல் என்பது உடல், உள்ளம், உறவு முதலியவற்றிலிருந்து எழும் கேட்டிலிருந்து, கடவுள் தம் அன்பாலும், அருளாலும் வழங்கும் முழுமையான நலம் என்பதை திருமறை திட்டமும் தெளிவுமாகக் கூறுகிறது. ஒரு சொல் வெல்லும் என்பதே அறிஞர்கள் கூறும் கருத்து. இலட்சியச் சொற்கள் ஒவ்வொன்றும் உறவை வளர்க்கும் உயிர்ச்சக்தி. மனித உணர்வை ஊக்கப்படுத்தும் உந்து சக்தி, மனித உள்ளங்களை வளமாக்கும் மகத்தான சக்தி. 38 வருடம் நோயினால் துன்புற்ற மனிதனுக்கு நலமருளும் வார்த்தையாய் ஆண்டவர் இயேசுவின் வார்த்தை அமைந்தது. அவ்வார்த்தையில் வெளிப்பட்ட மேன்மைகளைக் குறித்து சிந்தனைச் செய்வோம்.

1. கனிவான வார்த்தை (யோவா. 5: 6)

கனிவான வார்த்தைகள் சோர்வாக இருப்பவர்களுக்கு உற்சாகத்தையும், சோகமாக இருப்பவர்களுக்கு ஆறுதலையும், துக்கமாக இருப்பவர்களுக்கு புன்முறுவலையும், சுகவீனத்தோடு இருப்பவர்களுக்கு நம்பிக்கையையும் கொடுப்பதாய இருக்கிறது. மற்றவர்களிடம் அக்கறையோடு விசாரித்து, கனிவான வார்த்தைகளைப் பேசினால் அது அவர்களை வாழவைக்கும். எனவேதான் ஏற்ற காலத்தில் சொல்லப்பட்ட வார்த்தைகள் வெள்ளித் தட்டில் வைக்கப்பட்ட பொற்கனிக்குச் சமம் என்று ஞானி சாலமோன் குறிப்பிடுகின்றார் (நீ.மொ. 25: 11).

யோவா. 5: 6-இல் முப்பத்தெட்டு வருடங்களாய் உடல்நலம் அற்றிருந்த ஒருவர் இயேசுவின் கனிவான வார்த்தைகளினால் நலம்பெற்ற நிகழ்வைக் குறித்து காண்கின்றோம். இந்நிகழ்வில் இயேசு ஆற்றல்மிகு வாக்கினால் குணமளிப்பவராய்த் தம்மை அடையாளப்படுத்துகிறார். நலம் விரும்பிய மனிதன் பெதஸ்தா குளத்தண்டையிலே இருக்கின்றார். பெதஸ்தா என்றால் இரக்கத்தின் வீடு அல்லது பரிவின் வீடு என்பது பொருள். இப்படி இரக்கத்தின் வீட்டண்டையிலே இருந்தவர், தன்னுடைய வாழ்க்கையின் பெரும்பகுதியை நோயிலும், நோயிலிருந்து விடுதலையடைவதற்குக் காத்திருப்பதிலும் செலவு செய்தவர். சக மனிதர்களால் கைவிடப்பட்டவராய், உதவியற்றவராய் இருக்கின்றார். அவரைக் குணமாக்க இயேசுவே முதல் முயற்சி எடுக்கிறார். அக்குளத்தண்டையிலே திரளாகப் படுத்திருந்த பல்வேறு மனிதருள் அதிகமாய்த் துன்புற்று நெடுங்காலமாக நம்பிக்கை இழந்திருந்த இம்மனிதனை இனம் காண்கிறார் இயேசு. தமது கனிவான வார்த்தைகளினால் நலம்பெற விரும்புகிறீரா? என்று அம்மனிதனிடம் இயேசு கேட்டார். அந்த வார்த்தையில் இருந்த கனிவும் அக்கறையும் நோயுற்றிருந்த அம்மனிதன் தன்னுடைய மன குமுறல்களையெல்லாம் இயேசுவிடம் சொல்வதற்கு ஏதுவாயிற்று. தன்னுடைய வேதனையை, தன்னுடைய கஷ்டத்தை தன்னுடைய கைவிடப்பட்ட நிலையை உண்மையாய்ப் புரிந்துக் கொள்பவர் இயேசு என்பதை அவரது கனிவான வார்த்தையின் வழியாய் உணர்ந்தும் கொண்டார் இந்த மனிதர்.

ஏசாயா 50: 4-இல் நலிந்தவனை நல்வாக்கால் ஊக்குவிக்கும் அறிவை நான் பெற்றிட, ஆண்டவராகிய என் தலைவர் கற்றோனின் நாவை எனக்கு அளித்துள்ளார் என்கிறார் இறைவாக்கினர் ஏசாயா. நோய்மையில் இருக்கின்ற ஒருவருக்கு முதலவாது தேவையானது கனிவான வார்த்தை. அதாவது உள்ளத்தைத் தொடக்கூடிய வார்த்தை. எனவே தான் ஆண்டவருடைய விசாரிப்பை அனுபவித்த பேதுரு அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்து விடுங்கள் (1 பேதுரு 5: 7) என்கிறார்.

இரவெல்லாம் பிரயாசப்பட்டும் ஒரு மீனும் கிடைக்காமல் தொழிலில் தோல்வி என்ற விரக்தியோடு பேதுரு நின்றார். இயேசுவின் கனிவான விசாரிப்பின் வழி வலை கிழிந்து போகத்தக்கதாய் மிகுதியான மீன்களைப் பேதுரு பிடிக்கும்படி செய்தார் (லூக். 5: 1-9). பேதுரு, ஆண்டவரை மறுதலித்து பின்வாங்கிச் சென்றபோதும், விட்டு விடாது, அவரைத் தேடி சென்று கனிவான வார்த்தைகள் வழி விசாரித்து, அவரைத் திரும்பவும் உறுதிப்படுத்தினார் இயேசு (யோவான் 21:1-17). ஏனெனில் கடவுள் நம்மேல் எப்பொழுதும் நினைவாயிருக்கிறார். பேதுருவை நினைத்து விசாரித்தவர், 38 வருடம் நோயுற்றிருந்த மனிதனிடம் கனிவாய் பேசி விசாரித்த ஆண்டவர் நம்மையும் விசாரிக்கிறவராய் இருக்கின்றார்.

2. குணமாக்கும் வார்த்தை (யோவா. 5: 8, 9)

இயேசுவின் அன்பான விசாரிப்பும், அக்கறையான விசாரிப்பும் வெகுகாலமாய் நோயுற்றிருந்தவர் குணமடைய காரணமாயிற்று. இயேசுவின் அன்பான விசாரிப்பு வழி இம்மனிதனுடைய இயலாமையை, கைவிடப்பட்ட நிலையை இயேசு அறிந்துக் கொள்கின்றார். வார்த்தையில் ஆற்றல் மிகுந்தவர் தமது வார்த்தையின் வழி அவரை குணமாக்க முன் வருகின்றார். எனவே, இயேசு அவனை நோக்கி : எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட என்றார். வியாதிப்பட்டவர்களைப் பார்த்தால் விசுவாச வார்த்தைகளைப் பேச வேண்டும்; துயரப்பட்டவர்களைப்பார்த்தால் ஆறுதலாகப் பேச வேண்டும்; தனிமையில் தவிப்பவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். காலத்துக்கேற்ற சூழ்நிலைக்கேற்ற வயதுக்கேற்ற, இடத்துக்கேற்ற வார்த்தைகளைப் பேசுவது தேவையறோடிருப்பவர்களுக்கு அரும் மருந்தாய் அமையும். இங்குக் கைவிடப்பட்ட, உதவியற்ற நிலையில் இருந்த மனிதரிடம் ஆண்டவர் நம்பிக்கை நிறைந்த, ஊக்கம் நிறைந்த வார்த்தைகளைப் பேசுகின்றார். இதன் வெளிப்பாடாய் நோயுற்றவர் உடனே நலமடைந்து தன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்து சென்றார் என்பதாகக் காண்கின்றோம்.

இந்தக் குணமாக்கும் வார்த்தையில் வெளிப்பட்ட கடவுளின் வல்லமையை நோய்யுற்றிருந்த மனிதர் இயேசு நாதரிடமிருந்து நேரடியாகவே பெற்றுக்கொண்டார் என்பது சிறப்புக்குரிய ஒன்று. ஏனெனில், இந்தப் பெதஸ்தா குளங்கரையில் காத்துக் கொண்டிருந்த எத்தனையோ பேர் குளம் கலக்கபடுகையில் முந்தி இறங்கி நலமடைந்து சென்றிருப்பார்கள். அது ஒரு மகிழ்ச்சியான விசயம்தான் என்றாலும் அவர்களுக்கு மேசியாவைப் பார்ப்பதற்கான வாய்ப்புகள் கிடைக்கபெறவில்லை. ஆனால் இந்த மனிதருக்கு 38 வருடம் என்பது நீண்ட கால தாமதமாக இருக்கலாம்; ஆனால் மற்றவர்களுக்குக் கிடைக்காத ஒரு பாக்கியம் இவருக்குக் கிடைத்தது. ஆண்டவர் இயேசுவை நேரடியாகப் பார்த்ததும் அவரால் நேரடியாக அளிக்கப்பட்ட முழுமையான நலத்தைப் பெற்றதுமே. அதற்குப் குளத்தில் இறங்க வேண்டிய அவசியம் இல்லை. ஆற்றல்மிகு அவரது வார்த்தையே போதுமானது. சில நேரங்களில் தாமதம் என்பது நல்லது தான். யாரும் காணாததை நாம் காண்பதற்கும், யாரும் அடையாததை நாம் அடைவதற்கும் தாமதம் வழி வகுக்கின்றது.

பாரீஸ் பட்டணத்திற்கு அருகிலுள்ள கிராமத்தில் தோலினால் பொருட்கள் செய்கின்ற சாதாரணப் பணியைச் செய்து வந்தவரது மகன்தான் லூயிஸ் பிரெயிலி (Louis Braille). 1809-ஆம் ஆண்டு பிறந்த இவர் விளையாடிக் கொண்டிருந்தபோது ஏற்பட்ட விபரீதத்தினால் தனது மூன்றுவயதில் ஒரு கண் பார்வையை இழந்தார். தனது ஐந்து வயதில் தீடீரென தனது இரண்டாவது கண் பார்வையையும் இழந்தார். தகப்பனோ தன் மகனின் நிலையை அறிந்து

செய்வதறியாது தவித்தார். எனினும் என் அன்பு மகன் பிரெயிலி இனி ஒன்றுக்கும் ஆகாதவன் என்று ஒதுக்கி இல்லத்தில் வைத்துவிடாமல், உண்மையான மனித நேயத்துடன் மகனைப் பராமரித்து அவரது மாற்றுத்திறனை அடையாளம் கண்டு, உற்சாகப்படுத்தி கல்விச் சாலைக்கு அனுப்பி வைத்தார். மிகவும் திறமையான பிரெயிலி, பார்வையற்றோர் கல்வி கற்கும் வகையில் பிரெய்லி எழுத்துக்களை வடிவமைத்து உலகிற்கு தந்து ஒரு மாபெரும் சாதனையாளராக மாறினார். இவரது உயர்விற்குக் காரணமாயிருந்தது இவரது தந்தையே. தந்தையின் கனிவான வார்த்தைகளும் அன்பான பராமரிப்புமே பிரெயிலியின் பலவீனத்தைத் தகுதியாக்கி, நல்ல சாதனையாளராக மாற்றியது.

நமது வாழ்வுச் சூழலில் நோயினால் பாதிக்கப்பட்டு வேதனைகளுடன் இருப்போரிடம் கனிவான நம்பிக்கையூட்டுக்கின்ற நல் வார்த்தைகளைப் பேசி அதன் வழியாய் அவர்கள் முழுமையான நலனைப் பெற்றுக்கொள்ள வழி செய்கின்ற நல்ல பணியில் நம்மை முழுமையாய் அர்ப்பணித்துச் செயல்பட இந்த தவக்காலம் உதவி புரியட்டும், ஆமென்.

ப	ஞா. 117	கீர். 134

அருள்திரு. P. பால் ஒய்சர் ஷெல்லி

ஆயர், மாலன்விளை

வாழ்வாகும் உணவு

யோவா. 6: 1 - 14

"இயேசு அப்பங்களை எடுத்து கடவுளுக்கு நன்றி செலுத்தி அமர்ந்திருந்தோருக்குக் கொடுத்தார்". (யோவா. 6: 11).

உணவு மனித வாழ்க்கைக்கு அடிப்படை தேவைகளில் ஒன்று. மனிதனைப் படைத்த கடவுள் ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும் பாதுகாக்கவும் மனிதனை அங்குக் குடி அமரச் செய்தார் (தொ.நூ. 2: 15). மட்டுமல்லாமல் ஆண்டவராகிய கடவுள் மனிதனிடம், தோட்டத்தில் இருக்கும் எந்த மரத்திலிருந்தும் உன் விருப்பம் போல் நீ உண்ணலாம் (தொ.நூ. 2: 16) என்கின்ற கட்டளையைக் கொடுத்தார். திருமறையில் படைப்பு முதல் ஆண்டவர் மனிதனுக்கு உரிய உணவினைப் பல நிலைகளில் கொடுப்பதை நாம் பார்க்கிறோம்.

யோவான் நற்செய்தி நூலில் (யோவான் 6: 1-13) இயேசு கலிலேயா கடலைக் கடந்து மறுகரைக்குச் செல்கிறார். நோயுற்ற மனிதர்களை இயேசுநாதர் விடுதலையடையச் செய்ததைக் கண்டு அனேக மக்கள் அவரைப் பின் தொடர்ந்தனர். இயேசு மலையின் மீது ஏறி தம் சீடர்களோடு அமர்ந்தார். இது யூதர்களின் பஸ்கா பண்டிகை நெருங்கும் காலமாக இருந்தது. திரளான ஜனங்கள் தம்மிடம் வருவதை இயேசு கண்டு பிலிப்புவை நோக்கி ஜனங்கள் சாப்பிடுவதற்குப் போதுமான உணவை நாம் எங்கே வாங்குவது என்று கேட்டார்? பிலிப்பு மறு மொழியாக 200 தெனாரியத்திற்கு அப்பம் வாங்கினாலும் இவர்களுக்குப் போதாது என்று கூறினார். அப்பொழுது அந்திரேயா இங்கு ஒரு சிறுவன் இருக்கிறான் அவனிடம் ஐந்து வாற் கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் இருக்கிறது என்றார். உடனே இயேசு மக்களை அமரச் செய்யுங்கள் என்றார். அவ்விடத்தில் ஏறக்குறைய 5000 புருஷர்கள் இருந்தார்கள். இயேசு அப்பங்களை எடுத்து கடவுளுக்கு நன்றி செலுத்தி அவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தார். இந்த உணவு பகிரும் நிகழ்வு இயசேநாதரின் தெய்வீக அதிகாரத்திற்கு ஆழமான உதாரணமாகவும் கிறிஸ்தவ நம்பிக்கைக்கு அடித்தளமாகவும் சேவை செய்ய விரும்பும் சமூகத்திற்குமுன் உதாரணமாகவும் திகழ்கிறது. இந்த அடையாள நிகழ்வின் தன்மை குறிப்பிடத்தக்கது. இது பஸ்கா பண்டிகை காலம். உலகம் மேசியாவின் ஆளுகைக்காக எதிர்பார்ப்போடு இருக்கிறது. பஸ்கா இஸ்ரவேலரின் விடுதலைப் பயணத்தையும் வனாந்தரத்தில்

மக்கள் வாழ்வதற்குரிய உணவாகிய மன்னாவினைப் பெற்று கொண்டதையும் இங்கு நினைவில் கொள்ள வேண்டும். இதற்கு இணையாக இயேசுநாதர் இம்மக்களுக்கு உணவளிக்கிறார். இது இயேசுநாதரின் இரக்கத்தின் அடையாளம் மட்டுமல்ல அவர் தம்முடைய சீடர்களோடு இணைந்து இறுதி விருந்தில் பங்குபெறுவதற்கு முன்பதாகவே தன்னுடைய சரீரம் மனிதர்களுக்கு வாழ்வாகும் உணவாகப் பகிர போவதற்கு அடையாளமாக இந்த நிகழ்வு அமைகிறது. இந்தச் செய்தி யோவான் 6-ஆம் அதிகாரம் முழுதும் உள்ள வசனங்களை ஆராயும்போது நாம் தெளிவாகக் கற்றுக் கொள்ளமுடியும்.

1. வாழ்வாகும் உணவு நம்மை ஒன்றிணைக்கிறது

கிறிஸ்து இறைஅரசின் தகவுகளை வெளிப்படுத்தும் போது விருந்தினை மையப்படுத்தி உவமைகளாகக் கூறுகிறார் (மத். 22: 2. லூக். 14: 15). இந்த விருந்தின் சாதாரண மக்கள் பங்கு கொள்ளுகின்றனர். கலிலேயாவில் 5000 மக்களுக்கு உணவினைப் பரிமாறும்போது அப்பத்தை எடுத்து கடவுளுக்கு நன்றி செலுத்தி (யோவா. 6: 7) பகிர்ந்து கொடுத்தார். பகிர்ந்து கொடுப்பதில் தம்முடன் ஒற்றுமையாக இருப்பதன் தன்மை என்ன என்பதை இயேசுநாதர் விளக்குகிறார். புனித பவுல் இதைக் குறிப்பிடும்போது கடவுளைப் போற்றி திருவிருந்து கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்கு கொள்ளுதல் அல்லவா! அப்பத்தைப் பிட்டு உண்ணுகிறோமே அது கிறிஸ்துவின் உடலில் பங்கு கொள்ளுதல் அல்லவா? (1 கொரி. 10: 16, 17) என்கிறார்.

வாழ்வாகும் உணவினை நாம் பெற்றுக் கொள்ளும்போது கிறிஸ்து தம்மையே நமக்குத் தருகிறார். நாம் நம்மை அவருடைய சமூகத்தில் அர்ப்பணிக்கின்றோம். இது நமது வாழ்வில் கிறிஸ்துவோடு வலுவான பக்தியையும் ஆழமான ஐக்கியத்தையும் ஏற்படுத்துகிறது.

2. வாழ்வாகும் உணவு புதிய நம்பிக்கைத் தருகிறது

இயேசு திரளான மக்களுக்கு உணவளிப்பது அவரைப் பின்பற்றும் மக்களின் விசுவாசத்தைக் காட்டுகிறது. உணவின்மை மக்களிடையே நம்பிக்கை வாழ்வைக் குறித்த நம்பிக்கை இன்மையை ஏற்படுத்துகிறது (1 அரசர்கள் 17: 6-12). உணவினைப் பெற்றுக் கொள்ளும் மக்கள் கடவுளின் பாதுகாப்பினையும் அவர்களுக்குக் கிடைக்கும் அங்கிகாரங்களையும் புரிந்து கொள்ளுகின்றனர். பக்தியுடன் நற்கருணையைப் பெற்று கொள்ளும்போது இந்த நம்பிக்கை வெளிப்படுவதை நாம் உணர முடியும. லூக். 22: 19-இல் உங்களுக்காகக் கொடுக்கபடும் எனது உடல்; எனது நினைவாக இவ்வாறு செய்யுங்கள்; எனச் சீடர்களுக்கு அறிவுறுத்தினார். நினைவு கூருதல் வாழ்வில் நம்பிக்கையைப் பலப்படுத்துகிறது.

3. வாழ்வாகும் உணவு மீட்பின் அனுபவத்தில் நம்மை ஒன்றிணைக்கிறது

ஆண்டவர் பகிர்ந்து கொடுத்த உணவை மக்கள் அவர்கள் வயிறார உண்டபின் ஒன்றும் வீணாகாதபடி எஞ்சிய துண்டுகளைச் சேர்த்து வைக்கும்படி சீடர்களிடம் கூறினார் (யோவான் 6: 12). எஞ்சிய அப்பங்களையும் மீனையும் சீடர்கள் 12 கூடை நிறைய நிரப்பினார்கள். இந்தச் சேகரிப்பானது கடவுளின் கிருபையையும் அவரின் இரட்சிப்பின் ஆழத்தையும் வெளிப்படுத்துகிறது. கிறிஸ்துவின் குருதியினாலும், உடலாலும் மீட்கப்பட்டவர்கள் இறை அரசுக்கென்று சேர்க்கப்படுகிறார்கள். அவர்கள் வீணாய்ப் போகக்கூடாது என்பது ஆண்டவரின் எதிர்பார்ப்பு. இந்த லெந்து காலத்தில் அடையாளங்களில் அடையாளமாகும் ஆண்டவர் நாம் வாழ்வுபெறும் வாழ்வாகும் உணவாக இருக்கிறார். இந்நாட்களில் நம்மை ஒன்றிணைத்து, நம்பிக்கை தந்து, மீட்பின் அனுபவத்தில் நம்மை வழி நடத்துவாராக, ஆமென்.

அருள்திரு. R. ரிங்கல் தோபி

ஆயர், மில்லினியம்

ᏼ	ஞா. 377	கீர். 437

23.03.2025 உயிர்ப்புத் திருநாளுக்கு முன்வரும் நான்காம் ஞாயிறு

எல்லைகளைக் கடந்து இறைநம்பிக்கையை ஒப்புக்கொள்ளல்

Acknowledging Faith beyond Boundaries

எசா. 44: 28 - 45 : 8 | தி.ப. 10: 24 - 33
தி.பா. 125 | மத்.15: 21 - 28

"பெயர் சொல்லி உன்னை அழைத்தேன். நீ என்னை அறியாதிருந்தும் உனக்குப் பெயரும் புகழும் வழங்கினேன்" (எசாயா 45: 4b).

உலகத்தில் வாழும் அனைத்து மக்களும் நம்பிக்கையை வாழ்வின் மையமாகக் கொண்டு செயல்படுகின்றனர். கிறிஸ்தவர்களாகிய நாம் கடவுள் மீது நம்பிக்கைக் கொண்டு வாழ்கிறோம். ஆனால், அநேகர் நம்மைப்போல் அல்லாமல் நீர், நிலம், மரம், நெருப்பு, சூரியன், சந்திரன், இயற்கை போன்றவைகள் மீது நம்பிக்கைக் கொண்டு அவைகளைத் தெய்வங்களாகக் கருதி வாழ்கிறதைக் காண்கிறோம். இப்படிப் பல்வேறு நம்பிக்கைக் கொண்டு வாழும் மக்களைக் கடவுள் ஒருவரே, அவர்தான் ஆண்டவர் இயேசுவின் வாயிலாக வெளிப்பட்டார் என்னும் விசுவாசத்துக்குள் கொண்டு வருவதும் அவர்களை ஏற்று நட்பு கொள்வதும் மிகப்பெரிய சவாலாகும். யூத மக்கள் கடவுள் எங்களை மட்டும்தான் தெரிந்து கொண்டார், மற்ற மக்களுக்கு அவர் பிரயோஜனமில்லாதவர் எனக் கூறினர். இஸ்ரவேல் மக்கள் கடவுள் தங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தார் என நம்பினர். அந்த நம்பிக்கை கடவுள் எங்களுக்கு மட்டும்தான் சொந்தம் என்ற நிலைக்கு அவர்களை ஆளாக்கியது. திருமறை கடவுள் அனைவருக்கும் சமமானவர். அவர் சமய, சமூக, பொருளாதார, கலாச்சார வேறுபாடுகளைக் கடந்து செயல்படுபவர். அனைவரையும் சம நிலையில் அங்கீகரிக்கிறார். மனிதர்கள்தான் தங்களுக்குள் வேறுபாடுகளை வகுத்துக் கொண்டார்கள். தூய பவுலார் கலாத்தியருக்கு எழுதின கடிதத்தில் யூதர்-கிரேக்கர், அடிமைகள், உரிமைக் குடிமக்கள், ஆண்-பெண் என்னும் வேறுபாடுகள் கிறிஸ்து இயேசுவிடம் இணைந்துள்ளோருக்கு இல்லை என்கிறார் (கலா. 3: 28). அதுமட்டுமல்ல, தி.ப. 17: 27-இல் கடவுள் தம்மை அவர்கள் தேட வேண்டும் என்பதற்காக இப்படிச் செய்தார். தட்டி தடவியாவது தம்மைக் கண்டுகொள்ள வேண்டும் என்பதற்காகவே இப்படிச் செய்தார். ஏனெனில் அவர் நம் ஒவ்வொருவருக்கும் அருகிலே உள்ளார் எனவும் குறிப்பிடுகிறார்.

நாம் வாழும் இந்திய நாடு அனைத்து சமய நம்பிக்கைகளும் உடைய மக்களைக் கொண்ட நாடாக உள்ளது. எனினும், மாறி மாறி ஒருவருக்கொருவர் பிற சமயத்தையும் சமயத்தைச் சார்ந்த மக்களையும் மதிப்புக் குறைத்து

இழிவாகக் கருதுவதால் இன்று சமய அடிப்படைவாதம் (Religious Fundamentalism) தலைதூக்கி விட்டது. வைராக்கியமும் விரோதமும் உண்டாகி, நட்பும் மனித நேயமும் கேள்விக்குறி ஆகி விட்டது. இதனடிப்படையில் சமய மோதல் அன்றாட வழக்கமாகி வருகிறது. இவைகளெல்லாம் எல்லைக் கடந்து பிறரை ஏற்று விசுவாச வாழ்வு வாழ மாபெரும் சவாலாகவே இருந்து கொண்டிருக்கிறது. ஆனால், கடவுளையும் அவரது செயல்பாடுகளையும் நாம் முறையாகப் புரிந்து கொள்ளும்போது, அனைவரும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியவர்களும் அன்பு செலுத்தப்பட வேண்டியவர்களும் என்பதை நாம் உணரலாம்.

I. எல்லைகளுக்கு அப்பாற்பட்டு கடவுளின் திட்டத்தை நிறைவேற்றுதல் (எசாயா 45: 1)

பழைய ஏற்பாட்டு திருமறைப்பகுதியான எசாயா 44: 28; 45: 8 இஸ்ரவேல் மக்கள் பாபிலோனுக்குச் சிறைப்பிடிக்கப்படுவதற்கு அநேக ஆண்டுகளுக்கு முன் அவர்களின் விடுதலையைப் பற்றி தெளிவாக முன்னுரைக்கிறது. இந்த விடுதலை உறுதிச் செய்யப்பட்டது என்றாலும், அடிமைத்தனத்திலிருந்து விடுபடுவதில் ஏற்படும் பல சிரமங்களையும் உள்ளடக்கியுள்ளது. இஸ்ரவேல் அசீரியாவினால் சிறைப்பட்டு யூதா பாபிலோனியரின் சிறைக்குள்ளாக்கப்பட்ட, கொள்ளையடிக்கப்பட்ட காலத்தில்; கோரேசு யூதாவைக் கைப்பற்றிய நிலையில் அவர்களை விடுவித்து எருசலேமைக் கட்ட உதவிச் செய்கின்றவராக கோரேசு அரசரை நாம் அறிகிறோம் (எஸ்றா 1: 1-3). இந்தக் கோரேஸ் கடவுளை அறியாதவர். இருப்பினும் யாக்கோபினிமித்தமும் இஸ்ரவேல் நிமித்தமும் நான் உன்னை தெரிந்து கொண்டேன் எனக் கூறுகிறார் (எசாயா 45: 4). அவனை ஆசீர்வதித்து அபிஷேகித்து பயன்படுத்துகிறார். அவன் நான் நியமித்த ஆயன். என் விருப்பத்தை நிறைவேற்றுவான் என்கிறார் (எசா. 44: 28). கோரேஸ் யூதரல்லாத போதும் அவரைக்கொண்டு கடவுள் தம் திட்டத்தையும் தமது பணிகளையும் நிறைவேற்றுகிறார். சிறைப்பட்டிருந்த யூதர்களை விடுவித்து எருசலேமில் கொண்டு வந்து ஆலயத்தை மீண்டும் கட்டுவதற்கென எல்லா உதவிகளையும் செய்கிறார். கோரேஸ் மன்னரின் அருட்பொழிவு கடவுள் சாதி மத மொழி இன வேறுபாடுகளைத் தாண்டி செயல்படுபவர் என்பதைத் தெளிவுப்படுத்துகிறது. அது கடவுளின் தெய்வீகத் திட்டமுமாகும்.

II. சபிக்கப்பட்டோரையும் ஓரம் கட்டப்பட்டவர்களையும் ஏற்றுக்கொள்ளுதல்

மத்தேயு 15: 21-28 வரை கானானிய நாட்டைச் சார்ந்த ஒரு பெண் இயேசுவிடம் வந்து பிசாசினால் கொடிய வேதனைப்படும் தன் மகளுக்காக வேண்டி நிற்பதைக் குறித்துப் படிக்கிறோம். ஆனால், இயேசுவோ அவளுக்கு ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. சீடர்கள் இயேசுவிடம் அவள் தொடர்ந்து வந்து கூப்பிடுகிறாளே என வேண்டியபோது (மத். 15: 24) இஸ்ரயேல் குலத்தாருள் காணாமற்போன ஆடுகளாய் இருப்போரிடமே அனுப்பப்பட்டேன் என்றார். ஆனால், அவள் தொடர்ந்து இயேசுவினிடத்தில் உதவிக்காக வேண்டி நின்றாள். ஆயினும், மத். 15: 26-இல் பிள்ளைகளுக்குரிய உணவை எடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல எனக் கூறி, உதவிச் செய்வதைக் காலம் தாழ்த்தினார்.

இந்தக் கானானிய பெண் சபிக்கப்பட்ட சந்ததியில் தோன்றியவள். நோவாவின் மூன்று புதல்வர்களில் ஒருவர் காம். காமின் குமாரன் கானான் எனவும் தொ.நூ. 9: 25-இல் படிக்கிறோம். காம் செய்த குற்றத்துக்காக நோவா அவரது குமாரன் கானானைச் சபித்துவிட்டார். கானான் சபிக்கப்பட்டவன் என்றும் இந்தக் கானான் சேமுடைய சந்ததிக்கும் யாப்பேத்தின் சந்ததிக்கும் அடிமையாய் இருப்பான் என்றும் தொ.நூ. 9: 25-இல் படிக்கிறோம். இந்தச் சபிக்கப்பட்ட கானானியரின் சந்ததியினர் எங்கும் பரவியிருந்தார்கள் (தொ.நூ. 10: 1). கானான் தேசத்திலிருந்து இஸ்மவேலரால் துரத்தப்பட்ட எபூசியர், எமோரியர், கிர்காசியர் அனைவருமே இந்தக் கானானியராவார்கள். கானானியப் பெண் சபிக்கப்பட்டவர் என்பதால் இயேசுநாதர் உதவிச் செய்ய காலம் தாழ்த்தவில்லை. மாறாக, சபிக்கப்பட்ட இந்தப் பெண்ணை எல்லை கடந்து ஏற்றுக்கொண்டு தம் சீடர்களுக்குப் பாடம் கற்பிக்க அவர் முன்வந்ததால் காலம் தாழ்த்தினார் (மத். 15: 23-33). அதுமட்டுமல்ல இயேசுநாதரின் ஒவ்வொரு வார்த்தைக்கும்; சரியானப் பதிலை இந்தப் பெண் கொடுக்கிறதைக் காண்கிறோம். இயேசு அந்தப் பெண்ணின் விசுவாசத்தையும், வேண்டுதலையும் ஏற்று மகளுக்குச் சுகத்தைக் கொடுத்தார் (மத். 15: 28). கானானியப் பெண்ணைப் போன்று ஆண்டவரிடம் பணிந்து விசுவாசத்துடன் வேண்டுபவர்கள் எவராயிருந்தாலும் கடவுள் அவர்களை ஏற்று உதவிச் செய்கிறார்.

மனித நேயம் காக்க மனித உணர்வுகளுக்கும் மனித உரிமைகளுக்கும் மதிப்பு தரும் அனுபவம் தேவை என்பதைக் கடவுள் நமக்குக் கற்றுத் தருகிறார். நம் கிறிஸ்தவ விசுவாசமும் அன்பும் அனைவரையும் எல்லை கடந்து ஏற்றுக் கொள்ளகூடியதாக அமைய வேண்டும். சடங்கும் பாரம்பரியமும் பிரிவினையும் நிறைந்த சமூகத்தை மாற்றி அன்பும் மனித நேயமும் நிறைந்த வாழ்வைத் தந்து நம்மை ஏற்றுக்கொள்ள கடவுள் எப்பொழுதும் ஆயத்தமுள்ளோராய் இருக்கிறார்.

III. எல்லைகளைக் கடக்க சவால்களை ஆக்கப்பூர்வமாய் எதிர் கொள்ளுதல்

தி.ப. 10: 24-33-இல் மக்களுக்கான கடவுளின் அணுகுமுறை எந்தவொரு வெளிப்புற அளவுகோல்களினாலும் தீர்மானிக்கப்படவில்லை என்பதைத் தெளிவாய் எடுத்துரைக்கிறது. யூத சமயத்தைச் சார்ந்தவர்கள் தங்கள் கொள்கையை முன்நிறுத்துவதற்காக தீட்டு என்னும் சிந்தனையை உடையவர்களாயிருந்தனர். எனவே, யூதருக்கும் யூதரல்லாதோருக்குமிடையே சமூகத் தொடர்பு அற்றுப்போனது. பேதுரு தனது உரையில் யூதர்கள் மற்ற தேசங்களுடன் தொடர்பு வைத்திருப்பது சட்ட விரோதமானது. அப்படியிருந்தும் எந்த மனுஷனையும் தீட்டுள்ளவனென்றும் அசுத்தமுள்ளவனென்றும் நான் சொல்லாதபடிக்குக் கடவுள் எனக்குக் காண்பித்திருக்கிறார் (தி.ப. 10:28) என்றார். தூயப் பவுலடியார் புற இனமக்களைத் தேவாலயத்துக்குள் அழைத்து வந்து பரிசுத்த ஆலயத்தைத் தீட்டுப்படுத்தினார் எனக் குற்றம் சாட்டினர் (தி.ப. 21: 28). இயேசு சடங்காச்சாரமான சுத்தம் முக்கியமல்ல, மாறாக சமூக நீதியுடன் கூடிய அறம் சார்ந்தச் செயல்கள்தான் அதிக முக்கியம் என வலியுறுத்தினார். எனவே யூத அதிகாரிகள் இயேசுவுடன் முரண்பட்டு நின்றார்கள்.

தி.ப. 10: 30-37 வசனங்களில் கொர்நேலியுவைக் கடவுள் ஏற்றுக் கொள்வதைக் குறித்து படிக்கிறோம். அவர் ஒரு உரோமப் படைத்தளபதி. ஒரு

யூதன் அல்ல. எனினும் கடவுளை நேசித்து அவரிடம் மன்றாடி மக்களுக்கு நல்ல செயல்களைச் செய்கிறார் (தி.ப. 10: 2). ஒருநாள் மத்தியான வேளையில் தேவதூதர் அவரிடம் கடவுள் உன்னைக் கண்டு சந்தோஷப்படுகிறார்; உன் ஜெபங்களுக்குப் பதிலளிக்கப் போகிறார்; ஆகவே சில ஆட்களை அனுப்பி, பேதுரு என்பவரை அழைத்துவரச் சொல். அவர் யோப்பாவில் கடலோரப் பகுதியிலுள்ள சீமோன் வீட்டில் தங்கியிருக்கிறார் என்றார். கொர்நேலியுவின் ஆட்கள் பேதுருவை அழைக்க பேதுருவும் அவரது நண்பர்களும் கொர்நேலியுவைப் பார்க்கச் சென்றனர். பேதுருவின் கால்களில் கொர்நேலியு விழுந்து வணங்க, பேதுரு எழுந்திரு நானும் ஒரு மனிதன் தான் எனக் கூறி அங்குக் கூடி வந்திருப்பவர்களிடம் பிரசங்கித்தார். அங்கிருந்த அனைவருக்கும் ஆச்சரியம் உண்டானது. ஏனென்றால், கடவுள் யூதருக்கு மட்டும் தான் தயவு காட்டுகிறார் என அங்கிருந்தவர்கள் நினைத்தார்கள். ஆனால் எந்த ஒரு மக்கள் இனத்தையும் மற்ற இனத்தாரை விட மேலானவர்களாக அல்லது அதிக முக்கியத்துவம் வாய்ந்தவர்களாகக் கடவுள் கருதுவதில்லை. அவர் தம்மைச் சேவிக்கிற எல்லோரையும் ஏற்றுக்கொள்ளுகிறார் என்பதைப் பேதுரு அங்கே மக்களுக்குப் புரிய வைத்தார்.

கோரேஸ் மன்னன் யூதன் அல்லாத போதும் அவனைக் கொண்டு கடவுள் தன் திட்டத்தையும் நோக்கத்தையும் செயல்படுத்துகிறார். கானானிய பெண்ணுடன் இயேசுநாதர் உரையாடியதால்; எல்லைத் தாண்டிய உறவுக்கும் சிந்தனை மாற்றத்திற்கும் அது வழிவகுத்தது. பேதுருவுக்குத் தம் தரிசனத்தின் மூலம் பேதுருவின் குறுகிய மனநிலையை மாற்றி எல்லைக்கு அப்பாற்பட்ட நிலையில் கடவுள் அனைவரையும் நேசித்து ஏற்றுக்கொள்ளுகிறார் என்பதை வெளிப்படுத்தினார். உலகத்தில் வாழும் மனிதர்கள் யாராக இருந்தாலும் அவர்களின் வாழும் இடம், நிறம், இனம், சமயம், மொழி ஆகியவைகளை கடவுள் பார்ப்பதில்லை. கடவுளிடம் கொள்ளும் நம்பிக்கையும் அன்பின் செயல்பாடுகளுமே மிக அவசியமானது என உணர்தல் வேண்டும். There is redemption outside the Church as well. திருச்சபைக்கு உள்ளே மட்டுமல்ல வெளியேயும் மீட்பு உண்டு என்ற திருத்தந்தை சிப்பிரியானின் வார்த்தைகளைப் புரிந்துகொண்டு நாம் வாழுமிடங்களில் உடன் வாழும் அனைவரையும்; அன்பு செலுத்தி ஏற்று வாழ்வோமாக, ஆமென்.

4	ஞா. 13	கீர். 282

அருள்திரு. அறிவர். P. ராஜா ஜெயசிங்
ஆயர், செம்பொன்விளை

இறைவேண்டல்

அருள் நிறைந்த கடவுளே, நீர் முழு உலகையும் உருவாக்கியதற்காகவும், நீர் படைத்த அனைத்திற்கும் கருணை காட்டுவதற்காகவும் நாங்கள் உமக்கு நன்றி கூறுகிறோம். அனைத்து மக்களின் வாழ்விலும் உமது நிலையான அன்பைப் புரிந்து கொள்ளவும், இதன் மூலம் நாங்கள் வாழ்க்கையின் கண்ணியத்தை உறுதிப்படுத்தவும் எங்களுக்கு உதவி செய்யும். உம்மோடும் தூய ஆவியரோடும் வாழ்ந்து இப்போதும் என்றென்றும் ஆட்சி செய்யும் ஒரே கடவுளான எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் வேண்டுகிறோம், ஆமென்.

தீமைகள் மேல் வெற்றி

யோவா. 6: 16-21

"இயேசு செய்த இந்த அரும் அடையாளத்தைக் கண்ட மக்கள், உலகிற்கு வரவிருந்த இறைவாக்கினர் உண்மையில் இவரே" என்றார்கள்
(யோவா. 6: 14).

கடவுளின் உடன்படிக்கையினை மீறி தவறு செய்தலை தீமை என்கிறோம். தீமை என்பது குறி தவறுவது மட்டுமல்ல, நேரான பாதையிலிருந்து விலகிச் செல்லுதலும் ஆகும். கடவுளால் படைக்கப்பட்ட மனிதன் தன் கீழ்ப்படியாமையினால் தீயவனால் சோதிக்கப்பட்ட நிலையில் வாழ்வின் தொடக்கத்திலிருந்தே தீமையைத் தேர்ந்தெடுத்துள்ளான். உண்பதற்குச் சுவையானதாகவும் கண்களுக்குக் களிப்பூட்டுவதாகவும் (தொ.நூ. 3: 6). ஆனால் இறைவனுடைய சித்தத்திற்கு அப்பாற்பட்ட படைப்புகளில் அவன் தனது நன்மையைத் தேடினான். இத்தேடலில் அவன் துன்பம் மற்றும் மரணத்தினுடைய கசப்பான கனிகளைக் கண்டடைந்தான் (தொ.நூ. 3: 16-19) அவனது பாவத்தின் விளைவாக, தீமையானது உலகிற்குள் கொண்டுவரப்பட்டு அங்கேயே பலுகிப் பெருகியது. ஆதாமின் பிள்ளைகள் எந்த அளவிற்கு தீயவர்களானார்களெனில், அவர்களைப் படைத்தமைக்கு இறைவரே வருத்தப்படும் அளவிற்கு அமைந்திருந்தது (தொ.நூ. 6: 5-7). தாங்கள் செய்த தீமையின் பயனாக மக்கள் தங்களுக்குள் கொண்ட கூட்டுறவையும் கடவுளோடு கொண்ட நட்பையும் இழந்துவிட்டனர். எனவே தான் உபாகம ஆசிரியர் உன் நடுவிலிருந்து தீமையை அகற்றுவாய் என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றார் (உபா. 13: 5, 17: 7-12, 19: 19). இன்று தீமைகள் பல்வேறு வடிவில் அதற்கு நேராக நம்மை ஈர்க்கும் ஊடகங்களாய்க் காணப்படுகின்றன. அஃது இறைவனுக்கு எதிரானதும், குமுகாயத்தைச் சீரழிக்கின்றதாயும் ஆன்மாவைச் சிதைக்கின்றதாயும் காணப்படுகின்றன. உலகனைத்தும் தீயோனின்பிடியில் இருக்கிறது (1 யோவா. 5: 19, யோவா. 7: 7). இத்தீயோனின் பிடியினின்று மனிதரைக் காக்க எல்லாம் வல்ல இறைவன் தீமையின் மீதும் தீயோனின் மேலும் வெற்றி கொள்ளவேண்டும் என்கிறார். தீமைகள் மேல் வெற்றிபெற நாம் செய்யவேண்டியது என்ன என்பதைக் குறித்து தியானிப்போம்.

1. உலக ஆசையை வெறுப்பது

இயேசு செய்த அரும் அடையாளத்தைக் கண்ட மக்கள் அவரைப் பிடித்துக் கொண்டு சென்று அரசராக்க முயன்றார்கள். இதனை உணர்ந்த இயேசு உலக பதவியும், ஆசையும் அது உன்னதத்திற்கானது அல்ல, அது உலகிற்கானது என்பதனை அறிந்து அவர்களை விட்டுத் தனியே மலைக்குச் சென்றார் (யோவா. 6: 14,1 5). மக்கள் செல்வாக்கு, பணம், பதவி, புகழ், உயர்வு போன்ற உலக மதிப்பீடுகள் நம்மை ஆட்கொள்ளும்போது நாம் மிகுந்த

விழிப்புடையவர்களாயிருக்க வேண்டும். ஏனெனில் இத்தகைய ஆசைகள், மதிப்பீடுகள் பலவும் நம்மை ஆபத்திற்கு இழுத்துச் செல்லும் காரணிகளாய் அமைகின்றன. அலகையானவன் இயேசுவை ஒரு உயர்ந்த மலைக்குக் கூட்டிச் சென்று உலக அரசுகள் அனைத்தையும், அவற்றின் மேன்மையையும் அவருக்குக் காட்டி, உமக்குத் தருவேன் என்று உலக ஆசையினைக் காட்டி (மத். 4: 8-10) இயேசுவின் சிலுவை தரிசனத்தை இழக்க வைக்க முயன்றான். இயேசு அவன்மேல் வெற்றி கொண்டார். நாம் உலகை ஆளவேண்டுமே தவிர உலகம் நம்மை அடிமைப்படுத்திவிடக்கூடாது. இயேசு உலகின்மீது அன்பு கூர்ந்தார். கடவுள் தம் மகன் வழியாகவே உலகங்களைப் படைத்தார் (எபி. 1: 2). உலகம் அவரை மேற்கொள்ளவிடவில்லை. இயேசுவின் சிலுவை மரணத்தினால் பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கப்படுகிறோம் (கலாத். 1: 4). கடவுளை ருசிபார்த்து அவரது இரத்தத்தால் தூய்மையாக்கப்பட்டவர்கள் இவ்வுலகில் தாங்கள் அன்னியர் என்பதையும், தற்காலிகக் குடிகள் என்பதையும் ஏற்றுக்கொண்டார்கள். அவர்களை ஏற்க இவ்வுலகுக்குத் தகுதி இல்லாமல் போயிற்று (எபி. 11: 13, 38). பவுல் தனது அனுபவத்தில் சிலுவையை அவரது பெருமையாகவே எண்ணினார். உலகம் அவருக்குச் சிலுவையில் அறையப்பட்டிருந்தது. அவரும் உலகிற்குச் சிலுவையில் அறையுண்டிருக்கிறார் (கலா. 6: 14). இந்த உலகம் நம்மை சிலுவையில் அறையப்பட்டவர்களாகப் பார்க்கவேண்டும். மாய்மாலமான வாழ்வும், சுயநலப்போங்கும், அதிகார வெறியும் சிலுவைப்பாடுகளுக்கு எதிரானது. நீ உலகில் வாழவேண்டியவன் தான் ஆனால் உலகத்தை உனக்குள் வாழவிடாதே; உலகை உனக்குக் கீழாக்கு. இயேசு எதற்காக இந்த உலகில் தியோனை வென்றாரோ அதுபோல நாமும் இறைவார்த்தையினைக் கொண்டு தீமையினை வெற்றிகொள்ள தவக்காலங்களல் உறுதி ஏற்போம்.

2. பற்றுறுதி வாழ்வினை ஏற்பது

இயேசுவின் சீடர்களின் கப்பர்நகூம் நோக்கிய இரவுநேரப் படகுப் பயணத்தில் பெருங்காற்றும், கடல் கொந்தளிப்பும் அவர்களைப் பாடுகளுக்கு உட்படுத்தியது. பயத்தை உண்டாக்கியது தொடர்ந்து பயணிக்க இயலாமல் பாதிப்பை ஏற்படுத்தியது. இந்நிலை அவர்களுக்குப் புதிதல்ல. செம்படவர்களாயிருந்த சீடர்களுக்குப் பழக்கப்பட்ட ஒரு நிலை இது. எனினும் சீடர்கள் தண்டுவலிக்க இயலா நிலையில் புயலின் சீற்றம் அதிகமாகக் காணப்பட்டது (மாற்கு 6: 48). இயேசு அவற்றை வேடிக்கையாகப் பார்த்துக் கொண்டிராமல் அபாயகரமானச் சூழலில் அவர்களைக் காப்பாற்ற கடல்மீது நடந்து சென்றார். இயசே அவர்களிடம் நான் தான் அஞ்சாதீர்கள் என்றார். இங்கு இயேசு தம் இறை ஆற்றலினால் சீடர்களின் பற்றுறுதியினைத் தட்டி எழுப்புகின்றார். அத்துடன் தம்மை நம்பியவர்களைக் காப்பாற்றக் காத்திருப்பவர் என்ற தெளிவினையும் கற்றுத்தருகின்றார். மேலும் மெசியாவாகிய வாழ்வுதரும் இறைவன் கடவுள் தன்மை கொண்டவர். கடவுள் நீரின் மீது தமது வல்லமையைக் காட்டினார் என்கிற பழைய ஏற்பாட்டுக் கருத்து

இயேசுவில் நிறைவேறுவதையும் யோவான் சுட்டிக் காட்டுகின்றார் (யோபு 9: 8, தி.பா. 77: 19, எசா. 43:16). இப்பகுதியில் இயேசு அடையாளங்களால் அடையாளமாகின்றார். சிலுவை ஓர் தொடர் நிகழ்வு. அதனை ஒரு புது அடையாளமாக, வெற்றியின் கூறுபாடாக இயேசுவால் கொடுக்கப்படுகின்றது. இயேசு அருஞ்செயல்கள் வழி தீமையை எதிர்த்து போர் செய்கின்றார். இயேசு தீமையை மட்டும் எதிர்த்துப் போராடவில்லை பாவத்தையும் எதிர்த்துப் போராடினார். அனைத்திற்கும் மேலாக சிலுவையில் அன்பை முற்றிலும் கைவிட அவருக்குப் பெரும் சோதனை ஏற்பட்டது என்ற போதிலும் அச்சோதனையில் வெற்றி பெற்றுப் பாவத்தை முற்றிலும் தோற்கடித்தார். மூன்றாம் நாள் உயிருடன் எழுந்து சாவின்மேலும் தீமையின் மேலும் வெற்றியடைந்தார். கடவுள் தாமே தம் திருமைந்தர் வழியாக மனிதராகி, மனிதர் அடைய வேண்டிய வெற்றியை அடைந்தார். நான் உலகத்தை வென்றேன் என்கிறார் இயேசு (யோவா. 16: 33). வாழ்க்கை என்னும் படகில் புயல் என்னும் தீமைகள் மோதி அலைக்கழிக்கப்பட்டு, தளர்வடைந்து நம்பிக்கை இழந்துபோகும் சூழல் ஏற்படலாம். எங்கும் காரிருளாய்த் தோன்றும் அனுபவமும் உண்டாகலாம். அவர் சிலுவை நாதராய், வெற்றி வேந்தராய் நம் அருகில் வருகின்றார். அவர் துன்பத்தைத் தாங்க வலிமையையும், பாடுகளை ஏற்க பெலனையும், பயணங்களில் உடனிருப்பையும் வெளிப்படுத்துகின்றார். அவர்மீது நாம் பற்றுறுதி கொண்டு தீமைகளின் மேல் வெற்றிபெற்று அவருடன் பயணிப்போம் அவருக்காய்ப் பாடுகளை ஏற்போம், ஆமென்.

ᴨ	ஞா. 221	கீர். 280

அருள்திரு. S.E. சிமியோன்

ஆயர், படந்தாலுமூடு

உள்ளொளி தரும் உன்னதர்

யோவா. 9: 1-17

"நீர் சீலோவாம் குளத்துக்குபோய்க் கண்களைக் கழுவும் என்றார். சீலோவாம் என்பதற்கு அனுப்பபட்டவர் என்பது பொருள். அவரும் போய்க் கழுவிப் பார்வை பெற்று திரும்பி வந்தார்" (யோவா. 9: 7).

ஓர் குக்கிராமம், அதில் நற்செய்தி அறிவித்து கொண்டிருந்தபோது இயேசு, இன்றும் அற்புதங்கள் செய்கிறார். எந்த நோயுள்ளோரையும் அவர் குணமாக்குகிறார் எனச் சொல்ல, நற்செய்தி கேட்டுக்கொண்டிருந்தவர்களில் சிலர், பிறவியிலே பார்வையற்ற ஒருவனை அழைத்துக்கொண்டு வந்தனர். அவனுக்குச் சில மருத்துவ உதவிகளைச் செய்து கண்களில் கை வைத்து ஜெபித்து கண்களைக் கழுவ அவன் பார்வை பெற்றான். இந்தச் செயல் நடந்தபடியினால் அக்கிராம மக்கள் முழுவதும் நற்செய்தியாகிய ஒளியைப் பெற்று இயேசுவை ஏற்றுக்கொண்டனர். இங்குத் தரப்பட்டுள்ள தலைப்பு உள்ளொளி தரும் உன்னதர் என்பதாகும். இதன் வழி ஒரு சில உண்மைகளைத் தியானிப்போம்.

1. அவிசுவாசப் பார்வை

இயேசு சொன்னார், நான் உங்களுக்கு ஒளியாய் இருக்கிறேன் என்றார். அவ்வொளியை ஏற்றிராத மக்கள் பார்வையிழந்த மனிதனைக் குறித்து சில கேள்விகளை முன்வைத்தனர். இயேசுவின் சீடர்களும் உள்ளான ஒளியைப் பெறாததற்குக் காரணமாயிருந்தனர். சீடர்கள் இயேசுவிடம் இவர் பார்வையிழந்தவராகப் பிறந்தது இவர் செய்த பாவமா? அல்லது இவர் பெற்றோர் செய்த பாவமா? எனக் கேட்டனர். காரணம் நோய், துன்பங்கள் யாவும் பாவத்தால் வருகிறது என்பது யூத நம்பிக்கை. ஒரு குழந்தை தாயின் கர்ப்பத்தில் இருக்கும்போதே பாவம் செய்யக்கூடும் என இரபிமார்கள் நம்பினர். இயேசுவின் காலத்திலும் ஒருவன் பிறவியிலேயே பாதிக்கப்படுகிறவன் என்றால் அது அவன் பிறப்பதற்கு முன்பே செய்த பாவம் எனச் சிலர் நம்பினர். நான் எரிச்சலுள்ள கடவுளாய் இருக்கிறப்படியினால் என்னைப் பகைக்கிறவர்களின் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம், நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவராய் இருக்கிறேன். அவன் பிதாக்களின் அக்கிரமத்தை கர்த்தருக்கு முன்பாக நினைப்பூட்டகடவது. அவன் தாயின் பாவங்கள் நீங்காமலிருப்பதாக என திருப்பாடல் கூறுகிறது. பாவ இருள் இங்கே ஒளியைக் கவ்விக்கொள்ள காரணமாகின்றன. ஒளிக்கு அங்கே இடமில்லை. எனவே, கடவுளிடம் திரும்பி வர மனமற்றவர்கள் ஆனபடியால் அவிசுவாசம் அவர்கள் வாழ்வை சீர்குலைய வைத்துவிடுகின்றன. வெளிப்பார்வையும், அகப்பார்வையும் தெளிந்த நிலையில் இல்லாமல் இருப்பது நல்லதல்லவே. இன்று சுகவீனமும் மாற்றுதிறன்களும் ஏதோ பாவத்தின் விளைவுதான் எனும் கருத்து நிலவுகிறது. அது சுகவீனத்தில் இருக்கும் நண்பரையோ அல்லது அவரின் குடும்பத்தையோ பாவத்துடன் இணைத்து பார்க்கும் பார்வை தானாகவே அமைகிறது.

2. விசுவாசப் பார்வை

பழைய ஏற்பாட்டில் குணமாக்குதலுக்குப் பயன்படுத்தப்படும் மூலச்சொல் ராபா என்பதாகும். ராபா என்பதன் பொருள் பெலவீனம். ராபா எனும் மூலசொல்லிலிருந்து ரபூஅ எனும் சொல் வருகிறது. இதற்கு மருந்து எனப் பொருள். இயேசு எப்போதெல்லாம் சுகமளிக்கின்றாரோ அப்போதெல்லாம் விசுவாசத்தைப் பார்க்கிறார். எங்கே விசுவாசம் இல்லையோ, அங்கே இயேசு அற்புதம் செய்யவில்லை. பார்வையற்ற மனிதர், முழு விசுவாசத்தின் அடிப்படையில் இயேசுவை முதலில் மனிதராக, ஓர் இறைவாக்கினராக, கடவுளிடமிருந்து வந்தவராகவும் கடைசியில் இறைமகனாகக் காண்கின்றார். அதன்படி இயேசு மண்ணில் உமிழ்ந்து உமிழ்நீரினால் சேறுண்டாக்கி அச்சேற்றைப் பார்வையற்றவருடைய கண்களில் பூசி சீலோவாம் குளத்தில் சென்று கழுவும்படி சொன்னார். அவர் சொன்னபடி சீலோவாம் குளத்தில் சென்று கழுவினபோது அவன் பார்வை பெற்றவனாகத் திரும்பிவந்தான். எங்கே விசுவாசம் இல்லையோ அங்கே அற்புதம் செய்யவில்லை. இயேசு உமிழ்தல், சேற்றைப் பூசுதல், கழுவுதல் போன்ற செயல்களால் நோயாளிகளின் நம்பிக்கையை வலுப்படுத்துகின்றார்.

இன்று மனுக்குலம் பல்வகைப்பட்ட கொடிய வியாதிகளினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இயேசு வியாதியுள்ளவர்களை குணமாக்கினது மட்டுமல்லாது, தமது சீஷர்களுக்கும் குணமாக்கும் பணிகளைச் செய்யுங்கள் என்றார். அதுபோல சீஷர்களாகிய நாமும், நோயாளிகளைக் கண்டறிந்து உதவுதல், நோயாளிகளைக் கவனித்துக் கொள்ளுதல், வாழ்வளித்தல், இறைவேண்டல் செய்தல், ஆற்றுப்பணிச் செய்தல் போன்றவற்றை நிறைவேற்றுவோம். இப்பணிகளை, அனைத்து திருச்சபையும் செய்வது தலையாய கடமையாகும். உடல்நலம் குன்றியோரைக் குணமாக்கும் ஆண்டவர், நம்மையும் அப்பணிகளில் இணைத்து, தனி மனித வாழ்விலும், குடும்பத்திலும், சமூகத்திலும் செயல்பட வைக்கும்போது கடவுள் நேரடியாகவோ, தீர்க்கர்கள் வழியாகவோ, இயேசுவின் வழியாகவோ குணமாக்குகிறார். இன்று வாழ்வில் சுகம்பெற அனேக முயற்சிகளை மனிதன் எடுக்கிறான். தன் செல்வத்தைச் செலவழிக்கிறான். புண்ணிய யாத்திரை செல்லுகிறான். கசப்பான மருந்துகளை உட்கொள்ளுகிறான். கடினமான சிகிட்சைகளுக்குத் தன்னை உட்படுத்திக் கொள்ளுகிறான்.

உலகில் ஒன்றுக்கொன்று எதிரிடையான இயல்புகள் பல. அவற்றுள் முக்கியமாக நன்மை - தீமை, இருள் - ஒளி இவை பல்வேறு வடிவங்களில் செயல்படுகின்றன. நானே உலகின் ஒளி என மக்களைப் பார்த்துக் கூறினார். என்னைப் பின் தொடருகிறவர் இருளில் நடக்கமாட்டார். வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளியைக் கொண்டிருப்பார் என ஆண்டவர் கற்றுக் கொடுத்தார். இதனை உணராத சீடர்களுக்குப் பார்வையற்ற மனிதன் பார்வைப் பெற்றதின் மூலமாக உணர்த்தினார். அவன் மட்டுமல்ல, உள்ளொளி பெற்றதில் சீடர்களும் அடங்குவர். நாமும் அவ்வண்ணமாக உள்ளொளி பெற்று வாழ்வோம், ஆமென்.

Eva. T.S. ஏசையன்
திருப்பணிவிடையாளர், ஓரேப்பனவிளை

ப	ஞா. 210	கீர். 271

30.03.2025 உயிர்ப்புத் திருநாளுக்கு முன் வரும் மூன்றாம் ஞாயிறு

ஒடுக்கும் கட்டமைப்புகளை மாற்றுருவாக்கம் செய்தல்

Transforming the Oppressive Structures

நாகூ. 1: 1-15 தி.ப. 4: 32-37

தி.பா.113 லூக். 13: 10-17

“ இப்பொழுதே, உன்மேல் இருக்கும் அவன் நுகத்தை முறித்து உன் கட்டுகளை நான் அறுத்துவிடுவேன்” (நாகூ. 1: 13).

எந்த நாடும் அமைதியுடனும் நல்லிணக்கத்துடனும் வாழவேண்டுமானால் அதற்கு முறையானக் கட்டமைப்புகள் வேண்டும். இவற்றால் பொதுமக்கள் அச்சமின்றி வாழவும் ஒருவர் இன்னொருவருடன் இலகுவாகத் தொடர்பு கொள்ளவும் இயலும். பாரம்பரியமும் நவீனமும் அருகருகே பயணித்தாலும் புதிதாக உருவெடுக்கும் நவீனமயமாக்குதல் குடும்பம், இனம், மொழி, கலாச்சாரம், பொருளாதாரம் போன்றவற்றில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இவை அனைத்தும் தங்களுக்குள்ளேயும் ஒன்று இன்னொன்றிலும் ஆதிக்கம் செலுத்தி ஒடுக்குதலின் கூறுகளை அரங்கேற்றுகின்றன. இதனால் பாதிக்கப்பட்ட அமைப்புகள் அதிகம். அதிகாரம், பிறர்நலம் கருதாமை, சுரண்டல், அழித்தல் போன்றவை வழியாக பிற அமைப்புகள் ஒடுக்கப்படுகின்றன. கடவுள் ஒடுக்கும் மக்களை ஒருபோதும் ஆதரித்ததில்லை. எகிப்தியர் இஸ்ரயேலர்களை ஒடுக்கிச் சுகம் கண்டதைக் கடவுள் அனுமதிக்க மறுத்ததே இதற்குச் சான்று. உடல், உள்ளம், உறவு, உரிமை போன்றவை சமூக கட்டமைப்புகளால் ஒடுக்கப்படும்போது கடவுள் ஒடுக்கப்படும் மக்களோடு தன்னை அடையாளப்படுத்தி அவர்களை விடுவித்து புதுவாழ்வு அளித்து ஆற்றல்படுத்துகிறார் என்பதே திருமறை தரும் சான்று (வி.ப. 3: 1-9).

மக்களை அடக்கிக் கீழ்படுத்தும் அமைப்புகளைக் கடவுள் கண்டிக்கிறார். ஒடுக்குகிறவர்கள் கடவுளின் நீதி தீர்ப்புக்குத் தப்பார் எனத்

திருமறை வழியாகத் தெளிவுப்படுத்துகிறார். “சபை கிறிஸ்துவின் உடல், இறைமக்களாகிய நாம் அதன் உறுப்புகள்” (1 கொரி. 12: 27) என்னும் கருப்பொருளில் காலகாலமாக சிந்திக்கும் நாம் உடலாகிய சபை வழியே ஒடுக்கும் அமைப்புகளை மாற்றுருவாக்கம் செய்ய கொடுக்கப்பட்ட மறைப்பாடங்கள் வழி சிந்திப்போம்.

1. நம்பிக்கையின் வார்த்தை வழி மாற்றுருவாக்கம்

. . . உன்னை நான் இதுவரை துன்புறுத்தியிருந்தாலும் இனிமேல் உன்னைத் துன்புறுத்தமாட்டேன் (நாகூ. 1: 12).

எப்போதும் நம்பிக்கைதரும் வார்த்தைகளைப் பேசுவது ஒருவகை பயிற்சிக் கலை. இவற்றிற்கென்று ஒரு தனிச்சிறப்பு உண்டு. நம்பிக்கைதரும் வார்த்தைகள் நம்மை ஆளுமையின் அடுத்த நிலைக்குக் கொண்டு செல்லும். நம்மிடமிருந்து வெளிவரும் நல்லவார்த்தைகள் நமக்கும் நம்மைச் சுற்றி இருப்போருக்கும் நம்பிக்கையைக் கொண்டுவரும். அது கேட்போருக்கு மகிழ்ச்சியைத் தரும். உடல் நலம் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு ஆறுதலாகப் பேசும் நம்பிக்கைதரும் வார்த்தைகள் மருந்துக்கு இணையானவை. எதிர்பார்த்தது நிறைவேறாமல் சோர்ந்திருப்போருக்குத் தரும் நம்பிக்கையின் வார்த்தைகளே, அவர்களுக்கு உலகளாவியத் தீர்வாக (Universal Remidy) அமையும்.

முதலாம் திருமறைப்பகுதியின் பின்புலத்தின்படி யோனாவின் பிரசங்கத்தில் மனந்திரும்பிய நினிவே மக்கள் ஒரு நூற்றாண்டிற்குப்பின்னும் வழிபாட்டிலும், வன்முறையிலும், ஆணவப் போக்கிலும் சென்றதால் அசீரியர்கள் இஸ்ரயேலை கிமு. 722இல் முழுமையாக அழித்து அதன் மக்களுள் பலரை நாடு கடத்தினர் (2 இரா. 17: 3-6; 18: 9-10). அசீரியர்கள் யூதாவையும் தாக்கி அதன் மக்களை வரி செலுத்த பணித்தனர். யூதாவின் செல்வங்களை அசீரியர்கள் கொள்ளயடித்தனர். அசீரியர்கள் தங்கள் உல்லாச வாழ்வுக்கு யூத நாட்டு வளங்களைச் சுரண்டிச் சேர்த்தனர். யூதா நாட்டு மக்கள் அசீரியர்களின் அடக்குமுறை ஆட்சிக்குட்பட்டதால் அவதியுற்று அல்லல்பட்ட வேளையில் “யாவே என் ஆறுதல்” என்னும் பொருள்கொண்ட நாகூம் தீர்க்கதரிசி யூதா மக்களிடையே நம்பிக்கைச் செய்தியாக “பல நாடுகளைக் கையகப்படுத்தி வல்லரசு என்ற பெயரில் உங்களை அடிமைப்படுத்திய அசீரியா அழிவது நிச்சயம். பிற நாட்டினை ஒடுக்குகிறவர்கள் எவ்வளவு வலிமை பெற்றவராயிருந்தாலும் கடவுளின் நீதித் தீர்ப்பிற்குத் தப்பார். கடவுடைய கோபத்திற்குமுன் எவரும் நிற்பதில்லை” என்று கூறுகின்றார் (நாகூ. 1: 2-6). கடவுளிடம் நம்பிக்கைக்கொள்ளும் மக்களுக்குப் பாதுகாப்பைத் தருபவரும் அவரே (நாகூ. 1: 7). இறைமக்களுக்கு எதிராக தீட்டப்படும் திட்டங்கள் அனைத்தும் கடவுளுக்கு எதிரானவை (நாகூ. 1: 8-12). எனவே யூதா மக்கள்

அசீரியாவைக் குறித்து பயப்பட வேண்டியத் தேவையில்லை. ஏனெனில், கடவுள் தம் மக்களை அடிமை நுகத்திலிருந்து விடுவிப்பார். எருசலேம் மக்கள் தங்கள் விழாக்களை அமைதலோடே கொண்டாலாம் என நாகூம் கூறிய நம்பிக்கை தரும் கூற்று ஒடுக்கப்பட்ட யூதாவின் மக்களுக்கு ஒடுக்குதலிருந்து விடுதலை பெற்று மாற்றுருவாக்கம் நோக்கி வீறுநடை போடும் நம்பிக்கையைத் தந்தது.

அக்டோபர் 9, 1924, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக தன் வாழ்க்கையை அர்ப்பணித்த இம்மானுவேல் சேகரனின் நூற்றாண்டை நினைவுகூரும் நாள். தன் சொந்த நலனைவிடவும் தன்னைச் சுற்றியுள்ள ஆதிக்க ஜாதியின் அடக்குமுறையால் அடிமைத்தளையில் சிக்கித்தவித்த மக்களின் உரிமைகளைப் போராடிப்பெறத் தூண்டினதால், 1957-இல் முதுகுளத்தூரில் வைத்து ஆதிக்க சாதியரால் கொலைச் செய்யப்பட்டார். அவருடைய உயிர் ஒடுக்கப்பட்டோர் விடுதலைக்கான விதையாக மண்ணில் விதைக்கப்பட்டது. ஒடுக்கும் அமைப்புகளை மாற்றுருவாக்கம் செய்ய நமது பங்களிப்பை தர முற்படுவோம்.

2. நற்சான்று வழி மாற்றுருவாக்கம்

“திருத்தூதுவர் அனைவரும் ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுந்தார் என மிகுந்த வல்லமையோடு சான்று பகர்ந்து வந்தனர்” (திப. 4: 33).

இயேசுவின் சீடர்கள் அவரைப் பற்றிச் சான்று பகர்வதே அவர்களின் தலையாயப் பணி. சான்று பகர்தல் என்று சொல்வதில் அனுபவம் பெறுதல், நம்பிக்கை கொள்தல், அறிவித்தல், வாழ்ந்து காட்டுதல் என இவைகளில் உள்ளன. நான்கு நிலைகளில் “வாழ்ந்து காட்டுதலே” முதன்மையானது என எண்ணத் தோன்றுகின்றது. ஒரு குருவும் மூன்று சீடர்களும் வாழ்ந்து வந்தனர். எதிர்பாராத நேரத்தில் குரு இறந்தார். மூன்று சீடர்களும் குருவின் நல்லகுணமும் நல்ல பண்புகளும் நீண்டகாலமாக நிலைக்க, அவரை நெடுங்காலம் நினைவுகூர ஏதாவது செய்யவேண்டும் என யோசித்தனர். ஒரு சீடன் குருவுக்கு ஆளுயர சிலை செய்து, தெருவின் ஓரத்தில் வைப்போம். அப்படியென்றால், நீண்ட நாட்கள் அவரது உருவம் எல்லோர் மனதிலும் நிற்கும் என்றார். இன்னொருவர், சிலை வைத்தால் காக்கா எச்சம் போடும். கலவரத்தில் கை, கால் உடைப்பார்கள் அசிங்கமாகிவிடும். எனவே, அவர் போதித்த நல்லுரைகளைப் புத்தகமாக அச்சிட்டு விநியோகிப்போம் என்றார். மூன்றாம் சீடன், புத்தகம் எல்லோரும் படிப்பதில்லை, எனவே அவர் போதித்த நல்லுரையின்படி நாம் மூவரும் வாழ்ந்து காட்டுவோம். அதுவே பலரது மனதை இழுத்து குருவின் நல்லறிவில் தொடர அதிகம் வாய்ப்பு உண்டு என்றாராம்.

சொல்லிலே சிறந்த சொல் “செயல்”. சொல்லுக்குச் செயல்வடிவம் கொடுத்து வாழ்ந்து காட்டுதலே சான்று பகர்தலின் சிறப்பு. இன்று தரப்பட்ட திருமுகப் பகுதியில் தொடக்க காலப் பற்றாளர்கள், தூய ஆவியாரின்

செயல்பாட்டால் திருத்தொண்டர்களின் ஆலோசனைக்கேற்ப தங்கள் உடைமைகள் அனைத்தையும் பொதுவாக வைத்து அனைவருக்கும் சமமாகப் பகிர்ந்தனர். இன்று இது சாத்தியம் என்பதற்கில்லை. ஆனால் இருப்பதை இல்லாதவர்களுக்கு இயன்ற மட்டும் பகிர்ந்து வாழ்வதே "சான்று பகர்தலின்" முழுமை. இப்பகிர்வில் உறவு, இசைவு, அனைவரும் சமம் எனும் இறையாட்சியின் விழுமியங்கள் (தி.ப. 4: 32-37) சான்றாகின்றன. யூத சமயத்தவராலும் உரோம ஆட்சியாளர்களாலும் பல ஒடுக்குதல்களைச் சந்தித்த தொடக்கத் திருச்சபையின் பற்றாளர்கள் அனைவரையும் மனதளவில் ஒன்றுபடுத்தி, தங்களுக்கென்று இருந்தவற்றை கிறிஸ்துவுக்குள் தாங்கள் பெற்ற சகோதர சகோதரிகளுடன் பகிர்ந்து, ஒடுக்கும் அமைப்பிற்கு மாற்றாக மாற்றுருவாக்கம் நடப்பித்து கொண்டார்கள். கிறிஸ்துவின் உள்ளம் நம்மில் வெளிப்படும்போது நாம் ஒரு மனதோடு ஒருவரையொருவர் இசைந்து வாழ்ந்து இறைசித்தத்தை வெளிப்படுத்தி நற்சாட்சிப் பகிர்வோம்.

3. நலமாக்குதல் வழி மாற்றுருவாக்கம்

"தம் கைகளை அவர்மீது வைத்தார். உடனே அவர் நிமிர்ந்து கடவுளைப் போற்றிப் புகழ்ந்தார்" (லூக். 13: 13).

ஒவ்வொருவரும் உடல்நலத்தோடும் முழு சுகத்தோடும் வாழ்வதையே விரும்புகின்றனர். ஒருவர் நலத்தோடு வாழ்வதைச் சமூகத்தின் பல்வேறு கூறுகள் தீர்மானிக்கிறது. சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் சமயக் கூறுகள் ஒருவர் சுகம் பெறுவதற்குத் தடையாக இருப்பது தொடக்கக் காலம் தொட்டே இருந்து வருகின்றது. இன்றைய நற்செய்திப் பாடத் தகவலின்படி, இயேசு கிறிஸ்து வாழ்ந்த காலத்தில், உடல் நலமற்ற ஒருவர் நலம்பெற சமயக் கூறுகள் உடல் நலமற்றவருக்குத் தடையாக இருந்தன. யூத சமயக் கட்டமைப்பு ஓய்வுநாளில் சுகம்பெறுவதைத் தடுத்தது. "ஷபாத்" அல்லது ஓய்வுநாள் என்பது யூதர்களின் ஆன்மிக அடையாளம். ஓய்வுநாளில் உழைப்பைத் தவிர்த்து ஓய்ந்திருத்தல் முக்கியமாக அறிவுறுத்தப்பட்டது. ஓய்வுநாளில் உழுதல், விதைத்தல், அறுவடை செய்தல், கதிரடித்தல், அரைத்தல், பிசைதல், வெட்டுதல், சலவை செய்தல், சாயமிடுதல், நெசவுச் செய்தல், கட்டுதல், துடைத்தல், தையல், கிழித்தல், தோல் பதனிடுதல், குணப்படுத்தல் போன்ற எந்த வேலையும் செய்யலாகாது என்ற சமய ஒடுக்குதல் சமூகத்தில் புரையோடியிருந்தது.

இப்படிப்பட்ட சமூகக் கட்டமைப்பு நடைமுறையிலிருந்த காலத்தில் பதினெட்டு ஆண்டுகளாக உடல்நலம் குன்றி கூன் விழுந்திருந்த ஒரு பெண் தொழுகையில் இருப்பதை இயேசு கண்டார். ஓய்வுநாளில் நோயுற்றோரையும் உடல் ஊனத்தால் பாதிக்கப்பட்டோரையும் குணப்படுத்துவதைப் பழக்கமாகக் கொண்டிருந்த நமது ஆண்டவர் "மனிதர் ஓய்வுநாளுக்காக உண்டாக்கப்படவில்லை, மாறாக ஓய்வுநாள் மனிதர்களுக்காகவே உண்டாக்கப்பட்டது" என்பதை கூடியிருந்த சமயத் தலைவர்கள் புரியும்படியாக,

அந்தக் கூன்விழுந்த பெண்ணின் மேல் தம் கைகளை வைத்து அவளைக் குணப்படுத்தினார் (லூக். 13: 13). உடனே அவள் நிமிர்ந்து கடவுளைப் போற்றி புகழ்ந்தாள். அவள் ஆபிரகாமின் மகள் என அடையாளப்படும்படி அல்லது இறைமக்களுள் ஒருவர் என்பதை உறுதிபடுத்தும்படி (லூக். 10: 16), தன் சுய அடையாளத்தை இழந்திருந்த அப்பெண்ணின் மாண்பினை இயேசு கிறிஸ்து உயர்த்துவதை இப்பகுதி விளக்குகின்றது. ஓய்வுநாளை முன்னிறுத்தி சமய ஒடுக்கதலுக்குட்படுத்தி பெலவீனப்பட்டவர் குணமடைவதை தடுத்த சமையத் தலைவர்களுக்கு இயேசு சம்மட்டியடியைத் தந்து சமய அடிப்படைவாதத்தை வேரறுத்து, ஓய்வுநாளும் குணமாக்குதலுக்கு உரியது என்பதை தமது பணிவழியாக செயல்படுத்தி ஒடுக்கும் கட்டமைப்பை மாற்றுருவாக்கம் செய்து சமநீதியை வழங்கினார் என்பது வெள்ளிடை மலை.

இன்று சிலத் திருச்சபைக்குள்ளேயே சிறார்களும் பெண்களும் ஒடுக்கப்பட்டு கூன்விழுந்த நிலையில் நிமிரமுடியாமல் இருப்பதை அறிகிறோம். விடுதலை மற்றும் மீட்பு பற்றிப் பேசும் நாம் திருச்சபைக்குள் பொறுப்பிலும், பணியிலும் பெண்களின் கூன்விழுந்த நிலையை (bent-ness) மாற்றி கூன் இல்லா நிலையை (bentless) உருவாக்கி, சமயத்தைக் கூனாக்கும் கட்டமைப்புகளை நேராக்கும் கட்டமைப்புகளாக்குவதில் வெளிப்படுத்தும் மாற்றுருவாக்கத்தையே இயேசு நம்மில் எதிர்பார்க்கிறார். நம்பிக்கை வார்த்தைவழி, நற்சான்று வழி, நலமாக்குதல் வழி மாற்றுருவாக்கம் நடைபெற பாலமாவோம். கடவுள் நம்மில் செயல்படுவாராக, ஆமென்.

ப	ஞா. 80	கீர். 291

அருள்திரு. அறிவர் S. வில்சன்

ஆயர், கீழப்பெருவிளை

இறைவேண்டல்

ஒழுங்கு மற்றும் நீதியின் கடவுளே, உமது வியத்தகு ஞானத்தால் உலகைப் படைத்த உம்மை நாங்கள் வணங்குகிறோம். படைப்பை நிலைநிறுத்தவும், வாழ்க்கையை அழகாக்கவும் பல்வேறு சமூக, அரசியல், பொருளாதார அமைப்புகளை உருவாக்கவும், எங்களுக்கு ஞானத்தை அளித்ததினால் நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். மக்களின் நல்வாழ்வையும், உலகின் அமைதியையும், உங்கள் படைப்பின் முழுமையையும் அழிக்கும் கட்டமைப்புகளை நாங்கள் அடையாளம் காண உங்கள் ஞானத்தை எங்களுக்கு தாரும். உம்மோடும் தூய ஆவியரோடும் வாழ்ந்து இப்போதும் என்றென்றும் ஆட்சி செய்யும் ஒரே கடவுளான எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாயிலாக வேண்டுகிறோம், ஆமென்.

01.04.2025 புதிய மாத நன்றித் தொழுகை

நம்பிக்கையருளும் ஆண்டவர்

1 கொரி. 15: 51-58

"ஆண்டவரின் பணியை இன்னும் அதிகமாக எப்போதும் செய்யுங்கள்" (1 கொரி. 15: 58).

இம்மாதத்தின் சிறப்பு கிறிஸ்துவின் உயிர்ப்பு கொண்டாட்டமாகும். எனவே நாமும் நம்பிக்கையில் உறுதிப்பட்டு வாழ அழைக்கப்பட்டுள்ளோம்.

நற்செய்தி நூல்களுக்கு அப்பால், இயேசுவின் உயிர்ப்பை பற்றிய தொடக்கத் திருச்சபையின் நம்பிக்கையைக் குறித்து விரிவாகப் பேசுகிற ஒரே பகுதி 1 கொரி. 15-ஆம் பிரிவாகும். இந்த அளவுக்கு இயேசுவின் உயிர்ப்பை பற்றி விரிவாகப் பேசவேண்டியத் தேவை பவுலாருக்கு ஏன் வந்தது என்பதை அறிவது பொருத்தமானதாகும்.

கொரிந்துத் திருச்சபையில் பல பிளவுகள் இருந்தன. இவற்றில் "இறந்தோர் உயிர்த்தெழுதல்" குறித்த பல கருத்துகளும், நம்பிக்கைகளும் கொரிந்துத் திருச்சபையில் ஆழமான பிளவுகளுக்கு காரணமாயிருந்தது. அதாவது, ஆன்மிக வாழ்வில் சிறந்தவர்கள் என்று தங்களை கருதின சிலர், மனிதர் இறந்தது இறந்ததுதான், அதன் பின்னர் உயிர்த்தெழுவர், வாழ்வர் என்று கூறுவது கேலிக்குரியது, அபத்தமானது, சாத்தியமற்றது என வாதிட்டனர். இது பவுலாருக்கு மிகுந்த கவலையை தந்தது. இத்தனைக்கும், இந்த மக்கள் "கிறிஸ்து இயேசு சிலுவையில் அறைப்பட்டு, இறந்து, உயிர்த்தெழுந்தார்" என்ற பவுலாரின் போதனையால் புற சமயத்திலிருந்து கிறிஸ்தவர்களாக மாறியவராவர். கொஞ்ச காலத்துக்குள்ளாகவே கிறிஸ்தவத்தின் ஆதாரமான இந்த பேருண்மையை உதறித்தள்ளிவிட்டனரே என்று திகைத்துப்போனார். ஆகவே, "இறந்தோர் உயிர்த்தெழுவர்" எனும் கருத்தை நிரூபிக்கவும், உயிர்த்த கிறிஸ்துவின் வருகையில் கொரிந்துத் திருச்சபையினரின் நிலை எப்படி இருக்கும் என்பதை தெளிவுப்படுத்தவும் பவுலார் ஒரு முழு பிரிவையும் (1 கொரி. 15) ஒதுக்கியிருக்கிறார்.

அதன்படி பவுலார் 1 கொரி. 15-ஆம் பிரிவில், இயேசு உயிர்த்தது உண்மையே என்றும் (15: 4), உயிர்த்த ஆண்டவர் பேதுரு, 12 சீடர்கள், ஐந்நூற்றுக்கும் அதிகமான சகோதர சகோதரிகள், யாக்கோபு, அனைத்து திருத்தூதர்கள், கடைசியில் தனக்கும் தோன்றினார் என்று சொல்லி இயேசுவின் உயிர்ப்பை நிரூபிக்கிறார் (15: 5-8). இதன் அடிப்படையில், உயிர்த்த கிறிஸ்துவின் வருகையில் கொரிந்துத் திருச்சபையின் இருப்பு என்ன என்பதையும், எப்படிப்பட்ட நம்பிக்கையை தான் கொண்டிருக்க வேண்டும் என்பதை பற்றியும் 1 கொரி. 15: 51-58 வரையுள்ள பகுதிவழி சிந்திப்போம்.

1. மாற்றுரு பெறுவோம் : (1கொரி. 15: 51, 52)

இந்த பகுதி உயிர்த்த கிறிஸ்து மீண்டும் வருவதாகவும், இந்த வருகையில் கொரிந்துத் திருச்சபை மக்கள் என்ன ஆவார்கள் என்பதையும் பேசுகிறது.

கிறிஸ்துவின் இரண்டாம் வருகை முதல் நூற்றாண்டிலேயே இருக்கும் என்பதை தொடக்கத் திருச்சபை உறுதியாய் நம்பி அதை எதிர்பார்த்திருந்தது. அதை பவுலாரின் எழுத்துகளிலிருந்தே உணர முடியும். அதாவது கிறிஸ்துவின் வருகையில் கொரிந்துத் திருச்சபை மக்கள் சாகமாட்டார்கள் என்றும் (15: 51), மாறாக இந்த உடல் அல்லது உருவம் அழிந்து, இன்னொரு உருவத்தை அல்லது உடலை பெறுவோம் (resurrection body) என்றும் கூறுகிறார். பவுலை பொறுத்தமட்டில், இந்த உடல் அழிவுக்குரிது. ஏனென்றால், மனித உடல் நோய், காயம் மற்றும் அழுகுதல் (decay) அல்லது அழிவுக்கு உட்பட்டது. ஆகவே, கிறிஸ்து வரும்போது என்றும் அழியா உடலை நாம் பெறுவோம் (15: 53) என்றும் கூறுகிறார். மேலும், கிறிஸ்துவின் வருகையோடு கடவுளின் அரசு வரும் என்றும், மாற்றுரு பெற்றால்தான் கடவுளின் அரசை பெறமுடியும் என்றும், ஊன் இயல்புடைய மக்கள் கடவுளின் அரசை அடைய முடியாது என்றும் (15: 50) பவுலார் சொல்கிறார்.

இப்படிச் சொல்வதன் வழியாய் பவுலார் இறந்தோர் உயிர்த்தெழுதல் நிச்சயம் நிகழும் என்றும், அது கிறிஸ்துவின் வருகையில் நிகழும் என்றும், அந்த வருகையில் உயிர் வாழும் கொரிந்துத் திருச்சபை மக்களும் பங்கு பெறுவர் என்றும் நம்பிக்கைக் கொடுக்கிறார்.

2. ஆண்டவரின் பணியைத் தொடர்ந்து செய்வோம் : (1 கொரி. 15: 58)

கிறிஸ்து வருவது நிச்சயமாக நிகழும் என்பதால், அவர் வரும்வரை நாம் செய்து கொண்டிருக்கும் ஆண்டவரின் பணியைத் தொடர்ந்து எப்பொழுதும் செய்யுங்கள் என்று கொரிந்துத் திருச்சபை மக்களுக்கு பவுலார் இங்கு ஆலோசனைத் தருகிறார்.

இந்த வசனம், ஒரு மனிதர் தனது சமயம் சார்ந்தப் பணியை மட்டும் செய்வதுதான் ஆண்டவரின் பணி என எடுத்துக்கொள்ளாமல், தன் வாழ்வில் செய்யும் அத்தனைப் பணிகளையும் உள்ளடக்கியதுதான் ஆண்டவரின் பணி என்று வலியுறுத்துகிறது. "ஆண்டவருக்காக நீங்கள் உழைப்பது வீண்போகாது" (toil / labour at the Lord. 15: 58) என்பதை வெறும் சமயப் பணி என்று எடுத்துக்கொள்ளக்கூடாது என்பது இங்கு வலியுறுத்தப்பட வேண்டும். இவ்வசனத்தில் கடவுளின் பணியானது இரண்டு விதங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஒன்று ஆண்டவரின் பணி (work of the Lord). இரண்டு, ஆண்டவருக்காக உழைப்பது (Your toil / labour in the Lord). இங்கு ஆண்டவரின் பணியைக் குறிக்க Erog (work) எனும் சொல்லையும், ஆண்டவருக்காக உழைப்பதைக் குறிக்க koros (toil / labour) என்ற கிரேக்க சொல்லையும் பவுலார் பயன்படுத்தியிருக்கிறார். இந்த இரண்டு சொற்களையும் பவுலார் எங்கெங்கு எந்தப் பொருள்களில்

பயன்படுத்தியிருக்கிறார் என்பதை வைத்து ஆண்டவரின் பணி என்பது என்ன என்பதை விளக்க முடியும்.

a) ஆண்டவரின் பணி

ஆண்டவரின் பணி என்பது ஆண்டவரின் தேவைகளை (requirements) நிறைவேற்றுவதாகும்.

1 கொரி. 15: 58-இல், பவுலார் கொரிந்திய இறைமக்கள், ஆண்டவருக்குத் தேவையாயிருக்கும் பணிகளை எப்போதும் தொடர்ந்து செய்துகொண்டே இருக்கவேண்டும் என அறிவுறுத்துகிறார். இந்த ஆண்டவரின் பணியின் நோக்கம் திருச்சபை அல்லது சமூகத்தைக் கட்டியெழுப்புவதாகும். 1 கொரி. 16: 10-இல், பவுலார், திமொத்தேயுவைக் குறித்து "அவரும் என்னைப் போலவே ஆண்டவருடைய வேலையைத்தான் . . . செய்கிறார்" என அறிமுகம் செய்கிறார். அதாவது திமொத்தேயு தன்னைப்போன்று மற்ற கிறிஸ்தவர்களும் ஊழியம் செய்வதோடு தொடர்புபடுத்தி இது "ஆண்டவரின் பணி" எனும் பொருளைத் தருகிறார்.

b) ஆண்டவரில் பணி

பவுலார், "ஆண்டவரில் பணி" என்ற சொற்றொடரை ஆண்டவர் இயேசு செய்த பணியைச் செய்வது என்ற பொருளில் தருகிறார். அதாவது இயேசு தன் காலத்தில் சக மனிதர்களுக்காக உழைத்தார், அதைப் போன்று நம் உழைப்பும் இருக்க வேண்டும் என பவுலார் வலியுறுத்துகிறார்.

1 கொரி. 16: 15, 16 வசனங்களில் இந்தக் கருத்தை விளக்கிக்கொள்ள முடியும். இங்கு பவுலார் "ஸ்தேவானின் வீட்டாரைப்" பற்றி சொல்லும்போது, அக்காயா நகரில் முதன் முதலில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் என்றும், இவர்கள் இறைமக்களுக்குத் தொண்டு செய்யத் தங்களையே அர்ப்பணித்தவர்கள் என்றும் எழுதுகிறார். அதாவது ஸ்தேவானின் வீட்டார், இயேசுவைப் போன்று அடுத்தவர்களுக்குத் தொண்டாற்றி வாழ்ந்ததைப் போன்று மக்களுக்குத் தொண்டாற்றினார்கள் என்பதை இங்கு கவனிக்க வேண்டும். ஆகவே, ஆண்டவருக்காக உழைப்பது என்பது அடுத்தவருக்காகச் செய்யும் உதவி என்பதாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

இதன் மூலம், பவுலார், கொரிந்து மக்களுக்கு இறந்தோர் உயிர்த்தெழுதல் என்பது நிச்சயமாக நிகழும் என்றும், ஆண்டவரின் வருகையில் உயிர் வாழும் கொரிந்து மக்களும் பங்கு பெறுவோம் என்றும், அந்த வருகையில் பங்கெடுப்பதற்காக நாம் மாற்றுருப் பெறுவோம் என்றும், அவர் வரும் வரை கொரிந்துத் திருச்சபை மக்கள் ஆண்டவரின் பணியையும், அவர் வேலையையும் செய்து கொண்டே இருக்க வேண்டும் என்றும் குறிப்பிடுகிறார். இப்புதிய மாதத்தில் நாமும் ஆண்டவரின் பணியை ஆண்டவரில் தொடர்ந்து நிறைவேற்றுவோம், ஆமென்.

ᴜ	ஞா. 36	கீர். 228

அருள்திரு. P. பால் விஜித்
ஆயர், சிதறால்

நம்பிக்கையால் வாழ்வு

யோவா. 11: 17-44

"உயிர்த்தெழுதலும், வாழ்வும் நானே; என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வர்" (யோவா. 11: 25).

கிணற்றுக்குள் தவறி விழுந்த சிறுவனைக் காப்பாற்றக் கூடியிருந்த மக்கள், ஒரு கயிற்றைக் கீழே இறக்கி மேலே ஏறி வா என்றார்கள். ஆனால், சிறுவனுக்கு அவர்கள் மேல் நம்பிக்கை இல்லை. கயிற்றின் மறுமுனையைப் பிடித்திருப்பது என் தந்தையா? என்றான். தந்தையை அழைத்து வர ஆள் அனுப்பினார்கள். அவரும் ஓடோடி வருகிறார். கயிறின் ஒரு முனையைப் பிடித்திருக்கிறார் என்ற நம்பிக்கை அவன் உள்ளத்தில் எழுந்தபோது கயிற்றைப் பிடித்து கொண்டு மேலே ஏறி வந்தான்.

மனிதனுடைய வாழ்வில் நம்பிக்கை இதயத்துடிப்பு போன்றது. வாழ்க்கை என்ற படகு கரைசேர நம்பிக்கை என்ற துடுப்பு அவசியம். எபி. 11: 6-இல் நம்பிக்கையினாலன்றி எவரும் கடவுளுக்கு உகந்தவராயிருக்க இயலாது. ஏனெனில், கடவுளை அணுகிச் செல்வோர் அவர் இருக்கிறார் என்பதையும், அவரைத் தேடிச் செல்வோருக்குத் தக்க கைம்மாறு அளிக்கிறார் என்பதையும் நம்ப வேண்டும் என்று சொல்லப்படுகிறது. நம்பிக்கை மனிதனை வாழ வைக்கிறது. நாம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவில் கொண்டுள்ள அளவற்ற நம்பிக்கையால்தான் கிறிஸ்தவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

நம்மில் உள்ள நம்பிக்கையின் அளவு நமக்கும், கடவுளுக்கும் உள்ள உறவின் அடிப்படையில் அளக்கப்படுகிறது. விசுவாசம் இல்லாமல் கடவுளுக்குப் பிரியமாய் இருப்பது கூடாத காரியம். இயேசு கிறிஸ்து அதிகமாய் நேசித்த பெத்தானியா கிராமத்தைச் சார்ந்த லாசரு இறந்துவிட்ட செய்தியைக் கேள்விப்பட்டு அங்குச் சென்றார். லாசருவின் இழப்பு அவருடைய சகோதரிகளான மார்த்தாளையும், மரியாளையும் நிலைகுலையச் செய்தது. அத்தனை பேரின் முகத்தில் வடியும் கண்ணீரைக் கண்டு இயேசுவும் கண்ணீர் வடிக்கின்றார் (11: 33, 35). உள்ளம் குமுறிக் கண்ணீர் வடித்தது மட்டுமல்ல; இறைவார்த்தையால் லாசருவை உயிர்பெறச் செய்கிறார். இன்றைய திருமறைப் பகுதி யோவா. 11: 17-44-இன் வாயிலாக மார்த்தாள், மரியாள் எவ்வாறு நம்பிக்கையால் வாழ்வு பெறுகிறார்கள் என்பதைச் சிந்திப்போம்.

1. நம்பிக்கையோடு இயேசுவை எதிர்கொண்டு செல்கிறார் : (யோவா. 11: 20)

இயேசு வந்து கொண்டிருக்கிறார் என்று கேள்விபட்டதும் மார்த்தாள் அவரை எதிர்கொண்டு சென்றார்.

நம்பிக்கை என்பது நம் ஆன்மிக வாழ்வின் உயிர்நாடி. ஆதரவின்றி நிர்க்கதியாக நிற்பது போன்ற உணர்வையும், பய உணர்வையும் போக்குவதற்கான அருமருந்து நம்பிக்கைதான். "தத்தளிக்கும் கப்பலுக்குத் தவறாமல் வழிகாட்டும் கலங்கரை தீபம் போல, நாம் உள்ளம் கலங்காமல், நம் ஆண்டவர் மீது நிறைவான நம்பிக்கை கொண்டு வாழ வேண்டும்". இயேசு வந்து கொண்டிருக்கிறார் என்று கேள்விப்பட்டதும் மார்த்தாள் நம்பிக்கையோடே எதிர்கொண்டு சென்றார். நாங்கள் நேசித்த, தங்களுக்கு முழுமையான பாதுகாவலாக இருந்த சகோதரர் இறந்துவிட்டார். கடும் துயரமும், துக்கமும், கண்ணீரும் வாட்டி வதைக்கும் சூழல். ஆறுதல் சொல்லப் பலர் வந்திருந்த வேளையிலும் ஆறுதலும் இல்லை, அமைதியும் இல்லை. ஆனால் இயேசு வருகிறார் என்பதைக் கேள்விபட்டவுடனே அழுகையைக் கட்டுப்படுத்தி, ஆறுதல் சொல்ல வந்த மக்களையும் விட்டு விட்டு இயேசுவைச் சந்திக்க விரைந்து நம்பிக்கையோடு எதிர்கொண்டு செல்கிறார்.

யோவான் 6: 37-இல் "என்னிடம் வருபவரை நான் புறம்பே தள்ளிவிடமாட்டேன்" என்ற அன்பின் ஆண்டவர் தன்னை நாடி வந்த மக்களுக்கு நன்மை செய்கிறவராகவே செயல்பட்டார். வருத்தமும் வலியும் நிறைந்த உள்ளத்தோடு தன்னுடைய மகளின் விடுதலைக்காக இயேசுவைத் தேடி வந்த கானானியப் பெண்மணியின் கதறுதலைக் கேட்டு விடுதலை அருளுகிறார் (மத். 15: 22). தொழுநோயால் பாதிக்கப்பட்டு உறவுகளை, உரிமைகளை இழந்து நகரத்துக்கு அப்பால் புறக்கணிக்கப்பட்ட தள்ளப்பட்ட நிலையில் வாழ்ந்த பத்து பேர் இயேசுவிடம் வந்து "இயேசு ஐயரே எங்களுக்கு இரங்கும்" என்று மன்றாடின வேளை விடுதலையருளினார் (லூக். 17: 12, 1). ஆண்டவரை நம்பிக்கையோடு நாடிச் செல்லும்போது நன்மைகளை வாழ்விலே தந்து நடத்துவார்.

2. மனக்கவலைகளை மகிபனிடம் பகிர்கிறார் : (யோவா. 11: 21)

மார்த்தா இயேசுவை நோக்கி, "ஆண்டவரே, நீர் இங்கே இருந்திருந்தால் என் சகோதரன் இறந்திருக்கமாட்டான்".

சிறு குழந்தை முதல் இறக்கும் தருவாயில் இருக்கும் மனிதன் வரை கவலைகள் மனித வாழ்வின் அன்றாட தொடர்கதைகள். கவலைகள் இல்லாத மனிதர்கள் இல்லை. கவலை எலும்புகளை உருக்கும், ஆயுளைக் குறைக்கும். அன்றன்று நடக்கும் கவலையை நினைத்து, நினைத்து வாழும்போதே சிறிது சிறிதாகச் செத்துக் கொண்டிருக்கிறான் மனிதன்.

நேசிக்கும் ஒருவரை இழப்பது தாங்கிக்கொள்ள மிகவும் கடினமானது. நம்பிக்கையோடு இயேசுவை எதிர்கொண்டு சென்ற மார்த்தாள் தன்னுடைய மனக்கவலைகள், மனக்குமுறல்கள் எல்லாவற்றையும் அவர் பாதத்தில் வைக்கிறாள். "ஆண்டவரே நீர் இங்கே இருந்திருந்தால் என் சகோதரன் இறந்திருக்க மாட்டான்" என தன்னுடைய வேதனையை ஆண்டவரிடம் பகிர்ந்து கொள்கிறார். யார் கைவிட்டாலும் உள்ளன்போடு நம்மை நேசிக்கிறவர் கிறிஸ்து ஒருவர் மட்டுமே. "வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லோரும் என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்று அன்போடு அழைக்கிறார் (மத். 11: 28).

மத். 9: 2-இல் பன்னிரண்டு ஆண்டுகளாய் இரத்தப்போக்கினால் கவலையோடு, கலங்கி, வருந்திய பெண் அவருடைய ஆடையைத் தொட்டு நலமடைகிறாள். மார்த்தாள் உள்ளத்தின் பாரங்களை இயேசுவிடம் பகிர்ந்து கொள்கிறாள். இக்கட்டான சூழலிலும், இழப்புகளின் மத்தியிலும் இறைவனின் கரத்தைப் பற்றிக் கொள்கிறார்.

அன்னாள் தன்னுடைய மனக்கவலைகளை ஆண்டவரின் ஆலயத்தில் வந்து ஊற்றுகிறார் (1 சாமு. 1: 10). ஆனால், ஏலியோ அன்னாள் குடித்துக்கொண்டு பிதற்றுகிறார் என எண்ணுகிறார். 1 சாமு. 1: 15, 16-இல் "ஆண்டவர் திருமுன் என் உள்ளத்தைக் கொட்டிக் கொண்டிருக்கிறேன். உம் அடியாளை ஒரு கீழ்த்தரப் பெண்ணாக எண்ண வேண்டாம். ஏனெனில் என் துன்ப துயரங்களின் மிகுதியால்தான் இதுவரை பேசிக் கொண்டிருந்தேன்" என்கிறார்.

அன்னாள் ஆண்டவரின் திருமுகத்தில் தன் கவலைகளைப் பகிர்ந்த பின்பு அவர் முகம் வாடியிருக்கவில்லை. தம்முடைய வாழ்விலும் இழப்புகள், வேதனைகள், வலிகள், கவலைகள் வரும்போது அவைகளைச் சுமைதாங்கியாகிய ஆண்டவர் மீது வைத்து விடுதலை பெறுவோம்.

3. வாழ்வு தரும் வாக்குறுதியைப் பெற்றார் : (யோவா. 11: 23)

இயேசு அவரிடம் "உன் சகோதரன் உயிர்த்தெழுவான்" என்றார்.

உள்ளம் கலங்கி நின்ற மார்த்தாளுக்கு ஆண்டவர் இயேசு "உன் சகோதரன் உயிர்த்தெழுவான்" என்கிற வாழ்வு தரும் வல்லமையான வாக்குறுதியைக் கொடுக்கிறார். ஆனால், ஆண்டவரின் வாக்குறுதியின் முழுமையான முக்கியத்துவத்தை அறியாதவளாக அவர் இறுதி உயிர்த்தெழுதலைக் குறித்துப் பேசுகிறார் என எண்ணினார். யோவன் 11: 25-இல் "உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே, என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வர்" என்கிற இயேசுவின் வார்த்தையானது "மரணம் முடிவல்ல" என்னும் தெளிவை மார்த்தாளுக்கு அளித்தது. லாசருவை அடக்கம் செய்த கல்லறைக்குச் சென்று "லாசருவே வெளியே வா" என்று சத்தமாகக் கூப்பிட்டார் (யோவா. 11: 43). மரித்த லாசரு உயிரோடு வெளியே வந்தார்.

ஆண்டவர் இயேசுவின் மீது நம்பிக்கை கொண்டு வாழ்பவர்கள் இறந்தாலும் உயிர்வாழ்வார்கள் என்பதைத் தெளிவாக நமக்குக் காண்பிக்கிறார். நாமும் இந்தத் தவக்காலத்தில் நமது சிந்தனையாலும், சொல்லாலும், செயலாலும் இறைவனுக்கும், அயலாருக்கும் எதிராகச் செய்துள்ள அனைத்துப் பாவங்களினால் ஆன்மிக வாழ்வில் உயிரற்ற உடல்களாக இருக்கின்றோம். நம்பிக்கையோடு ஆண்டவரை எதிர்கொண்டு, உள்ளத்தின் கவலைகளையெல்லாம் அவரிடம் பகிர்ந்து, வாழ்வு என்னும் வாக்குறுதியைப் பெற்று நம்முடைய வாழ்வை அவநம்பிக்கையின் அடிப்படையில் அல்ல, ஆண்டவர் இயேசுவின் மீது கொண்ட நம்பிக்கையின் அடிப்படையில் வாழ்வோம், ஆமென்.

ப	ஞா. 151	கீர். 183

அருள்திரு. **P.K. ஜோசப் ராஜ்**
ஆயர், அழகியமண்டபம்

திருப்பணிக்கான பயிற்சி

யோவா. 21 : 1-14

"அவர் படகின் வலது பக்கத்தில் வலை வீசுங்கள்; மீன்கள் கிடைக்கும்" என்று அவர்களிடம் கூறினார். அவர்களும் அவ்வாறே வீசினார்கள். மீன்கள் மிகுதியாய் அகப்பட்டதால் அவர்களால் வலையை இழுக்க முடியவில்லை (யோவா. 21: 6).

சீனப்பழமொழி : மீனைப் பிடித்துக் கொடுப்பதைவிட மீனைப் பிடிக்கக் கற்றுக் கொடுப்பது சிறந்தது.

மீன்கள் எங்கோ அங்கேபோய்ப் பிடியுங்கள், மீன்கள் நீந்தி உங்களிடம் வரக் காத்திருக்காதீர்கள்.

மீனவர் கூறுகிறார் : கடல் எங்கள் வங்கி, வாழ்வின் ஆழ்கடலில் மீன்பிடிப்பதே எங்கள் பயிற்சி என்கிறார்.

மீன் : என்பதற்கு மூன்று கிரேக்க வார்த்தைகள் உண்டு, "புறோஸ்ஃபாகியான்" (Prosfagion) "இக்துஸ்" (IKTHUS) "ஒப்சாரியான்" (Opsation).

மீன் பிடிப்பது எளிய வேலை அல்ல நீண்டகாலப் பயிற்சியின் அடிப்படையிலேயே மீன்பிடிப்பவர்களும் மீன்பிடி வேலையைச் செய்கின்றனர். மீன் பிடிவேலையைத் தினம், தினம் செய்துவந்த சிமோன் பேதுரு, மற்றும் சிலரை இயேசு கண்டுபிடித்து உங்களை மனிதனைப் பிடிக்கறவர்களாக மாற்றுவேன் என்று அழைத்துத் தம்முடன் பயிற்சிபெற, தம்மைப் பின் தொடரச் செய்தார். இயேசுவின் திருப்பணி, சிலுவைப்பாடு மரணம், உயிர்த்தெழுந்த இயேசுவின் நம்பிக்கை தரும் காட்சிகள் கண்டபின்னும், சீடர்கள் இயேசு கட்டளையிட்ட திருப்பணியைச் செய்ய இயலாமல் பின்வாங்கிச் சென்று மீன்பிடிக்கச் சென்றபோது இரவு முழுவதும் உழைத்தும் மீன்கள் கிடைக்கப்பெறாமல் கவலையுடன் இருந்த சூழலில் இயேசு சீடர்களிடம் "படகின் வலப்பக்கம் வலையை வீசுங்கள்" என்ற ஆலோசனைப் பயிற்சியை வழங்கினார்.

1. நம்பிக்கைதரும் பயிற்சி (யோவா. 21: 3, 6)

உயிர்த்தெழுந்த இயேசுவின் திருக்காட்சியைக் கண்டும், தூயாவியாரின் அன்பையும் ஆற்றலையும் பெற்ற பின்னும் மீன்பிடிக்கச் சென்றது வேடிக்கை. அறியாமையும், உறுதி இல்லா நிலையாக இருக்கிறது. உதறித்தள்ளிய குலம் சார்ந்த வேலையை மீண்டும் தேடிவந்து இரவு முழுவதும் உழைத்தும் சிறிதும்

மீன் கிடைக்காதது மாபெரும் அதிர்ச்சி, ஏமாற்றத்தையும், தோல்வியையும், மனத்தளர்வையும் ஏற்படுத்தியது. அப்போது இயேசு சீடர்கள் முன்நின்று "படகின் வலதுபுறம் வலையைப் போடுங்கள்" என்றார். ஏன்? எதற்கு யார் நீங்கள் என எதுவும் கேட்காமல், கீழ்ப்படிந்து விரைந்து வலப்புறம் வலையை வீசினர். எப்போதும் இல்லாத அளவு அதிக மீன்கள் கிடைக்கப்பெற்று, ஆச்சரியமும் மகிழ்ச்சியும் ஏற்பட வலது பக்கம் அது நற்பேறு பெற்ற பாக்கியம் என்பதைக் கண்டு மகிழ்ந்தனர். இயேசு சொன்ன பயிற்சியின் வழியே திரும்ப நம்பிக்கை வைத்தனர். இயேசுவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிகின்றோமா?

2. நினைவு தரும் பயிற்சி (யோவா. 21 : 3)

உயிர்த்தெழுந்த இயசே தம் சீடர்களை மூன்றாம் முறையாகச் சந்தித்த நேரம் இது. அப்பத்தையும் மீனையும் எடுத்துச் சீடருக்குக் கொடுத்தார். முன்பு கடைசி இரவில் தந்த அப்பம், திராட்சை இரசம் நினைப்பூட்டப்பட்டது. மட்டுமல்ல ஐந்து அப்பம், இரண்டு மீன்கள் வழியாக மக்களுக்கு உணவு வழங்கிய நிகழ்வையும் மக்கள் முன்பு நிறுத்தியிருக்க வேண்டும். இயேசுவின் எடுத்தலும், கொடுத்தலும், இயேசுவின் அருஞ்செயல்களை நினைப்பூட்டி உயர்த்தும் பயிற்சியாக்கியது. நம் வாழ்வில் இயேசு தந்த நன்மைகளை நினைப்பூட்டிப் பார்த்தால், அது நம் வாழ்வில் ஏற்புடைய பயிற்சியாகப் புரிந்து கொள்ளமுடியும்.

3. தகுதிபடுத்தும் பயிற்சி (யோவா. 21 : 17)

இயேசு சீடர்களுடன் உரையாடியபோது திருப்பணியின் பாரமும், பயிற்சியும் வெளிப்படுகிறது. பேதுரு-கேபா, பாறை எனக்கூறும் அளவிற்கு உறுதி உள்ளவராக இருந்தவர். குலத்தொழிலாகிய மீன்பிடிவேலைக்குத் திரும்பிச் சென்றுவிட்ட செயலுக்கு இயேசுவின் உறுதியான பயிற்சி தேவைப்பட்டது. அழைப்பில் நிலைத்திருக்காத நிலையை உணர்த்தித் தகுதி இழந்த உறுதித் தன்மையில்லாத பேதுருவிடம் இயேசு என்மீது அன்பு செலுத்துகிறாயா என்ற வினாவைக் கேட்கிறார். இங்கு Agape என்ற கிரேக்கச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் பேதுரு பதிலாக "நேசிக்கிறேன்" என்று கூறினார். இதற்கு Phillo என்ற கிரேக்கச் சொல் வருகிறது. அதன்பின் எல்லாவற்றையும் அறிவீர் என்கிறார். பாடுபடுவேன், மறுதலிப்பேன், பின் செல்லுவேன் என்று கூறிய பேதுரு தனது பலவீனம் அனைத்தும் உமக்குத் தெரியும் என்ற பொருள்படக் கூறுகிறார். தாம் செய்த தவற்றை உணர்ந்து தெளிவுபெற்ற சீடரிடம் அரசு உறுதி ஒப்பந்தம் போல மூன்றுமுறை கேட்க மூன்றுமுறையும் பதில்கூற ஆட்டுக்குடிகளை, மந்தையை மேய்ச்சலூட்டக் கட்டளையிடுகிறார். முன்பு மீன் பிடித்தவரை மனிதனைப் பிடிக்கிறவராக்குவேன் என அழைத்தவர் இப்போது மந்தையை மேய்க்கவும், பாதுகாக்கவும் ஆடுகளுக்காக உயிர்விடும் நல்ல மேய்ப்பராக நல்ல பணியாளராகப் பொறுப்பளிக்கும் அளவுக்குத் தகுதிபடுத்தும் பயிற்சியை மேற்கொண்டார்.

தி.ப. 2: 14-32-இன்படி பேதுருவின் நற்செய்தி திட்டமிட்டது அல்ல தூயாவியாரின் தூய ஆற்றலால் வெளிப்பட்டது ஆகும். கல்வியறிவு இல்லாமல் மீன்பிடிக்கும் வேலை செய்த பேதுருவுக்கு இயேசு கிறிஸ்து தந்த பயிற்சியினால் தாம் பெற்ற திருப்பணியில் உறுதிபெற்று, ஒத்த சான்றாளராகச் சிலுவையில் தலை கீழாக அடிக்கப்பெற்று இறக்கும் வரையிலும் திருப்பணி செய்தார்.

திருப்பணியாளர்களோ, இறைமக்களோ, மூப்பர்களோ தாங்கள்பெற்ற பணிப் பொறுப்பை உண்மையாய்ச் செய்யாமல், பணம், பதவி பாவம், மேன்மை, ஆதிக்கம் சார்ந்த காரியங்களில் பின்வாங்கியிருக்காமல் இருக்க நம்பிக்கை தரும் பயிற்சி, நினைவுதரும் பயிற்சி, தகுதி தரும் பயிற்சியைப் பெற்றுத் திருப்பணியில் நிலைத்தன்மை பெற முயற்சி செய்வோம், வளர்வோம், ஆமென்.

ப	ஞா. 349	கீர். 407

அருள்திரு. O. ரிச்சர்டு சொர்ணா

ஆயர், பாலவிளை, ஈத்தவிளை

06.04.2025 உயிர்ப்புத் திருநாளுக்கு முன் வரும் இரண்டாம் ஞாயிறு

சிலுவையும் சீடத்துவத்துக்கு ஒரு புதிய முன் உதாரணமும்

Cross and a New Paradigm to Discipleship

தொ.நூ. 26: 12-33 | 2 கொரி. 11: 21-31
தி.பா. 92 | மாற். 10: 46-52

"ஈசாக்கு அவர்களுக்கு விருந்து அளித்தார். அவர்களும் உண்டு குடித்தனர்" (தொ.நூ. 26: 30).

சீடத்துவ பணியில் புகழ்பெற்ற அன்னை தெரசா அவர்கள் ஒருநாள் கனவு ஒன்று கண்டார்களாம். அந்தக் கனவில் அன்னை தெரசா அவர்கள் சொர்க்கத்தின்முன் நிற்க, இறைவன் அன்னையிடம், அன்னை தெரசா அவர்களே, உங்கள் இறைப்பணியைப் பாராட்டி, அதன் பரிசாக சொர்க்கத்தைத் தருகிறேன். "நீங்கள் சொர்க்கத்துக்குப் போகலாம்" என்றாராம். அதற்குத் தெரசா அவர்கள், இறைவா! "தாங்கள் எனக்குத் தந்த சொர்க்கத்தில் இயலாதோர், ஆதரவற்றோர், ஏழ்மையானவர், பெலவீனர்கள் யாரேனும் உண்டா?" என்றார். அதற்கு இறைவன், சொர்க்கம் என்பது மகிழ்ச்சியையும், பேரின்பத்தையும் அனுபவிக்கும் இடம். அங்கே வறுமைக்கும், ஏழ்மைக்கும் இடம் ஏது? உடனே தெரசா அவர்கள், அப்படியென்றால் சொர்க்கத்தில் எனக்கு என்ன வேலை? பூமியில் பல இலட்சம் மக்கள் வறுமையிலும், நோயிலும் துடித்துக்கொண்டிருக்கும்போது நான் சொர்க்கத்தில் இன்பம் அனுபவிப்பதா, அது என்னால் முடியாது. இறைவா! என்னை மறுபடியும் பூமிக்கே அனுப்பிவிடும். கொல்கத்தாவின் இருண்ட வீதிகளே என் சொர்க்கம் என்றாராம். சீடத்துவத்துக்கே புது இலக்கணம் தந்தார் அன்னை தெரசா.

சீடத்துவம் என்றால் என்ன? என்று வினவிய சீடனுக்குச் குரு ஒரு விளக்கம் அளித்தார். பென்சில் ஒன்றைக் கொண்டுவரச் சொல்லி, அந்தப் பென்சிலாக அவனைக் கற்பனை பண்ணிக்கொள்ளச் சொல்லிவிட்டு ஐந்து செய்திகளைச் சொன்னார்.

i) பென்சில் பல சிறப்பான ஓவியங்களைக் கொடுக்க வல்லது. அது எப்போது தன்னை ஒருவர் கையில் முழுமையாக ஒப்படைக்கின்றதோ, அப்போது அது சாத்தியமாகிறது. சீடத்துவமும் அப்படியே.

ii) கூர்மைப்படுத்தப்படுகின்ற ஒவ்வொரு முறையும் இது துயரங்களைச் சந்திக்கக் கூடியது. அப்படி நிகழ்ந்தால்தான் அது இன்னும் சிறப்பானதாக மாறமுடியும். சீடத்துவமும் அப்படியே.

iii) தனது எழுத்து, ஓவியப் பயணத்தில் ஏற்படும் தவறுகளை இது தன்னால் சரிசெய்து கொள்ளக்கூடியது. திருத்துவதற்கு இடம் கொடுக்கும். சீடத்துவமும் அப்படியே.

iv) மிகவும் முக்கியமானது இதன் உள்ளே இருப்பதுதான் இதற்குப் பெருமை தரக்கூடியது. சீடத்துவமும் அப்படியே.

v) எங்கெல்லாம் இது பயணிக்கிறதோ. அங்கெல்லாம் தனது சிறப்பான தடங்களைப் பதித்து வருகிறது. சீடத்துவமும் அப்படியே.

இயேசுவின் சீடத்துவம் உலகப் பற்றுகளைத் துறந்து, கிறிஸ்துவையே ஆதாயமாய்க் கொள்வதேயாகும். இது ஒறுத்தல் அல்ல, தியாகம். அனைத்தையும் முற்றிலுமாகத் துறக்க வேண்டும். கிறிஸ்துவை உடமையாக்கிக் கொள்ள, அவருடைய சீடத்துவத்தைத் தனதாக்கிக்கொள்ள மற்றனைத்தையும் (பிலி. 3: 8) இழப்பாகக் கருதி உதறித் துறந்திட வேண்டும். சீடத்துவம் என்பது எதிர்பார்ப்பில்லாதது, சீடத்துவம் என்பது நிபந்தனை இல்லாதது, சீடத்துவம் என்பது கிறிஸ்துவே எனக்கு எல்லாம் எனப் பற்றிக்கொள்வது.

இந்தச் சீடத்துவத்துக்குச் சிறந்த முன்மாதிரி ஈசாக்கு. ஈசாக்கு ஆபிரகாமின் வாக்குதத்த மகன். முற்பிதாக்களில் ஒருவர். இவர் எப்படிச் சீடத்துவத்துக்கு முன்மாதிரி... இதனை மூன்று சிந்தனைகளின் வழியாகச் சிந்தனைச் செய்வோம்.

1. பற்றற்றவன் ஈசாக்கு : (தொ.நூ. 26: 22)

"அவர் அவ்விடத்தை விட்டகன்று, வேறொரு கிணற்றைத் தோண்டினார்"

முற்பிதாக்களில் ஒருவராக ஈசாக்கு பெலிஸ்திய நாட்டில் தம் ஆடுகளோடு குடியமர்கிறார். ஆடுகளுக்குத் தண்ணீர் வேண்டும். தண்ணீருக்காய்ப் போராடுகிறார். ஈசாக்கு மிகவும் கஷ்டப்பட்டு ஒரு துரவை வெட்டுகிறார். ஒரு துரவு வெட்ட எத்தனை மாதங்கள் ஆகும். அத்தனை மாதங்கள் பிரயாசப்பட்டுத் துரவை வெட்டி, தண்ணீரைப் பெற்றதும் பெலிஸ்தியர்கள் துரவு எங்களுடையது எனக் கேட்டபோது, நிலத்தின் மீதோ, துரவின் மீதோ பற்றில்லாத ஈசாக்கு, நிலம் கேட்டவனிடத்தில் எந்தச் சண்டையும் செய்யாது விட்டுக்கொடுத்த ஈசாக்கு, பற்றற்ற சீடத்துவத்தின் முன்மாதிரி. இன்று நிலத்தின் மீதும், பணத்தின் மீதும் எவ்வளவு பற்று. கிறிஸ்துவைப் பின்பற்றவேண்டியவர்கள் இன்று உலகின் மீது கொண்ட பற்றினால் சீடத்துவம் கேள்விக்குறியாய் நிற்கிறது. யோனத்தான் பதவி மீது பற்றற்றவனின் அடையாளமாய் வாழ்ந்தார். பவுலடியார் பணத்தின் மீது பற்றற்றவராய் அடையாளமாய் நின்றார். இயேசு தம்மிடம் வந்த வாலிபனிடம் "உன் ஆஸ்திகளை விற்று வறியோர்க்குக் கொடு" என்றதும், பற்றினால் மனம்

உடைந்து சென்றான். ஆனால், சகேயு இயேசுவைச் சந்தித்தபோது, தம் ஆஸ்தி அனைத்தும் விட்டுக்கொடுத்தார். அழிந்துபோகிற இந்த உலகின் மீது பற்று வைக்காமல் ஈசாக்குபோல் வாழ வேண்டும். உலகப் பற்று, அனைத்துத் தீமைக்கும் வேராய் இருக்கிறது. எனவே, உலகப் பற்றைத் தவிர்ப்போம்.

2. பண்பட்டவன் ஈசாக்கு : (தொ.நூ. 26: 28)

"ஆண்டவர் உம்மோடு இருக்கிறாரென்று தெளிவாகக் கண்டோம்".

ஈசாக்குக்கு இழப்புகளையும், நஷ்டத்தையும், மனவேதனையும் உருவாக்கின அபிமலேக், அகுசாத், பிகோல் ஆகியோர் கேராரில் இருந்து வந்து ஈசாக்கைப் பார்க்கிறார்கள். ஈசாக்கிடம் இருந்து நிலத்தையும், துரவையும் பறித்தவர்கள் இவர்கள். இவர்கள் ஈசாக்கை வந்து பார்த்தபோது, அந்த ஈசாக்கிடம் "கர்த்தரைக் காண்கிறார்கள்" (26: 28). தனக்கு நஷ்டம் கொடுத்தவனுக்குத் தம் முகத்தில் கோபத்தையும், எரிச்சலையும் காட்டாமல் அவர்களுக்குத் தம் முகத்தில் கர்த்தரையே காணச் செய்வது சிறந்த முன்மாதிரி. தம் முகத்தில் கோபத்தைக் காட்டாமல், மகிழ்ச்சியையும், மன்னிப்பையும் காட்டியது ஒரு பண்பட்டவனின் செயல்பாடு. யாக்கோபு ஏசாவுக்குத் துரோகம் செய்து, பல வருடங்கள் கழித்துத் திரும்பி வருகிறார். யாக்கோபு ஏமாந்து சென்றவர். ஏசா சொத்தை இழந்து வஞ்சிக்கப்பட்டவர். ஆனால், தன்னை வஞ்சித்த யாக்கோபு வருகிறார் என அறிந்ததும், தம்மில் கோபத்தைக் காட்டாமல், தம் முகத்தில் ஒரே கடவுளையே காட்டுகிறார் (தொ.நூ. 33: 10). இதுவும் பண்பட்டவரின் செயல்பாடு. இன்று பண்படாதவர்கள், காயங்களை, இழப்புகளை மனதில் வைத்துக்கொண்டு, பழிவாங்கும் உணர்வோடு, பகை உணர்வோடு பண்பில்லாமல் செயல்படுகிறார்கள். "மறு கன்னத்தையும் காட்டு" என பண்பட்ட போதனையை இயேசு சொன்னார். அவரை பின்பற்றும் நாம் பண்படாத பல பண்புகளை வெளிகாட்டுகிறோம். எப்போது ஈசாக்கைப்போல் நாம் பண்பட்டவர்களாய் மாறப்போகிறோம்?

3. பண்பானவன் ஈசாக்கு (தொ.நூ. 26: 30)

"ஈசாக்கு அவர்களுக்கு விருந்து அளித்தார்."

ஈசாக்கு சிறந்த பண்பைக் கொண்டவர். பண்புகளுக்கே இலக்கணமாய் வாழ்ந்தவர். தம் மனைவிக்காய் ஜெபித்தவர், வீட்டில் உள்ள குறையைப் (குழந்தை இன்மை) பெரிதாக்கி, பிரச்சனை செய்யாமல் இறைவனிடம் மட்டுமே விண்ணப்பம் செய்தவர். அப்படிப்பட்ட ஈசாக்கு, தமக்குத் துன்பத்தையும், நஷ்டத்தையும் தந்த பெலிஸ்தியர்கள் மீது கோபமோ, வெறுப்போபடாமல், அவர்களையும் நேசித்து, அதற்கு அடையாளமாய் உணவையும் கொடுத்து அன்பு செய்தவர் ஈசாக்கு. எதிரியை மன்னிப்பது என்பது சாதாரண பண்பு அல்ல, உயர்ந்த பண்பு. சத்துருவையும் நேசிக்க வேண்டும் என்பது சீடத்துவ

செயல். அதனையே அப்படியே ஈசாக்கு தம் வாழ்வில் பின்பற்றினார். இன்று நாம்... பிறரை ஏற்றுக்கொள்ள மனமில்லை. சபையிலே பிரிவினைகள், குடும்பத்தலே பிரிவினைகள் எப்பொழுது எல்லோரையும் நேசிக்கிற பண்பை பெறபோகிறோம். தாவீது - தம்மைக் கொல்ல வந்த சவுலை நேசித்தான், கப்பல்காரன் - யோனாவை நேசித்தான், பிலாத்துவின் மனைவி - கிறிஸ்துவை நேசித்தாள். சீடத்துவப் பண்பை வெளிக்காட்ட வேண்டிய நாம் எல்லோரையும் நேசிக்க மறுப்பது ஏன்?

ஆற்றிலும் தண்ணீர் உண்டு, சாக்கடையிலும் தண்ணீர் உண்டு. ஆனால், சாக்கடை மட்டும் ஏன் நாற்றம் அடிக்கிறது. ஏனென்றால், ஆறு தன்னிடம் உள்ள தண்ணீரை எல்லாருக்கும் கொடுத்துகொண்டே செல்கிறது. சாக்கடை தமக்கு வருவதை எல்லாம் யாருக்கும் கொடுக்காமல் சேர்த்துகொண்டே இருக்கிறது. எனவே நாற்றம் அடிக்கிறது. இப்பொழுது யோசியுங்கள். சீடத்துவம் என்பதும் ஆற்றை போன்றது. தமக்கு என்று வாழாமல் பிறருக்காய் வாழ்வது. நாமும் பிறருக்காய் வாழ்வோம், ஆமென்.

ப	ஞா. 474	கீர். 281

அருள்திரு. **P. இராஜா ஸ்டாலின்**
ஆயர், கோவில்விளை

இறைவேண்டல்

எங்களுக்கு நல்லதோர் முன்மாதிரியாக இருக்கும் கடவுளே, எங்களை உமது சீடர்களாகத் தேர்ந்தெடுத்து, எங்களோடு உடன் இருப்பதற்காகவும் நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். ஆண்டவரே, எங்கள் அழைப்புக்கு ஏற்றவாறு சேவை செய்யவும், இயேசு கிறிஸ்துவைப் போல சிலுவையைச் சுமக்கவும் எங்களுக்கு உதவி செய்யும். உம்மோடும் தூய ஆவியரோடும் வாழ்ந்து இப்போதும் என்றென்றும் ஆட்சி செய்யும் ஒரே கடவுளான எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் வேண்டுகிறோம், ஆமென்.

உயர்த்தப்பட்ட மானிடமகன்

யோவா. 3: 13-21

"பாலைநிலத்தில் மோசேயால் பாம்பு உயர்த்தப்பட்டதுபோல; மானிடமகனும் உயர்த்தப்படவேண்டும்" (யோவா. 3: 14).

மானிடமகன் என்கின்ற சொற்றொடர் மனித நிலையை குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. இது ஒத்தமைவு நூல்களில் 70 முறையும், யோவான் நற்செய்தியில் 12 முறையும், திருத்தூதர் பணிகள் நூலில் ஒருமுறையும், திருவெளிப்பாடு நூலில் இருமுறையும் வருகின்றது.

பழைய ஏற்பாட்டில் தானியேல் இறைவாக்கினர் நூலில் 7: 13-இல் மானிடமகன் பற்றிக் கூறுகிறது. இவருக்கு மாட்சியும் ஆட்சியும் வல்லமையும் கொடுக்கப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது. விவிலிய அறிஞர்கள் இவர் "உன்னதரின் புனிதர்களுக்கு" (7: 18, 27) அடையாளமாக இருக்கும் உருவகம் என்று கூறுகிறார்கள்.

புதிய ஏற்பாட்டில் இயேசுவால் தன்னையே குறித்துக் காட்டப் பயன்படுத்தப்பட்ட சிறப்புப் பெயர் எனலாம். அவர் தன்னைக் குறித்து பேசும்போது மானிட மகன் என்ற பெயரைப் பயன்படுத்துகிறார். திருத்தூதர் பணிகள் நூலில் ஸ்தேவான் இப்பெயரை பயன்படுத்துகிறார் (7: 56). யோவான் கண்ட காட்சியில் இப்பெயரைக் குறித்து விளக்கமாகத் திருவெளிப்பாடு நூலில் காணப்படுகிறது (1: 13; 14: 14).

ஒத்தமைவு நற்செய்திகளில் இயேசுவின் மனித நிலைமையைக் குறிக்கும் வசனங்கள் (மத். 8: 20; 11: 19), இயேசுவின் பாடுகள் மரணத்தை குறிக்கும் வசனங்கள் (மத். 12: 40; மாற். 8: 31; லூக். 9: 22), மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மானிடமகனுக்கு அதிகாரம் உண்டு (மத். 9: 6). ஆதலால் ஓய்வு நாளும் மானிடமகனுக்குக் கட்டுப்பட்டதே (மாற். 2: 28). மானிடமகன் வல்லமையோடும், மாட்சியோடும் வருவது பற்றிக் குறிப்பிடுகிறார்கள் (மத். 10: 23; மாற். 8: 38).

மானிடமகனுக்கு மனிதத்தன்மை மட்டுமல்ல தெய்வீகத் தன்மையும் உண்டு என்பதை நற்செய்தி நூல்கள் கூறுகின்றன (மத். 10: 23; 13: 41; 16: 28; லூக். 9: 26). மானிடமகனின் செயல்களைக் குறிப்பிடும்போது நல்ல விதைகளை விதைப்பவர் மானிடமகன் (மத். 13: 37), இழந்துபோனதைத் தேடி மீட்கவே மானிடமகன் வந்திருக்கிறார் (லூக். 19: 10), மானிடமகன் பொருட்டு அவரது சீடர்கள் துன்புற வேண்டும் (லூக். 6: 22). இவ்வாறு இயேசுவின் மனிதத் தன்மையையும் தெய்வீகத் தன்மையையும் ஒருசேர சுட்டிக்காட்டப்படுகின்றன.

1. மனுக்குலம் நிலைவாழ்வுபெற உயர்த்தப்பட்ட மானிடமகன் : (யோவா. 3: 15)

மானிடமகன் மீது நம்பிக்கை கொள்ளும் அனைவரும் நிலைவாழ்வு பெறுவர். ஒரு இளைஞர் இயேசுவினிடத்தில் வந்து, நிலைவாழ்வைப் பெற்றுக்கொள்வதற்கு நான் என்ன நன்மை செய்ய வேண்டும்? என்று கேட்டார். நீர் நிலைவாழ்வடைய விரும்பினால் கட்டளைகளைக் கடைபிடியும் என்றார். அவர் எவற்றை? என்று கேட்டார். இயேசு, கொலை செய்யாதே, விபசாரம் செய்யாதே, களவு செய்யாதே, பொய்ச்சான்று சொல்லாதே, தாய்தந்தையை மதித்து நட என்று கூறினார். அந்த இளைஞர் அவரிடம், "இவை அனைத்தையும் நான் சிறு வயது முதல் கடைபிடித்து வந்துள்ளேன். இன்னும் என்னிடம் குறைபடுவது என்ன? என்று கேட்டார். அதற்கு இயேசு, நிறைவுள்ளவராக விரும்பினால் நீர்போய், உம் உடைமைகளை விற்று ஏழைகளுக்கு கொடும். அப்பொழுது விண்ணகத்தில் (நிலைவாழ்வில்) நீர் செல்வராய் இருப்பீர்; பின்பு வந்து என்னைப் பின்பற்றும்" என்றார். அவர் சொன்னதைக் கேட்ட அந்த இளைஞர் வருத்தத்தோடு சென்றுவிட்டார். ஏனெனில் அவருக்கு ஏராளமான சொத்து இருந்தது. நிலைவாழ்வு பெறுவதற்கு உயர்த்தப்பட்ட மானிடமகன்போல வாழ அழைக்கப்படுகிறோம். இழப்பில்தான் நிலைவாழ்வு இருக்கின்றது (மத். 19: 16-30; மாற். 10: 17-31; லூக். 18: 18-30).

2. மனுக்குலம் மீட்புபெற உயர்த்தப்பட்ட மானிடமகன் : (யோவா. 3: 17)

உலகிற்குத் தண்டனைத் தீர்ப்பளிக்க அல்ல, தம் மகன் வழியாக அதை மீட்கவே கடவுள் அவரை உலகிற்கு அனுப்பினார்.

இம்மீட்பு பாலைநிலத்தில் மோசேயால் பாம்பு உயர்த்தப்பட்ட நிகழ்வோடு ஒப்பிடப்படுகிறது. இஸ்ரயேல் மக்கள் செங்கடல் சாலை வழியாக பயணப்பட்டபோது உணவு, தண்ணீர் இல்லாமல் கடவுளுக்கும் மோசேக்கும் எதிராகப் பேசினர். உடனே ஆண்டவர் கொள்ளிவாய் பாம்புகளை மக்களிடையே அனுப்பி, அவை கடிக்கவே இஸ்ரயேல் மக்களில் பலர் மாண்டனர். மோசே ஆண்டவரிடம் சொல்ல, ஆண்டவர் மோசேயிடம், கொள்ளிவாய் பாம்பொன்றைச் செய்து அதை ஒரு கம்பத்தில் பொருத்து, கடிக்கப்பட்டோரில் இதைப் பார்க்கிற ஒவ்வொருவரும் பிழைப்பர். அவ்வாறே மோசே ஒரு வெண்கலப் பாம்பைச் செய்து அதை ஒரு கம்பத்தில் பொருத்தினார். பாம்பு கடித்த எந்த ஒரு மனிதரும் இந்த வெண்கலப் பாம்பைப் பார்த்து உயிர் பிழைத்தனர் (எண். 21: 4-9). யூத பாரம்பரியம் பாம்பு வழிபாட்டின் முடிவை அறிந்திருந்தது (2 அர. 18: 4). ஆதலால் பாம்பு குணமாக்கவில்லை, பாம்பின் சிலை உயர்த்தப்பட்டது மீட்பின் ஓர் அடையாளம் மட்டுமே என்று கொண்டது. திருச்சட்டத்தின் மூலமாகவே மக்கள் மீட்கப்படுவார்கள் என்று அது மக்களுக்குத் திருச்சட்டத்தை நினைப்பூட்டியது. இஸ்ரயேலர் தங்கள் எண்ணங்களை உயர்த்தித் தங்கள் உள்ளங்களை விண்ணகத்திலிருக்கும் தந்தைக்குக் கீழாக்கினபோது அவர்கள் குணமாக்கப்பட்டார்கள்.

பாலைநிலத்தில் முழுக்கு முனிவர் யோவான் மீட்புபெற மனமாற்றம் முக்கியம் என்பதை எடுத்துக்காட்டுகிறார் (லூக். 3: 1-20). மனிதர் அனைவரும் கடவுள் அருளும் மீட்பைக் காண்பர் (லூக். 3: 6).

3. மனுக்குலம் உண்மையோடு வாழ உயர்த்தப்பட்ட மானிடமகன் : (யோவா. 3: 21)

உண்மைக்கேற்ப வாழ்பவர்கள் ஒளியிடம் வருகிறார்கள். இதனால் அவர்கள் செய்யும் அனைத்தையும் கடவுளோடு இணைந்தே செய்கிறார்கள் என்பது வெளியாகும்.

மனுக்குலம் எல்லாவற்றிலும் உண்மையோடு வாழ அழைக்கப்படுகிறது. இயேசுகிறிஸ்து, கொஞ்சத்திலே நீ உண்மையாக இருந்தாய்; நீ அநேகத்தின்மேல் அதிகாரியாக இருப்பாய் என்று தாலந்து உவமையில் கூறியுள்ளார் (மத். 25: 14-30). ஒருமுறை பிலாத்து இயேசுவை விசாரிக்கும்போது, இயேசு பிலாத்துவிடம், உண்மையை எடுத்துரைப்பதே என் பணி, இதற்காகவே நான் பிறந்தேன், இதற்காகவே உலகிற்கு வந்தேன், உண்மையைச் சார்ந்தவர் அனைவரும் என் குரலுக்குச் செவிசாய்க்கின்றனர் என்றார். பிலாத்து அவரிடம் கிண்டலாக, உண்மையா? அது என்ன? என்று கேட்டார். தியான வசனமும் உண்மைக்கேற்ப வாழ்பவர்கள் ஒளியாகிய, உயர்த்தப்பட்ட மானிட மகனாகிய இயேசு கிறிஸ்துவிடம் வருகிறார்கள். ஒளியே எல்லா நன்மையையும், நீதியையும், உண்மையையும் விளைவிக்கிறது (எபே. 5: 9).

இவ்வாறு உயர்த்தப்பட்ட மானிடமகனாகிய இயேசுகிறிஸ்து உயர்த்தப்படுவதற்குக் காரணம் மனுக்குலம் நிலைவாழ்வு பெறவும், மீட்பு பெறவும், உண்மையோடு வாழவும் அழைக்கப்படுகிறோம். அவ்வாறு நாமும் வாழுவோம். கடவுளின் அருள் நம் அனைவரோடும் இருப்பதாக, ஆமென்.

ᴜ	ஞா. 210	கீர். 277

அருள்திரு. **T. ஸ்டாலின் வினு ஜோண்ஸ்**

ஆயர், கூவரகுவிளை

விளைச்சல் தரும் கோதுமை மணி

யோவா. 12: 20-26

"கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும்" (யோவா. 12: 24).

இயேசு கிறிஸ்துவின் சிலுவை இறப்பு யூதர்களின் நோக்கத்தின் அடிப்படையில் அவமானமாய் இருந்தாலும் அது இறைபார்வையில் அர்த்தமுள்ளதாய் அமைந்தது. மீட்பின் பார்வையில் கிறிஸ்துவின் இறப்பு மேன்மையானது. தூய பவுலார் கிறிஸ்துவின் இறப்பைப் பெருமையாகக் குறிப்பிடுகிறார் (கலா. 6: 16). இறப்பு என்பது மானுட மகனின் நிறைவான மாட்சியின் வெளிப்பாடு. கிறிஸ்துவின் இறப்பு தோல்வி அல்ல; மாறாக, மனுக்குலத்திற்கானத் தியாக நிலை. கிரேக்கர் மற்றும் யூதர்களின் வாழ்வு பெரும்பாலும் தமக்கென்றே வாழும் சுயநல வாழ்வாகவே இருந்தது. பிறர் வாழ்வைப் பொருட்படுத்தாது, தங்கள் நலனையே குறிக்கோளாகக் கொண்டவர்கள் தான் இந்த மக்கள். இவர்களைப் போன்றவர்கள் பிறர் நலனுக்காக வாழவோ அல்லது மரிக்கவோ இயலாது. தங்களுக்காக மட்டுமே வாழ்பவர்கள்.

இயேசுநாதர் கோதுமை மணி போன்று மண்ணில் மடிந்து இரட்சிப்பு என்ற மிகப் பெரிய பலனை இந்த மானிட உலகிற்குத் தந்தார். பண்டிகை காண வந்த கிரேக்கர்கள் இயேசுவைக் காண வாஞ்சித்தார்கள். ஆனால், இங்கு இயேசுவோ தம்மைக் காண வந்த மக்களுக்கு முன்பாக, தன்னை ஒரு காட்சிப் பொருளாகக் காட்ட விரும்பாமல், தியாகச் செயல் வீரராக அவர்கள் முன் தன்னை வெளிப்படுத்தினார். இதை யோவான் 12: 22, 23 நமக்கு நன்குத் தெளிவுபடுத்துகிறது.

இயேசுவின் காலத்தில் யூதர்கள் மேசியா எங்களுக்காக விடுதலைப் பெற்றுத்தருவார் என்று நம்பி இருந்தனர். இயேசுவின் செயலில் வெளிப்பட்ட அனைத்து நற்செயல்களும் அக்காலத்தில் வாழ்ந்த மக்களின் எண்ணங்களுக்கு வேறுபட்டதாய் இருந்தது. பிரதான ஆசாரியர் மற்றும் யூத மதத் தலைவர்கள் தங்களுக்குரியவைகள் எதையும் இழக்க முன்வரவில்லை. ஆனால், இயேசுநாதர் தன்னை இழந்து பலன் கொடுக்கும் கோதுமை மணிபோல், மடிந்து செயல்படுகிறேன் என்று சொன்னபோது, சமூகத்தில் ஒரு பெரிய அதிர்வை ஏற்படுத்தியது. இதுவரையிலும் இயேசுநாதர் போதித்த அன்பு, மன்னிப்பு, சகிப்புத்தன்மை, தியாகம், பொறுமை இவைகள் ஒரு சொல்லாக நிற்காதபடிக்கு, அதன்படி வாழ்ந்து, மனுமக்கள் மீது கொண்ட அன்புக்காக மடிந்தார். கோதுமை மணி மண்ணில் மடிந்து மிகுந்த விளைச்சலைத் தரும் என்று தன்னைக் குறித்து அறைகூவல் விடுத்தார். கிரஹாம் ஸ்டெயின்ஸ்

மற்றும் அவருடைய இரண்டு குழந்தைகள், அருட்தந்தை. ஸ்டெயின் ஸ்வாமி இவர்கள் கோதுமை மணிகளாய் மண்ணில் மடிந்தது வரலாற்றில் மறக்க முடியாதது. கோதுமை மணியாகிய கிறிஸ்து நமக்குத் தரும் அறைகூவல் எவை?

1. மண்ணில் மாட்சியான வாழ்வு

இறைவனின் விருப்பம், இறை குடும்பம் மண்ணில் மாட்சியாய் வாழ வேண்டும் என்பதாகும். கோதுமை மணி பார்ப்பதற்கு மிகவும் அழகு. ஆனால், அதை நாம் பயன்படுத்தாமல் அப்படியே வைத்துக் கொண்டிருந்தால் எந்தவித பிரயோஜனமும் இல்லை. அதை நாம் பூமியில் விதைக்கும்போது, அதன் மூலம் பெறும் விளைச்சல் நமக்கு நல்ல பிரதிபலனைத் தரும். மண்ணில் மனிதனின் மாட்சியான வாழ்வு, செல்படும் வாழ்வாக இருக்க வேண்டுமென்று சொல்லி இறைவன் எதிர்பார்க்கிறார். ஒரு விதை விதைக்கப்படுகின்றபோது அதன் செயல் ஆரம்பிக்கிறது. அந்த விதையானது முளைக்கத் தொடங்கியவுடன், அதைக் கரிசனையுடன் நோக்கும் செயல், அதை மென்மேலும் செழிப்பாக வளரச் செய்கிறது. அதற்காகத் தனி நேரம் ஒதுக்கி, நன்கு கவனித்து, வேலி அடைத்து, தேவைக்கேற்ப தண்ணீர் பாய்த்து, நல்ல உரம் போடப்படும்போது, பலனை நாம் காண முடிகிறது, இதன் வழியாக நல்ல மகிழ்ச்சி நிறைவு, வெற்றி என்பனவற்றை மனிதன் சுதந்தரித்துக் கொள்கிறான். மண்ணில் அத்தகைய செயல்கள் நடைபெறவில்லை என்றால் மனிதன் அதன்மூலம் சரியான விளைச்சலை, நல்ல பலனை, நல்ல அறுவடையை காண முடியாது. அவன் வாழ்வில் சிறப்புடன் வாழ இயலாது.

இயேசுவின் திருப்பணி அனைத்தும் செயல் சார்ந்த திருப்பணியாய் முன்னிலைப் படுத்தப்படுவதை திருமறை நமக்குக் கூறுகின்றது. லூக்கா நற்செய்தி 12: 16-ஆம் வசனத்தை நாம் சிந்திக்கின்றபோது தனக்குத் தானே தானியங்களைச் சேமித்து வைத்தவன், எனக்கு மட்டும்தான் அவைகள் சொந்தம், அத்தானியங்களை சேர்த்து வைக்க, களஞ்சியங்களை இடித்து இன்னும் பெரிதாகக் கட்டுவேன் என்று தம் மனதில் எண்ணியவரைப் பார்த்து, திருமறை அழைக்கிற சொல், “அறிவிலியே” அதாவது “மதிகேடனே” என்பதாகும். “பிறர் வாழ வேண்டுமெனில் நான் சாக வேண்டும்” என்ற இறையியலாளர் தாமஸ் தங்கராஜ் அவர்களுடைய பாடல் வரிகள் நல்ல சிந்தனையை நமக்குத் தூண்டுவதாக அமைந்துள்ளது. மண்ணில் மாட்சியான வாழ்வு என்பது நான் என்ற நிலை செத்து, கிறிஸ்து எனக்குள் வாழ்கிறார் என்ற நிலையை மேன்மைப்படுத்துகிறது.

சையீர் என்ற ஆப்பிரிக்கா நாட்டில் உள்ள இடத்தில் அருட்பணியாளர்கள் பணிக்குச் சென்று, நூற்றாண்டிற்கான நிறைவு பெற்று, அதற்காக கொண்டாடப்பட்ட நிகழ்வில் சொல்லப்பட்ட சாட்சி, முதன் முதலில் ஆப்பிரிக்காவில் அருட்பணியாளர்கள் வந்தபோது, அங்கு வாழ்ந்த மக்கள், இவர்களை எப்படியாவது விரட்ட வேண்டுமென்று எண்ணி அருட்பணியாளர்களுக்கு விஷம் குடிக்கக் கொடுத்தார்கள். இந்த விஷம் குடித்ததினாலே மெல்ல மெல்ல ஏராளமான அருட்பணியாளர்கள் வியாதிப்பட்டு மரித்தார்கள். அவர்களுடைய குழந்தைகளும் இதிலே

பாதிக்கப்பட்டார்கள். ஆனால், அருட்பணியாளர்கள் அதை இறுதி வரையிலும் தெரிந்திருக்கவில்லை. தொடர்ந்து, அருட்பணியிலே உறுதியாயும் உண்மையுடனும் செயல்பட்டதைப் பார்த்த மக்கள், இவர்கள் சொல்லும் செய்தி உண்மை என்று நற்செய்திக்குச் சான்றாயிருந்தார்கள். அருட்பணியாளர்களுடைய தியாகம் அந்த ஆப்பிரிக்கா தேசத்திலே பெரிய அறுவடையைக் காண, பின்நாட்களிலே அது அடித்தளமாய் அமைந்தது.

2. மனதில் மாற்றுருவாக்கத்திற்கான வாழ்வு

கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்து செயல்படும்போது மாற்றுருவாக்கம் நடைபெறுகிறது. அது தன் இருப்பு நிலையை அழித்து ஒரு புது துளிர்விடும் வாழ்வுக்குத் தன்னை அர்ப்பணிக்கின்றது. திருத்தூதர் பணிகளிலே ஸ்தேவான், கோதுமை மணியாக மண்ணில் மடிந்தபோது, அதை அருகில் நின்று பார்த்தவன்தான் சவுல். நான் என்ற மனதின் வைராக்கியம் கொண்ட இந்த சவுல், தான் இயேசுவால் சந்திக்கப்பட்டு, கிறிஸ்துவை தன் இரட்சகராக ஏற்றுக்கொண்ட பின், பவுலடிகளாரின் மனதில் ஒரு பெரிய மாற்றுருவாக்கம் ஏற்பட்டது. அதன் பின்பு அவர், இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் வாழ்கிறார் என்று சான்று பகர்ந்தார். அந்தச் சாட்சிக்கிணங்க, அவர் சென்ற திருச்சபைகளிலும், பட்டணங்களிலும் கோதுமை மணி போன்று செயல்பட்டு கிறிஸ்துவுக்காக ஏராளமான மக்களை மனதின் மாற்றுருவாக்கத்திற்கு நேராக வழிநடத்தினார்.

திருமறையில் லூக்கா 19: 1-10 வசனங்களை நாம் சிந்திக்கின்றபோது, அங்கு சகேயு என்னும் செல்வந்தர், வரி வசூல் செய்து, பாவியான மனுஷன் என்று மக்களிடம் பெயர் பெற்றவர். ஆனால், எப்பொழுது இயேசுநாதரை சந்தித்தாரோ, அவ்வேளை முதல் ஆபிரகாமின் மகன் என்று சொல்லப்படும் அளவிற்கு மனதில் மாற்றுருவாக்கம் பெற்றார்.

அன்பர்களே, தந்தையாய், பிதாவின் சித்தம் நிறைவேற, மக்கள் மாற்றம் பெற, மனிதனுக்காக மகிபன் இயேசு மரித்தார். பிறர் மனம் நோக நாம் கர்வம் கொண்ட நிலையை எண்ணிப் பார்ப்போம். மாற்றம் பெற்று வாழ வேண்டும் என்று துடித்த கிறிஸ்துவின் இருதயம் எங்கே? கறைப்பட்டிருக்கும் கடினப்பட்ட நம்முடைய இருதயம் எங்கே? விளைச்சல் தரும் கோதுமை மணியாய் மண்ணில் வாழ முற்படுவோம். கிறிஸ்து இயேசுவின் சித்தம் நிறைவேற்றுவோம், ஆமென்.

அருள்திரு. **S. செல்ல ஜெபராஜ்**
ஆயர், மேலச் சந்தையடி

ப	ஞா. 467	கீர். 240

ஓசன்னா: ஆண்டவரே எம்மை மீட்டருளும்

Hosanna : Lord Save Us

செக். 9: 1 - 12 1 திமொ. 4: 6 - 16

தி.பா. 118: 19 - 29 லூக். 19: 29 - 40

ஆண்டவரே! மீட்டருளும்! (தி.பா. 118: 25a).

இஸ்ராயேல் மக்கள் கொண்டாடிய விழாக்களில் பாஸ்காவிழா, பெந்தக்கொஸ்துவிழா, கூடாரவிழா ஆகிய மூன்று விழாக்களும் மிகவும் சிறப்பு மிக்கனவாகும். கூடாரவிழாவின்போது முதல் ஏழு நாட்களும் ஒவ்வொரு முறை வீதம் பலிபீடத்தைச் சுற்றிப் பேரீச்ச ஓலை மற்றும் கொழுமையான தளிர்களையும், அலரி இலைகளையும் கொண்டுவந்து (லேவி. 23: 39) ஆண்டவரே! மீட்டருளும் என்ற பொருள் தரும் ஓசன்னா முழக்கமிடுவர் (திபா. 118: 25). விழாவின் எட்டாவது நாளைப் பெரிய ஓசன்னா நாள் என்பர். அந்நாளில் ஏழு முறை பலிபீடத்தைச் சுற்றி வருவர்.

இஸ்ராயேலர் பாபிலோன் சிறையிருப்புக்குள் சென்ற பின் விழாக்களைக் கொண்டாட கோவில் இல்லை. விழாக்களும் இல்லை. சிறையிருப்பிலிருந்து திரும்பிய பின் செக்கரியா இறைவாக்கினர் (கி.மு. 520 - 480) மீண்டும் எருசலேம் கோவிலைத் திரும்பக் கட்ட வேண்டும் எனவும், கோவில் மட்டுமன்று கடவுளுக்கும், மனிதருக்கும் உள்ள உறவைச் சீர்செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தினார். மேலும், இழந்துபோன அரசனையும், அரசாட்சியையும் எதிர்நோக்கி நின்ற இஸ்ராயேலருக்குத் தாவீதின் வழித்தோன்றலாக மெசியா வருவார் என்கிற செய்தியை உறுதிப்படுத்தினார் (செக். 9: 9 - 10). இயேசு எருசலேம் நோக்கிச் சென்ற ஊர்வலம் வாயிலாக இவ் இறைவாக்கு நிறைவேறியதாக நற்செய்தி நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன (மத். 21: 4, யோவா. 12: 15).

பாஸ்கா திருவிழாவின்போது யூதேயா, கலிலேயா போன்ற பகுதிகளில் வாழும் யூதர்கள் எருசலேம் வருவர். அவர்களிடையே கருத்து முரண்பாடுகளும், சண்டைகளும் வருவது இயல்பானதே. எனவே, அப்பகுதிகளை ஆளும் ஆளுநர்களும் எருசலேமில் ஊர்வலமாக வந்து தங்குவர். யூதேயா ஆளுநராகிய பிலாத்து எருசலேமை நோக்கி ஊர்வலமாக வந்தபோது, ஆடம்பரங்களும், அரசு அலுவலர்களின் அணிவகுப்பும், ஆளுநரைக் குறித்த புகழ்பாக்களும் இடம்பெற்றன. ஆனால், அதற்கு எதிர்மாறாக இயேசுவின் ஊர்வலம் நடைபெற்றது. மெசியாவைக் குறித்த எதிர்பார்ப்புகளுக்கு விடை தருவதாக இயேசுவின் ஊர்வலம் அமைந்தது (தொ.நூ. 49: 10, 11; செக். 9: 9). இந்த ஊர்வலத்தில் எழுப்பப்பட்ட ஓசன்னா முழக்கம் மூன்று வகைப்பட்ட மக்களின் சிந்தனைகளை வெளிப்படுத்தின.

i) ஆர்ப்பரிக்கும் மக்கள் (Cheering People) : (லூக். 19: 37)

ஓசன்னா என்ற ஆர்ப்பரிப்பு முழக்கத்தை இயேசுவுக்கு முன்னேயும், பின்னேயும் சென்ற கூட்டத்தினர் முழங்கியதாக மத்தேயு, மாற்கு நற்செய்தி நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன (மத். 21: 9, மாற். 1: 9). பெருந்திரளாய் வந்திருந்த மக்கள் ஓசன்னா என்று ஆர்ப்பரித்ததாக யோவான் நற்செய்தி நூலில் கூறப்பட்டுள்ளது (யோவா. 12: 13). ஆனால், இயேசு ஒலிவ மலையை நெருங்கியபோது திரண்டிருந்த சீடர் உரத்த குரலில் கடவுளைப் புகழ்ந்து "ஆண்டவர் பெயரால் அரசராய் வருகிறவர் போற்றப்பெறுக" என்று கூறியதாக லூக்கா நற்செய்தி நூல் குறிப்பிடுகிறது (லூக். 19: 38). திருவிழாவிற்கு எருசலேம் வருவோரைக் குருக்கள் நின்று வாழ்த்தும் பாடலை (திபா. 118: 26) இயேசுவின் ஊர்வலத்தில் மக்கள் ஆர்ப்பரித்ததாக இங்கு எழுதப்பட்டுள்ளது. மேலும், ஆண்டவர் ஒலிவ மலையில் தோன்றுவார் என்கிற செய்தியும் முன்னடையாளமாக்கப்படுகிறது. இயேசுவின் ஊர்வலத்தில் வந்த மக்கள் யார்? ஏன் ஓசன்னா முழக்கமிட்டனர்? இஸ்ராயேல் குலத்தாருள் காணாமற்போன ஆடுகளாய் இருப்போரைத் தேடியே ஆண்டவரின் பணி அமைந்தது (மத். 15: 24). அவ்வாறு காணாமல்போன ஆடுகளின் வரிசையில் உடல்நலம் குன்றியோர், தொழுநோயாளியர், தீமைகளின் பிடியில் உள்ளோர் அனைவரும் அடங்குவர் (மத். 10: 8). மாற்றுதிறன்மிக்கோர் எருசலேம் கோவிலுக்குள் செல்ல தடை செய்யப்பட்டிருந்தபோதும் (II சாமு. 5: 8) இயேசுவின் ஊர்வல நிறைவில் பார்வையற்றோரும், கால் ஊனமுற்றோரும் கோவிலுக்குள் இயேசுவை அணுகி, நலம் பெற்றதாக மத்தேயு நற்செய்தி குறிப்பிடுகிறது (மத். 21: 14). இயேசுவின் எருசலேம் ஊர்வலத்தில் கலந்துகொண்ட மக்களில் பெரும்பான்மையோர் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களாவார். சமய, அரசியல் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைக்காக ஏங்கி நின்ற இம்மக்களின் ஆர்ப்பரிப்பு ஓசன்னா! ஆண்டவரே மீட்டருளும்! என்பதாகும்.

ii) அவமதிக்கும் மக்கள் (Insulting People) : (லூக். 19: 39)

எருசலேமை நோக்கி சென்ற இயேசுவின் ஊர்வலத்தில் ஓசன்னா என்ற முழக்கத்தால் மக்கள் கடவுளைப் புகழ்ந்தனர். இதனைக் கேட்ட பரிசேயரில் சிலர் இயேசுவை நோக்கி, உம் சீடர்களைக் கடிந்துகொள்ளும் என்றனர் (லூக். 19: 39). தற்பெருமையுடன் தற்புகழ்ச்சியை விரும்புவோரும், பிறரை அடிமைப்படுத்துவோரும் விடுதலைக்கான ஓசன்னா முழக்கத்தை அவமதித்தனர். இவர்கள் சமய, சமூக அடிமைத்தனக் கோட்பாடுகளையும், சட்டங்களையும் தங்கள் வாழ்வுக்கு ஏற்றுக்கொள்ளாமல் மக்கள் மீது சுமத்தி வாழ்ந்து வந்தனர் (மத். 23: 4). இளம் போதகராகிய திமொத்தேயுவுக்குப் பவுலடிகளார் அறிவுரை கூறும்போது "உன் செயலும் உன் பேச்சும் ஒரே நேர்கோட்டில் செல்ல வேண்டும்" என்கிறார் (1 திமொ. 4: 16). கடவுளைப் புகழ்வதற்குப் பதிலாக தனக்குத்தானே புகழினைத் தேடுவதுடன் (லூக். 18: 11) எச்சூழலிலும் பிறரைப் புகழக்கூடாது என்ற இறுமாப்பு சிந்தையுடன் தன்னை மட்டும் முன்னிலைப்படுத்தும் பரிசேய சிந்தை கொண்ட மக்களும் இயேசுவின் ஊர்வலக் கூட்டத்தில் மறைந்திருப்பது வெளிப்படுத்தப்படுகிறது. ஓசன்னா

முழக்கத்தை அவமதித்த பரிசேய கூட்டத்தோடு அல்ல; ஓசன்னா முழக்கத்துடன் கடவுளுக்கு புகழ் செலுத்தி ஆர்ப்பரித்த எளியோருடன் இணைந்து ஓசன்னா முழக்கமிட ஆயத்தமா?

iii) அனுசரிக்கும் மக்கள் (Obedient People) : (லூக். 19: 40)

ஓசன்னா என்று ஆர்ப்பரித்த எளியோரின் குரலை ஆண்டவர் தடுக்கவில்லை. இவர்கள் பேசாதிருந்தால் கற்களே கத்தும் என்பது பரிசேயரின் ஓசன்னா அவமதிப்புக்கான இயேசுவின் பதில்மொழி. விடுதலைக்காக எளியோர் கடவுளைப் புகழும்போது, அவர்களை ஒடுக்குவோர் வன்முறைகளை கட்டவிழ்த்து விடுவதன் வாயிலாக அவர்கள் குரல்வளைகளை நெருக்கி செயல்படாத உயிரற்ற கற்களாக மாற்றிவிட முற்படுவர். அப்படி செயல்படாத கற்களாக மாற்றப்பட்டாலும் எளியோர் கடவுளைப் புகழ்வர் (லூக். 19: 40) என்கிற புதிய பாடத்தை ஆண்டவர் கற்றுக்கொடுத்தார். எளியோர் விடும் பெருமூச்சுகளும் வேண்டுதல்களாக மாறிவிடும். அடிமைத்தனங்களும், அடக்குமுறைகளும் எங்கெங்கு கோலோச்சுகிறதோ, அங்கெல்லாம் ஓசன்னா முழக்கங்களும் எழுப்பப்படும். இவ்விடுதலைப் பணிகளை முன்னெடுப்போர் தாழ்மையுடன், பிறர் சுமைகளைத் தன் சுமையாக ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்குடன் செயல்பட வேண்டும் என்பதனை இயேசு பயன்படுத்திய விலங்கின் வாயிலாக வெளிப்படுத்தினார் (லூக். 19: 35). நம் வாழ்வில் ஓசன்னா முழக்கத்தை விடுதலைக்காய்க் காத்திருக்கும் எளியவரோடு ஆர்ப்பரித்து முழங்குகிறோமா? அல்லது ஓசன்னா முழக்கத்தை அடிமைப்படுத்தும் பரிசேய சிந்தையோடு அவமதிக்கிறோமா? மேலும், ஓசன்னா முழக்கத்தை விடுதலைக்கான இயேசுவின் சிந்தையோடு அனுசரிக்கிறோமா?

ஓசன்னா! ஆண்டவரே மீட்டருளும்! ஆமென்.

அருள்திரு. S. கிரீஷ் குமார்
ஆயர், புல்லுவிளை

ப	ஞா. 128	கீர். 144

இறைவேண்டல்

அனைத்தாற்றலுடைய கடவுளே, ஓசன்னா முழக்கங்களுக்கு மத்தியில் கடவுளின் ஆட்டுக்குட்டியாகவும் உலக மீட்பராகவும் எருசலேமுக்கு வெற்றியுடன் அணிவகுத்துச் சென்ற உமது மகன் இயேசு கிறிஸ்துவுக்காக உமக்கு நன்றி கூறுகிறோம். வருத்தமும், துக்கமும் நிறைந்த இந்த உலகில், தீமையை வென்று, கிறிஸ்துவுடன் எங்கள் எதிர்காலத்தில் அணிவகுத்துச் செல்வதற்கான நம்பிக்கையை எங்களுக்குத் தாரும். உம்மோடும் தூய ஆவியரோடும் வாழ்ந்து இப்போதும் என்றென்றும் ஆட்சி செய்யும் ஒரே கடவுளான எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் வேண்டுகிறோம், ஆமென்.

அடையாளமாகும் அத்திமரம்

மத். 21: 18-22

"இனி நீ கனி கொடுக்கவேமாட்டாய் என்று அதைப் பார்த்துக் கூறினார். உடனே அந்த அத்திமரம் பட்டுப்போயிற்று" (மத். 21: 19).

குரு தன் சீடர்களுக்கு எப்படிப் பரிசுத்தமாக வாழ வேண்டும் என தினமும் கற்றுக்கொடுப்பது வழக்கம். ஒருநாள் சீடன் ஒருவன் குருவிடம் வந்து, ஐயா நான் பரிசுத்தமாக வாழ வேண்டும் என்று எவ்வளவோ முயன்றும் என்னால் முடியவில்லை. அசுத்தமான எண்ணங்களும், செயல்களும் என்னோடு சேர்ந்துவிடுகிறது. நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டான். அதற்கு குரு.. சீடனே.. காற்று அதின் ஓட்டத்தில் அசுத்தவாடையையும் கொண்டு வருகிறது. ஆனால் விரைவில் அந்த வாடையை உதறித் தள்ளிவிட்டு சுத்த காற்றாகப் பயணம் செய்கிறது. ஆற்றைப்பார்...ஆற்றின் ஓட்டத்தில் அழுக்குகளும் சேர்ந்து வருகிறது. ஆனால் விரைவிலே அந்த அழுக்குகளை விலக்கிவிட்டுத் தூய தண்ணீராகப் பயணம் செய்கிறது. அதுபோலவே நீயும் வாழ்க்கைப் பயணத்தில் வரும் அசுத்தமான எண்ணங்களையும், செயல்களையும் உதறி விட்டுப் பரிசுத்தமாக உன் பயணத்தைத் தொடரு என்றாராம். இப்படியே தூய வாழ்வு வாழ்வதற்கு நமக்குத் தரப்பட்ட காலம் தான் இந்தத் தவசு காலம்.

பெத்பகே பெத்தானியா கிராமத்திலிருந்து தொடங்கிய பவனி ஒலிவ மலை வழியாக எருசலேம் நகரைச் சென்றடைந்தது. அங்கு ஆலயத்தைத் தூய்மைப்படுத்திய ஆண்டவர் இயேசு, அன்று மாலையிலேயே மீண்டும் பெத்தானியா வந்து தங்கினார். மறுநாள் மீண்டும் பெத்தானியாவிலிருந்து எருசலேம் நோக்கித் தொடர்ந்த பயணத்தின் நடுவில் அவருக்குப் பசி உண்டாயிற்று. அப்பொழுது தன் பசியைப் போக்க வழியருகே நின்ற ஒரு அத்திமரத்தைக் கண்டு அதன் அருகில் சென்று பார்க்கவே கனிகள் இல்லாததால் அந்த அத்தி மரத்தை சபித்தார். அது அப்படியே பட்டுப் போயிற்று.

இஸ்ரவேல் மக்களின் வாழ்வில் அத்தி மரம் அனைத்து மரங்களை விட சிறப்பு வாய்ந்த ஒன்றாகக் கருதப்பட்டது. மோசே, கடவுளால் வாக்களிக்கப்பட்ட தேசத்தை "அத்திமரங்களுள்ள தேசம்" என வருணித்தார் (இ.ச. 8: 8). கானானுக்கு உளவு பார்க்கச் சென்றவர்கள் அங்கிருந்து கொண்டுவந்த பழங்களில் அத்திப்பழம் இருந்தது (எண். 13: 23). சாலமோனுடைய நாட்களில் யூதாவும், இஸ்ரவேலும் அவரவர் தங்கள் தங்கள் திராட்சைச் செடியின் நிழலிலும், அத்தி மரத்தின் நிழலிலும் சுகமாய்த் தங்கியிருந்தார்கள் என்றும் (1அச. 4: 25), அத்திமரம் மக்களின் செழுமையான வாழ்வுக்கும், அமைதியான

வாழ்வுக்கும் அடையாளமாக அமைகிறது என்றும் திருமறை சொல்லுகிறது (மீகா 4: 4, சகரியா 3: 10). அதனுடன், அத்திப்பழங்கள் இனிமையானவை (நீ.த. 9: 11), எசேக்கியா நோயுற்றபோது அத்திப்பழ அடை போடப்பட்டது (2அர. 20: 7). உயிர்போகும் நிலையில் இருந்த எகிப்தியனுக்கு அத்திப்பழ அடை கொடுக்கப்பட்ட போது உயிர் பிழைத்தான் (1சாமு. 30: 11). தாவீதுவுக்கு ஞானவதியாகிய அபிகாயில் இருநூறு அத்திப் பழ அடைகளைப் பரிசாகக் கொடுத்தாள் (1சாமுவேல் 25: 18). நாடோடிகளுக்கு ஊட்டம் மிகுந்த உணவாக அது இருக்கும் என்பதை அவள் அறிந்திருந்ததாகத் திருமறை நமக்கு விளக்குகிறது. இப்படி அத்தி மரமும் அத்திப் பழமும் சிறப்பு மிக்கவைகளாக இருந்தாலும் இங்குச் சொல்லப்பட்டுள்ள திருமறைப் பகுதியிலிருந்து சில உண்மைகளைச் சிந்திப்போம்.

1. பசுமையான அத்திமரம்

"அப்பொழுது வழியருகே ஒரு அத்திமரத்தைக் கண்டு அதினிடத்திற் போய், அதிலே இலைகளையன்றி வேறொன்றையுங் காணாமல்" (மத். 21: 19).

பயணத்தின் களைப்பால் தன் பசியாற்றப் பசுமையாக வளர்ந்திருந்த அத்திமரத்தைத் தேடி சென்றபோது அது இலைகளால் மட்டுமே நிரம்பியிருந்தது. மார்ச் மாதத்தில் அத்திமரத்தில் இலைகள் துளிர்க்கும்போது அதனோடே சில மொட்டுகளும் கூடத் தோன்றும், இது டாக்ஷ் (Taqsh) என்று அராபியர்களால் அழைக்கப்பட்டது. இவைகள் சாப்பிட தக்கவை. அறுவடை செய்து சந்தைகளிலும் விற்கப்பட்டது. இதைப் பசியாய் இருக்கும் போது ஏழை மக்கள் எடுத்து உண்பதுண்டு. ஆகிலும் முதிர்ந்த அத்திப்பழங்கள் கோடைகாலத்தில் அறுவடை செய்யப்பட்டன. அத்திமரம் இரண்டு மாதம் தவிர மற்ற மாதங்களில் கனி கொடுக்கும். கனி கொடுக்கும் காலத்தில் கனிகளோடு ஏராளமான இலைகளும் அதில் காணப்படும். இலைகள் இருந்தால் கனி கட்டாயமாக இருக்கும். அதைத் தான் இயேசு எதிர்பார்த்தார். ஆனால் இலைகள் நிறைந்த பசுமையான மரத்தை மட்டுமே அவரால் கண்டுகொள்ள முடிந்தது. அந்த இலைகளால் இயேசுவின் பசியைத் தீர்க்க முடியாது. எனவே தான் இயேசு அத்திமரத்தை சபித்தார்.

"இளவேனிற் காலத்தில் இலைகள் துளிர்த்து வரும்போது ஒவ்வொரு சத்துள்ள மரமும் தன்னில் ஏதாவது சில டாக்ஷ் அத்திப்பழங்களைக் கொண்டிருக்கும். ஆனால் ஒரு மரம் நிறைய இலைகளைக் கொண்டிருந்தும் பலனில்லாமற்போனால், அது பருவ காலத்திலும் கனி கொடாத மலட்டு மரமாகத்தான் இருக்கும்" என்று R.K. Harrisor என்பவர் கூறுகிறார். இது மாய்மாலத்தைக் குறிக்கிறது. இன்று பெரும்பாலான கிறிஸ்தவர்கள் இலைகள் மட்டும் நிறைந்த பசுமை மரத்தைப் போலவே காணப்படுகின்றனர். அத்தி மரத்தில் வேர், இலை தண்டு, அடிமரம் கிளைகள் அனைத்தும் இருந்ததைப் போல, பணம், பொருள், செல்வம், அந்தஸ்த்து அதிகாரம் இவைகள் அனைத்தும் அதிகமாக இருக்கிறது. ஆனால் ஆவியின் கனிகளோ இல்லை

(கலா. 5-22,23). இந்தப் பசுமையான அத்திமரத்தின் மூலம் யூத சமயத்தையும் யூதர்களையும் இயேசு காண்கிறார். அவர்களின் வார்த்தைகள், தோற்றங்கள், பாரம்பரியங்கள் அனைத்துமே பசுமையான அத்திமரத்தைப் போலவே இருந்தன. ஆனால் செயலளவில் அவர்கள் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளைப் போல காணப்பட்டனர் (மத். 23:27). உள்ளத்தால் விலகி உதட்டால் கனம் பண்ணுகிறவர்களாயும் (மத்.15: 8), குருடருக்கு வழி காட்டும் குருடராகவும் (மத். 15:15), சட்டத்தை முதன்மையாகக் கொண்டு சடங்காச் சாரங்களுக்கு முக்கியத்தும் கொடுத்து, மனித நேயத்தைப் புறந்தள்ளினவர்களாய் வாழ்ந்தனர். இவர்கள் கனி இல்லாத பசுமையான அத்திமரத்தைப் போன்றவர்கள் என்று அடையாளப்படுத்துகிறார்.

2. பட்டுப்போன அத்திமரம்

"இனி ஒருக்காலும் உன்னிடத்தில் கனி உண்டாகாதிருக்கக்கடவது என்றார் உடனே அத்திமரம் பட்டுப்போயிற்று" (மத்.21: 19).

பசுமையாய் நின்ற அத்திமரத்தில் இலைகளை மட்டுமே இயேசுவால் காண முடிந்தது. அவர் எதிர்பார்த்த கனி கிடைக்காததால் இனி ஒருக்காலும் உன்னிடத்தில் கனி உண்டாகாதிருக்கக்கடவது என்று எச்சரித்தார். உடனே அத்திமரம் பட்டுப்போயிற்று. ஒரு பசுமையான மரம் ஒருபோதும் உடனடியாக பட்டுப்போவதில்லை. ஆனால் இந்த அத்திமரம் கொஞ்சம் கொஞ்சமாக பட்டுபோகாமல் இயற்கைக்கு அப்பாற்பட்ட முறையில் உடனே பட்டுப்போனது. அதைக்குறித்து சீடர்கள் ஆச்சரியப்பட்டார்கள். இயேசு ஏன் இப்படி அத்திமரத்தை சபித்தார் என்பதை அறிய ஆர்வம் காட்டாத சீடர்கள், இயேசு அதை எப்படிச் செய்தார் என்பதில் ஆச்சரியப்பட்டார்கள்.

அடுத்ததாக ஏன் அத்திமரத்தை சபிக்க வேண்டுமென்ற கேள்வியும் உண்டு. இயேசு அத்திமரத்தின் மேல் எரிச்சல் அடைந்ததினால் அதை சபிக்கவில்லை. இது இஸ்ரவேல் மக்களின் அழிவை அடையாளப்படுத்துவதாய் (எரே. 8: 13, 29: 17, மீகா 7: 1,2) அமைகிறது. அத்திமரம் இஸ்ரேல் தேசத்தைக் குறிக்கிறது. "வனாந்திரத்தில் திராட்சைக் குலைகளைக் கண்டு பிடிப்பது போல இஸ்ரவேலைக் கண்டுபிடித்தேன். அத்திமரத்தில் முதல் தரம் பழுத்த கனிகளைப் போல உங்கள் பிதாக்களைக் கண்டுபிடித்தேன்" என்று ஓசியா 9: 10ஆம் வசனத்தில் வாசிக்கிறோம். இஸ்ரேல் என்ற அத்திமரம் தன்னுடைய மேசியாவை நிராகரித்ததினால் இஸ்ரேல் பட்டுப் போகுமென்று இயேசு வெளிபடுத்திக் காட்டுகிறார். அத்திமரத்தைப் பட்டுப்போகச் செய்ததின் மூலமாக இயேசு அதை ஒரு நல்ல நோக்கத்திற்காக அடையாளப்படுத்துகிறார். வீணான மாய்மாலக்காரர்களுக்கு அந்த மரம் ஒரு அடையாளமாகவும், எச்சரிப்பாகவும் ஆனது. இறைபக்தியற்றவர்கள் விசுவாசிகளைப் போலத் தோற்றமளித்துவிட்டு. வழிவிலகிப் போகும்போது, அதன் மூலமாக மற்றவர்கள் படிப்பினையைப் பெற்றுக் கொள்கிறார்கள். இறைவழிகளில் சரிவர நடக்காதவர்களின் அழிவை அவர்கள் காணும்படியாக நேரிடுகிறது.

கனிகளை எதிர்பார்ப்பதற்கு ஆண்டவருக்கு உரிமை உண்டு. அதோடு கனிகளை எதிர்பார்ப்பதற்கு அவருக்குக் காரணமும் இருந்தது. ஏனென்றால் இயற்கை விதியின்படி அத்திமரத்தில் இலைகள் உருவாவதற்கு முன்பாகக் கனிகள் தோன்றியிருக்க வேண்டும். இலைகள் வந்துவிட்டால் அதில் நிச்சயம் கனிகள் இருக்கும். ஆனால் இந்த மரமோ, பழங்கள் இருப்பதுபோல் விளம்பரப்படுத்திப் பசுமையாய்த் தோற்றம் கொடுத்ததே தவிர, கனியைக் கொடுக்கவில்லை. பசுமைக் கிறிஸ்தவர்களாக நம்மை அடையாளப்படுத்தாமல் கனி கொடுக்கும் கிறிஸ்தவர்களாய் வாழ்வோம்.

அத்திமரம் போல் எத்தனைபேர்கள் வாழ்கின்றார்கள்
தினம் கர்த்தருக்குள்ளே அர்த்தமில்லாமல் வாழ்கின்றார்கள்

பார்க்கப் பார்க்க அழகாய் இருந்தது அத்திமரம்
இயேசு ஆசையோடு கனியைத் தேடினார் ஏமாற்றம்
இப்படித் தானே மனிதர்கள்
வாழும் வாழ்வில் பல வேஷம்

- என்ற பாடல் வரிகளும் நம் சிந்தனைக்குரியன. ஆமென்.

ய	ஞா. 124	கீர். 148

அருள்திரு. **J.J. இம்மானுவேல்**
ஆயர், மணவாளக்குறிச்சி

விடியலுக்கான விடைகள்

மாற். 12: 13-27

"அவர்கள் அவரைக் குறித்து வியப்படைந்தார்கள்" (மாற். 12: 17).

இறைமகன் இயேசு மாம்சத்தில் வெளிப்பட்டார். யூதருக்கு அரசராய்ப் பிறந்தவரை யூதகுலம் ஏற்றுக்கொள்ளவில்லை. யோவா. 1: 11-இல் கூறப்பட்டபடி "அவர் தமக்குரியவர்களிடம் வந்தார். அவருக்கு உரியவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை". காரணம் விடியலைத் தரப்போகிற மேசியா, விளம்பரம் இல்லாத் தொழுவத்தில் பிறந்ததை ஏற்றுக்கொள்ள முடியாததுதான். மட்டுமல்ல, அரசராக அரண்மனையில் உதிக்க வேண்டிய நட்சத்திரம், ஏழை மரியின் மடியில் அவதரித்ததுதான்.

கிறிஸ்துவின் போதனைகள் தலைமை குருக்கள், மறைநூல் அறிஞர்கள், மூப்பர்கள் இக்கூட்டத்திற்குப் பெரும் வினாக்களை எழுப்பியது. அவர் செயல்களோ இக்கூட்டத்திற்கு பெரும் சவாலாக அமைந்தது. எப்படியாயினும் இயேசுவிடம் குற்றம் கண்டுபிடித்தே ஆக வேண்டும் என்ற கட்டாயம். எச்செயலிலும் குற்றம் இல்லை. எப்படியும் பேச்சில் சிக்க வைக்க முடிவெடுக்கின்றனர். விடியலைத் தரும் மேசியாவிடம் சில வினாக்கள் எழுப்பப்படுகின்றன. இவ்வினாக்களுக்கான விடைகளோ விடியலுக்கான விடைகளாக அமைகின்றன.

1. விந்தையான விடை

தலைமை குருக்கள், மறைநூல் அறிஞர்கள், மூப்பர்கள் போன்றோரால் பரிசேயர் மற்றும் ஏரோதியரில் சிலர் இயேசுவிடம் அனுப்பப்படுகின்றனர். இயேசுவிடம் வினா ஒன்று எழுப்பப்படுகின்றது. வினா மிக எளிதானதுதான் (மாற்கு 12: 14). "இராயனுக்கு வரி செலுத்துவது முறையா? இல்லையா? நாங்கள் செலுத்தவா? வேண்டாமா?" இதுதான் கேள்வி. கேள்வி சுலபமாக இருந்தாலும் அது கேட்கப்பட்டதன் நோக்கத்தை உணர்ந்தார் இறைமகன் இயேசு. ஒரு பணத்தை என்னிடம் கொண்டு வாருங்கள் என்றார். கொண்டு வந்தார்கள். எளிதான கேள்விக்கு மிக எளிதாகவே பதிலையும் கொடுத்துவிட்டார். நாணயத்தில் பொறிக்கப்பட்டுள்ள உருவமும் எழுத்தும் இராயனுடையது என்பதைச் சுட்டிக்காட்டி "இராயனுடையதை இராயனுக்கும், கடவுளுடையதைக் கடவுளுக்கும் செலுத்துங்கள்" என்றார். நாம் கடவுளின் சாயலில் படைக்கப்பட்டபடியால் நாம் கடவுளுடையவர்கள் என்பதை உணர்த்தினார். சற்றும் எதிர்பாராத இவ்விடையால் குற்றப்படுத்தவந்தவர்கள் விந்தையுற்றனர்.

இயேசுவைக் குற்றப்படுத்தி வாயடைக்கலாம் என வந்தவர்கள் வாயடைத்து நின்றனர்.

2. விலகி நின்றோருக்கான விடை

கிறிஸ்தவ நம்பிக்கையின் உச்சகட்டமே உயிர்த்தெழுதல் குறித்த நம்பிக்கைதான். 1 கொரி. 15: 14-இல் "கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருந்த நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும்" என்று பவுல் உயிர்த்தெழுதலின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கின்றார். இப்படியிருக்க, சதுசேயர் என்ற கூட்டத்தினர் உயிர்த்தெழுதல் இல்லையென்ற ஆணித்தரமான நம்பிக்கையால் இறையரசை விட்டு விலகி நின்றனர். இப்படி விலகி நின்றோருக்கான விடையாகக் கூறுகின்றார். மாற். 12: 24-இல் "உங்களுக்கு மறைநூலும் தெரியாது, கடவுளின் வல்லமையும் தெரியாது. இதனால்தான் தவறான கருத்தைக் கொண்டிருக்கிறீர்கள்" என்று கூறி விலகி நின்றோரைத் தெளிவுபடுத்துகின்றார்.

3. விண் சாயலுக்கான விடை

உயிர்த்தெழுதலுக்கு பின் எவ்விதம் இருப்போம் என்ற கேள்வி நம்மில் பலருக்கு உண்டு. இதே கேள்வி அன்று இயேசுவிடம் கேட்கப்பட்டது. உயிர்த்தெழுந்த பின்னும் இதே பூமிக்குரிய உடலோடு காணப்படுவோமா? என்ற கேள்விக்கு விண்ணுக்குரிய சாயல் எவ்விதத்திலும் மண்ணுக்குரிய சாயலுக்கு ஒப்பானதல்ல என்று மாற். 12: 25-இல் தெளிவுப்படுத்துகின்றார். "விண்ணகத்; தூதர்களின் சாயலே விண் சாயல்" என்று கூறி அத்தனை வினாக்களுக்கும் ஞானம் விளங்கத் தன் வாயைத்; திறக்கின்றார்.

ஆம், அன்பானவர்களே! கிறிஸ்துவின் போதனைகள் மக்களின் அத்தனை கேள்விகளுக்கும் மகத்தான பதில்களைக் கொடுத்தன. இப்போதனைகளால் காரிருளில் இருந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள் (மத். 4: 16). விடியலையும் தங்கள் வாழ்வில் கண்டு கொண்டார்கள். இவ்விடியலுக்கான விடைகள் இன்று நம் வாழ்விலும் விடியலைக் கொண்டுவர வல்லன. ஆகவே, இறைமகன் இயேசுவோடு இனிய நம் வாழ்வைத் தொடருவோம்! ஆமென்.

ப	ஞா. 126	கீர். 136

அருள்திரு. **G. ஜெபின்**
ஆயர், மாத்தூர்

அர்ப்பணிப்பும் அங்கீகாரமும்

மாற். 14: 1-9

"உலகம் முழுவதும் எங்கெல்லாம் நற்செய்தி அறிவிக்கப்படுமோ அங்கெல்லாம் இவர் செய்ததும் எடுத்துக் கூறப்படும்; இவரும் நினைவு கூரப்படுவார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்" என்று கூறினார் (மாற். 14: 9).

பாஸ்கா என்ற புளிப்பற்ற அப்ப விழா நிகழ இன்னும் இரு நாட்கள் இருந்த சூழலில் தலைமைக் குருக்களும் மறைநூல் அறிஞரும் இயேசு கிறிஸ்துவைச் சூழ்ச்சியாகப் பிடித்துக் கொலை செய்வது எப்படி என்று வழி தேடிக் கொண்டிருந்தார்கள். இருப்பினும் விழாவின்போது இப்படிச் செய்தால் மக்களிடையே கலகம் ஏற்படலாம் என்று நினைத்த சூழலில் பெத்தானியாவில் தொழுநோயினால் பாதிக்கப்பட்டு இயேசு கிறிஸ்துவால் சுகம் பெற்றிருந்த சீமோன் என்பவர் இல்லத்தில் இயேசு இருந்தார். அப்பொழுது ஒரு பெண் நறுமண தைலம் கொண்ட படிகச் சிமிழுடன் வந்து, அதை இயேசு கிறிஸ்துவின் தலையில் ஊற்றினார். இந்த நிகழ்வு நான்கு நற்செய்தி நூல்களிலும் இடம் பெற்றுள்ளது (மத். 26: 6-13; மாற். 14: 3-9; லூக். 7: 36-50; யோவா. 12: 1-8). இதில் மத்தேயு, மாற்கு ஆகியோர் ஒரு பெண் என்றும் லூக்கா பாவியான பெண் என்றும், யோவான் மரியாள் என்றும் குறிப்பிடுகின்றனர்.

இப்பெண் கொண்டு வந்தது நறுமணத்தைலம் என்று மத்தேயு, லூக்கா ஆகியோரும் இலாமிச்சை என்ற விலையுயர்ந்த தைலம் என்று மாற்கு, யோவான் ஆகியோரும் குறிப்பிட்டுள்ளனர். இச்செயல் வழியாக இப்பெண் செய்த அர்ப்பணம் இயேசு கிறிஸ்துவால் அங்கீகாரம் பெற்றது. இயேசு கிறிஸ்துவால் அங்கீகரிக்கப்பட இப்பெண் செய்த அர்ப்பணச் செயல்கள் எவை?

1. பாரம்பரியங்களை உடைத்தார் : (மாற். 14: 3)

பாரம்பரியங்கள் மக்களின் அன்றாட வாழ்வோடு பின்னிப் பிணைந்தது. கலாச்சாரத்தின் அடிப்படையிலான பாரம்பரியங்கள் வாழ்வின் முன்னேற்றத்திற்குரிய தடை அல்லது எதிரி எனலாம். இயேசு கிறிஸ்து வாழ்ந்த கால கட்டத்தில் பெண்கள் இரண்டாம் தரக் குடிமக்களாகவும், அடிமைகளாகவும் கருதப்பட்டனர். பெண்களின் சாட்சி ஏற்றுக்கொள்ளப்படவில்லை. யூதர் ஒருவர் இறைவேண்டல் ஏறெடுக்கும்போது கடவுளே! நீர் என்னை ஒரு பெண்ணாக, புற இனத்தவனாக, ஒரு அடிமையாக

படைக்காததற்காக நன்றி என்று வேண்டுதல் செய்வார். அந்த அளவிற்குப் பெண்கள் இழிவாகக் கருதப்பட்டனர். ஆண்கள் இருக்குமிடத்திலோ, பொது இடத்திலோ பெண்கள் கூடுவதற்கு அல்லது இருப்பதற்கு அனுமதியில்லை. அப்படிப்பட்ட பாரம்பரியம் மிக்கச் சூழலில் இப்பெண் பெத்தானியாவில் சீமோன் வீட்டில் மக்கள் கூட்டத்தாரிடையே இருந்த இயேசு கிறிஸ்துவைத் தேடிச்சென்று நறுமண தைலத்தை ஊற்றினார். பாரம்பரியங்களை உடைக்க முயற்சி செய்தார். மத்தேயு 12-ஆம் அதிகாரத்தில் நன்மை செய்வதற்கு உதவாத பாரம்பரியம் உடைக்கப்பட வேண்டும் என்பதில் இயேசு கிறிஸ்து உறுதியாகச் செயல்பட்டார். இதைப்போல பாரம்பரியங்களை உடைக்க முயற்சித்த இப்பெண்ணின் அர்ப்பணத்தை இயேசு கிறிஸ்து அங்கீகரித்தார்.

அன்பர்களே! இன்று நமது வாழ்விலும் காணப்படும் நாள் பார்த்தல், சகுனம் பார்த்தல், நேரம் பார்த்தல், மூட பழக்கவழக்கங்கள் போன்ற பாரம்பரியங்களைத் தகர்க்க முற்பட்டு இறைவனிடம் நம்மை அர்ப்பணித்து இறைவனால் அங்கீகரிக்கப்படுவோம்.

2. பணத்தை வெறுத்தார் : (மாற். 14: 3, 4)

பணம் மனித வாழ்விற்கு மிகமிகத் தேவையான ஒன்று. பணம்தான் எல்லாவற்றிற்கும் பிரதானம். பணம் இருந்தால் எதையும் சாதிக்கலாம். பணம் சேர்ப்பதுதான் உயர்வான நன்மை என எண்ணி, பணம் சேர்க்கும் பேராசையுடைய மக்கள் பெருகிவிட்டனர்.

பணம் பந்தியிலே, குணம் குப்பையிலே; பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும்; பணம் பத்தும் செய்யும்; பணம் பாதாளம் வரை பாயும் என்பவை பணம் குறித்த முது மொழிகள். “பொருள் ஆசையே (பண ஆசை) எல்லாத் தீமைக்கும் ஆணி வேர்” (1 திமொ. 6: 10) என்று விவிலியம் குறிப்படுகின்றது. பணத்தை வெறுப்பது நற்செயல். இன்றைய திருமறைப் பகுதியில் குறிப்பிடப்படும் பெண் பணத்தை வெறுத்தார். விலையுயர்ந்த நறுமண தைலத்தைத் தனக்கென்று வைத்திருக்கவில்லை. முன்னூறு தெனாரியம் விலை மதிக்கத்தக்கது இந்த நறுமணத் தைலம். ஒரு தெனாரியம் என்பது தொழிலாளர் ஒருவருடைய ஒருநாள் கூலிக்கு இணையான உரோமை வெள்ளி நாணயம் என்று குறிப்பிடப்படுகிறது. அதாவது தொழிலாளி ஒருவரின் ஓர் ஆண்டிற்குரிய வருமானம் ஆகும். இப்படிப்பட்ட விலை உயர்ந்த பொக்கிஷமாகிய நறுமண தைலத்தை இயேசு கிறிஸ்துவின் தலையில் ஊற்ற, பணத்தை வெறுக்கும் அர்ப்பண சிந்தையோடு செயல்பட்டார். இதனால் இறைவனின் அங்கீகாரத்தைப் பெற்றார். நாமும் பண ஆசையை வெறுத்து நம்மை இறைவனிடம் அர்ப்பணித்து இறை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்போம்.

3. பரமனை நேசித்தார் : (லூக். 7: 47)

"இவர் மிகுதியாக அன்பு கூர்ந்தார்".

அன்பு வெறும் வாயின் வார்த்தைகளால் வெளிப்படுவதல்ல; மாறாக, செயல்களில் வெளிப்பட வேண்டும். செயல்களால் வெளிப்படாத அன்பினல் பயன் எதுவுமில்லை. செயல்களால் வெளிப்படாத வெறும் வார்த்தையினால் வெளிப்படும் அன்பு ஏமாற்று வேலை.

லூக்கா 7: 36 முதல் படிக்கும்போது இப்பெண் இயேசு கிறிஸ்து சீமோனின் இல்லத்தில் உணவுக்காக வரப்போகிறார் என்பதைத் தெரிந்துகொண்டு உடனே நறுமணத் தைலம் கொண்ட படிகச் சிமிழைக் கொண்டு வந்தார். இயேசு கிறிஸ்துவின் கால்மாட்டில் அழுதுகொண்டே நின்றார். அவருடைய காலடிகளைத் தம் கண்ணீரால் நனைத்துத் தம் கூந்தலால் துடைத்துத் தொடர்ந்து முத்தமிட்டு அக்காலடிகளில் நறுமணத் தைலம் பூசினார். இதெல்லாம் அப்பெண்ணின் அன்பாலே நடந்தது. பணம், பாரம்பரியம் போன்றவை அப்பெண் பரமன் மீது கொண்டிருந்த அன்புச் செயலைத் தடுக்க முடியவில்லை. இப்பெண்ணின் அன்புச் செயலை ஏற்றுக்கொண்ட இயேசு கிறிஸ்து என் அடக்கத்திற்காக இவர் முன்னதாகவே என் உடலுக்குத் தைலம் பூசிவிட்டார் (மாற். 14: 8), உலகம் முழுவதும் எங்கெல்லாம் நற்செய்தி அறிவிக்கப்படுமோ, அங்கெல்லாம் இவர் செய்ததும் எடுத்துக் கூறப்படும். இவரும் நினைவு கூரப்படுவார் என்று உறுதியாகக் குறிப்பிட்டார் (மாற். 14: 9). யூத வழக்கப்படி ஒருவர் இறந்துவிட்டால் பெண்கள் நறுமணப் பொருட்களை கொண்டு சென்று இறந்த உடல்மீது பூசுவது வழக்கம். அதுபோல இயேசு கிறிஸ்துவின் இறந்த உடல் மீது நறுமண பொருட்கள் பூச பெண்கள் ஆயத்தத்துடன் சென்றார்கள் (லூக். 23: 56; லூக். 24: 1). எனினும் இந்த வாய்ப்பு யாருக்கும் கிடைக்கவில்லை. ஆனால், இயேசு கிறிஸ்து மரிப்பதற்கு முன்னரே இவ்வாய்ப்பினை இப்பெண் பெற்றுக்கொள்கிறார்.

நம்முடைய அன்பு பரமனால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். எனவே, அன்பு நமது நற்செயல்களின் வழியாக வெளிப்பட வேண்டுமென்று இறைவன் எதிர்பார்க்கிறார். அந்த எதிர்பார்பபை நிறைவேற்ற முற்படுவோம். அர்ப்பணிப்பையும், அங்கீகாரத்தையும் இந்தப் புனித வாரத்தில் கடவுள் நம்மிடம் எதிர்பார்க்கின்றார். எனவே, இயேசு கிறிஸ்துவின் மேல் நறுமணத் தைலம் ஊற்றிய பெண்ணின் பாரம்பரியங்களை உடைத்த, பணத்தை வெறுத்த, பரமனை நேசித்த அர்ப்பணிப்பு சிந்தைகள் நம்மில் வெளிப்பட்டு இறைவனின் அங்கீகாரத்தைப் பெற்று முன்னேறிச் செல்வோம், ஆமென்.

அருள்திரு. R. டேவிட் ஜெபசிங்
ஆயர், ஊற்றுக்குழி

ப	ஞா. 118	கீர். 131

திருவிருந்து: துன்புறும் மானிடத்தின் ஒன்றிப்பு

Eucharist: Communion of Suffering Humanity

வி.ப. 12: 1-7 1கொரி. 11: 23-34

தி.பா. 116 மாற். 14: 17-25

"நீங்கள் இந்த அப்பத்தை உண்டு கிண்ணத்திலிருந்து பருகும் போதெல்லாம் ஆண்டவருடைய சாவை அவர் வரும்வரை அறிவிக்கிறீர்கள்" (1 கொரி. 11: 26).

திருமுழுக்கு என்னும் திருவருட்சாதனத்தின் மூலம் துன்புறும் மானிடத்தோடு தம்மை அடையாளப்படுத்திக் கொண்ட ஆண்டவர் திருவிருந்து என்னும் திருவருட் சாதனத்தின் மூலம் துன்புறும் மானிடத்தோடு தம்மை ஒன்றித்துக் கொண்டார். என் மாம்சத்தைப் புசித்து என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன் (யோ. 6: 56) என்று இயேசு சொன்னார். மாம்சத்தில் வெளிப்பட்ட ஆண்டவர் துன்புறும் மானிடத்தோடு தம்மை இணைத்துக் கொண்டார். நியாயப் பிரமாணத்தின்படி எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும். இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது (எபி. 9: 22). தமது மரணத்தின் மூலம் முழு மானிடத்தையும் பிதாவாகிய கடவுளோடு ஒப்புரவாக்கினார். இந்த ஒப்புரவாகுதலின் ஊழியத்தை நமக்கு ஒப்புவித்தார் (உரோ. 5: 10, 11). திருவிருந்தில் திருமேஜை அருகில் வரும்போது ஆண்டவர் நம்மை அவரோடு ஐக்கியப்படுத்தினதையும் நாம் ஜனங்களோடு அவ் ஐக்கியத்தை பகிர்ந்து கொள்ளவேண்டியதன் அவசியத்தையும் உணர்தல் வேண்டும்.

1. துன்புறும் மக்களோடு கடவுளின் ஒன்றிப்பு

மோசேக்குக் கடவுளின் அழைப்பு முட்செடி அக்கினியால் ஜுவாலித்து எரிந்தும் அது வெந்து போகாமல் இருந்த தரிசனத்தில் (வி.ப. 3: 2, 3) கொடுக்கப்பட்டது. துன்புறும் மக்களின் நடுவில் கடவுளின் அருட்பிரசன்னம் இருந்தது. துன்புறும் ஜனங்களின் வேதனையைக் கடவுள் (வி.ப. 3: 7) பகிர்கிறார். துன்பத்தின் நடுவிலிருந்து கடந்து போகப் பண்ணுவேன் என்பதை விளக்குவது தான் பஸ்கா. எங்கு கொண்டு சேர்ப்பேன் என்பதனை (வி.ப. 3: 8) வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசம் என்று குறிப்பிடுகிறார். நிசான் மாதம் 14-ஆம் தேதி சாயங்காலம் ஆட்டுக்குட்டி அடிக்கப்பட வேண்டும் கடவுளோடு உள்ள

ஐக்கியத்தையும், கடந்து போகும்போது ஜனங்களோடு ஐக்கியமாய்ச் செல்வதற்கு உண்டான வழிமுறைகளும் சொல்லப்படுகிறது. இரத்தம் வீட்டு நிலைக்கால்கள் இரண்டிலும் நிலையின் மேற்சட்டத்திலும் தெளிக்கப்பட வேண்டும் (வி.ப. 12: 7). இது கடவுளின் பிள்ளைகள் சங்கார தூதனுக்கு விலக்கிப் பாதுகாக்கப்படுவதற்கான அடையாளம். ஆட்டுக்குட்டியைப் புசிக்கும் இலக்கத்திற்குத்தக்கதாய் சமீபத்திலுள்ள அயல் வீட்டுக்காரரையும் (வி.ப. 12: 4) இணைத்துக் கொள்ளவேண்டும். மாம்சத்தைப் புளிப்பில்லா அப்பத்தோடு புசிக்க வேண்டும். இது ஆண்டவருடைய பஸ்கா (வி.ப. 12: 11).

2. நினைவுகூருதல் வழி சாட்சியாயிருக்க அறிவுறுத்தல்

இயேசு கிறிஸ்துவின் சரீரத்தையும் இரத்தத்தையும் பானம் பண்ணுவது என்னை நினைவுகூரும்படி (1 கொரி. 11: 24, 25) இதைச் செய்யுங்கள் என்று இயேசு கற்பித்ததாகும். திருமேஜையண்டை திருவிருந்துக்காக வரும்போது கிறிஸ்துவின் மீட்பின் பணியை நினைவுபடுத்துகிறோம். ஆண்டவர் வருமளவும் அவருடைய மரணத்தை நினைவுபடுத்துகிறோம். இதன் பயனும், விளைவும் என்ன? நாம் கிறிஸ்துவின் மீட்பின் அன்பின் செயலுக்குச் சாட்சிகளாயிருக்க அர்ப்பணிக்கிறோம். அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால் அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம் (1 கொரி. 10: 17).அவயவங்கள் பலவாயினும் சரீரம் ஒன்றே.

1 கொரி. 11: 20-22-இல் நீங்கள் போஜனம் பண்ணக் கூடிவரும்போது ஒருவருக்காக ஒருவர் காத்திருக்க வேண்டும். 1 கொரி. 11: 27-30 வரையுள்ள வசனங்களில் அபாத்திரராய்ப் பங்கெடுக்கக் கூடாது என்று வாசிக்கிறோம்.

சீரற்ற, ஒழுங்கற்ற, அவமரியாதைச் செய்யும் செயல்கள் கூட்டு வாழ்வில் சாட்சியத்தைக் கெடுத்து பங்கத்தையும், பாதிப்பையும் ஏற்படுத்தும். பந்தியில் பங்கெடுக்கிறவர்களாகிய நாம் சுயபரிசோதனையோடு பந்தியில் பங்கெடுப்பதன் மூலம் நமது சாட்சியைப் பகிர்ந்து வாழ முடியும். தி.ப. 2: 46-இல் ஆதித்திருச்சபை மக்கள் கபடற்ற இருதயத்தோடும் கர்த்தரின் பந்தியில் பங்கெடுத்து சாட்சியைக் காத்துக் கொண்டார்கள்.

3. சீடர்களாக்கும் பணிக்காக மானிடரோடு ஒன்றித்தல்

இயேசு அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து . . . நீங்கள் வாங்கிப் புசியுங்கள் இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு பாத்திரத்தையும் எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி அவர்களுக்கு கொடுத்து இது அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது (மாற். 14: 22-24) என்றார்.

காட்டிக்கொடுத்தல், மறுதலித்தல், பாடுபடுத்துதல் போன்ற செயல்கள் கிறிஸ்துவின் பாடுகளின் ஐக்கியத்தில் பங்கெடுப்பதிலிருந்து விலகியிருக்கும்

மனப்பான்மையைக் காட்டுகிறது. சீடர்களின் இம்மனப்பான்மையினால் ஏற்படும் விளைவுகள் ஏற்படுத்தும் ஆபத்தை யூதாஸ் வாழ்வின் மூலம் ஆண்டவர் எச்சரிக்கிறார். இயேசுவின் துன்புறும் சரீரத்தின் ஐக்கியத்தில் நிலைத்திருக்க இயலாமை யூதாஸ் அந்த ஐக்கியத்திலிருந்து விலகுவதைக் காட்டுகிறது.

மோசே இரத்தத்தை எடுத்து ஜனங்கள் மேல் தெளித்து (வி.ப. 24: 8) இந்த வார்த்தைகள் யாவையுங் குறித்து ஆண்டவர் உங்களோடே பண்ணின உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்றார். புதிய உடன்படிக்கை கிறிஸ்துவின் இரத்தத்தினால் பண்ணப்பட்டது. மாற். 16: 14-இல் பதினொருவரும் போஜனபந்தியிருக்கையில் உயிர்த்தெழுந்த ஆண்டவர் அவர்களுக்குத் தரிசனமானார்.

உயிர்த்தெழுந்த ஆண்டவரின் ஐக்கியப் பந்தியில் பங்கெடுத்தவர் களுக்குச் சொல்லப்பட்ட கட்டளை மாற். 16: 15-இல் நீங்கள் உலகமெங்கும் போய் நற்செய்தியை அறிவியுங்கள் என்பதாகும். துன்புறும் மானிடரோடு ஐக்கியப்படுவதற்கான அழைப்பே ஆண்டவரால் சீடர்களுக்குத் தரப்பட்ட அழைப்பு. சீடர்கள் இயேசுவோடு பஸ்கா விருந்திலும், உயிர்த்தெழுந்த ஆண்டவரோடு போஜன பந்தியிலும் பங்கெடுத்தார்கள். ஆண்டவரோடு இவர்கள் கொண்டிருந்த ஐக்கியம் சீடராக்கும் பணிமூலம் சகல தேசத்தாரோடும் ஐக்கியபடுத்திற்று. இன்று தூய நற்கருணையைக் கொண்டாடும் நாமும் துன்புறும் அனைவருடனும் ஒன்றித்து வாழ அழைக்கப்பட்டுள்ளோம் என்பதைப் புரிந்து வாழ்வோம், ஆமென்.

பு	ஞா. 132	கீர். 151

அருள்திரு. M. ஜோஸ் குமார்
மூன்றாம் ஆயர், நாகர்கோவில் கஸ்பா சபை

இறைவேண்டல்

தூய கடவுளே, வாழ்வு தரும் அப்பமாகவும் புதிய உடன்படிக்கையின் இரத்தமாகவும் இருக்கும் உமது மகனுக்காக, உமக்கு நன்றி செலுத்துகிறோம். உமது தியாகம் மற்றும் ஆற்றலைக் குறிக்கும் தூய மேசைக்காக நாங்கள் நன்றி கூறுகிறோம். உமது நற்கருணையில் நாங்கள் பங்குகொள்ளும் போது, துன்புறும் அனைத்து மனித இனத்துடனும், படைப்புகளுடனும் நல்லிணக்கத்தையும் ஒற்றுமையையும் ஏற்படுத்த, உமது தூய ஆவியால் எங்களைச் புதுப்பித்தருள்வீராக. உம்மோடும் தூய ஆவியரோடும் வாழ்ந்து இப்போதும் என்றென்றும் ஆட்சி செய்யும் ஒரே கடவுளான எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் வேண்டுகிறோம், ஆமென்.

18.04.2025 **தூய வெள்ளி**

சிலுவை: மீட்பின் நிறைவேறுதல்

Cross : Accomplishment of Salvation

வி.ப. 14: 15-22 எபி. 13: 8-17

தி.பா. 22 யோவா. 19: 23-20

" . . . இயேசுவும் தம் சொந்த இரத்தத்தால் மக்களைத் தூயவராக்க நகரவாயிலுக்கு வெளியே துன்புற்றார் " (எபி. 13: 12).

உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனுக்கும் மீட்பின் அனுபவம் இன்றியமையாதது. காரணம், ஆதிப் பெற்றோரான ஆதாம் ஏவாள் சர்ப்பத்தின் சூழ்ச்சியால் வஞ்சிக்கப்பட்டு, ஆண்டவர் கொடுத்த இன்பமான (ஏதேன்) வாழ்வை இழந்து போனார்கள். ஆதிப் பெற்றோரின் இந்தச் செயல் பூமிக்குள் பாவம் நுழைய வழி வகுத்தது. கடவுள் பூமியைப் படைத்த மேலான நோக்கம் திசை மாறியது. இந்தப்பாவத்திலிருந்தும், அதன் விளைவான தண்டனையிலிருந்தும் விடுதலை பெற்று, மனிதன் இழந்து போன வாழ்வை மீட்கவும், திசை மாறிய படைப்புக்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தவும் இந்த மீட்பு இன்றியமையாததாகக் காணப்படுகிறது. கிரேக்க மூல மொழியில் மீட்பைக் குறிக்க சொன்றிரியன் என்ற பதம் பயன்படுத்தப்படுகிறது. அதாவது, எதிர்வர இருக்கும் பேராபத்து அல்லது பேரழிவில் இருந்து மீட்படைகின்ற அனுபவத்தை குறிப்பிடுகிறது. எதிலிருந்து மீட்படைய வேண்டும்? என்ற கேள்வி நம்மில் எழலாம். உங்களுடைய குற்றங்களையும் பாவங்களையும் முன்னிட்டு நீங்கள் இறந்தவர்களாய் இருந்தீர்கள் (எபே. 2: 1). மனிதரை இறந்த நிலையில் வைத்திருக்கும் குற்றங்களிலிருந்தும், பாவங்களிலிருந்தும் மீட்பு வேண்டும்.

பழைய ஏற்பாட்டுக் காலத்திலே, இஸ்ரயேல் மக்களின் பாவ நிவிர்த்திக்காக இரண்டு வெள்ளாட்டுக் கிடாய்களைப் பயன்படுத்தினர் (லேவியர்16: 8). ஒரு வெள்ளாட்டுக் கிடாய் மக்களின் பாவக் கழுவாயாக பலியிடப்படும் (லேவி. 16: 15). மற்ற வெள்ளாட்டுக் கிடாயின் மேல் இஸ்ரயேல் மக்களின் எல்லா குற்றங்களையும், தவறுகளையும், பாவங்களையும் அறிக்கையிட்டு அதின் தலையின் மேல் சுமத்திப் பாலை நிலத்துக்கு அனுப்பி விடப்படும் (லேவி 16: 21). இந்தப் போக்கு ஆடு மக்களின் பாவங்களைச் சுமந்து கொண்டு பாலை நிலத்திலே தன் வாழ்நாளைக் கழித்து அங்கேயே இறந்து போகும். இப்படி ஆண்டுக்கு ஒரு முறை இஸ்ரயேல் மக்களுக்காகவும், அவர்கள் பாவங்களுக்காகவும் பாவக் கழுவாய் நிறைவேற்றப்படும்.

ஆனால் புதிய ஏற்பாட்டு காலத்தில், இயேசு கிறிஸ்து, இந்த இரண்டு வெள்ளாட்டுக் கிடாய்களால் நிறைவேற்றப்படும் பாவக் கழுவாயை, தாம் ஒருவராக, ஒரே தரம் சிலுவையில் நிறைவேற்றினார். அவர் நகர வாயிலுக்கு புறம்பே, கொல்கொதா மேட்டிலே முழு உலக மக்களின் பாவங்களையும், குற்றங்களையும் தம் மீது ஏற்றுக் கொண்டவராகச் சிலுவையில் ஒரே முறை பலியானார். அவர் மீது பற்றுறுதி கொண்டு, அவரை ஏற்றுக் கொள்ளும் அத்துனை பேரும் அவரால் சிலுவையில் சம்பாதிக்கப்பட்ட மீட்பை இலவசமாக பெற்றுக் கொள்ள முடியும். சிலுவை தூதர் இயேசு கிறிஸ்து நமக்காகச் செய்த தியாகத்தை நினைவு கூர்ந்து நன்றி செலுத்துகின்ற இந்த நாளிலே, இயேசு கிறிஸ்து சிலுவையில் மீட்பை எந்தெந்த நிலைகளில் நிறைவேற்றினார் என்பதைத் திருமறைப்பகுதிகள் சார்ந்து தியானிப்போம்.

1. பாவத்திலிருந்து மீட்பு : (Salvation from Sin)

பொதுவாக மீட்புப் பணி என்பது எதினால் அழிவு ஏற்படுகின்றதோ அதிலிருந்து பாதிக்கப்பட்டவரைக் காப்பாற்றுவது ஆகும். இஸ்ரயேல் மக்களின் விடுதலைப் பயண வரலாற்றைப் பார்க்கின்ற பொழுது, செங்கடலினால் அழிவு உண்டாகும் அபாயம் ஏற்பட்டது. எகிப்திய சேனைக்கும் செங்கடலுக்கும் இடையில் மாட்டிக் கொண்டார்கள். அப்பொழுது யாவே கடவுள் இஸ்ரயேலர் சார்பில் செயல்பட்டு இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் மீட்பும் பணியில் ஈடுபட்டார். இஸ்ராயேலருக்கு மீட்பினையும் கொடுத்தார். அதுபோலவே, கடவுளின் சாயலில் உருவாக்கப்பட்ட மனிதன், பாவத்தின் ஆதிக்கத்தால் மாண்டு போவதைக் கண்ட கடவுள், தமது ஒரே பேறான மகனை நமக்காக நாம் பாவத்தின் பிடியில் இருந்து மீட்புப் பெற வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு இவ்வுலகிற்கு அனுப்பினார். இயேசு கிறிஸ்து இவ்வுலகிற்கு மனிதனாக அவதரித்து, நம்மைப் போல பாடுகள் அனுபவித்து, நமக்காக, நம்முடைய பாவங்களுக்காகத் தம்மையே சிலுவையில் பலியாக ஒப்புக் கொடுத்தார். கிறிஸ்துவின் இந்த அன்பின் செயலுக்குக் கிடைத்த பலனை பவுல் அப்போஸ்தலன் அழகாகப் பதிவு செய்கின்றார். “குற்றங்களின் காரணமாய் இறந்தவர்களாயிருந்த நாம் அவ்வன்பின் மூலம் இணைந்து உயிர்பெறச் செய்தார். நீங்கள் மீட்கப்பட்டிருப்பது அந்த அருளாலேயே” (எபே. 2: 5). ஆம்! கிறிஸ்துவின் பாடு, மரணம் மற்றும் உயிர்ப்பால் நாம் பெற்றுக் கொண்ட பலன் ஆத்தும மீட்சி மற்றும் உயிர் மீட்சி. பாவங்களாலும் குற்றங்களாலும் எரி நரகத்திற்கு நேராக சென்று கொண்டிருந்த மனிதர்களைப் பாவப் பிடியிலிருந்து விடுவிக்கும் மீட்பின் பணியை இயேசு கிறிஸ்து சிலுவையின் வழியாக நிறைவேற்றினார்.

2. பகைமையிலிருந்து மீட்பு (Salvation from Enemity)

மீட்பின் மைய நோக்கமே, ஏதேனில் ஏற்பட்ட கடவுள் மனித பிளவை சரி செய்வது தான். அதை இயேசு கிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றினார்.

இயேசு சிலுவையில் அறைப்பட்ட நிலையில் அவரது ஆவியைப் பிதாவிடம் ஒப்படைக்குமுன் நடந்த ஒரு நிகழ்வை நற்செய்தி நூற்கள் பதிவு செய்கின்றன. தேவாலயத்தில் திரைச்சீலை நடுவில் இரண்டாகக் கிழிந்தது (லூக். 23: 45 மாற். 15: 38; மத். 27: 51). திரைச்சீலை என்பது, கடவுள்வாசம் பண்ணும் பரிசுத்த ஸ்தலத்தலையும், மக்கள் இருக்கின்ற பகுதியையும் பிரிப்பதற்காக அமைக்கப்பட்ருந்த ஒரு திரை. தலைமைக் குருவைத் தவிர மற்ற மனிதர்கள் திரைக்குள் செல்லத் தடை செய்யப்பட்டிருத்தனர். பிரதான ஆசாரியரும் வருடத்திற்கு ஒரு முறை, உரிய பாவ நிவாரண பலிகளைச் செலுத்தி விட்டு தான் திரைக்குள் செல்ல முடியும். இப்படிப் பல கட்டுப்பாடுகள் இருந்தன. காரணம், தூய கடவுளைத் தீய சிந்தையோடு மனிதர் தரிசிக்க முடியாது. கடவுளுக்கும், மனிதருக்கும் (இஸ்ரயேலர்) இந்தத் தலைமைக் குருவே மத்தியஸ்தராகச் செயல்பட்டார்.

ஆனால், இந்தத் திரைச்சீலையானது, இயேசுவின் சிலுவை மரணத்தின் போது கிழிக்கப்படுகிறது. இந்த நிகழ்வு நமக்கு ஒரு செய்தியைத் தருகிறது. நமக்கும் கடவுளுக்கும் இடையே பிரிவினையாக இருந்த நடுச்சுவர் தகர்ந்தது. காரணம், ஏதேனில் சர்ப்பத்தின் சூழ்ச்சியால் கடவுளிடம் இருந்து பிரிக்கப்பட்ட மனித சமுகம், கிறிஸ்துவின் பாடு மரணத்தால் கடவுளோடு ஒப்புரவாக்கப்பட்டது (எபே. 2: 16). ஆம், மனுகுலம் பாவத்தின் ஆதிக்கத்தால் கடவுளை விட்டுத் தூரம் சென்று கொண்டிருந்த போது, இயேசு கிறிஸ்து தமது சிலுவைப் பாடுகள் வழியாக மனுகுலத்தை கடவுளோடு ஒப்புரவாக்கி மீட்பின் பணியை நிறைவேற்றினார்.

3. பரிபூரண மீட்பு (Fullness of Salvation)

அந்த இரசத்தைக் குடித்ததும் இயேசு, "எல்லம் நிறைவேறிற்று என்று கூறித் தலை சாய்த்து ஆவியை ஒப்படைத்தார்" யோவா. 19: 30.

இயேசு கிறிஸ்து தந்தையாம் கடவுளின் திட்டத்தை நிறைவேற்றும் நோக்கத்தோடு இவ்வுலகிற்கு வந்தார். "என்னை அனுப்பினவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதும், அவர் கொடுத்த வேலையைச் செய்து முடிப்பதுமே என் உணவு (யோவா. 4: 34) என்று சீடர்களிடம் சொல்வதன் மூலம், தத்தையின் திட்டத்தை நிறைவேற்றுவதில் அவர் எத்த அளவு கண்ணும் கருத்துமாய் இருந்திருப்பார் என்பதை புரிந்து கொள்ள முடிகின்றது.

மனிதரின் எந்தச் செயல்பாடுகளும் அவனுக்குப் பரிபூரண மீட்பை வழங்காது. அவனுக்கு நிலை வாழ்வை தராது என்பதை அறிந்திருந்த கடவுள். மனுகுல மீட்பிற்காகத் தமது ஒரே மகனை ஒப்புக் கொடுத்தார். தம் மகன் மூலமாக மனுகுலம் பரிபூரண மீட்படைய வேண்டும் என்ற திட்டத்தோடு கடவுள் இயேசு இறிஸ்துவை உலகிற்கு அனுப்பினார். சிலுவையின் பாடு மரணம் வழியாக இயேசு கிறிஸ்து கடவுளின் இத்திட்டத்தைச் செய்து முடித்து மீட்பின்

பணியை நிறைவேற்றினார். மீட்பு என்பது மனித செயல்களால் உண்டாவது அல்ல, அது கடவுளின் அருள்கொடை. அதை இலவசமாகப் பெற்றுக் கொண்ட நாம் அதைக் குறித்து அக்கறையற்று இருக்கக்கூடாது. அந்த மீட்பு இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் முழுமை பெறும் வரையில் அச்சத்தோடும் நடுக்கத்தோடும் அதற்காக உழைக்க வேண்டும் (பிலி. 2: 12), அதோடு நின்று விடாமல், நாம் பெற்று அனுபவிக்கிற மீட்பின் மகத்துவத்தை நம்மோடு வாழும் சக மனிதர்களும் பெற்றுக் கொள்ள பிரயாசப்படுவோம். நம்மில் தொடங்கப் பட்டிருக்கிற மீட்பை இறுதி வரை காத்துக் கொள்ளவும், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் அது முழுமை பெறவும் ஆண்டவர் நமக்கு அருள்புரிவாராக, ஆமென்.

ப	ஞா. 136	கீர். 162

திரு. **A. பெபின் ஜாண் டேனியல்**
திருப்பணிவிடையாளர், காடேற்றி

இறைவேண்டல்

எங்கள் மீட்பரான கடவுளே, படைப்பின் மீதான உம் நிலையான அன்பிற்காக நாங்கள் நன்றி செலுத்துகிறோம். மனிதகுலத்தின் மீட்பிற்காக உங்கள் மகன் இயேசு கிறிஸ்துவை ஒரு தியாகம் செய்யும் ஆட்டுக்குட்டியாக இந்த உலகிற்கு அனுப்பியதற்காக நாங்கள் உமக்கு நன்றி கூறுகிறோம். உமது மகிமைக்கான மீட்பின் திட்டத்தைப் புரிந்துகொள்ளவும், அதை தொடரவும், எங்களுக்கு உம் ஞானத்தை தாரும். உம்மோடும் தூய ஆவியரோடும் வாழ்ந்து இப்போதும் என்றென்றும் ஆட்சி செய்யும் ஒரே கடவுளான எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் வேண்டுகிறோம், ஆமென்.

அன்பின் குரல்

"தந்தையே, இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை" (லூக். 23: 34).

கல்வாரிச் சிலுவையில் ஆண்டவர் இயேசு பேசிய ஏழுவார்த்தைகளும் அதிகம் முக்கியத்துவம் பெற்ற வார்த்தைகள் என்பதை நாம் உணர்ந்து வருடம்தோறும் அதைத் தியானித்து வருகிறோம். ஆண்டவர் பேசிய ஒவ்வொரு வார்த்தைக்கும் தனிச் சிறப்பு உள்ளது என்பதை அறிந்துள்ளோம். இந்த முதல் வார்த்தையில் காணப்படுகின்ற சிறப்புகள் என்ன என்பதையும், அந்த வார்த்தை உணர்த்தும் உண்மை என்ன என்பதையும், குறிப்பாக அந்த வார்த்தையிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் என்ன என்பதையும் தியானிப்போம்.

முதல் சிறப்பு:

மன்னிப்புக்குக் கிறிஸ்தவம் கொடுக்கும் முக்கியத்துவம் அதாவது மதிப்பு தனிச் சிறப்பைப் பெறுகின்றது. காரணம், ஆண்டவர் இயேசு தமது வாழ்க்கைப் பயணத்தில் அதிலும் ஊழியப் பாதையில் எத்தனையோ வார்த்தைகளைப் பேசியுள்ளார். ஆனால் அந்த ஆண்டவர் இயேசு சிலுவையில் மரிக்கும் தருவாயில் வெறும் ஏழு வார்த்தைகள் மட்டுமே பேசியதாக நான்கு நற்செய்தியாளர்களும் சொல்லுவதை நாம் காணமுடியும். பொதுவாக, மறைநூல் அறிஞர்கள் மூன்று விதமான சிலுவையைப் பற்றி சொல்லுகிறார்கள்.

i) குற்றவாளி சுமந்த சிலுவை - அது தன்னுடைய பாவத்திற்கான சிலுவை.

ii) சீமோன் சுமந்த சிலுவை - அது பலவந்தம் பண்ணப்பட்ட சிலுவை.

iii) ஆண்டவர் இயேசு சுமந்த சிலுவை- அது நம்முடைய பாவங்களுக்கான சிலுவை என்றும் அடையாளப்படுத்துகிறார்கள். எனவேதான் நம்முடைய பாவங்களுக்காகச் சிலுவை சுமந்த இயேசுக்கிறிஸ்தவத்தின் அடித்தளம், ஆணிவேர். மன்னிப்பு என்பதை உணர்த்த முதல் வார்த்தையாக அதைப் பயன்படுத்தியிருப்பது முதல் சிறப்பைப் பெறுகிறது.

இரண்டாவது சிறப்பு:

இறைமக்கள் ஒவ்வொருவரும் துன்பத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என உணரச்செய்கின்ற ஒரு வார்த்தையாக இதை நாம் பார்க்கலாம். காரணம், இன்றைய கிறிஸ்தவம் துன்பத்தை ஏற்கத் தயங்குகிறது. ஆனால் ஆண்டவர் இயேசு எந்தத் தருணத்தில் இந்த வார்த்தையை பயன்படுத்தினார் என்பதை

நாம் கவனிக்கின்றபொழுது, காயமும் - வேதனையும், பரிகாசமும் - அவமானமும், நிந்தனையும்- நெருக்கடியும் சூழ்ந்த நேரத்தில் இந்த வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளார். குறிப்பாக இப்படிப்பட்ட ஒரு தருணத்தில் துன்பப்படுத்தப்படுகிறவர்கள் கடினமான - மிகக் கொடூரமான, தூஷணமான- சாபமான வார்த்தைகளைப் பயன்படுத்துவது மரபு. ஆனால், ஆண்டவர் இயேசு தன்னைத் துன்பப்படுத்தியவர்களைக் கரிசனையோடு கவனித்து அவர்களை மன்னிக்கிறார். அந்த அளவுக்குத் துன்பத்தை ஏற்க துணிந்த இயேசு என்பதை இந்த வார்த்தை அடையாளப்படுத்துவது இரண்டாவது சிறப்பைப் பெறுகிறது.

மூன்றாவதுசிறப்பு:

"பிறரன்பு" ஆண்டவர் இயேசுவின் போதனையில் நீதிச்சட்டம் அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு செய்திதான் பிறரன்பு (லூக். 10: 27). இங்கு அதை மிகச் சிறப்பாக நிரூபித்துக் காட்டுகிறார். காரணம் எதிரிகள் மேல் கோபம் வரவில்லை பதிலாக அன்பை வெளிப்படுத்துகிறார். அது மட்டுமல்ல, அவர்கள் தவறுக்கான காரணத்தையும் ஆண்டவர் இயேசுவே கூறுகிறார். தாங்கள் செய்வது என்னவென்று அறியாது இருக்கிறார்களே.

"அரவிந்த்கெஜ்ரிவால்" ஒரு பொதுமேடையில் பேசும்போது, தான் இயேசுவின் போதனையை பின்பற்றுவதாகக் கூறுகிறார். காரணம் எதிரியைத் தண்டிப்பதைவிட அவனை மன்னிப்பது நல்லது என சிலுவையின் முதல் வார்த்தையின் வழியாக நான் கற்றுக்கொண்டேன் என்கிறார். பிறரை மன்னிக்கப் பிறர் அன்பு வேண்டும் என இந்த வார்த்தை நமக்குக் கற்றுத்தருவது அதனுடைய மூன்றாவது சிறப்பாகும்.

ஆண்டவரின் அடியவர்களான நம்மால் இன்று ஏன் மன்னிக்க இயலவில்லை? மன்னிக்க நாம் என்ன செய்ய வேண்டும்? அதற்கு ஆண்டவர் இயேசு கற்றுத்தருகிற பாடம் என்ன? என ஆண்டவர் இயேசுவை நோக்கித் திரும்பும் போது, மறைநூல் நமக்குக் கற்றுத்தரும் பாடம்...

1. தன்னை ஒரு பொருட்டாக நினைக்க வேண்டாம்:

மன்னிப்பு என்பது மிகப்பெரிய ஒன்று. எல்லாராலும் எளிதாகச் செய்துவிட இயலாது. நினைக்கலாம், விரும்பலாம் ஆனால் நடைமுறைக்கு கொண்டுவருவதில் பல சிக்கல்கள் உள்ளன. காரணம், பொதுவாக மனிதர் எல்லாருக்குள்ளும் சுய கௌரவம் இருக்கிறது. அதாவது நான் என்கிற நிலை. எனவேதான், ஏன் மன்னிக்க வேண்டும்? எதற்காக மன்னிக்க வேண்டும்? எப்படி மன்னிக்க முடியும்? என்ற கேள்விகள் வருகின்றன. ஆனால் ஆண்டவர் இயேசுவால் எப்ப டிமுடிந்தது! அதை நாம் கவனிக்க வேண்டும். அதற்கு மறைநூல் நமக்குத் தருகின்ற ஒரு தெளிவான விளக்கம். அவர் தன்னை ஒரு பொருட்டாக நினைக்கவில்லை. பிலிப்பியர் 2: 5-8-இல் கடவுளுக்குச் சமமாக இருப்பதை அவர் விரும்பவில்லை. மாறாக தன்னை வெறுமையாக்கினார்,

அடிமையின் ரூபம் எடுத்தார், தன்னைத் தாழ்த்தினார். எப்படி என்று நாம் கவனிக்க வேண்டும், மரணபரியந்தம் அதாவது சிலுவையின் மரணபரியந்தம் கீழ்ப்படிந்து தன்னைத் தாழ்த்தினார். காரணம் அவர் தன்னை ஒரு பொருட்டாக நினைக்கவில்லை. எனவேதான் தன்னைத் துன்புறுத்தியவர்களை அவரால் மன்னிக்க முடிந்தது.

அப்போஸ்தலராகிய பவுல் பிலிப்பியர் 2: 5-இல் கிறிஸ்து இயேசுவில் இருந்த சிந்தையே உங்களிலும் இருக்ககடவது என்றார். அது எப்படிப்பட்ட சிந்தனை? மத்தேயு 5: 44-இல் கிறிஸ்து இயேசு சொல்லுகிறார்...

i) உங்கள் சத்துருக்களை நேசியுங்கள்.

ii. உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்.

iii. உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்.

iv. உங்களை நிந்திக்கிறவர்கள், துன்பப்படுத்துபவர்களுக்காக ஜெபியுங்கள். இப்படி செய்வதால், பரலோகத்தில் இருக்கிற உங்கள் பிதாவுக்கு நீங்கள் புத்திரராக இருப்பீர்கள் என்கிறார். இவை அனைத்தும் தன்னை ஒரு பொருட்டாக நினையாத மனிதரிடம் மட்டும்தான் வெளிப்படும்.

2. இறை அன்பைக் காட்டத் தயங்க வேண்டாம்

ஆண்டவர் இயேசுவின் வாழ்வும், போதனையும் வேறு வேறு அல்ல. இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது. இரண்டையும் பிரிக்கவும் இயலாது. காரணம், அவர் எதைச் சொன்னாரோ அதைச் செய்தும் காட்டினார். பவுலடிகளார் ஆண்டவர் இயேசு உலகத்தில் எதற்காக வந்தார் என குறிப்பிடும் போது, 1 தீமோத்தேயு 1: 15-இல் "பாவிகளை மீட்க கிறிஸ்து இயேசு இவ்வுலகத்திற்கு வந்தார்" என்கிறார். தனது பணியைக் குறித்து தந்தையின் திட்டம் என்ன என்பதில் ஆண்டவர் இயேசுவுக்கு ஒரு தெளிவு இருந்தது. இறையன்பு, இறையுறவு, விடுதலை வாழ்வு இதுதான் தன்னுடைய பணி என உணர்ந்திருந்தார்.

எனவேதான் சிலுவையின் மரணத்தருவாயிலும் பாச உணர்வை, இறையன்பை வெளிக்காட்ட தயங்கவில்லை. அறியாமல் செய்கிறார்களே என்றார். பெற்றோர், பிள்ளைகள் எத்தனை தவறுகள் செய்தாலும் மன்னிப்பார்கள். காரணம் அவர்கள்மீது அவர்கள் வைத்திருக்கின்ற அந்த அன்பு அவ்வளவு ஆழமானது. எனவே, இறையன்பை காட்ட தயங்கவேண்டாம் என இந்த வார்த்தை நமக்குக் கற்றுத்தருகிறது.

3. புதிய சமூகத்தை உருவாக்க மறக்க வேண்டாம்

நாம் புதிய சமூகத்தை அதாவது மன்னிக்கிற ஒரு மனித சமூகத்தை உருவாக்க வேண்டியவர்கள். ஆண்டவர் இயேசு நிறைவாகத் தமது விருப்பத்தை

லூக்கா 24: 4-இல் பதிவு செய்கிறார். ஆண்டவர் இயேசு கற்றுத்தந்த இறைவேண்டலின் அழுத்தங்கள் நம் வாழ்வில் வெளிப்பட வேண்டும் (மத். 6:12).

நம்மைக் காயப்படுத்தியவர்கள், கஷ்டப்படுத்தியவர்கள் அநேகர் இருக்கலாம். ஆனால் ஆண்டவர் அனைத்து மனிதர்களுக்குள்ளும் வாழ்கிறார். இதனைப் புரிந்தால் மன்னிப்பு என்கிற ஒன்று அனுதின வாழ்வாக மாறும்.

ஒருவருக்கொருவர் மன்னிப்பதின் வாயிலாக சிலுவை அடிவாரத்தில் இருந்து ஒரு புதியசமூகம் உருவாகும். எனவே, மன்னிப்பை வாழ்க்கை முறையாக கொண்ட ஒரு சமூகம் உருவாக வேண்டும் என கிறிஸ்து விரும்புகிறார். அதைத் தனது பாடுகளின் வழியாகத் துவக்கியும் வைத்துள்ளார். எனவே மன்னிப்போம்; மனிதர்களாக மாறுவோம். ஆமென்.

திரு. R. மல்கியா

திருப்பணிவிடையாளர், மேலகிருஷ்ணன்புதூர்

பு	ஞா. 137

அங்கீகரிப்பின் குரல்

"இயேசு அவனிடம் நீர்இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கிறேன்" (லூக். 23:43).

இன்றைய சமூகத்தில் "நிராகரிப்பு" என்னும் அனுபவம் பலரின் வாழ்க்கையிலும் காணக்கூடுகின்றது. ஏழை, எளியோர், பிறப்பால் தாழ்ந்தோர் என முத்திரையிடப்பட்டோர், மூன்றாம் பாலினத்தவர், மாற்றுத்திறன் படைத்தோர் என்போர் இந்த நிராகரிப்புப் பட்டியலின் முன் வரிசையில் நிற்கின்றனர். இயேசு கிறிஸ்துவின் காலத்தில் பலமாய் காலூன்றி நின்ற உரோம அரசோ, தனக்கு எதிராய் முளைக்கும் சிறு களையையும் விட்டு வைப்பது இல்லை. குற்றம் சாட்டப்பட்டு, குற்றம் நிரூபிக்கப்பட்டவன் எழுப்பும் எந்தக் குரலுக்கும் அங்கே பதில் தரப்படுவதில்லை. அவன் குரல் நிராகரிக்கப்பட்ட ஒன்றாகவே நிற்கும். இயேசு நாதர் குரலற்றவனுக்குக் குரல் கொடுக்கின்ற உன்னதர் (Voice of the Voiceless). எங்கே நிராகரிப்பு நிகழ்கின்றதோ, அங்கே அவரின் கருணையுள்ள கண்கள் கவனம் கொள்ளுகின்றன. அவரின் பாசக்கரம் கட்டித் தழுவுகின்றன. அவருடைய வார்த்தைகள் மன்னிப்பையும், ஆற்றலையும், அங்கீகாரத்தையும் அளிக்கின்றன. இங்கே சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும், தன் தவறினால் நிராகரிப்புக்குட்படுத்தப்பட்ட குற்றவாளியையும், இயேசுவின் குரல் இறை அரசில் அங்கீகரிக்கப்படுவதற்கு முந்திக்கொள்கின்றது.

முதலாவது "தந்தையே இவர்களை மன்னியும்" என்று பொதுவான மன்னிப்பை வழங்கும் இயேசு, இங்கே தன்னிடம் வேண்டுதல் செய்யும் தனிப்பட்ட ஒரு நபருக்கு (குற்றவாளிக்கு) மன்னிப்பையும், பரதீசு-வின் வாழ்வையும் வாக்களிக்கின்றார்.

பரதீசு என்றால் என்ன? அது சார்ந்த நம்பிக்கை என்ன? என உற்று நோக்கும் வேளையில் பரதீசைக் குறிக்கும் ஆங்கில வார்த்தை "Paradise" இந்த வார்த்தை Iranian மொழியில் "Pairidaeza" என்னும் வார்த்தையில் இருந்து வந்தது. இதன் பொருள் "A Garden with a Wall" அதாவது "மதிற்சுவர் உள்ள ஒரு தோட்டம்". பழைய ஏற்பாட்டின் கால கட்டத்தில் இந்தப் பரதீசு என்ற வார்த்தை அதிகமாய் இரண்டாம் வருகையைச் சார்ந்து சொல்லப்படவில்லை மாறாக ஓர் அழகிய தோட்டம் என்ற சிந்தனைதான் தரப்பட்டிருக்கின்றது. (நெகே 2: 8, ச.உ. 2: 5). ஆனால் புதிய ஏற்பாட்டில் இரண்டு இடங்களில் கடவுளின் வருகையோடும், நம் நல் வாழ்வுக்கு பின் கிடைக்கும் பரிசாகவும் சொல்லப்பட்டிருக்கிறது (லூக் 23:43, திவெ. 2:7). யூதர்கள் மெசியாவின் வருகையின் போது கிடைக்கும் உச்சகட்ட மகிழ்வின் நிலையாக இதைப் பார்த்தார்கள். பரதீசு தங்கள் நடுவில் இருப்பதாகவும் ஆனால் அது தங்கள்

கண்களுக்கு மறைக்கப்பட்டிருப்பதாகவும் நம்பினார்கள். மேலும் தங்களுடைய முற்பிதாக்கள், அழைக்கப்பட்டவர்கள், நீதிமான்களின் ஆத்துமாக்கள் இளைப்பாறும் இடமாகவே பரதீசு-வைக் கருதினார்கள். இந்த நம்பிக்கையின் பின்புலத்தில் தான் இயேசு நாதரும் இங்கே கூறுகின்றார்.

ஏன் இயேசுநாதர் இந்த உயரிய மகிமையை இந்தச் சிலுவையிலறையப்பட்டிருந்த குற்றவாளிக்குக் கொடுக்க வேண்டும்? அப்படி அவன் என்ன தகுதியைக் கொண்டிருந்தான்? என்று பலரும் வியப்பதுண்டு. இக்கேள்விக்கு விடை, பரதீசுவின் வாழ்வுக்குத் தன்னை தகுதிப்படுத்திய இக்குற்றவாளியிடம் காணப்பட்ட மூன்று காரியங்களின் வழி அறியலாம்.

1. தன்னை அறிந்தான்

"நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்; நாம் நடப்பித்தவைகளுக்குத் தக்க பலனை அடைகிறோம்."

சிலுவையில் அறையப்பட்டிருந்த ஒரு குற்றவாளியோ, தன்னுடைய தவறை உணராமல், இயேசுவை நிந்திக்கும் கூட்டத்தாரோடு தன்னை இணைத்துக்கொண்டான். அவனில் வெளிப்பட்ட வார்த்தைகள் "நீர் கிறிஸ்துவானால் உன்னையும், எங்களையும் இரட்சித்துக்கொள் என்று அவரை இகழ்ந்தான்" (லூக். 23: 39). ஆனால், மற்ற குற்றவாளியோ தன்னுடைய உண்மை நிலையை உணர்ந்து "நாம் நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்" ...நாம் நடப்பித்தைவைகளுக்குரிய தக்க பலனை அடைகிறோம்" என்று தன் தவறுகளை உணர்ந்து அறிக்கையிட்டான். பொதுவாக சிலுவைத் தண்டனை ஒருவருக்கு கொடுக்கப்படுகிறது என்றால் அவர் தேசத்துரோகம், வன்முறை, கடும் தகாத செயல், ஏதோ ஒன்றை செய்திருக்க வேண்டும். இப்படிப்பட்ட நிலையில் தான் இந்த இரு குற்றவாளிகளும் சிலுவையில் அறையப்பட்டார்கள். எனவே தான் செய்த தவறுக்காகவே இந்தத் தண்டனை என்பதைத் தெளிவாய் உணருகின்றான் ஒரு குற்றவாளி, அவன் பரதீசின் வாழ்வுக்குத் தகுதி பெறுகிறான். கிறிஸ்தவ வாழ்வில் "தன் நிலை உணர்தல்" என்பது நாம் பெற வாஞ்சிக்கும் பரதீசுவின் வாழ்வுக்கு அடிப்படையானது (லூக். 18: 13). ஒரு நோயாளி, சுகம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால், முதலாவது அந்த நோயாளி தனக்கு நோய் இருக்கிறது என்பதை அறிய வேண்டியது அவசியம். அப்படியானால் மட்டுமே அவன் சரியான மருத்துவ ஆலோசனைப் பெற்று சுகம் பெற முடியும். ஞாயிற்றுக்கிழமை ஆராதனைகளில் தரப்படும் தன்னிலை உணர்ந்து இறைவனிடம் திரும்பும், உன்னதத் தருணமாகிய "பாவ அறிக்கை" நேரத்தை கூட அசட்டை செய்யும் நிலை இன்று பெருகி வருகின்றது. சிலுவையின் இரண்டாம் திருமொழி விடுக்கும் முதல் அறைகூவல் தன்னிலை அறிந்து, மனம் வருந்தி, இயேசுவிடம் வந்து மன்னிப்பு பெற்று இறை அரசின் பங்காளிகளாக மாறுங்கள்.

2. தன் அருகிலிருப்போரை அறிந்தான்

"...ஆண்டவரே உம்முடைய அரசில் நீர் வரும்போது, அடியேனை நினைத்தருளும்..." ஒரு குற்றவாளியோ .. "நீர் மெசியாதானே! உன்னையும், எங்களையும் காப்பாற்று..." (லூக். 23: 39) என்று தனக்கு அருகில் இருந்த

மேசியாவை அறியாமல் அவமானப்படுத்தினான். ஆனால் இந்தக் குற்றவாளியோ தனக்கு அருகில் தொங்கிக் கொண்டிருந்த, இயேசுவை, "இவரே இரட்சகர், இவரே மேசியா" என்று உணர்ந்தான். இயேசு நாதர் தன்னுடைய ஊழியப் பாதையில் அடிக்கடி சீடர்களிடம் ஒரு வினா எழுப்புகிறதை நாம் பார்க்க முடியும். மக்கள் என்னை யார் என்று சொல்லுகிறார்கள்? நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்? (மத் 16:13-16). இந்தக் கேள்விக்குப் பேதுரு மட்டுமே நீர் மெசியா எனப் பதில் கூறுகிறார் (மத். 16: 16). சீடர்களுக்குள்ளேயே இயேசுவை அறியாதவர்களும், அவர் வார்த்தைகளைப் புரியாதவர்களும் அநேகர் இருந்தார்கள், விசுவாசத்தில் தடுமாறினார்கள் என்றே திருமறை கூறுகின்றது. ஆனால் அதிக காலம் சிறையிலேயே கழித்திருப்பதற்குரிய வாய்ப்பு கொண்ட ஒரு குற்றவாளி. இயேசுவின் மாபெரும் செயல்களால் இயேசுவைச் சிலுவையில் கண்டு, அவரை மெசியா என அறிந்து அவரிடம் சரணடைந்தான். இன்று நம் அருகில் இருக்கும் இயேசுவை அறிந்திருக்கிறோமா? இன்றைய அவல நிலை என்னவெனில், திருச்சபையார் இயேசுவை எங்கெங்கோ தேடி அலைகிறார்கள். ஆசீர்வாதங்களின் நடுவில் தான் அவர் இருக்கின்றார் என முழு மூச்சாய்த் தேடி ஓடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவரோ பாடுகள் நிறைந்த நம் வாழ்வின் அனுபவங்களில் நம் அருகில் நின்று நம்மை அரவணைக்கும், நம் வார்த்தைகளைக் கேட்கும், நம் கண்ணீரைத் துடைக்கும் ஆண்டவராய் நம்முடன் இருக்கிறார்.

3. தனக்கு கிடைத்த தருணத்தைத் பயன்படுத்தினான்

"நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர்."

ஒரு குற்றவாளி தனக்கு கிடைத்த கடைசித் தருணத்தையும் தவறவிட்டான். ஆனால் இந்தக் குற்றவாளியோ, தனக்கு முதலும் இறுதியுமாக கிடைத்த கடைசித் தருணத்தை சரியாய்ப் பயன்படுத்தினான். அது அவனுக்குப் பேரின்ப வீட்டின் வாழ்வைப் பெற்றுத் தந்தது. அவனுடைய முந்தைய வாழ்க்கை அலங்கோலமானதாக, அர்த்தமற்றதாக, இயேசுவை அறியாததாக இருந்திருக்கலாம். ஆனால், அவர் இயேசுவைச் சந்தித்த பின் அவர் வாழ்வு மாறியது. இன்று இயேசுவைச் சொந்த மீடபராக ஏற்று எத்தனை வருடங்கள் ஆகிறது என்று கேட்டால்? 10, 20,ஆண்டுகளில் தொடங்கி 80 வருடங்களும் சொல்லக் கூடும். அதனால் ஏற்பட்டிருக்கும் மாற்றம் என்னவென்று கேட்டால்? பலரும் பதில் சொல்லாமல் நிற்க கூடும். இயேசுவை அறிந்தும், தவறான வாழ்வுக்கு நேராய்ப் புறப்படும் நிலை மாற சிலுவை நாதர் அழைக்கின்றார். இந்தக் குற்றவாளிக்கு கிடைத்த தருணம் அவனுடைய வாழ்வின் கடைசி நேரம், அதனை அவன் பயன்படுத்திக் கொண்டான். இன்று கடவுள் மனிதருக்குஅநேக நல்ல வாய்ப்புகளைத் தருணங்களைத் தருகின்றார். அவ்வாய்ப்புகளைச் சரியாய் பயன்படுத்தி, இயேசுவுக்குரியவர்களாய் மாறினால் இயேசு நாதர் அருளும் பேரின்ப வீட்டின்வாழ்வைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆமென்

திரு. N.P. அலெக்ஸ்
திருப்பணிவிடையாளர், சொத்தவிளை

ப	ஞா. 138

அரவணைப்பின் குரல்

“இயேசு தம் தாயையும் அருகில் நின்ற தம் அன்புச்சீடரையும் கண்டு தம் தாயிடம், அம்மா இவரே உம் மகன் என்றார். பின்னர்தம் சீடரிடம், இவரே உம் தாய் என்றார். அந்நேர முதல் அச்சீடர் அவரைத்தம் வீட்டில் ஏற்று ஆதரவு அளித்து வந்தார். (யோவா. 19: 26-27)

“I have Learned more the crucifix than from any book” எந்த நூலைக்காட்டிலும் அதிகமானவற்றைக் கிறிஸ்துவின் சிலுவையில் இருந்து கற்றுக்கொண்டேன் என்று தூய. தாமஸ் அக்யுனஸ் கூறுகிறார். ஆம் இயேசு கிறிஸ்துவின் சிலுவைத் துன்பமும், சிலுவைத் திருமொழிகளும் நமது வாழ்க்கைக்கான பாடங்களாகவும் படிப்பினைகளாகவும் உள்ளன. இயேசு கிறிஸ்து தம் சிலுவை மரணத்திற்குக் காரணமாயிருந்தோர்க்கு மன்னிப்பருளும் முதலாம் திருமொழியை உரைத்து, மனம் மாறிய குற்றவாளிக்கு இரண்டாம் திருமொழியின் வழியாகப் பரதீசின் வாழ்வை உறுதிமொழிந்து, மூன்றாம் திருமொழியில் தம் தாய்க்குச் செய்ய வேண்டிய பராமரிப்பையும், பொறுப்பையும் நிறைவேற்றுகின்றார். தம் விண்ணகத் தந்தையின் திருவுளம் நிறைவேற்றுவதற்காக இவ்வுலகிற்கு மனிதராக வந்த இயேசு கிறிஸ்து தமது வருகைக்குக் கருவிகளாய்ச் செயல்பட்ட தம் பெற்றோருக்கும், குடும்ப உறவுகளுக்கும், தரவேண்டிய முதன்மையையும், பங்களிப்பையும், எச்சூழலிலும் கொடுக்கத் தவறியதே இல்லை என்பதை அவருடைய வாழ்வு மற்றும் பணிகளின் வாயிலாக அறிய முடிகிறது. அதன் உச்சமாகத்தான் இம்மூன்றாம் திருமொழி அமைந்துள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாளிதழில் வந்த செய்தி - அது ஒரு தாயின் கடைசிக் கண்ணீர் கடிதம், “எங்கள் மரணத்தின் நாள் இந்த இல்லத்திற்குள்ளேயே இருக்கட்டும்” என்ற அந்தக் கடிதத்தின் வரிகள் - தன்னுடைய சொந்த பிள்ளைகளால் வீட்டை விட்டு துரத்தப்பட்டதால் முதியோர் இல்லத்தில் இருந்து கவலைப்பட்ட தாயின் கண்ணீர் கடிதம் அது. ஓர் அனாதை இல்லத்தில் எழுதப்பட்ட வார்த்தை : “சில மனித மிருகங்கள் வந்து பார்த்துச் செல்லும் மனித காட்சி சாலைதான்” என எழுதப்பட்டிருந்தது.

இன்றைய நவீன உலகில் புதிய தலைமுறையினர் முதுமை அடைந்த தம் பெற்றோர்களைக் கனம்பண்ணுவதற்கு பதில் அவர்களைத் தங்கள் வாழ்வின் சுமைகளாகக் கருதுகிறார்கள். ஆனால் இயேசு கிறிஸ்து தன்னுடைய தாயிடம் கொண்டிருந்த பாசமும், கடமையுணர்வும், மனுக்குல வரலாற்றில் தனித்துவம் வாய்ந்தது எனலாம். தம் திருப்பணியையும், குடும்பத்தையும் சரி சமமாக பார்த்தார் என்பதை இந்த மூன்றாம் திருமொழி காட்டுகின்றது. சிலுவைத் துன்பம் மற்றும் வலியின் வேதனையினால் எந்த மனிதனுடைய

கண்களும் மங்கலாகிவிடும். இது உடல் ரீதியாக மருத்துவம் சொல்கின்ற உண்மை. ஆனால் அச்சூழலிலும் இயேசு கிறிஸ்துவின் பார்வை தெளிவான பார்வை. தனக்கு நேரிட்ட இந்நிலையை எண்ணிக் கலங்கியவாறு நின்று கொண்டிருந்த தன் அன்னைக்குத் தம் அன்பு சீடரைக் காட்டி, "அம்மா இவரே உம் மகன்" எனவும், தன் அன்பு சீடருக்குத் தன் அன்னையை காட்டி "இவரே உம் தாய்" எனவும் மொழிந்தார். இந்த மூன்றாம் திருமொழி கற்பிக்கும் உண்மைகளைத் திருமறை வெளிச்சத்தில் தியானிப்போம்.

1. அன்னைக்குப் பராமரிப்பு : "அம்மா இவரே உம் மகன்" (யோ. 19: 26)

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பணிகளில் அவருடைய அன்னையாகிய மரியாவின் ஈடுபாட்டை நற்செய்தி நூல்கள் வழியாக நாம் அறியலாம். லூக். 2: 49-இல் ஆலயத்தில் போதகர் நடுவில் அமர்ந்திருந்தபோது அன்னையின் மனக்கவலையை அறிந்து கொள்ளாதது போல் பேசினவர், யோவா. 2: 4-இல் கானாவூர் திருமண இல்லத்தில் பிறர் நலனில் அக்கறையுடன் பேசிய அன்னை மரியாவிடம் "அம்மா அதைப் பற்றி நாம் என்ன செய்ய முடியும்"? என்று சொன்னவர், மத். 12: 47-இல் தம்மோடு பேசுவதற்காகத் தாயும் சகோதரர்களும் வந்திருக்கிறார்கள் என்றபோது, விண்ணகத்தில் உள்ள என் தந்தையின் திருவுளம் நிறைவேற்றுபவரே என் சகோதர சகோதரிகளும் தாயுமாய் இருக்கிறார்கள் என்று சொன்னவர்; இப்போது சிலுவையில் தன் தாய்க்குத் தலைமகனாகத் தன் கடமையையும், பொறுப்பையும் நிறைவேற்றும் நோக்கத்தோடு தம் அன்னையை தம் அன்புச் சீடரிடம் ஒப்படைக்கிறார்.

உலகிற்கு மீட்பைச் சம்பாதித்துத் தரும் ஆண்டவருடைய பணிவிடையில் மரியாவின் இடம் முக்கியமானது. ஆண்டவர்இயேசு கிறிஸ்துவின் பிறப்பின்போது வான தூதர் கூறிய வார்த்தைகளை (லூக். 1: 31-35), லூக்.2: 19, லூக். 2: 28-35, அன்னை மரியா கிறிஸ்துவின் சிலுவை வரைக்கும் அவைகளைக் குறித்து சிந்தித்துக் கொண்டே இருந்தார். அவற்றின் நிறைவேறுதலாகக் கிறிஸ்துவின் சிலுவைத் துன்பம் இருப்பதைக் கண்டு, துன்பத்தில் தம் மகன் துடிப்பதைக் கண்டு அன்புமிக்க அன்னையாகக் கலங்கி நிற்கிறார். தம் அன்னையின் அழுகையை, பரிதவிப்பை, அங்கலாய்ப்பைக் கண்டுணர்ந்தவர் அவருக்குத் தகுந்த பராமரிப்பைத் தம் அன்புச் சீடர் வழியாகத் தருகிறார். தாய் தந்தையரைப் பராமரிக்கும் பொறுப்பில் இருந்து தங்களை விடுவித்துக் கொள்வதற்காகக் கொர்பான் காணிக்கை கொடுக்கும் வழக்கம் இருந்த (மாற். 7: 11, 12) அன்றைய காலச் சூழலில் மரிக்கும் தருவாயிலும் கருவில் தம்மைச் சுமந்த, தற்போது வரை உள்ளத்திலும் வாழ்விலும் தம்மைச் சுமந்து கொண்டிருக்கின்ற அன்னையை, அன்பு செய்கின்ற அருந்தவப் புதல்வனாய் அன்னைக்குரிய பராமரிப்பை வழங்குகின்றார். விடுதலைப்பயணம் 20: 12-இல் "உன் வாழ்நாட்கள் நீடிக்கும்படி உன் தந்தையையும், உன் தாயையும் மதித்துநட". ஆம் இயேசு கிறிஸ்து சிலுவை வரையிலும் அதை நிறைவேற்றுகின்றார்.

21-ஆம் நூற்றாண்டின் மிக பெரிய சாபம் இன்று பெற்றோரைக் கவனிக்க அநேகருக்கு நேரமும் இல்லை; பொறுப்பும் இல்லை; பணம் மட்டுமே குறிக்கோளாகிறது. இன்றைய இளைய தலைமுறையினர் ஆதரவற்று நிற்கும் பெற்றோரைப் புறக்கணித்து விடுகின்றர். தன் தாய்க்கு உறவை (பராமரிப்பை) ஏற்படுத்தி முடித்த பின்புதான், கடவுளின் திட்டத்தை நிறைவேற்ற இயலும் என்ற நிலையில் இயேசு தன் அன்னைக்கு அரவணைப்பை ஏற்படுத்துகின்றார் யோவா. 14: 18-இல் "நான் உங்களை திக்கற்றவர்களாக விடமாட்டேன்" என்றவர். தன் தாயைத் திக்கற்ற நிலையில் விட்டுவிடவில்லை. "அம்மா இவரே உம்மகன்" என்று தம் தாய்க்கு பராமரிப்பை ஏற்படுத்துகின்றார்.

2. அன்புச் சீடருக்குப் பொறுப்பு : "இவரே உம் தாய்" என்கிறார் (யோவா. 19:27).

தூய யோவானின் நற்செய்தி நூல் யோவானை அன்புச் சீடர் என்றே அறிமுகம் செய்கிறது. யாருக்குப் பொறுப்புகள் தரப்படும்? என்றால் நம்பிக்கைக்குரியவர்களுக்கு, தகுதியானவர்களுக்கு இறுதிவரை உறுதியாக நிற்பவர்களுக்கு. இங்கு நம்பிக்கைக்குரியச் சீடராக யோவானைக் காண்கிறார். மத். 17: 1, 2-இல் பன்னிரண்டு சீடர்களில் பேதுரு, யாக்கோபு, யோவான் அவர்கள் முன்பு மறுரூபமானார். மத். 26: 37-இல் கெத்செமனே தோட்டத்திற்கு இவர்கள் 3 பேரையும் அழைத்துச் செல்கிறார். மூன்றுபேரில் அன்பான சீடன் யோவான். இதுவரையிலும் இயேசுவின் மார்பில் சாய்ந்திருந்தேனே இனி யார் எனக்குத் துணை என்ற ஏக்கத்தோடு நின்ற யோவானைக்காண்கிறார். யோவான் தன் உயிரைத் துச்சமாய் மதித்து சிலுவை அருகில் வந்தவர். இவரே தன் தாயைப் பராமரிக்க சிறந்த சீடன் என்பதை இங்கு அதிகமாக அழுத்திச் சொல்கிறார். இயேசுவுக்கு சகோதரர்கள் இருந்தார்கள். அவர்களிடம் தன் தாயை ஒப்படைக்கவில்லை. உறவு என்பது இரத்த சம்பந்தமானதாக இருக்க கூடாது. அது உலகு சார்ந்ததாக இருக்கவேண்டும். எனவே இயேசு கிறிஸ்து தன் சீடனிடம் அந்த உறவை ஏற்படுத்துகின்றார். மகனை இழந்து நிற்கின்ற அன்னைக்கு அரவணைப்பு கொடுக்க தன் தாயைப் பொறுப்புள்ள யோவானிடம் ஒப்படைத்துத் தாயின் பாதுகாப்பிற்கும் பராமரிப்பிற்கும் வழியை ஏற்படுத்துகின்றார்.

அன்புச்சீடன் யோவானுக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்பு இன்று திருச்சபைக்குத் தரப்படுகிறது. யார் யார் சமூகத்தில் ஆறுதல் இன்றி அரவணைப்பின்றி தனிமைப்படுத்தபட்டு உறவுகளை இழந்து நிற்கின்றார்களோ அவர்களைத் தேடிச் சென்று உதவி செய்தல் அவசியம். குழந்தைகளை இழந்த பெற்றோரின் பிரதிநிதியாக அன்னை மரியாவையும், பெற்றோரை இழந்த பிள்ளைகளின் பிரதிநிதியாக யோவானையும் இத்திருமொழி எடுத்துகாட்டுகிறது. இதனைப் புரிந்து சான்றாளர்களாய்ப் பற்றுறுதியுடன் வாழ்வோம், ஆமென்.

திரு. M. சாமுவேல்

திருப்பணிவிடையாளர், பறக்கை

பு	ஞா. 139

அங்கலாய்ப்பின் குரல்

என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்?

(மத். 27: 46)

இயேசு கிறிஸ்து சிலுவையில் தொங்குகிறபோது உடல் முழுவதும் காயத்தாலும் இரத்தத்தாலும் நிறைந்திருந்த நிலையிலும் ஏழு வார்த்தைகளை சொன்னார். முதல் மூன்று வார்த்தைகளும், கடைசி மூன்று வார்த்தைகளும் நான்கு நற்செய்தி நூல்களில் ஏதாவது ஒரு நற்செய்தி நூலில் மட்டுமே இடம் பெற்றுள்ளது. ஆனால் நான்காவது வார்த்தை மட்டும் மத்தேயு, மாற்கு, ஆகிய இரண்டு நற்செய்தி நூல்களிலும் எழுதப்பட்டுள்ளது. மத்தேயு நற்செய்தியாளர் எபிரேய மொழியிலும் மாற்கு நற்செய்தியாளர் அரமேய மொழியிலும் இதனைப் பதிவு செய்துள்ளனர். முதல் மூன்று வார்த்தைகளும் மற்றவர்களுக்காகச் சொல்லப்பட்டுள்ளன. நான்காவது வார்த்தையோ ஒரு மனிதன் கைவிடப்படுகிறபோது அவனது உள்ளம் ஏக்கத்தினாலும் அங்கலாய்ப்பினாலும் வேதனைப்படுகிறது போல இயேசு கிறிஸ்துவும் தன்னோடு இறைப்பணிக்குத் துணை நின்ற சீடர்களையும், அற்புதங்களையும் அதிசயங்களையும் பெற்றுக்கொள்ள பின் தொடர்ந்த மக்களையும் காணவில்லை என்ற அடிப்படையில் தனக்கென்று துணையில்லாதபோது என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர் என்கிறார்.

கைவிடப்படுதல் என்பது எத்தனை கொடியது என்பது அனுபவித்தவர்களுக்குத் தான் தெரியும். இன்றும் பல மக்கள் தங்களுடைய வேதனையின் குரலை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கிறார்கள். நம் அருள் நாதர் கூட அனைவராலும் கைவிடப்பட்ட சூழ்நிலையில் தாங்கமுடியாத வேதனையின் மத்தியில் என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்? என்கிறார். இவ்வாக்கியம் இரண்டு சிந்தனைகளை வெளிப்படுத்துகிறது.

1. உறவின் மீதுள்ள ஏக்கம்

இயேசு கிறிஸ்து தனது சொந்த அனுபவத்தின் வழியாகத் தான் இறைவனோடு கொண்டிருந்த ஒற்றுமையையும் உறவையும் வெளிப்படுத்து கிறார். யோவான் 10: 30-இல் நானும் தந்தையும் ஒன்றாயிருக்கிறோம் யோவான் 14: 9-இல் என்னைக் காண்பது தந்தையைக் காண்பது ஆகும் என்று கூறுகிறார். இந்த இரு வசனங்களும் இயேசு கிறிஸ்துவுக்கும் தந்தைக்கும் உள்ள பிரிக்க முடியாத உறவை வெளிப்படுத்துகின்றன. அப்படிப்பட்ட உறவு இயேசு கிறிஸ்து

சிலுவையில் தொங்குகிறபோது காணதபடியினால் ஒரு ஏக்கத்தின் குரலாகவே தொனிக்கிறது.

மறைந்த இராணுவ கேப்டன் அன்ஷிமன் சிங் மருத்துவராகச் செயல்பட்டு வந்தார். சியாஷினில் ஏற்பட்ட தீ விபத்திலிருந்து தனது சக இராணுவ வீரர்களின் உயிரைக் காப்பாற்றியதற்காக இந்தியாவின் இரண்டாவது மிக உயர்ந்த அமைதிக்கான உயரிய விருதான கீர்த்தி சக்ரா விருது அவர் மனைவி திருமதி. ஷ்மிருதி அவர்களிடம் வழங்கப்பட்டது. அவர் மனைவி செய்தியாளர் சந்திப்பின் போது எனக்குத் திருமணம் முடிந்து ஐந்து மாதத்தில் என் கணவர் என்னை விட்டு மறைந்துவிட்டார் என்று கண்ணீரோடு கூறினார். இயேசு கிறிஸ்துவுக்கும் பிதாவுக்கும் உள்ள உறவு பிரிக்கவே முடியாத உறவு. அந்த உறவும் பிரிந்து போனதோ என்கிற ஏக்கத்தின் வெளிப்பாடாக அங்கலாய்க்கிறார்.

2. வெளிச்சத்திற்கான ஏக்கம்

தொடக்க நூல் 1: 3இல் கடவுள் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார் வெளிச்சம் உண்டாயிற்று. 1 யோவான் 1: 5ஆம் வசனத்தில் கடவுள் ஒளியாயிருக்கிறார். அவரில் எவ்வளவேனும் இருளில்லை. இயேசு கிறிஸ்து சிலுவையில் சந்தித்த இருள் இயற்கையினால் உண்டானதல்ல. மனிதர்களின் பாவம் என்கிற இருள். இறைவனால் படைக்கப்பட்ட மனிதர்கள் அனைவரும்; வெளிச்சத்தையே விரும்புகிறார்கள். ஆனால் பாவம் என்கிற இருளில் மூழ்கி இருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவும் சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்தபோது மத்தேயு 27: 45இல் ஆறாம் மணிநேரம் முதல் ஒன்பதாம் மணிநேரம் வரைக்கும் பூமி எங்கும் அந்தகாரம் உண்டாயிற்று. நம் ஆண்டவர் ஒளியில் வாசம் பண்ணுகிறவர், இருளுக்கு அப்பாற்பட்டவர். மனிதர்களின் பாவ இருளைப் போக்கவே தன்னை பாவமாக்கிக் கொண்டார். ஏசாயா 59: 2இல் “உங்கள் பாவங்களேஅவர் உங்களுக்குச் செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது.” என்ற வசனத்தின்படி அனைத்து உலகின் பாவத்தை அவர் ஏற்றுக்கொண்டதால் அவருக்குப் பிதாவின் முகம் மறைக்கப்பட்டது. எனவே வியாகுலப்பட்டவராக என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்? என ஏங்குகிறார்.

இன்றைய காலத்தில் நாகரிகம் என்கிற பெயரில் மனிதர்கள் பல பாவங்களைச் செய்து இருளிலே வாழ்ந்து வருகிறார்கள். அந்த மனிதர்கள் வெளிச்சமடையப் பாவ இருளின் அனுபவத்தை ஆண்டவர் ஏற்றுக் கொண்டார். ஆகவே இயேசு கிறிஸ்துவின் ஏக்கத்தை உணர்ந்து அவருடைய சித்தத்தின் படி வாழ நம்மை மாற்றிக்கொள்வோம், ஆமென்.

பா	ஞா. 140

திரு. C. ஜெபின் மோசஸ்

திருப்பணிவிடையாளர், ஒசரவிளை.

ஆசையின் குரல்

"தாகமாய் இருக்கிறேன்" (யோவா. 19: 28).

சிலுவையில் இயேசு கிறிஸ்து அனுபவித்த கொடூரம் என்பது இயேசுவின் உடலில் மிகப் பெரிய பாரத்தினை கொடுத்திருக்க வேண்டும். சிலுவையில் மரணம் நிறைவேற்றப்படுதல் என்பது, உடனடி துப்பாக்கியால் சுடப்பட்டு மரணமடையச் செய்யும் அல்லது தூக்கிலிட்டு மரணமடையச் செய்யும் மரணம் அல்ல. சிலுவை மரணத் தண்டனை என்பது துன்பத்தைக் கூட்ட கிழக்கு நோக்கி சூரிய வெப்பத்தில் தொடர்ந்து மரண வலியை அனுபவிக்கச் செய்கிற நிகழ்வாகும். அவரின் கைகளில் கால்களில் அடைந்த காயங்கள் உடனடியாகச் சிவந்து காட்சிளிப்பது மட்டுமல்லாது, தாகத்தால் நாவறண்டு உடல் சூடேற்றப்பட்டிருக்கும். அவருடைய உடல் உடனடியாகத் திரவ நிலையற்று உலர்ந்து போனதாக இருக்கும்.

வாழ்வுக்கு அடிப்படையான தண்ணீர் கடவுளின் அருட்கொடைகளில் குறிப்பிடத்தக்கது. இயேசுநாதர் பாடுகளை ஏற்றுச் சிலுவையில் தொங்கும்போது உடல் வேதனையில் தாகமடைகிறார். அத்துடன் மானிட மீட்புக்காய் வந்த இயேசு மானிட ஈடேற்றத்தில் கரிசனையுடையவராய் தாகம் கொள்கிறார். இரண்டும் இணைந்து தாகமாயிருக்கிறேன் என்கிறார். இவ்வாறு இரு பெரும் சிந்தனைகள் இருக்க தூய யோவான் நற்செய்தி நூல் நமக்கு தரும் தாகம், தண்ணீர் போன்ற பதங்களை ஆய்வது நலம். தூய யோவான் நற்செய்தி நூலின் ஆசிரியர் ஒவ்வொரு அதிகாரத்திலும் தண்ணீர் பற்றிய சிறப்புச் செய்தியை வலியுறுத்திச் சொல்கிறார். இறுதியில் இயேசுநாதரையே தாகமுடையவராகக் காட்டுகிறார். எப்போது அவருடைய தாகம் தீரும்?

1. உண்மையை நிரூபிக்கும் தாகம்

பொதுவாக யோவான் நற்செய்தி நூல் ஆசிரியர் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நிகழ்வுகளை ஒளிவு மறைவு இல்லாமல் அதாவது பாரம்பரியங்களைப் புகுத்தாமல் வழங்குவதில் சிறப்பானவர். உண்மையை அறிந்தவர்களாயும் இருப்பீர்கள். உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும். (யோவான் 8: 32). "... நான் உண்மையைச் சொல்லியிருக்க நீங்கள் ஏன் என்னை நம்புகிறதில்லை" (யோவான் 8: 44-48) என்ற இறை வசனங்கள் அவரது உண்மையை உணர்த்தி நிற்கின்றன.

மேலும் யோவான் இயேசுவைப் பற்றி மக்கள் வெளியிட்ட கருத்துக்களையும் ஒளிவு மறைவு இன்றித் தருகிறார். அப்பொழுது யூதர்கள் அவருக்கு பிரதியுத்தரமாக உன்னைச் சமாரியன் என்றும், பிசாசு பிடித்தவன் என்றும் நாங்கள் சொல்லுகிறது சரிதானே என்றார்கள் (யோவான் 8: 48).

இப்படியாகப் பல உண்மைகளை யோவான் குறிப்பிடும்போது அவைகள் இயேசு கிறிஸ்துவின் ஆள்தத்துவத்தை பாதிக்குமென யோவான் கருதவில்லை. மாறாக, இயேசு கிறிஸ்துவில் வெளிப்படுகிற உண்மைத் தன்மை வெளிப்படுகிறது. அதுபோல இயேசு கிறிஸ்து சிலுவையில் அடைந்த சோகம், வேதனை, தாகம் இவைகளை யோவான் வெளிப்படுத்துகிறார். இயேசு பாடுபடுவதாகத் தோற்றமளிக்கவில்லை. உண்மையிலே பாடுகளை சகிக்கிறார்.

யோவான் இந்த நிகழ்வின் மூலமாக தம்முடைய ஆன்மிக உண்மைகளையும் நிறுவ முன்வருகிறார். எப்படியெனில் இயேசுவை பாஸ்கா ஆடாகக் காட்ட வேண்டும். அதற்காக ஈசோப்புச் செடியை இங்கே குறிப்பிடுகிறார். ஏனெனில், ஈசோப்புச் செடி பாஸ்கா உணவின்போது இடம் பெற்றது (வி.ப. 12). ஆக, சிலுவையில் அறையப்பட்ட இயேசு பாஸ்கா ஆட்டுக்குட்டியாக நமது பாவங்களைப் போக்கி புதிய உடன்படிக்கையின் வாழ்க்கையை வழங்குபவர் என யோவான் தமது ஆன்மிகக் கருத்தை இங்கு வலுப்படுத்துகிறார் (யோவான் 1: 20, 36; 19: 14, 36). இயேசு கிறிஸ்துவை உண்மையின் வெளிப்பாடாக யோவான் காட்டுகிறார். ஆனால், இன்று இயேசுவில் வெளிப்பட்ட உண்மைகள் திருச்சபையின் சடங்குகளினாலும், பாரம்பரியங்களினாலும், தோற்றக் கோட்பாடுகளினாலும் மங்கிப்போயுள்ளது. நாம் எவ்வாறு கிறிஸ்துவை உலகிற்கு வெளிப்படுத்துகிறோம்.

2. நிறைவை வெளிப்படுத்தும் தாகம்

வளமாக்கவும் நலமாக்கவும் மனிதத்தைப் புனிதப்படுத்தவும் விண்ணைத் துறந்து மண்ணில் பிறந்து இறையரசை இம்மண்ணில் நிறுவ நிறைவாளராக வளர்ச்சிப் பாதையில் வழிநடத்த வந்த இயேசு இவ்வார்த்தையை நிறைவை வெளிப்படுத்தும் வார்த்தையாக எடுத்துரைக்கிறார். யோவான் 2-ஆம் அதிகாரத்தில் கானாவூர் திருமண நிகழ்வு குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. அங்கு எதிர்பாராதவிதமாகக் குறைவு வந்துவிட்டது. இக்குறைவினை அறிந்த இயேசு கிறிஸ்து கல்தொட்டிகளில் தண்ணீர் நிரப்பச் செய்து அதைச் சுவையுள்ள ரசமாக அனைவருக்கும் தருகிறார். இதனால் அழைக்கப்படாத விருந்தாளிகளாக இறுதியில் வந்த ஏழைகள், பாவிகள் என்று பரிசேயரால் ஒதுக்கப்பட்ட அனைவரும் உண்டு மகிழ்ந்தார்கள். இயேசு கிறிஸ்துவின் இச்செயல் அனைத்து மக்களும் குறைவின்றி நிறைவுடன் உண்டு மகிழ வழி செய்தது.

யாரெல்லாம் பசியாகவும், தாகமாகவும் இருக்கிறார்களோ அவர்களோடு இயேசுவும் தன்னை அடையாளப்படுத்திக் கொள்கின்றார். நம்மைச் சுற்றி வாழும் மக்களின் பசியையும், தாகத்தையும் நாம் தீர்த்து வைக்க விரும்புகிறார். இப்படிச் செய்யும்போது இயேசுவின் துயரப்படுகின்ற மக்களின் மீதுள்ள ஆன்மிக தாகத்தை அறிந்திருக்கிறோம் என்கிற நிறைவு நமக்கு ஏற்படும். இறைமகன் இயேசு கிறிஸ்து அவருடைய வாழ்நாளில் நம்மைச் சுற்றியுள்ள மக்களின் தேவைகளை நிவிர்த்தி செய்கின்றவராகவே காணப்பட்டார். பசித்தோரை நலன்களால் நிரப்பியுள்ளார். செல்வரை வெறுங்கையராய் அனுப்பிவிடுகிறார் என்ற வரிகளின் வழியாக நாம் அறிந்துகொள்ளலாம்.

நான் தாகமாயிருந்தேன் நீங்கள் என் தாகத்தைத் தீர்க்கவில்லை என்ற குரல் இன்றும் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. பசியையும், தாகத்தையும் நாம் தேர்ந்தெடுக்கிறோமா? என்பது தான் இன்றைக்கு இயேசு இவ்வார்த்தையின் வழியாக நமக்கு விடுக்கும் சவால். நாம் நம்முடைய வயிற்றை நிரப்பிக் கொண்டு, நம்முடைய உடலுக்கு தேவையான அனைத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்து நம் சிந்தை மாற்றம் பெற்று பகிர்ந்து வாழவும், பிறருடைய தேவையையும் நிறைவு செய்கின்ற மக்களாய் வாழ ஆண்டவர் அழைக்கிறார். இயேசுவின் தாகம் நிறைவை வெளிப்படுத்துகின்ற தாகமாய் இருந்தது. நம்முடைய தாகம் நிறைவை வெளிப்படுத்துகின்றதா?

3. ஒளி வாழ்வு வாஞ்சிக்கும் தாகம்

யோவான் தம்முடைய நற்செய்தி நூலில் ஒளிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார். இயேசுவை உலகிற்கு ஒளியாக வெளிப்படுத்துகிறார். சிலுவையில் தொங்கி நிற்கும் இயேசுவின் காட்சியைக் கண்டுகொள்ள முடியாத சூரியன் ஒளி கொடாமல் தன்னை மறைத்துக் கொண்டது. ஆனால், உலகிற்கு ஒளியாக வந்த இயேசு கிறிஸ்து தம்முடைய வேதனையிலும், மரணத் தருவாயிலும் உலகிற்கு ஒளியாக காட்சி தருகிறார். சிலுவையின் வழியாக ஒளியுள்ள புதிய உலகத்தைப் படைக்கிறார். இந்த உலகில் இனி துன்பமும், தீங்கும் செய்வோரும் இருக்கமாட்டார்கள், பூமி இறைவனை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும். சிலுவையினால் புதிய சமூகம் உருவாகியது. அந்தச் சமூகத்தில் நியாயம் வாசமாயிருக்கும். செழிப்பான வயல்வெளியிலே நீதி தங்கித் தாபரிக்கும் (ஏசா. 32: 16, 17).

இப்புதிய சமூகம் உருவாக்குவதற்கு இயேசு பாடுகளையும், பசியையும், தாகத்தையும் அடைந்தார் என்பதை யோவான் சிலுவை மொழியின் வாயிலாக நிறுவுகிறார். அதுபோல புதிய உலகம் படைக்கின்ற பணியில் வேதனையும், சோதனையும், பாடுகளும், பட்டினியும், சிறைவாசமும், தாகமும் தவிர்க்க இயலாதவைகள். எனவே, சிலுவை மொழியை, புதிய உலகிற்குரிய இயேசுவின் பொன்மொழிகள் என யோவான் குறிப்பிடுகிறார்.

எங்கெல்லாம் மனிதம் அவலமுற்றுப் பசியிலும், வறுமையிலும், நிராகரிப்பிலும், நோயிலும், மனவேதனையிலும் சிக்கித் தவித்து அல்லலுறுகின்றதோ அங்கெல்லாம் சென்று நீ ஒரு தாகம் தீர்க்கும் மழை பொழியும் மேகமாய்த் திகழ்வாய் என்றால், அப்போதெல்லாம் உன் ஆண்டவரின் தாகம் தீர்க்கிறாய் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். அருவிகள் ஆயிரம் படைத்தவரை ஒரு நாளும் தாகமாயிருக்கிறேன் என்று சொல்ல விட்டுவிடாமல் கவனமுடையவர்களாய் வாழ்ந்து இறையரசை விரிவாக்குவோம். ஆமென்.

பு	ஞா. 141

திரு. **R. ரூபன்**

திருப்பணிவிடையாளர், சுவிஷேஷபுரம்

அமைதியின் குரல்

"எல்லாம் நிறைவேறிற்று" (யோவா. 19: 30).

சிலுவையில் நிகழ்ந்த கிறிஸ்துவின் மரணம் நிறைவும், பூரணமும், போதுமானதுமான, பலியையும், காணிக்கையும், பரிகாரமுமாக அனைத்து உலகின் பாவங்களையும் போக்கிட ஏற்புடையதாய் இருந்தது. துவக்கம் என்று ஒன்று இருந்தால் முடிவு என்பதும் உண்டு, மனித வாழ்வின் வாழ்விற்கு ஒரு முடிவு உண்டு, ஆனால் இறைவனின் வாழ்வு முடிவற்றது. 1 பேதுரு 3: 18-இல் கிறிஸ்துவும் உங்கள் பாவங்களின் பொருட்டு ஒரே முறையாக இறந்தார். தனது அன்பை இவ்வுலகில் ஊற்றிய கடவுள் எதையும் தன்னகத்தே நிறுத்திக் கொள்ளாமல், நிறைவாக தனது அன்பை வெளிப்படுத்தினார்.

சிலுவையில் நிகழ்ந்த இயேசுவின், மரணத்திலும் கடவுளின் இந்த நிறைவான அன்பு வெளிப்படுகிறது. இது நிறைவான அன்பு மட்டுமல்ல; அனைத்தையும் நிறைவேற்றும் அன்பும் கூட என்பதை நாம் உணர்ந்து கொள்ள இம்மொழி நம்மை அழைக்கிறது.

ஆண்டவர் இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்தார், பணியாற்றினார், அவர்கள் வாழ்வு பெறவும் அவ்வாழ்வு நிறைவாகப் பெறும் பொருட்டும் வந்துள்ளேன் (யோவான் 10: 10). தன்னுடைய வருகையை முழுமையுமாக அவர் நிலைப்படுத்துகிறார்.

எவைகளை எல்லாம் நிறைவேற்றி முடித்தார்?

1. தன்னை அனுப்பினவரின் திருவுளத்தை நிறைவேற்றி முடித்தார்.

கொடுத்த வேலையைச் செய்து முடிப்பதே இறைவனின் பண்பு. தனது உலக வாழ்வு முடிவுக்கு வருகிறது என்பதனை அறிந்து தனது நிறைவு இறைவேண்டலை யோவான் 17-ஆம் அதிகாரத்தில் ஏறெடுக்கிறார். 17: 1-இல் தந்தையே நேரம் வந்துவிட்டது என்று தன் மன்றாட்டை தொடங்கும் ஆண்டவர், தன் தந்தை தன்னிடம் ஒப்புவித்த பணியினை, தன்னை அனுப்பினவருடைய திருவுளத்தை நிறைவேற்றி அவர் முடிக்கிறார்

எதற்காக தந்தை தன்னை அனுப்பினார் என்பதை அவர் முழுமையாக அறிந்திருந்தார். பாவ உலகில் பாவத்தால் இணைந்திருந்து மனுகுலம் வாழ்வு பெறவே அவர் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை உலகிற்கு தந்தார் என்பதே சிறந்த ஒரு சான்றாக அமைகின்றது. தன்னை அனுப்பினவருடைய திருவுள

சித்தத்தை அவர் சிலுவை மரணத்தின் வழியாய் அவர் நிறைவேற்றி முடிக்கிறார். இன்று நாமும் அவருடைய திருவுள சித்தத்தை நிறைவேற்றி முடிக்க நம்மை அர்ப்பணிப்போம்.

2. தனக்கு கொடுக்கப்பட்ட பணியை நிறைவேற்றி முடித்தார்

தனக்குக் கொடுக்கப்பட்ட பணி என்ன? அதன் இலக்கு என்ன? அந்தப் பணியின் நிறைவு எங்கு உள்ளது? தனது பணி வாழ்வு எப்படி முடியும்? என்கிற எல்லாவற்றையும் நன்கு அறிந்து திட்டமிட்டுப் பணியாற்றிய ஆண்டவர் இயேசு கிறிஸ்து, தனக்குத் தந்தை அருளிய பணியை முழுமையாக நிறைவேற்றினார். அன்பு என்ற அறவழியிலும் நம்பிக்கை என்ற சொற்றொடரிலும் வார்த்தை என்னும் உணவாலும் வாழ்வு என்ற அற்புதத்தாலும் அவர் தம் பணியை நிறைவேற்றி முடித்தார்.

பிதாவானவர் எதை அவரிடம் கொடுத்தாரோ அதை அவர் செய்து முடித்தார். ஒருவர் தன் கடமையின் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்போது, அதை நிறைவுடன் முடிக்கும்போது அவரது வாழ்வில் ஓர் அமைதி ஏற்படுவதை உணர முடியும். அது அமைதியான நிறைவான ஒரு முடிவாகவே நாம் பார்க்க முடியும். அதைபோன்றே இறைமகன் இயேசுநாதர் தான் இந்த உலகத்தில் வந்து தன்னை அனுப்பினவரின் திருவுளத்தை முடித்துத் தனக்கு கொடுக்கப்பட்ட பணியை முடித்து வெற்றிவேந்தராய் சிலுவையில் வெற்றி சிறந்தார்.

முடித்தவர் முடிவில்லாத நிலை வாழ்விற்கு நம்மைச் சிலுவை வார்த்தை வழியாய் அழைக்கிறார். அவர் வார்த்தைக்கு நம்மை அர்ப்பணித்து வாழ்வோம், ஆமென்

சுவி. E. ஸ்டீபன்
சிங்ளேயர்புரி

ப	ஞா. 142

அர்ப்பணிப்பின் குரல்

"தந்தையே, உம் கைகளில் என் உயிரை ஒப்படைக்கிறேன்"
(லூக். 23: 46).

கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடிக்குமுன் பெர்சியன் நாணயத்தில் Ne Plus Altra (Nothing Beyound this) என எழுதப்பட்டிருந்தது. அக்கால நாணயங்கள் பெர்சியா நாடுதான் எல்லை, அதற்கு அப்புறம் நாடுகள் இல்லை என்ற பொருள்பொதிந்த வார்த்தைகளுடன் வலம் வந்தன. ஆனால், எப்போது கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தாரோ அதன்பின் அவ்வார்த்தைகள் பொருளற்றதாய் மாறிவிட்டன. அதுபோல் இயேசு தன் உயிரை ஒப்படைத்ததன்வழி புதிய எதிர்கால நம்பிக்கை (Eschatological hope) மானுடத்திற்கு உண்டாகிறது.

"இவ்வுலகில் ஒரு திருமறைகூட இல்லாது அழித்துவிடுவேன்" என்று முழங்கிய பிரான்ஸ் நாட்டு புரட்சியாளர் வால்ட்டேர், தனது மரண நேரத்தில் மருத்துவர்களிடம் இப்படிக் கூறினார். "நான் கடவுளாலும், மானுடர்களாலும் கைவிடப்பட்டவனாக இருக்கிறேன். என்னுடைய வாழ்க்கையை இன்னமும் ஆறு மாத காலம் உம்மால் நீட்டிக்க முடியுமானால் என்னுடைய செல்வத்தில் பாதியை உமக்களிப்பேன்" (I have been abandoned by God and by men! It give you half my fortune if you extend my life by six months). எத்தனை பரிதாபமான வேண்டுகோள். ஆனால், இயேசுவோ மிகுந்த சமாதானத்துடனும், மனத் தெளிவுடனும் மரணத்தைச் சந்தித்தார்.

நற்செய்தி நூல்களில்...

மத். 27: 50 - இயேசு மறுபடியும் மகா சத்தமாய்க் கூப்பிட்டு ஆவியைவிட்டார்.

மாற். 15: 37 - இயேசு மகா சத்தமாய்க் கூப்பிட்டு ஜீவனைவிட்டார்.

யோவா. 19: 30 - தலையைச் சாய்த்து ஆவியை ஒப்புக்கொடுத்தார்.

இவைகள் இப்படியிருக்க, லூக்கா நற்செய்தியாளர் மட்டுமே இயேசுவின் இறுதி வார்த்தையின் உறுதித் தன்மை கருதி கருத்தாய்ப் பதிவிடுகிறார். ஏனெனில், இயேசுவின் ஒப்படைப்பு ஒப்பற்ற உண்மைகளை நமக்கு விவரிக்கிறது.

இறைவார்த்தையோடு இயேசு

சிலுவைத் திருமொழிகளான, என் கடவுளே! என் கடவுளே! ஏன் என்னைக் கைவிட்டீர் (தி.பா. 22: 1) மற்றும் உமது கையில் என் உயிரை

ஒப்புடைக்கின்றேன் (தி.பா. 31: 5) போன்றவை இறைவார்த்தைகளின் வெளிப்பாடாகவே சிலுவையில் எதிரொலித்தன. இயேசு இறைவார்த்தைகளுக்குக் கொடுத்த முக்கியத்துவத்தை இவை பறைசாற்றுகின்றன. இயேசு இவ்வுலகில் வாழ்ந்த காலங்களில், ஜெபஆலயத்தில் இறைவார்த்தைகள் படிக்கப்படுவதை ஆவலாகக் கேட்டார். ஜெப ஆலயத்திற்குப் போய் புத்தகச் சுருளை எடுத்து வாசித்துத் தியானித்தார். 12 வயதில் எருசலேம் ஆலயத்தில் போதகர்கள் நடுவில் அமர்ந்து அவர்கள் பேசுவதைக் கேட்டதோடு, இறைவார்த்தைகளை அறிந்திருந்தபடியால் வினவினார் (லூக். 2: 46, 47). இயேசுவின் 40 நாள் உபவாசம் முடிந்தபோது, அலகை கேட்ட மூன்று கேள்விகளுக்கும் இ.ச. 8: 3, 6: 16 ஆகிய திருவசனங்களைக் கொண்டே மறுமொழி கூறினார். இப்படி தன் வாழ்வின் அனைத்துத் தருணங்களிலும் திருவசனங்களைப் பயன்படுத்திய இயேசு தனது கடைசிச் சிலுவைமொழியிலும் திருவசனத்தைப் பயன்படுத்தியிருப்பது இறைவார்த்தைகளின் முக்கியத்துவத்தினை நமக்கு கற்றுக்கொடுக்கிறது.

இறைவேண்டலோடு இயேசு

இயேசு இடைவிடாது மன்றாடினார். தன் அடியவர்களுக்கும் (Disciples) இறைவேண்டல் புரியக் கற்றுக்கொடுத்தார். மாலைப் பொழுதில் மலையின் மீது ஏறி தனி ஜெபம் (மத். 14: 23), அதிகாலை வனாந்திரத்தில் ஜெபம் (மாற். 1: 35), பாரம் மிகுந்த கெத்சமனே ஜெபம் என இயேசுவின் வாழ்வில் ஜெபம் ஒரு அங்கமாகவே மாறியிருந்தது.

இயேசுவின் சிலுவை மொழிகளில் மூன்று செம்மொழிகள் இறைவேண்டலாகவே மிளிர்கின்றன. இந்த ஏழாம் செம்மொழியும் தி.பா. 31: 5-இல் இடம்பெற்றுள்ள இறைவேண்டலே. யூத குழந்தைகள் இரவு தூங்கச் செல்லுமுன் ஏறெடுக்கும் இறைவேண்டலைதான் (Bed -time Prayer) இயேசுவும் சிலுவையில் தந்தையே என்ற வார்த்தையையும் இணைந்து தந்தையே உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று கூறினார். இதை வில்லியம் பார்க்களே கூறும்போது, “இயேசு சிலுவையில் தொங்கிய போதும்கூட தன் தந்தையின் கரங்களில் துயிலும் குழந்தையைப் போலிருந்தார்” என்று கூறுகிறார் (Even on a cross Jesus died like a child falling asleep in his father’s arms - Barclay).

இறைவேண்டலின் முக்கியத்துவத்தைத் தன் இறுதி நிமிடங்களிலும் எடுத்துரைத்தார் இயேசு. பாடுகளிலும் பரமன் பாதம் மன்றாடக் கற்றுத்தருகிறது இந்த ஏழாம் திருமொழி.

இறை ஒப்படைப்போடு இயேசு

பொதுவாக, மரணம் தழுவுபவர்களின் உயிர் பிரிந்தவுடன்தான் தலை சாயும். ஆனால், இயேசுவின் சிலுவையின் அருகில் நின்ற யோவான் பதிவிடும்போது (யோவா. 19: 30-இல்) இயேசு காடியை வாங்கின பின்பு முடிந்தது

என்று சொல்லி, தலையைச் சாய்த்து, ஆவியை ஒப்புக்கொடுத்தார் எனக் கூறினார். இந்தச் செயலினால் மரணம் அவரை ஆட்கொள்ளவில்லை, தாமே அனுமதித்து மரணத்தை ஏற்றார் என்பதைக் கூறி இயேசுவின் மாறுபட்ட மரணத்தை விளக்குகிறார் யோவான். இது தற்போது பயன்பாட்டிலிருக்கும் அடக்க ஆராதனையின் ஒப்புக்கொடுக்கும் இறைவேண்டலின் மூலமாகத் திகழ்வதைக் காணலாம் (The Prayer of Committal).

ஒப்புவிக்கிறேன் என்பதற்கு இயேசு பயன்படுத்திய வார்த்தை "பாராடிதேமி" (Paratithemi). இச்சொல்லின் பொருள் (Depasit) அதாவது, விலை உயர்ந்த பொருளொன்றைப் பாதுகாப்பான இடத்தில் வைப்பதைக் குறிக்கிறது. இயேசுவும் விலைமதிப்புயர்ந்த ஆவியைத் தந்தையின் கரங்களில் ஒப்புவித்தார். முதல் மூன்று வார்த்தைகளைச் சாதாரண தொனியில் கூறிய இயேசு, நான்காம் வார்த்தையை மகா சத்தமிட்டுக் கூறினார் (மத். 27: 46; மாற். 15: 34). இப்பொழுது மறுபடியும் இரண்டாம் முறையாக மிக முக்கியமான ஒப்படைப்பின் வார்த்தையையும் மகா சத்தமாய்க் கூறினார் (மத். 27: 50; மாற். 15: 37). இவ்வார்த்தை நிலைவாழ்வின் புது நம்பிக்கையாகவே தொனித்தது.

சிலுவையில் சிதறப்பட்ட கடைசி வார்த்தை சிறகொடிந்து, மனந்தளர்ந்திருக்கும் மானுடர்க்கு சிறப்புயர் சிகரந்தொடும் பேருண்மைகளைக் கற்றுத்தருகிறது. வாழ்வின் இறுதிவரை இறைவார்த்தை, இறைவேண்டல், இறை ஒப்படைப்பு என்று முப்பெரும் கருத்தாழங்களுடன், மூவொரு கடவுளால் உறுதியாய்த் தரித்துத் தழைக்க நம்மையும் அழைக்கிறது, ஆமென்

திரு. **R. பிரீத்தீவ்**

திருப்பணிவிடையாளர், பணிக்கன்குடி

ய	ஞா. 143

உயிர்ப்பு: எல்லையில்லா மாற்றுருவாக்கத்தைக் கொண்டாடுதல்

Resurrection: Celebrating Boundless Transformation

2 சாமு. 22: 1-20 1 கொரி. 15: 20-28

தி.பா. 16 மாற். 16: 1-11

"திகிலுற வேண்டாம்; சிலுவையில் அறையப்பட்ட நாசரேத்து இயேசுவைத் தேடுகிறீர்கள்; அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்" (மாற். 16: 6)

வாரத்தின் முதல் நாள் அதிகாலை வேளையில் இயேசுவின் இறப்பு வரை முழு ஒப்படைப்புடன் பயணித்த மகதலேனா மரியா, யாக்கோபின் தாய் மரியா, சலோமி ஆகியோர் நறுமணப் பொருட்களுடன் இயேசுவின் உடலுக்கு மரியாதை செலுத்தக் கல்லறைக்குச் சென்றனர். அங்கு வெண்ணிற ஆடை அணிந்தவராய் மனித வடிவில் தோன்றிய தேவதூதர் நீங்கள் தேடுகிற இயேசு உயிர்த்தெழுந்தார் என்ற செய்தியைக் கூறினார். இச்செய்தியைக் கேட்டு நடுக்கமுற்ற நிலையிலிருந்த மகதலேனா மரியாள் உள்ளிட்ட பெண்களுக்கு உயிர்த்தெழுந்த கிறிஸ்து வழங்கிய காட்சி அவர்கள் வாழ்வில் ஆழமான, அளவிடமுடியாத மாற்றுருவாக்கத்தை ஏற்படுத்தியது.

உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை வாழ்வின் அனுபவமாக்குவதாலும், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் கொண்டாடுவதாலும் நமது தனிப்பட்ட வாழ்விலும், சமூகத்திலும் மிகப்பெரிய மாற்றுருவாக்கம் நிகழ்ந்து கொண்டேயிருக்கும். எந்தெந்த நிலைகளில் மாற்றுருவாக்கம் நிகழும் என்பதைத் தொடர்ந்து சிந்திப்போம்.

1. பயம் அகற்றுதல் (Removal of Fear) : (மாற். 16: 6)

"திகிலுற வேண்டாம்"

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் செய்தி "திகிலுற வேண்டாம்" என்ற மனவுறுதியை வழங்கும் புத்தாக்க சிந்தனையுடன் தொடங்குகிறது. இயேசு வாழ்ந்தபோது தனது இறப்பையும் உயிர்த்தெழுதலையும் முன்னறிவித்திருந்தாலும் (மாற். 8: 31), இயேசுவின் இறப்பினால் அவரைக் கடைசி மட்டும் பின் தொடர்ந்து கொண்டிருந்த பெண்களும், சீடர்களும் பயந்து நடுங்கிக் கொண்டிருந்தனர். காலியாக இருந்த கல்லறையும், மனித வடிவில் தோன்றிய தேவதூதரின் அறிவிப்பும் அவர்களது பதட்டத்தை அதிகரிக்கச்

செய்தன. இத்தகைய சூழலில் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் காட்சி அவர்களது பயத்தை நீக்கி, அளவிடமுடியாத பிரம்மிப்பையும், மாற்றுருவாக்கத்தையும் ஏற்படுத்தியது. உயிர்த்தெழுந்த கிறிஸ்து அவர்கள் மனங்களில் காணப்பட்ட பயத்தையும் குழப்ப நிலையையும் மாற்றியதால் எல்லைகளை கடந்துச் சென்று நற்செய்தியை அறிவிக்கும் துணிவைப் பெற்றனர்.

இ.ச. 31: 6-இல் மோசே யோசுவாவை இஸ்ரவேலின் அடுத்த தலைவராக அறிமுகப்படுத்தும் நிகழ்வில், இஸ்ரவேலர் கானானியரை மேற்கொள்ள வேண்டுமெனில் பயம் தவிர்க்கப்பட்டு, கோழைத்தனம் நீங்கி, மன உறுதியுடன் இருக்க வேண்டும் என அறிவுரை கூறுகிறார். 2 திமொத்தேயு 1:7-இல் பவுலடிகளார் திமொத்தேயுவிடம், அருட்பணி பயணத்தில் பயமும், குழப்ப நிலையும் இருக்கலாகாது என்பதை வலியுறுத்தும் வகையில் கடவுள் நமக்கு கோழையுள்ளத்தினை அன்று, வல்லமையும், அன்பும், கட்டுப்பாடும் கொண்ட உள்ளத்தினையே தந்துள்ளார் எனக் கூறுகிறார்.

பயம் என்பது உளவியல் சார்ந்த பிரச்சனையாகும். பயம் தன்னம்பிக்கையை சிதைக்கக்கூடியது. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் பயத்தை அகற்றி, வெற்றிகரமான வருங்காலத்துக்குத் தேவையான மனவுறுதியை வழங்குகிறது.

2. சந்தேகத்தை அகற்றுதல் (Removal of Doubts) **:** (மாற். 16: 11)

“அவர் உயிரோடு இருக்கிறார் என்றும் மரியா அவரைக் கண்டார் என்றும் கேட்டபோது அவர்கள் நம்பவில்லை.”

ஆண்டவர் இயேசுவின் உயிர்த்தெழுதல் திருக்காட்சியை கண்ட பெண்கள் சீடர்களுக்கு அதனை அறிவித்தபோது அவர்கள் சந்தேகமடைந்து ஏற்றுக்கொள்ள தயங்கினர். அதுபோலவே மாற். 16: 12-13-இல் இரண்டு சீடர்கள் கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்ற செய்தியை சக சீடர்களுக்கு அறிவித்தபோது அதை ஏற்க அவர்களால் முடியவில்லை. யோவான் 20: 24-25-இல் சீடர்கள் தாம் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைக் கண்டதாக கூறியபோது தோமா சந்தேகப்பட்டார். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நிகழ்வில் சீடர்களின் நம்பிக்கையின்மை கண்டிக்கப்படுகிறது. ஆனால், உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை நேரடியாகச் சந்தித்தபோது அவர்கள் நம்பிக்கையின்மை அகன்று குழப்பநிலை நீங்கித் தெளிவடைந்தனர்.

யோவான் 20: 28-இல் எதையும் எளிதில் ஏற்கும் தன்மையில்லாத தோமாவுக்கு உயிர்த்தெழுந்த கிறிஸ்து காட்சியளித்தபோது “நீரே என் ஆண்டவர், நீரே என் கடவுள்” என முழக்கமிடுகிறார். நம்ப மறுத்த தோமாவிடமிருந்து உயரிய நம்பிக்கையை வெளிப்படுத்தும் வார்த்தைகள் வெளிவரக்காரணம் உயிர்த்தெழுந்த ஆண்டவரைச் சந்தித்ததால் தனக்குக்

கிடைத்த மாற்றுருவாக்க அனுபவமாகும். 1 கொரி. 15-ஆம் அதிகாரத்தில் தொடக்க காலத் திருச்சபையில் ஒரு சிலர் உயிர்த்தெழுதலை ஏற்க மறுத்தனர். இறந்தோர் எப்படி உயிர்பெற முடியும் என வாதிட்டனர். தூய பவுலார் கிறிஸ்து உயிர் பெற்றெழுந்தார் எனவும், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து கிறிஸ்துவுக்குள் வாழும் அனைவரும் உயிரோடு எழும்புவர் எனவும், சாவு முற்றிலுமாக முடிவுக்குக் கொண்டு வரப்படும் எனக்கூறி அவர்கள் சந்தேகத்தைப் போக்குகிறார்.

சந்தேகம் நீடித்த மன அழுத்தத்தையும், உடல் சோர்வையும் ஏற்படுத்தும். ஆனால் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை அனுபவமாக்கும்போது சந்தேகம் அகன்று வாழ்வு மாற்றுருவாக்கம் பெறும்.

3. தனிமையை அகற்றுதல் (Removal of Lonliness) **:** (மாற். 16: 12)

"அவர்களுள் இருவர் வயல்வெளிக்கு நடந்து சென்றபோது இயேசு அவர்களுக்கு வேற்று உருவில் தோன்றினார்."

மாற்கு நற்செய்தியாளர் கூறும் இருவர் என்பது லூக்கா. 24-ஆம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எம்மாவூர் சீடர்களைக் குறிக்கும். எம்மாவூரைச் சொந்த இடமாகக் கொண்ட இரண்டு சீடர்கள் இயேசுவின் இறப்பால் நம்பிக்கை தகர்ந்து இறையாட்சிப் பணியில் தாங்கள் தனித்து விடப்பட்டதாக நினைத்துச் சோர்வுடன் தங்கள் சொந்த ஊருக்குச் சென்று கொண்டிருந்தனர். இச்சூழலில் உயிர்த்தெழுந்த ஆண்டவர் எம்மாவூர் சீடர்களோடு நடந்து, உரையாடி, உணவருந்தி இராத்தங்கினார். இத்தகைய உடனிருப்பு அவர்கள் வாழ்வில் அளவு கடந்த மாற்றுருவாக்கத்தை ஏற்படுத்தியது. லூக். 24: 32-இல் "அவர் நம்மோடு பேசி மறை நூலை விளக்கும்போது நம் உள்ளம் பற்றியெரியவில்லையா?" என்ற கூற்று அவர்கள் அடைந்த வியப்பான அனுபவத்தைக் குறிப்பிடுகிறது.

யோவா. 14: 16-20-இல் இயேசுநாதர் தன்னுடைய பிரியாவிடை உரையில் உங்களோடு என்றும் இருக்கும்படி மற்றொரு துணையாளரை உங்களுக்குத் தருமாறு நான் தந்தையிடம் கேட்பேன் என்றார். இயேசுவின் இறப்பால் ஏற்படும் தனிமையை நினைத்துச் சோர்ந்திருந்த சீடர்களுக்கு வரப்போகும் துணையாளர் எப்போதும் உடனிருப்பார், உண்மையைக் கற்றுக் கொடுப்பார், முழு உண்மைக்கு நேராக வழிநடத்துவார், நியமிக்கப்பட்ட இலக்கை அடைவதற்கு உறுதுணையாக இருப்பார் எனக் கூறியது அளவிடமுடியாத உற்சாகத்தை வழங்கியது.

பெற்றோர், குழந்தையின் கரத்தைப் பிடித்து நடத்துவதைப் போலவும், குழந்தைகள் நோயுறும்போது பெற்றோர் பக்கத்திலேயே உட்கார்ந்து கவனிப்பதைப் போலவும் உயிர்த்தெழுந்த கிறிஸ்து அனைத்துச் சூழல்களிலும் நம்முடன் இருந்து தனிமை உணர்வை அகற்றி நம்மை வழிநடத்துகிறார்.

4. முடக்கநிலை அகற்றுதல் (Removal of Stumpleness) **:** (யோவா. 20: 19)

"யூதர்களுக்கு அஞ்சிச் சீடர்கள் தாங்கள் இருந்த இடத்தின் கதவுகளை மூடி வைத்திருந்தார்கள்."

யூதருக்குப் பயந்து இறையாட்சிப் பணியைத் தொடருவதா? வேண்டாமா? என முடிவெடுக்க முடியாமல் தடுமாற்றத்துடன் ஒன்று கூடியிருந்த சீடர்களுக்கு உயிர்த்தெழுந்த கிறிஸ்து வழங்கிய திருக்காட்சி புதிய உத்வேகத்தை வழங்கியது.

யோவா. 20: 21-இல் உங்களுக்கு அமைதி உரித்தாகுக! தந்தை என்னை அனுப்பியதைப்போல நானும் உங்களை அனுப்புகிறேன் என்றார். தடுமாற்றத்துடன் முடங்கிக் கிடந்த சீடர்களுக்கு உயிரோடெழுந்த கிறிஸ்துவின் அனுப்புதலும், நற்செய்திப் பணிக்கான ஆணையும் புதிய உத்வேகத்தை வழங்கியது.

மாற். 16:15-18-இல் உயிர்த்தெழுந்த கிறிஸ்து தமது சீடர்களிடம் உலகமெங்கும் சென்று நற்செய்தி அறிவிக்கக் கூறுகிறார். உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் சந்திப்பு முடங்கி கிடந்த சீடர்களுக்கு எல்லைகளை தாண்டிச் சென்று நற்செய்தியை அறிவிக்கும் பரவச அனுபவத்தை வழங்கியது. பல்வேறு சூழல்களில் வாழ்கின்ற அனைத்து மக்களும் கடவுளின் மீட்பைப் பெறவும், சமுகத்தில் மாற்றுருவாக்கத்தை ஏற்படுத்தவும் நம்மிலுள்ள முடக்க நிலை முற்றிலும் அகலவேண்டும்.

கொலோ. 1: 28-29-இல் பவுலடிகளார் கிறிஸ்து இயேசுவோடு இணைந்து அனைவரும் முதிர்ச்சி அடைவதற்காகப் பாடுபட்டு, ஞானத்துடன், அயராது உழைத்துக் கொண்டிருப்பதாகக் கூறுகிறார். இன்று திருச்சபைகளில் எண்ணிக்கை குறைதல், பொருளாதார நெருக்கடி, இளம் தலைமை உருவாகாமை, கிறிஸ்தவ நம்பிக்கை பொருளாதார மயமாக்கப்படுதல், அறிவிப்பு பணியில் ஆர்வமின்மை போன்றவை திருச்சபையின் தேக்க நிலைக்கு அறிகுறிகளாகும். இத்தகைய நிலையில் கடவுளின் அருட்பணியைத் திருச்சபைகள் தங்களது முதன்மைப் பணியாக நிறைவேற்றினால் திருச்சபைகள் புத்தாக்கம் பெறும். திருச்சபையின் வழியாக சமுகத்திலும் மாற்றுருவாக்கம் ஏற்படும்.

நிறைவுரை

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் வரலாற்றில் நடைபெற்ற ஒரு நிகழ்வாக இல்லாமல் இன்றளவும் நம்மில் மாற்றுருவாக்கத்தை ஏற்படுத்தும் வியப்பான அனுபவமாகத் திகழவேண்டும்.

2 சாமுவேல் 22-ஆம் அதிகாரத்தில் தாவீது தன்னுடைய வாழ்வின் தொடக்கத்திலிருந்து கடைசி வரை கடவுள் செய்த அரும்செயல்களைக்

கூறுகிறபோது, தன்னுடைய நீண்டகால வாழ்வில் எதிர்கொண்ட துன்பங்களிலிருந்தும் எதிரிகளின் படையெடுப்புகளிலிருந்தும் கடவுள் வெற்றியைத் தந்து உயர்ந்த இடங்களில் உட்கார வைத்தார் எனப் பெருமையுடன் பாடுகிறார்.

1850-ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் பிறந்த அருள்திரு. ஞா. சாமுவேல் ஐயர் தன்னுடைய பள்ளிக்கூட படிப்பில் தேர்ச்சியடைந்து, தமிழ் மொழிக் கல்வியையும், இறையியல் கல்வியையும் பெற்றார். 1878-ஆம் ஆண்டு லூத்தரன் திருச்சபையின் ஆயராக அருட்பொழிவு பெற்று லூத்தரன் திருச்சபை ஆயராகவும், இறையியல் கல்லூரி ஆசிரியராகவும் பணியாற்றினார். இவர் பல நுல்களின் வெளியீட்டாளராகவும், மாத இதழ் ஆசிரியராகவும், அச்சுக்கூட பொறுப்பாளராகவும், வேதாகம மொழி பெயர்ப்பு குழு உறுப்பினராகவும் பலநிலைகளில் அயராது உழைத்தார்.

ஒருநாள் அவர் கவலையோடு சாலையோரமாய் நடந்து சென்று கொண்டிருந்தபோது தரையில் கிடந்த “என் மீட்பர் உயிரோடிருக்கிறார்” (யோபு 19: 25) என்ற பொருளில் எழுதப்பட்டிருந்த ஒரு துண்டுப்பிரதியை எடுத்து படித்தார். இதைப் படித்துக் கொண்டிருந்தபோதே கவலை அகன்றுபோனது. வீட்டில் சென்று “என் மீட்பர் உயிரோடிருக்கையில் எனக்கென்ன குறைவுண்டு நீ சொல் மனமே” என்ற 291-ஆவது கீர்த்தனைப் பாடலை எழுதிப் பாடினார். இப்பாடலின் அனைத்து வார்த்தைகளும் உயிர்த்த கடவுளைச் சந்திப்பதால் கிடைக்கும் எல்லையில்லா மாற்றுருவாக்க அனுபவத்தை அழகாகச் சித்திரிக்கின்றது.

சிலுவையில் இறந்த கிறிஸ்து உயிர்த்தெழுந்தார். அவர் எல்லாக் காலங்களிலும் உயிரோடிருந்து நம்மைச் சூழ்ந்து நிற்கும் காரிருளை அகற்றி நம்மைப் புத்தாக்கம் செய்கிறார். உயிர்த்தெழுதலையும், உயிர்த்தெழுதல் தரும் அளவற்ற மாற்றுருவாக்கத்தையும் கொண்டாடி மகிழ்வோம், ஆமென்.

அருள்திரு. S. கிறிஸ்டோபர் விஜயன்

சேகர ஆயர், நெய்யூர்

ᴜ	ஞா. 147	கீர். 177

இறைவேண்டல்

அருளின் கடவுளே, இறந்தோரில் கிறிஸ்துவை நாங்கள் இனி தேடுவதில்லை, ஏனென்றால் அவர் உயிருடன் இருக்கிறார்; வாழ்க்கையின் ஆண்டவராக இருக்கிறார். சாவிலிருந்து நீர் அவருடன் எங்களையும் எழுப்பி, உமக்குள் எம் வாழ்க்கையை புதுப்பிக்கிறீர். கிறிஸ்துவுடன் நாங்கள் பகிர்ந்து கொள்ளும் உயிர்த்தெழுந்த வாழ்வை எங்கள் மனங்களிலும் இதயங்களிலும் பெருக்கி, நித்திய வாழ்வின் முழுமையை நோக்கி உமது மக்களாக நாங்கள் வளர, எங்களுக்கு உதவி செய்யும். உம்மோடும் தூய ஆவியரோடும் வாழ்ந்து இப்போதும் என்றென்றும் ஆட்சி செய்யும் ஓரே கடவுளான எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வழியாக வேண்டுகிறோம், ஆமென்.

உயிர்த்த ஆண்டவரால் ஆற்றல்படுத்தப்படல்

Empowered by the Risen Lord

தொ.நூ. 28: 10-22 தி.பா. 20: 7-12

தி.பா. 29 யோவா. 20: 11-18

"...ஏனம்மா அழுகிறாய்? யாரை தேடுகிறாய்?" (யோவா. 20: 15).

இரண்டாம் உலகப் போரின்போது பாராசூட் இராணுவ அதிகாரியான ஹெரால்டு ரசல் ஒருமுறை பயிற்சியின்போது விபத்தைச் சந்தித்தார். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இவரது உயிரை காப்பாற்றும் பொருட்டு இவருடைய இரண்டு கைகளையும் துண்டித்து எடுத்தார்கள் மருத்துவர்கள். "நான் இனி எதற்கும் பயனில்லாதவன்! கையில்லாமல் என்னால் என்ன செய்ய முடியும்? வாழ்க்கை முடிந்துவிட்டது" என்று புலம்பிக் கொண்டிருந்தார். அப்படியிருக்கும்போது முதல் உலகப் போரில் தன் கைகளை இழந்த சார்லி மேகோனனேக்கல் ஒருநாள் மருத்துவமனையில் ரசலைச் சந்தித்தார். பயத்தை வெல்ல வேண்டும் என்று ஆற்றல்படுத்தினார். வாழ்க்கை பயணத்தில் நீங்கள் எதை இழந்தீர்கள் என்பதல்ல, உங்களிடம் என்ன மிச்சமிருக்கிறது என்பதுதான் முக்கியம் என்றுரைத்து அவரது உள்ளத்தை ஆற்றல்படுத்தினார். பின் பல விருதுகளைப் பெற்றார், நல்ல எழுத்தாளரானார். தன்னைப்போலவே மாற்றுத்திறன் படைத்தவர்களுக்கு உதவினார். இந்த ஹெரால்டு ரசலும் வானொலிகளில் உரையாற்றி அனேகரை ஆற்றல்படுத்தி வந்தார். ஆற்றல்தான் வாழ்வுக்கு ஆதாரம்.

இயேசுவின் உயிர்ப்பு இறைவனின் முழுமையான வெற்றியாகும். தீமைகள் முற்றிலுமாய், தோல்வி கண்டுவிட்டது என்பதையே பறைசாற்றிச் செல்வதோடு, உயிர்த்த கிறிஸ்துவின் ஆற்றல் தீமைகளையும் தீங்குகளையும் மேற்கொள்ள ஆற்றல் அருளுகிறது. உயிர்த்தெழுந்த ஆண்டவர் தன்னுடைய பிரதிநிதிகளாகக் கல்வியறிவில்லாத, ஏழைகளான ஒதுக்கப்பட்ட கலிலேயரான சீடர்களுக்குத் தமது ஆற்றலைக் கொடுத்து வலிமைப்படுத்தினார் (Empowered His Disciples). இது அவர்களுக்குக் கிடைக்கப்பெற்ற இறையருளாகும். உயிர்த்தெழுந்த ஆண்டவர் எப்படி ஆற்றல்படுத்துகிறார் என்பதை மரியாளின் வாழ்விலிருந்து தியானிப்பது பயனுள்ளதாயிருக்கும்.

1. ஏற்ற வேளையில் ஊக்கப்படுத்தும் ஆற்றல்

வாரத்தின் முதல் நாளன்று விடியற்காலையில் இருள் நீங்கும் முன்பே மகதலா மரியா கல்லறைக்குச் சென்று (யோவா. 20: 1) வழக்கத்தின்படி மரித்தோருக்குச் செய்யவேண்டிய சடங்குகளைச் செய்ய ஆயத்தப்படும்போது, அங்கு அவர் கண்ட காட்சி அவர்களை மிகவும் கலங்கச் செய்தது. இயேசுகிறிஸ்து தனது சிலுவைப் பாடுகளையும் மரணத்தையும் குறிப்பிட்ட வேளைகளில் கூடவே அவரது உயிர்த்தெழுதலையும் சேர்த்துதான் கூறியிருந்தார். ஆனால், மரியாளுக்கு இயேசு சொன்ன வார்த்தைகள் நினைவுக்கு வரவில்லை. மரியா கல்லறைக்கு வெளியே நின்று அழுதுகொண்டிருந்தார். அழுதுகொண்டே கல்லறைக்குள் குனிந்து பார்த்தார் (யோவா. 20: 11). கடுமையான கல்லறை காவலிருந்தும் கல்லறை திருடர்கள் ஆண்டவரின் உடலைத் திருடிவிட்டார்கள் என நினைத்து ஆண்டவரின் உடலுக்காக அழுதுகொண்டிருந்தார். எவ்வளவு நேரம் அழுது கொண்டிருந்தாள் என்று தெரியாது. ஆனால், கல்லறைக்கு வெளியே உள்ள இயற்கை காட்சிகளோ, மலைகளோ, மரங்களோ அவரது அழுகையைக் குறைக்கவோ அல்லது நிறுத்தவோ முடியவில்லை. கல்லறைக்குள் இயேசுவின் உடலை வைத்திருந்த இடத்தில் ஒருவர் தலைமாட்டிலும் மற்றவர் கால்மாட்டிலுமாக அமர்ந்திருந்த (யோவா. 20: 12) வானதூதர்களால்கூட அழுது கொண்டிருந்த மரியாளை ஏன் அழுகிறாய்? (20: 13) என விசாரிக்கத்தான் முடிந்ததே தவிர அவர்களால் அழுகையை நிறுத்த முடியவில்லை, அழுகைக்கு விடை கிடைக்கவில்லை. ஆனால் ஏற்ற வேளையில் உயிர்த்தெழுந்த ஆண்டவர் (யோவா. 20: 15) ஏனம்மா அழுகிறாய்? யாரைத் தேடுகிறாய்? என்று கேட்டபோதுதான் மரியாவின் அழுகை அகன்றது. மரியாளுக்கு உரையாடின உயிர்த்தெழுந்த ஆண்டவரின் குரல் ஏற்ற வேளையில் அவரை ஊக்கப்படுத்தியது. உயிர்த்தெழுந்த ஆண்டவரால் மட்டுமே ஏற்ற வேளையில் ஊக்கப்படுத்தும் ஆற்றல் உண்டு. அவரிடம் மட்டுமே அழுகைக்கு விடை உண்டு. உயிர்த்தெழுந்த ஆண்டவரின் ஆற்றலடைந்து துரோவாவில் 7 நாட்கள் நற்செய்தி போதனையைப் பவுல் நடத்திக் கொண்டிருந்தபோது (தி.ப. 20: 6-12) யூத்திகு என்னும் இளைஞர் பலகணியில் உட்கார்ந்திருந்தார் (20: 9). தூக்க மயக்கத்தில் மூன்றாம் மாடியிலிருந்து கீழே விழுந்தார். அவரை அவர்கள் பிணமாகத்தான் தூக்கி எடுத்தார்கள். கூடியிருந்தவர்கள் கலங்கினார்கள் (20: 10). பவுல் ஏற்ற வேளையில் கீழே இறங்கி வந்து அவர் மீது படுத்து அணைத்துக்கொண்டார் (20: 10). ஆண்டவரின் ஆற்றல் இளைஞருக்கு உயிரளித்தது. கூடிநின்றவர்களின் அழுகையை ஆண்டவரின் ஆற்றல் மாற்றியது. உளவியலாளர்களின் கருத்துப்படி மனிதன் தன்னிடமுள்ள 80 விழுக்காடு வாழ்வை வாழாமல் கடந்துபோகக் காரணம் ஏற்ற வேளையில் அவர்களை ஊக்கப்படுத்தாததே என்கிறார்கள்.

உலகத் துன்பங்களில் அகப்பட்டு அழுதுகொண்டிருக்கும் அன்பர்களுக்கு ஏற்றவேளையில் ஆற்றல் அருளி ஊக்கப்படுத்த அவர்களுக்கு உயிர்த்தெழுந்த ஆண்டவர் நல் எதிர்நோக்கைக் கொடுக்கிறார்.

2. எண்ணங்களை தெளிவுபடுத்தும் ஆற்றல்

எண்ணங்கள் அணியும் ஆடையே வார்த்தை. உள்மனதில் கருவாகி எண்ணத்தில் உருபெற்று வார்த்தையாய் வெளிவருகிறது. பொதுவாக, நமது மனதை விளை நிலத்திற்கும், வார்த்தையை விதைக்கும், எண்ணத்தை விதைக்குள் இருக்கும் உயிரின் ஆற்றலுக்கும் ஒப்பிடலாம். விதை முளைக்க வேண்டுமானால், முளைக்கரு எவ்வளவு முக்கியமோ, அதுபோலவே "எண்ணம்" மிக முக்கியமானது. நமது தேசத்தந்தை மகாத்மா காந்தியடிகள்,

"ஒரு மனிதன் தன் எண்ணங்களால் ஆனவன், அவன் என்ன எண்ணுகிறானோ அவன் அதுவாக மாறுகிறான்" என்கிறார். அத்துடன் ஜார்ஜ் மூர் என்பவர் குறிப்பிடும்போது "எண்ணம் மட்டுமே சரியை தவற்றிலிருந்து பிரிக்கும்" என்றார். வாழ்க்கையைப் பசுமையாக்கி மகிழ்வதும், பாலைவனமாக்கி வருந்துவதும் அவரவர் எண்ணங்களைப் பொறுத்தது. ஆகவே, எண்ணங்களில் தெளிவு வேண்டும். எண்ணங்கள் குழம்பிபோகும்போது உயிர்த்தெழுந்த ஆண்டவரது ஆற்றல் நம் எண்ணங்களைத் தெளிவுப்படுத்துகிறது. ஆண்டவருடைய கல்லறையில் வாயிற்கல் வைத்து அடைத்து முத்திரையிட்டுக் காவலும் போடப்பட்டபோதே, ஆண்டவரைப் பின்பற்றினவர்களில் நம்பிக்கையான எண்ணங்கள் புதைபட்டுபோயின. இயேசு உயிர்த்தெழுந்திருப்பார் என்னும் எண்ணம் மரியாவுக்கு எழவே இல்லை. அவரது உடல் களவாடப்பட்டுவிட்டது என்றே அவர் எண்ணினார். எனவேதான், "என் ஆண்டவரை எடுத்துக்கொண்டு போய்விட்டனர். அவரை எங்கே வைத்தனரோ எனக்கு தெரியவில்லை" (யோவா. 20: 13) என வானதூதரிடம் பதில் மொழிகிறார். "எனக்குத் தெரியவில்லை" (20: 13) மற்றும் "அங்கு நிற்பவர் இயேசு என்று அவர் அறிந்து கொள்ளவில்லை" (20: 14). இவைகள் வழியாக மரியாளின் எண்ணங்களில் தெளிவு இல்லை என்பது புலனாகிறது. ஆனால், உயிர்த்த ஆண்டவரின் ஆற்றல் எண்ணங்களைத் தெளிவுபடுத்தியது. எப்படியெனில், இயேசுவின் உருவத்தைக் கண்டும் புரிந்து கொள்ளாத மரியா அவரது குரலைக் கேட்டவுடனே அவர்தான் இயேசு என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொண்டு, "போதகரே" எனப் பொருள்படும் "ரபூனி" என்ற வார்த்தையில் அழைக்கிறார் (யோவா. 20: 16). இந்தியாவின் முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு "எண்ணம் செயலாக மாறவில்லை என்றால் அதைக் கருச்சிதைவு என்றே சொல்லலாம்" என்றார். ஆனால் இங்கு மரியாளின் எண்ணங்களை உயிர்த்தெழுந்த ஆண்டவர் தெளிவுபடுத்தியபின் அவரது எண்ணங்கள் செயல் வடிவுக்கு வந்துவிட்டன. எப்படியெனில், எண்ணங்கள் தெளிவடைந்த பின் "தோட்டக்காரராக" (20: 15) இயேசுவை கண்டவர், இப்போது உயிர்த்த

கிறிஸ்துவாகக் கண்டு மரியா கரை காணா மகிழ்ச்சியால் அவரை கட்டிபிடித்துக்கொள்கிறார். இயேசு அவரைப் பார்த்து "இப்படிப் பற்றிக்கொள்ளாதே, நான் என் தந்தையிடம் இன்னும் செல்லவில்லை" என்கிறார் (20: 17). இப்படி உயிர்த்த ஆண்டவருடைய ஆற்றல் நம் எண்ணங்களை தெளிவுபடுத்தும்போது நாம் தடுமாறமாட்டோம், தனித்திருப்பதை உணரவுமாட்டோம். யாக்கோபு தன்னந்தனியாகத் தாயின் நினைவுகள் இருதயத்தைப் பாரமாக்க, கண்களை ஈரமாக்க நடந்துசெல்கிறான். இருட்டிவிட்டது, இமை மூட துடிக்கிறது. கால் ஆற ஆசை கொள்கிறது. உடல் களைத்துவிட்டது. ரெபெக்காலின் செல்ல மகனுக்கு இப்பொழுது படுக்க மெத்தை பாறைதான். தலையணை கல்தான், அயர்ந்து தூங்க ஆரம்பித்து விட்டான் (தெ.நூ. 28: 10-2). இப்போது பரலோகம் அவன் பார்வைக்குத் தெரிகிறது. ஏணியைக் காண்கிறார். வானதூதர்கள் ஏறுகிறார்கள், இறங்குகிறார்கள். ஆண்டவரின் ஆற்றலால் அவரது எண்ணங்கள் தெளிவடைந்தன (தொ.நூ. 28: 16). யாக்கோபு தூக்கம் தெளிந்து, உண்மையாகவே ஆண்டவர் இவ்விடத்தில் இருக்கிறார், நானோ இதை அறியாதிருந்தேன் என்றுரைத்தார். அங்ஙனம் மரணத்தை வெற்றி கொண்டு உயிர்த்தெழுந்த ஆண்டவர் நம்மோடு கூட வாழ்கிறார், கூட வருகிறார் என்ற தெளிவான எண்ணங்களோடு மிக தைரியத்தோடு வாழ உயிர்த்த ஆண்டவரின் ஆற்றல் உதவி செய்கிறது.

3. எல்லோருக்கும் அறிவிக்கத் துணிவுபடுத்தும் ஆற்றல்

மரியா கல்லறைக்குள் நுழைந்தபோது ஒளிவீசும் ஆடை அணிந்திருந்த இருவர் மரியாளிடம் "உயிரோடு இருப்பவரைக் கல்லறையில் தேடுவதேன்? அவர் இங்கே இல்லை அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்" (லூக். 24: 56) என கூறினபோதும் அல்லேலூயா, ஆண்டவர் உயிர்த்துவிட்டார் என்று ஆர்ப்பரிக்கவில்லை. வெறுமையான கல்லறையைக் கண்ட பிறகும் கூட "உயிர்த்துவிட்டார்" என்று உரக்கச் சொல்லவுமில்லை. பின் இயேசுவின் தலையை மூடியிருந்த துண்டு மற்ற துண்டுகளோடு இல்லாமல் தனியாகச் சுற்றி வைக்கப்பட்டிருந்ததைக் கண்டவுடன் தான் உயிர்ப்பின் மீது நம்பிக்கை அரும்பியது எனினும் வெளியே சொல்லவில்லை. ஆனால் உயிர்த்த ஆண்டவரின் ஆற்றல் இச்செய்தியை அறிவிக்கத் துணிவை தந்தார். எப்படினெில், உயிர்த்த கிறிஸ்து மரியாளிடம் "என்னை இப்படிப் பற்றிக் கொள்ளாதே (யோவா. 20: 17) என்று, இது பற்றிக்கொள்ள முயற்சிக்கும் நேரம் அல்ல, மாறாக பறைசாற்ற வேண்டிய நேரம். எனவே நீ, என் சகோதரர்களிடம் சென்று அவர்களிடம் சொல்" (20: 17) என்றுரைத்துத் துணிவுபடுத்தினார். மரியா அக்கட்டளைக்கு கீழ்ப்படிந்து, "நான் ஆண்டவரைக் கண்டேன் என்றார். தம்மிடம் இயேசு கூறியவற்றையும் அவர்களிடம் சொன்னார்" (20: 18). யோவான் நற்செய்தியில் குறிப்பிடபட்டிருக்கும் கல்லறை "வெற்றுக் கல்லறை" அல்ல, மாறாக பாவத்தை வென்று இயேசு உயிர்த்தெழுந்த "வெற்றியின் கருவறை".

இந்த வெற்றியின் கருவறை வெறுமையாக இருந்தாலும், கல்லறை முழுவதும் உயிர்ப்பின் செய்திகளால் நிரம்பி வழிந்தன. இச்செய்திகளை உலகோர் எல்லோருக்கும் அறிவிக்கத் துணிவை அருளும் ஆற்றல் உயிர்த்த ஆண்டவருக்கு மட்டுமே உண்டு. "ஆண்டவரின் குரல் வலிமை மிக்கது" (தி.பா. 9: 4). இத்தகைய ஆற்றல் மிகுந்த குரலால் எல்லோருக்கும் துணிவை அருளுகிறார் யூதர்களுக்கு அஞ்சிச் சீடர்கள் தாங்கள் இருந்த இடத்தின் கதவுகளை மூடிவைத்திருந்தார்கள். அப்போது இயேசு அங்கு வந்து அவர்கள் நடுவில் நின்று "உங்களுக்கு அமைதி உரித்தாகுக" (20: 19) என்ற வலிமை மிக்க குரல் தாங்கள் கண்ட அனுபவத்தை அறிவிக்க துணிவருளியது. அத்துடன் "தந்தை என்னை அனுப்பியதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன்" (20: 21) என துணிவுப்படுத்தி அனுப்பினார். உண்மையாக உயிர்த்த ஆண்டவரின் ஆற்றல் சீடர்கள் அச்சத்தால் அடைத்து வைத்திருந்த கதவைத் திறந்தது. பயந்து நடுங்கிய அவர்களது வாயைத் திறந்தது, மந்த இருதயமுள்ளவர்களாய் இருந்த அவர்களது இருதயத்தைத் திறந்தது. அவர்களுக்கு ஆற்றல் அருளி வையகத்திற்கு அனுப்பினார் (The Power of the Risen Lord exposed the disciples to the World) கிறிஸ்துவின் சீடர்களாகிய நாமும் பார்முழுதும் பறைசாற்ற வேண்டிய பங்காளிகளாய் இருக்கிறோம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இறைமக்கள் நாம் உயிர்த்த கிறிஸ்துவோடு ஒருங்கிணைந்து ஏற்ற வேளையில் ஊக்கப்படுத்தும் ஆற்றலைப் பெற்று, எண்ணங்களைத் தெளிவுபடுத்தும் ஆற்றலைப் பெற்று, எல்லோருக்கும் அறிவிக்கத் துணிவருளும் ஆற்றலையும் பெற்று வாழ்வோம், ஆமென்.

ப	ஞா. 79	கீர். 291

அருள்திரு. **G.S. அஸ்வின் ஜெய்சிங்**

ஆயர், நேசர்புரம்

இறைவேண்டல்

அருள் நிறைந்த கடவுளே, உயிர்த்தெழுதலும், வாழ்வுமாக இருக்கும் உமது மகனுக்காக, உமக்கு நாங்கள் நன்றி செலுத்துகிறோம். எங்கள் நம்பிக்கையில் உறுதியாக இருக்க எங்களுக்கு ஆற்றல் தர வேண்டுகிறோம்; நாங்கள் எல்லைகளைத் தாண்டி நேசிப்பதற்கும், சேவை செய்வதற்கும் எங்களுக்கு ஆற்றல் தர வேண்டுகிறோம்; மேலும் எங்கள் வாழ்வின் தடம் புரளாத பாதைகளில் உயிர்த்தெழுந்த இறைவனை அடையாளம் காண எங்களுக்கு அறிவையும் ஞானத்தையும் தர வேண்டுகிறோம். உயிர்த்தெழுந்ததன் மூலம் மரணத்தை வென்று, உம்மோடும், தூய ஆவியரோடும் வாழ்ந்து, இப்போதும் என்றென்றும் ஆட்சி செய்யும் நித்திய வாழ்வை எங்களுக்கு உறுதியளித்த, எங்கள் ஆண்டவரும் மீட்பருமான இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறோம், ஆமென்.

ஆசியருளும் ஆண்டவர்

மத். 13:1-9

"ஆனால் இன்னும் சில விதைகள் நல்ல நிலத்தில் விழுந்தன. அவற்றுள் சில நூறு மடங்காகவும் சில அறுபது மடங்காகவும் விளைச்சலை கொடுத்தன" (மத். 13: 8).

இயேசு கிறிஸ்து தலை சிறந்த ஆசிரியர். அன்றாட வாழ்க்கையிலிருந்து காட்சிகளை எடுத்து ஆழமான ஆன்மிக உண்மைகளைப் போதிக்க உவமைகளைத் தனித்துவமாகப் பயன்படுத்தும் ஆற்றல் அவரிடம் இருந்தது. இந்தப் பகுதியில் மனிதனின் இதயத்தைக் குறித்து நல்ல நிலம் உவமை வாயிலாகக் குறிப்பிடுகிறார். நல்ல நிலம் நூறு மடங்கு பலனைத் தரும். உலக ஆசை, கடவுளின் வார்த்தை வாயிலாக பெறும் நூறுமடங்கு ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ளத் தடையாக உள்ளது.

நூறுமடங்கு என்பது சாதாரணமான ஒன்று அல்ல, அசாதாரணமான ஒன்று என்று குறிப்பிடப்படுகிறது. கடவுள் தருகின்ற ஆசி அசாதாரணமானது. தொ.நூ. 26:12 "ஈசாக்கு அந்த நாட்டில் பயிரிட்டு அதே ஆண்டில் நூறுமடங்கு அறுவடை செய்தார். ஆண்டவர் அவருக்கு ஆசி வழங்கினார்".

ஒரு விவசாயி ஒரு வயலில் பயிரிடப்பட்ட மண்ணின் வகைகளை இயேசு விவரிக்கிறார். விவசாயி தன்னுடைய விதையை விதைக்கும்போது, கடினமான பாதை, பாறைகள் மற்றும் முட்கள் வளரும் இடம் உட்பட்ட இடங்களில் விதை விழுவதைக் கூறுகின்றார். நல்ல நிலத்தில் விதை விழும்போது நடைபெறும் மாற்றத்தையும் விளக்குகிறார். மனித மனதை மண்ணிற்கு ஒப்பிடுகிறார். நல்ல மனம் நல்ல பலன் தரும் என்கிறார்.

கிறிஸ்து உவமையின் கருத்தைச் சீடர்களுக்கு விளக்குகிறார் (மத்.13:18-23). விதை விதைப்பது பரலோக ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கிப்பதையும் வசனத்தைக் கேட்கின்ற உள்ளம் உடையோரில் இறைவார்த்தை தடையின்றி வளரமுடியும் என்பதையும் வலியுறுத்துகிறார்.

1. பண்படுத்தப்பட்ட நிலம் ஆசி பெறும்

இந்த உவமையில் முதலாவது சொல்லப்பட்டது மண் பாதை. பாலஸ்தீனாவில், வயல்கள் வழியாகவும் அதை சுற்றியும் பாதைகள் இருந்தன. எனவே சில விதைகள் பாதையில் விழுவது தவிர்க்க முடியாதது. பாதை கடினமாக இருந்ததால் விதைகள் முளைக்க முடியவில்லை. பசியான பறவைகள் உண்ணும்படியாக அவை தரைக்கு மேல் இருந்தன. அதுபோல

கடவுளின் வார்த்தையும் கடினமான உள்ளங்களை கொண்ட மக்களில் ஊடுருவ முடியாது. அவைகள் பயனற்றதாக மாறி விடும்.

விவசாயிகள் தங்கள் வயல்களில் உழுவதன் மூலம் நிலத்தைச் சரிசெய்து பிரச்சனையை மாற்றலாம். கலப்பை கடினமான நிலத்தை உடைக்கிறது. இதனால் விவசாயி நடவு செய்யும்போது விதைகள் மண்ணில் ஊடுருவிச் செல்ல முடியும். கடவுளின் வார்த்தையைப் பெற நமது இதயத்தைத் தயார் செய்ய வெண்டும்.

ஆலயத்திற்கு ஆண்டவருடைய வார்த்தையைக் கேட்பதற்கு முந்தைய நாள் சினிமாவிலோ, விளையாடுவதிலோ தூங்காமல் செலவழித்துக் கடின இருதயத்தோடு வராமல், ஓய்வெடுத்து ஜெபத்தோடு ஆண்டவரே எங்களோடு என்ன பேச விரும்புகிறீர் என்று கேட்டு இருதயத்தை இலகுவாக்கிக் கலந்து கொள்ள வெண்டும்.

ஆண்டவருடைய ஆசி பெற இருதய கடினத்தை மாற்றி கடவுளிடம் வருவோம். கடவுள் விதைகளை விதைத்து வருகிறார். அதைப் பெறுவதற்கு இருதயத்தின் கடினம் தடையாக உள்ளது. கடினத்தை உடைக்க அற்பணிக்க வேண்டும். கலப்பை என்கின்ற ஒன்று இனிமையான அனுபவம் அல்ல; மாறாக கடினத்தன்மையை உடைக்க நம்முடைய இதயத்தை ஒருவேளை அது காயப்படுத்தலாம். ஆனால் முடிவுகள் மதிப்பிற்குரியவை.

2. உறுதியான விதை ஆசிபெறும்

இயேசு திடமான பாறையின் மேலுள்ள ஆழமற்ற மண்ணைக் குறித்துப் பேசுகின்றார். அடியில் பாறை இருப்பதால் செடிக்கு வேர்களை ஆழமாக விட முடியவில்லை. அவை அழியக் காரணம் சூரியனின் வெப்பம் அல்ல, சோதனையால் அல்ல, ஆனால் சோதனையைச் சகிக்க ஆழமான வேர் இல்லை என்பதாகும். ஒரு செடியை அழிக்கும் அதே சோதனை மற்றொரு செடியின் தரத்தைத் தீர்மானிக்கும். எல்லாம் வேர்களைப் பொறுத்தது. வேர்கள் ஆழமற்றதாக இருந்தால் செடி கருகி இறந்துவிடும். வேர்கள் ஆழமாக இருந்தால் உயிர் வாழும் சூரிய ஒளியால் ஒளி சேர்க்கை நடக்கும், வலுவாகும். வேரற்ற செடியை அழிக்கும் சூரியன் ஆழமான வேர்கொண்ட தாவரம் உயிர்பெறக் காரணம் ஆகும். சிரமங்களை எதிர்கொண்டு விடாமுயற்சியுடன் இருக்க நாம் வேர்களைக் கீழே ஆழமாக ஊன்ற வேண்டும்.

பத்து வயது சிறுவன் விபத்தில் இடது கையை இழந்தான். ஜூடோ கற்றுக்கொள்ள விரும்பினான். ஆசிரியர் ஒரே ஒரு பயிற்சியை மட்டும் கற்றுக் கொடுத்தார். போட்டியின் நாள் வந்தது. வலிமையான ஞானமானப் போட்டியாளர்களை எதிர்த்து போராட வேண்டும். மாணவன் வெற்றி பெறுகிறான். அவனால் எப்படி முடிந்தது என்றால், பயிற்சி ஜூடோவிலேயே மிகவும் முக்கியமானது. இது பயின்றவரை வீழ்த்த இடது கையைப் பிடித்து மடக்கி தான் வீழ்த்த முடியும். இடது கை இல்லாத அந்த மாணவனுடைய மிகப்

பெரிய பெலவீனம் அவனுடைய மிகப் பெரிய பெலனாக மாறியது. காரணம் விடாமுயற்சி செய்து பலப்படுத்தினான். கிறிஸ்தவர்கள் சோர்ந்து போகக் காரணம் ஆழமற்ற வேர் அமைப்பு இல்லாமல் போனதாகும். நம் வேர்கள் ஆண்டவரில் அடித்தளமாக வேண்டும்.

3. களை அகற்றப்பட்டால் ஆசிபெறும்

இயேசு சொன்ன மூன்றாவது வகை மண் முள் அல்லது களைகள் நிறைந்த மண். முட்கள் விரைவாக வளர்ந்து செடிகளை நெரித்துவிடும். களைகள் தாவரத்திற்குத் தேவையான ஊட்டச்சத்து தண்ணீர் உணவு எல்லாவற்றையும் உட்கொள்கின்றன. முட்கள் உலக ஆசை, செல்வத்திற்கான ஆசையை பிரதிபலித்து விடுகிறது. இது பல மக்களின் வாழ்க்கையிலிருந்து கடவுளின் வார்த்தையை நெரிக்கிறது.

உலக பொருட்கள் ஒருபோதும் முழுமையான திருப்தியை தருவது இல்லை. இந்த வாழ்க்கையின் கவலைகளும் செல்வத்தின் ஆசையும் நமது ஆன்மிக வளர்ச்சியை நெருக்குகிறது என்றால் நாம் நம்முடைய வாழ்க்கையை மறுசீரமைக்க வேண்டும். உலக செல்வத்தைத் தேடுவதைவிட ஆன்மிக செல்வம் தேடுவதை குறிக்கோளாகக் கொள்ள வேண்டும் (மத். 6: 31, 33). அனைத்திற்கும் மேலாக அவரது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள். அப்பொழுது இவையனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும்.

செல்வந்தர் ஒருவர் போதகரைப் பார்க்கச் செல்கிறார். போதகர் அவருக்கு ஜன்னல் கண்ணாடி வழி வீதியை காண்பித்தார். எதைப் பார்க்கிறீர்கள் என்று கேட்டார். வீதியில் உள்ள மக்களைப் பார்ப்பதாக செல்வந்தர் சொன்னார். முகம்பார்க்கும் கண்ணாடியைப் போதகர் காண்பித்தார். செல்வந்தர் தன்னை பார்ப்பதாகக் கூறினார். ஒரே கண்ணாடி இடையே ஒட்டப்பட்ட வெள்ளித்தாள் பிறரை பார்க்க விடாமல் செய்கிறது என்றார்.

சுயநலம், உலகக் கவலைகள் மகிழ்வான வாழ்வைக் காண விடாமல் செய்கிறது, உலகக் கவலையும் செல்வத்தின் ஆசையையும் தவிர்ப்போம். கடினம் நீக்கப்பட்ட நிலமாக, உறுதியான மனதோடு களை அகற்றப்பட்டு நூறு மடங்கு ஆசிபெற இறைவன் இப்புது மாதத்தில் அருள்புரிவாராக, ஆமென்.

ப	ஞா. 40	கீர். 435

திரு. J.R. ஜெரோம்

திருப்பணிவிடையாளர், நியூ பளுகல்

04.05.2025 உயிர்ப்புத் திருநாளுக்கு பின் வரும் இரண்டாம் ஞாயிறு

உயிர்த்த ஆண்டவருடன் திருமறையை மீள்படித்தல்

Re-reading the Scripture with the Risen Lord

2 குறி. 34: 29-33 | தி.ப. 8: 26-40

தி.பா. 19: 7-14 | லூக். 24: 13-27

> *"மோசே முதல் இறைவாக்கினர் வரை அனைவரின் நூல்களிலும் தம்மைக் குறித்து எழுதப்பட்ட யாவற்றையும் அவர் அவர்களுக்கு விளக்கினார்"* (லூக். 24: 27).

கிறிஸ்தவ மறைநூல் மனுக்குல வாழ்விற்கு மிகவும் அடிப்படையானது. அதை மீள்படித்தல் இன்னும் அதி முக்கியமானது. கிறிஸ்தவ வரலாற்று மரபை அது இன்றைய வரலாற்றுடன் தொடர்புப்படுத்துகிறது. இறையுறவின் நெருக்கத்திற்கு ஊடகமாய் அமைகிறது. சிந்தனைக்கு விருந்தளிக்கிறது. அறவாழ்வுக்கு வழிகாட்டுகிறது. ஆனால், முறையாக அதனை அணுகாவிட்டால் மனக்குழப்பமும், நடைமுறையில் தடுமாற்றமும், திருச்சபையில் பிளவுகளும் ஏற்படும். நாம் முறைமுறையாகப் படித்த திருப்பாடலில் ஆண்டவரின் கட்டளைகள் ஒளிமயமானவை; அவை கண்களை ஒளிர்விக்கின்றன (தி.பா. 19: 8). என் காலடிகளுக்கு உம் வாக்கே விளக்கு, என் பாதைக்கு ஒளியும் அதுவே (119: 1015). விவிலிய ஒளி எப்படி நம் கண்களை ஒளிர்விக்கின்றது? அது எப்படி நம் வாழ்க்கை பாதையில் பாய்ச்சப்படுகின்றது? சிறு குழந்தைகள் கைவிளக்கைப் (Torch) பிறர் கண்களுக்கு நேரே பாய்ச்சிட அவர்கள் கண்களை கூசச் செய்து பார்வையைக் குழப்புவதைப் பார்த்திருப்போம். இதுபோல் விவிலிய விளக்கு தவறான பயன்முறையால் உள்ளங்களை ஒளிர்வித்துப் பாதைகளுக்கு ஒளி தருவதற்குப் பதிலாக, குழப்பத்தை ஏற்படுத்துகிறது என்பது நம் கண்கூடு.

ஆண்டவரின் நீதிநெறிகள் பசும்பொன்னிலும் மேலாக விலை மிக்கவை. தேனிலும், தேனடையிலிருந்து சிந்தும் தெளிதேனிலும் இனிமையானவை (தி.பா. 19: 9, 10). இன்று பொன்னின் தரம் கூட்டிக் குறைக்கப்படுவதையும், செயற்கை மினுக்கால் பொன் தோற்றம் உருவாக்கப்படுவதையும் நாம் பார்க்கிறோம். அதுபோல, தேனில் சீனிப்பாகினைக் கலப்படம் செய்வதும் நாம் அறிந்ததே. அப்படியானால் திருமறைச் செய்தியின் தரம் குறையாமல், அதில் கலப்படம் சேராமல் பார்த்துக் கொள்வது கிறிஸ்தவரின் பொறுப்பாகும். கண்ணை மூடிக் கொண்டு

திருமறையைத் திறந்து, பின் கண்களைத் திறந்து முதல் படும் வசனத்தை அன்றைக்குரிய கடவுளின் செய்தியாக எடுத்துக்கொள்ளும் பழக்கமுடையோர் உளர். ஒருவர் ஒருமுறை அவ்வாறு முதலில் திறந்தபோது, முதலில் அவர் கண்ணில் பட்டது, "யூதாஸ் தூக்கு போட்டுக்கொண்டு செத்தான்" என்ற வரிகளாகும். இது சரியில்லை என்றுணர்ந்து, அவர் மறுபடியும் அவ்வாறு திறந்தபோது "நீரும் போய் அப்படியே செய்யும்" என்ற வரி கண்ணில் பட்டது. அவர் உடனே மறுபடியும் திருமறையை மூடித் திறந்தார் அதிர்ச்சியடையதக்க வகையில் "நீ செய்யவிருப்பதை விரைவில் செய்" என்ற வரி கண்ணில் பட்டது. அவர் அடைந்த குழப்பத்திற்கு அளவில்லை. இன்றைய திருமறைப் பாடங்களின் வழியாக எவ்வாறு உயிர்த்த ஆண்டவருடன் திருமறையை மீள்படித்தல் என்பதைப் பற்றி தியானிப்போம்.

1. திருமறையை மீள்படித்து ஆண்டவரின் வார்த்தைகளைக் கடைபிடித்தல் (2 குறி. 34: 31)

"யோசியா அரசர் தம் இடத்தில் நின்றுகொண்டு, ஆண்டவரின் கட்டளைகளையும் சான்றுகளையும் ஒழுங்குமுறைகளையும் முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் கடைப்பிடிப்பதாகவும், அந்நூலில் எழுதப்பட்டிருந்த உடன்படிக்கையின் சொற்களை நிறைவேற்றுவதாகவும் ஆண்டவர் திருமுன் உடன்படிக்கை செய்து கொண்டான்" (2 குறி. 34: 31).

யூதாவின் அரசரான யோசியா கி.மு. 633-இல் ஆட்சியைத் தொடங்குகிறார். ஒரு துடிப்புள்ள இளைஞர் இவர். அவர் ஆண்டவர் திருமுன் நேரியன செய்து, தம் மூதாதை தாவீதின் வழியிலேயே நின்று, நெறிமுறை வழுவாது ஒழுகினார் (34: 2). இவர் கானானிய தெய்வங்களை அகற்றினார். தமது ஆட்சியின் பனிரெண்டாம் ஆண்டில் தொழுகை மேடுகள், அசேரா கம்பங்கள் செதுக்கப்பட்ட சிலைகள், வார்க்கப்பட்ட சிலைகள் ஆகியவற்றை அகற்றி, யூதாவையும் எருசலேமையும் தூய்மையாக்கத் தொடங்கினார் (34: 3-7). குர்தா என்னும் இறைவாக்கினர் கடவுளின் வார்த்தையை அரசனிடத்தில் சொல்ல ஆட்களை அனுப்பினார் (34: 22, 23). ஆண்டவரின் திருவுளத்தை அரசனிடம் இவ்வாறு கூறினர். இந்த இடத்திற்கும் இதில் வாழ்வோருக்கும் எதிரான அவர் தம் வார்த்தைகளை நீ கேட்டு, மனம் நைந்து, கடவுளுக்கு முன் உன்னைத் தாழ்த்திக்கொண்டாய். ஆதலால் இவ்விடத்தின் மீதும், நான் வரச் செய்யவிருக்கும் அனைத்துத் தீமைகளையும் உன் கண்கள் காணாதபடி உன்னை உன் மூதாதையர் இருக்கும் இடத்தில் கொண்டு சேர்ப்பேன்; நீயும் மன அமைதியுடன் உன் கல்லறைக்குச் செல்வாய் என்றான். அவர்கள் திரும்பிச் சென்று அரசருக்கு இச்செய்தியைத் தெரிவித்தனர் (34: 27, 28). யூதா எருசலேம் வாழ் பெரியோர்கள் எல்லாரையும் அரசர் ஒன்று திரட்டி, அரசர் ஆண்டவரின் இல்லத்திற்குச் சென்றார். அரசரும் ஆண்டவரின் இல்லத்தில் கண்டெடுத்த உடன்படிக்கை நூல் முழுவதையும் எல்லோரும் கேடகும்படி வாசித்தார். அவர் எருசலேமிலும் பென்யமீனிலும் வாழ்ந்த மக்கள் அனைவரும் அவ்வாறே செய்யுமாறு பணித்தார். எருசலேம் வாழ்மக்கள் யாவரும் தங்கள் மூதாதையரின் கடவுளாம் இந்தக் கடவுளின்

உடன்படிக்கைப்படியே வாழ்ந்தனர். பின்னர் யோசியா இஸ்ரயேலரின் எல்லா அருவருப்புகளையும் அவர்களுக்குரிய நாடு முழுவதிலுமிருந்தும் அகற்றினார். இஸ்ரயேலில் இருந்தவர் அனைவரும் அவர்களின் கடவுளாகிய ஆண்டவரை மட்டுமே வழிபடச் செய்தார். அவரது வாழ்நாள் முழுவதும் அவர்கள் மூதாதையரின் கடவுளாம் ஆண்டவரை பின்பற்றி நடக்க தவறவேயில்லை (34: 29-33). இவ்வாறு அரசர் மட்டுமல், அந்நாட்டு மக்களும் திருமறையை மீள்படித்து ஆண்டவரின் வார்த்தைகளைக் கடைபிடித்து வாழ்ந்தனர். நாமும் கடைபிடிப்போம்.

2. திருமறையை மீள்படித்து ஆண்டவரின் வார்த்தைகளுக்கு விளக்கம் கொடுத்தல் (தி.ப. 8: 30, 31)

"பிலிப்பு ஓடிச்சென்று, எத்தியோப்பிய நிதிஅமைச்சர் எசாயாவின் இறைவாக்கு நூலை வாசிப்பதைக் கேட்டு, "நீர் வாசிப்பதன் பொருள் உமக்குத் தெரிகின்றதா?" என்று கேட்டார். அதற்கு அவர், "யாராவது விளக்கிக் காட்டாவிட்டால் எவ்வாறு என்னால் தெரிந்துகொள்ள முடியும்" என்று கூறித் தேரில் ஏறித் தன்னோடு அமருமாறு பிலிப்பை அழைத்தார்".

திருத்தூதர் பணிகள் 8: 26-40 வரையுள்ள பகுதியினுடைய மொழிநடை எலியாவின் வரலாற்றின் மொழிநடையை ஆங்காங்கு ஒத்துள்ளது (1 அர. 17: 2, 9; 2 அர. 1: 3, 15). காசா நகர் பெலிஸ்தியரது நகர்களில் ஒன்றாகும். மகா அலெக்சாண்டரால் பிடிக்கப்பட்டு, அழிக்கப்பட்டு கி.மு. 57-இல் மீண்டும் கட்டப்பட்டது. ஆசோன், கார்தோம் நகர்களுக்கிடையே உள்ள பகுதிதான் எத்தியோப்பியா. கி.மு. 100-லிருந்து இப்பகுதி நிலைபெற்று வருகிறது. கந்தகி என்பது பார்வோன் என்பதை போன்ற ஒரு பட்டப் பெயராகும். இப்பட்டம் எத்தியோப்பாவை அரசாட்சி செய்யும் பெண்மணிக்குக் கொடுக்கப்பட்டது. இந்த எத்தியோப்பியன் யூத சமயத்தில் வாஞ்சையுள்ள இறைப்பற்று மிக்கவராக இருந்தார். திருச்சபைத் தந்தையர்களில் ஒருவரான ஐரேனியஸ் என்பவர் இந்த எத்தியோப்பியன், எத்தியோப்பியாவில் அருள்தொண்டராய் பணியாற்றினார் எனக் குறிப்பிடுகிறார். இவர் எருசலேம் சென்று, கடவுளை வணங்கிவிட்டுத் திரும்பி சென்று கொண்டிருந்தார். அவர் தமது தேரில் அமர்ந்து எசாயாவின் இறைவாக்கு நூலை படித்துக்கொண்டிருந்தார். தூயாவியார் பிலிப்பிடம், நீ அந்தத் தேரை நெருங்கிச் சென்று அதனோடு கூடவே போ என்றார். அவர் வாசித்துக்கொண்டிருந்த மறைநூல் பகுதி: அடிப்பதற்கு இழுத்துச் செல்லப்பட்ட... (எசாயா 53: 7, 8). அவர் பிலிப்பிடம், இறைவாக்கினர் யாரைக் குறித்து இதை கூறுகிறார்? தம்மை குறித்தா? அல்லது மற்றொருவரைக் குறித்தா? தயவு செய்து கூறுவீரா? என்று கேட்டார். அப்போது பிலிப்பு, இந்த மறைநூல் பகுதியிலிருந்து தொடங்கி, இயேசுவைப் பற்றிய நற்செய்தியை அவருக்கு அறிவித்தார். இவ்வாறு பிலிப்பு உயிர்த்த ஆண்டவரின் திருமறையை மீள்பிடித்து எத்தியோப்பிய நிதிஅமைச்சருக்கு விளக்கம் கொடுத்தார். நாமும் திருமறையை மீள்பிடித்து வரலாற்று செய்திகளோடும், திருமறைப் பாடங்களின் பின்னணியங்களோடும் தெளிவாக மக்களுக்கு விளக்கிட நற்செய்தி சொல்லுவோம்

3. திருமறையை மீள்படித்து ஆண்டவரை அறிந்துகொள்ளுதல் (லூக். 24: 31)

"அப்போது எம்மாவு சீடர்களின் கண்கள் திறந்தன. அவர்களும் அவரை (இயேசுவை) அறிந்து அடையாளம் கண்டுகொண்டார்கள்."

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பிற்பாடு பலமுறை தம்முடைய சீடர்களுக்கும் தம்மைப் பின்பற்றி வந்த பெண்களுக்கும் காட்சி கொடுத்தார். ஆனால், அவர்களை அறிந்து கொள்ளவில்லை. அடையாளம் கண்டு கொள்ளவும் இல்லை. குறிப்பாக எம்மாவு சீடர்களோடு இயேசு நடந்து சென்றார். ஆனால், அவர் யார் என்று அறிந்து உணர முடியாதவாறு அவர்கள் கண்கள் மறைக்கப்பட்டிருந்தன. இயேசுவும் அவர்கள் தம்மை அறிந்துகொள்கிறார்களா? என்பதை கூட சோதித்துப் பார்த்தார் (24: 16-24). இயேசு அவர்களை நோக்கி, அறிவிலிகளே! இறைவாக்கினர்கள் உரைத்த எல்லாவற்றையும் நம்ப இயலாத மந்த உள்ளத்தினரே! மெசியா தாம் மாட்சியடைவதற்கு முன் இத்துன்பங்களைப் பட வேண்டுமல்லவா! என்றார். மேலும் மோசே முதல் இறைவாக்கினர் வரை அனைவரின் நூல்களிலும் தம்மைக் குறித்து எழுதப்பட்ட யாவற்றையும் அவர் அவர்களுக்கு விளக்கினார். அப்போது அவர்கள் கண்கள் திறந்து அவரை அறிந்து கொண்டார்கள். அப்போது அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி, வழியிலே அவர் நம்மோடு பேசிட, மறைநூலை விளக்கும்போது நம் உள்ளம் பற்றி எரியவில்லையா என்று பேசிக்கொண்டார்கள் (24: 25-32). தமிழ் திருமறையை மொழிப்பெயர்த்த சீகன் பால்க்கிடம் அவரது தாயார் உனக்கு ஒரு பொக்கிஷம் வைத்திருக்கிறேன் என்று திருமறையைக் கொடுத்தார்கள். அதனைத் திறந்து பார்த்த சீகன் பால்க் தாயாரின் கண்ணீரால் நனைக்கப்பட்டிருந்த அத்திருமறையைக் கண்டு அருட்பணிக்காக தன்னை அர்ப்பணித்தார்கள். நாம் திருமறையை எவ்விதமாய்ப் படிக்கிறோம்!

இவ்விதமாக உயிர்த்த ஆண்டவருடன் திருமறையை மீள்படித்து ஆண்டவரின் வார்த்தைகளைக் கடைபிடித்து ஆண்டவரின் வார்த்தைகளுக்கு விளக்கம் கொடுத்து உயிர்த்த ஆண்டவரை அறிந்து கொள்வோம்! இறையருள் நம்மோடிருப்பதாக!

ᏏᏂ	ஞா. 439	கீர். 218

அருள்திரு. T. ஸ்டாலின் வினு ஜோன்ஸ்

ஆயர், கூவரகுவிளை

இறைவேண்டல்

அன்பும், அருளும் நிறைந்த கடவுளே, உமது மகனாகிய இயேசு கிறிஸ்துவின் மரணத்திலும் உயிர்த்தெழுதலிலும் உமது ஆற்றலை வெளிப்படுத்தியதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். இருளின் சக்திகளை வெல்வதற்கு உலக மீட்பராக கல்வாரி சிலுவையில் தன் உயிரை அர்ப்பணிக்கும் ஆற்றல் அவருக்கு இருந்தது. வேதத்தில் உள்ள உம் வெளிப்பாடுகளுடன் எங்கள் வாழ்க்கையைப் புரிந்துகொள்ள எங்களுக்கு உதவி செய்யும். உம்மோடும் தூய ஆவியரோடும் வாழ்ந்து ஆட்சி செய்யும் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் வேண்டுகிறோம், ஆமென்.

உயிர்த்த ஆண்டவரால் அதிகாரப்படுத்தப்படல்

Commissioning by the Risen Lord

எரே. 9: 1 - 10 | 1 திமொ. 4: 6 - 16

தி.பா. 47 | யோவா. 20: 19 - 23

இயேசு மீண்டும் அவர்களை நோக்கி, "உங்களுக்கு அமைதி உரித்தாகுக! தந்தை என்னை அனுப்பியதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன்" என்றார் (யோவா. 20: 21).

தென்னாப்பிரிக்காவின் காந்தி என்று அழைக்கப்பட்ட நெல்சன்மண்டேலா இனவெறிக்கு எதிராகக் கருப்பினத்தவரின் உரிமைக்காகப் போராடியதால் 27 ஆண்டுகள் சிறைசாலையில் அடைக்கப்பட்டார், துன்புறுத்தப்பட்டார். 1990-இல் சிறையிலிருந்து விடுதலை பெற்று தென்னாப்பிரிக்காவின் அதிபராக மாறினார். நாட்டின் அதிபராக அதிகாரப்படுத்தப்பட்டபோது மக்களின் உரிமைக்கான சட்டங்கள் ஏற்படுத்தவும் அடக்குமுறையை வெல்லவும் அதிகாரப்படுத்தப்பட்டார். பழிவாங்கும் பண்பு இல்லாது எல்லா இனத்தவரையும் தனது அமைச்சரவையில் வைத்து அமைதியும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தி நோபல் பரிசும் பெற்றார். ஒடுக்கப்பட்ட, உரிமை மறுக்கப்பட்ட தனது சொந்த மண்ணில் அதிகாரப்படுத்தப்பட்டபோது அநேக மாற்றங்களை உருவாக்கினார்.

இயேசுவின் சீடர்கள் மற்றும் அவரைப் பின்தொடர்ந்தோர் வாழ்வில் இயேசுவின் உயிர்த்தெழுதல் ஏற்படுத்திய மாற்றங்கள் ஏராளம். மத்தேயு 10: 1-இன் படி சீடர்களுக்கு "தீய ஆவிகளை ஓட்டவும், நோய் நொடிகளைக் குணமாக்கவும் அவர்களுக்கு அதிகாரம் அளித்தார்" என்றாலும் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு இயேசுவைப் பார்த்ததும், கேட்டதும், அனுபவித்ததும் சீடர்கள் வாழ்வினில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது என்றால், அது உயிர்த்த இயேசுவிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட அதிகாரத்தினால் வந்தது. இந்த அதிகாரத்தைக் கொடுக்கின்ற நிகழ்வை யோவான் நற்செய்தியாளர் பதிவு செய்திருப்பதைதான் யோவான் 20: 21-இல் காணமுடிகின்றது. விண்ணுலகிலும் மண்ணுலகிலும் அனைத்து அதிகாரமும் எனக்கு அருளப்பட்டிருக்கிறது (மத்தேயு 28: 18) என்ற இயேசுநாதர் அதே அதிகாரத்தை சீஷர்களுக்கு கொடுத்தபோது ஏற்படுத்திய மாற்றங்கள் எவை?

1. பூட்டிய அறையிலிருந்தவர்களைப் பூலோகமெங்கும் அனுப்பியது (யோவா. 20: 19, 21)

யூதர்களுக்கு அஞ்சிய சீடர்கள் பூட்டிய அறைக்குள் அடைபட்டு இருக்கின்றார்கள். அவர்களைப் பார்த்து தந்தை என்னைஅனுப்பியதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன் என்று இயேசு கூறுகின்றார். தன் குமாரனை விண்ணுலகிலிருந்து மண்ணுலகிற்கு அனுப்பியது போல சீடர்களை அனைத்து படைப்புகளுக்கும் நற்செய்தி அறிவிக்க அனுப்புகிறார். சீடர்களை அழைத்ததும் பயிற்சி கொடுத்ததும் பூட்டிய அறையில் முடங்கியிருப்பதற்காக அல்ல மாறாக உலகெங்கும் செல்லும் அதிகாரத்தை, அதற்கான ஆற்றலைப் பெற்றுக்கொள்ளும்படி சீடர்கள் மேல் ஊதி, தூய ஆவியாரின் பெலன் கொடுக்கிறார். சீடர்களும் வெவ்வேறு நாடுகளுக்குச் சென்று இறையரசின் பணிவிடையை நிறைவேற்றினார்கள். அவ்வரிசையில் இயேசுவின் சீடராகிய தோமாவும் இந்தியா வந்தார் என்பதை வரலாறு தெளிவுபடுத்துகிறது.

நாம் வாழும் சூழல்கள் அச்சத்தையும், எதிர்கால வாழ்வின் நம்பிக்கையின்மையையும் ஏற்படுத்தியிருக்கலாம். இச்சூழலில் இயேசுநாதர் அதிகாரம் தருபவராக வெளியே வாருங்கள்; எங்கும் செல்லுங்கள் என்று விடுதலையைக் கூறுகின்றார். அநீதிகளாலும், அடக்குமுறைகளாலும், வேதனைப்படும் மக்கள் நிறைந்த உலகில் நான்கு சுவருக்குள் அடைபட்ட திருச்சபையாக அல்ல, ஆண்டவர் இயேசு தந்திருக்கும் அதிகாரத்தின்படி நீதிக்காக, அன்புக்காக, விடுதலைக்காக, உண்மைக்காக உழைக்கும் திருச்சபையாக இன்றும் அர்ப்பணிப்போம்.

2. புலம்பலோடிருந்தவர்களைப் பூரிப்பாக்கிய அதிகாரம் (யோவா. 20: 20)

"ஆண்டவரைக் கண்டதால் சீடர்கள் மகிழ்ச்சி கொண்டார்கள்".

நாங்கள் நம்பிய எங்கள் தலைவரைக் கொன்றுபோட்டார்கள். அழுகையும், புலம்பலும் சீடர்களை நிறைத்திருந்தது. இஸ்ரவேலை மீட்கப்போகிறவர் என்று நாங்கள் எதிர்பார்த்து இருந்தோம். ஆனால், தலைமை குருக்களும் ஆட்சியாளர்களும் அவருக்கு மரணதண்டனை விதித்துச் சிலுவையில் அறைந்தார்கள். கல்லறைக்குச் சென்று பார்த்தால் அவர் உடல் அங்கு இல்லை (லூக்கா 24: 19-24) என்று எம்மாவூர் சென்ற சீடர்கள் வேதனையின் சொற்களைக் கூறுகின்றனர். இயேசுவின் மரித்த உடலைக் காணாது புலம்பிக்கொண்டிருந்தவர்கள் நடுவிலே இயேசு வந்து நின்று என் கையையும் என் விலாவையும் பாருங்கள் என்று கூறித் தன்னை உயிர்த்தெழுந்தவராகக் காண்பிக்கும்போது பெரும் மகிழ்ச்சி வந்தது. நாம் வாழும் சமூகத்தில் பொருளாதாரத்தில் நலியுற்றோர், சாதீய வேறுபாடுகளால் பாதிக்கப்பட்டோர், இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்டோர், புலம்பெயர்ந்தோர், கைம்பெண்கள், வேலையிழந்தோர் என்று வேதனையின் மத்தியில் புலம்பலோடிருப்பவர் உள்ளங்களில் ஒளியேற்ற இறைவனால் அதிகாரப்படுத்தப்பட்டுள்ளோம்.

இஸ்ரவேல் மக்களின் கீழ்ப்படியாமையால் வந்த சிறையிருப்பு, தேச அழிவு. இவைகளைக் கண்டு என் தலை தண்ணீரும், என் கண் கண்ணீருமானால் நலமாயிருக்கும் என்று புலம்பும் எரேமியா இறைவாக்கினர் இறைப்பணி செய்ய அழைக்கப்பட்டவர். மகிழ்ச்சி உண்டு என்று சொல்லமுடியாதபோது புலம்புகின்றார். இன்று மானுடத்தின் மகிழ்ச்சிக்கான பணிக்காக அதிகாரப்படுத்தப்பட்டுள்ளோம் என்பதைப் புரிந்துகொள்வோம்.

3. பாழ்பட்ட வாழ்வைப் புதுப்பிக்கிற அதிகாரம் (யோவா. 20: 23)

"எவர்களுடைய பாவங்களை மன்னிப்பீர்களோ அவை மன்னிக்கப்படும்".

தவறுகளினால் தாழ்வைச் சந்தித்து அழிவின் விளிம்பில் நிற்கும் மானிடம் அழிந்துபோகாதபடிக் காப்பதற்கான பணியை இயேசு சீடர்களிடத்தில் பாவமன்னிப்பை கூறும்படி அதிகாரபடுத்துவதின் வாயிலாக கொடுக்கிறார். பாவமன்னிப்பு ஒரு மனிதனைப் புதுப்பிக்கிறது. மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மானிட மகனுக்கு அதிகாரம் உண்டு என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும் (மத். 5: 24). இந்த அதிகாரத்தைச் செயல்படுத்தும் பணிவிடையைச் சீடர்கள் கையில் ஒப்படைக்கின்றார். இந்தப் புதுப்பிக்கும் பணிவிடையை நிறைவேற்றும்படி திமொத்தேயுவும் தன்னை அர்ப்பணித்து கொண்டபோது பவுலார் சீர்கெட்டுபோன மனித மனங்களைப் புதுப்பிக்க ஆலோசனை கூறுகின்றார். அதற்காகவே, போதனை கொடு (1 திமொ. 4: 11), மாதிரியாயிரு (1 திமொ. 4: 12), ஜாக்கிரதையாயிரு (1 திமொ. 4: 13), நிலைத்திரு (1 திமொ. 4: 15) என்பன போன்ற ஆலோசனைகளைக் கொடுக்கிறார்.

இன்றும் போதைப் பொருட்களினால், தவறான பழக்கவழக்கத்தால், தவறான பண்புகளால் தனது உடலை, மனதை, ஆன்மாவைப் பாழ்படுத்தியிருக்கும் எல்லோரையும் புதுப்பித்து, நற்பண்பு மிக்கவராக மாற்றும் இறைப்பணியைச் செய்ய இறைமக்களாகிய நம்மை அதிகாரப்படுத்தியுள்ளார். ஆமென்.

௩	ஞா. 363	கீர். 407

அருள்திரு. A. ஏபல் வேதமணி
ஆயர், கன்னியாகுமரி

இறைவேண்டல்

எங்கள் விண்ணக தந்தையே, எங்களைப் படைத்தவரும் நிலைவாழ்வை கொடுப்பவருமாகிய உமக்கு நன்றி செலுத்துகிறோம். உமது மகனும் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாயிலாக மரணத்திற்குப் பின் ஒரு வாழ்க்கை உண்டு என்பதை எங்களுக்கு வெளிப்படுத்தியதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். உமது திருத்தூதர்களை வார்த்தையாலும், நம்பிக்கையாலும், ஆவியாலும் பலப்படுத்தியது போல், எங்களையும் பலப்படுத்துமாறு உம்மிடம் மன்றாடுகிறோம், இதன் மூலம் உமது உயிருள்ள வார்த்தையை நாங்கள் முழு படைப்புக்கும் அறிவிக்கிறோம். உம்மோடும் தூய ஆவியரோடும் இப்போதும் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்யும் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் வேண்டுகிறோம். ஆமென்.

18.05.2025 உயிர்ப்பு திருநாளுக்கு பின்வரும் நான்காம் ஞாயிறு

கிறிஸ்துவில் நம்பிக்கைக் கொள்ளல்: உண்மை

Believing in Christ : The Truth

வி.ப. 34: 1-9 எபே. 4: 7-16

தி.பா. 119: 89-96 யோவா. 17: 6-19

"உண்மையினால் அவர்களை உமக்கு அர்ப்பணமாக்கியருளும். உமது வார்த்தையே உண்மை" (யோவா. 17: 17).

ஒரு குரு மடத்தில் மூத்த குருவும் சில சீடர்களும் இணைந்து மிகவும் மகிழ்வுடன் வாழ்ந்து வந்தனர். இந்தக் குருவும் சீடர்களும் எந்தவிதப் பாகுபாடுமின்றிப் பிறருக்கு உதவி செய்வதும், மிகவும் உண்மையுடன் வாழ்வதும், கடவுளில் மிகவும் ஆழமான நம்பிக்கை கொண்டும் மிகவும் பக்தி நெறியில் வாழ்ந்து வந்தனர். நாட்கள் பல சென்றன. குரு வயது முதுமையால் மரணப் படுக்கையானார். சீடர்கள் குருவைப் பார்த்து அழுது, நீங்கள் எங்களை உண்மை வழியில், இறை நம்பிக்கையுடன் வாழ உற்சாகப்படுத்தி வருகிறீர்கள். நீங்கள் இல்லாத வாழ்க்கை எங்களுக்கு எப்படி அமையும் என்பதைகூட எங்களால் சிந்தித்துப் பார்க்க முடியவில்லை என்று கண்ணீர் மல்கக் கூறினர். உடனே குரு தனது சீடர்களைத் தனது மார்போடு கட்டியணைத்துக்கொண்டு பயப்பட வேண்டாம். கடவுள் எப்போதும் உங்களோடு உள்ளார். நீங்கள் எப்போதும் உங்களது வாழ்க்கையில் மிகவும் உண்மையுடன் வாழுங்கள்; உயிருடன் எழுந்த கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளுங்கள் என்று ஆலோசனை கூறி அனுப்பிவிட்டார். ஆம், இன்றைய சிந்தனையின் கருப்பொருள்: "கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளல் உண்மை".

பழைய ஏற்பாட்டில் உண்மை என்ற சொல்லிற்கு எபிரேய வார்த்தையான "எமெத்" emeth என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. இதன் பொருள் என்னவெனில், மாறாத, நிலையான, நம்பிக்கைக்குரிய, உறுதியான தன்மை என பொருள்படுத்தப்படுகிறது. அதனால்தான் ஒரு பொருளின் அல்லது ஒரு நிகழ்வின் நம்பத்தகுந்த தன்மையை குறிக்க (யோசு. 2: 12, எரே. 2: 21, நீதி. 11: 11). ஏமெத் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.மேலும் கேள்விப்பட்ட செய்தி உண்மையானது என்பதைக் காட்டவோ (1 அர. 10: 6, இ.ச. 13: 15, 17: 4), ஒரு நபரின் நம்பிக்கைக்குரிய தன்மையில் அவர் பொறுப்புகளை ஏற்க தகுதியானவர் என்பதை குறிக்கவோ இந்த எமெத் சொல் பயன்படுத்தப்படுகின்றது. இன்னும் நீதித்தீர்ப்புகள் நேர்மையானவை (செக். 7: 9, எசே. 18: 8) என்பதைக் காட்டவும், உண்மையாய் இருத்தல் உயரிய பண்பு (நீதி. 23: 23), மனித வாழ்விற்கு அடிப்படை (நீதி. 3: 3), உண்மையின் ஆதாரம் கடவுள் (எரே. 4: 5).

புதிய ஏற்பாட்டில் உண்மை என்ற சொல்லைக் குறிக்க அலேத்தேஸ் / அலேத்தியா என்ற கிரேக்க சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. கிரேக்க மொழி வழக்கில் உண்மை என்பது அறிவு சார்ந்த ஒன்று. நம்பிக்கையைக் குறித்து 'Martin Luther' கூறும் போது 'Faith is a living one and Makes as during confidence in Gods grace'. "நம்பிக்கை என்பது ஒரு உயிரைக் கொடுப்பது மற்றும் கடவுளின் கிருபையில் தைரியமான நம்பிக்கையை உருவாக்குகிறது" என்கிறார். 'Eleanor Roosevelt' கூறும்போது 'If you lose Faith you lose all'. "நீங்கள் நம்பிக்கையை இழந்தால் நீங்கள் அனைத்தையும் இழக்கிறீர்கள்" என்கிறார். உண்மை நமக்குக் கற்று தருபவை எவை?

1. பயிற்றுவிக்கிறது : (யோவா. 17: 6)

நீர் இவ்வுலகிலிருந்து தேர்ந்தெடுத்து என்னிடம் ஒப்படைத்த மக்களுக்கு நான் உமது பெயரை வெளிப்படுத்தினேன். உமக்கு உரியவர்களாய் இருந்த அவர்களை நீர் என்னிடம் ஒப்படைத்தீர். அவர்களும் உம் வார்த்தைகளைக் கடைப்பிடித்தார்கள்.

'Catherin Pulsifer' கூறுகையில் 'Faith is unseen, but faith is strength when we feel we have nothing. faith is become new life when all seems lost'. "நம்பிக்கை கண்ணுக்கு தெரியாதது. ஆனால், நம்மிடத்தில் எதுவும் இல்லையென்று உணரும்போது நம்பிக்கையே பலம் அளிக்கிறது. எல்லாவற்றையும் இழந்துவிட்டதாகத் தோன்றுகிறபோது நம்பிக்கை புதிய வாழ்க்கையாக மாறும்".

உண்மை கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளப் பயிற்றுவிக்கிறது. கடவுளால் தெரிவு செய்யப்பட்ட மக்களாய் என்னிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களுக்கு நான் உமது பெயரை வெளிப்படுத்தியதாக ஆண்டவர் குறிப்பிட்டார். இது கிறிஸ்துவில் அவர்களுக்கு மூலமாய் உருவாகியுள்ள நம்பிக்கை மூலமாய் கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றவும், அதற்கு ஏற்றப்படி தங்களை ஒப்படைத்து வாழவும், அவர்களைப் பயிற்றுவித்துள்ளது. கிறிஸ்துவில் ஊன்றப்பட்ட நம்பிக்கையில் மிகவும் ஆழப்படவும், இயேசு கிறிஸ்துவில் இருந்த மனநிலையைப் பெற்றுக்கொள்ளவும் துரிதப்படுத்தியது. மேலும் இந்தத் திருமொழியில் இயேசு தம் தந்தையின் பெயரைச் சீடர்களுக்கு அறிவிக்கிறார். தந்தையின் பெயரை அறிவிப்பதின் மூலமாகத் தந்தையால் தாம் இந்த உலகிற்கு வந்ததன் நோக்கத்தையும், தமது திருப்பணி குறித்த திட்டத்தையும் கற்பித்துத் தமது திருப்பணியை அந்தச் சீடர்கள் தொடர்பணியில் முன் எடுத்துச் செல்லவேண்டும் என்பதையும் பயிற்றுவிக்கிறார்.

யோவான் 17: 6 - நீர் என்னிடம் ஒப்படைத்த மக்களுக்கு நான் உமது பெயரை வெளிப்படுத்தினேன். தந்தையின் பெயரை அறிவித்ததின் மூலம் அவரில் நம்பிக்கை ஏற்பட்டுத் தந்தையை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவருக்கும் கடவுளின் பிள்ளைகள் ஆகும் உரிமையும் கிடைக்கச் செய்தார் (யோவா. 1: 12). தந்தையின் பெயரைத் தம் மக்களுக்கு அறிவிப்பது மெசியாவின் பணி. இங்கே தம் பணியை நிறைவேற்றித் தாமே மெசியா என்பதை புரியவைத்து

மெசியாவின் திட்டம். இவ்வுலகில் நிறைவேற்றிட சீடர்களைப் பயிற்றுவிக்கிறார். மேலும், இயேசு கடவுளின் பெயரை அறிவித்துக், கடவுளின் உண்மை மக்களுக்கு அறிவித்து அவர் தூய்மை மிக்கவராய் இருப்பினும் உண்மையில் அவர் நம்மை அன்பு செய்கிறார் என்பதைப் பயிற்றுவிக்கிறார். உண்மையாய்த் தந்தையை அழைக்க வேண்டும் என்னும் மாபெரும் பயிற்சியை இங்கே இயேசு வழங்குகிறார். இன்றைய திருச்சபைக்கு இப்பயிற்றுவிப்பு தேவையே.

2. பக்குவப்படுத்துகிறது : (யோவா. 17: 7, 8)

நீர் எனக்குத் தந்தவை அனைத்தும் உம்மிடமிருந்தே வந்தவை என்பது இப்போது அவர்களுக்குத் தெரியும்.

'Mahalia Jakso' கூறுவது 'Faith and Prayer are the nutritions of life, Man cannot live in health without them'. "நம்பிக்கையும், இறைவேண்டலும் வாழ்க்கையின் ஊட்டச்சத்து, அவையில்லாமல் மானிடர் ஆரோக்கியமாக வாழ முடியாது".

தந்தையின் பெயரை அறிந்துகொண்ட சீடர்கள், தற்போது தம்மைப்பற்றியும் மிகவும் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளதாக இயேசு கூறுகிறார். தந்தையால் இந்த உலகிற்கு அனுப்பி வைக்கப்பட்ட வாழ்வு வழங்கும் மெசியா என்பதை மிகவும் தெளிவாக அறிந்துகொண்டனர். இயேசு பேசுபவை அனைத்தும் தந்தையிடம் பெற்றவை. உண்மைக்கு நேராய் வழிநடத்துபவை. யோவான் 14: 6-இல் வழியும் உண்மையும் வாழ்வும் நானே. என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை என்கிறார். உண்மைக்கு நேராய் வழிநடத்துபவைதான் நம்பிக்கையின் பயணத்தை இவ்வுலகில் உருவாக்கிய சீடர்களைப் பக்குவப்படுத்துகிறது. தந்தையிடமிருந்து வந்தவைகளை இயேசு போதிக்கிறார் என்பதை பயிற்சியால் உணர்ந்து தகுந்த பக்குவத்துடன் ஒத்துக்கொண்டு ஏற்றுக்கொண்டுள்ளனர்.

யோவான் 17: 8-இல் "நீரே என்னை அனுப்பினீர் என்பதையும் நம்பினார்கள்." என்று ஆண்டவர் கூறுவதால், இப்போது சீடர்களில் உருபெற்ற ஆழமான நம்பிக்கை அவர்களில் ஏற்பட்ட மாற்றத்தையும் திருப்பணியைத் தொடர வேணடும் என்ற பக்குவத்தையும் தந்தது மட்டுமல்லாமல் கிறிஸ்துவில் மிகவும் ஆழமான நம்பிக்கையை ஏற்படுத்தியது என்பதையும், மேலும், தமது உயிர்த்தெழுதலுக்குப்பின் தமது பணியைத் தொடர்ந்து ஆற்றப்போகும் தூய ஆவியாரின் உந்துதலால் சீடர்களின் நம்பிக்கை மேலும் ஆழப்படும், துணிச்சலுடன் திருப்பணி செய்யப் பக்குவப்படுத்தும் என்பதை இயேசு குறிப்பிடுகிறார். சீடர்கள் விரைவில் பெறப்போகும் ஆழ்ந்த நம்பிக்கையை ஏற்கெனவே பெற்றுள்ளதாக இயேசு கூறி, கிறிஸ்துவில் கொண்ட நம்பிக்கை அவர்களைப் பக்குவப்படுத்தியது என்பதைக் கூறுகிறார். இன்றைய திருச்சபை கிறிஸ்துவில் கொண்ட நம்பிக்கையில் எப்படிப் பக்குவம் பெற்றுள்ளது?

3. பகிரச் செய்கிறது : (யோவா. 17: 18)

நீர் என்னை உலகிற்கு அனுப்பினது போல, நானும் அவர்களை உலகிற்கு அனுப்புகிறேன்.

‘Elder Bryan Matheson கூறுவது When you have faith in God You don’t have to Worry about the future you know is all in God’s hands. You go and do your best’. “கடவுள் நம்பிக்கையிருந்தால் எதிர்காலத்தை பற்றி கவலைப்பட வேண்டியது இல்லை. எல்லாம் கடவுளின் கைகளில் உள்ளது என்பது உங்களுக்குத் தெரியும். நீங்கள் சென்று உங்களால் முடிந்ததை செய்கிறீர்” என்றார்.

அனுப்புதல் என்றால் ‘To send’ என்னும் கிரேக்க சொல்லில் உருபெறுகிறது. ‘Apostello’ அர்ப்பணிப்பின் மூலமாக மட்டுமே அனுப்புதல் நிகழுகிறது. யோவா. 17: 17-இல் உடனே உண்மையினால் அவர்களை உமக்கு அர்ப்பணமாக்கியருளும். உமது வார்த்தையே உண்மை. உண்மை மிகுந்த ஆற்றல் உள்ள வார்த்தைகள் அர்ப்பணிப்புள்ள நம்பிக்கையின் பயணத்திற்கு வடிகால் ஆகின்றன. “அர்ப்பணம் ஆக்குதல்” என்ற சொல்லிற்கான கிரேக்க சொல் “அகியாசெயின்”. இதன் பொருள் பிரித்து வைத்தல். ஒன்றை ஒரு குறிப்பிட்ட நோக்கத்துடன் கூடிய பணிக்காகப் பிரித்து வைப்பதை அர்ப்பணம் ஆக்குதல் என்ற சொல் விளக்குகிறது.

தந்தையால் உலகிற்கு அனுப்பப்பட்டு திருப்பணி செய்கிற இயேசு தம்மைப்போலத் தமது சீடர்களையும் தமது வார்த்தைகளின் உண்மையில் அர்ப்பணம் செய்து ஒரு பெரும் நம்பிக்கையுள்ள சமூகத்தை இவ்வுலகில் கட்டி எழுப்பும்படி அனுப்பி விடுகிறார். சீடர்களை அர்ப்பணம் செய்து உலகிற்கு அனுப்புவதற்கு முன்பு முதலாவது தன்னை அவர் அர்ப்பணமாக்குகிறார். இங்கே தந்தை இந்த உலகிற்கு தன்னை எந்தப் பணிக்காக அனுப்பினாரோ, அந்தப் பணிக்குத் தன்னை அர்ப்பணித்ததனைப்போன்று சீடர்களையும் அர்ப்பணிக்கச் செய்து அனுப்புகிறார்.

இயேசு தனது சீடர்களையும் தனது மாதிரியைப் பின்பற்றி உலகிற்கு நற்செய்தியைப் பகிர்ந்திடப் பணிக்கிறார். தீமை மிகுந்த உலகில் உண்மை நிறைந்த வார்த்தைகளால் நம்பிக்கையின் சமூகம் கட்டப்படவும் உலகின் கடை எல்லை வரை நற்செய்தியைப் பறைசாற்றவும், கிறிஸ்துவின் மாதிரியை ஏற்றிடவும் முன்வருவோம், ஆமென்.

அருள்திரு. S.S. ஆல்பின் டேவிட் ராஜ்

ஆயர், மஞ்சாலுமூடு

ப	ஞா. 235	கீர். 287

இறைவேண்டல்

உண்மை மற்றும் வாழ்வின் கடவுளே, உமது குமாரனாகிய இயேசுவில், விசுவாசத்தைத் துவக்கி, இந்த உலகத்திற்கு அனுப்பியதற்காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். உண்மையைக் குறித்த முழுமையான புரிதலை நாங்கள் பெறுவதற்காக, உம்மிடமும், அவர் மீதும், நம்பிக்கை கொள்ளும்படி கிறிஸ்து எங்களுக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார். மாயையின் பொறிகளிலிருந்து நாங்கள் தப்பிக்க கிறிஸ்துவை நம்புவதற்கும் கிறிஸ்துவின் உண்மையை எங்கள் வாழ்க்கையில் பெறுவதற்கும் எங்களுக்கு நல்லதோர் இதயத்தைத் தாரும். உம்மோடும் தூய ஆவியரோடும் இப்போதும் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்யும் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் வேண்டுகிறோம், ஆமென்.

கிறிஸ்துவின் சிந்தையோடு அருட்பணி

Mission with Christ's Spirit

2 அர. : 9-16 தி.ப. 7: 54-60

தி.பா. 105: 1-11 மத். 28: 16-20

"நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள்" (மத். 28: 20).

சுவிசேஷகர் பில்லிகிரகாம் அவர்கள் சுவிசேஷப் பிரபல்ய பிரசங்க ஊழியத்திற்காக லண்டன் வர ஆயத்தமானபோது, சுவிசேஷ எதிர்ப்பாளர்கள், செய்தியாளர்கள் (media) மில்லிகிரகாம் லண்டன் வரக்கூடாது; பிரசங்கிக்கக் கூடாது என எதிர்த்தனர், பரிகாசம் செய்தனர். Gospel Circus காட்ட வருகிறாரா? USA-ஐ மாற்றிவிட்டாரா? லண்டனை மாற்ற வருகிறாராம் என்றனர். பரிகாசங்கள் மத்தியில் பரிசுத்தரின் பாதம் அமர்ந்து இறைவேண்டல் செய்து, கப்பல் பயணம் மேற்கொண்டு லண்டன் வந்தடைந்தார். கப்பலில் இருந்து இறங்கியபோது "அல்லேலூயா" பாடல் பாடி ஆர்ப்பரித்து வரவேற்றுப் பில்லிகிரகாம் அவர்களை அழைத்துச் சென்றனர்.

அருட்பணியானது துன்பம், எதிர்ப்புகள், பரிகாசம் வழியாகத்தான் ஊடுருவி, பரவி, உயர்ந்த கோபுரங்கள் பரிணமித்து நிற்கிறது. கிறிஸ்துவின் அருட்பணிச் சிந்தையானது, சமுதாய மாற்றத்தை ஏற்படுத்தியது. அசுத்தமானவர்கள் என்ற சமுதாயக் கட்டமைப்புகள் உடைத்தெறிந்து, தொழுநோயாளிகளைத் தொட்டது முதல் சமாரியர் ஏற்றுக்கொள்ளாதபோது (லூக்கா 9: 51-56) சமாரியர்களை அழிக்க விரும்பி, சீஷர்களை அதட்டி அவர்களைப் புத்தாக்கம் செய்கிறார். நாம் அழிப்பவர்கள் அல்ல; விடுதலை வாழ்வை வழங்குபவர்கள் என்ற செய்திதான் கிறிஸ்துவின் சிந்தை முன்னெடுக்கப்படும் அருட்பணியின் அச்சாரம்.

1. உயிர்த்தெழுதலில் உருவான அருட்பணி : (மத். 28: 16)

விதைகள் மண்ணில் விதைக்கப்படும்போது மண்ணுக்குள் மரணிக்காமல், நிலத்திற்குள் அடையும் நெருக்கத்தாலும், உடைதலாலும் முளைவிட்டு எழும்பும்போது புது வாழ்வு பிரதிபலிக்கிறது. அருள்நாதர் இயேசு கல்லறையோடு காணாமல் போய்விடுவார் என்ற எண்ணங்களினால் கல்லறைக்கு முத்திரைபோட்டுக் காவல் காத்தனர். ஆனால், இயேசு தாம் முன்னறிவித்தபடியே, தீர்க்கதரிசங்கள் நிறைவேறும்படியாய்த் தீயோர்களின்

எண்ணங்களை உடைத்தெறிந்து உயிர்த்தெழுந்தார். உயிர்த்தெழுந்த செய்தி பரவி, வியாபித்துவிடாதபடி கையூட்டு கொடுத்து மறுப்புகளைப் (மத். 8: 15) பரப்பிட முயற்சித்ததும் தோற்றுப்போனது.

உயிர்த்தெழுதலில் இன்றியமையாத நோக்கமே அருள்நாதருக்குப் புகழாரம் செலுத்துவது அல்ல; மாறாக, புறந்தள்ளப்பட்ட மக்களைத் தேடிச் செல்வதுவேயாகும். உயிர்த்தெழுந்த செய்தியை கையூட்டு கொடுத்து (மத். 28: 12, 13) செயற்கையால், பொய்யுரைகளால், ஆளும் வர்க்கத்தினரால் உருவாக்கப்பட்ட தடைகளைத் தாண்டி நற்செய்தியாய் பிரதிபலித்தது உயிர்த்தெழுதல். அருட்பணியானது அருள்நாதர் இயேசுவின் உயிர்த்தெழுதலோடு தொடர்புடையது. அதாவது, இயேசு உயிர்த்தெழுந்தார் என்ற செய்தி சீஷர்களுக்குச் சொல்லப்பட வேணடும். அதன் நீட்சியாக, சீஷர்கள் இயேசு குறிப்பிட்ட கலிலேய மலைக்குச் செல்லவேண்டும். இவ்வண்ணமாக கிறிஸ்துவைச் சொல்லுகின்ற அருட்பணியும், கிறிஸ்துவுக்காய் செல்லுகின்ற அருட்பணியும் உயிர்த்தெழுதலில் உருவானது. எனவே, கிறிஸ்துவின் சிந்தையோடு அருட்பணியை அணுகவேண்டும். நாம் நம்மில் நடைபெறும் “உயிர்த்தெழுதல்” எனும் வாழ்வியல் இறையியலை, நாம் பாவத்துக்கு மரித்து, நீதிக்குப் பிழைத்திருப்பது உண்மையானால் அருட்பணியை, இந்த அனுபவத்தை அறிவிப்பதுதான் கிறிஸ்துவின் சிந்தையைப் பிரதிபலிக்கும் அருட்பணி.

2. உலகையே உயிரோட்டமாக்குவது அருட்பணி : (மத். 28: 19)

அருட்பணி ஆத்துமாக்களைக் குறித்த கரிசனையும், தேடலும் நிறைந்த பணி, உயிர்த்தெழுந்த ஆண்டவர் தரும் கட்டளை. உலகையே உயிரோட்டமாக்குவதுதான் (மாற்கு 16: 15) சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை அறிவியுங்கள், புறப்படுங்கள். இனி காலம் செல்லாது. அருட்பணி அவசரமானது; மனித சமூகத்திற்கு இன்றியமையாதது. மனித சமூகத்துக்குத் தொடர்புடைய இயற்கையோடும் ஒன்றித்தது அருட்பணி என்ற புரிதல் மிகவும் இன்றிமையாதது (உரோமர் 8: 20). சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு (ரோமர் 8: 22) சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவ வேதனைப்படுகிறது.

கிறிஸ்தவ இறையியல் சூழ்நிலைக்கேற்றவாறு (Contextual) வளர்ந்து வந்துள்ளது. இறைவனின் படைப்பையும், விடுதலையையும் அடிப்படையாக கொண்டு வளர்ந்த யூத கிறிஸ்தவ இறையியல்கள், ஒரு காலகட்டத்திற்குப் பின்னர் படைப்பைப் பேணுதல் குறித்த கரிசனைகளை மறந்துவிட்டன. இயற்கையைச் சுரண்டினர். இயற்கை தன் இயல்புத் தன்மையை இழக்க நேரிட்டது. உலக வெப்பமயமாதல் அதின் பின்விளைவுகள் மானிடத்தையே அழித்துவிடும். இந்த விழிப்புணர்வோடு உலகையே உயிரோட்டமாக்குவது அருட்பணி.

உலகையே உயிரோட்டமாக்குவதற்கு சீஷர்கள் தேவை. அருள்நாதர் அழுத்தமாகச் சொல்வதுச் சீடராகி சீடராக்குங்கள் எனும் அட்பணி. (Disciples born out of discipline) ஒழுக்கத்திலிருந்து ஒப்படைப்பாளர்கள் பிறக்கிறார்கள். அவர்களே சீஷர்கள் எனப்படுவர். திருமுழுக்கு புதுப்படைப்பின் அடையாளமாகத் தரப்படுவதுபோல, சர்வ சிருஷ்டிகளையும் புதுப்படைப்பாக்கிப் பேணுதலே உலகை உயிரோட்டமாக்கும். இந்த வலியுறுத்துதலே கிறிஸ்துவின் சிந்தையோடுள்ள அருட்பணி.

3. உபதேசத்தால் மாற்றுருவாக்கம் தரும் அருட்பணி : (மத். 28: 20)

அருட்பணி அறிவிப்பது மட்டுமின்றி அருட்பணியாய் வாழ்வது இன்றியமையாதது. அருள்நாதர் கற்றுத்தந்தவைகளை உபதேசங்களாகப் பரப்புரை செய்யுங்கள் என்பது பிறருக்கானது மட்டுமல்ல, நமக்கானதும் என்ற புரிதல் இன்றியமையாதது. அக மாற்றமும், சமூக கட்டமைப்புகள் சார்ந்த புறமாற்றமும் இணைந்தே செல்லவேண்டும். அப்படிப்பட்ட மாற்றுருவாக்கம்தான் தனி மனிதரிலும் சமுதாயத்திலும் நலமான, ஒருங்கிணைந்த ஒரு மனமாற்றத்தை ஏற்படுத்த முடியும், இதுதான் ஆற்றல்மிகு அருள்நாதர் நமக்குக் கற்றுத்தந்த உபதேசங்கள் ஆகும்.

கிறிஸ்துவின் மாற்றுருவாக்கச் சிந்தனைகளை நாம் உள்வாங்கிக் கொண்டு, பின்னர் உலகிற்கு உரைக்க வேண்டும். நம் வாழ்விலும், பிறர் வாழ்விலும் மாற்றத்தை ஏற்படுத்தும் திறன் ஒவ்வொரு மனிதருக்குள்ளும் இருந்தாலும், மண்ணில் பிறந்த அனைவரும் மனிதராக மாறுவதில்லை. ஏழைகளின், துயருறுவோரின் துன்பம் கண்டு ஒரு வழியில் ஈரம் கசிகின்ற அளவிற்கு எவரின் இதயம் பக்குவப்பட்டுள்ளதோ அவர்கள்தான் மனிதர்கள் என்று அழைக்கத் தகுதி பெற்றவர்கள் (மத். 25: 40). எனவே மனிதராக மாறுவதென்பது ஒரு தொடர் செயல்பாடு. வாழ்வில் இது ஒரு தொடர் பயணம் தன்னையே மனிதராக மாற்றிக்கொள்ளும் இந்தப் பயணத்தில் சோர்வின்றித் தன்னை ஈடுபடுத்தி கொள்பவர்கள்தான் மாமனிதர்கள் என்று வரலாறு சொல்கிறது. இந்த மாற்றுருவாக்கம் அருள்நாதர் இயேசுவின் இறுதிக் கட்டளையிலிருந்து நமக்கு போதிக்கப்படுகிறது.

எலியாவின் உபதேசத்தால் எலிசா மாற்றுருவாக்கம் பெற்று (2 இரா. 2: 9) வல்லமையைப் பெற்றுக்கொண்டார். கிறஸ்துவின் சிந்தையோடு அருட்பணியாளரால் ஸ்தேவான் வாழ்ந்து, முதல் இரத்தசாட்சியாய்க் கல்லெறியப்பட்டபோது இயேசுவில் கற்ற உபதேசம் “இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும்” (பிதாவே இவர்களுக்கு மன்னியும்) என்ற உபதேச பிரதிபலிப்பால் ஆன்மிகத்திலும், சமூகத்திலும் தொடர் மாற்றுருவாக்கம் ஏற்பட்டது. இதுதான் கிறிஸ்துவின் சிந்தையில் அருட்பணி.

அழைப்பு :

கிறிஸ்துவின் சிந்தையோடு அருட்பணியை முன்னெடுத்த மகாகனம் பேராயர் I.R.H. ஞானதாசன் அவர்கள் அருட்பணியைச் செயலாக்கம் செய்து

வெற்றி கண்டவர். சிறுவயதிலேயே குழந்தைகளுக்கு மிஷனெரி தாகத்தை ஏற்படுத்தியவர். சிறுவர்களை ஊழியத்தில் பயன்படுத்திய போங்கு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும். குறிப்பாக பிரைமறி ஓய்வுநாள் பள்ளி பிள்ளைகளை "மிஷனெரி டேமியன் வீட்டினர்" என்று பெயரிட்டார். இவர்கள் தொழுநோயாளிகளைக் காணிக்கைகளால் தாங்கினர். ஜூனியர் மாணவர்கள் "மிஷனெரி சந்தியா வீட்டினர்" என பெயரிட்டு பாப்புவா தீவின் ஊழியத்தை இவர்கள் வழியாக உற்சாகப்படுத்தினார். சீனியர் மாணவர்கள் "லீச் வீட்டினர்" என்று அழைக்கப்பட்டு நெய்யூர் மிஷன் பணியை வளரச் செய்தார், பிள்ளைகளை நடக்க வேண்டிய வழியில் நடத்திக் காட்டினார்.

கிறிஸ்துவின் சிந்தையோடு அருட்பணி என்பது வெறும் வார்த்தை ஜாலம் அல்ல; வாழ்வியல் சார்ந்த அருட்பணி. இது உயிர்த்தெழுதலில் உருவான அருட்பணி (மத். 28: 16). கலிலேயாவுக்குப் போகும்படி சொல்லும் அருட்பணியும், செல்லுகின்ற அருட்பணியாய் மலர்ந்தது. உலகையே உயிரோட்டமாக்குவது அருட்பணி (மத். 28: 19). சீடராகி சீடராக்கினால் உலகையே உயிரோட்டமாக்கி இறையன்பை பகிரலாம். உபதேசத்தால் மாற்றுருவாக்கம் தரும் அருட்பணி (மத். 28: 20). அருட்பணி அறிவிப்பது மட்டுமின்றி அருட்பணியாய் வாழ்வதுதான் உபதேசத்தால் பெற்ற மாற்றுருவாக்கம் தரும் அருட்பணி; கிறிஸ்துவின் சிந்தையோடு அருட்பணியாற்ற ஆயத்தமா? அர்ப்பணிப்புடன் செயல்படுவோம், ஆமென்.

அருள்திரு. முனைவர். R. பிரின்ஸ் வேதமாணிக்கம்

சேகர ஆயர், கடமலைக்குன்று

ப	ஞா. 361	கீர். 409

இறைவேண்டல்

அருள் நிறைந்த கடவுளே, மக்களை மீட்டு, உலகை உமது இறையரசுக்குரியதாக மாற்ற உலகிற்கு வந்த உமது மகன் இயேசு கிறிஸ்துவுக்காக உமக்கு நன்றியையும் துதியையும் செலுத்துகிறோம். எங்களுடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இந்தப் பணியை அவருடைய ஆவியோடும் துணிவோடும் நிறைவேற்றும் ஆற்றலை எங்களுக்குத் தந்தருளும். உம்மோடும் தூய ஆவியரோடும் இப்போதும் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்யும் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் வேண்டுகிறோம். ஆமென்.

ஞானமருளும் ஆண்டவர்

நீதி. 8: 1-13

"பவளத்திலும் ஞானமே சிறந்தது; நீங்கள் விரும்புவது எதுவும் அதற்கு நிகராகாது" (நீதி. 8: 11).

கடவுளின் பேரருளால் ஜீன் மாதத்திற்குள் கடந்து வர ஆண்டவர் அருள்புரிந்தார். இம்மாதம் குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடங்கள் மறுபடியும் திறக்கப்பட்டு புதிய கல்வியாண்டுக்குள் அவர்கள் செல்கின்றார்கள். மேலும் ஒவ்வொருவரும் புதிய எதிர்நோக்கோடு புதிய மாதத்திற்குள்ளாய்ச் செல்கின்றனர். ஞானத்துடன் நடந்து கொள்ளவும், கடவுள் தரும் நன்மைகளைப் பெற்றுக் கொள்ளவும் இப்புதிய மாதம் ஆசி நிறைந்தாய் அமைவதாக.

பவளம் என்பது விலை உயர்ந்த பொருளாகும்.அதனை மதிப்புமிக்க அணிகலன்களாகப் பயன்படுத்துகிறோம். இது இயற்கையாக நீரில் வாழும் முசெல் வகையைச் சார்ந்த முத்துச் சிப்பி போன்ற சில உயிரினங்களிலிருந்து நமக்கு கிடைக்கிறது. சிப்பியினுள் வெளியிலிருந்து செல்லும் நுண்துகள்களினால் ஏற்படும் வலியைக் குறைக்க இவைகளிலிருந்து ஒரு வகையான திரவம் சுரந்து அப்பொருள்களின் மேல் பூசப்படுகிறது. அது நாளடைவில் படிகமாக மாறுகிறது இது அரகோலைமை என்னும் ஒரு வகையான சுண்ணாம்பு படிகங்களால் ஆனது. இவ்வகையான செயலின் மூலம் கிடைப்பதுவே விலையுயர்ந்த முத்து. இவ்வாறு கிடைக்கும் முத்தினைத் தேடிக் கண்டு பிடிப்பது என்பது மிகவும் கடினமானப் பணியாகும். இவ்வாறு பெற்றுக் கொள்ளப்படும் முத்தினை உடலில் அணிந்து கொள்ளுதல் உடலின் வெப்பத்தைக் குறைக்கும் என்று கருதுகிறார்கள்.

இவ்வளவு விலை மதிப்புமிக்க பவளத்தை விட ஞானம் மிகவும் சிறப்பானது. இந்த ஞானம் கடவுளிமிருந்து நமக்கு அவரது அருளினால் இலவசமாக வருகிறது. இது வாழ்வியல் தத்துவங்களையும் உயர்ந்த மனிதராக வாழவேண்டிய பண்புகளையும் நமக்குக் கற்றுத் தருகிறது. எனவேதான் அரசர் சாலமோன் ஞானமுள்ள உள்ளத்தைக் கடவுளிடம் கேட்டார் (1 அர. 3: 9). கடவுளிடமிருந்து வருகிற ஞானம் ஞாலத்தில் நம்மைப் பெரியவர்களாக மாற்றும். இறை ஞானத்தைப் பெற்றுக் கொண்டோர் எவ்விதமாய் இருப்பர்?

1. நேர்மையாளராய் இருப்பர் (நீதி. 8 : 8)

ஆண்டவரின் வாக்குகள் நேர்மையானவை. அவைகளில், உருட்டும் புரட்டும் இல்லை. ஆண்டவரால் அருளப்படும் ஞானத்தைப் பெற்றுக் கொண்டோர், எச்சூழலிலும் நேர்மையாய் இருப்பர். பொன்னை

நெருப்பிலிட்டுச் சுட்டாலும் அது தனது இருப்பு நிலையை மாற்றாமல் இருப்பதைப் போன்று ஞானவான்களுக்கு எவ்வளவு தான் நெருப்பு போன்று துன்பங்கள் வந்தாலும் அவர்கள் தங்கள் இயல்பு நிலையை மாற்றாமல் நேர்மையாளராய் இருப்பர். யோபுவைக் குறித்து ஆண்டவர் கொடுத்த சான்று என்னவெனில், அவர் மாசற்றவர், நேர்மையாளர் என்பதாகும் (யோபு 1: 1). புதிய மாதத்திலும் கடவுளின் பிள்ளைகளாகிய நாம் ஆண்டவர் தரும் ஞானத்தைப் பெற்று நேர்மையாளராய் வாழ்வோம்.

2. நீதிமான்களாய் இருப்பர் (நீதி. 8: 12)

ஞானத்தின் வெளிப்பாடு விவேகமாய் வாழ்வது. அறிவும், சிந்திக்கும் ஆற்றலும் ஞானவான்களுக்கு உண்டு. நீதிமான்கள் பனையைப் போன்று செழித்து வளர்வர் (தி.பா. 92 : 12). அவர்கள் காற்றுக்கும், மழைக்கும் அஞ்சாமல் நிமிர்ந்து வாழும் பனைமரத்தைப் போலிருப்பர். நீதிமான்கள் வாசம் செய்யும் இடங்களில் மீட்பின் தொனிகேட்கும் (தி.பா. 118: 15). நீதிமான்களின் வழி ஆண்டவருக்கு தெரியும் (தி.பா. 1: 6). நீதிமான்கள் ஏழைகளின் மீது கரிசனையுடையோராய் வாழ்வர் (மத். 25: 34-36). புதிய மாதத்திலும் ஆண்டவர் தரும் ஞானத்தை அவரது பேரருளால் பெற்று நீதிமான்களை போல் வாழ்வோம்.

3. நிறைவானவராய் இருப்பர் (நீதி. 8: 11)

பவளங்களை விரும்பாதோர் இரார். ஆனால் ஞானவான்கள் விலையுயர்ந்த பவளத்தின் மீது நாட்டம் கொள்வதை விட ஆண்டவரைச் சார்ந்திருப்பர். உலக நாட்டங்கள் ஊறுவிளைவிக்கும். உன்னதருடைய ஞானமோ வாழ்வில் உயர்வினைத் தரும். நீங்கள் ஞானமற்றவர்களைப் போன்று நடக்க வேண்டாம் (எபே. 5: 15) என்று பவுலார் ஆலோசனைத் தருகிறார். புதிய மாதத்திலும் ஆண்டவர் அருளும் ஞானத்தால் நிறைவானவராய் வாழ்வோம்.

நேர்மையும், நீதியும் கிறிஸ்தவ பற்றுறுதி வாழ்வின் இரு பக்கங்கள். இப்பக்கங்களைக் கறைபடுத்தாமல் ஆண்டவர் அருளும் ஞானத்தால் நிறைவானவராய் வாழ்வோம். ஆண்டவர் அதற்கான ஆற்றலை நமக்குத் தந்தருளுவாராக, ஆமென்.

திரு. **M.R. மில்ட்டன் மார்க்**

இணை இயக்குநர், தொடர்புத்துறை

ஆண்டவருக்கு அஞ்சுதல் ஞானத்தின் தொடக்கம்

Fear of the Lord as the Beginning of Wisdom

1 அர. 3: 3-14 1 யோவா. 5: 13-21

தி.பா. 14 லூக். 10: 21-24

"உம் மக்களுக்கு நீதி வழங்கவும் நன்மை, தீமை பகுத்தறியவும் தேவையான ஞானம் நிறைந்த உள்ளத்தை அடியேனுக்குத் தந்தருளும்" (1 அர. 3: 9).

ஞானமும், அறிவும் ஒன்றையொன்று சார்ந்து நின்றாலும் இரண்டும் பிரிந்துப்பொருள் தருகிறது. அறிவு என்பது பல நூல்களைக் கற்றுக் கொள்வதின் வாயிலாகவும், நமது பயிற்சிகளின் வாயிலாகவும் பெறுகிறோம். ஆனால் ஞானம் என்பது கடவுளிடமிருந்து நமக்கு வருகிறது. அந்த ஞானத்தை அரசர் தாவீதுக்குப் பிற்பாடு அரியணை அமர்ந்த சாலமோன் கடவுளிடம் வேண்டிப் பெற்றுக் கொள்கிறார் (1 அர. 3: 9). இந்த ஞானம் அறிவைத் திறம்பட பயன்படுத்துவதற்கும், சரியானத் தீர்ப்புகளை வழங்குவதற்கும், புத்திசாலித்தனமாக நடப்பதற்கும் நமக்கு ஊக்கம் தருகிறது. ஞானத்தின் மதிப்பு முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது (நீதி. 8: 11). முத்துக்கள் எளிதாகக் கிடைக்கின்ற பொருள் அன்று. அதனைச் சிப்பிக்குள் தேடி எடுப்பதனைப் போன்று ஆண்டவரிடம் அனுதினமும் அமர்ந்து ஞானத்தைப் பெற்றுக்கொள்ள அழைக்கப்பட்டுள்ளோம் (நீதி. 3: 13). ஞானத்தை எவ்வழிகளில் கடவுளிடமிருந்து நாம் பெற்றுக் கொள்ளலாம்?

1. இறை அச்சத்தினால் ஞானம் (Wisdom through the fear of God) (1 அர. 3: 3-14)

தாவீதுக்குப் பிற்பாடு அவரது மகன் சாலமோன் ஆட்சிக்கு வந்தார். சாலமோன் தாவீதைப் போலவே ஆண்டவர் மீது அதிக அன்பு செலுத்தினார். தந்தை தாவீது விதித்த நியமங்களின்படி நடந்து வந்தார் (1 அர. 3: 3). கிபியோனுக்குச் சென்று அங்குள்ள பலிபீடத்தின் மேல் ஆயிரம் எரிபலிகளைச் செலுத்தினார். இது சாலமோன் அரசர் ஆண்டவர் மீது கொண்டிருந்த அன்பையும், அச்சத்தையும் வெளிப்படுத்தி நிற்கிறது. தன் தந்தையாகிய தாவீதின் நற்பண்புகளாகிய உண்மை, நீதி, நேர்மை (1 அர. 3: 6) ஆகிய பண்புகள் சாலமோனிடம் வெளிப்படுகின்றன. இவைகள் அவரது இறையச்சத்தின் வெளிப்பாடுகள். தீமையை விட்டு விலகுவதே இறையச்சம் (நீதி. 8: 13). யோபு என்ற மனிதர் கடவுளுக்கு அஞ்சியபடியால் தீயதை விலக்கி வந்தார் (யோபு. 1: 1). இறை அச்சம் உடையோர் தீமைகளுடன் உறவாடுவதில்லை. தீமைகள் அவர்களைத் தொடர்வதுமில்லை. தீமைகள் தொடராமலிருக்கக் கடவுளிடமிருந்து வருகின்ற ஞானம் தேவை. இந்த ஞானத்தை இறைவனுக்கு அஞ்சுவதால் நாம் பெறுகிறோம் (தி.பா. 111: 10).

2. இறை நம்பிக்கையினால் ஞானம் (Wisdom Through Faith) (1 யோவா. 5: 13-21)

முதலாம் நூற்றாண்டில் பல ஞானக்கோட்பாடுகள் வளர்ந்தன. இயேசுவால் மனிதத் தன்மைதான் இருந்தது. எனவே அவர் முழுவதும் மனிதன் என்றும், கடவுள் தன்மை தான் இருந்தது. எனவே அவர் முழுவதும் கடவுள் எனவும் மாறுபட்ட கருத்துகளைக் கூறினர். இயேசுவில் மனிதத்தன்மையும் கடவுள் தன்மையும் இணைந்து வெளிப்பட்டதனை யோவான் சமூகத்தினர் தங்களது நம்பிக்கையினால் அறிக்கையிட்டனர். இந்த ஆண்டவராகிய இயேசுவிடம் நம்பிக்கை கொள்வோருக்கு நிலைவாழ்வு உண்டு (1 யோவா. 5: 13) என்ற தங்களது உறுதிப்பாட்டை நிலைப்படுத்தினர். இதனைப் புரிந்து கொள்ளுகின்ற ஞானம் நம்பிக்கையினால் கடவுளிடமிருந்து நமக்கு வருகிறது. இறை ஞானம் என்பது கடவுளின் திருவுளம் அறிந்து செயல்படுவது (1 யோவா. 5: 14). மேலும் பாவத்தைப் பிரித்துப் பார்க்கிற தன்மையினை ஞானத்தினால் நாம் பெறுகிறோம் (1 யோவா. 5: 16). இந்த ஞானம் உண்மையான கடவுளை அறிந்து அவருடன் இணைந்து வாழத்தூண்டுகிறது (1 யோவா. 5: 20, கொலோ. 2: 3). வீட்டில் வளர்க்கப்படும் வாத்து என்ற பறவை சேற்றில் கலந்த உணவை பிரித்து எடுத்து உண்பது போல் தீமைகள் நிறைந்த உலகில் நல்லவற்றை ஞானத்தினால் தெரிவு செய்வோம்.

3. இறை அருளினால் ஞானம் (Wisdom by divine Grace) (லூக். 10: 21-24)

ஞானத்தை எவரும் விலை கொடுத்துப் பெற்றுக்கொள்ள இயலா. புத்தகங்கள் மற்றும் நூல்களினால் அறிவு வளரலாம். ஞானம் கடவுளிடமிருந்து மனிதருக்கு கிடைக்கின்ற அவரது கொடையாகும் (நீதி. 2: 6). இந்த ஞானத்தை நாம் கடவுளிடமிருந்து கேட்டு பெற்றுக் கொள்ளவேண்டும் (யாக். 1: 5). ஞானம் கடவுளிடமிருந்து வருவதால், கடவுள் மனிதருக்குள் வேறுபாடு காட்டுவதில்லை. உண்மையான ஞானம் என்பது இயேசுவை அறிந்துகொள்ளும் அறிவாகும். இந்த அறிவு உலகத்தினரால் ஞானிகளாக கருதப்படுவோருக்கு வெளிப்படுத்தப்படாமல் குழந்தைகள் என்று எளியோராகப் பார்க்கப்படுவோருக்கு வெளிப்படுத்தப்படுகிறது (லூக். 10: 21). கிரேக்கத் தத்துவ ஞானங்களும் அறிவுக் கோட்பாடுகளும் பரவியிருந்த காலத்தில் கடவுளை அறிகின்ற அறிவினை சுயசிந்தையால் அல்ல, கடவுளின் திருவுளப்படி அவரது அருளினால் மானிடர்க்கு வழங்கப்படுகிறது (லூக். 10: 22, யோவா. 3: 35) என்கிற செய்தி வலியுறுத்தப்படுகிறது. இயேசுவை தேடி வந்த ஞானியர் உலக ஞானத்தால் ஏரோதுவின் அரண்மனை நோக்கிச் சென்றனர் (மத். 2: 3). ஆனால் கடவுளால் கொடுக்கப்பட்ட ஞானத்தால் தாங்கள் வந்த பாதை தவறு என்பதைக் கனவில் கடவுளால் எச்சரிப்பு பெற்று மாற்று வழியைத் தெரிவு செய்தனர் (மத். 2: 13).

கடவுளிடமிருந்து வருகின்ற ஞானத்தை இறை அச்சத்தினாலும், இறை நம்பிக்கையினாலும், இறை அருளினாலும் நாம் பெற்றுக்கொண்டு தீமையை விட்டு விலகி நன்மை செய்து வாழ்வோம்; நல்வழியைத் தெரிவு செய்து வாழ்வோம், ஆமென்.

அருள்திரு. அறிவர். S. ஜெயலால்

இணை இயக்குநர், V.B.S. அருட்பணித்துறை

வாரும் தூய ஆவியாரே, எம்மை விடுதலையாக்கும்

Come Holy Spirit Set Us Free

எசா. 61: 1-11 தி.ப. 2: 1-13
தி .பா. 107: 31-43 லூக். 4: 16-21

> *"அவர்கள் அனைவரும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டனர். தூயஆவியின் தூண்டுதலால் அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறான மொழிகளில் பேசத் தொடங்கினார்கள்"* (தி.ப. 2:4).

முதல் உடன்படிக்கையின் காலத்தில், பாஸ்காப் பண்டிகையிலிருந்து வருகிற ஐம்பதாவது நாளை அறுவடைப் பண்டிகையாகக் கொண்டாடுவது யூதர்களின் வழக்கமாக இருந்தது. "பெந்தக்கோஸ்து" என்பது ஐம்பதாவது நாளைக் குறிக்கின்ற கிரேக்கச் சொல் ஆகும். எனவே, அறுவடைப் பண்டிகையை, "பெந்தக்கோஸ்து பண்டிகை" என்றும் அழைத்தனர். அந்தநாளில் அறுப்பின் முதற்பலனை கடவுளுக்கு காணிக்கையாகப் படைத்தனர். ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுந்த நாளிலிருந்து வருகின்ற ஐம்பதாவது நாளில் தூய ஆவியார் பொழிந்தருளப்பட்டதால், இந்த நாள் "பெந்தக்கோஸ்து நாள்" என்றும் "தூய ஆவியாரின் திருநாள்" என்றும் அழைக்கப்படுகிறது. இயேசுகிறிஸ்துவின் மானிட வாழ்வில் கடவுள் ஆற்றலுடன் செயலாற்றினதைப் போன்று, "பெந்தக்கோஸ்து நாள்" தொடங்கி சீடர்களின் வாழ்வில் தூய ஆவியாரின் செயல்பாடு ஆற்றல் வாய்ந்ததாக அமைந்திருந்தது. அச்சத்திலிருந்தும், பல்வேறு அடிமைத் தனங்களிலிருந்தும் விடுதலை பெற்ற சீடர்கள், நற்செய்தியை இனிதே பறைசாற்றி, ஆன்மிக அறுவடையைத் தொடங்கினர். தூய ஆவியாராலேயே திருச்சபை என்ற புதிய இயக்கம் தோன்றியதால், இன்றைய நாள் "திருச்சபையின் பிறந்தநாள்" எனவும் அழைக்கப்படுகிறது.

முதல் உடன்படிக்கையின் காலத்தில் ஆசரிக்கப் பெற்ற பெந்தக்கோஸ்துப் பண்டிகையின் போது கடவுள் தந்த விடுதலை வாழ்வை நினைந்து அவருக்கு முதற்பலன்களை திருப்பணிக்கொடையாக வழங்கினர். புதிய உடன்படிக்கையின் பெந்தக்கோஸ்துப் பண்டிகையின் போது கடவுள் தம் பிள்ளைகளுக்கு தூய ஆவியாரின் அருட்கொடைகளையும் விடுதலை வாழ்வையும் அன்புப் பரிசாக வழங்கினார். கிறிஸ்துவின் செயல் திட்டத்தில் "விடுதலை" ஒரு முக்கிய கூறுபாடாக அமைந்ததைப் போன்று தூய ஆவியாரின் செயல் திட்டத்தில் முதன்மையானதும் விடுதலையே எனலாம். தூய

ஆவியாரின் வருகையினாலும், அவர் வழங்கிய விடுதலையினாலும் திருத்தூதர்கள் பெற்றுக்கொண்ட இரண்டு அனுபவங்களைச் சிந்தனை செய்யலாம்.

1. வாழ்வை வளமாக்குவதற்கான விடுதலை

"அவர்கள் அனைவரும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டனர். . ." (தி.ப. 2: 4)

கடவுளின் ஆவியாரைக் குறிக்க திருமறையில் பயன்படுத்தப்பட்டுள்ள "ரூவாஹ்" என்ற எபிரேயச் சொல்லும், "ப்னியூமா" என்ற கிரேக்கச் சொல்லும் "ஆவி", "காற்று", "மூச்சு" ஆகிய பொருள்களைத் தருகின்றன. இந்த இரண்டு சொற்களும் உயிர் மூச்சோடும், காற்றோடும் தொடர்புடைய கண்ணுக்குத் தெரியாத ஒரு ஆற்றலைக் குறிப்பிடுகின்றன. தியான வசனத்தில், "தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டனர்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளதை, தூய்மையான உயிர் மூச்சால் புத்துயிர் பெற்றனர் எனவும் பொருள் கொள்ளலாம். எனவே, கடவுளின் பணியை அல்லது அவரது திருவுளத்தை நிறைவேற்ற ஏதுவாக ஒருவரை உயிர்ப்பித்து, அவர் தொடர்ந்து நல்வழியில் பயணிக்க உந்தித்தள்ளும் இறைஆற்றலே "தூய ஆவியார்" என்ற புரிதல் கிடைக்கின்றது. "தூய ஆவி உங்களுக்குள் உயிராய் இருக்கும்" என்ற பவுலடியாரின் கூற்று (உரோ. 8: 10) இந்த உண்மையை உறுதிப்படுத்துவதாக அமைந்திருக்கிறது. தூய ஆவியாரின் பொழிந்தருளலை ஆண்டவர் இயேசு அறிவிக்கும்போது "பாராகிலிடொன்" (யோவான் 14: 16) என்ற சொல்லை பயன்படுத்துகின்றார். இந்த கிரேக்கச் சொல் ஆற்றுப்பணியாளர், தேற்றரவாளர், துணையாளர் ஆகிய பொருள்களைத் தருகின்றன. வாழ்வில் வலுவிழந்து, உள்ளம் உடைந்து, அமைதி அகன்று நாம் பரிதவித்திடாமல், துணையாளராய் துணை நின்று, நமக்கு உயிர் தந்து, உத்வேகம் ஈந்து, விடுதலை வழங்கி, வாழ்வை வளமாக்குகின்றவரே தூய ஆவியார்.

உயிர்த்தெழுந்த ஆண்டவரின் சந்திப்பினால் சீடர்கள் புதிய நம்பிக்கை பெற்றிருந்தாலும், குருவின் பிரிவினால் ஏற்பட்ட வேதனையால், உடைந்துபோன மனநிலையில் தான் இருந்தனர். அச்சம், அவமானம், அவிசுவாசம் போன்ற எதிர்மறைப் பண்புகளில் சிறைப்பட்டிருந்தனர். ஆண்டவரின் உடனிருப்பை இழந்ததைப் போன்ற உணர்வினால், வாழ்வில் பொலிவிழந்து போயினர். ஆனாலும், ஆண்டவரின் அறிவுரைக்கிணங்க தூய ஆவியாராம் துணையாளரின் வருகைக்காகப் பொறுமையுடன் காத்திருந்தனர். பெந்தக்கோஸ்து என்னும் நாள் வந்தபோது, ஆண்டவர் வாக்குரைத்திருந்தவாறே தூய ஆவியார் பொழிந்தருளப்பட்டார். எருசலேமில் உள்ள ஒரு வீட்டில் கூடியிருந்த ஏறக்குறைய 120 சீடர்கள் மகத்துவமான இந்த அனுபவத்தைப் பெற்றுக்கொண்டனர். தூய ஆவியாரால்

ஆட்கொள்ளப்பட்டதும், அவர்கள் புத்துயிரும் புத்துணர்வும் பெற்றனர். தூய ஆவியாரின் அளப்பரிய ஆற்றல், அவர்களை அச்சம் முதலான அனைத்து அடிமைத்தனங்களிலிருந்தும் விடுதலையாக்கிற்று. கடவுள் என்றென்றும் தம் அடியவருடன் இருப்பார் என்ற நம்பிக்கை அவர்களின் ஆழ்மனதில் அழுத்தமாகப் பதிந்தது. உடைந்துபோன வாழ்வு உருவாக்கம் பெற்று வளமானது. தூய ஆவியாரின் அருட்பொழிவைப் பெற்றுக் கொண்டவர், அடுத்தவரின் நல்வாழ்விலும், விடுதலை வாழ்விலும் அதிக அக்கறை கொள்வார் என்பதும் திருமறை உணர்த்தும் உண்மையாகும். ஆண்டவர் இயேசு தமது திருப்பணித் திட்டத்தை எசாயா இறைவாக்கினர் நூலில் இடம்பெற்றுள்ள இறைவாக்குகளை (எசாயா 61: 1,2) அடிப்படையாகக் கொண்டு அறிவித்தார் (லூக்கா 4: 18,19). திருப்பணித் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட அனைத்துத் திருப்பணிகளும் நம்பிக்கையிழந்தோருக்கு புத்துயிர் வழங்கி, நலிந்தோர்க்கு நல்வாழ்வு வழங்கும் விடுதலைப்பணிகளாக அமைந்துள்ளன. அவ்வண்ணமே தூய ஆவியாரின் அருளால் புதுவாழ்வுப் பெற்றதிருத் தூதர்களும் பிறருடைய நல்வாழ்விற்காகக் கரிசனையுடன் திருப்பணியாற்றினர் என்பதை திருத்தூதர் பணிகள் நூல் இனிதே எடுத்துரைக்கின்றது.

2. நற்செய்தியை நன்றுரைப்பதற்கான விடுதலை

“ . . . தூயஆவியின் தூண்டுதலால் அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறான மொழிகளில் பேசத் தொடங்கினார்கள்” “ ... நம்முடைய தாய் மொழிகளில் இவர்கள் பேசுவதை நாம் ஒவ்வொருவரும் கேட்பதெப்படி? என வியந்தனர்” (தி.ப. 2: 4, 8).

“பெந்தக்கோஸ்து” அனுபவத்தைப் பெற்றுக் கொண்ட சீடர்கள், பிற மொழிகளில் பேசிய நெகிழ்ச்சியான நிகழ்வு அனைவரையும் ஆச்சரியமடையச் செய்தது. பல்வேறு நாடுகளிலிருந்து வந்திருந்த யூதர்கள், தங்கள் தாய் மொழிகளில் திருத்தூதர்கள் பேசுவதைக் கேட்டு வியந்துப் போயினர். மொழியைக் குறிப்பதற்கு இங்கு (தி.ப. 2: 8) பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்கச் சொல் “டயாலெக்டோ” என்பது ஆகும். பிளேட்டோ என்ற தத்துவ அறிஞர் இந்தச் சொல்லுக்கு “பொருளுள்ள விதத்தில் பேசுதல்” என்ற பொருளைத் தருகிறார். நற்செய்தியை அறிவிப்பவர் வெறுமனே பேசாமல்,அதைக் கேட்போரின் உள்ளத்தைச் சென்றடைகின்ற விதத்தில் பேசினால் தான் நற்செய்தி நல்ல பலன் தரும். அறியாத மொழிகளிலும், அனைவரும் புரிகின்ற விதத்தில் பேசுகின்ற இறை ஆற்றல், தூய ஆவியாரின் ஆட்கொள்ளுதலால் திருத்தூதர்கள் பெற்றுக்கொண்ட புதுமையான அனுபவமாக அமைந்தது.

தூய ஆவியாரின் அருளினால் திருத்தூதர்கள் சொந்தமாக்கிய புத்தெழுச்சியின் அனுபவம் இனம், நிறம் மற்றும் மொழி போன்ற

வேற்றுமைகளினின்று விடுதலை வழங்கியதுடன் நற்செய்தியை நன்றுரைப்பதற்கானப் பாதையை வகுத்துத் தந்தது. அனைத்துலகிற்கும் நற்செய்தி அறிவிப்பதற்கு முதன்மையான சவாலாக இருந்த "மொழி" என்ற தடுப்புச் சுவரையும் தாண்ட இயலும் என்ற நிச்சயத்தைத் திருத்தூதர்கள் பெற்றுக் கொண்டனர். தங்களிடம் இருந்த குறைந்த கல்வியறிவு, நற்செய்தி அறிவித்தலுக்கு தடையாக அமைந்துவிடுமோ என்பது போன்ற எதிர்மறை எண்ணங்களிலிருந்து அவர்கள் விடுதலைப் பெற்றனர். தூய ஆவியாரின் ஆற்றலோடும் இறைஞானத்தோடும் பிற மொழிகளையும் கற்றுக்கொள்ளலாம் என்ற புதிய நம்பிக்கை அவர்கள் உள்ளத்தில் உதயமானது. தூய ஆவியார் அருளிய விடுதலையினால் புதிய ஆற்றல் பெற்றதிருத்தூதர் பேதுரு, அருளுரை வழியாக நற்செய்தி அறிவித்தலை இனிதே தொடங்கிவைத்தார். முதல் அருளுரையில் ஏறக்குறைய மூவாயிரம் பேர் திருச்சபையில் இணைந்தனர். அன்றிலிருந்து ஏனைய திருத்தூதர்களும் இந்த நல்ல திருப்பணியில் இணைந்து உலகின் பல பகுதிகளுக்கும் நற்செய்தியை சுமந்து சென்றனர். நற்செய்திப்பணி விபரங்களை, தூய ஆவியாரின் நற்செய்தி நூல் என அழைக்கப்படுகின்ற திருத்தூதர் பணிகள் நூலில், லூக்கா அழகுறப் பதிவு செய்துள்ளார்.

ஆண்டவர் இயேசு அறிவித்த தமது திருப்பணித் திட்ட அறிவிப்பில், நற்செய்தி அறிவிக்கின்ற திருப்பணியையும் குறிப்பிடுகின்றார். ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிப்பதும், ஆண்டவர் அருள் தரும் ஆண்டினை அறிவிப்பதும் அந்த அறிவிப்பில் இடம் பெற்றுள்ளன. மறைநூல் வல்லுநர்களின் கற்பித்தலுக்கும், ஆண்டவர் இயேசுவின் போதனைகளுக்கும் பெருத்த வேறுபாடு இருந்தது. சமூகத்தின் விளிம்பு நிலையில் உள்ளோரும், கல்வி அறிவு குறைந்தோரும் எளிதில் புரிகின்ற விதத்தில் ஆண்டவர் நற்செய்தியை நன்றுரைத்தார். அருள்தரும் ஆண்டு பற்றிய அறிவிப்பு, வறியோர் வாழ்வு பெறுகின்ற நற்செய்தியாகும். பிரடரிக் என்பவர் இந்த அறிவிப்பை விளக்குகின்றபோது, "ஒரு தூதுவரைப் போன்று இயேசுகிறிஸ்து மெசியாவின் யுகமான ஆண்டவரின் அருள் தரும் ஆண்டை அறிவிக்கிறார். ஜூபிலி ஆண்டாகிய 50 ஆவது ஆண்டில் தூதர்கள் எக்காளம் ஊதி இதை அறிவித்தபோது சிறைக் கதவுகள் திறக்கப்பட்டன. கடன்கள் ரத்து செய்யப்பட்டன. இயேசுவின் அறிவித்தலும் இந்த எக்காளத் தொனி உடையதாக உள்ளது." என்கின்றார். ஆண்டவர் இயேசுவின் திருப்பணியில் ஒவ்வொரு நாளும் "அருள் தரும் நாளாகவே" அமைந்தன. திருத்தூதர்களும் ஆண்டவர் வழங்கிய நற்செய்தியைப் பின்பற்றி, அனைவரும் வாழ்வு பெறுகின்ற விதத்தில், அனைத்தையும் பகிர்ந்து வாழ்கின்ற கூட்டுறவின் வாழ்வை நற்செய்தியாக அறிவித்தனர். நன்றுரைக்கப்பட்ட நற்செய்தியை இன்முகத்துடன் ஏற்றுக்கொண்டுப் பின்பற்றிய தொடக்கத் திருச்சபையின் முன் மாதிரி வாழ்வு ஒரு நடமாடும் நற்செய்தியாகத் திகழ்ந்தது.

இவ்வாறு, தூய ஆவியாரின் ஆட்கொள்ளுதலால் நாம் பெறுகின்ற விடுதலை வாழ்வு, நம் வாழ்விற்குப் புத்துயிரும் புத்தெழுச்சியும் வழங்குகின்றது. பிறர் வாழ்வை வளமாக்கும் வாழ்வியல் நெறியையும் வகுத்துத் தருகின்றது. நற்செய்தியை நன்றுரைப்பதற்கான இறை ஆற்றலையும் இறை ஞானத்தையும் குறைவின்றிநிறைவாய் அருளுகின்றது. கடவுளின் திருமைந்தராகிய இயேசுகிறிஸ்து திருத்தூதர்களுக்கு வாக்குரைத்து வழங்கிய தூய ஆவியாரையும் அவரது விடுதலை வாழ்வையும் வேண்டிப் பெற்றுக் கொள்வோம், தூய ஆவியாரின் அருளும் ஆற்றலும் நம்மை ஆண்டு நடத்துவனவாக! ஆமென்.

பு	ஞா. 169	கீர். 213

அருள்திரு. R. ஜெகதீஸ்லால் ரெகு

இரண்டாம் ஆயர், மத்திகோடு சேகர சபை

இறைவேண்டல்

அருள் மிகுந்த மகிமையின் கடவுளே, உமது தூய ஆவியாரைத் திருச்சபை மீது அனுப்பியதற்காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். இதனால் திருச்சபை இறையச்சத்துடன் ஒரு கருவியாக இயங்கி, மக்களைப் பாவத்தின் அடிமைத்தனம் மற்றும் இருளின் ஆற்றல்களிலிருந்து விடுவிக்கத் துணைபுரியும். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பணியை நிறைவேற்றும் வகையில் நாங்கள் விடுதலை பெற்று புதிய சமூகமாக மாறுவதற்கு எங்கள் மீது கருணை காட்டி, தூய ஆவியானவரால் எங்களை பலப்படுத்துமாறு உம்மிடம் வேண்டுகிறோம். உம்மோடும் தூய ஆவியரோடும் இப்போதும் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்யும் எங்களுடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாயிலாக வேண்டுகிறோம், ஆமென்.

அருட்பணி: அனைவருக்கும் நற்செய்தி

Mission: Good News for All

2 அர. 7: 3-5 தி.ப. 2: 1-13

தி.பா. 107: 1-15 மத். 28: 16-20

" நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்"

(மத். 28: 19)

குறிக்கப்பட்ட பணி எவரிடம் நியமிக்கப்படுகிறதோ, அல்லது எவரொருவர் அனுப்பப்படுகிறாரோ அப்பணியே அருட்பணியாகும். கிறிஸ்தவ அருட்பணி என்பது கிறிஸ்தவ நம்பிக்கையினை நம்பிக்கையின் அனுபவத்துடன் அறிவிக்க நியமிக்கப்படுவதும் அனுப்பப்படுவதும் ஆகும். இயேசு கிறிஸ்துவால் துவங்கப்பட்ட அருட்பணி அவருக்கு பின் அவரது கட்டளைப்படியே இன்று வரை நடை பெற்று வருகின்றது (மத் 28: 19-20). மந்தையில் சேராத ஆடுகள் எனக்குண்டு (யோவா. 10: 16)என்றால் எல்லாரையும் உள்ளடக்கிய அருட்பணியாகும். கடவுள் பாரபட்ச மற்றவரானதால் (கலா: 2: 6) நற்செய்திப் பணி அனைவருக்குமுரியதாகும்.

கடவுளின் பெயரை அறிக்கையிட்டு வேண்டுவோர் அனைவரும் மீட்பைப் பெறுவர் (உரோ. 10: 13). எனவே உலகின் முடிவு பரியந்தம் கடவுளுக்கு சாட்சியாயிருப்பது மிகவும் அவசியம் (தி.ப. 1: 8). ஏனெனில் ஆத்துமா உலகை விட விலை மதிப்பு பெற்றது. ஆகவே சீடரானவர் உதாசினமாய் இருக்கலாகாது. பவுல் குறிப்பிடும் போது நற்செய்தியை அறிவியாமலிருந்தால் தனக்கு ஐயோ என்கிறார். சீரியப்படைகள் எல்லா உடமைகளையும் விட்டு ஜீவன் தப்ப ஓடிய செய்தியை சமாரிய மன்னனுக்கு நான்கு தொழுநோயாளிகள் "அறிவியாமலிருந்தால் நியாயமானதல்ல, இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள், நாம் மவுனமாயிருந்தால் பொழுது விடியுமட்டும் காத்திருந்தால் குற்றம் நம்மேல் சுமரும், இப்போதே ராஜாவின் அரண்மனைக்குத் தெரிவிப்போம்" என தங்களின் கடமையையும், அதன் தேவையையும் உணர்ந்து அறிவித்தனர் (2 அர. 7: 9). இதனால் தீர்க்கனின் உரைப்படியே சமாரியாவின் வாசலிலே ஒரு மரக்கால் கோதுமை மா ஒரு சேக்கலுக்கும் இரண்டு மரக்கால் வாற்கோதுமை மா ஒரு சேக்கலுக்கும் விற்கப்பட்டது. பஞ்சம் நீங்கி உண்டு மகிழ்ந்தனர். வாழ்வு பெற்றனர். நற்செய்தி அறிவிப்பதின் நோக்கம் அறிந்து அனைவருக்கும் நற்செய்தி பகிர்வது குறித்துச் சிந்திப்போம்

1. அருட்பணி: இறைத் திட்டத்திற்கு உட்பட்டது (மத். 28: 19-20)

"நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள் தந்தை, மகன், தூயாவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள்"

இயேசு நாதருக்கு பின் தொடர்ச்சியாகக் கடவுளின் வார்த்தை மக்களுக்குப் பகிரப்பட வேண்டுமென்பதே கடவுளின் திட்டம். அதற்காகவே சீடர்களைத் தெரிந்து கொண்டு என் பின்னேவாருங்கள் உங்களை மனிதர்களைப் பிடிக்கிறவர்களாக்குவேன், என அழைப்பு கொடுத்து கட்டளையுமிட்டார். தந்தையின் சித்தப்படி செய்கிறவனே சீடனாயிருக்க இயலும், தந்தையின் சித்தமின்றி எவரும் அருட்பணி செய்ய இயலாது (எபி. 5: 4). மனம் திரும்புதலும், பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டும் (லூக். 24: 47). எனவே கடவுள் தமது திட்டம் நிறைவேறத் தாம் தெரிந்துக் கொண்ட நபர்களைப் பயன்படுத்தினார் என்பதற்கு திருமறையும் வரலாற்று நிகழ்வுகளும் சான்றாகும். கடவுள், அரசர் ஆகாப் செய்த தவறுகளைச் சுட்டிக் காட்டும் படியாக எலியாவைக் கொண்டு எச்சரித்தார் (1 அர. 17: 1). எலியாவின் வார்த்தைகள் ஆகாபின் கூரிய வாளை விடக் கூரியது. ஆகாப் கலங்கிப்போனான்.

செர்கியு பவுல் என்னும் விவேகமுள்ள மனுஷனான அதிபதி தூய ஆவியாரின் திருவுளச் சித்தபடிப் பவுலையும், பர்ணபாவையும் அழைத்துத் தேவ வசனத்தை கேட்க மிகவும் ஆசையுடையவனாயிருந்தான் மாயவித்தைக் காரனான எலிமா அதிபதியின் விசுவாசத்தினின்று புரட்டுவதில் குறியாயிருந்தான். பவுல் தூயாவியால் நிறைந்து அவனை உற்றுப் பார்த்து எல்லா கபடமும், பொல்லாப்பும் நிறைந்த் பிசாசின் மகனே நீதிக்கெல்லாம் பகைஞனே கர்த்தரின் செம்மையான வழிகளை புரட்டுவதில் ஓய மாட்டாயோ. இதோ கர்த்தரின் கரம் உன் மேல் வந்தது. நீ சூரிய ஒளியைக் காண்பதில்லை. பார்வையற்றவனாகவே இருப்பாய் என்றான். அப்படியே நிகழ்ந்ததைக் கண்டு அதிபதி விசுவாசம் கொண்டான் (தி.ப. 13: 1-12). நற்செய்தி உலகமெங்கும் பிரசித்தமாக வேண்டும் என்னும் கடவுளின் திட்டம், நிறைவேற எத்தனை எலிமாக்கள் தோன்றினாலும் நற்செய்தியை ஏற்போர் பெருகுவர் என்பது தானே உண்மை. எனவே அஞ்சாது நற்செய்தி பகிர்வோம் தடைகளைக் கடந்து கடவுளின் திட்டப்படி நற்செய்தி பரவும் என்பதாகும்.

2. அருட்பணி: வேறுபாடுகளை கடந்தது (மத். 13: 47)

"விண்ணரசு கடலில் வீசப்பட்டு எல்லா வகையான மீன்களையும் வாரிக் கொண்டுவரும் வலைக்கு ஒப்பாகும்"

கடவுள் மனுஷனிடத்தில் பட்சபாதமுள்ளவரல்லர் (கலா. 2: 6) மேலும் பவுல் கலாத்தியர் திருமுகத்தில் குறிப்பிடும் விருத்தசேதனமுள்ளவர்களுக்கு

நற்செய்தி அறிவிக்கும் பேதுருவையும், விருத்தசேதனமில்லாதவர்களுக்கு நற்செய்தி அறிவிக்கும்படி தன்னையும் தெரிந்து கொண்டதாகக் குறிப்பிடுகிறார் (கலா. 2: 7,8). சிதறிப் போனவர்கள் எங்கும் திரிந்து நற்செய்தியைப் பகிர்ந்தனர் (தி.ப. 8: 4). அற்புதங்கள் நடைபெற பிலிப்புவால் சொல்லப்பட்டவைகளை மக்கள் ஒரு மனதாகக் கேட்டு கவனித்தார்கள். இதனால் அனேகர் நலமடைந்தனர். பட்டணத்தில் மிகுந்த மகிழ்ச்சி உண்டாயிற்று. அனைவருக்கும் நற்செய்தியை அறிவிப்பது கடவுளின் விருப்பம் (எரே. 1: 7; தி.ப. 13: 47).

யோவான் 4-ஆம் பிரிவில் சமாரியப் பெண் ஒருவர் யாக்கோபு கிணற்றில் தண்ணீர் மொள்ள வந்தாள். களைப்புடன் காணப்பட்ட இயேசு அப்பெண்ணிடம் தாகத்திற்குத் தா என கேட்க, தான் ஒரு சமாரியர் தாகத்திற்குத் தா என்கிற நீங்கள் யூதன்; நமக்குள் சம்பந்தம் கலவாதவர்களாயிருக்க தாகத்திற்கு தா என கேட்பது முறையற்றது என்றாள். இதனைக் கேட்ட இயேசு உரையாடல் வழியாகத் தன்னை மேசியா என சமாரிய பெண் உணர்வு பூர்வமாக புரிந்து ஏற்றுகொள்ள வழி காட்டினார். உடனே குடத்தை வைத்து விட்டு ஊருக்குள் சென்று மேசியாவைக் கண்டேன், வந்து பாருங்கள், என்னைக் குறித்து எனக்கு வெளிப்படுத்தினார் என்றாள். இதனால் யூதரோடு உறவு வைத்திராத சமாரியர்கள் இயேசுவை அழைத்துச் சென்றனர். இரண்டு நாள் தங்கி நற்செய்திப் பணி செய்தார். இதனால் அனேகர் இயேசுவை தடைகளையும் கடந்து ஏற்றுக் கொண்டனர். வேறுபாடுகளைக் கடந்தது நற்செய்திப் பணி என்றால் மிகையாகாது. நாமும் வேறுபாடுகளைக் கடந்து நற்செய்திப் பணி செய்வோம்.

3. அருட்பணி: ஒன்றுபட்டு சான்று பகிர்வது (தி.ப. 2: 1)

"பெந்தக்கோஸ்து என்னும் நாள் வந்த போது, அவர்கள் எல்லாரும் ஒரே இடத்தில் கூடியிருந்தார்கள்."

ஒருமனப்பட்டு ஒன்று கூடியவர் தூயாவியாரின் பொழிவைப் பெற்றனர். ஒரு மனப்பட்டோர் தங்களுக்குத் தூயாவியானவரால் அருளப்பட்ட வரங்களின்படியே வெவ்வேறு மொழிகளில் பேசினர். வானத்தின் கீழ் உள்ள சகல தேசங்களிலிருந்து வந்த தேவ பக்தி கொண்ட யூதர்கள் எருசலேமில் வாசமாயிருந்தார்கள். மேல் வீட்டறையிலிருந்து எழுந்த சத்தம் கேட்டுத் திராளான ஜனங்கள் கூடி வந்தனர். கூடி வந்தோர், கலிலேயர்கள் தங்கள் தங்கள் தாய் மொழிகளில் பேசக் கேட்ட போது என்னவாய் முடியுமோ என கலங்கி போனார்கள்; ஆச்சரியப்பட்டார்கள். மேலும் தேவ மகத்துவங்களைத் தங்கள் தாய் மொழிகளில் ஒன்று பட்டோரின் சான்று வாயிலாகக் கேட்டார்கள். தங்கள் இருதயங்களில் உணர்வு பெற்றோர் தங்கள் பொல்லாத வழிகளை விட்டு மனம் திரும்பினார்கள். மீட்கப்பட்டோரை ஆண்டவர் அனுதினமும்

சபையில் சேர்த்து வந்தார். இன்று பல்வேறு சபைப் பிரிவினர்கள் தாங்கள் சார்ந்திருக்கும் சபையின் கோட்பாடுகளை வலியுறுத்துவதை மையமாக கொண்டு செயல்படுவதால் ஆத்தும ஆதாயங்களை விட கோட்பாடுகளே முக்கியம் பெற்றுள்ளது. எனவே இறைவனின் கட்டளைக்குட்பட்டு வேத மகத்துவங்களைப் பகிர்வதில் ஒன்றுபட்டு சான்றுரைத்தால் அருட்பணி வளரும். சபைப் பிரிவுகளைக் கடந்து ஒன்றுபட்டு இணைந்து சான்று பகிர்தல் மிகவும் அவசியமானது. மேலும் தொட்டியில் வளர்க்கப்படும் மீன்களைப் பிடிப்பதைவிட்டு, பரந்த ஆழ் கடலாகிய உலகில் அழிவுக்குரிய நிலையில் காணப்படும் ஆத்துமாக்கள் மீது பாரம் கொள்வோம். ஒன்றுபட்டு வலை வீசுவோம்; அகப்படும் மீன்களை ஆண்டவரின் அரசின் மக்களாக்குவோம், ஆமென்.

ப	ஞா. 72	கீர். 76

அருள்திரு. **T. டேவிட் றாபி ஜேக்கப்**

பொதுச்செயலர், DMPB

08.06.2025

கடவுளின் படைப்பைப் பேணி வளர்த்தல்

Nurturing God's Creation

தொ.நூ. 1: 28 - 31 | தி.வெ. 22: 1-5

தி.பா. 104: 1-23 | லூக். 1: 22-31

"...அதன் இலைகள் மக்களினங்களைக் குணப்படுத்தக் கூடியவை" (தி.வெ. 22: 2b).

நாம் வாழும் உலகம் இறைவனுடைய படைப்பின் மேன்மையை வெளிப்படுத்தும் ஒன்று. மனிதனின் தேவைகளை முழுமைப்படுத்தும் தூரக்காட்சியோடு படைக்கப்பட்ட அவருடைய கரத்தின் கிரியை; அதனைப் பண்படுத்திப் பேணிப் பாதுகாத்து வளர்த்தல் மனிதனுடைய தலையாய கடமை. உலகின் எந்த ஒரு படைப்பும் மற்ற படைப்புகளின் உதவி இல்லாமல் சுயமாக வாழ இயலாது. எப்போதுமே ஒன்றை ஒன்று சார்ந்துதான் வாழ்கிறது. கடவுள் ஒழுங்கற்று வெறுமையாயிருந்த உலகை ஒழுங்குபடுத்தி, அதைத் தூய்மைப் படுத்தினார். படைப்புகளை ஆண்டு பேணிவளர்க்க மனிதனை இறைசாயலில் தூயவனாகப்படைத்தார்.

ரெய்மண்ட் பணிக்கர் என்ற இறையியலாளர், "ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இறை தன்மையும் இயற்கையின் தன்மையும் உள்ளது. மனிதன் இவை இரண்டும் இசைந்த பூரண மனிதனாக உருவாக்கப்பட்டான்" என்கிறார். மண்ணினால் உருவாக்கப்பட்ட மனிதனுக்குக் கடவுள் ஜீவசுவாசத்தைக் கொடுத்து அவனை ஜீவ ஆத்துமாவாக்கினார். கவிஞர் வைரமுத்து சொல்லும் போது, "நமக்குள் இயற்கையை நேசிக்கும் பகுதி இருளடைந்திருக்கிறது. ஆகவே, இயற்கையின் மீது கரிசனை இல்லை" கடவுளின் படைப்பைப் பேணிவளர்க்கத் தவறி விடுகிறோம் என்கிறார்.

இயேசுநாதர் படைப்புகளை அதிகம் நேசித்தார். ஆகவே, இறையரசை வெளிப்படுத்தப் படைப்புகளை உதாரணங்களாகச் சுட்டிக்காட்டினார். கடவுளின் உன்னதமான தன்மையும் அவருடைய முடிவில்லா அன்பும் படைப்பின் வழியாக வெளிப்படுகிறது. அந்தப் படைப்புகள் இறைவன் கரத்தை வாஞ்சிக்கிறது.

1. கடவுளின் மக்கள் நலமடைய படைப்புகளை வளரவிடுங்கள்

கடவுள், "மண்ணுலகெங்கும் உள்ள விதை தரும் செடிகள், பழமரங்கள், அனைத்தையும் உங்களுக்கு நான் கொடுத்துள்ளேன். இவை உங்களுக்கு உணவாகட்டும்" என்றார் (தொ.நூ. 1: 29).

கடவுள் படைத்த உலகம் மிக அற்புதமானது. இயற்கையின் வளங்கள் அனைத்தையும் சமநிலையோடு பயன்படுத்தி வாழவே படைப்பை பண்படுத்திப் பாதுகாக்க பொறுப்பைக் கொடுத்தார். ஆனால் வளர்ச்சி என்ற போர்வையில் படைப்புகள் அழிக்கப்படுகின்றன. காரணம் மனநிறைவில்லாத வாழ்வு முறையே. தனி மனிதனின் உதவி இல்லாமல் படைப்பைப் பேணி வளர்த்தல் அரிதான காரியம். மானிடத்தின் பேராசையால் இயற்கையின் சமநிலை தகர்க்கப்பட்டு இயற்கை தான் படைக்கப்பட்டதின் நோக்கத்தையும் இழந்து, பாதுகாப்புடன் கூடிய வளர்ச்சியின் பொலிவை இழந்து வருகிறது. இறைவன் தன்னோடிருக்கவும் தன்னைப்போன்று தொடர் படைப்புக்கு உதவியாயிருக்கவும் படைக்கப்பட்ட மனிதனிடம் படைப்புகளுக்கு பெயரிடும் அதிகாரம் கொடுத்து கடவுள் படைத்த உலகில் படைப்புகளை மதித்துப் பேணி வளர்க்க வேண்டும் என்ற கரிசனையை ஊட்ட விரும்பினார். ஆனால், மானிடத்தின் பொறுப்பின்மைச் செயலால் வளர்க்க வேண்டியவன் அழிக்கிறான். ஆரோக்கியமான படைப்புகளை உருவாக்காமல் ஏதேனில் விலக்கப்பட்ட கனியைப் புசிக்க ஆவல் கொள்கிறான். இன்று படைப்புகள் வளர முடியாமல் அனைத்துப் படைப்புகளும் ஒருங்கே பேறுகால வேதனையுற்றுத் தவிக்கிறது (உரோ. 8: 22).

2. கடவுள் நலமாய் காணப் படைப்புகளை வளரவிடுங்கள்

"கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்தன" (தொ.நூ. 1: 31). ஆண்டவர் உலகத்தைப் படைத்து அதை நேசித்தார், அந்த உலகைப் பண்படுத்தி பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு ஆண்டவர் மனிதனைப் படைத்தார் (தொ.நூ. 6: 6). கடவுளின் நோக்கம் ஒன்று, மனிதனின் செயல்பாடு வேறொன்றாய் மாறிவிட்டது. உலகைப் பண்படுத்திப் பாதுகாக்க வேண்டிய மனிதனோ திசை மாறினான், இயற்கையைச் சுரண்டினான் படைப்பின் நோக்கத்தை மாற்றினான். கடவுளின் படைப்பு வாழ்விக்கக் கூடியது. ஆகவே, அகமகிழ்ந்து நல்லது எனக் கண்டார். ஆனால், மனிதனின் பொறுப்பில்லாச் செயலால் வளர்ச்சி இல்லை அழிவு. ஓர் இல்லத்தைப் பாதுகாப்பது போல படைப்புகளைப் பாதுகாக்கவேண்டும் என்ற கடவுளின் திட்டத்தை நிறைவேற்ற அழைக்கப்படுகிறோம் (தொ.நூ. 2: 15). இயற்கையோடு இணைந்த வாழ்க்கையை அடுத்த தலைமுறைக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டும். உலகத்தோற்றத்தின் துவக்கத்தில் நீர்திரள்மேல் அசைவாடி உலகை உருவாக்கின தூய ஆவி

(தொ.நூ. 1: 1, 2, 3) இன்று படைப்புகளின்மேல் அசைவாடி வளர்த்த முயற்சிக்கிறது. அதனைத் துக்கப்படுத்தாமல் வளர்ச்சிக்குத் துணையாகக் கொள்ளவேண்டும். படைப்புகள் அனைத்தும் ஒழுங்கின்படி படைக்கப்பட்டு, இயங்கி வந்தாலும் இன்று அவைகள் எல்லாம் மனிதர்களால் அச்சுறுத்தப்பட்டு படைப்புகள் வளர்ச்சியடைவதற்குப் பதில் அழிவைச் சந்திக்கிறது. இறைவனது திட்டம் படைப்பை புத்தாக்கம் செய்து, புதுப் படைப்பை உருவாக்குவது. யோவான் கண்ட புதிய விண்ணகம் புதிய மண்ணகம் தோன்றும் காட்சியினால் இதனைப் புரிந்து கொள்கிறோம் (தி.வெ. 22: 2).

3. கடவுள் படைத்த பூமியெங்கும் பசுமை வெளிப்பட படைப்புகளை வளரவிடுங்கள்

"எல்லா காட்டு விலங்குகள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்வன ஆகிய அனைத்து உயிரினங்களுக்கும் பசுமையான செடிகள் அனைத்தையும் நான் உணவாகத் தந்துள்ளேன்" என்றார் (தொ.நூ. 1: 30).

மனிதன் தன் உடன் படைப்புகளோடு கொண்டுள்ள பகை உணர்வினால் பிற படைப்புகளை அழிக்கின்றான். இயற்கையைச் சுரண்டி வாழ்கிறான்; சுரண்டலால் மனுக்குலமும் இயற்கையும் அழிகிறது. இன்றைய உலகம் இயற்கையைச் செயற்கையாக மாற்றிவிட்டது. காடுகளை அழிக்காமல் மரங்கள் வளர இடமளிக்கவேண்டும். கடவுள் தம் நோக்கம் நிறைவேற மக்களைத் தெரிந்து கொள்கிறார். மோல்ட்மேன் என்ற இறையியலாளர், "இறைவன் படைப்பின் மூலம் தம்மை வெறுமையாக்கி மனு உருவேற்பில் நிறைவடைகிறார். இறைவன் தம்மை தம் படைப்பில் முழுவதுமாக ஒருங்கிணைக்கிறார் என்பதற்கு அடையாளமாகக் கிறிஸ்து உலகோடு இயற்கையோடு ஒன்றாகிறார்" என்கிறார். ஏசாயா65:17-25-இல் இறைவாக்கினர் கூறும் போது, "பூமியெங்கும் பசுமை வெளிப்படக் கடவுள் தமது படைப்பைப் புதுப்பித்துக் கொண்டே இருக்கிறார்" என்கிறார். மனிதன் இறைவனோடு இணைந்து செயல்பட்டால் புதுப்படைப்பு மகிழ்ச்சிக்குரியதாக மாறும். இயேசுகிறிஸ்துவின் மரண உயிர்த்தெழுதலினால் அருளப்பட்டிருக்கிற மீட்பு எல்லா படைப்புகளுக்குமுரியது. படைப்புகளுக்கு மீட்பு இல்லாமல் மனுக்குலத்திற்கு மீட்பு இல்லை என்கிறார் இறையியலாளர் பால்திலிக். புதிய படைப்பு ஆண்டவர் இயேசுகிறிஸ்துவில் நிறைவேறி விட்டது. பூமியெங்கும் பசுமையான படைப்புகள் உருவாக மனிதர்களாகிய நாம் அர்ப்பணிப்போடு செயல்படவேண்டும். இயேசுகிறிஸ்துவின் கூற்று இயற்கையோடு கொண்ட ஈடுபாட்டின் பிரதிபலிப்பாகும் மட்டுமல்ல இயேசு இயற்கையோடு வாழ்ந்தார் என்பதை அவரது வாழ்விலும் போதனையிலும் காண்கிறோம் (மத். 6: 26). இயற்கையோடு நல்ல உறவு கொண்டு வாழ்ந்தால் இயற்கையும் நமக்கு உதவியாயிருக்கும். இயற்கையைக் காயப்படுத்தி சுயநலமுடன் வாழும் போது

இயற்கையின் பேரழிவினைச் சந்திக்கிறோம். படைப்புகள் உடன் படைப்புகளுடன் ஒன்றுக்கொன்று இணைந்து வாழும் போது புதுவாழ்விற்கான பாதையில் செல்கிறது. ஆண்டுகொள்ளுங்கள் என்பது அழிப்பதற்கல்ல; வளர்க்கவே. படைப்புகளைப் பராமரிக்கவேண்டிய மனிதன் இன்று கடவுளின் படைப்பை உதாசீனப்படுத்தி விஞ்ஞானப் படைப்புகளாகிய ரோபோக்களையே நாடுகிறான். மனிதர்களாகிய நாம் இறையுறவைப் புதுப்பித்து கடவுள் அங்கீகரிக்கின்ற வாழ்வு வாழும் போது ஆசீர்வாதத்தைப் பெறுகிறோம். இறைத்திட்டத்தை மீறும் போது அழிவு ஏற்படுகிறது. நாம் வாழும் உலகை மாசுப்படாமல் பாதுகாத்து நிலத்தைப் பண்படுத்தும் போது வளர்ச்சியின் உன்னதம் என்பது ஒருபுது உலகை உருவாக்கும். படைப்பின் சொந்தகாரருக்குக் கணக்குக் கொடுக்க வேண்டியவர்கள் என்ற உணர்வு வேண்டும் (தி.பா. 104: 24, 50: 10-12). குழந்தையைப் பராமரித்து வளர்ப்பதுபோல இறைவனின் படைப்பும் பராமரித்து வளர்க்கப்பட வேண்டும். படைப்புகளைப் பேணுவோம், ஆமென்.

ப	ஞா. 320	கீர். 354

அருள்திரு. **G. சதிலால் விஜின்**

ஆயர், பூந்தோப்பு

இறைவேண்டல்

அனைத்தாற்றலுள்ள கடவுளே, உமது படைப்பின் செழுமையால் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். உமது படைப்பில் உமது மகிமையையும், எங்களிடம் நீர் வருவதையும், எங்களுடன் நீர் நிலைத்திருப்பதன் அடையாளத்தையும் காண்கிறோம். உமது படைப்பை வளர்ப்பதற்கு எங்களுக்கு உதவி செய்யும். நீர் எங்களுக்கு வழங்கிய அனைத்தையும் உமது மகிமைக்காக நாங்கள் பயன்படுத்துவோம். நீர் உருவாக்கிய உலகின் அனைத்து ஆற்றல்களையும் முன்வைத்த இப்போதும் எப்போதும் உங்களுடன் வாழ்ந்து ஆட்சி செய்கிற எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வாயிலாக வேண்டுகிறோம், ஆமென்.

15.06.2025 பெந்தக்கோஸ்து திருநாளுக்குப் பின்வரும் முதலாம் ஞாயிறு

திரித்துவம்: அன்பின் கூட்டமைப்பு

Trinity: Community of Love

தொ.நூ. 18: 1-15 2 கொரி. 13: 5-14

தி.பா. 97 மாற். 1: 1-11

"அப்பொழுது, என் அன்பார்ந்த மகன் நீயே, உன் பொருட்டு நான் பூரிப்படைகின்றேன் என்று வானத்திலிருந்து ஒரு குரல் ஒலித்தது" (மாற். 1:11).

கிறிஸ்தவ நம்பிக்கையின்படி கடவுள்; தந்தை, மகன், தூய ஆவியார் என்னும் திரித்துவத்தை உள்ளடக்கியுள்ளார். இருப்பினும் கடவுள் ஒருவரே. இது ஒரு புரியாத புதிராகப் பலருக்குப் பல நேரங்களில் தோன்றுகிறது. ஆனால் இது முழுக்க முழுக்க ஒரு மறையுண்மை ஆகும். மனித அறிவுக்குப் புரிந்து கொள்ள சற்றுக் கடினமாக இருப்பது இந்தத் திரித்துவக் கடவுளின் மறையுண்மையாகும்.

திருமறையில் தொடக்க நூல் முதல் திருவெளிப்பாடு நூல் வரை படித்துப் பார்ப்போமானால் திரித்துவத்தைப் பற்றிய கோட்பாடுகளோ, வெளிப்பாடுகளோ வெளிப்படையாகக் காணப்படுவதில்லை. ஆனால் இறைவன் தன்னை மூன்றுவிதமான ஆள்தன்மையில் வெளிப்படுத்தி இருப்பதைக் காணலாம்.

மனிதனின் கூட்டு வாழ்வுக்கு அடிப்படை அன்பு. பலவிதமான மக்கள் வாழ்கின்ற சூழலில் பல்வேறு பிரச்சனைகள் பிளவுகள் வரும். ஆனால் அதையெல்லாம் திரித்துவக் கடவுள் நம்மீது கொண்டுள்ள அன்பினால் நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும். அதன்படி வாழ்ந்து காட்டவேண்டும்.

திரித்துவம் என்றால் என்ன?

கடவுள்; இறைத்தன்மையில் ஒருவராகவும் ஆள்தன்மையில் தந்தை-மகன்-தூய ஆவி என மூவராகவும் இருக்கின்றார். கடவுளின் இந்தத்தூய இயல்பே திரித்துவம் அல்லது மும்மை, ஆங்கிலத்தில் Trinity என்று அழைக்கப்படுகிறது. எனவே இவர்கள் ஒரே கடவுள் மூன்றுத் தன்மை என்பதைப் புரிந்து கொள்கிறோம். அதே நேரத்தில் மூவரும் மூன்று கடவுள்கள் அல்லர். எந்தவித வேறுபாடும் இன்றி இந்த மூவருக்கும் ஒரே அன்புறவு உண்டு.

1. ஆபிரகாமுக்கு வெளிப்படுத்திய திரித்துவக் கடவுளின் அன்பின் கூட்டமைப்பு: (தொ.நூ. 18: 1-15)

ஆபிரகாமின் வாழ்வில் நடந்த பின்வரும் நிகழ்வை மூவொரு கடவுளை அடையாளப்படுத்தும் நிகழ்வாகக் கூறலாம். பின்பு ஆண்டவர் மம்ரே என்ற இடத்தில் தேவதாரு மரங்களுக்கருகே ஆபிரகாமுக்குத் தோன்றினார். பகலில் வெப்பம் மிகுந்த நேரத்தில் ஆபிரகாம் தம் கூடார வாயிலில் அமர்ந்திருக்கையில் கண்களை உயர்த்திப்பார்த்தார். அப்பொழுது மூன்று மனிதர் தம் அருகில் நிற்கக் கண்டார். அவர்களைக் கண்டவுடன் அவர்களைச் சந்திக்கக் கூடார வாயிலை விட்டு ஓடினார். அவர்கள் முன் தரை மட்டும் தாழ்ந்து வணங்கி அவர்களை நோக்கி, என் தலைவரே, உம் கண்களில் எனக்கு அருள் கிடைத்தாயின் நீர் உம் அடியானை விட்டுக் கடந்து போகாதிருப்பீராக என்றார். இங்கு மூன்று தன்மையுடன் கூடிய வெளிப்பாடு காணப்படுகிறது. ஆனால் கடவுளின் சத்தம் தனியாக ஒலிக்கிறது (தொ.நூ. 18: 1, 13).

2. திருச்சபைக்கு வெளிப்படுத்திய திரித்துவக் கடவுளின் அன்பின் கூட்டமைப்பு: (2 கொரி. 13: 5-14)

திருத்தூதர் பவுல் தனது திருமுகத்தில் மூவொரு கடவுளின் பெயரால் இவ்வாறு வாழ்த்துகிறார். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருளும் கடவுளின் அன்பும் தூய ஆவியாரின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக. பவுலாரின் இந்தக் கூற்றுப்படி அன்பின் கூட்டமைப்பில் உதயமாவதுதான் திரித்துவம். எனவே இது மனித அறிவுக்கும் புலப்படாத மறையுண்மையை முதலாவது விளக்குகிறது. மேலும் நம் விசுவாசத்தின் அடிப்படை ஆதாரமுமாக இது அமைகிறது.

தூய ஆவியாரின் அசைவு என்பது இயக்கமளித்தலைக் குறிக்கிறது. கடவுள் தம் வார்த்தையால் அனைத்தையும் படைத்து தன் ஆவியால் அவற்றுக்கு இயக்கம் அளித்தார். பெந்தக்கோஸ்து எனப்பட்டத் திருநாளில் தம் தூய ஆவியாரால் புதிய நிறுவனமாக திருச்சபைக்கு இயக்கம் அளித்தார். எனவே கிறிஸ்துவின் உடலாகியத் திருச்சபை கிறிஸ்துவின் அன்பின் கூட்டமைப்பு ஆகும்.

3. இயேசு கிறிஸ்துவில் வெளிப்பட்ட திரித்துவக் கடவுளின் அன்பின் கூட்டமைப்பு : (மாற். 1: 1-11)

இயேசுவின் திருமுழுக்கின்போது அங்கு தந்தையின் குரலும், தூய ஆவியாரின் குரலும் வெளிப்படுகிறது. இயேசு ஆற்றிலிருந்து கரையேறிய உடனே வானம் பிளவுபடுவதையும் தூய ஆவியார் புறாவைப் போல் தம்மீது இறங்கி வருவதையும் கண்டார். அப்பொழுது, என் அன்பார்ந்த மகன் நீயே, உன்பொருட்டு நான் பூரிப்படைகிறேன் என்று வானத்திலிருந்து ஒரு குரல் ஒலித்தது.

இயேசு சிலுவையில் அறையப்படும் முன் தம் சீடர்களுக்குக் கூறியதாக யோவான் நற்செய்தியில் பின்வரும் வாக்குறுதி கொடுக்கப்பட்டு உள்ளது. அதில், தந்தையிடமிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகிற துணையாளர் வருவார். அவரே தந்தையிடமிருந்து வந்து உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார்" (யோவா. 14: 16-17).

மேலும் இயேசு விண்ணுலகம் செல்லும் முன்பாக, நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள், தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள் (மத். 28: 19) என்று திரித்துவக் கடவுளின் கூட்டுறவுக்குள்ளாக அனைத்து மக்களினத்தாரையும் ஒன்றிணைத்து அன்பின் சமூகமாகச் செயல்பட பணிக்கிறார்.

அன்பர்களே! தந்தை-மகன்-தூய ஆவியார் மூவரும் ஒரே அன்பின் கூட்டமைப்பில் இணைந்து ஒன்றித்திருப்பதுபோல நாம் ஒவ்வொருவரும் அன்பில் வாழ திரித்துவக் கடவுள் அழைப்புக் கொடுக்கிறார். "தந்தையே நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக (யோவா. 17: 21) என்று மன்றாடுகிறார். ஆக, மூவொரு இறைவனில் இருக்கும் அன்புறவு நம் வாழ்க்கையிலும் பிரதிபலிக்க வேண்டும் என திரித்துவக் கடவுளிடம் மன்றாடுவோம், ஆமென்.

ப	ஞா. 41	கீர். 69

அருள்திரு. அறிவர் K. பிறின்ஸ் குமார்

ஆயர், அன்பர்புரம்

இறைவேண்டல்

திரியேக கடவுளே, உம்மில் படைப்பாளரை நாங்கள் அறிந்திருக்கவும், மீட்பரைக் காணவும், சர்வவல்லமையுள்ளவரின் நிரந்தரமான பிரசன்னத்தை அனுபவிக்கவும், ஆவியிலும் உண்மையிலும் உம்மை ஆராதிக்கவும், எங்களுக்கு உதவி செய்யும். எங்களைப் பிரிக்கும் தடைகளைத் தாண்டுவதற்கு உம் ஒற்றுமை எங்களுக்கு ஊக்கமளிக்கட்டும். மேலான நற்குணமான அன்பு ஆட்சி செய்யும் கிறிஸ்துவின் சமூகத்தை உருவாக்க எங்களுக்கு உதவி செய்யும். உம்மோடும் தூய ஆவியரோடும் இப்போதும் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்யும் எங்களுடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாயிலாக வேண்டுகிறோம், ஆமென்.

22.06.2025

வழிபாட்டில் கடவுளின் வெளிப்பாடு

Revelation of God in Worship

1அர 8: 22-30 தி.வெ. 14: 1-7

தி.பா. 148 மாற்கு 3: 1-6

“ உமது முன்னிலையில் முழு உள்ளத்தோடு உமக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் உம்முடைய அடியார்க்கு உமது உடன்படிக்கையின்படி தவறாது பேரன்பு காட்டி வருகிறீர்” (1 அர. 8: 23).

இன்றைய உலகிற்கு ஆலயம் தேவைப்படுகிறது. ஆனால் உலகம் சந்தையை மட்டும் நாடுகிறது. இன்றைய உலகமயமாகிப்போன உலகில் எல்லாம் சந்தைப்படுத்துதலை மையமாகக் கொண்டே இயங்குகின்றன. விளம்பரங்களும் நுகர்வு கலாச்சாரமும் இணைபிரியா தோழிகளாயின. எனவே மானுடம் படைத்தவரை மறந்து படைக்கப்பட்டவற்றை மட்டுமே நாடுகிற மனநிலை அதிகம் உள்ளது. அதன் பின்னே ஓடுகின்றனர். அருட்பணி இயக்கங்களை உருவாக்கி, அருட்பணியாளர்களைக் கீழை நாடுகளுக்கு அதாவது, மூன்றாம் உலக நாடுகளுக்கு அனுப்பிய ஐரோப்பிய நாடுகளில் பல ஆலயங்கள் இன்று வணிக நிறுவனங்களாக, பொழுதுபோக்கு நிலையங்களாக மாறியுள்ளன. வழிபடும் இடங்களான ஆலயங்கள் வெறிச்சோடி கிடக்கின்றன. இறைப்பற்று, பற்றுறுதி, பக்தி நிறைந்த வாழ்வு என்னும் அத்தகைய காலங்கள் மாறி, பொழுதுபோக்கிலும் உல்லாசப் பயணங்களிலும் இன்றைய தலைமுறையினர் சுழன்றுகொண்டு இருக்கின்றனர். இறையவரை மறந்து உலகை மையப்படுத்தி வாழும் நிலை. இன்னொரு பக்கத்தில் ஆவிக்குரிய வழிபாடுகளை நடத்துகிறோம் என்று மக்களை மாயை பக்திக்குள் நடத்தும் தனியாள் சபைகள் நிறைவாய் உள்ளன. இத்தகைய சூழலில் வாழும் நாம், நம் வழிபாடுகள் பொருள் நிறைந்ததாய், இருக்கவேண்டும். இது இறைவர் எதிர்பார்ப்பு.

நம்முடைய வழிபாடு யூத சமயத்தைத் தழுவியது. குலமூதுவர் காலத்தில் வழிபாடு தனிமனிதர் குடும்ப வழிபாடாக இருந்தது. எகிப்தின் அடிமைத்தன வாழ்விலிருந்து விடுதலைபெற்று கானானில் குடியமர்ந்த யூதர்கள் மோசே வழியாகப் பெற்றுக்கொண்ட தோராவின் அடிப்படையில் அவர்களின் வழிபாடும், பலிகளும், தானிய படையல்களும் அமைந்தன. பிற்காலத்தில்

மரபுகளும், சடங்குகளும் வழிபாட்டில் முதன்மைபெற்றப் போது ஆமோஸ், ஏசாயா இறைவாக்கினர் எச்சரித்தனர் கண்டித்து இறைவாக்குரைத்தனர். சமயத்தின் பெயரால் அடிமைத்தனமும், ஆலயத்தின் பெயரால் வணிகமும், வழிபாட்டின் பெயரால் வெற்றுச்சடங்குகளும், பலிகள் என்ற பெயரால் கொள்ளையும் எருசலேம் ஆலயத்தில் நடைபெற்றபோது இயேசு சாட்டையெடுத்து ஆலயத்தில் வணிகத்தை வேறறுத்து அவர்களைத் துரத்தி ஆலயத்தை தூய்மைப்படுத்தினார். தனிமனித போராளியாகச் செயல்பட்டார். என் இல்லம் இறைவேண்டலின் வீடு (லூக்.19: 46) என்றார். நம் வழிபாடு பொருள் நிறைந்ததாய் அமைந்து இறைவெளிப்பாடை உணர்ந்துகொள்ள எப்படி இருக்கவேண்டும் என்பதைச் சிந்தனை செய்வோம்.

1) இடம் அல்ல, இருப்பு நிலை முக்கியம்

வழிபடும் இடம் (கட்டடம்) தான் அது எந்த சமயத்தின் வழிபடும் இடம் என்னும் அடையாளத்தைக் கொடுக்கிறது என்பதை நாம் அறிவோம். கோபுரம் ஒன்றில் சிலுவை இருந்தால் அது கிறித்தவ ஆலயம் என்னும் அடையாளத்தை தருகிறது. நாமும் இறையவரை வழிபட ஆலயம் செல்கிறோம். தொடக்க கால திருச்சபை இறைமக்கள் கோவிலில் தவறாது கூடிவந்தனர், கடவுளைப் போற்றினர் (தி.ப.2: 46,47). அவர்களது வழிபாட்டில் இடம்மல்ல மாறாக அவர்களின் இருப்பு நிலையே சிறப்பு. வாழ்வும் வழிபாடும் பிறருக்குச் சான்றாக இருந்தது, சான்றாளர்களாக வாழ்ந்தனர். கிறித்துவில் பற்றுறுதி கொண்டோர் அனைவரும் ஒன்றாயிருந்தனர், பகிர்ந்து வாழ்ந்தனர், நட்புறவிலும் அப்பம் பிடுவதிலும் இறைவேண்டலிலும் உறுதியாக நிலைத்திருந்தனர். அவர்கள் வாழ்வு கிறித்துவை வெளிப்படுத்தியது.

அரசர் சாலமோன் ஆண்டவருக்கென ஓர் ஆலயம் கட்டினார். அவர் ஆலயத்தில் ஆண்டவரின் பலிபீடத்தை நோக்கி நின்றுகொண்டு, வானத்திற்கு நேரே தம் கைகளை உயர்த்தி மன்றாடினார். அந்த மன்றாட்டில் “உம் அடியாரின் மன்றாட்டிற்கும் இவ்விடத்தை நோக்கிச் செய்கிற உம் மக்கள் இஸ்ரயேலர் வேண்டுதலுக்கும் செவிசாய்ப்பீராக” என்கிறார். ஆக இருப்பு நிலையை முதன்மைப்படுத்துகிறார். அரசர் யோசபேத் எருசலேம் ஆலயத்தைப் பழுதுநீக்கினார், சமயச்சீர்திருத்தம் செய்தார். எருசலேம் ஆலயத்தில் இறையவரை வழிபடுவதும், பண்டிகையைக் கொண்டாடுவதின் முக்கியத்துவத்தை மக்களுக்கு கற்றுக்கொடுத்தார். இதனால் எருசலேம் ஆலயம் இஸ்ரயேலர் வாழ்வில் மையஇடத்தைப் பெற்றிருந்தது. இதனை இயேசு கிறித்து உரையாடிய நிகழ்விலும் காணலாம் (யோவா. 4). யூதருக்கும் சமாரியருக்கும் இருந்த பிரச்சனைகளில் ஒன்று கடவுளை வழிபடும் இடத்தைப் பற்றியதாகும். இயேசுவின் காலத்தில் அப்பிரச்சனை அதிகமாக இருந்தது. இயேசுவை இறைவாக்கினராக பார்த்த சமாரிய பெண் நல்ல தீர்வைத் தருவார்

என எதிர்பார்த்தார், எனவேதான் சமாரிய பெண், "எங்கள் முன்னோர் இம்மலையில் (கெர்சிம்) வழிபட்டுவந்தனர். ஆனால் நீங்கள் எருசலேமில்தான் வழிபடவேண்டும் என்கிறீர்களே" என்றாள். ஆண்டவர் இயேசுவோ அவரிடம் நான் சொல்லுகிறதை நம்பு, நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலும் மாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளும் காலம் வருகிறது. அவரை வழிபடுவோர் அவரது உண்மை இயலபுக்கேற்ப உள்ளத்தில்தான் வழிபடவேண்டும் என்றார். வழிபடும் முறைமையே முக்கியமானது என்று கூறி அவரை முழுமையான பற்றுறுதிக்குள் அழைக்கிறார். "ஏனெனில் இரண்டு அல்லது மூன்று பேர் என் பெயரின் பொருட்டு எங்கே ஒன்றாகக் கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்களிடையே நான் இருக்கிறேன்" (மத். 11: 28). யூதர்கள் இறையவரை வழிபட இடத்தை மட்டும் முதன்மைப்படுத்தினர். எருசலேம் ஆலயம் மானிடநேயம் இல்லா இடமாக மாறியப்போது இங்கே கற்கள் ஒன்றின்மேல் ஒன்று இராதபடி எல்லாம் இடிக்கப்படும் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் இயேசு கிறித்து (மத். 24: 2). கடவுள் கட்டடத்தினுள் இருப்பவர் அல்ல மக்கள் நடுவே குடியிருப்பவர் (தி.வெ. 21: 4). ஆக இறையவரை வழிபட, வழிபாட்டில் இறைவெளிப்பாடு பெற்றிட இடம் அல்ல நம் மனநிலையே முக்கியம் ஆகும்.

2. எண்ணிக்கை அல்ல, தன்மையே முக்கியம்

1அரசர்கள் 18-ஆம் அலகில் இறைவாக்கினர் எலியாவும், பாகாலின் பொய்வாக்கினரும் கர்மேல் மலையில் தங்கள் இறைநம்பிக்கை சார்ந்து மோதினர். 1அர.18: 25-இல் எலியா பாகாலின் பொய்வாக்கினரிடம் நீங்கள் அதகம் பேராய் இருப்பதால் முதலில் ஒரு காளையைத் தேர்ந்தெடுத்து தயார் செய்யுங்கள். ஆனால் நெருப்பு மூட்டாதீர்கள் என்றார். அவர்களும் அப்படியே செய்தனர். ஆனால் எந்த பயனும் இல்லை. ஆனால் எலியா தனியொருவராய் பலி செலுத்தினார் கருத்தாய் மன்றாடினார். அம்மன்றாட்டிற்குக் கடவுள் பதில் கொடுத்தார். எண்ணிக்கையை விட வழிபாட்டின் தன்மை சிறப்பு என்பதற்கு இந்நிகழ்வு சான்று. மத். 17: 20-இல் உங்களுக்கு கடுகுளவு நம்பிக்கை இருந்தால் நீங்கள் இம்மலையைப் பார்த்து இங்கிருந்து பெயர்ந்து அங்கு போ என்று கூறினால் அது பெயர்நது போகும் என்றார். அளவு அல்ல பற்றுறுதியின் தன்மையே முக்கியம் என்பதை சுட்டிக்காட்டுகிறது. லூக். 12: 32- இல் சிறிய மந்தையாகிய நீங்கள் அஞ்சவேண்டாம் என கடவுளின் கரிசனையைப் பார்க்கிறோம். சிறிய மந்தையே என்னும் சொல் குறைந்த எண்ணிக்கையைக் குறிக்கும். குறைந்த எண்ணிக்கை என்பது திருச்சபையின் அடையாளம். உலகப் பொருட்கள் மீது கொண்டுள்ள மிகையான நாட்டத்தை விட்டுவிட்டு இயேசு கிறித்துவை முழுமையாகப் பற்றிக் கொள்ளக்கூடிய ஒரு சிறிய குழுவே அவருக்கு போதும். வழிபாட்டில் உணர்வுடனும், கடவுளிடம் ஒன்றிப்புடனும் அவரை வழிபடுதல் விடுதலை வாழ்வைத் தரும்.

3. பலி அல்ல, இரக்கமே முக்கியம்

வழிபாடு என்பது சடங்குகளையும், மரபுகளையும் நிறைவேற்றுவது அல்ல. வழிபாட்டில் சடங்குகள் முதன்மை பெற்றால் அது பொருளற்ற வழிபாடு ஆகும். யூதர்கள் தங்கள் வாழ்வில் திருச்சட்டத்திற்குக் கொடுத்த முக்கியத்துவம் போன்று மரபுகளுக்கும் முக்கியம் கொடுத்து அவைகளைக் கடைபிடித்தனர். மானிடநேயத்தைவிட திருச்சட்டமும், மரபுகளும் முக்கியம் என பரிசேயர்கள் கருதினர். யூத மரபில் ஓய்வுநாள் முக்கியத்துவம் பெற்றது. வாரத்தின் இறுதி நாளான ஏழாவது நாளில் யூத மக்கள் அனைத்து உடல் உழைப்பையும் தவிர்த்து, அந்நாளை இறை புகழ்ச்சியில் கழிக்க ஓய்வு எடுக்க வேண்டும் என்பது யூதச் சட்டமாக இருந்தது (லேவி 25: 2). இறையவர் ஆறு நாட்களில் படைப்புப் பணிகளை முடித்து ஏழாம் நாளில் ஓய்வு எடுத்துத் தமது பணிகளில் நிறைவு கண்டது எடுத்துக்கட்டாக காட்டப்படுகிறது (தொ.நூ. 2: 1-3). யூதர்கள் ஓய்வு நாளைக் கடைபிடிப்பதில், குறிப்பாக உடல் சார்ந்த பணிகளிலிருந்து ஓய்வு கொள்வதில் மிகக் கவனமாக இருந்தனர். ஆனால் இறைமகன் இயேசு கிறித்து மரபுகளைவிட மானிடநேயத்தை முதன்மைப் படுத்தினார். ஓய்வுநாளில் இரக்கச் செயல்களைச் செய்தார். தொழுகை கூடத்தில் இருந்த கை சூம்பியவருக்கு நலம் கொடுத்தார். தேவையில் இருக்கும் மக்களுக்கு நன்மைச் செய்வதும், வாழ்வைச் சரிசெய்வதும் ஓய்வுநாளின் சிறப்பு என்பதை யூதர்களுக்குத் தெளிவுப்படுத்தினார். வாழ்வும் செயலும் இணைந்த ஒன்றே வழிபாடு. அதனை இயேசு கிறித்துவின் செயலில் பார்க்கிறோம். வாழ்வும் செயலும் இரக்கத்தை மையப்படுத்தியதாக இருக்கவேண்டும் என கற்றுத்தருகிறார். பலியை அல்ல இரக்கதையே விரும்புகிறேன் என்றார் (மத். 9: 13, 12: 7). ஓய்வுநாள் சட்டமே முக்கியம் என்றவர்களிடம் ஓய்வுநாளில் மனிதருக்கு நன்மை செய்வதே அதாவது தேவையில் இருப்போருக்கு இரக்கச் செயல்களை செய்வதே முறை என்றார் (மத். 12: 12).

சமூக நீதியை ஏற்றி வைக்காத எந்தப் பலியும் பொருளற்றது என்கின்றனர் இறைவாக்கினர் (எசா. 1: 10-20, எரே. 6: 20, ஓசே. 8: 11-13). கடவுளுக்கு உகந்த பலி எவ்வாறு அமையவேண்டும் என்பதை இறைவாக்கினர்கள் தெளிவாகக் கூறியுள்ளனர். தூய பவுலாரும் உரேமையர் 12: 1, 2 ஆகிய வாசகங்களில் கடவுளுக்கு உகந்த தூய உயிருள்ள பலியாக படையுங்கள். இதுவே நீங்கள் செய்யும் உள்ளாந்த வழிபாடு என்கிறார். நன்மை செய்தலும் பகிர்ந்து கொடுத்தலுமே உண்மையான வழிபாடு (எபி. 13: 15). யாக்கோபு நூல் ஆசிரியர் 1: 27-இல் துன்புறும் அனாதைகளையும், கைம்பெண்களையும் காப்பாற்றுவதும் உலகின் தீய தகவுகளுக்கு உடன்படாமல் இருப்பதுமே உண்மையான வழிபாடு என்கிறார். இங்கெல்லாம் வழிபாடு சடங்காக அல்ல வாழ்வு சார்ந்ததாக, இரக்கத்தை வெளிப்படுத்துவதாக விளக்கப்படுகிறது.

கடவுளுக்கு நாம் வழங்கும் மறுமொழியே வழிபாடு. இறையவரின் இயல்பு, செயல்பாடு இவற்றிற்கு மனிதன் தரும் மறுமொழி இது. வழிபாடு என்பது இறையவரை உணர்ந்துகொள்வது, நம்மை அவருக்கு அர்ப்பணிப்பது. இறையவரோடு உரையாடுவது மடடுமல்ல நம்மோடு பேசும் அவரது குரலுக்கு நம் கவனத்தைத் திருப்புவதுமாகும். எனவே வழிபாடு என்பது இறையவருக்கு மானுடத்தின் மறுமொழி அல்லது பதில் செயல் எனலாம். ஆகவே நம் வழிபாடு அர்த்தம் நிறைந்ததாக இருக்கும் போது இறைவெளிபாட்டை உணரலாம், ஆமென்.

அருள்திரு. **S. அருள் ஜெப சிங்**
ஆயர், செவரக்கோடு

ப	ஞா. 8	கீர். 28

இறைவேண்டல்

அனைத்தாற்றலுள்ள கடவுளே, உம்முடைய மகனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் உம்மை எங்களுக்கு வெளிப்படுத்தியதற்காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். எங்களை நீர் சந்தித்து, எங்களுடன் எப்போதும் கூடயிருந்து, எங்கள் மூலம் செயல்பட்டு, விசுவாசப் பயணத்தில் எங்களை வழிநடத்தி முன்னெடுத்துச் செல்லுமாறு வேண்டுகிறோம். உமது சித்தத்தை நாங்கள் பகுத்தறிந்து, வழிபாட்டில் உம்மோடு நாங்கள் நெருங்கி வளர எங்களுக்கு உதவி செய்யும். இதனால் நாங்கள் நம்பிக்கையிலும் பார்வையிலும் புதுப்பிக்கப்படுவோம்; எங்கள் நம்பிக்கையில் நாங்கள் பலப்படுத்தப்பட்டு, எங்களோடு வாழும் மக்களுக்கு உம்மை வெளிப்படுத்த நாங்கள் எங்களை தயார்படுத்த, எங்களுக்கு ஞானம் தாரும். உம்மோடும் தூய ஆவியரோடும் இப்போதும் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்யும் எங்களுடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாயிலாக வேண்டுகிறோம். ஆமென்.

29.06.2025

சீடர்களை உருவாக்குங்கள்

Make Disciples

I அர. 19: 11-21 உரோ. 16: 3-16

தி.பா. 34: 11-22 யோவா. 1: 35-42

அவர்போய் முதலில் தம் சகோதரரான சீமோனைப் பார்த்து, "மெசியாவை கண்டோம்" என்றார். (யோவா. 1: 41).

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸ் தன்னிடம் சீடர்களாக வருபவர்களுக்கு ஒரு சோதனை வைப்பாராம். தொட்டியில் மீன்களை நீந்தவிட்டு, தண்ணீரை உற்றுப்பார்க்க சொல்வார். அதில் என்ன பார்க்கிறீர்கள்? என்ற கேள்விக்கு தண்ணீரையும், அதில் நீந்தும் மீன்களையும் பார்க்கிறேன் என பதில் சொல்பவருக்கு மாணவராகும் வாய்ப்பு கிடைக்கிறது. மாறாக, தன் உருவத்தைப் பார்க்கிறேன் என்பவர் தகுதி இழக்கிறார். சீடத்துவம், நம்மை மட்டும் பார்க்கிறவர்களாக அல்ல; பிறருக்கானவைகளை அறிந்திட அவர்களை ஆண்டவரிடம் அழைத்துவர அழைக்கப்பட்டிருக்கிறோம்.

சீடன் என்பதைக் குறிக்க பயன்படுத்தப்படும் மத்தேட்டஸ் என்ற கிரேக்க மொழிச் சொல்லின் அடிச்சொல்லிலிருந்து வருவதுதான் Mathematics (கணிதம்) என்பதாகும். கணிதபாடம் சில சட்டதிட்டங்களுக்கும், வரைமுறைக்கும், வாய்ப்பாடுகளுக்கும் உட்பட்டு செயல்படுகிறது. அதைப்போல் சீடத்துவமும் சில கட்டுப்பாடுகளுக்கும், வரையறைகளுக்கும் உட்பட்டது. நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீடராய் இருப்பீர்கள் என இயேசு கற்பித்தார். இயேசு சீடர்களை உருவாக்கியதுபோல நாமும் சீடர்களை உருவாக்க வேண்டும் (மத். 28: 18, 19) என்பது ஆண்டவரின் கட்டளை. Cost of Discipleship நூலை எழுதிய போன் ஹேஃபர், சீடத்துவ அழைப்பை குறிப்பிடும்போது, கிறிஸ்து ஒரு மனிதனை அழைக்கும்போது, "வந்து சாக வேண்டும்" என துணிவுமிக்க சீடத்துவத்தை முன்மொழிகிறார். நல்ல சீடரை உருவாக்குவது மிகப் பெரிய சவால் நிறைந்தது. இறையாற்றலைக் கொண்டு உண்மைச் சீடர்களை உருவாக்குவது நமது கடமையாகும்.

1. இறைவனுக்காக இழப்பதால் உருவாகும் சீடத்துவம் (I அர. 19: 21)

"அப்பொழுது அவன் இவனைவிட்டுப் போய் ஓர் ஏர்மாடுகளைப் பிடித்து அடித்து ஏரின் மரமூட்டுகளால் அவைகளின் இறைச்சியை சமைத்து ஜனங்களுக்குக் கொடுத்தான்."

இப்பகுதி இஸ்ரேல் அரசியல் கொந்தளிப்பு மற்றும் உருவ வழிபாட்டின் போது நிகழ்கிறது. எலியா தீர்க்கர் கர்மேல் மலையில் பாகால் தீர்க்கர்களை எதிர்கொண்டார். மேலும், எபிரேய கடவுளுக்கும், கானானிய கடவுள் பாகாலுக்கும் இடையே பெரும் பதற்றம் நிலவியது. இச்சூழலில் எலியா எலிசாவைக் கண்டார். எலிசா 12 ஜோடி எருதுகளைக் கொண்டு உழவு செய்துகொண்டிருந்தார். எலியா எலிசாவிடம் போய் தன் சால்வையை போட்டார். எலிசாவின் மீது மேலங்கியை வைப்பது ஒரு மிகப் பெரிய அடையாளச் செயலாகும். இதன் பொருள்: எலிசாவிற்கு எலியாவால் பயிற்சியளிக்கப்பட போகிறது. எலியாவிற்கு ஊழியம் செய்து, இறை தீர்க்கராக மாறிய போதும், எலியாவின் கைகளில் தண்ணீரை ஊற்றியவர் எலிசா (2 இரா. 3: 11). என்னை பின்தொடர் என கூறியபோது, எலிசாவின் இருதயம் பரிசுத்த ஆவியரால் தொட்டது. எலியாவைப் பின்பற்ற அனைத்தையும் இழக்க தயாரானார். இறைவனை பின்பற்ற தியாகம் தேவை என்பதை இந்நிகழ்வு கற்பிக்கிறது. அன்பான நண்பர்களையும், மிகவும் இலாபகரமான தொழிலையும் மகிழ்ச்சியுடன் விட்டுச் செல்ல முற்பட்டார். தகப்பன் - தாயை முத்தமிட்டு தீர்க்கரைப் பின்பற்ற அனுமதி வேண்டினான். வீட்டிற்குபோய் மீண்டும் வயலுக்கு வந்தான். எருதுகளின் நுகத்தை எடுத்து, அவற்றைக் கொன்று, சதையை எருதுகளின் கருவியால் வேகவைத்தார். ஒன்றுகூடிய, உதவிய மற்றும் நண்பர்கள், உறவுகளுக்கு விருந்து செய்தார். இந்தச் சேவைக்கு இழப்பை மகிழ்ச்சியாக ஏற்றார்.

வர்த்தகத்திற்கான மர கருவிகளை எரித்தார். வாழ்வாதாரம் தீயில் எரிவதைப் பார்ப்பது எப்படி இருந்திருக்கும். புதிய வாழ்விற்குப் பழையதை இழக்க முன்வரவேண்டும். இது முற்றிலும் கடவுளை நம்பும் வாழ்வின் வெளிப்பாடு. எலிசா, உலக வேலைக்கு வாரிசாக இருந்த செல்வங்களையும், பெற்றோரையும், நண்பர்களையும் விட்டுவிட்டுத் தீர்க்கரை பின்பற்றினார். அதன்மூலம் தெய்வீக விஷயங்களைப் பற்றி சிறந்த அறிவையும், புரிந்துகொள்ளுதலையும் அடைந்தார். லூக்கா 11: 33 - அப்படியே உங்களில் எவராக இருந்தாலும், தனக்கு உண்டான அனைத்தையும் கைவிடாதவர் எனக்கு சீடராக இருக்கமுடியாது.

பிலி. 3: 7, 8 - எனக்கு லாபமாய் இருந்ததை கிறிஸ்து இயேசுவுக்காக நஷ்டமாக எண்ணினேன். இப்பகுதி கடவுளை பின்பற்றுவதிலே தீவிர இழப்பையும், இறை அற்பணிப்பையும் விளக்குகிறது.

ஒரு தீர்க்கதரிசியின் நிச்சயமற்ற பாதையில் தனது பொருளாதார பாதுகாப்பை விட்டுவிட எலிசாவின் விருப்பம் வலியுறுத்துகிறது. சமையலுக்கு தன் உழவு உபகரணங்களைப் பயன்படுத்துவது, அவர் தனது முந்தைய வாழ்வுக்குத் திரும்பமாட்டார் என்ற அறிவிப்பாக கருதப்படுகிறது. இது, இவரது பாவங்களை அழிப்பது அல்லது எரிப்பது. சீடத்துவம் தன்னலமற்ற இழப்பை வலியுறுத்துகிறது. ஒரு வாழ்வாதாரத்தை உருவாக்க, நாம் சில நன்மைகளைப் பெறவேண்டும்; ஒரு வாழ்க்கையை உருவாக்க நம் உடமைகளை இழக்க வேண்டும். இழத்தலின் உச்சம் இயேசுவின் சிலுவை மரணம். ஒருவன் என்னைப் பின்பற்ற விரும்பினால் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னை பின்பற்றக்கடவன்.

2. இறைவனைப் பின்பற்றுவதால் உருவாகும் சீடத்துவம் (யோவா. 1: 37)

"அந்தச் சீடர் இருவரும் அவர் சொன்னதைக் கேட்டு இயேசுவைப் பின் தொடர்ந்தனர்".

இயேசு தம்மைப் பின்பற்ற அழைத்த முதல் இரண்டு சீடர்கள் பெத்சாயிதாவைச் சேர்ந்த மீனவர்களான அந்திரேயா மற்றும் யோவான். இவர்கள் இயேசுவுக்குச் சீடராகுமுன், இயேசுவைக் குறித்து சாட்சியளிக்க வந்த திருமுழுக்குநர் யோவானின் சீடர்களாக இருந்தனர் (யோவான் 1: 7). அவர்கள் இயேசுவைத் தனிப்பட்ட முறையில் அறிய விரும்பி, அவரைப் பார்க்க விரும்பினர். ஆகவே, இதோ கடவுளின் ஆட்டுக்குட்டி என இயேசு கடந்து செல்லும்போது யோவான் சொன்னதை அவர்கள் கேட்டபோது, தாமதமின்றி இயேசுவைப் பின்பற்றினார்கள். அந்திரேயாவும், யோவானும் இயேசுவைப் பின்தொடர்வதைப் கண்டு, நீங்கள் என்ன தேடுகிறீர்கள்? என இயேசு கேட்க, அவர்களோ, நீர் எங்கே தங்கியிருக்கிறீர்? என இயேசுவை அறிய விரும்பினர். இயேசு வந்து பாருங்கள் என அவர்களை அழைக்கிறார். முதல் சீடர்களைத் தம்மைப் பின்பற்றும்படி அழைத்தார். இன்றும் தம்மை பின்பற்ற நம்மை அழைக்கிறார்.

என்னைப் பின்பற்றுங்கள் என்பது - இயேசு நடந்ததைப் போல நடக்கவும், இயேசு நேசித்ததுபோல் அன்பு செய்யவுமே. இயேசுவை பின்பற்ற முடிவெடுப்பது ஒருமுறை எடுக்கும் முடிவல்ல; ஒவ்வொரு நாளும் நாம் தேர்ந்தெடுக்க வேண்டிய பாதை. மத். 11: 28-30-இல் சோர்வடைந்தவர்களே என்னிடம் வாருங்கள்; அதிக சுமையுடன் இருப்பவர்களே, என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். என் நுகத்தை உங்கள் மீது வைத்துக்கொண்டு என்னிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள். ஏனெனில் நான் மென்மையாகவும், மனதாழ்மையுடனும் இருக்கிறேன். மேலும், உங்கள் ஆத்துமாக்களுக்கு ஓய்வு கிடைக்கும். ஏனெனில் என் நுகம் லெகுவானது என இயேசு கூறுகிறார்.

யோவான் தனது சீடர்கள் இயேசுவைப் பின்பற்ற வழிகாட்டுகிறார். சீடர்கள் இயேசுவைக் குறித்து கேட்டபோது, "அவர் பெருக வேண்டும்; நான் குறைய வேண்டும்" என்றார் (யோவா. 3: 30). இயேசுவோடு அந்த நாளை செலவிட்டபின், "இயேசுவே மேசியா" என்று அந்திரேயாவும், யோவானும் உறுதியாக நம்பினர். பின்பு, அந்திரேயா முதலாவது தன் சொந்த சகோதரனாகிய சீமோனைக் கண்டு (யோவா. 1: 41) நாங்கள் மேசியாவைக் கண்டோம் எனக் கூறி, அவனை மேசியாவாகிய இயேசுவிடம் அழைத்து வந்து அறிமுகப்படுத்தினார். இயேசு அவனிடம் நீ யோனாவின் மகன் சீமோன். நீ கேபா என்று அழைக்கப்படுவாய். கேபா என்பதற்குப் பாறை என்பது பொருள். நாம் அவரைப் பின்பற்றினால், நம் பலவீனங்களைப் பலமாக மாற்றுவார்.

பேதுரு அந்திரேயா, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோர் கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்காக அனைவரையும் விட்டு வெளியேறியபோது தங்கள் தொழில், உடமைகள் மற்றும் பெற்றோரை விட்டு விட்டு இயேசுவைப் பின்பற்றினர் (மத். 4: 17-22). இன்றும் கடவுளின் அழைப்பு மக்களுடன் நற்செய்தியைப் பகிரவும், சான்றாளர்களாய் வாழ்ந்து, கடவுளைப் பின்பற்றுதலுமாகும்.

3. இறைசமூகத்தில் ஒன்றிணைவதால் உருவாகும் சீடத்துவம் (உரோ. 16: 16)

". . . கிறிஸ்துவின் எல்லாச் சபைகளும் உங்களுக்கு வாழ்த்துக் கூறுகின்றன"

இப்பகுதியில் உரோமாபுரியிலுள்ள 26 தனிப்பட்ட நபர்களும் அங்குள்ள 5 வீட்டு சபைகளும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவரது செயல்கள் சொல்லப்படவில்லை. இவர்களில் 9 பேர் பெண்கள். கொரிந்துவில் பவுலின் சக சீடர்கள் அத்தனைபேரையும் பவுல் தனித்தனியாக வாழ்த்துகிறார். தூய பேதுருவும் அன்பின் முத்தத்தோடு ஒருவரையொருவர் வாழ்த்தும்படியாக சொல்கிறார் (1 பேதுரு 5: 14). முத்தம் என்பது ஒருவர் மேல் கொண்டுள்ள அன்பு. யூதர்கள் ஒருவரையொருவர் முத்தமிடும் பழக்கம் அந்நாளில் இருந்தது. சீமோனிடம் இயேசு சொன்னார் நீ என்னை முத்தம் செய்யவில்லை; இவளோ, நான் உட்பிரவேசித்ததுமுதல் என் பாதங்களை ஓயாமல் முத்தம் செய்தாள்.

இன்றைய பகுதி ஒவ்வொன்றும் மற்றொன்றிலிருந்து வேறுபட்டாலும் ஒற்றுமை உள்ளது. பவுலின் குறிப்புகள் கிறிஸ்துவில் (உரோ. 16: 9, 19), கர்த்தரில் (8, 11, 1, 13), பிரியமானவர் (5, 8, 9, 12), பாதிக்கப்பட்டவர்கள் (4, 9), சகவேலையாட்கள் (7, 9) என அமைகிறது. ஒரு தனி கிறிஸ்தவர் என எதுவும் இல்லை. நாம் கிறிஸ்துவின் அன்பில் ஒன்றுபட்டுள்ளோம். மேலும்

ஆன்மிக குடும்பத்தில் ஒரு பகுதியாக இருக்கிறோம். நாம் கிறிஸ்துவின் கூட்டுவாரிசுகள். இந்த மக்கள் கிறிஸ்துவின் பணியில் ஒன்றிணைந்து தீவிரமாக இருந்தார்கள். ஆண் - பெண் என்பது முக்கியமல்ல, அடிமைகள் - சுதந்திரர் என்பது முக்கியமல்ல, சமாரியர்களா - ஏகாதிபத்திய குடும்பத்தாரா என்பது அல்ல, அவர்களுடைய ஒருமைப்பாடு இறைவனுக்குப் பணிசெய்வதில் தங்கள் நேரத்தை முதலீடு செய்வதே.

கிளமென்ட் ஒருமுறை எழுதினார்: "கடவுளின் விருப்பம் ஒரு செயல்; அந்தச் செயல் உலகம் என்று அழைக்கப்படுகிறது. ஆனால், கடவுளின் நோக்கம் அனைத்து மனுகுலத்தின் இரடசிப்பு, அந்த இரட்சிப்பை உருவாக்கும் சீடத்துவம் தேவாலயத்தில் வெளிப்பட வேண்டும்".

சீடத்துவம் ஒரு சங்கிலித் தொடர் போன்ற இணைப்புடையது. அவ்விணைப்பினை கடவுளுக்காக இழப்பதாலும், கடவுளின் வாக்குகளைப் பின்பற்றி சான்றாளர்களாய் வாழ்வதாலும் சமூக கூட்டுறவில் ஒருவருக்கொருவர் அன்புடன் இணைந்து வாழ்வதாலும் விரிவுபடுத்துவோம், ஆமென்.

உ	ஞா. 353	கீர். 418

அருள்திரு. அறிவர். T. ராஜன்
ஆயர், புதுக்குடி

இறைவேண்டல்

இறையாண்மையுள்ள கடவுளே, நாங்கள் புறப்பட்டுச் சென்று நற்செய்தியை அறிவிக்கவும், அனைத்து நாட்டவரையும் சீடர்களாக்கவும், உமது அன்பின் யதார்த்தத்தை வார்த்தையாலும் செயலாலும் வெளிப்படுத்தவும், எங்களை சீடர்களாக மாற்றிய உமது மகனுக்காக உமக்கு நாங்கள் நன்றி செலுத்துகிறோம். உமது சேவைக்காக எங்கள் ஒவ்வொருவரையும் பலப்படுத்தவும், ஆயத்தப்படுத்தவும், ஊக்கப்படுத்தவும் உம்மிடம் தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறோம். உம்மோடும் தூய ஆவியரோடும் இப்போதும் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்யும் எங்களுடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாயிலாக வேண்டுகிறோம், ஆமென்.

நலமருளும் ஆண்டவர்

யோவா. 9: 1-7

"நீர் சிலோவாம் . . . பார்வை பெற்றுத் திரும்பி வந்தார்" (யோவா. 9: 7).

நம்முடைய ஆண்டவருக்குப் பல குணாதிசயங்கள் காணப்படுகின்றன. பல்வேறு நாமங்கள் அவரின் செயல்களை விவரிக்கின்றன. அவ்வாறு யொகோவா ரஃபா என்னும் நாமம் நம்முடைய ஆண்டவரின் நலமருளும் தன்மையை எடுத்துரைக்கும் சொல்லாகக் காணப்படுகிறது. நலமருளும் ஆண்டவரின் மாறாத அருள் நமக்கு எல்லா நிலைகளிலும் எல்லாரிடத்திலேயும் எப்படிப் பொழிந்தருள்கின்றது என்பதை நாம் பின்வரும் குறிப்புகளின் வாயிலாகப் புரிந்து கொள்ளலாம்.

1. அறியாமையின் இருள் அகற்றி நலமருளுகிறார்

நற்செய்தி நூல்களில் பிறவியிலேயே உடல் ஊனமுற்ற அல்லது நோயுற்றிருந்த ஒருவரை இங்கு மட்டுமே பார்க்கிறோம். இந்த ஊனத்தினை குறித்து யூதர்கள் கொண்டிருந்த நம்பிக்கையினை இயேசுவிடம் கேள்வியாக எழுப்புகின்றனர். எல்லா பெருந்துன்பமும் பாவத்தின் விளைவாலேயே என்பது அவரது நம்பிக்கை (யோவான் 9: 3). சில வேளைகளில் ஒரு தீய பாவத்தினால் இவ்வாறு வரக் காரணமாயிருந்ததைக் குறித்தும் திருமறையிலும் பார்க்கலாம், யோவான் 5: 14-இல் அதிகக் கேடானது ஒன்றும் உனக்கு வராதபடிக்கு இனி பாவம் செய்யாதே என்று இயேசு எச்சரிக்கின்றார். மேலும் கடவுளுடைய இரக்கம், அன்பு, வல்லமை போன்றவை வெளிப்படும்படியாக சில துன்பங்கள் அனுமதிக்கப்படுகின்றன. நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது, அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக்கொள்ளுகிறேன் என திருப்பாடல்கள் ஆசிரியர் குறிப்பிடுகிறார் (தி.பா. 119: 71). யோவான் 9: 3-இல் பார்வையற்றவராய் பிறந்த இவரைக் குறித்து நீங்கள் எண்ணுகின்றபடி அல்ல என்று இயேசு விடைகொடுத்து அவர்கள் அறியாமையின் இருளிலிருந்து நலம் அருளுகிறார்.

2. புதுப்பிக்கும் ஆவிவழங்கி நலமருளுகிறார்

இயேசு இங்கு தம்முடைய கிரியையை வெளிப்படுத்திட உமிழ்நீர், மண் இவற்றை பயன்படுத்துகிறார். உமிழ்நீரால் சேறு உண்டாக்கி அதை பார்வை இழந்தவரின் கண்களில் பூசினார். உமிழ்நீர் என்பது இயற்கையாகவே நமது உடலில் சுரக்கிறது. இதற்கு மருத்துவகுணம் உண்டு. முகத்தில் காணப்படும் பருக்கள் குணம் அடைய பொதுவாக உமிழ்நீரை எடுத்து பூசுவோம். அதுவும் காலையில் அவ்வாறு செய்வது சிறப்பு. உமிழ்நீர் மிகுந்த

மருத்துவச் சக்தி கொண்டது என்று அன்றைய மக்கள் நம்பினர். அவ்வாறு இயற்கையோடு இணைந்து நிற்கும் நம்பிக்கையை இயேசு இங்கு பயன்படுத்துகிறார். மண்ணுக்கும் மனிதருக்கும் பெரிய தொடர்பு காணப்படுகிறது. மனிதன் மண்ணிலிருந்து கடவுளின் ஆவியால் பிறப்பிக்கப்பட்டவன். உமிழ்நீர் கடவுளுடைய ஆவிக்கு அடையாளமாக செயல்பட்டு, புதுப்பிக்கும் ஆவி இங்கே செயல்புரிந்து, அனுப்புதல் என்று அழைக்கப்படுகின்ற சீலோவாம் குளத்தில்சென்று கழுவி சுத்தப்படுத்துதல் நடைபெறுகின்றது. கழுவிக் களிமண்ணை அகற்றுவதாகும். இங்கு ஞானஸ்நானத்திற்கு அடையாளமான செயல் நடைபெற்று வாழ்வு புதுப்பிக்கப்படுகிறது.

3. அர்ப்பணிப்பின் உணர்வினை ஊட்டி நலமருளுகிறார்

நீர் சீலோவாம் குளத்துக்குப் போய்க் கண்களைக் கழுவும் என்று கூறிய இயேசுவின் வழிகாட்டுதலுக்குத் தன்னை அர்ப்பணித்து அவரும் போய்க் கழுவிப் பார்வை பெற்றுத் திரும்பி வந்தார். கீழ்படிதலுக்கு அடையாளமான ஒப்படைப்பு அம்மனிதரிடம் காணப்பட்டதினாலேயே நலமருளும் ஆண்டவர் அருளும் புதுவாழ்வு அவரால் பெற்றுக்கொள்ள முடிந்தது. மாறாக அந்தப் பார்வை அற்ற நபர் இயேசு தன் கண்களில் சேறு பூசியுள்ளார் அதனை அங்கு சென்றுதான் கழுவ வேண்டுமா? என்னிடம் வைத்திருக்கும் தண்ணீரால் அதனைச் சுத்தம் செய்தால் போதுமே என்று தன்னில் எண்ணியிருப்பாரானால் இந்த அற்புதம் அவரால் பெற முடியாமல் போயிருக்கக் கூடும். இயேசு கிறிஸ்துவின் ஒவ்வொரு அற்புத அடையாளங்களிலும் அதனைச் செய்யவிருக்கும் மக்களின் அர்ப்பணிப்பின் உணர்வினை அறிய அவர்களைச் சோதித்து, அற்புதங்களை நிகழ்த்தியுள்ளதைப் படிக்கிறோம். பழைய உடன்படிக்கை புத்தகத்திலும் இதனை நம்மால் பார்க்க முடியும். உதாரணமாக நாகமானை எலிசா நீ போய் யோர்தானிலே 7 முறை மூழ்கு என்று அனுப்பியுள்ளார், அதற்கு நாகமான் எதிர்ப்பு தெரிவிப்பதை நாம் பார்க்கலாம். பின்னர், அவர் கீழ்படிந்தபோது மாத்திரமே அவரால் அற்புதத்தினைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. அவ்வாறு இங்கே ஒரே இடத்தில் முடங்கி இருக்கும் இந்தப் பிறவியிலேயே பார்வை அற்ற நபரை அர்ப்பணிப்பிற்கு நேராகச் செயல்பட உணர்வினை ஊட்டிப் புது வாழ்விற்கு நேராகப் பயணிக்க வைக்கிறார்.

நாமும் நலமருளும் ஆண்டவருக்கு நம்மை முழுமையாக அர்ப்பணிக்கும்போது நம்முடைய அறியாமையின் இருள் அகற்றி, புதுப்பிக்கும் ஆவியினை நமக்கு வழங்கி ஆசீர்வதிப்பார். ஆமென்.

பு	ஞா. 43	கீர். 429

திரு. J. தேவ ராஜ ஆல்வின்

திருப்பணிவிடையாளர், கானான் கன்னன்குளம்

கணக்குப் பார்க்காமல் கொடுத்தல்

Giving Without Counting the Cost

தொ.நூ. 13:8-18 2 கொரி. 8:1-15

தி.பா. 15 மாற். 14:3-11

"ஆர்வத்தோடு கொடுத்தால், தம் நிலைக்கேற்றவாறு எவ்வளவு கொடுத்தாலும் அது இறைவனுக்கு ஏற்புடையதாகும்" (2கொரி. 8: 12).

"பெற்றுக்கொள்வதைவிட கொடுத்தலே பேறுடைமை" என்கிறது கிறிஸ்துவின் போதனை. நல்ல பல சேமிப்புத் திட்டங்களை விளம்பரப்படுத்துகின்ற இந்த நவீன உலகிலே, "இருப்பதை எல்லாம் ஏழைகளுக்குக் கொடுங்கள் அப்போது நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள்" என்கிறது திருவிவிலியம். எனவே கொடை என்பது எப்படி இருக்கவேண்டும் என்பதற்கான திருமறை சார்ந்த சில வழிகாட்டல்களை நாம் கற்றுக் கொள்வோமாக.

பெற்றுக்கொள்வதே கிருபை என்கிறது சுயநலம். ஆனால் கொடுப்பதே கிருபை என்கிறது திருவிவிலியம். கிறிஸ்தவ வாழ்வு என்பது கொடுத்தல் சார்ந்ததே. கிறிஸ்து நமக்காக தன்னையே கொடுத்து தமது கிருபையை வெளிப்படுத்தினார். நாமும், நம்மையும், நம்முடையவைகளையும் கிறிஸ்துவுக்காக, அவரது மக்களுக்காகக் கொடுப்பதற்கு அழைக்கப்படுகின்றோம். ஆம்! அதுவே கிறிஸ்தவ வாழ்க்கை. இன்றைய திருமறைப் பாடங்கள்அனைத்தும் கொடுத்தலின் மாண்புகளை வெளிப்படுத்தும் பகுதிகள். ஆனாலும் இரண்டாம் பாடத்தில் (2 கொரி. 8: 1-15) திருத்தூதுவராகிய பவுல் கொரிந்து சபைக்குக் கடிதம் எழுதும்போது கணக்குப்பார்க்காமல் கொடுப்பது குறித்து அதிகமாகக் கற்றுக்கொடுக்கின்றார். பவுலடிகளார் இன்னலுறும் மக்களுக்காக நிதி திரட்டியபோது, கிரேக்கத் திருச்சபைகள் அனைத்திலும் முதன்முதலில் நன்கொடை வழங்கியவர்கள் கொரிந்தியர்களே. ஆனால், இவர்களோ பின் நாட்களில் நன்கொடை கொடுப்பதில் பின்தங்கிவிட்டனர். இப்போது இவர்கள் செய்துவந்த உதவியை மீண்டும் நிறைவேற்றுவதற்கு நினைப்பூட்டப்படுகின்றனர். இதற்காக, மாசிதோனியா நாட்டு மக்களின் உதாரத்துவத்தினை உதாரணமாய் எடுத்துரைக்கின்றார். கொடுப்பதில் நாம் அறிந்திருக்க வேண்டிய சில திருவிவிலிய உண்மைகளை மூன்று தலையங்கங்கள் வழியாக நாம் கற்றுக்கொள்வோமாக.

1. கொடுக்கும் மனப்பான்மை (2 கொரி. 8: 1-4)

மாசிதோனியா நாட்டு சபைகளில் முதன்மையானவர்கள் பிலிப்பி மற்றும் தெசலோனிக்கே சபைகள் ஆகும். இச்சபையார், தாங்களே அதிக வறுமையில் மூழ்கி இருந்தாலும், தேவையிலுள்ள பிற கிறிஸ்தவர்களுக்கு வள்ளன்மையோடு வாரி வழங்கினார்கள். அவர்களது கொடுக்கும் மனப்பான்மை எவ்விதம் இருந்தது என்பதைப் பவுலடிகளார் மூன்று நிலைகளில் குறிப்பிடுகின்றார்.

a) ஆர்வத்துடன் கொடுத்தனர் (2 கொரி. 8: 4)

மாசிதோனியா கிறிஸ்தவர்கள் இறை மக்களுக்குச் செய்யும் அறப்பணியில் பங்குபெறும் பேறு தங்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென மிகவும் வருந்திக் கேட்டுக்கொண்டார்கள். யார் யாரோடு கேட்பது? ஊழியக்காரர்கள் விசுவாசிகளிடம் உதவிகள் கேட்பது இயல்பு. ஆனால், இங்கே மாசிதோனியா நாட்டு விசுவாசிகள் ஊழியக்காரராகிய பவுலிடம் "நாங்கள் தருவதை வாங்கிக் கொள்ளுங்கள்" என வருந்திக் கேட்டுக்கொண்டார்கள். இன்றைய நமது நிலை என்ன? நமது பணம் நம்முடையதல்ல, அது கர்த்தருடையது. நாம் நமது விருப்பத்தின்படியோ, கணக்கின்படியோ அல்ல. அவருடைய விருப்பத்திற்கும், கனத்திற்கும் ஏற்றபடி கொடுக்கத் தீர்மானிக்க வேண்டும். யாரோ ஒருவர் கேட்பதினால் அல்ல, கேட்காமலேயே ஆர்வத்துடன் பிறரது தேவைகளுக்காய் நாம் உதவிக்கரம் நீட்ட வேண்டும்.

b) ஆற்றலுடன் கொடுத்தனர் (2 கொரி. 8: 3)

"அவர்கள் தங்களால் இயன்ற அளவுக்குத் தாங்களாகவே கொடுத்தார்கள்". மாசிதோனியா மக்கள் யாரோ ஒருவரால் உளவியல் ரீதியாக கட்டாயப்படுத்தப்பட்டுக் கொடுக்கவில்லை. மாறாக தங்கள் முழு விருப்பத்தினடிப்படையில் கொடுத்தனர். ஆம், வாங்குவதில் அல்ல, கொடுப்பதில்தான் மகிழ்ச்சி என்பதனைப் புரிந்து, அதன் மூலம் மிகுந்த மனமகிழ்ச்சியடைந்தனர்.

c) அதிகபட்சமாகக் கொடுத்தனர் (2 கொரி. 8: 3)

மாசிதோனியா மக்கள், "அளவுக்கு மீறியே கொடுத்தார்கள்". ஆம், அவர்கள் மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள். உதாரத்துவம் அல்லது தாராள குணம் என்பது, ஒருவன் எவ்வளவு கொடுக்கிறான் என்பதை வைத்துக் கணக்கிடப்படுவதில்லை. அவன் தனக்காக எவ்வளவு மீதி வைத்துக் கொள்ளுகிறான் என்பதை வைத்துக் கணக்கிடப்படுகிறது. உதாரணமாக இயேசுநாதர் குறிப்பிட்ட, ஏழை விதவை காணிக்கைபோட்ட நிகழ்வில், "ஒரு ஏழை கைம்பெண் ஓர் கொதிராந்துக்கு (கொதிராந்து என்பது தெனாரியத்தில்

அறுபத்து நான்கில் ஒரு பகுதி மதிப்புடைய காசு) இணையான இரண்டு காசுகளைக் காணிக்கைப் பெட்டியில் போட்டார். அப்போது காணிக்கைப் பெட்டியில் காசு போட்ட மற்ற எல்லாரையும் விட மிகுதியாக இவர் போட்டிருக்கிறார். ஏனெனில் அவர்கள் அனைவரும் தங்களுக்கு மிகுதியான செல்வத்திலிருந்து போட்டனர். இவரோ, தமக்குப் பற்றாக்குறை இருந்தும் தம்மிடம் இருந்த அனைத்தையுமே, ஏன் தம் பிழைப்புக்காக வைத்திருந்த எல்லாவற்றையுமே போட்டுவிட்டார்" என்று இயேசுநாதர் அப்பெண்மணியைக் குறித்து மெச்சி கொள்கிறார் (மாற்கு 12: 41-44). ஆம்! நாம் எவ்வளவு அதிகமாகக் கொடுக்கிறோமோ அவ்வளவு அதிகமாகத் திரும்பப் பெற்றுக்கொள்ளுவோம். "குறைவாக விதைப்பவர் குறைவாக அறுவடை செய்வார். நிறைவாக விதைப்பவர் நிறைவாக அறுவடை செய்வார்" (2 கொரி. 9: 6). "முகம் மலர்ச்சியோடு கொடுப்பவரே கடவுளின் அன்புக்கு உரியவர்" (2 கொரி. 9: 7). F. B. Meyer said that " He is the richest man in the esteem of the world who has gotten the most. He is the richest man in the esteem of heaven who has given the most".

2. கொடுப்பதற்கானக் காரணங்கள்

ஏன் நாம் கொடுக்க வேண்டும்? என்பது இன்றைய பலரது கேள்வி. அதற்குரிய பதிலினை நாம் விபரமாக அறிந்து கொள்வோமாக.

a) ஆன்மிக வாழ்வின் வளர்ச்சிக்காக (2 கொரி. 8: 7)

கொரிந்தியர்கள் கடவுளுடைய கிருபையிலும், கடவுளுடைய வரங்களிலும் பெருகியிருந்தார்கள். அதுபோல இன்னும் ஆன்மிக வாழ்வின் வளர்ச்சிக்காக இந்த அறப்பணியிலும் அவர்கள் முழுமையாய் ஈடுபட வேண்டும் என்கிறார் பவுலார். நாமும் நம்முடைய ஆன்மிக வளர்ச்சிக்காகக் கொடுத்து உதவ முன்வர வேண்டும்.

b) அன்பின் உண்மையை சோதிக்கும் பொருட்டாக (2 கொரி. 8: 8)

திருத்தூதுவராகிய பவுல் கொரிந்தியருக்குக் கடிதம் எழுதும்போது "நான் இதை உங்களுக்கு ஒரு கட்டளையாக சொல்லவில்லை. மாறாகப் பிறருடைய ஆர்வத்தை எடுத்துக்காட்டி உங்கள் அன்பு உண்மையானதா எனச் சோதிக்கவே இவ்வாறு செய்கிறேன்" என குறிப்பிடுகின்றார். பொதுவாகக் கொடுத்தலின் மூலமாகத்தான் அன்பு வெளிப்படுத்தப்படுகிறது. அன்பு எங்கு உண்டோ, அங்கே கொடுத்தலும் பரிபூரணமாய்க் காணப்படும். ஏமிகார் மிக்கேல் அம்மையார் கூறும்போது "you can give without loving,but you can't love without giving" என்று குறிப்பிடுகிறார். கொடுப்பது அன்பின் வெளிப்பாடு. இயேசுநாதர் நம்மீது அன்பு கொண்டதினால், தம்மையே நமக்காகத் தந்தார். நாம் அன்பு செய்கிறோம் என்று சொல்லிக்கொள்கிறோம். ஆனால் நாம் கிறிஸ்துவுக்காக என்ன செய்தோம்? பிறருக்காக என்ன செய்கிறோம்? என்பது கேள்விக்குறியே.

c) சமநிலை உருவாக்கும் படியாக (2 கொரி. 8: 13 - 15)

"மற்றவர்களின் சுமையைத் தணிப்பதற்காக நீங்கள் துன்புற வேண்டும் என்று நாங்கள் சொல்லவில்லை. மாறாக, எல்லாரும் சமநிலையில் இருக்கவேண்டும் என்றே சொல்கிறோம்" என்பது பவுலடியாரின் கருத்து. ஒரு கூட்ட மக்கள் துன்புறும்போது, நாம் மட்டும் செழிப்பில் இருப்பது அல்ல. அவர்களும் வாழ்வுபெற நாம் கொடுக்கவேண்டும் என்பதே ஆண்டவரின் எதிர்பார்ப்பு. எந்தவித கணக்கும் பாராது, பிரதிபலன் எதிர்பாராது நாம் கொடுக்கவேண்டும். "இன்று நாம் யாரோ ஒருவர் தேவைக்கு உதவினால் நாளை நம் தேவைக்கு யாரோ ஒருவர் உதவுவார்". இதனைத்தான் பவுல், சமநிலை பிரமாணம் என்று குறிப்பிடுகின்றார்.

3. கொடுக்கும் முறைமை

கொடுக்கும் முறைகளில் இரண்டு மாதிரிகளைப் பவுல் அடிகளார் இங்கே கற்றுத் தருகிறார்.

a) கிறிஸ்துவின் மாதிரி (2 கொரி. 8: 9)

"நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் அருட்செயலை அறிந்திருக்கிறீர்களே! அவர் செல்வராயிருந்தும் உங்களுக்காக ஏழையானார். அவருடைய ஏழ்மையினால் நீங்கள் செல்வராகுமாறு இவ்வாறு செய்தார்". ஆம்! ஈகையின் மூலம் ஐசுவரியவான் தரித்திரர் ஆனார். அவருடைய தரித்திரத்தினாலே அதாவது அவருடைய சிலுவை மரணத்தினாலே, நாம் ஆவிக்குரிய ஐசுவரியவான்களானோம். இயேசுநாதர் சிலுவை மரணத்தின் மூலமாக உடைமைகள் மட்டுமல்ல, தமது சரீரத்தையும் இழந்தார். கிறிஸ்து நமக்காக இத்தனைப் பெரிய தியாகத்தைச் செய்திருக்கும்போது, நாமும்அவரைப் பின்பற்றி நம்மையும், நம்முடையவைகளையும், அவருக்காகவும் பிறருக்காகவும் கொடுக்காமல் இருப்பது எப்படி? ஆம்! கிறிஸ்து ஐசுவரியவான்கள் எவ்விதம் கொடுக்கவேண்டும் என்பதற்கு மாதிரியானார்.

b) மாசிதோனியரின் மாதிரி (2 கொரி. 8: 1, 2)

மாசிதோனியா திருச்சபையின் மக்கள், தங்களுக்கு ஏற்பட்ட இன்னல்களால் கடுமையாகச் சோதிக்கப்பட்டபோதும் அவர்கள் எப்போதும் மகிழ்ச்சி நிறைந்தவர்களாய் இருந்தார்கள். அவர்கள் வறுமையில் மூழ்கியிருந்தாலும் வள்ளன்மையோடு வாரி வழங்கினார்கள். ஆக! மாசிதோனியா மக்கள், தரித்திரர்கள் எப்படி கொடுக்கவேண்டும் என்பதற்கு மாதிரிகளாய் இருக்கிறார்கள். நாம் நமது தரித்திர நிலைமையிலும், மாசிதோனியா மக்களைப்போன்று, பிறருக்குக் கொடுக்கவேண்டும். எந்த நிலையில் இருந்தாலும் பிறருக்கு மன ரம்மியமாய், மன மகிழ்வாய் கொடுத்து உதவுவோம். "மிகச் சிறியவற்றில் நம்பத்தகுந்தவர் பெரியவற்றிலும்

நம்பத்தகுந்தவராய் இருப்பார். மிகச் சிறியவற்றில் நேர்மையற்றவர் பெரியவற்றிலும் நேர்மையற்றவராய் இருப்பார்" (லூக்கா 16: 10). எனவே, நம்மிடம் இருப்பவைகளில் நேர்மையாய், உண்மையாய்ப் பிறருக்கு பகிர்ந்தளிப்போம்.

நியாயத்தீர்ப்பு நாள் ஒன்று உண்டு. அன்று நல்லோர் வலப்பக்கமும், தீயோர் இடப்பக்கமும் நிறுத்தப்படுவார்கள். வலப்பக்கம் நிற்பவர்கள் ஏழைகளுக்கு உதவியவர்கள், அவர்கள் வான்வீட்டில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். பிறருக்கு உதவுகின்ற மனித நேய சிந்தனை இல்லாதவர்கள் விண்ணகத்தில் நுழைய முடியாது என்பதே திருவிவிலியப் போதனை. ஆம்! கொடுங்கள்! கணக்குப் பார்க்காமல் கொடுங்கள்! மனிதநேயம் என்பது பெறுதலில் அல்ல, கொடுத்தலில்தான் நிறைவுபெறும். கொடுக்கக் கொடுக்க அன்பு வளரும், திருச்சபை மலரும், ஆமென்.

ப	ஞா. 285	கீர். 398

அருள்திரு. T. லிபின் ராஜ்

ஆயர், கண்ணனூர்

இறைவேண்டல்

அருள் நிறைந்த கடவுளே, உமது மகனாகிய எங்கள் ஆண்டவராகிய இயேசுவின் மூலமாக நீர் வெளிப்படுத்திய உமது சுயநலமற்ற அன்பிற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். கிறிஸ்து எங்களுக்காக ஏழையானார் என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம்; நாங்கள் முழுமையாய் இருப்பதற்காக அவர் வெறுமையாக மாறினார். எங்கள் வாழ்விற்காக அவர் தன்னை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தார். தாராள மனப்பான்மையுடையவர்களாய் மற்றவர்களுக்கு கொடுப்பதில் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்ற எங்களுக்கு ஆற்றல் தாரும். உம்மோடும் தூய ஆவியரோடும் இப்போதும் எப்போதும் வாழ்ந்து ஆட்சி செய்யும் எங்கள் ஆண்டராகிய இயேசு கிறிஸ்துவின் வாயிலாக வேண்டுகிறோம், ஆமென்.

இறையியல் கல்வி: நம்பிக்கைக்குரியவர்களை உருவாக்குதல்

Theological Education: Making of the Faithful

யோசு. 4: 1-9 1தீமொ. 6: 11-16

தி.பா. 1 மத். 13: 1-9

> *"கடவுளின் மனிதனாகிய நீ, இவற்றிலிருந்து தப்பி ஓடு. நீதி, இறைப்பற்று, நம்பிக்கை, மன உறுதி, பணிவு ஆகியவற்றை நாடித்தேடு. விசுவாச வாழ்வு என்னும் போராட்டத்தில் ஈடுபடு . . .* (1 தீமொ. 6: 11, 12).

இயேசுவின் வார்த்தைகளை நடைமுறையில் செயல்படுத்துவது கடினமானது என்று கிறிஸ்தவர்களில் சிலர் நினைக்கின்றனர். ஆனால் கிறிஸ்துவைப் பின்பற்றுவது என்பது "ஏணிப்படியில் ஏறுவது" போன்றது என்று சாது சுந்தர் சிங் குறிப்பிடுகின்றார். முதல் படியில் நுழைந்தவுடன் அடுத்த படியில் ஏறலாம். முதல் படியிலிருந்து கடைசிப் படியை ஒரேயடியாக ஏறுவது இயலாத காரியம் நம்பிக்கைக்குரியவர்களை உருவாக்குவதும் படிப்படியாக நிகழக் கூடியது. நம்பிக்கைக்குரியோர் என்போர் இறையியல் கல்வி கற்போர் மட்டுமன்று; கிறிஸ்தவ விசுவாசம் கொண்டுள்ள அனைத்து ஆண்களும் பெண்களுமாவர். இந்த நம்பிக்கைக்குப் பலரைக் கிறிஸ்துவுக்காக உருவாக்கியவர் பவுல். அவர் இளைஞரான தீமோத்தேயுவை நம்பிக்கைக்குரியவராக உருவாக்கும் போது 1 தீமொத்தேயு 6: 11-இல் "கடவுளின் மனிதன்" என்று குறிப்பிடுகின்றார். இ.ச. 33: 1-இல் மோசே கடவுளின் மனிதன் என்று அழைக்கப்படுகின்றார். 1 அர. 17: 24-இல் எலியா போன்ற இறைவாக்கினர் கடவுளின் மனிதர் என்று அழைக்கப்படுகின்றனர். கடவுளின் மனிதரை அல்லது நம்பிக்கைக்குரியோரை உருவாக்குவது அவசியம் என்றும் திருமறை அதற்கு உதவிச் செய்வதாகவும் 2 தீமொத். 3: 16, 17 ஆகிய வசனங்கள் கூறுகின்றன. 1 தீமொ. 6: 11, 12 வசனங்களில் இளைஞனான தீமொத்தேயு நம்பிக்கை உடையவராகத் திகழ்வதற்குச் செய்ய வேண்டிய மூன்று காரியங்களைக் குறிப்பிடுகின்றார்.

1. தப்பி ஓடு (Flee) (1 தீமொ. 6:11)

கிறிஸ்தவ வாழ்க்கையில் தப்பி ஓட வேண்டிய பல காரியங்கள் உள்ளன. 1கொரி. 6:18 இல் "பாலியல் ஒழுக்கக் கேட்டை விட்டு ஓடுங்கள். ஒரு

நபர் செய்யும் மற்ற எல்லாப் பாவங்களும் உடலுக்கு வெளியே உள்ளது. ஆனால், பாலியல் ஒழுக்கக் கேடானது தனது சொந்த உடலுக்கு எதிராக உள்ளது (1 கொரி. 6: 18) என்று பவுல் கூறுகின்றார். 1 கொரி. 10: 14 இல் "சிலை வழிபாட்டை விட்டு விலகுங்கள்" என்கிறார். 2 தீமொ 2 :22 இல் "இளமைப் பருவ உணர்வுகளை விட்டு வெளியேறு" என்கிறார். அப்படியானால் நாம் எதிலிருந்து தப்பி ஓட வேண்டும்? எல்லாப் பாவங்களிலிருந்தும் ஓடிப்போக வேண்டும்". "தீமையை வெறுத்து நன்மையைப் பற்றிக் கொள்ளுங்கள்" என உரோமர் 12:19 இல் பவுல் கூறுகின்றார். ஆனால் பவுல் தீமொத்தேயுவிடம் இவைகளை விட்டுத் தப்பி ஓடு என்று கூறும்போது முந்தைய பகுதியில் அவர் எச்சரித்தவைகளை மனதில் வைத்திருந்தார் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். குறிப்பாகப் பண ஆசை, மனநிறைவு இல்லாமை, பெருமை, சண்டையிடுதல் ஆகியவற்றை விட்டு ஓடும்படி வலியுறுத்துகின்றார்.

திறமையான போர்வீரன் நின்று போராடுவதற்கான நேரத்தையும், சரியான நேரத்தில் தப்பி ஓடுவதற்கான அறிவையும் பெற்றிருப்பான். கிறிஸ்துவின் உண்மையுள்ள ஊழியன் பாவத்தை விட்டு ஓடுவதற்கு அறிந்திருக்க வேண்டும். பலவேளைகளில் நாம் பாவம் செய்வதற்கான சோதனையில் மனநிறைவுடனும், வசதியாகவும் இருப்பதால் அதனை விட்டு ஓடாமல் இருக்கிறோம். சிங்கத்தை வெகு தூரத்தில் பார்த்தவுடனேயே ஓடிவிடுகிறோம், அது நெருங்கி வரவோ அல்லது நாம் அதனை நோக்கி நெருங்கி செல்லவோ அனுமதிப்பதில்லை. அதுபோல நம்பிக்கைக்குரிய பணியாளர்களாகப் பாவத்தை கண்டு தப்பி ஓட அழைக்கப்படுகிறோம்.

2. நாடித் தேடு (Pursue) (1 தீமொ. 6: 11)

நம்பிக்கைக்குரியோர் தீமையை விட்டு ஓடுவது மட்டுமல்ல, கடவுளையும் இறைமையையும் நாடித் தேடுவதும் அவசியமானது. எபே. 4: 22-24 வரையுள்ள வசனங்களில் பவுல், பழைய மனிதருக்குரிய இயல்பைக் களைந்து புதிய மனிதனுக்குரிய இயல்பை அணிந்து கொள்ள அழைக்கிறார். 11 ஆம் வசனத்தில் பவர் மொழிபெயர்ப்பின்படி ஆறு காரியங்களை நாடித்தேட அழைக்கிறார். முதலில் அவர் நீதியைக் குறிப்பிடுகின்றார். கிறிஸ்துவில் நீதிமானாக்கப்பட்ட தீமோத்தேயு, பாவம் ஆளுகை செய்யாது (உரோமர் 6: 12-14) கடவுளுக்கு முன்பாக நேரடியாக வாழ்வதை "நீதி" என பவுல் குறிப்பிடுகின்றார். இரண்டாவது இறைப்பற்றைக் கூறுகின்றார். "பக்தியுள்ள எனும் வார்த்தை "திமிர்பிடித்த மற்றும் முட்டாள்தனமான அணுகுமுறை இன்றி பணிவான, அன்பான, இதயபூர்வமான சமயம் சார்ந்த அணுகுமுறைகளைக் குறிப்பிடுகின்றது. இத்தகைய அணுகுமுறை கொண்டவராகத் தீமோத்தேயு விளங்க வேண்டுமெனப் பவுல் விரும்புகிறார். மூன்றாவதாக கிறிஸ்து வழியாக கடவுளிடம்

நம்பிக்கைக் கொள்வதைப் பவுல் குறிப்பிடுகின்றார். ஊனியல்பின்படி நோக்காது, வாக்குறுதிகளை நம்பி பற்றுறுதியுடன் வாழ அழைக்கின்றார். தீய ஆவி பிடித்திருந்த சிறுவனின் தந்தை வேண்டிக்கொண்டதைப் போன்று, என் நம்பிக்கையின்மை நீங்க உதவும்! (மாற்கு 9: 24) என்று கடவுளிடம் நாம் வேண்டுதல் செய்ய அழைக்கப்படுகின்றோம். நான்காவதாக, கடவுளோடும் மனிதனோடும் அன்புடன் வாழ்வதைப் பவுல் குறிப்பிடுகின்றார். 1 யோவான் 4: 7-12 வரையுள்ள வசனங்களில் நாம் ஒருவரையொருவர் அன்பு செய்ய வேண்டுமெனவும், அவ்வாறு அன்பு கூருகையில் ஆண்டவர் நம்மில் நிலைத்திருப்பார் என்றும், கடவுளின் அன்பு நம்மில் பூரணப்பட வேண்டுமெனவும் யோவான் குறிப்பிடுகின்றார். ஐந்தாவதாக மன உறுதி அல்லது பொறுமையைக் குறிப்படுகின்றார். இது கடினமான சூழ்நிலைகளில் காணப்பட வேண்டியது. steadfastness அல்லது மன உறுதி எனலாம். யோவான் 16: 33 இல் “உலகில் உங்களுக்குத் துன்பம் உண்டு எனினும் துணிவுடனிருங்கள். நான் உலகின்மீது வெற்றி கொண்டு விட்டேன்”. என ஆண்டவர் கூறுகின்றார். ஆறாவதாக, சாந்த குணத்தை (Gentleness) நாடித்தேட அழைக்கின்றார். மென்மை பலவீனம் என்பது உலகத்தின் எண்ணம். ஆனால் கடினமாக இருப்போரே உண்மையில் பலவீனமானவர். ஏனெனில், பாதுகாப்பற்றோராக விளங்குவதால் கடினத்தை வெளிப்படுத்துகின்றனர். எபே. 4: 2-இல் முழு மனத்தாழ்மையோடும், கனிவோடும் பொறுமையோடும் ஒருவரையொருவர் அன்புடன் தாங்கி அமைதியுடன் இணைந்து வாழ அழைக்கிறார்.

3. போராடு (Fight) (1 தீமொ. 6: 12)

போராடு என்பதற்கான கிரேக்க பதம் αγωνιζου. (Agonize) என்பது. ஆங்கில வார்த்தை Struggle - போராட்டம் என்பது பொருள். கிறிஸ்தவ வாழ்வு போராட்டம் நிறைந்த வாழ்வு. வேறு சில இடங்களில் பவுல் கிறிஸ்தவ வாழ்க்கையை விவரிக்கத் தடகள மற்றும் இராணுவ உருவகங்களைப் பயன்படுத்துகின்றார். 1 கொரி. 9: 24இல் ஓட்டப்பந்தய வீரரின் போராட்டத்துடன் ஒப்படுகின்றார். விளையாட்டு வீரர் உடற்பயிற்சி கூடத்தில் போராடிப் பாடுபடுவது போல நாமும் கிறிஸ்தவ நம்பிக்கையில் போராட அழைக்கிறார். 1 தீமொ. 1: 18, 19 இல் போர்க்களத்தில் போர் வீரன் போராடிப் பாடுபடுவது போல நாமும் கிறிஸ்தவ நம்பிக்கையில் போராட வேண்டும் என்கிறார். கடவுளின் நம்பிக்கைக்குரியோராக விளங்குபவர் எளிதான வாழ்வைத் தெரிந்தெடுக்காமல் போராட்ட வாழ்வைத் தெரிந்தெடுக்கின்றனர். அவநம்பிக்கைகளோடும்,

அலகையின் ஆற்றலோடும் போராடுகின்றனர். பாவத்திற்கு எதிராகத் தினமும் போராடுவர்.

போராட்ட வாழ்வின் அடையாளமாகப் பன்னிரு நினைவுக் கற்களை யோசுவா யோர்தானில் நாட்டுகின்றார் (யோசு. 4: 1-9). போராட்ட வாழ்வு வாழ்பவர் பாக்கியவான் எனத் திருப்பாடல் 1 கூறுகின்றது. நல்ல நிலத்தில் விழுந்த விதை வெயியின் தாக்கம், முட்களின் தாக்கம், பறவைகளின் அபகரிப்பு போன்ற அனைத்துப் போராட்டங்களிலும் வெற்றி பெற்று முப்பதும், அறுபதும், நூறுமாகப் பயனைத் தருகின்றது (மத். 13:1-9).

முடிவுரை

நம்பிக்கைக்குரியவர்களை உருவாக்குவதே இறையியல் கல்வி. கடவுளுடைய மனிதராக பாவத்துக்கு தப்பியோடி, இறைமைக்குரியவற்றை நாடித் தேடி, போராட்ட வாழ்வு வாழ்வோராக தீமொத்தேயு உருவாக வேண்டுமென பவுல் அழைப்பு விடுக்கின்றார். தீமொத்தேயுவைப் போன்று நாமும் நம்பிக்கைக்குரியோராக வளர ஆண்டவர் அருள்புரிவாராக, ஆமென்.

ப	ஞா. 2	கீர். 15

அருள்திரு. முனைவர். A. இராயப்பன் ஜசக்
முதல்வர் (i/c), **கன்னியாகுமரி இறையியல் கல்லூரி**

இறைவேண்டல்

வாழ்வின் கடவுளே, எங்கள் வாழ்க்கைக்கு ஆதாரமாக நீர் இருப்பதற்காக நாங்கள் உம்மைப் போற்றுகிறோம். உமது வார்த்தையை சூழலுக்கு ஏற்ப புரிந்து கொள்ளவும், எங்கள் வாழ்க்கைச் சூழ்நிலைகளுக்குப் பொருத்தமாக அதை பயன்படுத்தவும் எங்களுக்கு உதவும், இறையியல் கல்விக்காக, நாங்கள் உமக்கு நன்றி கூறுகிறோம். மக்களை உண்மையுள்ளவர்களாகவும், அவர்களின் அழைப்புக்கு அர்ப்பணிப்பவர்களாகவும் மாற்றுவதற்கு, இறையியல் ஆசிரியர்களையும், மாணவர்களையும், உமது ஆவியால் வழிநடத்த வேண்டுகிறோம். உம்மோடும் தூய ஆவியரோடும் இப்போதும் எப்போதும் வாழ்ந்து ஆட்சி செய்யும் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாயிலாக வேண்டுகிறோம், ஆமென்.

20.07.2025

கடவுளின் மக்கள்: கிறிஸ்துவின் மந்தை

People of God : Flock of Christ

தொ.நூ. 35: 1-15 தி.ப. 16: 11-15

தி.பா. 95 யோவா. 10: 1-6

"தம் சொந்த ஆடுகள் அனைத்தையும் வெளியே ஓட்டி வந்தபின் அவர் அவற்றிற்கு முன்செல்வார். ஆடுகளும் அவரைப் பின்தொடரும். ஏனெனில், அவரது குரல் அவற்றுக்குத் தெரியும்" (யோவா. 10: 4).

பழைய ஏற்பாட்டில் கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட இஸ்ரயேலர் மட்டுமே கடவுளின் மக்கள் அல்லது இறைமக்கள் (People of God) என அறியப்பட்டனர். இவர்கள் அனைத்து மக்களினங்களிலும் எண்ணிக்கையில் குறைந்தவர்கள், அடிமைத்தனத்தில் வாழ்ந்தவர்கள். இம்மக்களோடு கடவுள் என்றென்றுமுள்ள தம் உடன்படிக்கையினை ஏற்படுத்தி, அவ்உடன்படிக்கை உறவில் வாழ எதிர்பார்த்தார். ஆனால், இயேசு கிறிஸ்துவின் வருகையினால், யூதர்கள் மட்டுமல்ல, இனவேறுபாடுகளையும், பின்னணியங்களையும் (Regardless of their background and ethnicity) கடந்து அனைத்து மக்களும் கடவுளின் மக்கள் என அறியப்பட்டனர். புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ள "கிறிஸ்துவின் மந்தை" என்ற உருவகம் கிறிஸ்துவில் பற்றுறுதி கொண்டு வாழும் அனைத்து மக்களையும் ஒன்றிணைக்கின்ற, அதோடு கரிசனையோடும் நல்வழிகாட்டுதலோடும் அனைவரையும் ஒன்றிணைந்து வழிநடத்துகிற ஆயராகக் கிறிஸ்துவை அடையாளப்படுத்தும் ஒன்றாகும்.

இன்றையச் சூழலில் புதிய ஏற்பாட்டின் கருத்தியலான ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காய் (Special Propose)"வெளியே அழைக்கப்பட்ட (Called out), பிரித்தெடுக்கப்பட்ட (Separated), மக்கள் கூட்டமாம் திருச்சபை" "கிறிஸ்துவின் மந்தை" எனப் புரிந்துகொள்ள வேண்டும். இம்மக்கள் கூட்டம் எந்நிலையில் வாழவேண்டும் என்பதைத் தொடர்ந்து சிந்திக்கின்றபோது, நல் ஆயராம் ஆண்டவர் முன் செல்லும்போது, கடவுளின் உடன்படிக்கையில் நிலைத்துநின்று, அவரது குரலுக்கு செவிகொடுத்து, ஆயரை அனைத்துச் சூழல்களிலும் முழுமையாய் நம்பி, அவரில் பற்றுறுதி கொண்டு பின்செல்ல வேண்டும்.

1. கடவுளின் மக்கள் : உடன்படிக்கையின் மக்கள் (தொ.நூ. 35: 1-15)

கடவுளிள் மக்கள் என அறியப்பட்ட இஸ்ரயேலர் (யாக்கோபின் பிள்ளைகள்) தங்களைச் சிறப்புக்குரியவர்கள் என எண்ணி, சீக்கேமில்

வாழ்ந்த மக்களின் எதிர்காலம் ஆசீர்வாதமாக அமையக்கூடாது என எண்ணித் தங்களது கொடிய வன்செயல்களினால் அவர்களைப் பயமுறுத்தினர் (தொ.நூ. 34). அதோடு, கடவுளின் பிள்ளைகள் என்ற உறவு நிலையினை உடைத்து, தங்களைத் தீட்டுப்படுத்தி, பல் இறை நம்பிக்கையிலும் வழிபாட்டிலும் தங்களை ஈடுபடுத்தி, உடன்படிக்கையினை உடைத்தனர் (தொ.நூ. 35: 2). ஆகவே, யாக்கோபு தம் பிள்ளைகளை, தங்களைத் தூய்மையாக்கி, யாவே கடவுளை மட்டும் ஆண்டவராக கொண்டு வழிபடவும், சீகேமை விட்டுக் கடவுள் தன்னைப் பாதுகாத்த பெத்தேலுக்குப் போகவும் வலியுறுத்துகிறார். பெத்தேல் கடவுளை வழிபடும் மக்களை ஒன்றிணைக்கும் மையமாக முக்கியத்துவம் பெற்றது. அதோடு, அனைவரும் "யாவே" கடவுளின் மக்கள் என்பதை வலியுறுத்தும் நிலையில் தங்களிடமிருந்த எல்லா வேற்றுத் தெய்வங்களின் சிலைகளையும், காதணிகளையும் மக்கள் யாக்கோபிடம் கொடுக்க, யாக்கோபு அவைகளைச் செக்கேம் அருகிலுள்ள ஒரு கர்வாலி மரத்தின் அருகே புதைத்தார் (தொ.நூ. 35: 4).

யாக்கோபும் அவரது பிள்ளைகளும் சீக்கேமை விட்டு புறப்பட்டு சென்றபோது, சீக்கேமின் மக்கள் அவர்களைத் துரத்தாதபடி கடவுள் தாமே அவர்களைக் கானான் நாட்டிலுள்ள பெத்தேலுக்கு அழைத்து வந்தார் (தொ.நூ. 35: 5, 6). யாக்கோபு பெத்தேலில் ஒரு பலிபீடத்தைக் கட்டி அதற்கு ஏல்பெத்தேல் எனப் பெயரிட்டார். உடன்படிக்கை உறவிலிருந்து விலகின மக்கள் திரும்ப இறையுறவில் ஒன்றாக்கப்பட்ட நிலையில் கடவுள் யாக்கோபின் பெயரினை "இஸ்ரயேல்" என மாற்றி, "கடவுளின் மக்கள்" என்ற உரிமையினைக் கொடுத்தார் (தொ.நூ. 35: 10). அதோடு தன்னை "பெத்தேலின் கடவுள்" (El-Bethel - God of Bethel) எனவும், "ஆற்றல் நிறைந்த கடவுள்" (El-Shaddai - God Almighty) எனவும் இஸ்ரயேலருக்கு முன்பாக வெளிப்படுத்தி, அவர்களுக்கு "இறைமக்கள்" எனும் அடையாளத்தைத் திரும்பக் கொடுத்தார். இறைமக்கள் என்ற அடையாளத்தைச் சொந்தமாக்கிக் கடவுளோடு உடன்படிக்கை செய்த மக்கள், யாக்கோபை தன் சகோதரரியிடமிருந்து பாதுகாத்து, திரும்ப வாழ்வினைக் கொடுத்த அவ்விடத்தை "இறை இல்லம்" எனப் பொருள்தரும் "பெத்தேல்" எனப் பெயரிட்டு, தங்கள் உடன்படிக்கையினைப் புதுப்பித்தனர்.

இன்று திருச்சபையினை "கடவுளின் மக்களாகவும் கிறிஸ்துவின் மந்தையாகவும்" கடவுள் அடையாளப்படுத்தி, இறைமக்கள் அனைவரும் இணைந்து கடவுளை வழிபடவும், உடன்படிக்கையில் உறுதியாயிருக்கவும் அழைத்துள்ளார். "இறைமக்கள்" என்ற உரிமையினை இழக்கச் செய்யும் நமது வாழ்வின் தீமைகள் அனைத்தையும் விட்டுவிட்டு, புதிதாக்கப்பட்டவர்களாய் தொடர்ந்து பயணிக்க கடவுளின் கரங்களில் நம்மை ஒப்படைக்கவும், நிலைத்திருக்கவும் கடமைப்பட்டுள்ளோம்.

2. கடவுளின் மக்கள் : உள்ளம் திறக்கப்பட்ட மக்கள் (தி.ப. 16: 11-15)

தூய பவுலார், சீலா, தீமோத்தேயு ஆகியோர் நற்செய்திப்பணி வாயிலாக, கடவுளின் மக்களைக் கிறிஸ்துவின் மந்தையோடு இணைக்கும் பணியினை நிறைவேற்றிட மாசிதோனியப் பகுதியான பிலிப்பி பட்டணத்திற்குச் சென்றனர். இந்தப் பிலிப்பி பட்டணம் உரோமர் குடியேற்ற நகரம், ஒரு பெரிய வணிகப் பகுதி, வியாபாரிகள் அதிகமாக வந்து செல்லக்கூடியப் பகுதி (தி.ப. 16: 12, 14). அதோடு, கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட இறைமக்கள் வாழ்ந்த பகுதி. ஆகவே, பவுலும் அவரைச் சார்ந்தவர்களும் ஓர் ஓய்வுநாளன்று ஆற்றங்கரையோரம் கூடி இறைவேண்டல் செய்யும் இடம் இருக்கிறதா என்பதை அறிந்திட சென்றபோது, சமூகத்தில் நல்ல செல்வாக்குடன் வாழ்ந்து, ஒன்றாய் கூடி பேசிக்கொண்டிருந்த பெண்களோடு பேசியதோடு மட்டுமன்றி, நற்செய்தியினையும் அவர்களுக்குப் பகிர்ந்தனர்.

நற்செய்தியினைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களில், தியத்திரா ஊரைச் சார்ந்த, விலையுயர்ந்த செந்நிற ஆடைகளை (Purple Dye) விற்பவரான, ஆண்டவரை அறிந்த லிதியா என்ற பெண்ணும் ஒருவர். இந்த லிதியா கடவுளை ஏற்றுக்கொண்ட, ஓர் உள்ளம் திறக்கப்படாத, உண்மையான கிறிஸ்தவ வாழ்வு வாழாத ஒருவர். ஆனால், பவுலின் செய்தியினால் கடவுள் அவளது உள்ளத்தைத் திறந்தார். உள்ளம் திறக்கப்பட்டபின், கிறிஸ்துவின் உண்மையான பற்றாளராக வாழத் தன்னை ஒப்படைத்து, கிறிஸ்துவின் பாடு, மரணம் மற்றும் உயிர்த்தெழுதலில் பங்குபெறுவதற்கு அடையாளமாகவும், கிறிஸ்துவின் மந்தையாம் திருச்சபையோடு தன்னை இணைத்துக்கொள்ளும் அடையாளமாகவும், அவளும் அவள் வீட்டாரும் திருமுழுக்குப் பெற்றனர் (தி.ப. 16: 14, 15). உள்ளம் திறக்கப்பட்ட உண்மை கிறிஸ்தவரான தனது பற்றுறுதியையும், விருந்தோம்பும் தன்மையினையும் வெளிப்படுத்தும் நிலையில், நற்செய்தியாளர்களைத் தனது வீட்டிற்கு அழைத்து உபசரித்து, பிலிப்பி பட்டணத்தில் திருச்சபை உருவாகக் காரணமானார் (தி.ப. 16: 15). அதோடு, பெயர்பெற்ற வியாபாரியான லிதியா தனது செல்வாக்கினாலும், மனமாற்றத்தினாலும், கிறிஸ்துவின் மீதுள்ள தனது பற்றுறுதி வாழ்வினாலும் எளிதாக தன்னைச் சார்ந்தவர்களின் வாழ்வில் தாக்கத்தினை ஏற்படுத்திட முடிந்தது.

இன்று கிறிஸ்துவின் மந்தையாம் திருச்சபையின் செயல்பாடுகள் உள்ளம் திறக்கப்படாத லிதியாவின் வாழ்வுபோல உள்ளது. ஆகவே, திருச்சபையின் ஆன்மிகம் குறைந்து, ஆளுகை அரசியல் உயர்ந்து நிற்கின்றது. இறைமக்களின் குழுமனப்பான்மை செயல்பாட்டினால் திருச்சபை உறவு உடைந்து, உருகுலைந்து உள்ளது. திருச்சபைத் தலைவர்களின் ஆன்மீகமற்ற செயல்பாடுகள் திருச்சபையின் எதிர்காலத்தை கேள்வியாக்குகிறது. இச்சூழலில் கிறிஸ்துவின் மந்தையாம் இறைமக்கள்

கூட்டமாகிய திருச்சபை, கடவுளின் வார்த்தையின்படி இயங்கவும், செயல்படவும் இறைவார்த்தைக்காகத் தனது உள்ளத்தைத் திறக்கவும் வேண்டும். உள்ளம் திறக்கப்பட்ட திருச்சபை தனது வளங்களையும், தாலந்துகளையும், விருந்தோம்பும் தன்மையினையும் மற்றவர்களோடு பகிரவேண்டும். இறைமக்கள் கிறிஸ்துவில் கொண்டுள்ள ஆழமான பற்றுறுதியினாலும், சமுகத்தில் கொண்டுள்ள செல்வாக்கினாலும் மற்றவர்களுக்கு நற்செய்தியாய் வாழவேண்டும்.

3. கடவுளின் மக்கள்: உன்னதரைப் பின்தொடரும் மக்கள் (யோவா. 10: 1-6)

இப்பகுதியில் கடவுளை ஆட்டுக்கொட்டிலை காக்கின்ற வாயிற்காவலராகவும், இயேசு கிறிஸ்துவை ஆடுகளின் ஆயராகவும், கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களை ஆடுகளாகவும் (மந்தை) யோவான் நற்செய்தியாளர் குறிப்பிடுகிறார். பாலஸ்தீனச் சூழலில், ஆடுகளை மேய்க்கின்ற மேய்ப்பர்கள் இரவு நேரங்களில், ஆடுகளை ஆட்டுக்கொட்டிலில் அடைத்துக் கொட்டிலுக்கு வெளியே தங்கியிருப்பர். ஒரே ஆட்டுக்கொட்டிலில் பல மேய்ப்பர்களின் ஆடுகள் ஒன்றாக அடைக்கப்பட்டிருக்கும். கொட்டிலுக்கு வெளியே அதின் வாயிலைக் காக்கிறவர் இரவு முழுவதும் உறங்காது ஆடுகளைப் பாதுகாப்பர். மேய்ச்சலுக்காக ஆடுகளை வெளியே அழைத்துச் செல்லும்போது, ஆயர்கள் ஆட்டுக்கொட்டிலின் வாயில் வழியாக நுழைந்து, தம்முடைய சொந்த ஆடுகளை பெயர் சொல்லி கூப்பிட்டு, வெளியே கூட்டிச் செல்வர் (யோவா. 10: 1-3). ஆட்டுக்கொட்டிலின் வாயில் வழியாக நுழைகின்றவர்களுக்கு மட்டுமே வாயில் திறக்கப்படும். ஏனென்றால், அவர்தான் உண்மையான மேய்ப்பர், வேறு வழியாக நுழைய முயலுகின்றவர் ஆடுகளைத் திருடிச் செல்கின்றவர் என்ற நம்பிக்கை ஆர்கனிலிருந்தது. ஒரு மந்தையிலிருக்கும் அனைத்து ஆடுகளும் தனது மேய்ப்பனையும், அவரது குரலையும் தெளிவாக அறிந்திருக்கும். ஆகவே, குரலறியா ஒருவரை ஒருபோதும் அவைகள் பின்பற்றிச் செல்லாது (யோவா. 10: 4, 5).

கிறிஸ்துவின் மந்தையாம் இறைமக்கள், மேய்ப்பராம் இயேசு கிறிஸ்துவையும், அவரது குரலையும் நன்கு அறிந்திருக்க வேண்டும். ஏனென்றால், உண்மையான ஆயர் ஆடுகளின் மீது அதிகாரம் கொண்டவர் (Authenticity யோவா. 10: 1), ஆடுகளோடு நெருங்கிய உறவு கொண்டவர் (Intimacy யோவா. 10: 3), ஆடுகளை நீதியின் வழிகளில் நடத்திச் செல்பவர் (Guidance யோவா. 10: 4), ஆடுகளைத் தவறான தலைவர்களிடமிருந்து பாதுகாப்பவர் (Protection யோவா. 10: 5). கிறிஸ்துவின் மந்தையாம் திருச்சபை கிறிஸ்துவையும், அவரது குரலையும் முழுமையாக அறிந்து (Recognition), அவரது குரலுக்குக் கீழ்ப்படிந்து (Obedience), தலைவர்களைப் பகுத்தறிந்து (Discernment), தீமை செய்யும் திரள் கூட்டத்தைப் பின்பற்றாது, எல்லாச் சூழல்களிலும் கிறிஸ்துவை அவரது சிலுவைப் பாதையில் பின்தொடர

வேண்டும். பல மேய்ப்பர்களுடைய ஆடுகள் ஒரே கொட்டிலில் அடைக்கப்பட்டிருப்பதுபோல, பல சிந்தனைகளும், பல பாரம்பரியங்களும், பழக்கவழக்கங்களும், தொழுகை முறையும் கொண்ட திருச்சபைகளின் இணைவே தென்னிந்தியத் திருச்சபை ஐக்கியம். அவர்கள் எல்லோரும் ஒன்றாயிருப்பார்களாக என்ற இறை வார்த்தையின்படி இணைக்கப்பட்ட திருச்சபை இன்று ஒப்படைப்புள்ள தலைமைத்துவம் இன்றி தடம் மாறி பிளவுபட்டு நிற்கிறது. திருச்சபை நல் ஆயராம் கிறிஸ்துவின் மந்தையாகவும், அவரது குரலுக்குச் செவிகொடுக்கின்றதாகவும், அவரைப் பின்பற்றிச் செல்கின்றதாகவும் செயல்பட வேண்டும். அதோடு நீண்டகாலமாக "ஒரே மந்தை ஒரே மேய்ப்பன்" திருச்சபை ஒன்றிப்பை எதிர்நோக்கும் நிலையில் இந்தியத் திருச்சபைகளை ஒன்றிணைக்கின்ற திருப்பணியில் தொடர்ந்து ஒப்படைப்புடன் செயல்பட்டு, ஒன்றிணைந்த ஐக்கியத் திருச்சபையின் வடிகாலாக மாறுவோம், ஆமென்

அருள்திரு. A. மகேர் ஷால் அஸ்பாஸ்

அச்சகங்களின் கண்காணிப்பாளர்

ᴜ	ஞா. 233	கீர். 3

இறைவேண்டல்

அருள் நிறைந்த கடவுளே, உமது குமாரனாகிய இயேசுகிறிஸ்து மூலமாக, எங்களை உமது மக்களாகத் தேர்ந்தெடுத்து, எங்களை மீட்ட, உமது ஆச்சரியமான அருளினை நாங்கள் உணருகின்றோம். கிறிஸ்துவின் அன்பினால் வளர்த்தெடுக்கப்பட்ட ஒரு உள்ளடக்கிய சமூகமாக இருக்க உமது அழைப்பைப் பற்றி எப்போதும் நாங்கள் விழிப்புடன் இருக்க எங்களுக்கு உதவி செய்யும். கிறிஸ்துவின் மந்தையில் இருப்பதற்கும், கிறிஸ்துவின் அன்பையும், கருணையையும், சுற்றியுள்ள மக்களுக்கு வெளிப்படுத்த உமது மென்மையான அன்பின் மூலம் எங்களை வழிநடத்த உம்மிடம் வேண்டுகிறோம். உம்மோடும் தூய ஆவியரோடும் இப்போதும் எப்போதும் வாழ்ந்து ஆட்சி செய்யும் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாயிலாக வேண்டுகிறோம். ஆமென்.

27.07.2025

அருட்பொழிவு திருப்பணி: கிறிஸ்துவின் நறுமணம்

Ordained Ministry : Fragrance of Christ

வி.ப. 29: 1-9 எபே. 5: 1-14

தி.பா. 99 லூக். 10: 1-11

> *அப்போது அவர் (இயேசு) அவர்களை நோக்கிக் கூறியது, "அறுவடை மிகுதி வேலையாள்களோ குறைவு. ஆகையால், தமது அறுவடைக்குத் தேவையான வேலையாள்களை அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள்"* (லூக். 10: 2).

அருட்பொழிவு என்பதைக் குறிக்கும் சில எபிரேயச் சொற்களில் "ஷமாக்", "சிம்", "ஷித்" முக்கியமானவை. இதன் பொருள் "ஒருவர் மீது கைகளை சாய்த்தல்" அல்லது "கைகளை வைத்தல்" என்பதாகும். "சிம்" மற்றும் "ஷித்" பொதுவாக ஆசியை வழங்குவதற்கு பயன்படுத்தப்படுகின்றன. குலமூதுவர் யாக்கோபு தனது மகன் யோசேப்பின் புதல்வர்களுக்கு ஆசீர்வாதம் வழங்கியதற்கு ஒத்ததாய் இருக்கிறது (தொ.நூ. 48: 14, 17-19). ஒருமுறை உச்சரிக்கப்பட்டால் பின் அந்த ஆசீர்வாதத்தைத் திரும்ப பெறமுடியாது (தொ. நூ. 27: 30-38) என்பதாக பழைய ஏற்பாட்டு நூல்களிலிருந்து செய்தி கிடைக்கிறது. இவ்விதமாக தொடர்ந்து வந்த காலங்களில், அருட்பொழிவிற்கு வேறு பொருள் கொள்ளப்பட்டது. அருட்பொழிவு திருப்பணி என்பது கடவுளின் தூயத் திருப்பணிகளை நிறைவேற்றுதல் ஆகும். அதாவது ஆயரின் சிறப்பு பணிகளான "திருவருட்சாதனங்களை நிறைவேற்றுதல் நற்செய்தி அறிவித்தல், திருமுழுக்குக் கொடுத்தல் போன்றவைகளை உள்ளடக்கியதாகும். மேலும், அருட்பொழிவு செய்யப்படுபவர் பிற மக்களிடமிருந்து பிரித்தெடுக்கப் பட்டவராகவும் தலைவர்களை நியமிக்கும் அதிகாரம் பெற்றவர்களாகவும் செயல்பட்டனர்".

இன்றைய திருமறைப் பகுதிகள் அறுவடைக்குக் காத்திருக்கிற களங்களில், கிறிஸ்து உங்களுக்காக நறுமணம் வீசும் காணிக்கையுமாகக் கடவுளிடம் ஒப்படைத்து, உங்களிடம் அன்புகூர்ந்து வாழ்ந்ததுபோல நீங்களும் அன்புகொண்டு வாழ்வதுதான் என்பதைத் தெளிவாக்குகிறது.

"கிறிஸ்து" என்பதின் பொருள் "அருட்பொழிவு பெற்றவர்" அல்லது "கடவுள் தேர்ந்தெடுத்த தலைவர்" என்பதாகும். நறுமணம் வீசுகிறதற்கு

மாதிரியாக இருந்த இயேசு கிறிஸ்துவின் திருப்பணியில் இருந்த தன்மைகளைச் சிந்திப்போம்.

1. இணைக்கின்ற திருப்பணி : (வி.ப. 9: 1-9)

இத்திருமறைப் பகுதியில் குருத்துவப்பணி அல்லது அருட்பொழிவு திருப்பணி குறித்த செய்திகள் தரப்பட்டுள்ளன. ஆரோனையும் அவன் புதல்வர்களையும் திருநிலைப்படுத்துகின்ற நிகழ்வு இப்பகுதியில் விளக்கப்பட்டுள்ளது. முதலில் ஆரோனையும் அவன் புதல்வர்களையும் தண்ணீரால் கழுவி, குருத்துவப் பணிக்குரிய சிறப்பு ஆடைகளை அணிவித்து, திருப்பொழிவு எண்ணெயை தலைமேல் ஊற்றி அருட்பொழிவு செய்ய மோசேக்கு ஆண்டவர் கட்டளையிடுகிறார். இத்தகைய முறைகளைச் செய்வதினால் ஆரோனுக்கும் அவர் புதல்வருக்கும் ஏற்பட்ட உணர்வு தாங்கள் கடவுளால் பிரித்தெடுக்கப்பட்டு பிரத்யேகப்படுத்தப்பட்டவர்கள் என்பதாகும். அதோடு கடவுளிடம் தாழ்மையோடு மன்றாடும் அடிமைப் பணியாளர்கள் என்பதை உணர்ந்துகொண்டார்கள். திருப்பாடல்கள் நூல்களில் இதனைக் குறித்த செய்தி சொல்லப்பட்டுள்ளது. “மோசேயும் ஆரோனும் அவர்தம் குருக்கள் அவரது பெயரால் மன்றாடுவோருள் சாமுவேலும் ஒருவர். அவர்கள் ஆண்டவரை நோக்கி மன்றாடினர்” (தி.பா. 99: 6). மேலும் பழைய ஏற்பாடு முழுவதிலும், குருக்களின் பணியானது மக்களைக் கடவுளுக்கு ஏற்புடையவராக்கி, அவரோடு இணைக்கும் திருப்பணி என்பதாகக் கூறப்படுகிறது. இதற்கு மோசே தலைவன் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. அதாவது கடவுள் முன் நிற்கும்போது மக்களின் பிரதிநிதியாகவும், மக்கள் முன் நிற்கும்போது கடவுளின் பிரதிநிதியாகவும் செயல்படுகிறார். உயிர்த்தெழுந்த கிறிஸ்துவும் பெரிய தலைமைக் குருவாக மக்களை கடவுளோடு இணைக்கும் திருப்பலியாக தம்மையே தியாகமாக்கினார் (எபி. 4: 14-16). இயேசு கிறிஸ்துவின் இப்பண்பு அருட்பொழிவு திருப்பணியிலும் வெளிப்பட வேண்டிய நறுமணம் ஆகும். “மக்களுக்காகக் கடவுளிடம்”, “கடவுளுக்காக மக்களிடம்” என்ற கருத்து இங்கே வெளிப்படுவதால், இது இணைக்கும் திருப்பணி எனலாம்.

2. இயக்கமுள்ள திருப்பணி : (லூக். 10: 1-11)

அருட்பொழிவு திருப்பணி என்பது இயக்கமுள்ளதாக உயிரோட்டமானதாக இருக்கிறது. இயேசுநாதர் தமது திருப்பணியை இயக்கமுள்ளதாக மாற்றக் கூடுதலாக வேறே எழுபத்திரண்டு பேரை நியமித்து, அவர்களைத் தாம் போகவிருந்த எல்லா ஊர்களுக்கும், இடங்களுக்கும் தமக்கு முன்னே அனுப்பினார். இயேசுநாதரின் திருப்பணியின் தன்மையைப் புரிந்துகொள்ள இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள சில சொற்கள் உதவுகின்றன. “இருவராக”, “புறப்பட்டு போங்கள்”, “ஓநாய்களிடையே ஆட்டுக்குட்டி”, “பணப்பையோ, வேறு பையோ தேவையில்லை”, “அமைதி”, “குணமாக்குங்கள்”

போன்றவை திருப்பணியின் ஆழத்தை வெளிப்படுத்துகின்றது. திருப்பணியில் உயிரோட்டமாய் இருக்க அற்பணிப்புள்ள இருவர் குழு போதுமானது. மிகக் கடுமையான, கொடிய, அதிகாரமுடைய மக்களிடத்திற்கும் அஞ்சாமல் சென்று செய்யவேண்டிய பணி. பணம், பொருள் இவற்றிற்கு அப்பாற்பட்டு இறையருளில் மட்டுமே நம்பிக்கை வைத்து மக்களின், சமுதாயத்தின் நலவாழ்வை விரும்பி ஏற்று மாக்களை மக்களாக மாற்றம் செய்யும் திருப்பணி. அமைதியற்ற சூழலில் அமைதியை ஏற்படுத்தும் நோக்கமுடைய, காயமுற்றவர்களைக் குணமாக்கும் மக்கள் திருப்பணி. அது இறையாட்சியை ஏற்படுத்தும் பணியாகும். எனவே, திருப்பணி எனும்போதே அதனுள் காணப்படும் பன்முகத் தன்மைகளும் வெளிப்படுகின்றன. அருட்பொழிவு செய்யப்பட்டதின் நோக்கமே இயேசுநாதரில் வெளிப்பட்ட பன்முகத் தன்மையுள்ள இயங்கிக் கொண்டிருக்கும் திருப்பணி செய்யவே. இன்றைய அருட்பொழிவு திருப்பணிகள் இயக்கமுள்ளதாக இல்லாமல், தேக்கமுள்ளதாக மாறிவிட்டது. நாமே அவற்றைச் சுருக்கிக்கொண்டோம். கிறிஸ்துவின் நறுமணம் வீசக் கிறிஸ்துவின் சிந்தை வேண்டும். இறைவனோடு இணைந்து இயங்க வேண்டும்.

3. இறை சான்றாகும் திருப்பணி : (எபே. 5: 1-10)

அருட்பொழிவு திருப்பணி இறையவர் இயேசுகிறிஸ்துவின் சான்றாக விளங்குகிறது. இத்திருமறைப் பகுதியில் கிறிஸ்துவைப்போல் வாழ்வதற்கு எபேசு மக்களுக்கு பவுலடியார் அறைகூவல் விடுக்கின்றார். அதாவது கடவுளின் அன்பார்ந்த பிள்ளைகளால் கிறிஸ்து அன்பினால் நறுமணம் வீசியதைப் போன்று நீங்களும் அன்புடையவர்களாக வாழவேண்டும். அன்பிலே பல வகையுண்டு. சில தகாத அன்பு, பரத்தமை, அனைத்து ஒழுக்க கேடுகள், பேராசை போன்ற தகாத நடத்தைகளுக்குள் இட்டுசெல்லும். இத்தகைய மாறுபாடான போலி வாழ்வு கெட்ட நாற்றத்தை ஏற்படுத்தி ஒட்டுமொத்த நறுமணத்தையும் கெடுத்துவிடும் (ச.உ. 10: 1). கிறிஸ்து நம்மில் காண்பித்த "தியாக அன்பு" கிறிஸ்துவுக்காக நம்மைச் சான்றாக வாழத் தூண்டுகிறது (யோவா. 15: 13, 14). சான்று என்பது தனிப்பட்ட திருப்பணிகளாகிய தனிப்பட்ட வாழ்வில் மற்றும் குடும்ப அங்கத்தினர்களாக வாழும் கூட்டு வாழ்வில் வெளிப்படுத்த வேண்டியன. துன்பங்களிலும், குறைவுகளிலும், வெறுப்புகளிலும், கைவிடப்பட்ட நிலைகளிலும் இறைவனுக்கு நன்றி சொல்லித் தூய்மையுடன் வாழ்தல்தான் உண்மையான சான்று வாழ்வு. கிறிஸ்து வழியாக அருட்பொழிவுத் திருப்பணியை ஏற்றிருக்கும் அனைவரும் கிறிஸ்துவோடு இணைந்து மக்களைக் கடவுளோடு இணைக்கின்ற மக்கள் பணி செய்து இறைசான்றுகளாய் நறுமணம் வீசுவோம், ஆமென்.

ப	ஞா. 380	கீர். 3

அருள்திரு. **G. சாம் ரிச்சர்ட் நெல்சன்**
இயக்குநர், திருப்பணியர் நல்வாழ்வுத் துறை

இறைவேண்டல்

அருள் நிறைந்த கடவுளே, ஆசீர்வதிக்கப்பட்ட உமது மகன் எங்களுக்கு ஒரு இறைவாக்கு உரைக்கின்ற மற்றும் சுயவெறுப்பு திருப்பணிக்கு ஒரு முன்மாதிரியாக இருப்பதை நாங்கள் உணர்கிறோம். உமது அருளினால் நாங்கள் உமது திருப்பணியில் நியமிக்கப்பட்டிருக்கிறோம் என்பதை நாங்கள் உணர்ந்துகொள்ளும்படி, உமது ஞானத்தை எங்களுக்குத் தந்தருளும். எங்களின் போதனை, அருளுரை மற்றும் சாட்சி கொடுத்தல் மூலம் உம்மை வெளிப்படுத்த எங்களுக்கு உதவி செய்யும். ஒவ்வொரு அடிமைத்தனத்திலிருந்தும் எங்களை மீட்டு, உம்மைத் தழுவிக்கொள்வதற்கு எங்களை விடுதலையாக்கும். உமது நற்செய்தியின் நறுமணத்தை நாங்கள் உணரும் வகையில், உம்மிடம் ஒற்றுமையாக இருக்க எங்களுக்கு உதவி செய்யும். உம்மோடும் தூய ஆவியரோடும் இப்போதும் எப்போதும் வாழ்ந்து ஆட்சி செய்யும் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாயிலாக வேண்டுகிறோம், ஆமென்.

விடுதலையருளும் ஆண்டவர்

யோவா. 8: 31-36

"உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும் என்றார்" (யோவா. 8: 32).

விடுதலை ஆகஸ்ட் மாதத்தின் தனிப்பெரும் அடையாளம். கடவுள், விடுதலையின் அடித்தளமாகவும், சுதந்திர வாழ்வின் ஊற்றாகவும் உள்ளார் என்பது விவிலியம் குறிக்கின்ற செய்தி. ஒவ்வொரு விடியலும் விடுதலை அருளுகின்றதாக அமையாதா என்ற எதிர்பார்ப்பு மானிட வாழ்வில் நிரம்பிக் கிடக்கும் சூழலில், "உண்மை (உண்மையுள்ள வாழ்வு) விடுதலை அளிக்கும்" என்பது இயேசுவின் வாக்குறுதியாக உள்ளதை யோவான் 8:32-இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உண்மை என்பது ஒரு மாபெரும் கப்பலில் இருக்கும் சுக்கான் போன்றது. அலைகள் எவ்வளவு உயரமாக இருந்தாலும் அல்லது எவ்வளவு பலமான காற்று வீசினாலும் கப்பலைத் தன் பாதையில் வைத்திருக்கும் ஆற்றல் உடையது தான் சுக்கான். உண்மையும் அதே போன்றது தான். உண்மையை அடிப்படையாகக் கொண்டிராத வாழ்க்கை சுக்கான் இல்லாத கப்பலைப்போலக் காணப்படும்.

"உண்மை விடுதலை அளிக்கும்" என்னும் வாக்கை இப்புதிய மாதத்தின் வாக்குத்தத்தமாகக் கொண்டு எவற்றிலிருந்து ஆண்டவர் விடுதலை அருளுகிறார் என்பதை ஈண்டு தியானிப்போம்.

சட்டத்தின் நுகத்தடியிலிருந்து விடுதலை (Freedom from the yoke of law)

கடவுள் தங்கள் மூதாதையருக்கு அருளிய திருச்சட்டங்களை மீறுவது பாவம் என்பதில் யூதர்கள் உறுதியாகக் காணப்பட்டனர். ஆகவே, சட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து அவற்றிற்கு கட்டுப்பட்டிருந்தனர். சுருங்கச்சொன்னால், சட்டத்திற்கு அடிமைப்பட்டிருந்தனர். இதனால் மனிதத்தைப் பேணவும் இல்லை; மக்களை மதிக்கவும் இல்லை. எனவே, அவர்களை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும் சட்டத்தின் பிடியிலிருந்தும், நுகத்தடியிலிருந்தும் அவர்கள் விடுதலைபெற இயேசு விழைந்தார்.

சட்டங்கள் விடுதலைக்குரியவைகளாய் கொடுக்கப்பட்டாலும் பல வேளைகளில் மக்களை அடிமைப்படுத்தும் கருவியாகவும் மாறிவிடுகிறது. வாழ்க்கைப் பயணத்தில், சட்டத்தின் ஓட்டைகளையும் அதன் நுகத்தடிகளையும் நம்பிப் பொய்யின் பாதையில் நடப்பவர்களுக்கு ஆயிரம் சுகங்கள் வந்து சேரலாம். ஆனால் அந்த சுகங்களின் நிழலாக அழிவு தொடர்வதை எவரும் தடுக்க இயலாது. பொய்யால் கிடைக்கும் சுகம் நரகத்தின் வாயில்கதவுகளை

நோக்கி நம்மை வழிநடத்தும். உண்மையால் விளையும் இன்பம் மரணமில்லாப் பெருவாழ்வுக்குக் கொண்டு சேர்க்கும். ஏனெனில், பொய் வாழ விடாது; அதேவேளையில் உண்மை சாக விடாது என்பதும் நிதர்சனம்.

பட்டத்தின் சுதந்திரம் வானத்தில் பறப்பதில் இருக்கிறது. ஆனால், நூலை அறுத்துவிட வேண்டுமெனக் கருதும் கணத்தில், அந்த விடுதலையானது அழிவுக்குள் அழைத்துச் செல்கிறது. இயேசு அருளும் விடுதலை என்பது கால்களைத் தறித்து விட்டு வீல் சேர் வழங்கும் சுதந்தரமல்ல; கண்களைப் பிடுங்கிவிட்டு கலர் பென்சில் தரும் சுதந்திரமல்ல; மாறாக, இறைவனின் சட்டங்களுக்குள் பாவத்தின் திட்டங்களை முறியடித்து வாழும் வாழ்வு.

இதயத்தை பிணைத்திருக்கும் தளைகளிலிருந்து விடுதலை (Deliverance from the shackles, which bound the heart)

விடுதலையை மனிதன் விரும்பவேண்டுமெனில், அடிமைத் தனத்தின் கடினத்தை உணர வேண்டும். தான் அடிமை நிலையில் இருக்கிறேன் என்பதைப் புரிந்து கொள்ளாத ஒரு மனிதனால், விடுதலை வாழ்வுக்குள் நுழைய முடியாது. ஆகவே தான் நீங்கள் பாவத்திற்கு அடிமைப்பட்டுக் கிடக்கிறீர்கள் என்பதை இயேசு சொன்ன போது யூதர்களால் அதனை ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

யானையைப் பழக்குபவர்கள் முதலில் யானையின் காலில் ஒரு சங்கிலியைக் கட்டி அதை ஒரு மரத்தோடு பிணைத்து வைப்பார்கள். யானை அந்த கட்டிலிருந்து விடுபட முயற்சித்துக் கொண்டே இருக்கும். ஒரு கட்டத்தில் இனிமேல் அந்தச் சங்கிலிலிருந்து விடுதலை பெற முடியாது என முடிவு கட்டி விடும். அதன் பின் அந்தச் சங்கிலியை உடைக்க அது முயற்சியே செய்யாது. இப்போது பாகன் அந்தச் சங்கிலியைக் கழற்றிவிட்டு, ஒரு சின்ன கயிறைக் கொண்டு அதைக் கட்டி வைப்பான். இழுத்தாலே அறுந்து விடும் கயிறாய் இருக்கும். ஆனால் யானை இழுக்காது. அப்படித்தான் அடிமை நிலையிலேயே தொடர்ந்து இருக்கும் மனிதன் தான் அடிமையாய் இருப்பதையே மறந்து விட்டு, அந்தச் சூழலோடு தன்னை இணைத்துக் கொள்கிறான். ஆகவேதான், இத்தகைய சூழலில் காணப்பட்ட யூதர்களால் இயேசுவின் கருத்தை உள்வாங்கிக்கொள்ள இயலவில்லை

பாவத்தின் தளைகளில் அடிமைப்பட்டுக் கிடப்போருக்குக் கடவுளின் வீட்டில் உடமையுரிமை இல்லை (no tenure in the household of God). அடிமைப்பட்டவர்கள் தங்களைத் தாங்களே விடுவித்துக்கொள்ள இயலாது. அதற்குரிய ஆற்றலும், அதிகாரமும் கொண்ட யாரேனும் ஒருவர் தேவை. ஏனெனில், பாவத்தின் பதுங்கு குழிகளில் படுத்துக்கிடப்பவர்களுக்கு விடுதலையின் வெளிச்சம் கிடைப்பதில்லை என்பது மறுக்க முடியாத உண்மை. ஆகவேதான், பாவத்தின் தளைகளிலிருந்து உண்மையான விடுதலை நான் உங்களுக்கு வழங்குகிறேன் என்று இயேசு அறிவிக்கிறார் (யோவான் 8:36).

கூண்டை விட்டு வெளியே வந்த பறவையானது, மரங்களை நோக்கிப் பறக்க வேண்டுமே தவிர மீண்டும் அந்தக் கம்பிகளுக்குள் அடைபட விரும்பக் கூடாது. அதேபோல நமது விடுதலை வாழ்வின் தொடக்கமானது சிலுவை மரத்தை நோக்கிய பயணமாக இருக்க வேண்டுமே அன்றிப் பழைய பாவச்சிறைகளைத் தேடுவதாய் இருக்கக் கூடாது.

இகத்திற்கு இழுக்கும் சுயநலத்திலிருந்து விடுதலை (Deliverance from the selfishness, which pulls to the world)

கிறிஸ்தவ கண்ணோட்டத்தின்படி, இவ்வுலகில் நிலவுகின்ற எல்லா வகையான அடிமைத்தனங்களுக்கும், அடக்குமுறைகளுக்கும், மற்றும் அனைத்து அட்டூழியங்களுக்கும் மூலகாரணமாக உள்ளது பாவம் ஆகும். கடவுளை எதிர்க்கின்ற போக்கு பாவம் எனப் புரிந்துகொள்ளப்படுகிறது. கடவுளின் விருப்பத்தை நாம் செயல்படுத்தாமல் நம் மனம் போன போக்கிலே செல்வது பாவம். இதற்கு முக்கிய ஊற்றாக இருப்பது சுயநலம் ஆகும். கடவுளையும் பிறரையும் கருத்தில் கொள்ளாத போக்குதான் இந்த சுயநலம். இது உலகம் சார்ந்த ஆசைகளைத் தூண்டி, உலகத்தின் பிடிக்கு நேராக இழுத்துக் கொண்டே இருக்கும். “உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்” என்னும் வாக்கு, “அக விடுதலை” (internal emancipation) மற்றும் “புற விடுதலை” (external emancipation) என்னும் இரண்டு நிலைகளை உள்ளடக்கியது என்பது இறையியல் அறிஞர்களின் பொதுவான கருத்து.

1. பேச்சிலும், செயலிலும், மனநிலையிலும் உண்மையுள்ளவர்களாக இருந்தால், எந்தவிதக் குற்ற உணர்வும் இன்றி, அகவிடுதலை (internal emancipation) அடைந்தவர்களாக வாழ இயலும்.

2. ஆண்டவரின் வார்த்தைகள் உண்மையானவைகள். அவற்றைக் கடைப்பிடித்து வாழ்ந்தால் புறவிடுதலை (external emancipation) பெற்றவர்களாக வாழ இயலும்.

யூதர்கள் தங்களை மற்ற மக்களை விட உயர்ந்தவர்களாக, மேன்மையானவர்களாகக் கருதி தற்பெருமையுடன் காணப்பட்டனர். எனவே, அதிலிருந்து விடுதலை பெற வேண்டிய அவசியத்தை இயேசு வலியுறுத்தினார். இயேசுவை நம்புவோர் விடுதலை பெறுவர். இது முதன்முதலில் ஓர் உள்ளார்ந்த அனுபவம். அதே நேரத்தில் அவர் தருகின்ற விடுதலை அனுபவத்தைப் பிறரோடு பகிர்ந்துகொண்டு, அவர்களும் உண்மையைக் கண்டு, ஏற்று விடுதலை அடைந்திடச் செயல்படுவது புற விடுதலையை சுட்டிக்காட்டுகிறது. இதற்கு, சுயம் என்னும் நிலையிலிருந்து இறங்கி வருவது இன்றியமையாதது.

மலை கிராமம் ஒன்றில் ஆட்டுக்குட்டிகள் புல் மேய்கையில் அவற்றில் ஒன்று மலைச்சரிவில் வழிதவறிச் சென்று பாறை விளிம்பிலிருந்து தடுமாறி விழுந்தது; நல்வாய்ப்பாக, அதற்குக் காயம் எதுவும் ஏற்படவில்லையெனினும்

அது பயந்துபோய் திரும்பவும் மேலேறத் தெரியாமல் திண்டாடியது. ஆகையால் வேதனையோடு கத்தத் தொடங்கியது. அந்தச் சத்தத்தைக் கேட்ட அதன் தாய் ஆடும், மேய்ப்பன் வந்து அந்த ஆட்டுக்குட்டியை மீட்கும் வரையில் கத்திக்கொண்டே இருந்தது. அபயக்குரலைக் கேட்ட மேய்ப்பனும் ஓடோடி வந்து அந்த ஆட்டுக்குட்டியை மீட்டார். நாமும், வாழ்வில் தடுமாறி விழும் சூழலில் நமது அபயக்குரல் உண்மையாக ஒலிக்கும் போது நம்மை விடுவிக்கும்படி ஆண்டவர் செயல்படுவார்.

புதிய வீட்டிற்குள் நுழையும்போது நாம் எப்போதும் கண்களை கதவு நிலைகளை நோக்கி உயர்த்தியே நுழைகிறோம். அப்படியே இப்புதிய மாதத்திற்குள் நுழைகிறபோது நமது பார்வைகள் உண்மையாகவும், உண்மையை நோக்கியதாகவும் அமையட்டும். ஆண்டவர் அதற்குரிய வழிகளில் நம்மை நடத்துவாராக. ஆமென்.

திரு. G. சந்தோஷ்

முதுநிலை இறையியல் மாணவர், U.T.C.

ᾳ	ஞா. 37	கீர். 79

அருட்பணி:
எல்லா இடங்களிலிருந்தும் எங்கும்

Mission : From Everywhere to Everywhere

1 அர. 17: 1-16 கலா. 2: 1-10

தி.பா. 107: 1-15 மத். 13: 47-52

"ஆம், யூதர்களின் திருத்தூதராகச் செயல்படும் ஆற்றலைப் பேதுருவுக்கு தத்தவரே பிற இனத்தாருக்குத் திருத்தூதராகச் செயல்படும் ஆற்றலை எனக்கும் தந்தார்" (கலா. 2: 8).

அருட்பணி என்பது அனைவருக்கும் நற்செய்தி அறிவிப்பதாகும். இது அப்போஸ்டலோ என்ற கிரேக்கச் சொல், Mission என்ற ஆங்கில அடிச்சொல்லாக அமைகின்றது.இந்த வார்த்தையின் பொருள் "அனுப்புதல்" என்பதாகும். அதாவது மக்களுக்குச் சேவை செய்வதற்காக அனுப்பப் படுவதாகும். அருட்பணி இறைவனுடையது. இறைவனால் தொடங்கப்பட்டது. தலைசிறந்த அருட்பணியாளரான டேவிட் லிவிங்ஸ்டன் அவர்கள் "கடவுளுக்கு ஒரே ஒரு திருமைந்தன்; கடவுள் அவரை அருட்பணியாளராக்கினார்" என்கிறார். அருட்பணியும் நற்செய்தியும் அனைவருக்குமுரியது. ஆதலால் அது எல்லா இடங்களிலிருந்தும் எங்கும் பரவ வேண்டும். இயேசு கிறிஸ்துவும் தமது மீட்பின் திட்டத்தை உலகில் தொடர்ந்து செயல்படுத்துவதற்காகத் தமது சீடர்களை அனுப்பும்போது "நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள். தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள் (மத். 28: 19) என்று கூறினார். அருட்பணி திருச்சபையின் வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் அடையாளம் ஆகும். எனவே திருச்சபை அருட்பணிக்காக மீண்டும் புத்துணர்ச்சியூட்ட அருட்பணி ஞாயிறாக ஆசரிக்கும் இந்நாளில் அருட்பணி எல்லா இடங்களிலிருந்தும் எங்கும் என்பதை திருமறை வசனங்களின் அடிப்படையில் சிந்திப்போம்.

1. அருட்பணி : ஆற்றல்படுத்தும் பணி (1அர. 17:15)

"அவர் போய் எலியா சொன்னபடியே செய்தார். அவரும் அவருடைய மகனும், அவர் வீட்டாரும் பல நாள் சாப்பிட்டார்கள்."

ஆற்றலிழந்து நம்பிக்கையற்று வாழ்கின்றவர்களை ஆற்றல்படுத்தி வாழ்வடையச்செய்வது அருட்பணியின் ஒரு வகையான சேவையாகும். அருட்பணி நிறைவேற்றவும் உடல், உள்ளம், உணர்வு சார்ந்த ஆற்றல் தேவை. இந்த ஆற்றல்கள் அனைத்திற்கும் உறைவிடமாய் இருப்பவர் ஆண்டவர்.

இறையரசுக்குரியோர் இந்த ஆற்றல் அருட்பணியை எல்லா இடங்களிலிருந்தும் எங்கும் எடுத்துச் செல்வதற்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

1அர. 17: 1-16 பகுதியில் எலியா காலத்துப் பஞ்சம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இந்தப் பஞ்சத்தின் காரணம் இஸ்ரயேலர் இறைவனை விட்டுப் பாகால் தெய்வங்களை வழிபட்டதாகும். இந்தச் சூழ்நிலையில் எலியா ஆண்டவரின் வாக்கின்படி கேரீத் ஓடையருகில் ஒளிந்துக் கொண்டார். ஓடையின் தண்ணீரைக் குடித்தார். காகங்கள் காலையிலும் மாலையிலும் அப்பமும் இறைச்சியும் அவருக்குக் கொண்டு வந்தன. ஓடையில் தண்ணீர் வற்றிப்போனபோது ஆண்டவர் எலியாவிடம் நீ புறப்பட்டு சீதோன் பகுதியிலிருக்கும் சாரிபாத்துக்கு போய் அங்கே தங்கியிரு. அங்கே உனக்கு உணவு அளிக்குமாறு ஒரு கைம்பெண்ணுக்குக் கட்டளையிட்டிருக்கிறேன் என்றார். எலியா புறப்பட்டு சாரிபாத்துக்குப் போனார். அந்தக் கைம்பெண்ணை சந்தித்தார். தனக்கு உணவு, தண்ணீர் தேவை என்ற செய்தியைக் கூறினார். ஆனால் வறுமையில் வாழ்ந்த அந்தக் கைம்பெண் ஆற்றலிழந்தவளாய்த் தன்னிடம் இருக்கின்ற கொஞ்சம் மாவையும், எண்ணெயையும் வைத்து தான் அப்பம் சுட்டுத் தானும் தன் மகனும் சாப்பிட்ட பின் சாக இருக்கின்றோம். (1 அர. 17: 12) என்று கூறினாள். எலியா அவளிடம் இஸ்ரவேலின் கடவுளாகிய ஆண்டவர் உரைப்பது இதுவே, நாட்டில் ஆண்டவர் மழை பெய்யச் செய்யும் நாள் வரை பானையிலுள்ள மாவு தீராது; கலயத்திலுள்ள எண்ணெயும் குறையாது என்று சொல்லி அவளை ஆற்றல்படுத்தினார். (1 அரச 17: 14). எலியாவின் வார்த்தையால் ஆற்றல் பெற்ற அந்தக் கைம்பெண் தாராளமாய்க் கொடுத்தாள். எலியா தீர்க்கதரிசியும். சாரிபாத் ஊர் கைம்பெண்ணும், அவளுடைய மகனும் அவள் வீட்டாரும் பல நாள் சாப்பிட்டனர். எலியா வழி ஆண்டவர் உரைத்த வாக்கின்படிப் பானையிலிருந்து மாவு தீரவுமில்லை, கலயத்திலிருந்து எண்ணெய் குறையவும் இல்லை. இதுபோல் நமது அனுதின வாழ்வில் வரும் வறுமை, வியாதி, பிரச்சனைகளால் நாம் ஆற்றலிழந்த சூழ்நிலைகளில் இறைவார்த்தையாம் வேதவசனத்தின்படி ஆற்றல் பெற்று அவைகளை மேற்கொள்வோம்.

ஜார்ஜ் வாஷிங்டன் காரலர் என்பவர் 300-க்கும் மேற்பட்ட புதிய பொருட்களைக் கண்டுபிடித்தவர். பேனா, மை, ஷாம்பூ முதலியவை இவரது கண்டுபிடிப்புகளில் அடங்கும். இவ்வாறு சாதனைகள் புரியக் காரணம் என்னவென்று கேட்டபோது அவர் ஒவ்வொரு நாளும் அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து இறைவனோடு பேசுவேன். அவரது குரலை நான் தெளிவாய்க் கேட்டு இறை ஆற்றல் பெறுவேன். அது என்னை இந்தக் கண்டுபிடிப்புகளைக் கண்டுபிடிக்க ஞானம் தந்தது என்று கூறினார். ஆம் ஆற்றல் படுத்தும் அருட்பணியாக, அருட்பணி எங்கிருந்தும் எல்லா இடத்திற்கும் சொல்லப்பட வேண்டும்.

2. அருட்பணி : அழைப்பின் நோக்கத்தை நிறைவேற்றும் பணி (கலா. 2: 7)

ஆனால் யூதர்களுக்கு நற்செய்தி அறிவிக்கும் பணி பேதுருவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது போலவே பிற இனத்தாருக்கு அதை அறிவிக்கும் பணி என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதை அவர்கள் கண்டு கொண்டார்கள்.

அருட்பணிக்கான அழைப்பு ஒன்றாயிருந்தாலும் அருட்தொண்டுகளில் வேறுபாடு உண்டு எப்படியெனில் தூய ஆவியானவர் ஒருவராயிருந்தாலும் அவர் அருளும் கொடைகளில் பலவகைகள் உள்ளது போலாகும். (1 கொரி 12:4,5), எனவே அருட்பணியாளர்கள் தங்கள் அழைப்பின் நோக்கத்தை அறிந்து அருட்பணியை உண்மையோடு நிறைவேற்ற வேண்டும்

கலா. 2:1-10 பகுதி முதலாம் நூற்றாண்டு திருத்தூதுவர்களுக்கு எருசலேமில் நடந்த கூட்டத்தைப் பற்றிக் கூறுகிறது. இத்திருமறைப் பகுதியின்படி பவுல் பிற இனத்தவர் நடுவில், தான் அறிவித்து வந்த நற்செய்தியைப் பற்றி எடுத்து கூறினார். காரணம்; தான் இதுவரை செய்த பணியும் இப்போது செய்யும் பணியும் பயனற்றுப் போகக் கூடாது என்பதற்காகவும் ஆகும். பவுல் தமஸ்கு பாதையில் கிறிஸ்துவை அறியும் வரை அருட்பணியானது யூதர்களுக்கு மட்டும் என்று இருந்தது. ஆனால் பவுலின் மனமாற்றத்திற்கு பின்பு நற்செய்தி அறிவிக்கும் பணி விருத்தசேதனம் உள்ள யூதருக்குப் பேதுருவிடம் ஒப்படைக்கப்பட்டது போல விருத்தசேதனம் இல்லாத பிற இனத்தாருக்கு அதை அறிவிக்கும்பணி பவுலிடம் ஒப்படைக்கப்பட்டதை யாவரும் கண்டு கொண்டார்கள். அத்துடன் அந்தத் திருப்பணிக்குத் திருச்சபையின் தூண்களாகக் கருதப்பட்ட யாக்கோபு, கேபா, யோவான் ஆகியோர் நட்புறவின் அடையாளமாக பவுலுக்கும் பர்னபாவுக்கும் கைகொடுத்தனர். மேலும் கலா. 2: 10-இன் படி பிற இனத்தாரின் மத்தியில் நற்செய்தி அறிவிப்பதுடன் திருத்தொண்டு சமூக சேவை பணியாகிய ஏழைகளுக்கும் உதவிசெய்ய வேண்டும் என்று அந்தத் திருத்தூதர்களின் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. இன்றும் நாம் செய்யும் அருட்பணி நற்செய்தி அறிவித்தலோடு திருத்தொண்டு சேவை பணியாகத் தேவையிலிருப்போரின் தேவைகள் அறிந்து நிறைவேற்றுவதிலும் உறுதியாய் இருப்போம்.

1946-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 16-ஆம் நாள் அன்னை தெரசா அம்மையார் டார்ஜிலிங் நோக்கிப் புகைவண்டியில் பயணம் செய்து கொண்டிருந்தார். அப்போது அவருக்கு ஓர் அழைப்பின் சத்தம் கேட்டது. எப்படியென்றால் வகுப்பறையில் கல்வி கற்றுக் கொடுக்கும் ஆசிரியராயிருந்து சொகுசு வாழ்வு வாழ்வதற்காகவா நீ அழைக்கப்பட்டிருக்கிறாய்? உன் அழைப்பின் நோக்கமே சேரிகளில் வாழும் ஏழை மக்கள், நோயாளிகள், துன்புறுவோர் ஆகியோர் நலம் பெற உழைப்பதல்லவா என்ற ஆண்டவரின் சத்தத்தைக் கேட்டபோது அழைப்பின் நோக்கமறிந்து அருட்பணியாற்றினார்கள். ஆம் நாமும் நற்செய்திப் பணியை நற்கிரியைகள் வாயிலாகவும் செய்வோம்.

3. அருட்பணி: விண்ணரசின் தகவுகளை வெளிப்படுத்தும் பணி (மத். 13: 47)

“விண்ணரசு கடலில் வீசப்பட்டு எல்லா வகையான மீன்களையும் வாரிக்கொண்டு வரும் வலைக்கு ஒப்பாகும்.”

அருட்பணி எல்லா இடங்களிலிருந்தும் எங்கும் என்ற பொருளுக்கு ஏற்ப மண்ணுலக அரசின் நிலையிலிருந்து விண்ணரசின் நிலைக்கு சென்றடைகிற நிலையினைக் காட்டுகிறது. மத்தேயு 13-ஆம் அதிகாரத்தில்

விண்ணரசின் தகவுகளை மக்கள் புரிந்துகொள்ளும்படியாக இயேசு ஏழு உவமைகளைக் கூறுகிறார். அதில் ஓர் உவமை மத். 3:47-52 பகுதி ஆகும். இது மீன் வலை உவமை. இந்த உவமையில் விண்ணரசு கடலில் வீசப்பட்டு எல்லா வகையான மீன்களையும் வாரிக் கொண்டு வரும் வலைக்கு ஒப்பானது என்று கூறப்பட்டுள்ளது. அந்த வலையில் கலந்து கிடக்கும் பல வகையான மீன்களிலிருந்து நல்லவற்றையும் வேண்டாதவற்றையும் பிரித்து எடுப்பார்கள். அருட்பணியின் முதன்மை நோக்கமும் எல்லாருக்கும் நற்செய்தி அறிவிப்பதாகும். அதில் நீதிமான்களும், பொல்லாதவர்களும் அடங்குவர். பொல்லாதவர்களும் மனமாற்றம் பெற்று நீதிமான்களாக வேண்டும். அப்படி மனமாற்றமடையாத போது பொல்லாதவர்களின் கையிலிருந்து நீதிமான்களைப் பாதுகாக்க வேண்டும். இன்று விண்ணரசை விரிவாக்கும் பணியில் திருச்சபையில் பல அருட்பணியாளர்கள், பல இயக்கங்கள் தனித்தனி தலைமைத்துவத்தோடு பணிச் செய்கின்றனர். ஆதலால் அருட்பணி எல்லா இடங்களிலிருந்தும் எங்கும் சென்று கொண்டிருக்கின்றது. அருட்பணியால் விண்ணரசின் தகவுகளும் மக்களிடம் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது.

அயர்லாந்தில் பிறந்த சி.எஸ்.லூயிஸ், ஆக்ஸ்போர்டு பல்கலைகழகத்தில் படித்தபின் பிரிட்டிஷ் இராணுவத்தில் பணிபுரிந்தார். அங்கு அவருக்குப் பலமான காயம் ஏற்பட்டதால் அப்பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார். கிரேக்க, லத்தீன் மொழிகளில் புலமை பெற்ற இவர் இயேசு கிறிஸ்துவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். அதன் பின் இவர் மிஷனரியாகவோ. போதகராகவோ பணிச் செய்யவில்லை. மாறாக விண்ணரசின் தகவுகளை பெற்ற சிறந்த கிறிஸ்தவராகத் தன் வாழ்வை அமைத்துக் கிறிஸ்துவுக்காகப் பல நல்ல செயல்களைச் செய்தார். இதனால் இறைவனுக்குப் புகழ்ச்சியாக வாழ்ந்த இவர் மூலம் அருட்பணி விரிவடைந்தது. இன்றும் அருட்பணி எல்லா இடங்களிலிருந்தும் எங்கும் செய்யப்பட: ஆற்றல்படுத்தும் பணியாய், அழைப்பின் நோக்கத்தை நிறைவேற்றும் பணியாய், விண்ணரசின் தகவுகளை வெளிப்படுத்தும் பணியாய் அருட்பணியை நிறைவேற்றுவோம். இறைமக்கள் அனைவரும் அருட்பணிச் செய்யும் அருட்பணியாளர்கள் என்பதை உணர்ந்து இறையரசு விரிவடையச் செயல்படுவோம். ஆமென்.

அருள்திரு. M.P. விஜயகுமார்
சேகர ஆயர், கல்லங்குழி

ப	ஞா. 351	கீர். 407

இறைவேண்டல்

அனைத்தாற்றலுள்ள கடவுளே, உமது மக்களுக்கு நீர் ஒப்படைத்த பணிக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். உமது கட்டளையை விடாமுயற்சியுடன் நாங்கள் கடைப்பிடிக்கவும், அனைவரையும் அரவணைக்கும் உம் பணியில் ஆக்கப்பூர்வமாக ஈடுபடவும், எங்களுக்கு உதவி செய்ய உம்மிடம் வேண்டுகிறோம். உமது நற்செய்தியை அறிவிக்கவும், நோய்களைக் குணப்படுத்தவும், பலவீனமானவர்களை தாங்கவும், சிறைபிடிக்கப்பட்டவர்களை விடுவிக்கவும், உமது ஆவியால் எங்களுக்கு ஆற்றல் தாரும். உம்மோடும் தூய ஆவியரோடும் இப்போதும் எப்போதும் வாழ்ந்து ஆட்சி செய்யும் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாயிலாக வேண்டுகிறோம், ஆமென்.

10.08.2025

திருமணம்: அன்பால் நீடிக்கும் வாழ்வு

Marriage : Lasting life of Love

தொ.நூ. 29: 1-20 எபி. 13: 1-6
தி.பா. 128 மத். 19: 3-9

"இனி அவர்கள் இருவர் அல்ல ; ஒரே உடல். எனவே கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்" (மத். 19: 6).

வாழ்க்கை என்ற பயணத்திலே திருமணம் மிக முக்கியமான, கனமிக்க ஒரு நிகழ்வாக அமைகின்றது. இது கடவுளால் ஏற்படுத்தப்பட்ட ஒரு புனிதமான சமூக அமைப்பாகும். திருமணம் என்பது இறைச் சமூகத்தில் ஓர் ஆண் மற்றும் பெண் ஏற்படுத்திக்கொள்ளும் உடன்படிக்கையின் உறவாகும். (Marriage is a covenant relationship between a man and woman in the presence of God). திருமணம் என்பது கிறிஸ்தவர்களில் ஒரு சாராரால் திருவருட்சாதனம் என்று மிகவும் மேன்மையாகக் கருதப்படுகிறது. திருமணத்தை அனைவரும் உயர்வாக மதியுங்கள் என்று திருமறை கட்டளையிடுகிறது (எபி. 13: 4). திருமண வாழ்வு திரியேகக் கடவுளின் அன்பு நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் திருவருட்சாதனமாகக் கடவுளால் உருவாக்கப்பட்டு, திருச்சபையால் அங்கீகரிக்கப்பட்டது என்பதால் யாரும் இதை அற்பமாக எண்ணக்கூடாது.

டாக்டர் அ. அல்போன்ஸ் அவர்கள் தன் "இதமான இதயங்கள்" என்ற நூலில் திருமணத்தைப் பற்றிச் சொல்லும்போது, "திருமணம் மனித வாழ்வின் இரண்டாம் பிறப்பு" என்கிறார். எவ்வாறு ஒரு தாயும் குடும்பமும் குழந்தைப் பேற்றிற்குப் பக்குவமாகத் தயாரிக்கின்றார்களோ, அதைவிட இரண்டு மடங்கு அதிகமாகத் திருமணத்திற்குத் தம்பதியர் தங்களைத் தயாரிக்க வேண்டும். இன்று திருமணம் என்கின்ற இப்புனிதமான உறவாகிய அன்பின் நீடித்த வாழ்வு சிதைவதற்கு மிக முக்கிய காரணம் திருமணத்திற்கென்று தங்களை சரியான முறையில் ஆயத்தம் செய்யாததும், அதன் மாண்பையும் புனித தன்மையையும் சரியான முறையில் புரிந்துகொள்ளாததுமாகும். திருமணம் என்பது இன்ப உணர்விற்குத் தீனிபோடும் முயற்சி மட்டுமல்ல; மாறாக வாழ்நாள் முழுவதும் இன்ப துன்பம் இரண்டிலும் சமபங்காற்றி மனிதனின் அறக்கடமையை நிறைவேற்ற தொடர்வது என்ற ஆழமான புரிதல் வேண்டும். இந்த நாளிலும் திருமணம்: அன்பின் நீடித்த வாழ்வாக நம் குடும்பங்களில் நிலைத்து நிற்க எத்தகைய காரியங்களை நம் வாழ்வில் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதைத் சிந்திப்போம்.

1. திருமணம்: இணையான அன்பில் இசைந்து வாழ்வது : (மத். 19: 4, 5)

ஆண்டவர் இயேசு, திருமணத்தைப் பற்றிக் கேள்வியோடு வந்த பரிசேயர்களுக்குப் பதில் சொல்லும்போது, திருமண வாழ்வில் கணவன் மனைவி எவ்வளவு ஒன்றித்து இணையான அன்பில் இசைந்து வாழ வேண்டும் என்று (மத். 19: 4, 5) கற்றுக் கொடுக்கிறார். மனிதனை உண்டாக்கிய கடவுள் எந்த ஏற்றத்தாழ்வுமின்றி அவர்களை ஆணும் பெண்ணுமாக இணையான அன்பில் படைத்தார். ஆகையால் அவர்கள் ஒரே மாம்சமாக இசைந்த அன்பிலே வாழவேண்டும். காரணம், அவர்கள் சமநிலையிலே உருவாக்கப்பட்டவர்கள் (தொ.நூ. 1: 27). அவர்கள் இருவரும் ஒரே உடலாய் இருக்கிறார்கள் (தொ.நூ. 2: 24). திருமண அன்பில் / உடன்படிக்கையில் தங்களை இணைக்கும் ஆணும் பெண்ணும் தாங்களாகவே முன்வந்து திருமண வாழ்வுக்கு கடவுள் சமூகத்தில் ஒப்புக்கொடுக்கின்றனர். "உம்மை என் மனைவியாக / கணவனாக ஏற்றுக்கொண்டு இன்று முதல் நன்மையிலும் தீமையிலும், வாழ்விலும் தாழ்விலும்... வாக்குக் கொடுக்கிறேன்".

எனவே, குடும்ப வாழ்வில் கடந்துசெல்லும் பாதைகளில் வரும் ஏற்றத்தாழ்வுகளிலும் இருவரும் இணையான பாசம் காட்டிப் பயணிப்பது ஆரோக்கியமான குடும்பமாக அமையும். திருமறையைப் படிக்கும்போது வாழ்வின் ஏற்றத்தாழ்வுகளிலே இசைந்த உள்ளத்தோடு இணையான அன்பு பாராட்டிய குடும்பங்களைப் பார்க்கிறோம். 2அர. 4: 8-10-இல் சூனேமியாளும் அவளது கணவனும் இணைந்து ஆலோசித்து முடிவெடுக்கின்றதைப் பார்க்கிறோம். I சாமு. 1: 1-8 வரை படிக்கும்போது துக்கத்தோடு இருந்த அன்னாளை எல்கானாவின் வார்த்தைகள் ஆறுதல்படுத்துவதைப் பார்க்கிறோம் (I சாமு. 1: 8). இத்தகைய அனுபவம் குடும்ப வாழ்வினிலே இணைகின்ற இருமனங்களிடையே இருந்தால் திருமண வாழ்வு அன்பின் நீடித்த வாழ்வாக அமையும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

2. திருமணம்: தன்னலமற்ற அன்பில் ஒருடலாய் வாழ்வது : (தொ.நூ. 2: 23)

திருமணத்தில் ஆணும் பெண்ணும் சரிசம மரியாதை உடையவர்கள். காரணம் இருவரும் ஒருடலாய் இருக்கிறார்கள். இதை உணர்ந்த ஆதாம் கடவுளிடம் இவள் என் எலும்பில் எலும்பும் என் மாம்சத்தில் மாம்சமாயிருக்கிறாள் என்று கூறுகிறார். திருமண பந்தத்தின் மூலம் இணைக்கப்படுகின்ற இருவரும் அவர்களை ஒருடலாய் காணும்போது தன்னலம் / சுயநலம் அங்கு மாண்டு தன்னலமற்ற அன்பு பிறக்கும். ஒரு ஆணும் பெண்ணும் இப்படித் தன்னலமற்ற அன்பால் (unselfish love) ஒருடலாய் இணையும்பொழுதுதான் சமூகம், திருச்சபை, விரும்பத்தக்க ஆரோக்கியமான குடும்பம் (Healthy Home) அமையும். பெரும்பாலும் உலகிலுள்ள எல்லா குடும்பங்களையும் பிணைத்திருப்பது இயற்கையாகவே மனிதனிலுள்ள பாச உணர்ச்சிதான் (natural impulse). ஆனால், ஒரு கிறிஸ்தவக் குடும்பம், இயற்கையான பாச உணவிற்கும் மேலே

ஒருவரிலொருவர் கொண்டுள்ள தன்னலமற்ற அன்பால் (unselfish love) பிணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

எபே. 5: 33-இல் சொல்லப்படுகிறது "எப்படியும், உங்களிலும் அவனவன் தன்னிடத்தில் அன்பு கூருவதுபோல, தன் மனைவியினிடத்திலும் அன்புகூரக்கடவன்; மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக்கடவள்". தன்னலமற்ற அன்புள்ள மனிதன் தனது மனைவிக்காகவும், தன் பிள்ளைகள் மற்றும் குடும்பத்திற்காகவும் தன்னுடைய உல்லாசத்தையும், தன்னுடைய உயிரையும், தனக்குள்ள சகலத்தையும் துறக்கவும், இழக்கவும் தயாராக இருக்கிறான். மத். 19-ஆம் அதிகாரத்தில் இயேசு சொல்லும்போது திருமண வாழ்வு தனித்தன்மை வாய்ந்த, வாழ்வின் கடைசிநாள் வரை நீடிக்கும் புனிதமான, மகிழ்ச்சியான, எந்த விதத்திலும் தனியுரிமை தேடாமல், கணவன் பாதி மனைவி பாதி என்ற நிலையில் ஒருவர் மற்றவரில் முழுமையைக் கண்டு வாழும் வாழ்வைக் குறிப்பிடுகிறார்.

ஒருவர் மற்றவரில் தன்னுடைய முழுமையைக் காணும்போது மணவாழ்வு மலருகிறது. இது தனிமையில் கிடைக்காத மனநிறைவை, மன மகிழ்வைப் பெற்றுத்தரும் புனித வாழ்வாக எல்லா சூழ்நிலைகளையும் பகிர்ந்து வாழும் வாழ்வாக அமைகிறது. மாறாக, வாழ்விலும் தாழ்விலும், வறுமையிலும் வளமையிலும் தன்னலமற்ற அன்பை வெளிப்படுத்தி ஒருடலாய் வாழ இயலவில்லையென்றால், அந்த திருமண வழ்வு தெருமண வாழ்வாகத் தோல்வியில் முடியும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

3. திருமணம்: இறைவன் இணைத்த புனித உறவைப் பேணி வாழ்வது :
(எபி. 13: 4)

திருமணம் அன்பின் நீடித்த வாழ்வாக அமைய சுய ஒழுக்கம் மற்றும் அறம் சார்ந்த வாழ்வு அவசியம். ஆகையினாலேதான் ஒழுக்கநெறி வாழ்வுக்குத் திருமறை அதிக அழுத்தம் தருகிறது. விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ள அனுபவமானபடியால் விவாகமஞ்சம் அசுசிப்படாமல் பாதுகாப்பது அவசியம். சுய ஒழுக்கத்தைக் (Self-discipline) குறித்து வள்ளுவர் கூறும்போது

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்" என்கிறார்.

அதாவது மனித வாழ்க்கையில் ஒழுக்கம் மேன்மை தருவதாக இருப்பதால், அவ்வொழுக்கம் உயிரைவிட மேலாகப் போற்றப்படுகிறது என்பது அர்த்தம். Be loyal and faithful to your partner. கற்பு நெறியான வாழ்க்கை என்பது பெண்ணுக்கு மட்டுமல்ல; ஆணுக்குமுண்டு. சாலமோன் ஞானி ஆண்களுக்கு அறிவுரைக் கூறும்போது, "உன் இளவயதின் மனைவியோடே மகிழ்ந்திரு. அவளே நேசிக்கப்படத்தக்க பெண்மானும், அழகான வரையாடும் போலிருப்பாளாக..." என்கிறார் (நீதி. 5: 18, 19).

தொ.நூ. 2: 18-இல் மனிதன் தனிமையாயிருப்பது நல்லதல்ல; ஏற்ற துணையை உண்டாக்குவேன் என்ற ஆண்டவர் தொ.நூ. 2: 21, 22-இல் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணி, அவன் விலா எலும்பை எடுத்து ஏற்ற துணையாக ஆதாமுக்கு ஏவாளைக் கொடுக்கிறார். நம்முடைய வாழ்விலும் இறைவன் நமக்குக் கொடுத்திருக்கும் துணை நமக்கே பொருத்தமானது. இதைத்தவிர வேறு எதுவும் ஏற்றதாக நிச்சயம் இருக்காது, இந்த உறவு புனிதமானது என்ற புரிதல் வேண்டும்.

அன்பர்களே, குடும்ப உறவினை அல்லது கடவுள் தந்த புனித வாழ்வின் மாண்பை சீர்குலையச் செய்கிற சிந்தைகளை அகற்றி வாழ அழைக்கப்படுகிறோம். காரணம் அவரே நமக்கு சாட்சியாயிருக்கிறார் (மல். 2: 14-16). இன்றைய நவநாகரிக உலகிலே உலக தகவுகளால் சமுதாயம் நாசமாகிறதைக் காண்கிறோம். உறுதியான நம்பிக்கைக்கும் நிலையான அன்பிற்கும் அடையாளமாக அணிந்துகொள்ளும் திருமாங்கலியத்தையே அநாகரிகமாக நினைக்கும் நிலைமை, வாகனங்களின் சாவியை வைத்து துணைகளை மாற்றிச் சமூகச் சீர்கேட்டிலே ஈடுபடும் கலாச்சாரம். இவை சமூகத்தை விழுங்கத் துடிக்கும்போது கிறிஸ்தவ குடும்பங்கள் இந்தச் சமூகத்திலே திருமணம்: அன்பின் நீடித்த வாழ்வு என்பதை வெளிப்படுத்த இணையான அன்பில் இசைந்து வாழ்ந்து, தன்னலமற்ற அன்பில் ஒருடலாய் வாழ்ந்து, இறைவன் தந்த புனித வாழ்வின் உறவை பேணிக் காப்போம். இறைவன் தாமே இவ்வார்த்தைகளினால் நம்மை ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

ப	ஞா. 254	கீர். 309

அருள்திரு. அறிவர். J. றசல் ஜசக்
சேகர ஆயர், ஆரல்வாய்மொழி

இறைவேண்டல்

அன்பின் கடவுளே, அன்பு மற்றும் தோழமையின் புனிதமான பிணைப்பில் ஆணும் பெண்ணுமாக இணையும் குடும்பம் முக்கியமான மையமாக இருப்பதாற்காக நாங்கள் உமக்கு நன்றி கூறுகிறோம். கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் மரியாதையுடனும் கண்ணியத்துடனும் நடத்தும் எங்கள் உறவுகள் வாழ எங்களுக்கு அருளையும் அன்பையும் தாரும். உம்மோடும் தூய ஆவியரோடும் முடிவில்லாத ஒரே கடவுளாய் வாழ்ந்து ஆட்சி செய்யும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வாயிலாக வேண்டுகிறோம், ஆமென்.

15.08.2025 **விடுதலைத் திருநாள்**

முடிவெடுப்பதில் பங்கேற்பு

Participatory Decision making

வி.ப. 18: 13-27 தி.ப. 15: 22-29

தி.பா. 2 லூக். 20: 20-26

"சீசருக்கு உரியவற்றைச் சீசருக்கும், கடவுளுக்கு உரியவற்றைக் கடவுளுக்கும் கொடுங்கள்" (லூக். 20: 25).

இந்திய ஆங்கிலேய ஒடுக்குமுறையினின்று விடுதலைபெற்ற நாளை நாம் கொண்டாடுகின்றோம். ஆனால், இன்று மனிதன் அநேக காரியங்களினால் அடிமைப்பட்டிருக்கின்றான். சாதி, மதம், கலாச்சாரம், மூடநம்பிக்கைகள், அறியாமை போன்றவைகளால் தன்னை ஒரு வட்டத்திற்குள்ளாக நிறுத்தி, தான் இருப்பது போன்று எல்லோரும் இருக்க வேண்டும் என்று ஒருமையில் நினைக்கின்றான். நான்தான் எல்லாம் என்ற மனநிலைக்கு வருகின்றான். இதனால் சமூக நீதி மாறி, ஒடுக்குமுறை கலாச்சாரம் மீண்டும் மக்கள் மத்தியில் வருகின்றது. எனவே, நம் நாட்டின் வளர்சிக்கும் தனிப்பட்ட மனித வாழ்வின் எழுச்சிக்கும் முடிவெடுப்பதில் பங்கேற்பு அவசியமாக அமைகின்றது. இன்று எவ்வாறு இதிலே பங்கேற்பது, பங்கேற்பதின் மூலமாக இதில் எல்லோருக்கும் கிடைக்கும் நன்மை என்ன? என்பதை ஆராய்வோம்.

இன்று ஒவ்வொரு இந்திய குடிமகனும் தன்னை சமூகம் சார்ந்த அனைத்துக் காரியங்களிலும் இணைத்துக் கொள்ள வேண்டும். அதில் முக்கியமானது முடிவெடுப்பதில் பங்கேற்பு. இதனால் சமூகம் மட்டுமல்ல தனிப்பட்ட வாழ்விலும் மனிதர் சந்திக்கும் பல குழப்பங்களிலிருந்தும் விடுபடலாம். இதனால் சமூகம் மற்றும் தனிப்பட்ட வாழ்வில் ஒரு பெரிய தாக்கத்தை உருவாக்க முடியும். இதைச் செயல்படுத்த என்ன செய்ய வேண்டும்.

1. இணைந்து செயல்பட வேண்டும்

மனிதர் தங்களைத் தனித்துவமாகக் காட்ட விரும்புகின்றனர். இதனால் குழப்பங்கள்தான் அதிகரித்துக்கொண்டிருக்கின்றன. தன்னைச் சார்ந்தவர்களுக்கு மட்டுமே நல்லதைச் செய்ய முடியும். மற்றவர்களைக் கண்டுகொள்ளாத நிலை ஏற்படும். வி.ப. 18: 13-27-இல் மோசே மக்களை நியாயம் விசாரிக்க ஆரம்பித்தான். ஆனால் அவரால் எவருடைய குறையும் சரியாக நிவிர்த்தி செய்ய இயலவில்லை. மக்கள் தினந்தோறும் புதிய புதிய குழப்பங்களோடு காத்திருக்கத் தொடங்கினர். இதைக் கண்ட மோசேயின் மாமன் ஒரு ஆலோசனை கொடுக்கின்றார். திறமையானவரைக் கண்டறிந்துப் பணியை பிரித்து கொடுக்கவும், இதனால் பணி சுமையும் குறையும்

எல்லோருக்கும் நீதி கிடைக்கும் என்று. இதைக் கேட்ட மோசே அவ்வாறே செய்ததினால் வெளிப்படைத் தன்மையும் எல்லோருடைய குரலுக்கும் மதிப்பும் கிடைத்தது. இன்று நாம் வாழும் சமூகத்தில் ஒரு தனி மனதனின் குரலுக்கு அதிக மதிப்பளிக்கப்படுவதில்லை. இதனால் மனித நீதி மறுக்கப்படுகின்றது. மனிதன் ஒடுக்கப்படுகின்றான். தி.ப. 15: 24-இல் மக்களை நல்வழிபடுத்தவும் சமூக வாழ்வில் தெளிவுடன் இருக்க ஆலோசனைக் கொடுக்கப்படுகின்றது. இதனால் மனிதன் தங்கள் வாழ்வில் ஏற்றத்தாழ்வின்றியும் சரியாக விழிப்புணர்வோடும் இருக்க முடியும் என்பதை மக்களுக்குத் தெரியப்படுத்துகின்றார்.

2. அமைதியான சூழலை உருவாக்க வேண்டும்

முடிவெடுப்பதில் பங்கேற்பு என்பதின் முக்கியத்துவம், ஒரு சமூகத்தை கலவரங்கள் இல்லாமல் அமைதலோடு எடுத்துச் செல்வதாகும். ஒருமித்த கருத்துகள் இல்லாததினால் ஒருவருக்கொருவர் தங்களைப் பெரியவர்கள் என்று காண்பிப்பதால் சமூகத்தில் அமைதியற்ற சூழ்நிலை உருவாகின்றது. இதைப் பார்க்கும் மற்றவர்களும் தங்களது கருத்தை திணிக்கவும் முற்படுகின்றனர். லூக். 20: 20-26-இல் கிறிஸ்துவை குற்றம் கண்டுபிடிப்பதற்காக கேள்வி கேட்க ஆரம்பித்தார்கள். ஆனால், கிறிஸ்துவே ஞானத்தோடு செயல்பட்டு அமைதலாக பதிலுரைக்கின்றார். இதனால் குழப்பத்தை உருவாக்காமல் அமைதியனை நிலைநாட்டுகின்றார். ஒரு நாட்டு குடிமகனாக வரி செலுத்துவதின் அவசியத்தையும் எடுத்துரைக்கின்றார். ஒரு நல்ல தலைவனின் திறமை, மக்களிடம் அமைதலை உருவாக்குவது. கிறிஸ்து அதைக் காண்பிக்கின்றார்.

இன்று நாம் வாழும் இந்த சமூகத்தில் அமைதலை உருவாக்க வேண்டும் என்றால் தீர்மானம் எடுப்பதில் கவனத்தோடு செயல்பட வேண்டும். ஒவ்வொருவரையும் இணைத்துக்கொள்ள வேண்டும். நமது நிர்வாகத்தைச் சீருடனும் திறமையுடனும் செய்வது மட்டுமன்றி வெளிப்பட தன்மையும் கணக்கு ஒப்புவித்தலில் நேர்மையும் கணப்பட வேண்டும். சமூகம் சார்ந்த காரியங்களில் எல்லோரையும் ஏற்றத்தாழ்வின்றிப் பங்கேற்க வைக்க வேண்டும். எல்லோருக்கும் சம உரிமை கிடைத்துள்ளதா? என்பதைக் கண்காணிக்க வேண்டும். எடுக்கும் தீர்மானங்கள் ஒருபட்சமாக இராமல் எல்லோருக்கும் சமமாக இருக்க வேண்டும். மதம், கலாச்சாரம், சம உரிமை போன்றவற்றிற்கு மதிப்பளிக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக நாட்டின் முன்னேற்றத்திற்காக வரி செலுத்துவது மட்டுமின்றிக் குறைகளைக் கண்டறிந்து குழப்பங்களைத் தவிர்த்து சீரான தீர்மானங்களை எடுப்போமானால் நம்முடைய பங்களிப்பை, தீர்மானம் எடுப்பதில் சரியான பங்களிப்பைக் கொடுக்க முடியும், ஆமென்.

திரு. **S. பிளசின்**

திருப்பணிவிடையாளர், செம்மந்தரை கிறைஸ்ட்

ᴜ	ஞா. 9	கீர். 128

17.08.2025

திருமுழுக்கு: விண்ணிலிருந்து பிறத்தல்

Baptism : Born from Above

தொ.நூ. 8: 1-14 கொலோ. 3: 1-11

தி.பா. 25 யோவா. 3: 1- 8

"இயேசு அவரைப் பார்த்து, ஒருவர் தண்ணீராலும் தூய ஆவியாலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்கு உட்பட இயலாது என்று மிக உறுதியாக உமக்குச் சொல்கிறேன்" (யோவா. 3: 5).

விண்ணிலிருந்து பிறத்தல் என்பது மானிட வாழ்வில் நடைபெறும் மறுசீரமைப்பு செய்தல் என்ற பொருளில் நாம் புரிந்து கொள்ளலாம். சீர்திருத்தத் திருச்சபைகள் மானிடம் மறுசீரமைப்பு பெறுவதற்கு இரண்டு திருவருட் சாதனங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

1. திருமுழுக்கு (Baptism)
2. திருவிருந்து (Communion)

இச்சிந்தனையினை வலியுறுத்தும்படி Peter Kreft என்பவர் கூறுவது Baptism is like, accepting a Marriage Proposal and the Eucharist is like the actual Wedding (திருமுழுக்கு என்பது திருமணத்திற்குத் திட்டமிடுதலாகவும், திருவிருந்து என்பது திருமணம் செய்து கொள்வதாகவும் விளக்கி கூறுகிறார்). எனவே மானிட வாழ்வில் மறுசீர்திருத்தம் பெறுவதற்கு திருமுழுக்கு அடித்தளமாய் அமைந்திருக்கிறது. Watchman Nee என்பவர் Baptism is a outward testimony of an inward transformation என்கிறார். (உள்ளார்ந்த மனநிலையில் மாற்றுருவாக்கத்தை உருவாக்கி கொள்ளும்போது, வெளிப்படையாக சாட்சியுள்ள வாழ்வு வாழ்தல்) இச்சிந்தனைதான் உரோ. 6: 18 தெளிவுப்படுத்துகிறது. பாவத்தினின்று விடுதலை பெற்ற நீங்கள் கடவுளுக்கு ஏற்புடைய வாழ்க்கை நெறிக்கு அடிமைகளாயிருக்கிறீர்கள்.தரப்பட்டிருக்கும் நற்செய்தி பகுதியில் நிக்கதேமு என்ற பரிசேயரைக் குறித்து கற்றுக் கொள்ளலாம். இவர் மறுபடியும் பிறத்தலை குறித்த குழம்பிய மனநிலையோடு இயேசு கிறிஸ்துவைச் சந்திக்கிறார். அப்போது இயேசு கிறிஸ்து திருமுழுக்கு என்பது, மனிதன் தண்ணீரினாலும், ஆவியினாலும் பிறப்பிக்கப்படுதல் என்று விளக்கி சொல்கிறார். இப்பகுதியில் அவர் யோர்தான் நதியில் திருமுழுக்கு முனிவரால் பெற்றுக்கொண்ட திருமுழுக்கின் அனுபவத்தை நினைப்பூட்டுகிறார்.

இயேசு கிறிஸ்து யோர்தான் நதியில் திருமுழுக்கு பெற்றபோது தண்ணீரிலிருந்து கரையேறின உடனே தூய ஆவி புறாவைப் போல் தம்மீது இறங்கி வருவதைக் கண்டார். இந்நிகழ்வு மனித நிலையிலிருந்து தெய்வீக நிலைக்கு மாற்றுருவாக்கம் செய்யப்படுவதை உறுதிபடுத்துகிறது. எனவே

பற்றுறுதி சமூகத்தவரும் திருமுழுக்கின் வழியாய் மாற்றுருவாக்கம் பெற செய்யவேண்டியது என்ன என்பதைக் குறித்து சிந்தனை செய்யும்படி அழைக்கப்படுகிறோம்.

1. உயர்வானவைகளை தேடுதலே விண்ணிலிருந்து பிறத்தல் (கொலோ. 3: 2)

"இவ்வுலகு சார்ந்தவை பற்றி அல்ல, மேலுலகு சார்ந்தவை பற்றியே எண்ணுங்கள்."

மண்ணுலகில் உயர்வானவைகள் தாழ்வானவைகள் என்று இரு பெரும் பிரிவுகள் உள்ளன. தாழ்வானவைகள் என்று எண்ணப்படுகிறவைகள் ஊனியல்பு சார்ந்தவைகள். உயர்வானவைகள் என்பவைகள் விண்ணுலகு சார்ந்தவைகள். பவுலடியார் திருமுழுக்கு பெறுவோர் உலகத்திலுள்ளவைகளான சினம், சீற்றம், தீமை ஆகிய அனைத்தையும் அகற்றிவிடவும், பழிப்புரை, வெட்கக்கேடான பேச்சு, பொய் பேசுதல் போன்ற உலகியல் சார்ந்த அனுபவங்களிலிருந்து விடுபடுவதே உண்மையான திருமுழுக்கு என்பதை விளக்கி சொல்லுகிறார். ஆனால் மானிடர் இவைகளிலிருந்து விடுபடாதவராகவே செயல்படுகிறார்கள். தொடக்க நூல். 8:7-வது வசனத்தில் காகம் என்ற பறவையைக் குறித்துச் சொல்லப்பட்டிருப்பதை நாம் படிக்கிறோம். காகம் என்பது பொதுவாகவே சுத்தமில்லாத பட்டியலில் வருகிறது. நோவாவின் காலத்தில் வெள்ளப்பெருக்கு என்பது தேசத்தைப் புதுப்பிப்பதற்கு அடையாளமாக எண்ணப்பட்டது. வெள்ளைப்பெருக்குக்கு பின்பு உலகில் தீங்கு விளைவிக்க கூடியவைகள் எதுவும் இருக்க கூடாது என்பது இறைவனின் விருப்பம். ஆனால் வெள்ளைப்பெருக்கிற்கு பின்பு காகம் பேழையிலிருந்து வெளியே விடப்பட்டபோது அது போகிறதும் வருகிறதுமாய் இருந்தது என்று திருமறை சித்திரிக்கின்றது. இது எதனை விளக்குகின்றது என்றால் காகத்திற்குப் பேழைக்கு உள்ளிருக்கவும் ஆசை உண்டு. அதே நேரத்தில் பேழைக்கு வெளியே இருக்கவும் விருப்பம் உடையதாகச் செயல்படுகிறது. இதைப்போன்று தான் இக்காலத்தில் திருமுழுக்கு பெற்றவர்கள் உயர்வானதைத் தேட வேண்டும் என்று வாஞ்சிக்கிறார்கள். அதைப்போன்று உலகத்திலுள்ளவைகளையும் வாஞ்சிக்கிறார்கள். இத்தன்மையானது உண்மையான மறுபிறப்பை அடையாத நிலையை விளக்கிக் காட்டுகிறது. தொ.நூ. 8: 8ஆவது வசனத்தின்படி நோவா வெள்ளப்பெருக்கு முடிவுக்கு வந்ததா என்பதை அறியும்படி புறா ஒன்றை வெளியே அனுப்பினார். ஆனால் புறாவானது உலகத்தில் தூய்மையற்ற நிலை இருப்பதால் மீண்டும் பேழைக்கே திரும்பி வந்தது. இதுவே உண்மையான மறுபிறப்பை விளக்கி காட்டும் நிகழ்வு ஆகும். எனவே திருமுழுக்குப் பெறுதல் என்பது ஆவியினால் பிறப்பதாகிய உயர்வானவற்றைத் தேடுவதையே சுட்டிக்காட்டுகிறது. இதனை யோவா. 3: 6 மனிதரால் பிறப்பவர் மனித இயல்பை உடையவர். தூய ஆவியால் பிறப்பவர் தூய ஆவியின் இயல்பை உடையவர் என விளக்குகின்றது.

2. உன்னதரோடு உயிர்த்தெழுதலே விண்ணிலிருந்து பிறத்தல் (கொலோ. 2:12)

நீங்கள் திருமுழுக்குப் பெற்றபோது அவரோடு அடக்கம் செய்யப்பட்டீர்கள். சாவிலிருந்து அவரை உயிர்த்தெழச் செய்த கடவுளின்

ஆற்றல்மீது கொண்டுள்ள நம்பிக்கையால் அவரோடு நீங்களும் உயிர்பெற்று எழுந்துள்ளீர்கள்.

கிறிஸ்தவ வாழ்க்கை செத்து பிழைக்கும் ஓர் அனுபவமாகும். இதனைத் பவுலார் நீங்கள் திருமுழுக்கு பெற்றபோது அவரோடு அடக்கம் செய்யப்பட்டீர்கள். சாவிலிருந்து அவரை உயிர்த்தெழச் செய்த கடவுளின் ஆற்றல் மீது கொண்டுள்ள நம்பிக்கையால் அவரோடு நீங்களும் உயிர்பெற்று எழுந்துள்ளீர்கள் என்று குறிப்பிடுகிறார். இவ்வாறு மரித்து உயிர் பெற்று எழல் ஒரு புத்தம் புதிய வாழ்வுக்குத் தொடக்கமாயிருக்கிறது (கொலோ. 3: 9,10). புது வாழ்வு பெற்றவர்களாய் வாழும்படி திருமுழுக்கின் வழியாய் அவரோடு அடக்கம் செய்யப்பட்டோம் (உரோ. 6:4). இந்தக் கருத்தை வலியுறுத்துவதற்காகவே உடல் முழுவதையும் தண்ணீரில் முழுக்கித் திருமுழுக்குக் கொடுத்தனர். திருச்சபைக்கு கொடுக்கப்பட்ட பெயர்களில் முதன்மையானது கிறிஸ்துவின் உடல் என்பதாகும். திருமுழுக்கு மூலம் ஒருவர் திருச்சபையில் உறுப்பினர் ஆகும்போது அவர் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் உடலோடு ஒன்றிக்கிறார் என்பது உண்மையான பொருள். கிறிஸ்துவோடு உயிர் பெற்று எழுவது என்பது உலகத்தில் காணப்படும் பாகுபாடுகளைக் களைதலையே வலியுறுத்திச் சொல்லுகின்றது. ஆனால் இந்தத் திருமுழுக்குக் கோட்பாடாய் மாறிபோகின்ற போது திருச்சபைகளுக்குள்ளே திருமுழுக்கை மையப்படுத்தி பிரிவினைகள் வளருகின்றன. இந்நிகழ்வுகள் கிறிஸ்துவோடு உயிர் பெற்று எழும் கிறிஸ்தவ நம்பிக்கைக்கு ஒரு இழப்பினைக் கொண்டு வருகிறது. ஆக கிறிஸ்துவோடு உயிர் பெற்று எழுதல் என்பது பழைய வாழ்வுக்குச் சாவு மணி கொடுத்தலும், கிறிஸ்துவோடு புதிய வாழ்வு வாழ்வது என்பதையும் நமக்கு சுட்டிக் காட்டுகிறது.

திருமுழுக்கு என்பது மனிதனின் உள்ளான வாழ்வு தூய்மையாகுதலை வெளிப்படுத்துகிற நிகழ்வாகத் தான் இத்திருமறைப் பகுதிகள் படிப்பிக்கின்றன. மனித வாழ்வில் உள்ளான மாற்றத்தின் மூலம் மேலானவைகளைத் தேடுவதும், உன்னதரோடு உயிர்த்தெழுந்து உன்னதரின் உண்மையான அடிச்சுவடுகளை வாழ்வில் பின்பற்றுவதிலும் முழுமையடைகிறது. நாமும் இத்தகைய முழுமையினைப் பெற்று உன்னதரின் உயர்ந்த திட்டத்தை மண்ணுலகில் வெளிப்படுத்துவோமாக. ஆமென்.

அருள்திருமதி. **பெபின் தங்கராஜ்**
ஆயர், நெடுவிளை

ᴜ	ஞா. 17	கீர். 367

இறைவேண்டல்

அனைத்தாற்றலுள்ள கடவுளே, கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலில் நாங்கள் பங்குபெற்று, உமது மீட்பின் வல்லமையால் புதிய படைப்பாக மாறிய, ஞானஸ்நானம் என்னும் சாக்ரமெந்திற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். விண்ணுலகின் பிள்ளைகளாக வாழவும் பூமியை உமது அரசுக்குரியதாக மாற்றவும் எங்களுக்கு அருளையும் ஆற்றலையும் தர உம்மிடம் வேண்டுகிறோம். உம்மோடும் தூய ஆவியரோடும் இப்போதும் எப்போதும் வாழ்ந்து ஆட்சி செய்யும் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாயிலாக வேண்டுகிறோம், ஆமென்.

சிதைந்த சமூகங்களில் கடவுளின் சாயலை மீட்டெடுத்தல்

Restoring the image of God in distorted Communities

மீக். 6: 1-8 கலா. 3: 18-29

தி.பா. 113: 1-9 லூக். 4: 16-21

“ . . . நேர்மையைக் கடைப்பிடித்தலையும், இரக்கம் கொள்வதில் நாட்டத்தையும் உன் கடவுளுக்கு முன்பாக தாழ்ச்சியோடு நடந்து கொள்வதையும் தவிர வேறு எதை ஆண்டவர் உன்னிடம் கேட்கின்றார்” (மீக். 6: 8)

இறைசாயல் (Image of God) என்பது மூன்று முறைகளில் புரிந்து கொள்ளப்படுகின்றது. 1) Substantive view (அடிப்படை கண்ணோட்டம்) இதன்படி பகுத்தறிவு மற்றும் ஒழுக்கம் போன்ற பண்புகள் இறைவனுக்கும் மனுக்குலத்திற்கும் பகிரப்பட்டுள்ளன. 2) Relational view (தொடர்பின் கண்ணோட்டம்) இறைசாயல் என்பது இறைவனிடமும் மனிதர்களிடமும் கொண்டுள்ள உறவுகளில் காணப்படுகிறது. 3) Functional view (செயல்பாட்டு கண்ணோட்டம்) மனிதர்கள் இறைவனின் சார்பாகச் செயல்படுகிறார்கள் இறைவனை பிரதிநித்துவட்படுத்த சேவைச் செய்வதில் பங்களிப்புச் செய்கின்றனர் என்பதாகும்.

இறைசாயல் உருவத்தையோ, ஆற்றலையோ, அறிவுசார்ந்த நிலைகளையோ அல்ல மாறாக ஒழுக்கம் பகுத்தறிவு, உறவுகள், மற்றும் சேவை இவற்றின் அடிப்படையிலேயே காணப்படுகிறது என புரிந்துகொள்ள இயலும். இறைச்சாயலை எதிர்த்து மனிதன் தீமைபுரிவதினால் இறையரசின் நிறைவு தாமதப்படுகின்றது.

மகாத்மா காந்தியை பூட்ஸ் கால்களால் மிதித்த வெள்ளைகாரனை மன்னித்துப் பாசத்துடன் என் இரத்தத்தினால் உன் பூட்ஸ்களில் கறை வந்துவிட்டதே என மீண்டும் மீண்டும் கூற, அவ்வெள்ளைக்காரன் மகாத்மா காந்தியைப் பார்த்து Are you a Christian? என்றானாம். அதற்கு அவர் I am not a Christian But I know who is Jesus Christ. என்ற, அவருடையப் பண்புகள் இறைசாயலை மனிதன் கொண்டுள்ளான் எனவும், பிறர் அதை நம் செயல்களால் புரிந்து கொள்ளலாம், என்பதையும் வெளிப்படுத்துகிறது.

மனிதனின் ஆதிக்கப் போக்கினால் ஜாதி, மத, இன, மொழி என பல படிநிலைகளில் மனிதனை மனிதன் பிரித்து சமூகச் சிதைவுகளை

ஏற்படுத்துகிறான். சிதைந்த சமூகங்கள், மனிதர்கள் இன்றும் நம்மோடு இருந்துக்கொண்டேத்தான் இருக்கின்றனர். தங்கள் வாழ்விழந்து, வலிமை இழந்து, உரிமை இழந்து, உடமையிழந்து, தவித்திடும் மனிதர்கள் இறைசாயலை மீண்டும் பெற்றிட மீகா தீர்க்கரின் சில அறிவுரைகளைச் சிந்திப்போம்.

1. நீதியை நிலைநாட்டுவதன் மூலம் இறசைாயலை மீட்டெடுத்தல் (Restoring the image of God through Establising Justice)

மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ் செய்து . . . . (மீக். 6: 8a)

இஸ்ரவேல் ஜனங்கள் இறைசாயலை இழந்தமையால் பிறரை ஒடுக்கித் தங்களுக்குள்ளும் உடைவுகளை ஏற்படுத்தி நற்சான்று இழந்து காணப்படும் வேளையில் மீகா தீர்க்கரின் மூலமாக எனக்கு ஒரு வழக்கு உண்டு நீயும் பேசலாம் என கூறி ஏன் நீ உன் இறைசாயலைச் சிதைத்து போட்டாய் நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருகிறாரே என கூறி முதலாவது, நியாயஞ்செய்து என்ற வார்த்தையை அழுத்தமாக கூறுகிறார். மீகா தீர்க்கரின் காலம் தற்பொழுது காணப்படும் சூழலைப் போல நீதியை நிலைநாட்டும் நீதிமன்றங்களே நீதியைக் குலைத்துவிட்டன. கலாத்தியர் 3: 21-இல் நியாயப்பிரமாணமும் நீதியை நிலைநாட்டத் தவறிவிட்டதே, நியாயப் பிரமாணத்திற்கும் மேலாக விசுவாசமே கிறிஸ்துவுக்குள் நம்மை இறை மக்களாக ஒன்றிணைக்கிறதே என பவுல் கூறுகின்றார். கலாத்தியர் 3: 28-இல் யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும், சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும், பெண்ணென்றுமில்லை, நீங்களெல்லோரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள் என்கிறார்.

இயேசு கிறிஸ்துவும் லூக்கா 4: 18-இல் கர்த்தருடைய ஆவியானவர் என் மேலிருக்கிறார் தரித்திரருக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார் என்ற “Nazareth manifesto” நாசரேத் அறிக்கையை வெளிப்படுத்துகின்றார்.

ஏற்றத்தாழ்வுகள் எப்பொழுதுமே ஒரு சாராரைச் சிதைத்து ஒரு சாராரை வாழ வைக்கின்றது. இறையரசின் அடிப்படையே சமத்துவமாகும். ஆனால் இன்று தனிப்பட்ட வாழ்விலும் சமூகத்திலும் சபையிலும் காணப்படும் நீதியற்ற தன்மையைக் களைந்து நீதியை நிலைநாட்ட முயலுவோம்; இறைசாயலை மீட்டெடுப்போம்.

2. கருணையை வெளிப்படுத்துவதின் மூலம் இறைசாயலை மீட்டெடுத்தல் (Restoring the image of God through Expressing Mercy)

மீக்கா. 6: 8b “இரக்கத்தை சினேகித்து . . .” இஸ்ரவேல் மக்கள் கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்று சட்டங்களைக் கடைபிடித்தாலும்

அவை புரட்டப்பட்டன. அத்துடன் அவை எளியோரை மீண்டும் காயப்படுத்தவே செய்தன. மனிதன் இரக்கம் அற்றவனாகத் தன்னுடன் வாழும் மனிதன் பால் கரிசனை இழந்து வாழ ஆரப்பித்துவிட்டான். பிறர்படும் வேதனையைக் கண்டு கரிசனைக் கொள்ளாமல் அவன் செயலின் பலன் என விட்டுவிட்டான். மத்தேயு 5: 7-இல் இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள் என இயேசுபிரான் கூறி அறிவித்தத்தன் நோக்கமே மனிதர்களிடம், படைப்புகளிடம் நாம் காட்டும் இரக்கமே, மனித வாழ்வின் சிதைவைச் சரி செய்து இறைசாயலை அடையச்செய்யும் என்பதாகும். கலாத்தியர் 3: 25-இல் பவுல் இப்பொழுது நாம் நம்பிக்கை கொண்டுள்ளதால் இனி நாம் வழித்துணைவரின் பொறுப்பில் இல்லை என்கிறார். கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டவர்கள் அவர் கற்பித்த, காட்டித்தந்த, அன்பு, இரக்கம், மன்னிப்பு போன்ற நற்குணங்களை நாம் வெளிப்படுத்தவேண்டும்.

Elan Musk அவர்கள் நடமாடும் மனிதர்களைப் போன்றே செயல்படும் Robort-களை உருவாக்கி அதை அறிமுகம் செய்துள்ளார். அவை வீட்டு வேலைகள் துவங்கி அனைத்தையும் பார்த்துக்கொள்ளும் என அறிவித்தார். ஆனால் பலர் அது மனித தன்மைக்கு விரோதமானது, இரக்கம், பாசம், கருணை இல்லாத உலோகத் துண்டுகளால் செய்யப்பட்டவை, மனிதனுக்கும் மனிதனுக்கும் காணப்படும் உறவுகளையே கேள்விக்குள்ளாக்கும் என விமர்சித்து வருகின்றனர். இயேசு கிறிஸ்துவும் தனது நாசரேத் பிரகடனத்தில் (லூக்கா 4: 18) இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும்; சிறைபட்டவர்களுக்கு விடுதலையையும் குருடருக்குப் பார்வையை பிரசித்தப்படுத்தவும், நொருங்குண்டவர்களை விடுதலையாக்கவும் என இரக்கத்தின் பாதையில் மனிதன் இறைசாயலை பெற்றிட முடியும் என அறிக்கை செய்கின்றார்.

3. மனத்தாழ்மையை செயல்படுத்துவதின் மூலம் இறைசாயலை மீட்டெடுத்தல் (Restoring the image of God through Executing humility)

மீகா 6: 8c. உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையையாய் நடப்பதையல்லாமல், வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்.

மேட்டிமை மனித உணர்வுகளை மழுங்கசெய்து ஆணவபோக்கை மேலோங்கச் செய்யும். இஸ்ரவேல் மக்கள் தங்களை மட்டுமே இறைவன் தம் பிள்ளைகளாகத் தெரிந்துகொண்டார் எனவும், நாங்கள் ஆபிரகாமின் வம்சத்தினர் எனவும், சிறந்த அரசர்களான தாவீது, சாலமோன் வழி தோன்றல்கள் எனவும் மேட்டிமை கொண்டு பிறரை மதியாமல் தற்பெருமையினால் இறைசாயலற்று, தீமை செய்து பிற மனிதரிடம் பகைவர்களாயினர். எனவே மீகா தீர்க்கர் மக்களிடம், மனத்தாழ்மையுடன் நடக்கவே இறைவர் கேட்கிறார் என குறிப்பிடுகிறார். இன்றும் இஸ்ரவேல்

தேசத்தின் மேல் அல்லது இஸ்ரவேல் தேசம் பிற தேசத்தின் மேல் தொடுக்கும் போர் கலாச்சாரம் மனத்தாழ்மை அற்ற மேட்டிமையின் ஆதிக்கமே.

திருத்தூதுவர் பவுல் கலாத்தியர் 3: 27-இல் ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ. அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டார்களே என்கிறார். நாம் கிறிஸ்துவைத் தரித்துக் கொள்வதன் அடையாளமே மனத்தாழ்மையை வெளிப்படுத்துவதாகும். இயேசு கிறிஸ்துவும் தனது நாசரேத்து அறிக்கையின்படியே அனைத்தையும் மனத்தாழ்மையுடன் நிறைவேற்றினார். ஆபிரகாம் லிங்கன் ஒரு நாள் தனது வேலைக்காரர் தொப்பியை உயர்த்தி மரியாதை செலுத்தினபோது இவரும் திரும்ப அவருக்குத் தனது தொப்பியை உயர்த்தி மரியாதை செய்தார். அப்போது அவருடன் இருந்த அதிகாரி ஆபிரகாம் லிங்கனைப் பார்த்து அதிபர் இப்படி மரியாதை செய்ய தேவையில்லை எனக் கூறினார். அதற்கு ஆபிரகாம் லிங்கன் என் அம்மா உன்னைவிட பிறர் தாழ்மையை வெளிப்படுத்தினால் நீ அனுமதியாதே என்று என்னைக் கற்பித்துள்ளார் என்றாராம். இச்செய்தியில் இறைசாயலை மீட்டெடுக்க மூன்று முக்கு கூறுகளாக மீகா தீர்க்கர் உணர்த்திய,

Establishing Justice - நீதியை நிலைநாட்டுதல்

Expressing Mercy - கருணையை வெளிப்படுத்தல்

Executing Humility - மனத்தாழ்மையை செயல்படுத்தல்

இவற்றின்மூலம் சிதைந்த சமூகங்களை, மனிதர்களை இறைசாயலுக்கு நேராக மீட்டெடுப்போம். நாமும் நம் வாழ்வில் இறைசாயலை வெளிப்படுத்துவோம்/ ஆமென்.

அருள்திரு. முனைவர். J. டேனியல் ஜோசையா

ஆயர், ஸ்காட்நகர்

ப	ஞா. 11	கீர். 124

இறைவேண்டல்

எல்லா மனிதர்களும் தோன்றும் பிறப்பிடமாகிய அனைத்தாற்றலுள்ள கடவுளே, அநீதியும் வேதனையும் நிறைந்த சமூகங்களில் இறைச் சாயலை மீட்டெடுக்க உமது அருள் வேண்டி நாங்கள் மன்றாடுகிறோம். ஒவ்வொருவரையும் தனி மதிப்புமிக்கவர்களாகப் பார்க்கவும், குறிப்பாக தாழ்த்தப்பட்டோர் மற்றும் ஒதுக்கப்பட்டவர்களையும் மதிப்பு மிக்கவர்களாக காணும் பகுத்தறிவை எங்களுக்கு தாரும். உமது மகிமையையும் அன்பையும், இணைவதற்கும் குணப்படுத்துவதற்கும், பாடுபடுவதற்கும், வெளிப்படுத்தும் வகையில் எங்களுக்கு வலிமை தர உம்மிடம் வேண்டுகிறோம். உம்மோடும் தூய ஆவியரோடும் இப்போதும் எப்போதும் வாழ்ந்து ஆட்சி செய்யும் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாயிலாக வேண்டுகிறோம், ஆமென்.

31.08.2025

திருவிருந்தென்னும் திருவருட்சாதனம்

Sacrament of Holy Communion

வி.ப. 12: 1-14 — 1 கொரி. 10: 14-22

தி.பா. 42 — லூக். 22: 7-20

“ . . . இதை என் நினைவாகச் செய்யுங்கள்” (லூக். 22: 19 (a)).

திருவிருந்தென்னும் திருவருட்சாதனம் கிறிஸ்தவ வழிபாட்டின் மையம், விசுவாசத்தின் ஆணி வேர், திருச்சபை கூட்டுறவுற்கு அஸ்திபாரம். இத்தூய திருவிருந்தில் நாம் பங்கு கொள்ளும்போது இறையாற்றலைப் பெறுகிறோம். ஆன்மிக உணவால் உயிர்ப்பிக்கப்படுகிறோம். பெலிக்கான் பறவை தன் குஞ்சுகளுக்குத் தன் இரத்தத்தையே குடிக்க அளித்து வாழ்வு தருவது போன்று, இறைமகன் இயேசு தனது உடலையும், இரத்தத்தையும் நமக்கு உணவாக தந்து வாழ்விக்கிறார். விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த உணவு நானே (யோவா 6: 41), ...மானிட மகனுடைய சதையை உண்டு, அவருடைய இரத்தத்தை குடித்தாலொழிய நீங்கள் வாழ்வு அடைய மாட்டீர்கள்... (யோவா. 6: 53) என்ற இறைவார்த்தைகள் திருவிருந்து ஆன்மிக உணவு என்பதற்கு சான்றாக நிற்கிறது. அவரது நினைவாக நாம் பகிரும் திருவிருந்தில் இணையும் போது அவரில் வெளிப்படும் அன்பு, தியாகம், பரிவு, பாசம், நீதி, நேர்மை, அமைதி, சமத்துவம், விசுவாசம் போன்ற மதிப்பீடுகள் நம் உள்ளங்களை உயிர்ப்பிக்கச் செய்கிறது. பெத்லகேம் என்ற “அப்பத்தின் வீட்டில்” இறைமகன் இயேசு அனைவருக்கும் உணவானார். கல்வாரியில் வாழ்வு தரும் உணவாகத் தம்மையே வெளிப்படுத்தினார். இதையே நாம் திருவிருந்தில் நினைவு கூருகிறோம்.

தென்னிந்தியத் திருச்சபையின் திருவிருந்து இறையியல், நினைவு கூருதல் என்ற அடித்தளத்தில் விசுவாச கூட்டுறவு ஆகிய திருச்சபையைக் கட்டியெழுப்பி உள்ளது. நினைவு கூருதல் என்பது மறந்தவைகளை, நினைவுகளை விட்டு மறந்தவற்றை மறுபடியும் நினைவுக்கு கொண்டு வருவது என்பதல்ல. மாறாக, அந்த நினைவுகளோடு சங்கமித்தல் என்பதே அதன் பொருள். இஸ்ரயேலர் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைப் பெற்றதை நினைவு கூருதல், இறைமகன் இயேசு ஆசரித்த புதிய பஸ்காவின் புதிய பொருள்படி அவர் அளித்த விடுதலையை உரிமையாக்கிக்கொள்ள நினைவு கூருதல் உந்துதல் தருகிறது. எகிப்திய விடுதலை அனுபவத்தையும், அடிமைத்தன வாழ்வையும் பஸ்கா நினைப்பூட்டுகின்றது. இஸ்ரயேலர் எகிப்தில் அனுபவித்த சுமை, வலி, ரணம், வேதனை, கண்ணீர், கவலை அனுபவமாக்க நினைவுப்படுத்துகின்றது. விடுதலையில் பெற்ற சுகம், ஆறுதல், சுதந்திரம்,

சமத்துவம், சந்தோஷம் ஆகியவற்றை உணர்த்தியது. மேலும் தம் உடலையும், தம் இரத்தத்தையும் நமக்காகத் தந்த இயேசுவின் வாழ்வு, நோக்கம், இறப்பு, உயிர்ப்பு இவற்றில் சங்கமிக்க வேண்டும். இத்தகைய ஆழமான தகவுகளைக் கொண்ட திருவிருந்தென்னும் திருவருட்சாதனம் கற்றுத் தரும் உண்மைகளைத் தியானிப்போம்.

1. விடுதலையின் வாழ்வை நினைவுபடுத்தும் விருந்து : (வி.ப. 12: 4)

பஸ்கா கொண்டாட்டத்தின் மையம் விடுதலை, மற்றும் நினைவுகூருதல். இக்கொண்டாட்டத்தில் எகிப்தில் இஸ்ரயேலரின் அடிமைத்தனத்தையும், பெற்றுக்கொண்ட விடுதலையும் பறைசாற்றுகின்றது. ஒவ்வொரு யூதருடைய எண்ணத்திலும் நினைவுபடுத்தப்பட்ட நினைவு கூறல் அன்று. மாறாக மீண்டும் நிகழ்ந்த விடுதலை நிகழ்வாகக் கருதப்பட்டது. முதல் பஸ்காவில் எகிப்து நாட்டில் பலியாக்கப்பட்ட ஆடுகளின் இரத்தத்தால் இஸ்ரயேலரின் தலைப்பிறப்பு குழந்தைகள் காப்பாற்றப்பட்டது போன்று, ஒவ்வொரு ஆண்டும் இதை ஆசாரிக்கும்போது மீட்பையும், விடுதலையையும் பெற்றதாக உணர்ந்தனர். இந்த பஸ்கா அடிமைத்தனத்தின் உச்சத்தில் மாற்றம்பெறுதல் கசப்பின் வாழ்வையும் (வி.ப. 1: 14), விடுதலை உணர்வை வெளிப்படும் பழுதற்ற ஆட்டுகுட்டியின் இறைச்சியோடும், புளிப்பில்லாத அப்பத்தோடும், கசப்பான கீரையோடும் (வி.ப. 12: 5-11) ஆசரித்தனர். இறைமகன் இயேசுவின் இறுதி பஸ்காவிலும் வழக்கமான பஸ்கா வழிபாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. ஆனால் இரு சிறப்பு நிகழ்வுகள் இடம் பெற்றன. இயேசு அப்பத்தை உண்ணும்போது, “இது உங்களுக்காகக் கொடுக்கப்படும் என் உடல் “(லூக். 22: 19) என்று கூறி உணவாகிறார். இயேசு இரசத்தைப் பருக அளித்தபோது, இது என் உடன்படிக்கையின் இரத்தம்; பலருக்காகச் “சிந்தப்படும் இரத்தம்” (மாற்கு 14: 24) என்றார். பழைய ஏற்பாட்டு பஸ்கா நிழல், புதிய ஏற்பாட்டு பஸ்கா நிஜம். நிழல், நிஜமானது. புதிய பஸ்காவில் இயேசு தம்மையே மையப்படுத்துகிறார்.

இஸ்ரயேல் மக்கள் கொண்டாடிய முதல் பஸ்காவில் ஆட்டுக்குட்டியின் இரத்தம் விடுதலையைப் பறைசாற்றியது. புதிய பஸ்காவில் இயேசு அளிக்கும் விடுதலை வாழ்வைப் பெற்று அவர் காட்டிய தியாகம், அன்பு, பரிவு, இரக்கம், நீதி, நேர்மை, சமத்துவம் போன்ற மதிப்பீடுகளை கடைப்பிடித்து விடுதலையை வாழ்வில் சுவைக்க வழி காட்டுகிறது. இத்தகைய விடுதலை உணர்வை நினைவில் பதிந்து முன் செல்ல ஊக்கம் தரும் விருந்தே திருவிருந்து.

2. விண்ணவரோடும் மண்ணவரோடும் உறவில் வளர நினைவூட்டும் விருந்து: (1கொரி. 10: 17)

இறை நம்பிக்கையில் வளர்பவர் சகமனிதரோடு உள்ள உறவில் வளர்வார்கள் என்பதைத் திருவிருந்தென்னும் தூய கூட்டுறவில் பங்கு கொள்ளும்போது உணர்கிறோம். ஆகவே, இந்த விருந்து நம்மில் ஒருமைப்பாட்டை தருகிறது, “எல்லாரும் ஒன்றாயிருப்பார்களாக” (யோவா. 17: 21) என்ற இறைவார்த்தை உயிர்ப்பிக்கப்படுகிறது. விண்ணவரோடு உள்ள உறவு புதுப்பிக்கப்பட்டு, சக மனிதரோடு உறவு சரி செய்யப்படுகிறது. நான் கிறிஸ்துவில், கிறிஸ்து என்னில் என்கிற புதுவாழ்வு பிறக்கிறது (யோவா. 6: 56).

இத்தகைய ஆழமான தெய்வீக உறவை ஏற்படுத்தும் திருவிருந்து அத்தோடு நில்லாமல், நமக்குள்ளும் உறவை மேம்படுத்தி (யோவா. 15: 10) விண்ணவரோடும், மண்ணவரோடும் உறவை உருவாக்குகின்றது.

இந்தச் சகோதரத்துவ உறவை திருச்சபை திருவிருந்தில் கொண்டாடுகிறது. அந்த அப்பத்தில் நாமெல்லாரும் இணைகிறோம், இறை உறவில் மகிழுகிறோம். இறைமகன் இயேசு ஆசரித்த பஸ்காவில் காட்டிக் கொடுக்கப் போகும் யூதாஸ், மறுதலிக்க போகும் பேதுரு, ஐயம் நிறைந்த தோமா, பின்மாற்றம் அடைந்து விடப் போகும் சீடர்கள் என அனைவரையும் புறந்தள்ளாமல் ஏற்றுக் கொள்கிறார். அனைவரையும் இறை உறவிலும், சக மனிதர்கள் உறவிலும் இணைய வாழத் தூண்டுகிறார். தொடக்க காலத் திருச்சபைகள் திருவிருந்தை உறவின் கொண்டாட்டமாகக் கொண்டாடினர், வீடுகள் தோறும் ஒன்று கூடி இறை உறவிலும், சகோதர உறவிலும் வளர்ந்தனர் (தி.ப. 2: 46; உரோ. 16:5, 23; 1 கொரி. 16: 19; கொலோ. 4: 15). இத்தகைய இல்லத் திருச்சபைகள் கொண்டாடிய திருவிருந்து, ஆன்மிக உணவாக மட்டுமன்றி, உறவின் திரு விருந்தாகவும், துன்பச் சூழலை எதிர்கொள்ள ஆற்றல் தரும் மருந்தாகவும் இருந்தது. இத்தகைய உறவின் அடித்தளமாக நிற்கும் திருவிருந்து நம்மைக் கிறிஸ்துவோடு இணைத்து ஒரே உடலாக நம்மை மாற்றுகிறது. “நாம் பலராய் இருந்தாலும் கிறிஸ்துவோடு இணைந்திருப்பதால் ஒரே உடலாக இருக்கிறோம்; ஒருவருக்கு ஒருவர் உடனுறப்புகளாய் இருக்கிறோம்” (உரோ.12: 5). உறவுகள் இன்றி மனிதர்கள் இல்லை. ஒவ்வொரு மனிதனின் வளர்ச்சிக்கும், ஆளுமை வளர்ச்சிக்கும், மகிழ்வுக்கும் உறவுகளே மையம். மனித வாழ்வில் வெற்றி-தோல்வி, சுகம்-சோகம், உயர்வு-தாழ்வு, நன்மை-தீமை என்பவற்றிற்கு காரணமாக அமைவது உறவுகளே.

இன்றைய நம் சமூகங்களில் உறவுகள், சீராகவும் சிறப்பாகவும் செழித்து வளருகின்றது என்று கூற இயலாது. இணையங்கள் வாயிலாக தொலை தூர உறவுகள் அண்மையில் இணைகிறது. ஆனால் அண்மையில் வாழும் உறவுகளின் முகங்கள் இணையாமல் போய்விடுகின்றன. முகநூல் பக்கங்கள் முகம் தெரியாத மனிதர்களின் முகங்களை இணைக்கிறது, முகம் தெரிந்த மனிதர்களிடமிருந்து நம்மைப் பிரிக்கிறது. குடும்ப உறவு, சிதைவுகள், சுயநலம், ஆதிக்கப் போக்கு, நுகர்வு கலாச்சாரம், பண மோகம், விரைந்து இயங்கும் இயந்திர வாழ்க்கை முறை, Youtube, facebook, twitter போன்ற சமூக ஊடங்களின் மயக்கம், கூட்டு வாழ்க்கை முறை தொலைதல், மரபு விழுமியங்களின் வீழ்ச்சி இன்று குடும்பம், சமூக உறவுகளைக் குலைத்துபோடுகின்றன. போலி உறவுகளும், பிளாஸ்டிக் புன்சிரிப்புகளும் மலிந்து விட்ட சமூகத்தில் உண்மையான உறவுகளைச் சமூகம் தேடுகிறது.

ஒரே பந்தி, ஒரே அப்பம், ஒரே கிண்ணம் . . . ஆனால் ஒரே குடும்பம் என்ற உணர்வு நம்மில் இல்லை. திருவிருந்தில் நம் உடன் பங்கு கொள்ளும் சகோதர, சகோதரியை அந்நியராகவே பார்க்கிறோம். ஒருவர் மீது ஒருவர் அக்கறையின்றியே பார்க்கிறோம். திருவிருந்து கொண்டாட்டங்களால் மனித உறவுகளின் திண்டாட்டங்களே பெருகிறது. திருவிருந்தென்னும் கூட்டுறவில் இணையும் நாம் இறைவனுடனும் பிறருடனும் உறவில் வளர வேண்டுமென்ற நினைவூட்டுதலைத் தந்து கொண்டேயிருக்கிறது.

3. விண்ணுலக வாழ்வை நினைவில் பதிக்கும் விருந்து: (லூக். 22: 18).

இறைமகன் இயேசு கிறிஸ்துவின் வாழ்வு, மரணம், உயிர்தெழுதல் எதிர்கால நோக்கத்தில் தெளிவுடன் பயணிக்கவும், நிகழ் காலத்தில் வாழ்ந்து காட்டவும் உந்துதல் தருகிறது. திருவிருந்தில் நாம் பங்குகொள்ளும்போது இதை நாம் அனுபவிக்கின்றோம். திருவிருந்து இறையாட்சிக்கு முன்னோடி, இறையாட்சியின் போதனை அவரது திருப்பணியின் மையம். "காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கிவிட்டது மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்" (மாற். 1: 15) என்ற அறைகூவலுடன் இறையாட்சியின் பணியைத் துவங்கி, விடுதலை வாழ்வைப் பறைசாற்றி (லூக். 4: 18), சீடர்களை உருவாக்கி, திருச்சபை இறையாட்சிப் பணியை நிறைவேற்றப் பணித்தார். இத்தகைய இறையாட்சியின் தகவுகள் திருச்சபையில் திருவிருந்து ஆசரிக்கும்போது நினைவூட்டப்படுகிறது.

பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் சரி, திராட்சை பழ இரசமும், ஏனைய விருந்து வகைகளும் இறையாட்சிக்கு உருவகங்கள் (ஏசா. 25: 6, லூக். 14: 15). இறையாட்சி மண்ணில் மலர, விண்ணுலக வாழ்வை எதிர்நோக்கி திருவிருந்து ஊக்கம் தருகிறது. திருவிருந்தில் நாம் பங்கு கொள்ளும் போது இறையாட்சி வருவதற்கான ஒரு தணியாத ஆர்வத்தையும், துடிப்பையும் தருகிறது. இறைமகன் இயேசு கிறிஸ்துவால் துவங்கிய இறையாட்சி, ஆட்டுக்குட்டியின் திருமண விருந்தில் நிறைவு பெற்றுப் பேரின்ப மகிழ்வை தரும் (தி.வெ. 19:9; 2: 17; 2: 7). இயேசு ஆசரித்த பஸ்கா இறையரசின் முன் சுவை, இந்த பஸ்காவில் பங்கேற்கும் நாம் தகுதியுடையோராய் வாழுவோம். நாம் இறையரசின் பங்காளிகள், இறையாட்சியின் தூதுவர்கள் என்ற உணர்வோடு, அபாத்திரராய்ப் பங்கேற்காமல் (1 கொரி. 12: 27-30), இறையரசின் முன் சுவையாக வாழ்ந்து, விண்ணுலக வாழ்வை நினைவில் பதித்து வாழுவோம். திருவிருந்து என்ற திருவருட் சாதனத்தில் பங்குகொள்ளும் நாம் விடுதலையின் வாழ்வை ருசித்து, விண்ணவரோடும் மண்ணவரோடும் நல் உறவுடன் வாழ்ந்து, விண்ணுலக வாழ்வை நோக்கி இறையரசின் முன் சுவைகளை வாழ்வில் வெளிப்படுத்திப் பயணிப்போம். ஆமென்.

அருள்திரு. C. கில்டன் தயானந்த்

ஆயர், கிறிஸ்துபுரம்

பு	ஞா. 376	கீர்.438

இறைவேண்டல்

அன்பு நிறைந்த கடவுளே, முழு உலகின் பாவங்களுக்காக, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்மையே காணிக்கையாகவும், பலியாகவும் ஒப்புக்கொடுத்த, கல்வாரி சிலுவையின் மீது எங்கள் கவனத்தை ஈர்க்கும் புனித நற்கருணையை நிறுவியதற்காக, நாங்கள் உமக்கு நன்றி கூறுகிறோம். இந்தப் புனித சாக்கிரமந்தில் நாங்கள் பங்கேற்கும் போது, நாங்கள் உமது குழந்தைகளாக மாறுவதற்கும், அதிகாரம் பெறுவதற்கும், வளப்படுத்தப்படுவதற்கும் எங்களுக்கு அருள் புரிவீராக. உம்மோடும் தூய ஆவியரோடும் இப்போதும் எப்போதும் வாழ்ந்து ஆட்சி செய்யும் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாயிலாக வேண்டுகிறோம், ஆமென்.

அமைதியருளும் ஆண்டவர்

யோவா. 17: 16-26

"எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக!. . . " (யோவா. 17: 21).

உலகின் மிக சக்தி வாய்ந்த வெடிபொருளான டைனமைட்டைக் கண்டு பிடித்தவர் ஆல்பிரட் நோபல். டைனமைட் சுரங்கம் தோண்டுதல், மலைகளை, கற்களை உடைத்தல் உள்ளிட்ட ஆக்கப்பூர்வமான பணிகளுக்குப் பயன்பட்டாலும், அது ஒரு போர் ஆயுதமாக, அழிவுப் பொருளாகவே பார்க்கப்பட்டது. நோபிலின் சகோதரர் மரணமடைந்ததை, நோபல் மரித்ததாக கருதி பத்திரிகைச் செய்தி ஒன்று அவர் டைனமைட் கண்டு பிடித்ததற்காக "மரண வியாபாரி மரணமடைந்தார்" என காட்டமாக செய்தி வெளியிட்டது. அதனைப் படித்த நோபல், தன்னை உலகம் அவ்வாறு நினைவுகூருவதை விரும்பாததால் தன்னுடைய பெரும் செல்வத்தை ஈந்தளித்து நோபல் பரிசை உருவாக்கினார். கலை, அறிவியல், என உலக அளவில் மனித குல மேம்பாட்டிற்கு உதவி செய்யும் சிறந்தவர்களுக்கு அந்தப் பரிசு வழங்கப்படுகிறது. அந்த வரிசையில் உலக அமைதி ஏற்படுத்துபவரையும் கண்டறிந்து அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்படுகிறது. அழிவுக்கு வித்திட்டவர் என கருதப்பட்டவர், அமைதி ஏற்படுத்த மேற்கொண்ட ஒரு உயரிய முயற்சி. மனிதனின் முயற்சி இப்படி என்றால் இறைவன் இதைவிட சிறப்பாய் அமைதி ஏற்படுத்திகிறவராய் இருக்கிறார்.

"அமைதியின் அரசர்" என்ற திருப்பெயரோடு இந்த உலகத்தில் பிறந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்து தன்னுடைய விண்ணேற்றத்திற்கு பிறகு தன்னுடைய சீடர்கள் தான் அவர்களோடு இல்லாத நிலையை கண்டு அவர்கள் தளர்ந்திடக்கூடாது என்பதற்காக, விண்ணக தந்தையை நோக்கி அவருடைய மாட்சியை பகிர்ந்தளிக்கும் படி ஏறெடுக்கும்; மன்றாட்டு அமைதி ஏற்படுத்தும் முயற்சியாய் அமைகிறது.

இயேசு கிறிஸ்து தன்னுடைய சீடர்களை நன்கு அறிந்து வைத்திருந்தார். ஒரு முறை இயேசு கிறிஸ்து, சீடர்களோடு கப்பல் பயணம் மேற்கொண்டபோது காற்று, புயல், மழை என்று இயற்கை சீறி, அவர்களுக்கு சவால் நிறைந்த சூழலை ஏற்படுத்தியது. சீடர்கள், இயேசுவின் ஆற்றலை மறந்து, அவரை தொந்தரவு செய்யவேண்டாம் எனக் கருதி வாழ்வின் விளிம்பு நிலைவரை சென்றார்கள். இயேசு எழும்பி காற்றே இரையாதே, அமைதலாயிரு என கட்டளையிட்டு, இயற்கையை அமைதிப்படுத்தி அவர்களது வாழ்வைக் காப்பாற்றினார்.

தன்னுடைய எதிர்காலத்தை அறியும் எந்த ஒரு மனிதனும் அதற்கென்று தன்னை ஆயத்தப்படுத்துவதுமல்லாமல் தன்னைச் சுற்றி இருப்பவர்களுடைய வாழ்விலும் தன்னுடைய பங்களிப்பிற்கு ஈடாக மாற்றுக் காரியங்களை ஏற்படுத்துவது உண்டு. மனிதர்கள் தன்னுடைய மரணத்திற்கு பிற்பாடு தனது குடும்பத்தின் அங்கத்தினர்கள் எப்படி வாழவேண்டும், யார், யார் தன்னுடைய சொத்துகளை எந்த அளவில் பயன்படுத்தி கொள்ளவேண்டும். யார் யாரை கவனிக்க வேண்டும் என்று Will Deed ஏற்படுத்துவது உண்டு. அந்நிலையில் ஆண்டவர் இயேசு கிறிஸ்து தன்னுடைய உலக ஓட்டத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய ஒவ்வொரு காரியத்தையும் கவனமாக முன்னெடுத்துத் தன்னோடு பயணித்த, இன்னும் இந்த உலகத்தில் பயணிக்க வேண்டியிருந்த சீடர்களுக்கு அமைதி தந்து அவர்களை திடப்படுத்தி நடத்த முயல்கிறார்.

இயேசு இருக்கும் போதே, சவால்களைச் சந்திக்கக் கடினப்பட்டவர்கள், இனி அவர் இல்லை என்றால் அதை அவர்கள் எப்படி ஏற்றுக்கொள்ளப் போகிறார்கள் என்கிற கரிசனையோடு இயேசு கிறிஸ்து செயல்படுகிறார். "நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடமாட்டேன்" (யோவா 14.18). "உங்களோடு என்றும் இருக்கும்படி மற்றொரு துணையாளரை உங்களுக்குத் தருமாறு நான் தந்தையிடம் கேட்பேன்" (யோவா 14: 16). போன்ற வாக்கியங்கள் எல்லாம் சீடர்களைத் திடப்படுத்துவதுமல்லாமல் அவர்கள் அமைதியோடு வாழ அது வழி வகை செய்யும் என்கிறார்.

ஒரு புதிய மாதத்தின் துவக்கத்தில் என்னுடைய வாழ்வு எப்படியாயிருக்கப்போகிறது. என்கிற கவலை சீடர்களைப் போல் நமக்குள்ளும் காணப்படும் ஆனாலும் ஆண்டவர் இயேசு கிறிஸ்து நமக்கு அமைதி வழங்கி, ஆசி வழங்கி ஆற்றல் தந்து நடத்த வல்வவராய் இருக்கிறார்.

1. வார்த்தை அமைதியை ஏற்படுத்தும் (யோவா. 17: 17)

". . . உமது வார்த்தையே உண்மை."

திருவிழா கடையில் தன்னுடன் வந்த தகப்பனை எதிர்பாராமல் பிரிந்த குழந்தை ஒன்று மிகவும் அழுதது. அருகில் நின்றவர்கள் பயப்படாதே ! அழாதே ! என்றெல்லாம் கூறிய வார்த்தைகள் அந்தக் குழந்தையின் அழுகையை நிறுத்தி விடவில்லை. அங்கிருந்து ஒருவர் தன் கைபேசியை எடுத்து உன் அப்பாவின் கைபேசி எண்ணை சொல் என வினவித் தகப்பனாரைத் தொடர்பு கொண்டு அந்தக் குழந்தையிடம் கொடுக்க, தன் தகப்பனாரின் குரலையும், நான் சீக்கிரம் வந்து விடுகிறேன் பயப்படாதே, என்ற வார்த்தைகளும் குழந்தைக்கு நம்பிக்கை தந்தன. இப்போது பயம் நீங்கி, பதற்றம் தணிந்து அமைதியுடன் தன் தந்தைக்காய்க் காத்திருந்தது. இந்த உலகத்தின் வார்த்தைகள் நமக்குத் தரும் அமைதியைவிட, உண்மையாகிய கடவுளின் வார்த்தை தரும் அமைதி மிகவும் பெரியது (யோவா. 14: 27).

“உண்மையை அறிந்தவர்களாயும் இருப்பீர்கள். உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்” (யோவா 8: 32). தன் வாழ்வில் இருந்த தீராத நோயினால் அமைதியை இழந்த நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன், தன் எஜமானாகிய நூற்றுக்கதிபதியின் வழியாய், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் உண்மையான வார்த்தையின் வல்லமையினால் நோய் நீங்கி வாழ்வில் அமைதி பெற்றான். இன்றும் வாழ்வில் குழப்பங்களோடு, தீராத பிரச்சனைகளோடு, சரி செய்ய முடியாத காரியங்களோடு காணப்பட்டாலும் ஆண்டவரின் உண்மை வார்த்தைகள் விடுதலை தந்து அமைதி அருளும்.

2. தூய்மை அமைதியை ஏற்படுத்தும் (யோவா. 17: 17, 19)

இறைவனுக்குப் பிரியமாய் நடத்தல் அமைதியை வருவிக்கும். இப்பகுதியில் வரும் பிராதான ஆசாரியனாகிய இயேசு கிறிஸ்துவின் வேண்டுதலில் மையப்படுத்தப்படுகின்ற மற்றொரு முதன்மையான காரியம் “உண்மையினால் அவர்களை உமக்கு அர்ப்பணமாக்கியருளும் . . . அவர்கள் உண்மையினால் உமக்குஉரியவர் ஆகும்படி அவர்களுக்காக என்னையே உமக்கு அர்ப்பணமாக்குகிறேன்.” (யோவா 17: 17, 19)

இங்கே பயன்படுத்தப்பட்டுள்ள “அர்ப்பணம்” என்கிற வார்த்தைக்குத் “தூய்மைப்படுத்தல்” என்னும் அர்த்தத்தை வெளிப்படுத்தும் hagiazo என்கிற பதம் கிரேக்க மொழியில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இயேசு தம் சீடர்களைப் பிதாவோடு இணைப்பு செய்திட அவர்களை பிதாவினுடைய வார்த்தையாகிய, உண்மையாகிய தம்மைக் கொண்டு தூய்மைப்படுத்துகிறார். அதனுடைய தேவையை எபிரேயர் ஆக்கியோன் முக்கியப்படுத்தும்வேளையில் ”தூய்மையின்றி எவரும் ஆண்டவரைக் காணமாட்டார்” (எபி 12: 14) என்கிறார். இறைவனைக் காண, இறைவனோடு சேர்ந்து உறவாடத் தூய்மை மிக அவசியம். “உங்களைத் தூய்மையாக்கிக் கொள்ளுங்கள். நாளை ஆண்டவர் உங்களிடையே வியத்தகு செயல்கள் புரிவார்” (யோசு 3: 5) என யோசுவா வழங்கும் அறிவுரையை ஏற்று நடக்கும் பொழுது, சந்திக்க இருக்கும் புதிய மாதத்தில் இறைவன் வியத்தகு காரியங்களை, நாம் எண்ணுவதற்கும், விரும்புவதற்கும் மேலான நிலையில் நம்முடைய வாழ்வில் செயல்படுத்தி, நம்முடைய பிரச்சனைகளிலிருந்து நமக்கு விடுதலை அருளி நம்மை அமைதியின் வழியில் பயணிக்க உறுதுணையாகச் செயலாற்றுவார்.

3. ஒன்றிப்பு அமைதியை ஏற்படுத்தும் (யோவா. 17: 21)

இழப்புகள் வரும் போது, பிளவுகள் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம். கருத்துகள் வித்தியாசப்படும், நான் என்கிற அகந்தை குடிகொள்ளும், தனக்கானவைகளை மட்டும் சிந்திக்க தூண்டும். சில நேரங்களில் அவை எதிர் எதிர் கருத்தாக மாறி தேவையற்ற வம்புகளுக்கும், வீம்புகளுக்கும், பிரச்சனைகளுக்கும், பிரிவினைகளுக்கும் வழி வகுக்கும் அவைகள்

அமைதியைக் குலைக்கும். அத்தகையை நிலை வந்துவிடக்கூடாது என்பதற்காகத் தான் “எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக! தந்தையே, நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக!” (யோவா. 17.21) என ஆண்டவர் இயேசு கிறிஸ்து பிதாவை நோக்கி விண்ணப்பம் செய்கிறார். இந்த விண்ணப்பத்திற்கான நோக்கம், எல்லாரும் ஒன்றித்திருக்கும் போது அவர்களுக்குள் இருக்கும் வித்தியாசம் களையப்படும், பிரிவினை வருவதற்கான சாத்தியக் கூறுகள் குறையும். தன்னுடைய மரணத்திற்குப் பிற்பாடு தங்கள், தங்கள் காரியங்களை முன் நிறுத்திப் பல்வேறு பணிகளை முன்னெடுத்த சீடர்களை உயிர்தெழுந்த ஆண்டவர் ஒன்றிணைத்து, அவர்களுக்குத் தன்னுடைய உடனிருப்பை வெளிப்படுத்தி, அவர்களுக்கு அமைதி அருளி மீண்டும் இறைவனுடைய பணியை முன்னெடுக்க உற்சாகப்படுத்துகிறார்.

புதிய மாதம் துவங்கும் போதும், இறைவனோடும், அவர் தம் மக்களோடும் இசைந்த ஒரு பயணமாக அது அமையும் போது, இறைவனின் திருவுளச் சித்தத்தை நாம் நிறைவேற்றுகிறவர்களாய்க் காணப்படுவோம். ஆண்டவரோடு ஒன்றித்த பயணம் நம் வாழ்வில் நமக்கு அமைதியைத் தரும். அந்த அமைதி நம்மை வெற்றிக்கு நேராய் வழி நடத்தும்.

அமைதிக்கான முயற்சியை இவ்வுலகத்தின் மனிதர்கள் மேற்கொள்ளலாம். ஆனால் மெய்யான விடுதலையை, மகிழ்ச்சியை, அமைதியை கிறிஸ்து இயேசு மாத்திரமே தரமுடியும். நமக்காகப் பரிந்து பேசும் ஆண்டவர் இயேசு கிறிஸ்து நம்மைத் தீமையினின்று காக்கும்படிப் பிதாவினிடத்தில் வேண்டிக் கொள்கிறார். எனவே நாம் காக்கப்படுவோம் என்கிற நம்பிக்கையோடு புதிய மாதத்தில் முன்னேறிச் செல்வோம். ஆண்டவர் அமைதி அருளி நமக்குஆசி வழங்குவாராக, ஆமென்.

திரு. J. கிளாட்சன் ரூப ராஜ்,

உதவிப் போதகர், கண்ணனூர்

ப	ஞா. 39	கீர். 472

திருச்சபையின் திருப்பணியாகக் கல்விப்பணி

Education as a Ministry of the Church

நெகே. 8: 1-8 தி.ப. 18: 24-28

தி.பா. 119: 41: 48 மத். 5: 1-12

"உம் நியமங்களை நான் நாடியுள்ளதால் பரந்த பாதையில் தடையின்றி நான் நடப்பேன்" (தி.பா. 119: 45).

திருச்சபையின் திருப்பணிகளில் சமூகப்பணி, மருத்துவப் பணி, விடுதலைப் பணி, சமயப் பணி, கல்விப் பணி போன்றவைகள் முக்கிய இடம் பெறுகின்றன. அவைகளில் சமூகப்பணியும், கல்விப்பணியும் சிறப்பு பெறுகின்றது. திருச்சபை வரலாற்றில் அருட்பணியர் கல்விப் பணிக்கு முக்கியத்துவம் கொடுத்து சமூகத்தில் காணப்பட்ட மூட பழக்கங்களை அகற்றுவதற்கும், விடுதலை உணர்வை தூண்டி எழுப்புவதற்கும் உறுதுணையாக இருந்தார்கள். "A child without Education, is like a bird without wings" (கல்வி இல்லாத குழந்தைகள் இறக்கை இல்லாத பறவைகள்) என்பார்கள். அதைப்போல் திருச்சபையில் வழங்கப்படும் கல்வி புதிய சமூக உருவாக்கத்திற்கும், ஆன்மிக வாழ்விற்கும் துணையாகவும், தனி மனித வளர்ச்சிக்கு ஊன்றுகோலாகவும் அமைகிறது.

1. கல்வித் திருப்பணி விசுவாசத்தை புதுபிக்க அழைக்கிறது (நெகே. 8: 1-8)

மக்களுக்குப் புரியும்படி தெளிவாகவும், பொருளோடும் கடவுளின் திருச்சட்டத்தை உரக்க வாசித்தார்கள். ஆதலால், மக்களும் வாசிக்கப்பட்டதன் பொருளைப் புரிந்து கொண்டனர் (நெகே. 8: 8).

பாபிலோனிய நாடு கடத்தலுக்குப் பிற்பாடு செருபாபேலுடன் திரும்பி வந்த ஒரு குழுவின் தலைவராக எஸ்ரா இருந்தார். அவர் மோசேயின் சட்ட புத்தகத்தில் நிபுணராகக் காணப்பட்டார் (எஸ்ரா 7: 6, 11, 12). இஸ்ராயேலர் திருச்சட்டத்தைப் படிப்பதிலும், பின்பற்றுவதிலும், கற்பிப்பதிலும் அவர் கவனமாக இருந்தார். பாழடைந்து கிடந்த எருசலேம் நகரின் மதிலைப் பல எதிர்ப்புகளுக்கிடையே மனம் தளராது கட்டி எழுப்பி ஏழாம் மாதம் முதல் நாள், ஆண்கள் மற்றும் பெண்கள், சட்டத்தைக் கற்றுக்கொள்ள விரும்பிய அனைவர் முன்னிலையில் சட்ட புத்தகத்தைக் கொண்டு வந்தார். எஸ்ரா மக்களை விட உயரமான இடத்தில் நின்று படித்தார். மக்கள் அனைவரும் மாபெரும் கடவுளாகிய ஆண்டவரைப் போற்றினார்கள். ஆண்டவருக்கு முன்பாக முகங்குப்புற விழுந்து ஆமென்! ஆமென்! என்று ஆண்டவரைத் தொழுது கொண்டார்கள். மக்கள் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு,

உடன்படிக்கையின்படி வாழ உறுதி பூண்டனர். திருச்சட்டம் படிப்பதும், பின்பற்றுவதும் மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

திருச்சபையில் பயிற்றுவிக்கப்படும் ஆன்மிக கல்வி மனுக்குலம் தவறுகளை உணர்ந்து கிறிஸ்துவுக்குள் கடவுள் அருளிய இரக்கத்தைப் பற்றிக்கொண்டு பாவங்களை விட்டு மனம் திரும்பி, கீழ்ப்படிதலைக் கடைபிடித்து முழுமையான வாழ்வு வாழ அறைகூவல் விடுக்கின்றது.

2. கல்வித் திருப்பணி அனைவரோடும் ஒன்றித்து நிற்க துணை புரிகிறது (தி.ப. 18: 24-28)

"அவர் பேசியதைக் கேட்ட பிரிஸ்கில்லாவும், அக்கில்லாவும் அவரை அழைத்துக் கொண்டுபோய், கடவுளின் நெறியைத் திட்டவட்டமாக விளக்கினர்" (தி.ப. 18: 26b)

அப்பொல்லோ எபேசு பட்டணத்தில் அமைத்திருக்கின்ற தொழுகை கூடங்களில் கடவுளின் வார்த்தையைத் துணிவுடன் கற்பிக்க தொடங்கினார். இவர் சொல்திறன் மிக்கவர். பழைய ஏற்பாடு நூல்களையும், யோவானின் கோட்பாடுகளையும் அதிகமாகக் கற்றிருந்தார். ஆனால், கொரிந்துப் பட்டணத்தில் அப்பொல்லோவின் போதனை நெருடலாக அமைந்தது (1 கொரி. 1: 12; 3: 4, 5). எபேசு பட்டணத்தில் வாழ்ந்த பிரிஸ்கில்லாவும், அக்கில்லாவும் இவரின் செய்தியைக் கேட்டு முழுமையடையாமல் இருந்தார்கள். எனினும் அப்பொல்லோவை ஊக்கப்படுத்தி கடவுளின் குமாரனாகிய இயேசுவின் போதனை, அற்புதம், மரணம், உயிர்த்தெழுதல் போன்ற செய்திகளை விவரித்து கற்பித்தார்கள். பின் நாட்களில் மிகவும் பிரயோஜனமாக அமைந்தது.

இன்றும், கிறிஸ்தவ விசுவாசிக்கிடையே கற்பிக்கும் தன்மை அதிகரிக்க வேண்டும். முதலாம் நூற்றாண்டு திருச்சபையில் பயிற்றுவிக்கும் பணியை அக்கில்லாவும், பிரிஸ்கில்லாவும் (தி.ப. 18: 2, 18: 26, உரோ. 16: 3, 4, I கொரி. 16: 19, II தீமோ. 4: 19) செய்தார்கள். அதைப்போல் இக்காலத் திருச்சபையும் ஒருவருக்கொருவர் கற்றுக்கொள்ள ஊக்கப்படுத்த வேண்டும். திருச்சபை எக்காலத்திலும் தெளிவானப் போதித்தலை (தி.ப. 13: 1, I கொரி. 12: 28, 29, எபேசியர் 4: 11, II தீமோ. 1: 11, எபிரேயர் 5: 12, யாக்கோபு 3:1) தொடர வேண்டும்.

3. கல்வித் திருப்பணி மனித நேயத்துடன் வாழ நினைப்பூட்டுகிறது (மத். 5: 1-12)

"மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள்! ஏனெனில் விண்ணுலகில் உங்களுக்குக் கிடைக்கும் கைம்மாறு மிகுதியாகும்" (மத். 5: 12).

இயேசு கிறிஸ்துவின் மலைப்பொழிவு புதிய ஏற்பாட்டில் சிறப்பான இடம் பெறுகிறது. இயேசுவின் காலத்தில் வாழ்ந்த யூத சமய தலைவர்களின் போதனையை விட மிகவும் மாறுபட்டு இருந்தது. இதன் சொற்கள் பழைய ஏற்பாட்டுடன் தொடர்புடையது (எசாயா 61: 1, 2; தி.பா. 37: 11; எசாயா 55: 1-3;

தி.பா. 24: 3-5; II குறி. 24: 21, நெகே. 9: 26; 20: 2) என்றாலும் புதிய சிந்தனையைத் தருவதாக அமைகிறது. ஒவ்வொரு திருவசனங்களும் நிலைமை மற்றும் விளைவு என்ற உண்மையை விளக்குகிறது. இயேசுவின் மலைபொழிவு புதிய வாழ்வு முறைகளுக்கு அழைத்துச் செல்கிறது. சமத்துவம், நேர்மை, நீதி, அன்பு, இரக்கம், கரிசனை, பணிவிடைகள் என்ற உயர்ந்த நோக்கங்கள், மதிப்பீடுகள், இலட்சியங்கள் இவைகளை எதிரொலிக்கிறது. எக்காலத்திற்கும் உரிய போதனையாக அமைகிறது. ஆன்மிக சிந்தனைகளை விட வாழ்வு சார்ந்து மனுக்குலத்தைப் பயணம் செய்ய தூண்டுகிறது.

காந்தியடிகள் மலைப்பொழிவுச் செய்தியைச் சுட்டிக்காட்டி இயேசு "மனித நேயத்தின்" போதனையைத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறார் என்றும் ஜாண் வெஸ்லி "மனுக்குலத்தின் புயல் உணர்வுகளைக் கட்டுப்படுத்துகின்ற, கொந்தளிப்புகளை அமைதிப்படுத்துகின்ற செய்தி என்றும், ஒருவருக்கொருவர் சமாதானமாய் வாழ வகை செய்கிறது" என்றும் கூறுகின்றார்.

ஆகவே, இயேசுவின் மலைபொழிவின் செய்தி திருச்சபைக்கும், விசுவாச வாழ்வுக்கும் மிகவும் இன்றியமையாமையாகும், ஆமென்.

ᴜ	ஞா. 350	கீர். 128

அருள்திரு. **R. ராஜ பக்த சிங்**
ஆயர், அரசகுளம்

இறைவேண்டல்

ஞானத்தின் ஊற்றாகிய எங்கள் கடவுளே, நித்திய குருவே, உம் ஞானத்தையும் ஆற்றலையும் எல்லா தலைமுறைகளுக்கும் வெளிப்படுத்தியதற்கு உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். உம் மீதுள்ள உண்மையான நம்பிக்கையின் சாரத்தை எங்களுக்குக் கற்பித்த உமது மகன் இயேசு கிறிஸ்துவுக்காக நாங்கள் உமக்கு நன்றி கூறுகிறோம். நம்பிக்கையில் வலுவாகவும், எங்கள் தேசத்தின் நம்பிக்கையின் கதிர்களாகவும், மாணவர்களின் வாழ்க்கையை வடிவமைக்க ஆசிரியர்களை ஆசீர்வதித்து ஊக்குவிக்க உம்மிடம் மன்றாடுகிறோம். உம்மோடும் தூய ஆவியரோடும் இப்போதும் எப்போதும் வாழ்ந்து ஆட்சி செய்யும் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாயிலாக வேண்டுகிறோம், ஆமென்.

பெண்களின் திருப்பணியை நினைவு கூர்தலும் கொண்டாடுதலும்

Remembering and Celebrating Women's Ministry

நீ.த. 4: 4-16 பிலி. 4: 1-7

தி.பா. 132 லூக். 8: 1-3

தெபோரா பாராக்கிடம், "எழுந்திடும்... ஆண்டவர் உம்முன் செல்லவில்லையா?" (நீ.த. 4: 14).

திருமறையில் பல்வேறு பெண்களையும் அவர்களது திருப்பணிகளையும் பார்க்கின்றோம். பல இடங்களில் அவர்கள் ஆற்றியுள்ளத் திருப்பணி சுயநலமில்லாமல், சத்தமில்லாமல், திரைக்குப் பின்னால் அமைதியாக நிகழ்ந்து, விடுதலைக்கும், ஆண்டவரின் திருவுளம் நிறைவேறுதலுக்கும் பயனுள்ளவைகளாக இருந்துள்ளன. நீதிமொழிகள் நூலின் 31-ஆம் பிரிவில் கூறப்படும் ஒரு நல்ல மனையாள் சாதாரணமாக நிகழ்த்தும் அசாதாரண செயல்களிலிருந்து மேற்கூறிய உண்மைப் புலனாகிறது. மனிதர் ஒவ்வொருவரும் தன் இல்லத்தில் தொடங்கி, பல்வேறு இடங்களில் தொடரும் இவ்வுண்மையைக் கண்கூடாகக் காண்கிறார்கள். ஆனால், அவர்கள் செய்யும் திருப்பணிகள் மற்றும் அருட்பணிகள் மறக்கப்பட்டுப் போய்விடுகின்றன. நினைவு கூர்தல் மற்றும் கொண்டாடுதல் என்பது இறைவனின் பார்வையில் ஏற்புடையது. இன்றையத் திருமறைப் பகுதியின் வழியாக இவ்விதமாக அமைதியாகவும், சத்தமில்லாமலும், திரைக்குப் பின்னாலும் நிகழ்ந்த பெண்களின் திருப்பணிகளை நினைவு கூருவோம்.

1. ஊக்கமளித்து விடுதலைப் பெற்றுத் தந்தார்கள் : (நீ.த. 4: 4-16)

இஸ்ரவேல் நாட்டினை நீதித் தலைவர்கள் நடத்திச் சென்ற காலம். இஸ்ரயேலர் ஆண்டவரின் பார்வையில் தீயதெனப்பட்டதை செய்யும்போது ஆண்டவர் அவர்களது எதிரிகளிடம் அவர்களை ஒப்படைத்து, அவர்களுடைய ஒடுக்குதலால் இஸ்ரவேலரைத் திருத்தியெடுப்பது வழக்கமான நிகழ்வு. இம்முறை ஆட்கோரை ஆண்ட கானானிய மன்னன் யாபீனிடம் ஒப்படைத்தார். அவனுடைய ஒரு படைத்தலைவன் சீசரா. அவனிடமிருந்த தொள்ளாயிரம் இரும்புத் தேர்கள் கொண்டு இஸ்ரயேலரைக் கடுமையாக ஒடுக்கினான். இஸ்ரயேலர் ஆண்டவரை நோக்கி கூக்குரலிட்டனர். இச்சூழலில்தான்

அப்போதிருந்த இறைவாக்கினரும், நீதித் தலைவியுமான தெபோரா இஸ்ரயேலர் விடுதலை பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறார். இவ்விதமான முன்னேற்பாடு இறைவனால் பெற்றுக்கொண்டது எனலாம். காரணம், அவர் ஒரு பெண் இறைவாக்கினர். மேலும், அவர் நீதித் தலைவராக இருப்பதினால் தீர்ப்புப் பெறுவதற்காக வரும் இஸ்ரவேலினுள் பல ஆள்பழக்கம் இருந்திருக்கக் கூடும். நப்தலியில் இருந்த கெதேசில் வாழ்ந்த பாராக்கு என்பவரை ஆளனுப்பிக் கூப்பிட்டு அவருக்கு ஊக்கம் கொடுத்து இஸ்ரயேலருக்கு விடுதலைப் பெற்றுத்தரும் வீரனாக மாற்றுகிறார். விடுதலைக்காகப் போராடத் தேவையான மக்கள் சக்தியைத் திரட்டும்படி ஆலோசனை கூறுகிறார். ஒன்றுசேர்ந்த மக்களின் ஆற்றல்முன் மிகப் பெரிதானவை எவை இருந்தாலும், அவை ஒன்றுமில்லாமல் போகும் என்பதை உணர்த்தி, விடுதலை தருகின்ற ஆண்டவரின் உடனிருப்பை எடுத்துக்கூறி அவனைப் பெலனடையச் செய்தார். பெண்களின் இவ்வித ஊக்கப்படுத்துகின்ற செயல் தூய ஆவியாரின் ஊக்கமளிக்கும் செயலோடு ஒப்பிட்டு பேசப்பட்டு வருகிறது. “ஏற்றத் துணை” என்பதற்கிணை எபிரேய சொல் “ஏய்சர்” என்பதாகும் (தொ. நூல் 2: 18). இங்கு பாராக்கும் தெபோரா வழியாக அதனை வெளிப்படுத்துகிறார். “நீர் என்னுடன் வந்தால் நான் செல்வேன்; நீர் என்னுடன் வராவிடில் நான் செல்லமாட்டேன்” எனக் கேட்க தெபோரா மறுமொழியாக “நான் உம்முடன் உறுதியாக வருவேன்” எனக் கூறி வாக்களித்து விடுதலைக்கு வழிநடத்துகிறார். பெண்களின் பணி இல்லத்திலும், திருச்சபையிலும் நல்லவற்றைக் கற்றுத்தந்து, தற்போதிருக்கும் பல்வேறு அடிமைத்தனங்களை உடைத்தெறிந்து விடுதலைப் பெற்றுதரும் பணியாகும்.

2. உழைப்பால் இணைந்து நற்செய்திப் பணி செய்தனர் : (பிலி. 4: 1-7)

கிறிஸ்தவர்களாகிய ஒவ்வொருவருக்கும் இருக்கும் சிறப்புப் பணி நற்செய்திப் பணியாகும். நமது பேராயத்தின் வழியாகச் செய்யப்படும் மலைநாட்டு அருட்பணி (D.M.P.B.) முன்னெடுக்கும் சொற்கள்: “ஜெபி”, “போ”, “அனுப்பு” என்பவை. இம்மூன்று செயலுக்கான சொற்களையும் செயல்முறையாக மாற்றுவது திருச்சபையின் பெண்கள். அமைதியாக ஆண்டவரின் திருவுளம் நிறைவேறும்படி “ஜெபிக்கின்ற”, “உதவுகின்ற” தங்கள் உழைப்பைத் தாராளமாக வழங்குகின்ற நிலைகளில் செயல்படுகின்றனர். பிலிப்பியர் 4-ஆம் பிரிவில் திருத்தூதுவர் பவுல் உழைப்பால் இணைந்து நற்செய்திப் பணிக்கு உறுதுணையாக இருந்த பெண்களை வாழ்த்துகிறார். அவர்களது திருப்பணியை “நீங்கள்தான் என் வெற்றிவாகை” எனக் கூறி பாராட்டுகிறார். அவருடைய பாராட்டுக்குரியவர்களில் “எயோதியா” மற்றும் “சிந்திக்கா” குறிப்பிடத்தக்கவர்கள். எயோதியாவும், சிந்திக்காவும் பிலிப்பிய திருச்சபையில் “பெண்கள்” என்ற காரணத்தினால் ஏற்றுக்கொள்ளப்படாதவர்களாக இருந்தனர். பவுல் அவர்களோடிருந்த தனது திருப்பணி அனுபவத்தைக் கூறும்போது “மற்ற உடன் உழைப்பாளரோடும்

என்னோடும் சேர்ந்து நற்செய்திக்காகப் போராடினார்கள்” என்பதை வெளிப்படையாகத் தைரியமாகக் கூறி திருச்சபையில் பயன்படுத்துமாறு பிலிப்பியத் திருச்சபையிலுள்ள உண்மையான தோழரிடம் வேண்டுகிறார்.

பவுல் தனது உயிர்த்த கிறிஸ்துவைத் தரிசித்த அனுபவத்தைச் சான்றாக அறிவிக்கும்போது மகதலா மரியாவின் மறக்கடிக்கப்பட்ட பணியைக் கண்ணுற்றவர் (தி.ப. 15). இங்கு மறக்கடிக்கப்பட்ட பெண்ணின் திருப்பணியை நினைவுகூரச் செய்து ஒதுக்கப்பட்ட, ஓரங்கட்டப்பட்ட அப்பெண்களை நற்செய்திப் பணிக்காக பயன்படுத்த வேண்டிக்கொள்கிறார். நம்முடைய திருச்சபைகளிலும் இவ்விதமாக உழைப்பால் இணைந்து நற்செய்திப் பணியாற்ற மறக்கப்பட்டவர்களை, மறக்கடிக்கப்பட்டவர்களை நினைவு கூர்ந்தும், தொடர்ந்து அதுபோன்ற பணியாளர்களைத் திருச்சபை நற்செய்திப் பணிகளில் பயன்படுத்துவதும் அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய உரிமைகளைக் கிடைக்க வழிசெய்வதும் நமது கடமையாகும்.

3. உடைமைகளால் திருப்பணியைத் தாங்கினார்கள் : (லூக். 8: 1-3)

திருப்பணிக்கு மிக முக்கியமானது அதற்காகக் கொடுக்கும் ஆதரவும், உதவிகளுமாகும். இயேசுநாதர் ஊர் ஊராய், நகர் நகராய்ச் சென்று இறையாட்சி பற்றிய நற்செய்தியைப் பறைசாற்றி வந்தார். அவருக்கும் நற்செய்திப் பணிக்கும் துணையாகவும் வேர் போன்றும் உதவியாக இருந்தவர்கள் அவரது பன்னிரண்டு சீடர்கள், இயேசுவினால் குணமாக்கப்பட்ட பெண்கள் சிலர், மகதலா மரியா, அவர்களோடு கூசாவின் மனைவி யோவன்னாவும், சூசன்னா என்பவரும் இருந்தார்கள். யோவன்னா என்பவர் ஏரோதுவின் மாளிகை மேற்பார்வையாளராக இருந்தவரின் மனைவி. மிகச் செல்வச் செழிப்போடு வாழ்ந்தவர். சூசன்னா என்பவரும் செல்வச் செழிப்போடும் சமுதாய அந்தஸ்திலும் வாழ்ந்த பெண். மருத்துவர்கள் கைவிட்ட சூழலில் தங்கள் நோயிலிருந்து இயேசுவால் விடுதலைப் பெற்றவர்களாக இருந்திருக்கக்கூடும். ஆண்டவரின் இத்திருப்பணி பல்வேறு மக்களை வேகமாகச் சென்றடைய வேண்டுமென்றும் பலர் தங்களைப் போன்று உயிர், உடல், ஆன்மாவிலே விடுதலைக் காற்றை சுவாசிக்க வேண்டும் என்ற நோக்கோடு திருப்பணிக்காக ஆகும் செலவை ஏற்றுத் திருப்பணியைத் தாங்கியிருக்கிறார்கள். மார்த்தாள், மரியாள் சகோதரிகள் நல்ல உணவு கொடுத்து இயேசுவின், மற்றும் அவரோடிருந்தவர்களின் உடல் களைப்பைப் போக்கி, திருப்பணியை ஊக்குவித்திருக்கிறார்கள். இவையெல்லாம் நமக்கு நல்ல உதாரணமாக இருந்து, திருப்பணி எத்தகைய இன்றியமையாதது என்பதை உணர்வுபூர்வமாக எடுத்துக் கூறுகிறது. ஆனால், இன்று பலர் திருப்பணிக்குக் கொடுத்தல் என்றாலே “வீண் செலவு” என்றே கணக்கிடுகிறார்கள். மரியாள் என்ற பெண்மணி வெள்ளைக்கல் பரணியை உடைத்து பரிமள தைலத்தை இயேசுவின் பாதத்தில் ஊற்றிய செயல்

சுற்றியிருந்தவர்களால் “வீண் செயல்” என முறுமுறுத்தாலும், இயேசுநாதர் அச்செயலை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டார். பணத்தைச் சார்ந்தது திருப்பணியல்ல. ஆனாலும், பணமும் திருப்பணிக்குத் தேவை. திருப்பணிகளைத் தங்கள் உடைமைகளால் ஒப்படைப்போடு ஆதரித்த பெண்கள் இன்றும் அவர் பார்வையில் உயர்ந்து நிற்கிறார்கள். பல வேளைகளில் திருச்சபைகளில் அவர்கள் பணி மறக்கப்பட்டுப் போய்விடுகிறது. பெண்கள் ஞாயிறாக அனுசரிக்கும் இந்நன்னாளில் அவர்களது திருப்பணியை நினைவு கூருவோம், ஆதரிப்போம். கடவுள்தாமே நம்மனைவரையும் ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

௳	ஞா. 433	கீர். 408

திருமதி. ஹெர்லின் சஜிதா நெல்சன்

செயலர், பேராயப் பெண்கள் ஐக்கியச் சங்கம்

இறைவேண்டல்

உலகத்தின் விடுதலை மற்றும் மீட்பிற்கு பெண்களை பங்காளர்களாக அழைக்கும் எங்கள் பெற்றோரான கடவுளே, கடந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் பெண்களின் ஆற்றலையும், செயலில் உள்ள பங்களிப்பையும், ஆபத்துகளையும் கடந்து அதிக நன்மைக்காக செயல்படத் தயாராக இருப்பதையும், அங்கீகரிக்கவும், கொண்டாடவும் எங்களுக்கு உதவி செய்யும். ஆபத்துக்களை பொருட்படுத்தாமல் மனித குலத்தின் மேலான நன்மைக்காகச் செயல்பட அவர்கள் தயாராக இருப்பதையும், சந்தேகங்களை எதிர்கொள்வதில் அவர்களின் வலுவான நம்பிக்கையையும், அவர்களின் தலைமைத்துவத்தையும், நற்செய்தியின் சாட்சிகளாக இருப்பதற்கான உத்வேகத்தையும் புரிந்துகொள்ள எங்களுக்கு ஞானம் தாரும். ஆண்களும் பெண்களும் ஒருவரையொருவர் ஆயத்தப்படுத்தவும், பூர்த்தி செய்யவும், அவர்கள் சமத்துவம், சுதந்திரம் மற்றும் மகிழ்ச்சியை அனுபவிக்கும் வகையில் அவர்களுக்கு அருள் தர வேண்டுகிறோம். உம்மோடும் தூய ஆவியரோடும் இப்போதும் எப்போதும் வாழ்ந்து ஆட்சி செய்யும் எங்கள் ஆண்டராகிய இயேசு கிறிஸ்துவின் வாயிலாக வேண்டுகிறோம், ஆமென்.

21.09.2025

கடவுளும் அனைத்துப் பற்றுறுதியாளர்களும்

God and People of All Faiths

ஆமோ. 9: 1-12 உரோ. 2: 17-29

தி.பா. 66 யோவா. 10: 14-18

"திருச்சட்டங்களை ஆழ்ந்து படித்து சடங்காச்சாரங்களை கைக்கொண்டு அதே நேரத்தில் திருச்சட்டங்களுக்கு விரோதமாய் பாவம் செய்கிறீர்கள். ஆகவே உடலில் விருத்தசேதனம் செய்து புறத்தோற்றத்தில் யூதராய் இருப்பவர் யூதரல்ல, அகத்தில் யூதராய் இருப்பவரே உண்மையான யூதர். உள்ளத்தில் செய்யப்படும் விருத்தசேதனமே உண்மையான விருத்தசேதனம்" (உரோ. 2: 27-29).

எல்லாப் படைப்புகளுக்கும் காரணராகப் படைப்பாளராம் கடவுள் இருக்கிறார் என்ற நம்பிக்கையும், அக்கடவுள் எல்லோரையும் படைத்து, அன்பு செலுத்தி, வாழ்வளிக்கிறார் என்ற உறுதிப்பாடும் எல்லா மக்களிடமும் காணப்படுகிறது. கடவுள் ஒருவரே, ஆனால் ஒவ்வொரு சமயங்களும் தங்கள் சமூக கலாச்சாரச் சூழலில் அக்கடவுளைப் புரிந்துகொள்கிறார்கள். சமயங்களையும் பழமைவாதங்களையும் வைத்து நான் உயர்ந்தவன், கடவுள் எனக்குத்தான் சொந்தம் என்பதை எல்லையற்ற கடவுள் ஏற்றுக் கொள்வதில்லை. திருமறையில் இயேசுவே இத்தகைய போங்கினைக் கடுமையாகச் சாடியுள்ளார். இயேசுவின் வாழ்வும் அருட்பணிகளும் எல்லையற்ற கடவுளின் அன்பை வெளிப்படுத்தியது. திருமறையினூடாய் எல்லை கடந்து விடுவிக்கும், உள்ளுறையும், வாழ்வருளும் கடவுளின் பண்புகளைத் தியானிப்போம்.

1. எல்லை கடந்து விடுவிக்கும் கடவுள் : (ஆமோ. 9: 7)

கடவுள் இஸ்ரவேலைத் தன் மக்களினமாகத் தெரிந்தது அவரது பரந்த அன்பு மனப்பான்மையால் ஆகும் (இ.ச. 7: 7, 8) சிறு கூட்டமாக இருந்தாலும் கடவுள் தம் அன்பினால் இஸ்ரவேலைத் தெரிந்தார். ஆனால் இஸ்ரவேலரோ கடவுள் தங்களுக்கு மாத்திரம் உரியவர் என்ற ஏகபோக மனப்பான்மையை வளர்த்தனர். இஸ்ரவேலரின் வரலாற்றுப் பின்னணியத்திலும், யூத மரபுகளிலும், செமிடிக் கலாச்சாரத்திலும் (Semitic Culture) என் கடவுள் எனக்காக போர் புரிந்து மற்றவர்களை அழிப்பார் என்ற நம்பிக்கை இருந்தது (வி.ப. 15: 3).

ஆனால் தேவ கோபாக்கினையின் இறைவாக்கினர் என அறியப்படும் ஆமோஸ் இறைவாக்கினர் இஸ்ரவேலின் கீழ்ப்படியாமையை வன்மையாகக் கண்டித்து, நீதி நேர்மைதான் கடவுள் பார்வையில் இன்றியமையாதது என்கிறார். அத்தோடு கடவுள் எக்காலமும் தங்களுக்கே சொந்தம் என்ற ஏகாதிபத்திய

அகம்பாவத்தை அவர் உடைத்து இஸ்ரவேலுக்குத் தனிச்சலுகை இல்லை (ஆமோ. 9: 7) என்கிறார். "இஸ்ரவேல் மக்களே, நீங்கள் எனக்கு எத்தியோப்பியரைப் போன்றவர்கள்தானே" என கூறும்போது, கடவுள் பார்வையில் அனைவரும் சமமானவர்களே என்பது விளங்குகிறது. எத்தியோப்பியரான கறுப்பினத்தவர்களும் இஸ்ரவேல் மக்களும் சமமானவர்களே. எத்தியோப்பியர் நோவாவின் மகன் காம்மின் வழிதோன்றிப் புற இனத்தாராக கறுப்பின மக்களாக வாழ்ந்தவர்கள் (எரே. 13: 23, தொ.நூ. 9: 2, 10: 6).

இஸ்ரவேல் மக்களை எகிப்து நாட்டினின்றும் பெலஸ்தியரைக் கப்தோரிலிருந்தும், சீரியரைக் கீரிலிருந்தும் நான் அழைத்து வரவில்லையா? எனக் கூறும்போது விடுதலையின் கடவுள் ஒரு இனத்துக்கு சொந்தக்காரரோ, ஒரு கோட்பாட்டிற்கு உட்பட்டவரோ அல்ல என்பது தெளிவாகிறது. வரலாற்றில் வெள்ளைக்காரர் ஆதிக்கத்தில் ஆப்பிரிக்க நாடுகள் தத்தளித்தன. வெள்ளைக்காரர்கள் கிறிஸ்தவர்களாக இருந்ததால் கடவுளும் வெள்ளைக்கார ஆதிக்க கடவுளாகக் கருதப்பட்டார். ஆனால், விடுதலை இறையியல் (Liberation Theology) லத்தீன் அமெரிக்காவில் உருவாகி அதன் நீட்சியாக Black Theology மலர்ந்தபோது God is Black, அவர் கறுப்பின மக்களின் வேதனைகளைப் புரிந்து பகிர்ந்து ஒடுக்கப்படுவோரோடு அடையாளப் படுத்துகிறார் என நம்பித் தங்களுக்கான விடுதலை இறையிலைக் கட்டமைத்தனர். இன்றும் எங்கெங்கு விடுதலைக்கான குரல்கள் எழும்புகிறதோ அங்கெல்லாம் கடவுள் எல்லை கடந்து விடுவிக்கிறார்.

2. சடங்காச்சாரம் கடந்து உள்ளுறையும் கடவுள் (உரோ. 2: 27-29)

பவுல் உரோமாபுரியிலுள்ள இறைமக்களுக்கு எழுதும்போது நீங்கள் யூதரென்று பெயரைத் தாங்கிக்கொண்டு திருச்சட்டங்களை ஆழ்ந்து படித்து சடங்காச்சாரங்களை கைக்கொண்டு அதே நேரத்தில் திருச்சட்டங்களுக்கு விரோதமாய் பாவம் செய்கிறீர்கள். ஆகவே, உடலில் விருத்தசேதனம் செய்து புறத்தோற்றத்தில் யூதராய் இருப்பவர் யூதரல்ல, அகத்தில் யூதராய் இருப்பவரே உண்மையான யூதர். உள்ளத்தில் செய்யப்படும் விருத்தசேதனமே உண்மையான விருத்தசேதனம் (உரோ. 2: 27-29) என்கிறார்.

உண்மை ஆன்மிகம் என்பது வெளிப்புற தோற்றத்தில் அல்ல, மாறாக நாம் நம்மை உணர்ந்து நம் உண்மையான ஆள்தத்துவத்திற்கு நேராக சென்று உள்ளொளி பெறும் ஓர் உன்னதப் பயணமாகும் (2 கொரி. 4: 16, உரோ. 12: 2). கடவுள் நம்மை தம் சாயலில் படைத்தார். பாவத்தால் சிதைந்துபோன சாயலைக் கிறிஸ்துவால் பெற்றுக்கொண்டோம். பவுல் 1 கொரி. 3: 16-இல் நீங்கள் கடவுளுடைய கோவிலென்றும் கடவுளின் ஆவியார் உங்களில் குடியிருக்கிறார் என்றும் கூறுகிறார். ஆக, நம்முள் உறைந்திருக்கும் தூய ஆவியாரை உணர்வதே உண்மை ஆன்மிகம். மும்மைக் கடவுள் எல்லோருக்கும் மேலானவர், எல்லோருக்கும் எல்லாமுமாய் வாழ்பவர் (எபே. 4: 5). சமய சடங்குகளுக்குள்ளும் எல்லைகளுக்குள்ளும் கடவுளை அடக்க நினைப்பது அவரைச் சிறுமைப்படுத்தும் செயலாகும்.

3. எல்லை கடந்து வாழ்வருளும் கடவுள் : (யோவா. 10: 14-19)

ஆட்டுக்கொட்டில் பற்றிய உவமையில் ஆடுகளின் ஆயர் தம் ஆடுகளை அறிந்தும், அவைகளால் அறியப்பட்டும் இருக்கிறார். ஆனால், தன் ஆடும், ஆட்டுக்கொட்டிலும் போதும் என சுயநலம் கொள்ளாமல் "கொட்டிலைச் சேரா வேறு ஆடுகளும் எனக்கு உள்ளன" என ஆயர் கூறும்போது எல்லைக்குள்தான் வாழ்வு உண்டு என்பதை இயேசுநாதர் உடைத்தெறிந்து "வேறு ஆடுகளையும்" தேடுகிறார்.

நாம் வாழும் இந்தியச் சூழலில் கிறிஸ்தவ சமயச் சடங்குகளுக்கு உட்படாது, கிறிஸ்துவையும் அவர் போதனைகளையும் வாழ்வியலாக்கிக் கொண்ட அநேகர் உண்டு. Churchless Christianity என்ற இயக்கம் சமய எல்லைகளைத் தாண்டி கிறிஸ்துவை வாழ்வியலாக்க முயற்சிக்கிறது. தமிழ் நாட்டில் சிவகாசி மாவட்டத்தில் ஒரு சமூகத்தின் பெண்கள் கிறிஸ்தவ கலாச்சாரச் சடங்குகளைத் தழுவாமல் கிறிஸ்துவின் நம்பிக்கையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். (Ref - Eliza F. Kent, Secret Christians of Sivakasi: Gender, Syncretism, and crypto-Religion in Early Twentieth Century South India) பெர்சியா எனப்பட்ட இன்றைய ஈரானை ஆண்ட பேரரசன் சைரசுவிடம் (கி.மு. 590-529), பாபிலோன் சரணடைந்த பின் அங்கிருந்த யூதர்களை தங்கள் தாயகம் திரும்ப அனுமதித்தார். கடவுள் சைரசைக்குறித்துக் கூறும்போது அவன் நான் நியமித்த ஆயன், என் விருப்பத்தை நிறைவேற்றுவான் என்றார் (ஏசா. 44: 28) சைரவை கடவுள் திருப்பொழிவு செய்தார் (ஏசா. 45: 1). பிற இனத்து அரசனையும் தன் திருப்பணிக்கெனக் கடவுள் பயன்படுத்த முடியும். எல்லையற்ற கடவுளின் அன்பும் அருளும் ஆசியும் நம்மை ஆட்கொள்ளட்டும், ஆமென்.

பு	ஞா. 3	கீர். 233

அருள்திரு. முனைவர். O. டென்சிங்

இயக்குநர், தொடர்புத் துறை

இறைவேண்டல்

அருள் நிறைந்த கடவுளே, அனைத்தையும் படைத்தவரே, எங்கள் மீட்பரே, இந்த உலகில் தற்காலிக குடியிருப்பாளர்களாக இருக்க எங்களை அழைத்ததற்கு நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். எல்லா நம்பிக்கையாளர்களையும் சகோதர சகோதரிகளாக ஏற்றுக்கொள்ளும் இதயத்தை எங்களிடம் உருவாக்க உம்மிடம் வேண்டுகிறோம். உம் ஒளியையும் உண்மையையும் பகுத்தறிவதற்கு எங்களுக்கு ஞானம் தாரும். இவ்வுலகில் நீதி மற்றும் அமைதிக்கான தாகத்தை எல்லா மக்களிடமும் வளர்த்துக் கொள்ளவும், இதன் மூலம் நாங்கள் நம்பிக்கையுடனும் அன்புடனும், இணைந்து பணியாற்றவும் மற்றும் எங்கள் மத்தியில் உம் பிரசன்னத்தை உணர்ந்து கொள்ளவும், எங்களுக்கு அருள் தர வேண்டுகிறோம். உம்மோடும் தூய ஆவியரோடும் இப்போதும் எப்போதும் வாழ்ந்து ஆட்சி செய்யும் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாயிலாக வேண்டுகிறோம், ஆமென்.

27.09.2025 தென்னியந்தியத் திருச்சபை உருவாகிய நாள்

பணிவிடையில் ஒன்றிப்பு

Unity in Service

வி.ப. 4: 27-31 1 கொரி. 3: 1-15

தி.பா. 28 யோவா. 17: 9-23

"எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக!" (யோவா. 17: 21)

தென்னியந்தியத் திருச்சபை ஒன்றித்த நாளில் ஒன்றிப்பின் ஆழங்களை உணர்ந்திட ஒன்றிப்போம். ஓர் மயமாய் இல்லை ஒரே மயமாய் என்ற சிந்தை வலுபெறும் இக்காலத்தில் சீருடைமயம், சீரான ஒரே கல்வி என்பன ஓர் கோட்பாட்டில் பிற கோட்பாடுகளை மங்க செய்தல் அல்லது அழித்து விடுதல் என்பதாக ஓர் சுய சிந்தை துஷ்பிரவாகத்தால் பிற சிந்தைகளை உலகில் சிதைத்து திணித்தல், என்ற நிலையில் வலுபெறச் செய்தமையால் வரலாற்றில் கிறித்தவ அடிதளங்கள் சிதைவு பெற்று ஆட்டம் கண்டன. இல்லை ஆடி கொண்டே உள்ளன. யோசேப்பை அறியாத பார்வோன் ஒருவன் தோன்றினான் என்பது நினைவில் வர வரலாற்றில் திருச்சபையின் தியாகங்கள் கற்க தவறியோர் இன்று இயேசுவிடம் வந்து வலபக்க இடபக்க ஆசனத்தில் அமர்வதால் இயேசுவின் கரத்தின் விரல்கள் பலவிதமாய் இணைந்து செயலிக்க இயலாத நிலையில் தினம் தினம் சிலுவையில் ஆணிகளால் அடிக்கப்பட்டுச் செயலற்று தொங்குகிறார்.

1. ஒன்றிப்பின் சந்திப்பு : (வி.ப. 4: 31)

சீர்த்திருத்த சபை அருட்பணியாளர்கள் இயேசு கிறிஸ்து என்னும் நற்செய்தியுடன் நம்மைச் சந்தித்தனர் என்பது நம் வாழ்வில் கிறிஸ்து என்னும் ஒளி ஏற்றத்தின் துவக்கம் எனலாம். விடுதலைப் பயணப் பரப்புரையில் கடவுள் மோசேயைச் சந்தித்தார். ஆரோன் மோசேயைச் சந்தித்தார் என்பது துவக்க விழிம்பாயினும் இங்கு வலுவான செய்தி கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரைச் சந்தித்தார் (வி.ப. 4: 31) என்பதாம். சந்திப்பை உணர்ந்த இஸ்ரவேலர் கடவுள் பேரில் நம்பிக்கைக் கொண்டனர், தங்கள் வாழ்வின் துன்பத்தைக் கண்ட கடவுளைத் தொழுது கொண்டனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சீர்த்திருத்தத் திருச்சபையின் ஆரம்பம், வறுமை, அடிமைதனம், ஆடை உடுக்க உரிமையில்லை என்று வாழ்ந்த மக்கள் மத்தியில் என்பது மறுக்க இயலாதது. இன்று கல்வி என்னும் அருட்கொடை பெற்றோர் செல்வத்தின் அளவீட்டில் நீதி நியாயம் தேடுகின்றனர். மா மனிதர் றிங்கல்தெளபே எளியவர் மத்தியில் பிறந்த கடவுள் மகனை இயேசு கிறிஸ்துவைத் தம் வாழ்வில் ருசித்தவராய், ஏற்றவராய் அடிமை மக்களுடன் அடிமையாய் வாழ்ந்தார். மைலாடியில் இறைவேண்டலுடன் துவங்கிய தொழுகை இன்று பேராயமாக மலர்ந்துள்ளது. நன்மைப் பெற்ற நாம் நம்மைச் சந்தித்த ஆண்டவருக்கு நன்றி சொல்லுவோம்.

2. ஒன்றிப்பின் அடித்தளம் : (1 கொரி. 3: 11)

பறவை இனங்களில் தூக்கணாம் குருவி தன் அலகால் கூடு கட்டுவது காண்போர் கண்களை வியப்படையச் செய்கிறது. இவை இரண்டு கூடுகளைக் கட்டுகிறது, ஒன்று ஆண் பறவை காவல் பணிச் செய்ய அமர்ந்திருக்கும் கூடு. மற்றொன்று பெண் பறவை தான் முட்டையிட்டு குஞ்சுகளுடன் வாழும் கூடு. இந்தக் கூடுகளை ஆண் பறவை கட்ட, பெண் பறவை இதன் உறுதித் தன்மையை ஆய்வு செய்த பின்னரே குடியேறும். கொடும் காற்றுக்கும், கடும் மழைக்கும்., சிதையாதவாறு இந்தக் கூடுகள் தென்னைமர அல்லது பனைமர ஒலைகளில் இணைக்கப்பட்டுள்ள இணைப்பே இந்த பறவைகளின் இசைந்த வாழ்வை உறுதி செய்கிறது.

. . . இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது (1கொரி. 3: 11). ஒரு வீட்டின் கட்டுமானத்தில் மிகவும் கவனிக்கத் தக்கது அஸ்திபாரம். இல்லத்தைக் கட்டுபவர் ஆண்டவரே, என்பதில் உறுதி இல்லாத சிலர் தாங்களாக இல்லம் கட்டுகின்றனர். இல்லம் என்பது தொடர்ந்து வரும் சந்ததி வாழ்வுபெற ஏற்றதாய் அமைய வேண்டும். இறை இல்லங்களைக் குறித்து பவுல் சொல்வது புத்தியுள்ள சிற்பாசாரியாய் இயேசு என்னும் அடிதளமிட்டேன், ஒருவன் இயேசு என்னும் பெயரை அல்லாமல் தன் பெயருக்கென கட்டினால் நாளானது பதில் உரைக்கும், அக்கினி அவனை எரித்திடும் (1 கொரி. 3: 10, 13) என்கிறார். நிலைவாழ்வில் பரிசு பெற இயேசு என்னும் அடித்தளமிடுங்கள் என்பது பவுல் தரும் அறிவுரை.

3. ஒன்றிப்பின் சத்தியம் : (யோவா. 17: 17)

ஒன்றிப்பின் இறைவேண்டலில் மூன்று படி நிலைகள் உள்ளன. முதல் நிலை சீடருக்கான வசனமே சத்தியம். பிதாவும் இயேசுவும் ஒன்றாயிருப்பது போல சீடரும் ஒன்றாயிருக்க அவர்களைக் காத்திடும் என்கிறார் (யோ. 17: 11). மேலும் உலகினின்று சீடர் பிரிந்திட அனுமதியாமல், தீமையின்று சீடரை காத்திட வேண்டுகிறார் (யோ. 17: 15). சீடர் தூயவராகத் திருவசனமே சத்தியம் (யோ. 17: 17) என்ற மகிழ்வின் நிறைவைத் தருகிறார்.

இரண்டாம் படி நிலை தூய்மையின் சத்தியம், தம்மைத் தாமே தூய்மையடைய செய்தல். அவர்களும் சத்தியத்தினாலே பரிசுததமாக்கப்பட்டவர்களாகும்படி அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன் (யோ. 17: 19). இங்கு பிதாவிடம் பெற்றுகொண்ட வார்த்தையே சீடருக்காய் தம்மில் வெளிபடச் செய்கிறார்.

மூன்றாம்படி நிலை அன்பின் சத்தியம். நற்செய்தி பெறுவோர் நம்பிக்கையின் திருச்சபையாய் அன்பின் சத்தியத்தில் வலுபெறவும் இயேசு என்னும் நாமத்தை அறிந்து அறிவித்திட மன்றாடுகிறார் (யோ. 17: 20,26). ஒன்றிப்பில் சந்திப்பு பெற்ற நாம் இயேசு என்னும் அடித்தளத்தில் அன்பு என்னும் திருவசனம் பெற்று தூயவர் நாமம் அறிவிப்போம், ஆமென்.

ப	ஞா. 1	கீர். 277

அருள்திரு. ஜோசப் C.G. ஷெனித்
இயக்குநர், ஆன்மிக எழுப்புதல் துறை

முதியோரைப் பேணுதலும் ஏற்றுகொள்ளுதலும்

Caring and Accepting the Elderly

தெ.நூ. 46: 28-34 1 திமொ. 5: 1-10

தி.பா. 21 லூக். 2: 25-35

"முதியோரிடம் கடுமையாய் இராதே. அவர்களைத் தந்தையராக மதித்து ஊக்குவி" (1 திமொ. 5: 1).

முதியோரை மதித்தல், பராமரித்தல் மனித நேயத்தின் உச்சபட்ச அறம். அனைத்து மதங்களும் இதை மையமாய் போதிக்கின்றன. மத போதனைகளுக்கு அப்பாற்பட்ட பண்பு. Presbuteras என்னும் கிரேக்க பதம் கொண்டு அறியப்படும் முதியோர் திருமறையில் தங்கள் ஞானத்தினாலும், ஆன்மிக முதிர்ச்சியினாலும் அறியப்பட்டனர். Presbuteras என்னும் "முதியோர்" "முன்னோர்" என்றும் திருமறையில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இறைவார்த்தைப் போதனை, தலைமைப் பொறுப்பு, நியாயம் விசாரித்தல், அரசருக்கு ஆலோசனை வழங்குதல் போன்ற முக்கிய இடங்கள் முதியோர் வசம் இருந்தவையே. அவர்கள் திருச்சபையின் பிரதிநிதிகளாகப் பாவிக்கப்பட்டனர் (தி.ப. 20: 28; பிலி. 1: 1; 1 திமொ.: 1,; தீத்து. 1: 7; 1 பேது. 5: 2).

நாட்டில் முன்னோர் பாரம்பரியத்தின் முன்னோடிகள் என அறியப்பட்டனர். மொழிவழி பாரம்பரிய பரிமாற்றம், மனித நன்னெறி போதனைகளை வகுத்தல், ஆரோக்கியமான சமூகத்தை மற்றும் குடும்பத்தைக் கட்டமைத்தல், வரும் தலைமுறையினர் வாழ்வுக்காய் உழைத்த மாதிரிகள், அரசியல் அமர்வுகளில் தீர்மானம் எடுக்கும் ஆற்றல் மிக்கவர்களாய் முதியோர் பங்களிப்பு இருந்துள்ளது என்பது மறுக்க இயலாது. முதியோர் என்போர் 65 வயதிற்கு மேல் என்பது இந்திய தேசிய சுகாதார நிறுவனத்தின் குறிப்பு. அரசின் திட்டங்களில் 58 வயதிற்கு மேல் உள்ள பெண்கள், 60 வயதிற்கு மேல் உள்ள ஆண்கள் முதியோர் சலுகைக்குத் தகுதியானவர்கள் என்பது திட்டங்கள் தரும் ஆதாரம்.

உடல் தளர்வு, ஏழ்மை, ஆதரவில்லாமை, மனநலன் பாதிப்பு போன்ற சவால்களை முதியோர் தினமும் எதிர்கொள்கின்றனர். சமீபத்திய நிகழ்வுகள் மேலும் அச்சத்தை ஏற்படுத்தும் காரணிகளாய்க் கொள்ளப்படுகின்றன. முதுமையில் தங்கள் வீடுகளில் தங்கியிருந்தாலும், பிள்ளைகளின் பராமரிப்பின்மை, பிறர் பாடும் வசைச்சொற்கள், போதிய ஆரோக்கியமான உணவு கிடைக்காமை, வருமான இழப்பு, பிள்ளைகளாலும் பிற உறவுகளாலும் ஏமாற்றப்பட்டு அல்லல்படும் அவலம், சொந்த வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டதால் வீதிகளில் உறங்கும் அவலம், சந்திகளில் உதவிக்காய் கையேந்தி பிச்சை எடுக்கும் கொடுமைகளை நாள்தோறும் காண்கிறோம். இச்சூழலில் நாம் கற்றுக்கொள்ள வேண்டியவை எது?

1. உயர்வில் முதுமையை மறவாத யோசேப்பு : (தொ. நூ. 46: 28-34)

முதுமையோரை மதித்தல் எனும்போது அவர்களோடு நேரத்தை செலவிடல், முகமலர்ந்து அமைதியாகப் பேசுதல், அறிவுரைகளையும் அனுபவங்களையும் கேட்டல், அவர்களோடு உட்கார்ந்து உணவருந்துதல், இவைகள் எல்லாவற்றிற்கும் மேலாக குடும்பப் பாரம்பரியம், பண்பாடு, வரலாறு மற்றும் உறவுகளையும் கேட்டறிதல், தன் சகோதரரின் வஞ்சகத்தினால் காயப்பட்டு, இஸ்மவேலரிடம் விற்கப்பட்டுப் பின் போத்திபாரின் வீட்டில் பொய் சுமத்தப்பட்டு 13 வருட சிறைச்சாலை அனுபவம் கடந்து, இறை ஞானத்தால் பார்வோனிடம் நற்பெயர் பெற்று, எகிப்தின் அதிகாரியாக உயர்ந்தான் யோசேப்பு. ஆயினும், முதிர்ந்த குடும்ப உறவு மற்றும் வயதான தந்தை, உடன் சகோதரர்களைப் பற்றிய சிந்தை இன்னும் அவன் எண்ணத்தில் கொண்டிருந்தன. நாட்டில் ஏற்பட்ட பஞ்சம் அவர்களை ஒன்றுசேர்த்தது. தந்தையைக் காணும் ஆசையோடு வந்தவன், உயர்வு, வருமானம், நவீன உலகின் வளர்ச்சி போன்றவை முதியோரின் மதிப்பையும், பராமரிப்பையும் தீர்மானிக்கும் காரணிகளாகின்றன. உயர்வான பதவி, செழிப்பான வாழ்வு, மந்தை மேய்த்தல் தொழிலிலிருந்து (தொ.நூ. 46: 34) நாகரிகத்திலும், கட்டடக்கலையிலும் முன்னேறிய எகிப்து நாட்டு வாழ்வியல் சூழலிலும் யோசேப்பு வாழ்ந்து வந்தான். ஆயினும் தன் குடும்பத்தை, குறிப்பாக தன் முதிர்ந்த தந்தையை அவன் மறக்கவில்லை.

யாக்கோபின் அனுபவங்கள் இன்றைய கால முதியோருக்கு அதிகம் பொருந்தும். முதியோர் இல்லத்தில் இருக்கும் பெரும்பான்மைப் பெற்றோரின் ஏக்கம் “ஒருமுறை என் பிள்ளையை அல்லது பேரக்குழந்தையை பார்த்துவிட்டால் நிம்மதியாக கண்ணை மூடுவேன்” (வ. 30). தொலைவையும், வேலையினையும் காரணம் காட்டி முதியப் பெற்றோரை வந்து பார்த்துச்

செல்லாத பிள்ளைகள் குறித்த செய்திகள் அதிகம் உண்டு. முதுமைக்கு முன் தன் அதிகாரம், அந்தஸ்தை விட்டு இறங்கி வந்து மதிப்பு செலுத்தினான் யோசேப்பு (வ. 29).

நவீன உலகில் முன்னேற்றம் என்னும் கொள்கையால் முன்னோரின் வாழ்வுமுறை மற்றும் தொழில் இளம் தலைமுறையினருக்குக் கசப்பாகக் காணப்படுகிறது. "பட்டணத்து மேம்பட்ட வாழ்க்கை" என்னும் போர்வையால் முதிர்ந்த பெற்றோரை உடன் வைத்துக்கொள்ள விரும்பாத நிலை அதிகம் காணப்படுகிறது. எகிப்தியர் அருவருப்பாய் எண்ணும் தொழில் ஆடுமேய்த்தல். தன் முன்னோர், தந்தை, சகோதரர்கள் அதே தொழில் செய்வதை வெட்கம் என்று கருதாத யோசேப்பின் பண்பு நமக்கு மாதிரியே.

2. முதுமையை ஏற்கும் ஆன்மிக உறவு : (1 திமொ. 5: 1-10)

பவுல் திருச்சபையினருக்குப் போதிக்கும் புதிய உறவின் அறிக்கை 1 திமொ. 5-ஆம் அதிகாரம். சுயநலனை தவிர்த்து அனைவரையும் அன்போடு அரவணைக்கும் ஓர் அறிவுரை இது. லேவி. 19: 32, நீதி. 20: 20, 30: 17 ஆகிய திருமறைப் பகுதியின் உள்ளடக்கமே முதியோரைத் தந்தையராய் கருதிக்கொள் என்பது. உடல்சார்ந்த உறவைக் கடந்து உள்ளம் மற்றும் உணர்வு சார்ந்த உறவைத் திருச்சபையின் புதிய உறவாக பவுல் திமொத்தேயுவுக்கு புரியவைக்கிறார். தீர்க்கத்தரிசன பகுதிகளான தானியேல் 7: 9-10, 13, 14 மற்றும் வெளி. 1: 14, 15 ஆகிய திருமறைப் பகுதிகள் கடவுளை நீண்ட ஆயுசுள்ளவராக அல்லது முதியவராகவும் சித்திரித்து அனைத்து மொழியினரும், இனத்தவரும் அவரைச் சேவிக்கும் ஆற்றலும், அதிகாரமும் உடையவராக வருணிக்கிறது. நமது திருச்சபைகளில் குடும்ப விழா அல்லது சபைநாள் விழாக்களில் முதியோர் சிறப்புப்படுத்தப்படுவது ஓர் சிறந்த எடுத்துக்காட்டு.

முதல் திருச்சபையில் தூய ஆவி வெளிப்பட்டபோது தீர்க்கத்தரிசனத்தின் நிறைவேறுதலாய் தி.ப. 2: 17-இல் "உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள்" (யோவேல் 2: 28, எண். 12: 6). திருமறையில் சொப்பனங்களில் கடவுளின் செய்திகள் பகிரப்பட்டன. அதோடு வரும்கால நிகழ்வுகள் சொப்பனங்களில் முன்னறிவிக்கப்பட்டன. சொப்பனங்கள் வழி கடவுளின் செய்திகளை மக்கள் அறிந்துகொண்டனர். திருமறையில் சில சொப்பனங்கள் அதிகம் பேசப்பட்டது. "கடவுளின் பாதுகாப்பும், புதிய சமூக உருவாக்கத்தின் கடவுளின் உடன்படிக்கையும்" பெரும்பான்மையான சொப்பனங்களின் நோக்கங்கள். யோசேப்பு (தொ.நூ. 37), பார்வோன் (தொ.நூ. 41), சாலமோனின் ஞானம் (1 அர. 3: 5-15), தானியேல்

(தானி. 7: 1-14), யோசேப்பு - மரியாள் (மத். 1: 20-24), வானறிஞர்கள் - யோசேப்பு (மத். 2), பிலாத்துவின் மனைவி (மத். 27: 19).

முதியோரின் சொப்பனத்திற்கு enupnon - (greek), chalom (Hebrew) என்னும் பதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இது தூக்கத்தில் ஒருவர் காணும் சொப்பனம். திருமணப் பத்திரிகைகளில் "முதியோரால் நிச்சயிக்கப்பட்டு" என்னும் பதம் மறக்கப்பட்டு திருமணத்தின் மாண்பு கெட்டுப்போனதை நினைவில் கொள்ளல் அவசியம். பல குழப்பம் மிகுந்த சூழலில் "முதியவர்களிடம் ஓர் ஆலோசனை கேட்போம்" என்னும் நிலைமாறி "வலைதளத்தில் விசாரிப்போம்", ஆலோசனை தரும் முதியவரை முதியோர் இல்லத்தில் அடைத்துவிட்டு செயற்கை நுண்ணறிவுயிடம் (Artificial Intelligence (AI)) பதில் கேட்கும் நவீன யுகத்தில் வாழ்கிறோம். முதியோரின் ஆன்மிக உரையாடல்களை மறக்கப்பட்டுக் கொண்டே வருகிறது. சிந்திப்போம்; முதியோரைப் பேணுவோம், ஆமென்.

அருள்திரு. I. ஜான் ரோஜின் ஜேக்கப்

பதிவாளர், ஐக்கிய இறையியல் கல்லூரி, பெங்களூர்

இறைவேண்டல்

நித்தியமான கடவுளே, எங்கள் மீதான உமது எல்லையற்ற அன்புக்காகவும் எங்களிடம் நீர் வைத்திருக்கும் நிரந்தர அன்புக்காகவும் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். வயது அல்லது பலவீனத்தால் நாங்கள் இனி வேலை செய்ய முடியாத நிலையிலும், தொடரும் உமது மேலான அன்புக்காக உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் முதியோர்கள் ஆசீர்வாதத்துடனும், இளையோர் மற்றும் முதியோர்கள் கூட்டுறவுடனும் எங்கள் சமுதாயத்தின் வாழ்க்கையை வளமாக்கவும் உம்மிடம் மன்றாடுகிறோம். தேவாலயம், முதியோருக்கு கடவுளின் பாதுகாப்பான ஒரு கருவியாக இருக்க உம்மிடம் மன்றாடுகிறோம். உம்மோடும் தூய ஆவியரோடும் இப்போதும் எப்போதும் வாழ்ந்து ஆட்சி செய்யும் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாயிலாக வேண்டுகிறோம், ஆமென்.

ஒப்படைப்புடைய கூட்டாண்மைக்கான இறையழைப்பு

God's Call for Committed Partnership

இ.ச. 10: 12 - 22 I தெச. 4: 1 - 8
தி.பா. 23 மாற்கு 10: 35 - 45

> "*உங்கள் கடவுளாகிய ஆண்டவருக்கே அஞ்சுங்கள்; அவருக்கே பணி புரிந்து அவரைப் பற்றிக்கொள்ளுங்கள்.* (இ.ச. 10: 20).

ஆண்டவரின் பேரன்பினாலும் இரக்கத்தினாலும் இப்புதிய வருடத்தினைக் காண அருள்புரிந்துள்ளார். இப்புதிய ஆண்டில் ஆண்டவரோடு நித்தமும் பயணிக்கவும், அர்ப்பணிப்புடன் நமது கடமைகளை நிறைவேற்றவும் அழைப்பினைப் நாம் பெற்றிருக்கின்றோம். கடவுளோடுள்ள ஒப்படைப்பில் நாம் அனுதினமும் பயணத்திட அவரது வார்த்தைகள் நம் அனுதின வாழ்விலும், பணிகளிலும் நமக்கு நல் வழிகாட்டுதலாய் அமைவது சிறப்பானது.

நாம் வாழும் இன்றைய உலகம் கடவுள் பயமற்ற, கடவுளுக்கு முக்கியத்துவம் கொடாத சுயநலம் சார்ந்த உலகம். கடவுளிடம் அன்பு செலுத்தாமல் உலகினை சார்ந்தவைகளை அன்பு செலுத்தும் சமுகம், கடவுளை வழிபாடாமல் செல்வத்தையும் செழிப்பையும் வழிபடும் சமூகம். கடவுளோடு உறவு கொண்டிராமல் தீமைகளோடு உறவு கொண்டு கடவுளுக்கும் அவரது வார்த்தைக்கும் எதிராக செயல்படும் சமுகம். இச்சூழலில் கடவுளின் உடன்படிக்கையின் மக்களாய் வாழ அழைக்கப்பட்டுள்ள நம்மோடு கடவுள் தமது உடன்படிக்கையினைப் புதுப்பித்து, அவரோடுள்ள ஒப்படைப்பு நிறைந்த கூட்டாண்மையில் உறுதியாய் நிலைத்து வாழ நமக்கு அழைப்புத் தருகிறார்.

இணைச்சட்டம் 10: 12-22 வரையுள்ள பகுதியில் கடவுளின் உடன்படிக்கையின் மக்களாம் இஸ்ரயேலர் எகிப்தின் அடிமைத்தனத்தை விடுதலை பெற்று தங்களது சொந்த நாடாம் வாக்களிக்கப்பட்ட கானான் நாட்டில் நுழைவதற்கு முன் மோசே அவர்களிடம் (Farewell Speach), வாக்களிக்கப்பட்ட நாட்டில் சேர்ந்து வாழும்போது, கடவுளோடுள்ள அவர்களது உறவில் அவர்தம் உடன்படிக்கை கடமை என்ன என்பதை தெளிவுப்படுத்துகிறார். (covenont obligation to God). இப்புதிய ஆண்டில் அவரது உடன்படிக்கையின் மக்களாம் நம்மிடமும் இத்தகைய உடன்படிக்கை கடமையினை முழுமையாக எதிர்பார்க்கிறார். ஆகவே, இவ்வாண்டில் கடவுளோடு உடன்படிக்கை செய்து, அவரோடு ஒப்படைப்புள்ள கூட்டாணமைக்காக நம்மில் கடவுள் எதிர்பார்க்கும் மூன்று முக்கிய பங்களிப்பினை சிந்திப்பது சிறந்தது.

1. ஆண்டவருக்குப் பயப்பட ஒப்படைப்பு (Committed to Fear God)

கடவுளுக்கு பயப்படுதல் அல்லது அஞ்சுதல் என்பது கடவுளுக்குரிய மதிப்பையும் மரியாதையினையும் (Reverence and Respect) கொடுத்தலாகும். வாக்களிக்கப்பட்ட நாட்டில் வாழும் இஸ்ரயேலர், தங்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டு வந்து, உடன்படிக்கையின் மக்களாய் ஏற்றுக்கொண்டு, வாழச் செய்யும் கடவுளுக்கு கீழ்ப்படிந்து (Obedience), உண்மையுள்ளவர்களாக (loyalty) வாழ்வதே கடவுளுக்கு பயப்படுதலாகும். கடவுள் தமது சாயலில் படைக்கப்பட்ட நம்மிடம் அன்பு செலுத்துவதால், நாம் அவருக்கு பயப்படவேண்டிய முக்கியத்துவத்தினை இங்கு உணர்ந்திட முடிகின்றது (Importance of fearing and loving God). இந்த பயப்படுதலில் கடவுளை நமது முழு ஆன்மாவோடும் முழு உள்ளத்தோடும் அன்பு செய்தலும் (இச. 10: 12). கடவுளின் கட்டளைகளையும் நியமங்களையும் கைக்கொள்ளுதலும் (இச. 10: 13), கடவுளுக்கும் அவரது வார்த்தைகளுக்கும் எதிரான செயல்பாடுகளை விட்டுவிடுதலும் (Rebellian against God and his word) (இச. 10: 16) அடங்கும்.

கடவுள் நம்மில் எதிர்பார்க்கும் இந்தத் தெய்வீகமானச் செயலைச் செயல்படுத்திட திருமறை திரளான எடுத்துக்காட்டுகளையும், நிகழ்வுகளையும் நமக்கு சுட்டிக் காட்டுகிறது. கடவுளுக்கு அஞ்சி நடக்கும் ஒரு சமூகம் உருவாக நமது பங்களிப்பினை அர்ப்பணத்தோடு செய்யும்போது அதன் நன்மைகளை நமது வாழ்வு முழுவதும் உணரமுடியும்.

ஞானத்தில் சிறந்த சாலமோன், தமது சபை உரையாளர் (பிரசங்கி) 12: 13-இல் "இவையனைத்திற்கும் முடிவுரையாக ஒன்று கூறுகிறேன்; கடவுளுக்கு அஞ்சி நட; அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படி" எனக் கூறுகிறார். கடவுளுக்கு அஞ்சி வாழ்வதென்பதை நாம் அவர் மீது கொண்ட அன்பினால்தான் செயல்படுத்த இயலும். இயேசுகிறிஸ்து தாம் வாழ்ந்த நாட்களில் கடவுளின் வார்த்தையினை முழுமைபடுத்த அர்ப்பணிப்போடு செயல்பட்டார். யோவா. 15: 10-இல் நான் என் தந்தையின் கட்டளைகளைக் கடைப்பிடித்து அவரது அன்பில் நிலைத்திருப்பதுபோல நீங்களும் என் கட்டளைகளைக் கடைப்பிடித்தால் என் அன்பில் நிலைத்திருப்பீர்கள் என்று கூறுகிறார்.

கடவுளுக்கு அஞ்சுதல் என்பது கட்டாயத்தினால் அல்ல; அது தாமாக நம்மில் ஏற்படவேண்டும். கடவுளிடம் உள்ள அன்பு பிறரன்பிலும் வெளிப்படுதல் தேவை, எப்போதும் உண்மை பேசுவதும், ஒளிவு மறைவு இல்லாதிருத்தலும் பிறரது இன்னல்களில் பங்குபெறும் கரிசனையுள்ள வாழ்வு வாழ்வதும் நமது வாழ்வின் அனுபவமாக மாறும்போது நமது வாழ்வு ஆண்டவருக்கு பயப்படும் ஒப்படைப்புள்ள வாழ்வாக அமையும். இப்புதிய ஆண்டில் இத்தகைய ஒப்படைப்புள்ள வாழ்வு வாழ நம்மை அர்ப்பணிப்போம்.

2. ஆண்டவரைப் பற்றிக்கொள்ள ஒப்படைப்பு (Committed to Trust God)

"கடவுள் நம்மை ஒழுக்கக் கேட்டிற்கு அல்ல; தூய வாழ்வுக்கே அழைத்தார்" (1 தெச. 4: 7).

கடவுள், அனைத்து மக்களினங்களிலும் எண்ணிக்கையில் மிகவும்

குறைவான இருந்த இஸ்ரயேலரை, அவரது உடன்படிக்கையின் மக்களாக தெரிந்து கொண்டு, அவரை பற்றிக்கொண்டு வாழ அழைத்தார். அதோடு அவர்கள் கடவுளைப் பற்றி வாழும் வாழ்வில் அவரது அன்பையும் கரிசனையினையும் உணர்ந்து, கடவுள் அவர்களை எப்படி சிறந்த மக்களாக தெரிந்து கொண்டார் என்பதை அறிந்து செயல்படவும், ஆண்டவரை உறுதியாய் பற்றி வாழவும் எதிர்பார்க்கப்பட்டனர். ஆண்டவரைப் பற்றி வாழ்வதென்பது, ஆண்டவருக்கு அஞ்சுவதாலும், அவரிடத்தில் அன்பு செலுத்துவதாலும் அவருக்கு கீழ்படிவதாலும் கிடைக்சின்ற அவரோடுள்ள தனிப்பட்ட, ஆழமான, நெருக்கமான உறவாகும். இத்தகைய ஆண்டவரோடுள்ள உறவு நெருக்கமான அமைந்திட தூய வாழ்வு வாழ வேண்டியது மிகவும் இன்றியமையாதது.

கடவுள் மீது பற்றுடைய நம்மிடம் அவர் எதிர்ப்பார்ப்பது எப்போதுமே தூய வாழ்வு வாழ்வதாகும். கடவுளைப் புரிந்து அவரைப் பற்றி வாழும் நமது வாழ்வில், நமது செயல்கள் அனைத்தும் தூயவைகளாய் இருக்க வேண்டும். எங்கெல்லாம் தூய்மை, உண்மை, நேர்மை, நீதி, அமைதி மற்றும் ஒழுக்கம் உள்ளதோ அங்கே கடவுள் இருக்கின்றார். கடவுள் மோசேயிடம் தூய்மை, நீதி குறித்த சட்டங்களை குறித்து குறிப்பிடும்போது, "நீ இஸ்ரயேல் மக்களிடம் கூற வேண்டியது; தூயோராய் இருங்கள். ஏனெனில், உங்கள் கடவுளும் ஆண்டவருமாகிய நான் தூயவர்". ஆண்டவர் தாம் வாழ்ந்த நாட்களில் கூறியது, "தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர்; ஏனெனில், அவர்கள் கடவுளைக் காண்பர்" (மத். 5: 8). எனவே, இப்புதிய ஆண்டில், மானிடரிடம் கடவுள் எதிர்பார்ப்பது யாதெனில் தூயவராய் இருந்து அவரை பற்றிக்கொள்ள வேண்டும் என்பதாகும். இயேசு கிறிஸ்து தனது பாடு, சிலுவை மரணம் போன்றவற்றால் மனுக்குலத்தைத் தூய்மை பெறச் செய்து, உடலாலும் உள்ளத்தாலும் செய்த குற்றங்களை, பழிச் சொற்களை அகற்றி, ஆண்டவரின் பிள்ளைகளாய் அவரைப் பின்பற்ற நமக்கு அருள் செய்துள்ளார். இதனை பவுலடியார் எபே. 2: 8, 9-இல் "நீங்கள் அந்த அருளாலே நம்பிக்கையின் வழியாக மீட்கப்பட்டிருக்கின்றீர்கள். இது உங்கள் செயல் அல்ல; மாறாக இது கடவுளின் கொடை. இது மனிதச் செயல்களால் ஆனது அல்ல; எனவே, எவரும் பெருமை பாராட்ட இயலாது" என்கிறார். எனவே, இவ்வருட அனுதின பயணத்தில் ஆண்டவருக்கு நமது நல்ல பங்களிப்பினைத் தரும் நிலையில், அவருக்கு உகந்த செயல்களைச் செய்து அவரைப் பற்றிக் கொண்டு, அச்சத்தோடு, அவருக்குப் பணி செய்து, அனுதின வாழ்வில் அவரைப் பற்றி பிடித்து நம்பிக்கையில் உறுதியுடன் முன்னேறி செல்லவேண்டும்.

3. ஆண்டவருக்குப் பணி செய்ய ஒப்படைப்பு (Committed to Serve God)

"ஏனெனில் மானிட மகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல; மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கும், பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்" என்று கூறினார் (மாற்கு 10: 45).

கடவுளோடுள்ள ஒப்படைப்புள்ள கூட்டாண்மைக்கு ஒப்படைப்புள்ள பணிவிடையினை நிறைவேற்றிட நாம் அழைக்கப்பட்டுள்ளோம். கடவுளுக்கு அஞ்சி வாழ்கின்ற மக்கள் அவருக்கு பணிவிடைபுரிய வேண்டுமென்பது கடவளது எதிர்பார்ப்பு (இ.ச. 10: 20). இயேசுவின் சீடராகிய யாக்கோபும்

யோவானும் பணிவிடை செய்யாமல் அவரது ஆளுகையில் அரியணையின் இரு பக்கங்களிலும் அமர ஆண்டவரிடம் அருள்புரிய கேட்டனர் (மாற். 10; 37). அதாவது, தங்களது விருப்பமும் வேண்டுதலுமாகிய அரியணையில் அமர்ந்து ஆளுகை செய்யும் பங்கினை மற்ற சீடர்களுக்கு கொடாமல் தங்களுக்கு மட்டுமே தரப்பட வேண்டுமென விரும்பிக் கேட்டனர். ஆனால் ஆண்டவர் அவர்களிடம் அவர்களது விருப்பத்தை நிறைவேற்றுவது அவரது செயலல்ல, மாறாக அவ்விடங்கள் யாருக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதோ, அவர்களுக்கு அருளப்படும் என்றார் (மாற்கு 10: 40). அதோடு அவர்களிடம் புற இனத்தவர் தலைவர்கள் எனக் கருதப்படுகின்றவர்கள் மக்களை அடங்கி ஆளுகிறார்கள். அவர்களுள் பெரியவர்கள் அவர்கள் மீது தங்களது அதிகாரத்தைக் காட்டுகிறார்கள். ஆனால் நீங்கள் (சீடர்கள்) பெரியவராக இருக்க விரும்பினால் தொண்டராகவும், முதன்மையானவராக இருக்க விரும்பினால் பணியாளராக இருக்க வேண்டுமெனக் கூறி (மாற். 10: 43, 44), தனது பணிவிடைத் தன்மையான பணிவிடை பெற அல்ல பணியாற்றவும், பலருடைய மீட்புக்காகத் தம் உயிரையும் கொடுப்பதற்கு வந்தேன் என்றார் (மாற். 10: 45). புத்தாண்டின் நமது புனிதப் பயணம் நமக்கு மற்றவர்கள் பணிச் செய்திடும் பயணமாக அமையாமல், நாம் மற்றவர்களுக்கு நற்பணி செய்திடும் நல்ல பயணமாக அமைதல் வேண்டும்.

கடவுளின் கருணையினால் நாம் அனைவரும் மற்றவர்களுக்கு பணிச் செய்ய அவர் நம்மை பணித்திருக்கின்றார். என்பதை உணர்ந்து செயல்படும்போது இறையாளுகை இம்மண்ணில் ஏற்படும். இயேசு கிறிஸ்துவின் பணிவிடைத் தகவினை அடிப்படை நோக்கமாக கொண்டு நமது நாட்டில் வேலூரில் C.M.C. மருத்துவமனைச் செயல்பட்டு வருகிறது. 1900-இல் இதனை ஆரம்பித்தபோது டாக்டர். ஐடா ஸ்கடர் அம்மையார் கூறியது; “நாங்கள் மருத்துவ படிப்புக்கானப் பள்ளியினைக் கட்டவில்லை, மாறாக கடவுளின் ஆளுகைக்கானக் காரியங்களைக் கட்டுகின்றோம்” என்று கூறினார்கள்.

அர்ப்பணிப்போடு மேலைநாட்டு அருட்பணியாளர்கள், நம்நாட்டு அருட்பணியாளர்கள் நம் மண்ணில் தங்கள் பங்களிப்பினை அளித்தபடியால் நாம் தொடர் சேவைகளைப் பல்வேறு நிலையில் செய்கின்றோம். கடவுளுக்கு நாம் செய்யும் பணி எந்தவித பலனையும் எதிர்பார்த்து அல்ல; அவரோடு இணைந்து பணி செய்ய வாய்ப்பினைத் தந்தார் என்ற நிலையில் செய்ய வேண்டியதாகும்.

கடவுள் அவரது ஆசியால் நமக்கு தந்துள்ள இப்புத்தாண்டில் அவருக்கு பயந்து, அவரைப் பற்றிப் பிடித்து, அவரது சிலுவைப் பாதையில் அவரைப் பின் தொடரந்;து, இறையாளுகையின் பணியினை மேற்கொள்ள நம்மை ஒப்படைத்து செயல்படுவோம்.

இறையருள் நம்மில் என்றும் தங்கியிருப்பதாக.

அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

இறைப்பணியில்

பேரருள்திரு. அறிவர் *A.R.* செல்லையா

பேராயர், கன்னியாகுமரிப் பேராயம்

பாதுகாக்கும் ஆண்டவர்

தி.பா. 91

"நீர் செல்லும் இடமெல்லாம் உம்மைக் காக்கும்படி, தம் தூதர்க்கு அவர் கட்டளையிடுவார்" (தி.பா. 91: 11).

நாம் வாழும் இன்றைய சூழலில் கடவுளின் பாதுகாப்பு நமக்கு மிக மிக அவசியமான ஒன்று. ஏனென்றால், இவ்வுலகம் ஆபத்து நிறைந்ததாக இருக்கிறது. குருவி அமர பனம்பழம் விழுவதைப்போல் எப்போது, எங்கு, யாருக்கு, என்ன நடைபெறும் என்று இறைவனைத் தவிர யாரும் அறியார். அந்த அளவிற்கு அழிவுகளும், மோசங்களும், விபத்துக்களும், அநீதிகளும் தொடர்ச்சியாக அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட நெருக்கடியான, இக்கட்டான சூழ்நிலையில் இருக்கும் நம் ஒவ்வொருவரையும் கடவுள்தான் அனுதினமும் பாதுகாத்து வருகின்றார். கடவுளின் பாதுகாப்பு ஒவ்வொரு நாளும் நமக்கிராவிட்டால் நம் நிலை கேள்விக்குறியே. ஆம், கடவுள் கண்ணயராமல் நம்மைப் பாதுகாக்கிறார். தி.பா. 121:4: இதோ இஸ்ரயேலைக் காக்கின்றவர் கண்ணயர்வதுமில்லை, உறங்குவதும் இல்லை. ஆண்டவர் நம்மை எவ்விதம் பாதுகாக்கிறார் என்பதை திருப்பாடல் 91இன் வழி தியானிப்போம்.

1. நோயில் தாயாய் இருந்து பாதுகாக்கிறார்:

"கொன்றழிக்கும் கொள்ளை நோயினின்றும் தப்புவிப்பார்" (தி.பா.91:3)

அக்டோபர் மாதம் முதலாம் தேதி சர்வதேச முதியோர் தினமாக அனுசரிக்கப்படுகின்றது. முதுமை நோய்களின் குப்பைக் கூடை என ஹைக்கூ, கவிஞர் மு. மேத்தா குறிப்பிடுகின்றார். ஆம், அப்படிப்பட்ட முதுமைக் காலங்களில் கடவுள் நமக்குத் தாயாய் நம்முடன் இருந்து பாதுகாக்கின்றார். இன்றைய நாகரிக அறிவியல், பொருளாதார, கல்வி, மனித வாழ்க்கைத் தர வளர்ச்சி ஆகியவற்றோடு இணைந்து நோய்களும் வளர்ந்து வருகின்றள என்பது மறுக்க முடியாத மற்றும் மறைக்க முடியாத உண்மை. எண்ணற்ற விநோத நோய்களும் உச்சரிக்கவே திணறும் வித்தியாசமான நோய்களும் மனித குலத்தைப் பெரிதும் அச்சுறுத்துகின்றன. இவைகள் எல்லாம் உண்மை என பெருகிவரும் மருத்துவமனைகள் வெளிப்படுத்துகின்றன. தடுக்கி விழுந்த இடத்திலெல்லாம் ஆலயமும், பள்ளிக்கூடமும் நிரம்பியிருக்கும் நம் குமரி மண்ணிலே தற்போது தடுக்கி விழுந்தால் மருத்துவமனை என்ற அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். பெரிய கார்ப்ரேட் மருத்துவமனைகளும், நம்

மண் தேடி படையெடுக்கின்றன. இப்படிப்பட்ட சூழலில் கடவுள் நம் நோயில் தாயாய் இருந்து பாதுகாக்கிறார். ஏதேனும் சிறு காய்ச்சல் அறிகுறி உடலில் தென்பட்டவுடன் தாயானவர் மிகுந்த அக்கரையோடு செயல்படுவதுபோல் கடவுள் செயல்படுகிறார்.

உகண்டாவில் வாழும் 42 வயது பெண் மரியம், இவர்களுக்குத் தன் வயிற்றிலேயே பிறந்த குழந்தைகள் 44, ஒரே பிரசவத்தில் 2,3,4, குழந்தைகள் வரை பிறந்தார்கள். தற்போது 38 குழந்தைகள் இருக்கின்றனர். கணவன் விட்டு விட்டு சென்று விட்டார். தான் ஒருவரே வேலைசெய்து குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டும். ஒருநாள் மட்டும் உணவிற்காக 10 கிலோ மாவும், 4 கிலோ சர்க்கரையும் தேவை. ஆனாலும் அந்தத் தாய் தினக்கூலி வேலைக்குச் சென்று பிள்ளைகளைப் பட்டினிபோடாமல் வளர்த்து வருகின்றார். இந்நிகழ்வு தாயின் கருணையை நமக்குக் காட்டுகிறது. நம் கடவுள் தாயை விட மேன்மையாக நம்மைப் பாதுகாக்கின்றார்.

1. துன்பத்தில் துணையாய் நின்று பாதுகாக்கிறார்

"அவர்களது துன்பத்தில் அவர்களோடு இருப்பேன்" (தி.பா. 91: 15)

ஆண்டவர் துன்பத்தில் நம்மை தாங்கும் துணையாளர் நெருக்கடி நேரத்தில் நம்மை நெருங்கி வந்து உதவுபவர். நாம் தடுக்கி விழும்போது தயங்கி நிற்பவர் அல்ல, தீவிரமாய் வந்து உதவுபவர். இவ்வுலகில் பலவித துன்பங்களை நாம் சந்திக்கிறோம். மனிதர்கள் நம்மைத் துன்பப்படுத்துகின்றனர். இயற்கை அச்சுறுத்துகின்றது. இன்றைய வளர்ச்சிகளும் பல சிரமங்களை நமக்கு ஏற்படுத்துகின்றது. ஆனால் கடவுள் நமக்கு எப்போதும் துணையாக இருக்கிறார். துன்பத்தில் ஆறுதல் அவரே. துன்பவேளையில் அவர் துணைவேண்டும்போது துரிதமாய் வருவார், நம் அருகில் அமர்வார். (தி.பா. 50 : 15) துன்பத்தில் துவண்டுவிடாதபடி தூயவரின் துணைவேண்டுவோம்; துங்கன் துணை நிற்பார். ஆதரவற்றோருக்கு ஆதரவாய் இருப்பார். முதுமையின் துன்பங்களையும் தாண்டிச் செல்ல வழி செய்வார்.

3. குறைவில் நிறைவைத் தந்து பாதுகாக்கிறார்:

"நீடிய ஆயுளால் அவர்களுக்கு நிறைவளிப்பேன்..." (தி.பா. 91: 16).

ஆண்டவர் நிறைவானவர். நிறைவு வரும்போது அரைகுறையானது ஒழிந்துபோம் (1கொரி. 13: 10) நிறைவான ஆண்டவர் நம் வாழ்க்கையில் வரும்போது, செயல்படும்போது குறைவு இல்லை. குறைவு நேரத்தில் சம்பூரணராகிய ஆண்டவரிடம் கேட்கும்போது அவர் நிறைவளிப்பார். திருப்பாடல் 91-இன்படி. ஆண்டவர் அருளும் நிறைவு என்பது, நீடிய ஆயுள். ஆம், நம் இல்லத்தின், திருச்சபையின் மூத்த பெற்றோருக்கு கடவுள் நிறைவான நீண்ட ஆயுளை அளிப்பார். அவர்கள் நிறைவின்மையில்

குறைவின்மையைக் காணார்கள், குறைவில் நிறைவைக் காண்பார்கள். நீர் உம் பிள்ளைகளின் பிள்ளைகளை காண்பீராக ! இஸ்ராயேலுக்கு நலம் உண்டாவதாக என்ற தி.பா. 128: 6-இன்படி, நிறைவான நன்மையை, நீண்ட ஆயுளை ஆண்டவர் நம் அனைவருக்கும் அருளி ஆசீர்வதிப்பாராக!

தீமைகளும் அநீதிகளும் பெருகிவரும் இவ்வுலகில், துன்பங்களிலிருந்தும், நோயிலிருந்தும், குறைவான அனுபவங்களிலிருந்தும் நம்மைப் பாதுகாக்கக் கடவுளின் பாதுகாப்பு மிகமிக அவசியமானமாகும். நாம் அவரோடிருந்தால், அவர் நம்மோடிருப்பார்.

நம்மோடிருக்கின்ற ஆண்டவர். . .

1) நோயில் தாயாகிறார்;

2) துன்பத்தில் துணையாகிறார்.

3) குறைவில் நிறைவாகிறார்.

நம்மைப் பாரதுகாக்கிறார். ஆமென்.

திரு. J. ஜாண் பிரவின்

திருப்பணிவிடையாளர், மந்தாரம்புதூர்

ப	ஞா. 20	கீர். 300

பற்றுறுதியில் சான்றாகும் ஆண்கள்

Men who prove Themselves in Faith

தொ.நூ. 12: 1-8 தி.ப. 16: 16-32

தி.பா. 112 மத். 8: 5-13

"...உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்; இஸ்ரயேலர் யாரிடமும் இத்தகைய நம்பிக்கையை நான் கண்டதில்லை" (மத். 8: 10).

பற்றுறுதி என்பதைப் பற்று + உறுதி எனப் பிரித்துப் பொருள் கொண்டால் உறுதியான பற்று என்று புரிந்து கொள்ளலாம். இதனை ஆழமாக வேரூன்றி வளரும் அனுபவம் என்றால் சாலப் பொருந்தும். ஆழமாக வேரூன்றி நிற்கும் மரமே உறுதியான மரமாக நிற்க முடியும். அவ்வாறே கிறிஸ்தவப் பற்றுறுதியாளர்கள் எவ்வளவு உறுதியான பற்று கொண்டுள்ளனரோ அதற்கு ஏற்றாற்போல் வாழ்வு பொருளுள்ளதாக அமையும். பற்றுறுதி என்பதற்கு இணையான இன்னொரு சொல் நம்பிக்கை என்பதாகும். நம்பிக்கை என்றால் என்ன? என்ற கேள்விக்கு எபிரேயர் திருமுக ஆசிரியர் சிறந்த ஒரு பதிலைத் தருகிறார். "நம்பிக்கை என்பது நாம் எதிர்நோக்கி இருப்பவை கிடைக்கும் என்னும் உறுதி; கண்ணுக்குப் புலப்படாதவை பற்றிய ஐயமற்ற நிலை" என்கிறார் (எபி. 11: 1). இந்த நம்பிக்கையால்தான் நம் மூதாதையர் நற்சான்று பெற்றனர் என்று குறிப்பிடுகிறார் (எபி. 11: 2). எனவே, இந்த நம்பிக்கையின் மேன்மையை நன்குணர்ந்த சீடர்கள், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடம், "எங்கள் நம்பிக்கையை மிகுதியாக்கும்" என்று கேட்டனர் (லூக். 17: 5). இந்த ஆண்கள் ஞாயிற்றுக்கிழமையில் பற்றுறுதிப் பாதையில் பொருளுள்ள வாழ்வு வாழ்ந்தவர்களின் வாழ்வின் சிறப்புகளைத் தரப்பட்டுள்ள திருமறைப் பகுதிகளின் அடிப்படையில் ஈண்டு தியானிப்போம்.

1. பற்றுறுதிப் பாதையில் பயணித்தவர் :

ஒரு சாதாரண மனிதராக இருந்த ஆபிரகாம், கடவுளுடைய அழைப்பைப் பெற்றார். ...உன் நாட்டிலிருந்தும், உன் இனத்தவரிடமிருந்தும் ...உன்னை நான் பெரிய இனமாக்குவேன்... (தொ.நூ. 12: 1, 2). ஆபிரகாம் இவ்வழைப்பிற்கும், கடவுளுடைய வாக்குறுதிக்கும் எந்த மறுப்பும் சொல்லாமல் ஒரு சிறந்த பற்றுறுதியாளராகப் புறப்பட்டுச் செல்கிறார். அவர் கானானில் இருக்கும்போது மீண்டும் கடவுள், "உன் வழிமரபினர்க்கு இந்நாட்டைக் கொடுப்பேன்" எனக் கூறினார் (தொ.நூ. 12: 7). இதுவரை குழந்தையில்லாதிருந்த ஆபிரகாம், இது எப்படி ஆகும்? என்று சிந்திக்கவோ, மறுக்கவோ இல்லை. எபிரேயர் திருமுக ஆசிரியர் கூறுவதுபோல, கண்ணுக்குப்

புலப்படாததைக் குறித்த ஐயமற்ற நிலையுடன் பற்றுறுதிப் பாதையில் பயணிக்கிறார். ஏறத்தாழ தொண்ணூற்றொன்பது வயது வரை இது நிகழாதபோதும் நம்பிக்கையில் தடுமாற்றம் இன்றியே வாழ்ந்தார். ஆபிரகாம் ஆண்டவரிடத்தில் உறுதியான நம்பிக்கைக் கொண்டு வாழ்ந்தார்; அதை ஆண்டவர் அவருக்கு நீதியாகக் கருதினார் (தொ.நூ. 15: 6; உரோ. 4: 9). எனவே, குறித்த காலத்தில், (மனிதர் பார்வையில் ஏற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலையில் சாராவின் சிரிப்பு (தொ.நூ. 18: 12) ஆபிரகாமுக்கு ஈசாக்கு பிறந்தார். மேலும், ஈசாக்கைப் பலியிடக் கேட்கப்பட்டபோது, நம்பிக்கையுடன் பயணிப்பது மானுட வாழ்விற்கு அறைகூவலே. தம்முடன் வந்த பணியாளர்களிடம், நானும் பையனும் அவ்விடம் சென்று வழிபாடு செய்தபின் உங்களிடம் திரும்பி வருவோம் (தொ.நூ. 22: 5). அத்துடன், எரிபலிக்கான ஆட்டுக்குட்டியைக் கடவுளே பார்த்துக்கொள்வார் (தொ.நூ. 22: 8) என ஈசாக்கிடம் பதிலுரைப்பதும், கடவுள் பேரில் அவர் கொண்டுள்ள ஆழ்ந்த நம்பிக்கையின் வெளிப்பாடுகளேயாகும்.

இறையடியாரான யோபு, அவர் என்னைக் கொன்று போட்டாலும் அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன் என்று சூளுரைக்கிறார் (யோபு 13: 15). தூய பவுலாரும் பற்றுறுதி வாழ்வில் உறுதியாயிருந்து இவ்வுலகில் நான் எதிர்கொள்ளும் எந்த எதிரிடையான அனுபவங்களும் கிறிஸ்துவின் அன்பிலிருந்து என்னைப் பிரித்துவிட முடியாது என்று உறுதியாய் கூறுகிறார் (உரோ. 8: 35). சாத்ராக்கு, மேசாக்கு, ஆபேத்நெகோ என்னும் இளைஞர்கள் பாபிலோனில் நாட்டப்பட்ட பொற்சிலையைப் பணியாமல், நாங்கள் வழிபடும் எங்கள் கடவுள் எங்களை மீட்க ஆற்றல் நிறைந்தவர் என்ற நம்பிக்கையில் உறுதியுடன் பயணித்து வெற்றிபெற்றனர் (தானி. 3: 16-30). இவ்வுலக வாழ்வில் நாமும் பற்றுறுதிப் பாதையில் பயணித்து முன்னேறுவோம்.

2. பற்றுறுதியின் செயல் வீரர்கள் :

பிலிப்பி நகரில் தூய பவுலார் தீய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டிருந்த ஒரு பெண்மணியை விடுவித்தார். இதனால், இப்பெண்மணியை அடிமையாய் வைத்து வருமானம் ஈட்டிவந்தவர்கள், தங்கள் வருவாய்க்கான வாய்ப்புகளெல்லாம் போய்விட்டதே என்று எண்ணிப் பவுலாரையும், சீலாவையும் கொடுமையாகத் தாக்கிச் சிறையிலடைத்தனர். பற்றுறுதி வீரர்களாகிய இவர்கள் நடு இரவில் கடவுளைப் புகழ்ந்து பாடினர். இதனால் இவர்கள் கட்டுகள் கழன்றதுடன், சிறையின் கதவுகளும் திறவுண்டன. சிறைக்காவலர் விழித்தெழுந்து, சிறையின் கதவுகள் திறந்துகிடப்பதைக் கண்டு, கைதிகள் தப்பியோடியிருப்பர் என எண்ணி, தம்மைத்தாமே கொலை செய்துகொள்ள முயன்றனர். ஆனால், பவுலாரோ “நீர் உமக்குத் தீங்கு ஏதும் செய்ய வேண்டாம், நாங்கள் அனைவரும் இங்கேயே இருக்கிறோம்” என்கிறார் (தி.ப. 16: 28). அசாதாரண வழியில் தப்பித்துச் செல்வது பற்றுறுதி வாழ்வல்ல என்பதை நன்குணர்ந்த இந்தப் பற்றுறுதி செயல் வீரர்கள் அங்கேயே இருந்தது

சிறைக்காவலருக்கு ஆழ்ந்த வியப்பாயிருந்தது. எனவே, அவர்கள் கால்களில் விழுந்து, "மீட்படைய நான் என்ன செய்ய வேண்டும்?" எனக் கேட்கிறார். தொடர் போதனையின் விளைவாக அவ்விரவிலே சிறைக்காவலரும் அவருடைய இல்லத்தாரும் திருமுழுக்குப் பெற்றனர் (தி.ப. 16: 33). அசாதாரண வழியில் நிகழ்வுகள் நடைபெறுவதும், அதன் பலனை நாம் அனுபவிப்பதும், அசாதாரண வழியில் அனைத்தும் நடைபெற வேண்டும் என எண்ணுவதும் உண்மையான பற்றுறுதி வாழ்வல்ல என்பது நோக்கற்குரியது. இயேசு கிறிஸ்துவின் சிலுவைப்பாடுகளைப் பதிவு செய்யும் மாற்கு நற்செய்தி நூல் ஆசிரியர், இயேசு சிலுவையிலிருந்து மொழிந்த ஒரே ஒரு வாசகத்தை மட்டுமே குறிப்பிடுகிறார். அதாவது, "என் இறைவா, என் இறைவா ஏன் என்னைக் கைவிட்டீர்" (மாற். 15:34). இவ்வார்த்தையைக் கேட்டுக்கொண்டிருந்த நூற்றுவர் தலைவர் "இம்மனிதர் உண்மையாகவே இறைமகன்" என்று சான்றுரைத்தார் (மாற். 15: 39).

எபிரேயர் திருமுக ஆசிரியர் கூறும் பற்றுறுதியாளர்கள் பட்டியலில் உலக வாழ்வில் மனிதர் பார்வையில் வெற்றியடைந்தோருடைய பெயர் பட்டியலைத் தருகிறார். ஆனால், "உயிர்த்தெழுந்து சிறப்புறும் பொருட்டு, சிலர் விடுதலை பெற மறுத்து, வதையுண்டு மடிந்தனர்" என்று கூறித் துன்பங்களைப் பட்டியலிடுகிறார் (எபி. 11: 35-40). இவர்கள் எண்ணிக்கைக்கு அடங்காதவர்கள். இவர்கள் தோற்றுப்போனவர்கள் அல்லர். இவர்களே பற்றுறுதியின் செயல் வீரர்கள். உண்மையான பற்றுறுதி வாழ்வு என்பது அசாதாரண வழியில் தப்பித்துச் செல்வதல்ல. மாறாக, அவற்றில் உறுதியாய் நிலைத்து நின்று வாழ்வதே என்பதை உணர்ந்து கொள்வோமாக.

3. பற்றுறுதியில் சிறப்பு பெற்றவர் :

தமது பையனின் உடல் நலத்திற்காக இயேசுவிடம் வந்து மன்றாடிய நூற்றுவர்தலைவரிடம், "நான் வந்து அவனை சுகமாக்குவேன்" என்று இயேசு கூறினார். ஆனால், நூற்றுவர் தலைவரோ, தாம் உயர்ந்த அதிகாரம் உடையவராக இருந்தாலும், ஆண்டவர் இயேசு கிறிஸ்து தமது இல்லத்தில் வந்து கால் பதிப்பதற்கான எந்த தகுதியும் தம்மிடம் இல்லை எனவும், ஒரு வார்த்தை சொன்னால் போதும் தமது பையன் பிழைப்பான் எனவும் முழுமையான நம்பிக்கையுடன் ஆண்டவரிடம் மன்றாடி நின்றார். அவரது தாழ்மையும், ஆழ்ந்த பற்றுறுதியும் இயேசு கிறிஸ்துவையே வியப்படையச் செய்தது, இவரிடத்தில் வெளிப்பட்ட தாழ்மையே, இயேசு கூறும் "ஏழையரின் உள்ளத்தோர்" எனும் உயரிய பண்பு (மத். 5: 3). எனவே, அவரது தாழ்மையையும், உயரிய பற்றுறுதியையும் ஆண்டவர் இயேசு கிறிஸ்து மெச்சுகிறார். "இஸ்ரயேலர் யாரிடமும் இத்தகைய நம்பிக்கையை நான் கண்டதில்லை" என்கிறார் நமது ஆண்டவர் (மத். 8: 10). மேலும், பற்றுறுதி வாழ்வில் உறுதியாயிராமல் நாங்கள்தான் அரசுக்குரியவர்கள் என மார்தட்டிக் கொண்டிருப்போர் புறம்பாக உள்ள இருளில் தள்ளப்படுவர் எனவும்,

பற்றுறுதியில் உறுதியாய் நிற்கும் பலர் கிழக்கிலும், மேற்கிலுமிருந்து வந்து விண்ணரசின் பந்தியில் அமர்வர் எனவும் கூறுகிறார் (மத். 8: 11). இவ்வாறே கானானியப் பெண்மணி ஒருவர் தமது மகள் சுகமடைய முழு நம்பிக்கையுடன் ஆண்டவர் இயேசுவிடம் வந்து, தம்மை நாயிலும் இழிந்தவராகத் தாழ்த்தி மன்றாடி வாழ்வு பெற்றார் (மத். 15: 1-28). இப்பெண்மணியின் நம்பிக்கையை மதிப்பீடு செய்யும் ஆண்டவர் இயேசு, அவரது "நம்பிக்கை பெரிது" (மத். 15: 28) என்கிறார். முழு நம்பிக்கையுடன் ஆண்டவரின் ஆடையைத் தொட்டு நலம் பெற்ற பெண்மணியின் நம்பிக்கையை ஆண்டவர் புகழுகிறார் (மத். 9: 22). அதேவேளை கடல் பயணத்தின் போது காற்றைக் கண்டு மரண ஓலமிட்டுக் கதறிய சீடர்களை, "நம்பிக்கை குன்றியவர்களே" என சாடியதையும் காண முடிகிறது (மத். 8: 26). மேலும், அன்றாட தேவைகளுக்காக கவலை கொண்டிருந்தோருக்கு கவலையைக் களைந்து நம்பிக்கையுடன் நடந்து முன்னேறுங்கள் என்று அறைகூவல் விடுத்தார் (மத். 6: 5-34).

கிறிஸ்தவ வாழ்வின் அடித்தளமான பற்றுறுதியில் நாமும் உறுதியாயிருந்து, பற்றுறுதி வாழ்விற்குச் சான்றாயிருந்த அடியார்கள்போல ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அடியொற்றி முன்னேறுவோமாக, ஆமென்.

ஞா. 12	கீர். 405	

அருள்திரு. A. பிரைட் சாலோமன்
ஆயர், தோட்டவாரம்

அனைத்து இறைமக்களின் குருத்துவம்

Priesthood of All Believers

ஏசா. 61: 1-11 1 பேது. 2: 1-10

தி.பா. 135: 12-21 யோவா. 17: 1-8

ஆனால், "நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமரபினர். அரச குருக்களின் கூட்டத்தினர். தூய மக்களினத்தார், அவரது உரிமைச் சொத்தான மக்கள். எனவே, உங்களை இருளினின்று தமது வியத்தகு ஒளிக்கு அழைத்துள்ளவரின் மேன்மைமிக்க செயல்களை அறிவிப்பது உங்கள் பணி" (1பேது. 2: 9).

இஸ்ரவேல் மக்களில் ஆரோனும், அவன் குடும்பமும் குருத்துவப் பணிக்காகப் பிரித்தெடுக்கப்பட்டனர் (வி.ப. 28: 1). ஆரோன் குடும்பத்தார் குருத்துவப் பணியை நல்ல முறையில் நிறைவேற்றி, மக்கள் இறைவனோடு உறவுகொள்ள தொடர்பாளர்களாகவும், சமயம் சார்ந்த நிகழ்வுகளை நிறைவேற்றுகிறவர்களாயும் செயல்பட்டனர். எபிரேய நிருபத்தில் இயேசுவே தலைமைக்குரு என்ற செய்தி விளக்கப்படுகிறது (எபி. 2: 17, 3: 1, 4: 14, 15). தொடக்கக்காலத் திருச்சபையில் தனிநபர் மரபில் இருந்து குருத்துவம் மாற்றப்பட்டு கிறிஸ்துவை தலைமைக் குருவாக ஏற்றுக்கொண்ட அனைவரும் குருத்துவப்பணிக்கு தகுதி படைத்தவர்கள் என்ற நிலை வருகிறது. இதை திருத்தூதுவராகிய பேதுரு தன்னுடைய முதல் கடிதத்தில் விளக்குகிறார் (1 பேதுரு 2: 9). குருத்துவப்பணி தனிநபர் மரபிலிருந்து அனைவருக்கும் பரவலாக்கப்பட்டதை தியானிப்போம்.

1. குருத்துவம்: விடுதலைப் பணிச் செய்ய அழைப்பு : (ஏசா. 61: 1)

இஸ்ரவேலர் ஒவ்வொரு ஐம்பதாவது ஆண்டையும் யூபிலி ஆண்டாகக் கொண்டாடினார்கள். இந்த ஆண்டிலே மக்கள் முந்திய ஆண்டுகளில் வாங்கிய கடன்கள் மன்னிக்கப்பட்டன. அடிமைகள் விடுதலை அடைந்தார்கள் (லேவி. 5). அதே போன்று இயேசுவின் வருகையிலேயே அந்த அருள்தரும் ஆண்டு தொடங்கிவிட்டது (லூக். 4: 19). அருள்தரும் ஆண்டில் ஏழைகளுக்கு நற்செய்தி, சிறைப்பட்டோருக்கு விடுதலை, பார்வைற்றோர் பார்வை பெறுதல், ஒடுக்கப்பட்டோரை விடுதலைச் செய்தல் ஆகிய பணிகள் நடைபெறும்.

இயேசு ஒருவரே உண்மை விடுதலை அளிப்பவர். அவர் "என் வார்த்தைகளை நீங்கள் கடைபிடித்து வந்தால்... உண்மையை அறிந்தவர்களாக இருப்பீர்கள். உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்" (யோவா. 8: 31, 32) என்று இயேசு கூறினார்.

ஆண்டவரின் நற்செய்தி மூலமாகவே விடுதலை வாழ்வு உண்டு. அந்த நற்செய்திப் பணி செய்ய நாம் அனைவரும் குருக்களாக அழைக்கப்பட்டிருக்கிறோம் (ஏசா. 61: 6).

2. குருத்துவம்: தூய வாழ்வுக்கான அழைப்பு : (1 பேது. 2: 2)

எல்லா வகையான தீமையையும், வஞ்சகத்தையும், வெளிவேடம், பொறாமை, அவதூறு ஆகிய யாவற்றையும் அகற்றுங்கள்.

இறைமக்களாக அழைக்கப்பட்ட அனைவரும் குருக்கள் என்று திருத்தூதுவர் பேதுருவும் தன்னுடைய கடிதத்தில் குறிப்பிடுகிறார் (1 பேதுரு 2:9). அவர்கள் தூய மக்களினத்தினர் என்று கூறுகின்றார். திருத்தூதுவர் பவுல் சொல்லும்போது "நீங்கள் தூயோராவதே கடவுளுடைய திருவுளம்" (1 தெச. 4:3).

உங்களை அழைத்தவர் தூய்மையுள்ளவராய் இருப்பதுபோல் நீங்களும் உங்கள் நடத்தையிலெல்லாம் தூய்மையுள்ளவர்களாய் இருங்கள். "நீங்கள் தூயவராயிருங்கள்; ஏனெனில் நான் தூயவன்" (1 பேதுரு. 1: 15, 16).

தூய்மை இல்லாத நிலை வரும்போது மாம்சத்தின் கிரியைகள் வெளிப்படும். அது குருத்துவப் பணியை சரியாக செய்யவிடாமல் தடுக்கும் (கலா. 5: 19-21).

3. குருத்துவம்: இறை வார்த்தையை ஏற்று வாழ்தல் : (யோவான் 17: 8)

"நம் வார்த்தையை அவருடைய வாயில் வைப்போம். நாம் கற்பிப்பதை எல்லாம் அவர் அவர்களுக்குச் சொல்வார்" (இ.ச. 19: 18) என்று இறைவாக்கினர் பற்றி இறைவன் கூறியது இயேசுவுக்குப் பொருந்தும். "நீர் கடவுளிடமிருந்து வந்த போதகர்" (யோவா. 3: 2) என்று இயேசுவைப் பார்த்து நிக்கொதேமு கூறியது மிகவும் உண்மை. தாம் தந்தையிடமிருந்து பெற்றதைத் தம் சீடருக்கு கற்றுத் தருகிறார் இயேசு. தலைமை குருவான இயேசு சொன்ன வார்த்தைகளை நாம் ஏற்று மற்றவர்களுக்கு கற்றுக் கொடுக்க அழைக்கப்படுகின்றோம். "நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைபிடிக்கும்படி கற்பியுங்கள்" (மத். 28: 20).

இறைப்பணி என்பது வேறு ஒருவருடைய பொறுப்பு அல்ல. தூய பவுல் கூறுவதுபோல அது நம் ஒவ்வொருவர் மீதும் சுமத்தப்பட்ட கடமை. நாம் பெற்ற திருமுழுக்கு வழியாக அனைத்து இறைமக்களும் இறைப்பணி செய்ய அழைக்கப்படுகின்றோம். கிறிஸ்துவின் அழைப்பை ஏற்று "ஆம்" என்று பதிலளித்த ஒவ்வொருவரும் இறைப்பணி செய்ய அழைக்கப்படுகின்றோம், ஆமென்.

ப	ஞா. 15	கீர். 404

அருள்திரு. **S. ஜான் பிராங்கிளின் ராஜ்**
ஆயர், மத்தியாஸ்நகர்

இறைவேண்டல் அருள் நிறைந்த கடவுளே, இவ்வுலகில் உமது பணியை நிறைவேற்ற உமது மக்களை அழைத்ததற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். நியமிக்கப்பட்டவர்களின் தனித்துவமான ஊழியத்தை ஒப்புக்கொள்கையில், இறைமக்களின் ஆசாரியத்துவத்தை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம். உமது அரசை நாங்கள் அறிவிக்கவும், நோயுற்றவர்களைக் குணப்படுத்தவும், பலவீனமானவர்களை வலுப்படுத்தவும், உமது அழைப்பை நாங்கள் கண்டறியவும், உமது அருளையும் ஞானத்தையும் எங்களுக்கு தர உம்மிடம் மன்றாடுகிறோம். உம்மோடும் தூய ஆவியரோடும் இப்போதும் எப்போதும் வாழ்ந்து ஆட்சி செய்யும் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாயிலாக வேண்டுகிறோம், ஆமென்.

இயலாமை: பராமரித்தலும் மதிப்பளித்தலும்

Disability: Care and Honour

2 சாமு. 9: 1-13 தி.பா. 9: 32-35

தி.பா. 146 மாற். 3: 1-6

"தாவீது அவனிடம் . . . நீ எப்போதும் என்னுடன் உணவருந்துவாய்"

(2 சாமு. 9: 7).

இயலாதோர் அல்லது மாற்றுத்திறனுடையோர் என்பவர்கள் உலகளவில், மனதளவில் பாதிக்கப்பட்டவர்கள். அவர்கள் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குத் தனியாகப் பயணிக்க முடியாதவர்களாய்ப் படுக்கையில் படுத்திருப்பவர்களாய்கூட இருக்கலாம். ஒருசிலர் பிறப்பிலே இயலாதவர்களாய் இருக்கலாம். ஒருசிலர் பிறப்பிற்குப் பின் ஏற்பட்ட வியாதி, விபத்தினால் இயலாதவர்களாய் மாற்றப்பட்டவர்களாய் இருக்கலாம். இயலாமை உடையோரை சமூகமானது வீண்பழிகளை அவர்கள் மேல் சுமத்தி அவர்களை மனவேதனைகளுக்குள்ளாக்கிப் புறக்கணிக்கிறது. இயலாமை உடையோரின் சொத்துக்களைக் கொடுக்க விடாமல் சமூகமும், குடும்பத்தினரும் அவர்களைத் துன்பத்திற்குட்படுத்துகின்றனர். இயலாமை உடயவர்களை குடும்பத்தினரும், சமூகமும் அவர்கள் "பாவிகள்", "கடவுளின் சாபம்" பெற்றவர்கள் என்றெல்லாம் அடையாளப்படுத்துகின்றனர். சமூகம் அங்கீகாரம் இல்லாதோர்போல அவர்களை நடத்துகின்றனர். மாற்றுதிறன் படைத்த குழந்தைகளை சமூகம் கொலை செய்யவும் அஞ்சுவதில்லை. இயலாதவர்களை சமூகம் பெரும் "சுமைகளாக" கருதுகின்றனர். இயலாதவர்களும் சமூகத்தின் அங்கம். அவர்களுக்கும் குடும்பத்தில், சமூகத்தில், திருச்சபையில் எல்லா உரிமைகளும் உண்டு. அவர்களைப் பாதுகாக்க வேண்டியது மிக அவசியமான ஒன்று என்பதை திருச்சபையும் சமூகமும் புரிந்து கொள்ள வேண்டும்.

இயலாதோர் குறித்த கரிசனை நமக்கு வேண்டும் என்பதைத் திருமறை சார்ந்து தியானிப்போம்.

1. இயலாதோரின் விடுதலை வாழ்விற்கு அடித்தளம் அமைத்த தாவீது: (2 சாமு. 9: 7)

தாவீது அவனிடம் "அஞ்சாதே! உன் தந்தை யோனத்தானின் பொருட்டு நான் உனக்குக் கருணை காட்டுவது உறுதி. உன் மூதாதை சவுலின் நிலம்

அனைத்தையும் உனக்கு மீண்டும் கிடைக்கச் செய்வேன். நீ எப்போதும் என்னுடன் உணவருந்துவாய்" என்று கூறினான்.

தாவீதும், யோனத்தானும் நண்பர்கள். தாவீதைக் கொலை செய்ய சவுல் துரத்துவது யோனத்தானுக்கு தெரியும். தாவீது ஒருநாள் அரசன் ஆவான் என்பதை புரிந்துகொண்ட யோனத்தான் தாவீதிடம் (1 சாமு. 20: 15, 16) ஆண்டவர் தாவீதின் எல்லா எதிரிகளையும் இம்மண்ணிலிருந்து அழித்தொழிக்கும்போது, என் ஆண்டவர் அழிக்காதிருக்கும்படி இரக்கம் வை. ஆண்டவர் தாவீதின் எதிரிகளுக்குத் தகுந்த பதிலளிப்பாராக! என்று கூறி யோனத்தான் தாவீதின் வீட்டாருடன் உடன்படிக்கை செய்தார்.

தாவீது இந்த உடன்படிக்கையைத் தான் ராஜாவானபோது நினைவுகூருகிறான். தாவீது இன்னும் சவுலின் வீட்டாருக்குக் கருணை காட்ட வேண்டியது யாராவது உண்டா? என்று சவுலின் வீட்டை சார்ந்த சீசா என்ற பணியாளரிடம் கேட்கிறான். யோனத்தானின் இரு கால்களும் ஊனமுற்ற மகன் ஒருவன் இருக்கின்றான் என்று கூறினான். எங்கே என்று அரசர் கேட்க, லோதபாரில் அம்மியேலின் மகன் மாக்கீரின் வீட்டில் இருக்கிறான் என்று கூறினான். தாவீது ராஜா அவனை ஆள் அனுப்பிக் கொண்டுவரச் சொன்னார். ராஜாவைப் பார்த்தவுடன் மெபிபோசேத் முகம் குப்புற விழுந்து வணங்கினான். தாவீது ராஜா அவனை "மெபிபொசேத்து" என்று அழைக்க "இதோ! உம் அடியான்" என்று அவன் பதிலளித்தான். தாவீது அவனிடம் "அஞ்சாதே" உன் தந்தை யோனத்தான் பொருட்டு உனக்கு கருணை காட்டுவேன் என்று கூறினான். தாவீது ராஜா கருணை காட்டினது மட்டுமன்றி, சவுலின் நிலத்தை மீட்டு கொடுத்தான். ராஜாவோடு உணவருந்தும் பெரிய பாக்கியம் கிடைக்க செய்தான். தாவீது ராஜா இயலாதோரிடம் மனித நேயம் மிக்கவராய்க் காணப்பட்டார். இஸ்ரவேலரின் வாழ்வில் சுதந்திரபாகம் மிக முக்கியமானது. அதைக் கிடைக்க செய்தார்.

ஐசுவரியவான் லாசரு நிகழ்வில் இயலாதவனாக ஐசுவரியவான் வீட்டில் இருந்த லாசருவிற்கு உணவு கொடுக்க முன்வராததால் இறையரசில் செல்லும் பாக்கியத்தை ஐசுவரியவான் இழந்தான் (லூக். 16: 23).

மத்தேயு 5: 31-40 வரையுள்ள இறைவார்த்தைகளில் பசியாய் இருந்தோர்க்கு உணவு, தாகமாயிருந்தோர்க்கு தண்ணீர் கொடுத்தோர் ஆண்டவரோடு வாழும் இறையரசின் வாழ்வைப் பெறுவர் என காண்கிறோம். இயலாதோர் வாழ்வை வளமாக்க இறைமக்களாகிய நாம் தாவீது அரசனைப்போலச் செயல்பட வேண்டும்.

2. இயலாதோரின் விடுதலைக்காய்ச் சட்டத்தை ஓய்வுநாளில் முறியடித்த இயேசு : (மாற். 3: 1-6)

அனைத்துப் படைப்புகளையும் படைத்த கடவுள் ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். கடவுள் ஏழாம் நாளுக்கு ஆசி வழங்கி அதை புனிதப்படுத்தினார் (தொ.நூ. 2: 3). இஸ்ரலேருடைய வாழ்வில் ஏழாம் நாளை ஓய்வு நாளாக அனுசரித்தது மட்டுமல்லாமல் அவர்களுடைய

பணியாட்களுக்கும் ஓய்வு கொடுத்தனர். மோசேயின் சட்டப்படி ஓய்வுநாளில் எந்த வேலையும் செய்யக்கூடாது. ஆனால், இயேசு கிறிஸ்து ஓய்வு எடுக்காமல் விடுதலைக்கான பணிகளைச் செய்து கொண்டிருந்தார்.

இஸ்ரவேலருக்கு ஓய்வுநாளைக் கடைபிடிப்பதற்கான சட்டங்கள் கொடுக்கப்பட்டன (வி.ப. 31: 13, 15, 16, 17). மட்டுமல்ல ஆறு நாள் வேலை செய்யலாம், ஏழாம் நாளோ ஓய்வு நாளாகிய "சாபாத்து" ஆண்டவருக்குப் புனிதமான நாள். ஓய்வு நாளில் வேலை செய்பவன் எவனும் கொல்லப்பட வேண்டும் (வி.ப. 31: 13-17). இஸ்ரவேலர், எகிப்து நாட்டில் அடிமைகளாய் இருந்தார்கள் என்பதையும், கடவுளாகிய ஆண்டவர் தம் வலிய கரத்தாலும், ஓங்கிய புயத்தாலும் எகிப்திலிருந்து கூட்டி வந்தார் என்பதையும் நினைவு கொள்ள இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்டது (இ.ச. 5: 15). மேலும், வாரம் ஒருமுறை மக்களும், விலங்குகளும் ஓய்வு எடுத்து புத்துணர்ச்சி பெறுவதற்காக இக்கட்டளை கொடுக்கப்பட்டது (வி.ப. 20: 8-11). ஆனால், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஓய்வுநாளை விடுதலையின் நாளாக மாற்றினார். அருள்நாதர் இயேசு கிறிஸ்துவின் மேல் குற்றம் சுமத்தும்படி ஓய்வுநாளில் அவர் சூம்பின கையுடையவரைக் குணப்படுத்துவாரா? என்று கூர்ந்து கவனித்துக்கொண்டேயிருந்தனர். அவர்களின் உள்ளத்தின் சிந்தனைகளை அறிந்த இயேசு, கை சூம்பியவரை நோக்கி, "எழுந்து நடுவே நில்லும்" என்றார். பின்பு அவர்களிடம், ஓய்வுநாளில் நன்மை செய்வதா? தீமை செய்வதா? உயிரை காப்பதா? அழிப்பதா? என்று அவர் கேட்டார். அவர்களோ பேசாதிருந்தார்கள்(மாற்கு 3: 4). அவர் சினத்துடன் அவர்களைப் பார்க்கின்றார். அவர்கள் பிடிவாத உள்ளத்தைக் கண்டு வருந்தி, கை சூம்பியவரை நோக்கி, கையை நீட்டும் என்றார். அவர் நீட்டினார். அவருடைய கை உடனே நலமடைந்தது. இயேசுகிறிஸ்து இயலாதவரின் விடுதலையார், விடிவெள்ளி நட்சத்திரம், இயலாதோரின் பக்கம் நிற்பவர், இயலாதோரையும் மாண்புடன் நடத்தும் மகிபன் என்பதை உணராமல் பரிசேயர், ஏரோதியாரோடு சேர்ந்து இயேசுவை எப்படி ஒழிக்கலாம் என அவருக்கு எதிராக சூட்சி செய்தனர். அவ்வண்ணமாக ஓய்வுநாளில் உடல் ஊனமுற்ற பெண்ணைப் பெலவீனபடுத்தும் ஆவியிலிருந்து குணப்படுத்தினர் (லூக். 13: 10-17). இதைக் கண்ட தொழுகைக்கூடத் தலைவர், கோபம்கொண்டு மக்கள் கூட்டத்தைப் பார்த்து, வேலை செய்ய ஆறு நாட்கள் உண்டே, அந்நாட்களில் வந்து குணம் பெற்றுக்கொள்ளுங்கள். ஓய்வுநாளில் வேண்டாம் என்றார். ஆண்டவர் ஓய்வுநாளை ஓய்வின் நாளாக மட்டுமன்றி இயலாதோரின் விடுதலைக்கான நாளாக நிரூபித்து ஒடுக்கப்பட்ட, ஓரங்காட்டப்பட்ட மக்களோடு தன்னை ஒன்றுபடுத்தினார்.

3. இயலாதோரின் விடுதலையால் இறைமக்களை உருவாக்கிய பேதுரு
(தி.ப. 9: 32-37)

இறைப்பணி என்பது இயலாதோருக்கு விடுதலைக் காற்றை சுவாசிக்க அடிகோலுவது மட்டுமன்றி, இறைமக்களை உருவாக்கம் செய்வதுமாகும். திருத்தூதர் பேதுரு தன் மிஷனெரி பணியின் காலத்தில் அவர் லித்தா ஊரிலே

குடியிருக்கிற பரிசுத்தவான்களிடத்திற்குப் போனார். அங்கே அவர் எட்டு ஆண்டுகள் முடக்குவாதத்தால் படுக்கையில் கிடந்த ஐனேயா என்னும் பெயருடைய ஒருவரைக் கண்டார். "ஐனேயா, இயேசு கிறிஸ்து உம் பிணியைப் போக்குகிறார், எழுந்து உம் படுக்கையை நீரே சரிபடுத்தும்" (தி.ப. 9: 33, 34) என்று பேதுரு கூறினார். உடனே அவர் எழுந்தார். லித்தாவிலும், சரோனிலும் வாழ்ந்து வந்தவர்கள் அனைவரும் அதைக் கண்டு ஆண்டவரிடம் திரும்பினர்.

பேதுரு வார்த்தையினால் விடுதலை கொடுக்கிறார். இறை வார்த்தை ஆற்றல் உடையது. மக்கள் ஆண்டவரை அறிந்து அவருடைய அடியவராய் மாற்றுருவாக்கம் பெற, இயலாதோரின் விடுதலை வித்திட்டது.

பேதுருவின் முதல் அருளுரையால் மூவாயிரம் பேர் திருமுழுக்கு பெற்று இறை மக்கள் கூட்டத்தில் சேர்க்கப்பட்டனர் (தி.ப. 2: 41). எட்டு ஆண்டுகள் முடக்குவாதத்தால் இயலாதோராய்ப் படுத்திருந்த ஐனேயாவிற்கு விடுதலை கொடுத்து இறைமக்களை உருவாக்கித் திருச்சபையின் வாழ்விற்கு வித்திட்டார். இறைப்பணியாளரின் இறைப்பணியில் இயலாதோர்க்கு வாழ்வை வழங்க வேண்டும்.

இயலாதோரைப் பராமரித்துப் பாதுகாப்பு வழங்கி மனித நேயத்தின் முக்கியத்துவத்தை வாழ்விலும், தன் ராஜ பதவியிலும் தாவீது அரசன் முன்மாதிரியாக இருந்தார். அருள்நாதர் இயேசுகிறிஸ்து மனிதனுக்குப் பயன்படாத மோசேயின் சட்டத்தைத் தகர்த்தெறிந்து இயலாதோரின் விடுதலை என்பது பிற நாட்களில் மட்டுமல்ல, சிறப்பாக ஓய்வு நாளிலும் செயல்படுத்த வேண்டியது என்பதை மக்களுக்கு உணர்த்தினார். இயலாதோருக்கு செய்யும் இறைப்பணியின் வழியாக இறைமக்கள் ஆண்டவரிடம் வரமுடியும் என்பதை திருத்தூதர் பேதுரு நமக்கு புரிய வைத்தார். ஆகவே, நாமும் இயலாதோரை பாதுகாப்போம், பராமரிப்போம், மதிப்பு கொடுப்போம். சக மனிதனாக வாழ வழிகாட்டுவோம். இறையாசி என்றும் நம்முடன் இருப்பதாக, ஆமென்.

ப	ஞா. 71	கீர். 373

அருள்திருமதி. **சார்லெட் சௌந்தரராஜன்**
ஆயர், முளங்குழி

இறைவேண்டல்

எங்கள் கடவுளே, உமது மகனாகிய இயேசு கிறிஸ்து எல்லா நோய்களையும் குணப்படுத்துபவர். மன நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அமைதியை வழங்கவும், மற்றும் உடல் ஊனமுற்றோருக்கு வலிமை அளித்து உமது தூயஆவியின் ஆற்றலால் அவர்களை நிலைநிறுத்தவும் உம்மிடம் நாங்கள் மன்றாடுகிறோம். தேவாலயம் அவர்களுக்கு உமது அன்பின் மற்றும் நிலையான கவனிப்பின் ஒரு கருவியாக இருக்க உம்மிடம் மன்றாடுகிறோம். தம்முடைய பூமிக்குரிய வாழ்க்கையில் மனரீதியாகவும், உடல்ரீதியாகவும் மாற்றுத்திறனாளிகளின் கண்ணியத்தை உறுதிப்படுத்திய, இப்போதும் எப்போதும் உங்களோடும் தூய ஆவியரோடும் வாழ்ந்து ஆட்சி செய்கிற, எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வாயிலாக வேண்டுகிறோம், ஆமென்.

செயலில் கிறிஸ்துவுடன் இளையோர்

Youth with Christ in Action

தானி. 1: 1 - 17 தி.ப. 6: 1 - 7

தி.பா. 98 யோவா. 1: 35 - 42

"யோவான் சொன்னதைக் கேட்டு... அருட்பொழிவு பெற்றவர் என்பது பொருள்" (யோவா. 1: 40, 41).

வார்த்தையாக இருந்து மனுஉருவில் வெளிப்பட்ட இயேசுவை மண்ணுலகிற்கு அடையாளப்படுத்துவதில் நற்செய்தியாளர் யோவானுக்கு நிகர் அவரே. சமநோக்கு நற்செய்தி நூல்களில் இயேசு கிறிஸ்துவைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பதற்கு முற்றிலும் மாறுபட்ட ஒரு முகவுரையுடன் அதாவது இயேசுவுக்கு முன் வந்த முழுக்கு முனிவர் யோவானால் கிறிஸ்து இயேசு அடையாளமிடப்படும் செய்தியுடன் இந்த நற்செய்தி நூலை ஆரம்பிக்கிறார் யோவான்.

இந்த நற்செய்தி நூலின் முதற்பகுதியில் இயேசு மண்ணுலக மீட்பராக (அடிக்கப்படும் ஆட்டுக்குட்டி) அறிமுகமாகித் தொடர்ந்து, கானா ஊரில் செய்த அருஞ்செயல் வழி அடையாளமாகி, திருக்கோயிலைச் சுத்தம் செய்து தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுவதை நாம் காணலாம்.

இத்தகைய இயேசுவை, முழுக்கு முனிவர் யோவான் அடையாளம் காட்டியபோது அவர் யார்? எத்தகையவர்? என்று கண்டிட முயன்ற அன்றைய இளையோரின் பண்பை மையமாகக் கொண்டு "இன்றைய இளையோர் எப்படி செயலில் கிறிஸ்துவுடன் இணைந்துச் செயல்பட முடியும்" என்பதைச் சிந்திப்பதே இந்த இளையோர் ஞாயிற்றின் சிறப்பு நோக்கமாகும்.

உலகை சுருக்கி உள்ளங்கையில் வைத்திருக்கிறேன், வானத்து நட்சத்திரங்களை நூலில் கோர்த்து மாலையாக்குவேன் என்ற துடிப்புமிக்க இளையோர் கிறிஸ்துவுடன் இணைந்து செயல்பட உறுதுணையாக சில ஆலோசனைகளை இன்றைய திருமறைப்பகுதி சார்ந்து தொடர்ந்து சிந்திப்போம்.

குறிப்பாக முழுக்கு முனிவர் யோவானின் அறைகூவலைக் கேட்டு இறைமகன் இயேசுவை அடையாளம் கண்ட இளையோரின் வாழ்வுவழி சில உண்மைகளைத் தியானம் செய்வோம்.

1. உண்மையை அறிவதில் நாட்டம் (யோவா. 1: 36, 37)

யூதேயாவின் பாலைவெளியிலே அநீதிக்கு எதிரான நீதியின் குரலாக ஓங்கி ஒலித்த யோவானின் குரல் அடிமட்டத்திலுள்ள மக்கள் முதல் ஆட்சிப் பீடத்திலிருந்தவர் வரை அனைவரது அடிவயிற்றையும் கலங்கச் செய்தது (மத். 3: 1-12). அவர்களில் பலர் தங்கள் பாவங்களை அறிக்கைச் செய்து யோர்தான் ஆற்றில் யோவானால் திருமுழுக்குப் பெற்றனர்.

அதே நேரம் அம்மக்கள் எவரும் அவர் பறைசாற்றிய உலக மீட்பரைக் குறித்து அறிந்திடவும், ஆய்ந்திடவும் நாட்டம் கொண்டிடவில்லை. அப்படிப்பட்ட சூழலில் கிறிஸ்துவை அறிந்திடவும் அவருடன் செயல்படவும் ஆர்வம் கொண்ட இரண்டு இளைஞர் இந்த யோவானின் சீடர்களாக இருந்தனர். இந்த இருவரில் ஒருவர் பெத்சாயிதா நகரைச் சார்ந்த அந்திரேயா என்பவர் (யோவா. 1: 40). உலகின் பாவம் சுமந்து தீர்க்கும் செம்மறி என்று சுட்டிக்காட்டப்பட்டபோது (வ. 36) அந்திரேயாவும், அவர் உடனிருந்த யோவானின் சீடரும் இயேசுவைப் பின்தொடர்ந்தனர். ஏனெனில் அவ்விருவருக்கும் இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறிந்திடும் நாட்டம் அதிகமாகவே இருந்தது.

இன்றைய இளையோர் பல நேரம் உலகமே தனது கையிலிருப்பது போல எண்ணிக்கொண்டாலும் சில முக்கிய சூழலில் தடுமாறி நிற்கின்றனர். அதிலும் நெருக்கடி நேரங்களில், முடிவெடுக்க வேண்டிய முக்கிய தருணங்களில் தங்கள் முயற்சிகள் எல்லாம் தோற்றுவிட்ட வேளைகளில் மனம் கலங்கிவிடுகின்றனர். ஏன் இந்தக் கலக்கம்? தடுமாற்றம்? தங்கள் எண்ணத்திற்கும் மேலாய் ஆற்றலுக்கும் அப்பால் அனைத்தும் ஆள்பவராக இருக்கும் ஆண்டவரை அண்டவும், அவரது உதவியை நாடவும் எண்ணம் இல்லாமற்போவதே ஆகும் (தி.பா. 14: 12). “கடவுளைத் தேடுகிற எண்ணமுள்ள (நாட்டமுடைய) மனிதர் உண்டோ என ஆண்டவர் விண்ணுலகிலிருந்து மானிடரைக் கண்ணோக்கினார்” என்று திருப்பாடல் ஆசிரியர் கூறுவது போலவே, இன்று மானுட சமூகம் இருக்கிறது.

உலகின் இன்பங்களை நாடேன். அவைகளைத் தேடி நாடிச் செல்வோருக்கு துன்பங்களே மிகுதியாகும் என்று திருப்பாடலாசிரியர் தன் அனுபவத்திலிருந்து குறிப்பிடுவார்.

எகிப்தின் மேன்மையையும் ஆட்சி உரிமையையும் நாடேன். என் ஆண்டவரின் அன்பையும், என் மக்களின் நலனையுமே நாடுவேன் என்று எண்ணிய மோசேயை, அவர்தம் மக்களை வழிநடத்தும் மாபெரும் தலைவனாக மாற்றினார்.

இவ்வுலகில் நான் பெற்ற கல்வியின் உச்சம் புகழின் உயரம் இவைகளைவிட, எனை மீட்ட இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரைப் பறைசாற்றும் நிலையில் எத்தகுத் துன்பங்கள் வந்தாலும் அதனை ஏற்பதையே நாடுகிறேன் என்ற பவுலாரையே மாபெரும் திருத்தூதுவராகப் பயன்படுத்தினார்.

இயேசு கிறிஸ்துவில் நாட்டமுள்ள இளையோரே இன்றைய திருச்சபைக்குத் தேவை. அவர்களைக் கொண்டுதான் ஆண்டவர் தம் விருப்பத்தை நிறைவேற்ற முடியும்.

2. கிறிஸ்துவோடு உடனிருக்கும் ஆர்வம் (யோவா. 1: 39)

திருமுழுக்கினர் யோவானின் சீடர்களான அவ்விருவரும் உண்மை அறிந்திடும் நாட்டமுள்ளவர்களாக மட்டுமல்ல, உண்மையில் நிலைத்திருப்பவர்களாகவும் காணப்பட்டனர் என்பதை யோவா. 1: 39-இல் படிக்கிறோம். போதகரே நீர் எங்கே தங்கியிருக்கிறீர் என்று வினா எழுப்பியவர்களை வந்து பாருங்கள் என்று இயேசு அழைக்க அவ்விருவரும்

அவர்பின்னே சென்றனர். மட்டுமல்ல; அவருடன் தங்கினர் என்று காணமுடிகிறது. அதாவது உடனிருந்தனர். இந்த உடனிருத்தலின் பண்பு அன்றோடு நின்றுவிடவில்லை. அதையும் கடந்து தங்களையே இறுதிச் சான்றுகளாய் கொடுக்கும் அளவும் அவருடன் இருந்தனர் என்பதே உண்மை. இயேசுவுக்குப் பாடுகள் என்றதும் ஒருவேளை சில நாட்கள் விலகினாலும் மீண்டும் உள்ள உறுதியுடன் அவர் வார்த்தைகளில் பற்றுக் கொண்டு திருச்சபைகளைக் கட்டினர். துவக்க கால திருச்சபைக்குத் துன்பம் ஏற்பட்டபோது அவர்கள் இந்தத் துன்பங்களை தாங்கிக்கொண்டு கிறிஸ்துவுடன் இருப்பதை வெளிப்படுத்தினர்.

யோவா. 3: 2-இல் இரவு நேரத்தில் இயேசுவிடம் வந்த யூத அதிகாரியின் கூற்று இப்படி காணப்படுகிறது. ஒருவனுடன் ஆண்டவர் இல்லாவிடில் மாபெரும் அருஞ்செயல்களைச் செய்யமாட்டான் என்று.

எப்போது ஆண்டவர் ஒருவருடன் இருப்பார். அந்தக் குறிப்பிட்ட நபர் மனமுவந்து ஆண்டவருடன் உறவாட முன்வரும்போதுதான் ஆண்டவர் அவருடன் இருப்பார் என்று மறைநூல் நமக்குக் கற்பிக்கிறது.

இன்றைய இளையோரின் பல தோல்விகளுக்கும், வீழ்ச்சிகளுக்கும் அடிப்படை என்னவெனில் கிறிஸ்துவுடன் இருப்பதைத் தவிர்த்து உலகுடன் இருந்து அல்லது அலகையுடன் இருந்து தங்கள் திறன்களையும் கல்வி அறிவையும் பயன்படுத்துவதே ஆகும் (யாக். 4: 4). உலகத்துடன் ஒப்புரவாகிறவன் கர்த்தருக்குப் பகைஞனாகிறான். கிறிஸ்துவுடன் இருப்பவர் என்று கூறியும் உலகுடன் சமரசம் செய்தவர் பொய்யர்.

எந்த ஒரு இளைஞன் மனமுவந்து இயேசு கிறிஸ்துவுடன் உறைபவராக இருக்கிறாரோ அவருடன் கிறிஸ்துவும் உறைவதினால் அவரைக்கொண்டு ஆண்டவர் தம் விருப்பத்தை நிறைவேற்ற முடியும். பவுலாரின் வாழ்வும் பணியும் நமக்கு மிக உயரிய சான்றாக இருக்கிறது. யோசேப்பு எனும் இளைஞன் கர்த்தருடன் இருந்ததால் தீமையை உதறிவிட்டு ஓடினதால் சிறைச்சாலையில் போடபட்ட பிற்பாடும் அந்த யோசேப்போடு கர்த்தர் உடனிருந்தார். இதுவே உடனிருத்தலின் சிறந்த அனுபவம்.

3. நற்சான்று பகர்வதில் ஏக்கம் (யோவா. 1: 41)

தான் பெற்ற மகிழ்வான அனுபவத்தை, மீட்பின் மகிழ்வை மற்றொருவருடன் பகிர்வதே சான்று பகர்வதில் சிறப்பானது. இன்றைய உலகில் காணப்படும் பொருட்களுக்கெல்லாம் சிலபொருட்களும் மனிதரும் சான்றாகின்றனர். ஆனால், திருமறைப்பகுதியில் நான் கண்டு அனுபவித்த மேசியாவைத் தன் உடன் சகோதரன் பேதுருவும் காணவேண்டும். அவருடன் தங்கி, அவரோடு நெருக்கமான நட்பு கொண்டு மீட்படைய வேண்டும் என்ற ஏக்கத்துடன் அந்திரேயா செயல்படுவது மிகச் சிறந்த பண்பாகும்.

தாங்கள் கண்ட கிறிஸ்துவின் மகத்துவத்தையும் உயிர்த்தெழுதலின் வல்லமையும் நாங்கள் சொல்லாமல் இருக்க முடியாதே (தி.ப. 4: 20) என்று பேதுருவும், யோவானும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப்பின் அதாவது தூயாவியாரின் ஆற்றலைப் பெற்றபின் தைரியமாகச் சான்று பகர்கின்றனர்.

இதற்குக் காரணம் முதல் நிலையிலேயே அந்திரேயாவின் சாட்சியினால் பேதுரு இயேசுவைக் கண்டு பற்றிக்கொண்டதாகும்.

இன்றைய கிறிஸ்தவ இளையோர் பலர் தாங்கள் பெற்ற மீட்பையும், கிறிஸ்துவின் மன்னிக்கும் அன்பையும், ஆற்றலையும் குறித்து மற்றவர்களுக்குச் சான்று பகரும் ஏக்கம் இல்லாமல் இருக்கின்றனர். பெரும்பாலான இளையோர் தங்களது கல்வி, பணி இவைகளில் கவனம் செலுத்தி வார நாட்களைச் செலவிடுகின்றனர், வார இறுதி நாட்களில் இன்பமாகப் பொழுதை போக்கவே விரும்புவதால் கிறிஸ்துவுக்கு நற்சாட்சிகளாக வாழவேண்டிய, கிறிஸ்துவுடன் இணைந்து செயல்படவேண்டிய இளையோர் பொல்லாதவனின் கையின் கருவிகளாகக் காணப்படுகின்றனர்.

இன்று புனிதராகப் போற்றப்படும் தேவசகாயம்பிள்ளை என்ற மனிதர் ஏன் இப்படிப் படுகொலை செய்யப்பட்டார் என்றால், தான் கண்ட கேப்டன் டிலனாய் வழியாக தான் ஏற்ற கிறிஸ்துவைக் குறித்து அவரது குடும்பத்தினருக்கும், அவரோடு வாழ்ந்தவர்களுக்கும் நற்சாட்சிப் பகர்ந்ததாலேயே.

நான் பெற்ற மீட்பையும், கிறிஸ்துவின் அன்பையும் நான் வாழும் பகுதியிலும், பிற பட்டணங்களிலும் பல்சமய நம்பிக்கைக் கொண்ட மக்களுக்கும் பறைசாற்ற நான் கடன்பட்டுள்ளேன் என்ற பவுலாரின் ஏக்கம் இன்றைய இளையோர் அனைவருக்கும் தேவையாக இருக்கிறது.

நாம் வாழும் இச்சமுதாயத்தில் கிறிஸ்துவுக்கு தங்கள் பணத்தையும், சொத்துக்களையும் கொடுக்கும் இளைஞர்கள் பலர் இருக்கின்றனர். திருப்பணிகளைக் காணிக்கைகளால் தாங்குவோர் பலர் உள்ளனர். கிறிஸ்துவுடன் இணைந்து செயல்படும் இளையோரையே ஆண்டவர் எதிர்பார்க்கிறார். அன்பு சகோதரனே, சகோதரியே நீ ஆயத்தமா?

அருள்திரு. P. ஜேக்கப் பீற்றர்
இயக்குநர், பேராய ஆண்கள் சங்கம் &
சமூகப் பொருளாதாரக் கரிசனைக்குழு செயலர்

ப	ஞா. 404	கீர். 118

இறைவேண்டல்

அன்பும் வாழ்வும் நிறைந்த கடவுளே, உமது விருப்பத்திற்குத் தன்னைத் தாழ்மையுடன் சமர்ப்பித்து, எங்களுக்கு முன்மாதிரியாக விளங்கிய உமது மகனாகிய எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். மனிதகுலத்திற்கு சேவை செய்வதன் மூலம் உமக்கே சேவை செய்கின்றோம் என்று இளைஞர்கள் உணர்ந்து, தங்கள் படைப்பாற்றல், ஞானம் மற்றும் வலிமையைப் பயன்படுத்த நாங்கள் உம்மிடம் மன்றாடுகிறோம். கிறிஸ்துவை மையமாகக் கொண்ட மற்றும் நீதி சார்ந்த வாழ்க்கையை நடத்த இளையோருக்கு நீர் உதவ நாங்கள் உம்மிடம் மன்றாடுகிறோம். உம்மோடும் தூய ஆவியரோடும் இப்போதும் எப்போதும் வாழ்ந்து ஆட்சி செய்யும் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாயிலாக வேண்டுகிறோம், ஆமென்.

கடவுளின் இறையாண்மையின் கொண்டாட்டம், நீதியும் அமைதியும்

Celebration of God's Sovereignty, Justice and Peace

வி.ப. 7: 1-7 உரோ. 13: 1-7

தி.பா. 89: 1-18 யோவா. 18: 33-38

> *"படைகளின் கடவுளாகிய ஆண்டவரே! உம்மைப்போல் ஆற்றல்மிக்கவர் யார்? ஆண்டவரே! உம் உண்மை உம்மைச் சூழ்ந்துள்ளது"*
> (தி.பா. 89: 8)

சீர்த்திருத்தச் செம்மல் என்று அறியப்படும் மார்டின் லூதர் 1517-ஆம் ஆண்டு அக்டோபர் 31-ஆம் நாள் ஜெர்மனியில் விட்டன்பர்க் நகரில் உள்ள தேவாலயத்தின் கதவில் 95 குறிப்புகள் அடங்கிய பிரதியை ஆணிகளால் அடித்து மாட்டி வைத்தார்.அதில் தங்கள் அதிகாரத்தைத் தவறுதலாக பயன்படுத்தி, மூட நம்பிக்கைகளை வளர்த்திய சமயத்தலைவர்களைக் கண்டித்து அவர்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் எழுதியிருந்தார். இதன் விளைவு ஜெர்மனியில் மட்டுமல்ல உலகின் பல பகுதிகளில் புரட்சிகரமான சீர்த்திருத்தச் சிந்தனைகள் பெருகின. சீர்த்திருத்தத் திருச்சபைகளும் பெருகின. அவ்விதமாய் சீர்த்திருத்தம் பெற்றுள்ள சபைகளிலும் இன்று பலநிலைகளில் சர்வாதிகார போங்கு வளர்ந்து கடவுளைத் துதி பாடுவதற்குப் பதிலாகத் தனியாள் துதிபாடல்களும் அதிகார போங்குகளும், புகழ்ச்சிகளும் வளர்ந்து மறு சீர்த்திருத்தத்திற்காகக் காத்திருக்கும் இச்சூழலில் கடவுளின் இறையாண்மையை மட்டும் எச்சூழலிலும் நீதியுடனும், நேர்மையுடனும் கொண்டாட அழைக்கப்பட்டுள்ளோம். கடவுளின் அனைத்து ஆற்றல்களையும் உள்ளடக்கிய அவரது இறையாண்மையை எவ்விதங்களில் கொண்டாடலாம்?

1. நற்செய்தி வாயிலாகக் கொண்டாடுதல் (Celebrating through the Gospel): (வி.ப. 7: 2)

"நான் உனக்குக் கட்டளை இடுவதையெல்லாம் நீ எடுத்துச் சொல்வாய்".

எகிப்தில் அடிமைப்பட்டிருந்த இஸ்ராயேலரை விடுதலை செய்யக் கடவுள் விரும்பினார். மோசேயைத் தெரிவு செய்து இந்த விடுதலைப்பணியை

நிறைவேற்றக் கடவுள் அழைப்பு கொடுத்தார். அது மட்டுமன்றிக் கடவுள் கூறுவதை எடுத்துக்கூறவும் அறிவுறுத்தினார் (வி.ப. 7: 2). அடிமைப்பட்டிருக்கும் இஸ்ராயேல் மக்களுக்கு விடுதலையின் நற்செய்தியையும், அடிமைப்படுத்திய எகிப்தியருக்குத் தண்டனையை வாதைகள் வாயிலாகவும் அறியச் செய்தார். நற்செய்தி என்பது மகிழ்ச்சியைத் தரும் செய்தி மட்டுமல்ல் தீமை செய்வோர் திருந்தி வாழ எச்சரிப்பு கொடுப்பதுமாகும். நற்செய்தியை அறிவிப்பவராகிய மோசேயை கடவுள் இருவருக்கு கடவுள்போல்காண்பித்தார் விப. 4: 16-இல் மோசேயை ஆரோனுக்குக் கடவுள் போல் காண்பித்தார் வி.ப. 7: 1-இல் பார்வோனுக்குக் கடவுள்போல் மாற்றினார். ஏனெனில் மோசேயின் சொற்கள் அனைத்தும் கடவுளுக்குரிய ஆற்றலும், அதிகாரமும் மிக்கதாக இருக்கும் அப்படிப்பட்ட நீதியும், அமைதியும் கொண்டு வரும் வார்த்தைகளை மோசே பேசினார். நற்செய்தி ஒரு சாராருக்குக் கொண்டாட்டமாகவும், மற்றோருக்குத் திண்டாட்டமாகவும் அமைவதுண்டு. இயேசு என்னும் குழந்தை பிறந்த நற்செய்தி வயல்வெளி மேய்ப்பருக்குக் கொண்டாட்டமும் (லூக். 2: 10), ஏரோது மற்றும் எருசலேம் நகரத்தார்க்குத் திண்டாட்டமுமாக அமைந்தது (மத். 2: 30). ஆற்றலுள்ள கடவுளின் வார்த்தை நற்செய்தியாகக் கூறப்படும்போது, அவைகளை மகிழ்வோடு ஏற்றுத் தவறுகளை திருத்திக்கொள்ள அழைக்கப்படுகிறோம். மோசேயின் வாயிலாக வெளிப்படுத்தப்பட்ட கடவுளின் வார்த்தைகள் விடுதலையைக் கொண்டு வந்தது. மார்டின் லூதரின் சீர்திருத்த சிந்தைகளையாகிய நற்செய்தியினால் அவர் பல துன்பங்கள் அடைந்தாலும் நிறைவாகப் பெரிய சீர்திருத்தம் ஏற்பட்டது. அப்படிப்பட்ட விடுதலை தரும் கடவுளின் ஆற்றுலுள்ள நற்செய்தியின் வாயிலாகக் கடவுளின் இறையாண்மையைக் கொண்டாடுவோம்.

2. நற்செயல் வாயிலாகக் கொண்டாடுதல் (Celebrating through Good Deeds)**:** (உரோ. 13: 3)

"நற்செயல் செய்வோர் ஆள்வோருக்கு அஞ்ச வேண்டியதில்லை ; தீச்செயல் செய்வோரே அஞ்ச வேண்டும்".

முதலாம் நூற்றாணடில் உரோமப் பேரரசு யூதக் கிறிஸ்தவர்களுக்குப் பலவிதமானத் துன்பங்களைக் கொடுத்தது. யூதர்கள் உரோமருக்குக் கப்பம் கட்டுவதைப் பலர் எதிர்த்தனர். உரோம அடிமைத்தனத்திலிருந்து விடுதலைக்காய்ப் பல போராட்டங்களும் நடைபெற்றன. இச்சூழலில் ஆளும் அதிகாரம் உள்ளவர்களுக்கு எல்லாரும் பணிந்திருங்கள்; (உரோ. 13: 1) என்று பவுலார் உரோமாபுரியாருக்குக் குறிப்பிடக் காரணம் என்ன? அப்போது உரோம கிறிஸ்தவர்கள் அதிகாரப் பொறுப்பில் இல்லையோ? என்ற வினாக்கள் எழுவது

இயல்பானதே. அரசுக்கும் கிறிஸ்தவருக்கும் உள்ள உறவு சரியாக இருக்க வேண்டும் என்பது பவுலாரின் எதிர்பார்ப்பு. அது நீதியுடனும், அமைதியுனும் அமைதல் வேண்டும். நீதியுடன் ஏற்படும் அமைதி (தி.பா. 85: 10) கடவுளின் இறையாண்மையின் கொண்டாட்டமாக அமையும். அரசின் வளர்ச்சிக்கும் ஏதுகோலாக இருக்கும். அவைகள் தவறும்போது ஆள்வோருக்கு அஞ்சாமல் நற்செயல் செய்யப் பவுலார் அழைப்பு கொடுக்கிறார் (உரோ. 13: 3). அவ்விதமாக நற்செயல் செய்யும்போது ஆள்வோரிடமிருந்து பாராட்டுகள் கிடைக்கும் (உரோ. 13: 3-4). மார்ட்டின் லூதர் சமயத்தீமையான கோட்பாடுகளை எதிர்த்துப் போராடியது மட்டுமல்ல; அதன் வாயிலாக சமயத் தலைவர்களின் எதிர்ப்புகளையும் சந்தித்தார். எனினும் சமூகத்தில், திருச்சபையில் சீர்திருத்தமாகிய நன்மை செய்யவும் தயங்கவில்லை. நாமும் நீதியுடனும் அமைதியுடனும் நற்செயல்கள் செய்து கடவுளின் இறையாண்மையைக் கொண்டாடுவோம். அதற்காக ஏற்படும் பாடுகளையும் கடவுளின் உடனிருப்பில் ஏற்றுக்கொள்வோம்.

3. நற்சான்று வாயிலாகக் கொண்டாடுதல் (Celebrating through Good Credentials) **:** (யோவா. 18: 36)

"இயேசு மறுமொழியாக, எனது ஆட்சி இவ்வுலக ஆட்சி போன்றது அல்ல"

உலகத்துக்குரிய அரசு, கடவுளுக்குரிய அரசு என இரண்டு விதமான சிந்தனைகள் இருக்கின்றன. உலக அரசில் கடவுள் தனது பணியைச் செய்ய மனிதரை நியமிக்கிறார் (உரோ. 13: 1). உலக அரசின் ஆட்சியாளர்கள் சமத்துவத்தையும் நீதியையும் அன்பையும் நிலைநாட்ட வேண்டும். இப்பணிகளைச் செய்யத் தவறியதால் கடவுள் தனது மகனை இவ்வுலகிற்கு அனுப்பி அவரையே நமக்கு முன்மாதிரியாக்கினார் (லூக். 22: 24-30). கடவுளின் அரசனானது நீதி, நேர்மை, அன்பு, பணிவிடை செய்தல் இவைகளுடன் சான்றாய் அமையும் அரசு ஆகும். அவ்வரசு இவ்வுலக அரசின் முறைமைகளைப் போல் அதிகாரம் செலுத்துதல், அடக்குமுறை, ஒடுக்குதல், பழிவாங்குதல் போன்றவைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும் (யோவா. 18: 36). இறைவாக்கினர் ஏசாயா விரும்பிய திருக்காட்சியைப்போன்று (ஏசா. 11: 3-9) நீதியும், அமைதியும், மகிழ்ச்சியும் நிறைந்த சான்று பகரும் அரசாக அமையும். இவ்வரசு வன்முறைக்கு இடமளிப்பதில்லை. இவ்வரசுக்குக் காவலர்கள் தேவைப்படுவதுமில்லை (யோவா. 18: 36). உண்மையை சார்ந்து இவ்வரசு அமைகிறது. இயேசுவின் பிறப்பும், வாழ்வும், பணியும் உன்மையைக்குறித்து சான்று பகர்கிறது (யோவா. 18: 37). இறையரசு

ஒளிவுமறைவில்லாத “உண்மையை”க் கொண்டு இயக்கம் பெறுகிறது. உண்மை விடுதலை தருவதாக ஆண்டவர் குறிப்பிட்டார் (யோவா. 8: 32). உலகத்தின் தீய முறைமைகளிலிருந்து விலகி நற்சான்றுடன் வாழ மனந்திரும்புதல் தேவை. சீர்த்திருத்தத்தின் தந்தை என்று அறியப்படும் மார்டின் லூதர் மனந்திரும்புதலைக்குறித்துக் குறிப்பிடும்போது, மனந்திரும்புதல் மனதுக்குள் நடக்கவேண்டியது. கடவுளிடம் மன்றாடிப் பெறவேண்டியது. அதனைப் பாவமன்னிப்புச் சீட்டு வாங்கிப் பெற முடியாது என்று குறிப்பிட்டார். இன்று சபைகளில் வலம்வரும் ஆசீர்வாதத் தட்டு, ஜெப எண்ணெய் போன்றவை பாவமன்னிப்பு சீட்டின் மறு வடிவங்களாய் பார்க்கப்படும் சூழலில் கடவுளின் இறையாண்மையை நற்செய்தி வாயிலாகக் கொண்டாடுவோம். நற்செயல் வாயிலாகக் கொண்டாடுவோம், நற்சான்றுடன் வாழ்வதன் வாயிலாகக் கொண்டாடுவோம், ஆமென்.

பு	ஞா. 66	கீர். 385

அருள்திரு. S. கிரீஷ் குமார்
ஆயர், புல்லுவிளை

இறைவேண்டல்

நீதி மற்றும் சமாதானத்தின் கடவுளே, எங்கள் மனதைப் புதுப்பிக்கும் உமது வார்த்தைக்காக உம்மை துதிக்கிறோம். ஒவ்வொரு செயல்களையும் உமது பார்வையின்படி நாங்கள் பார்க்கவும், நீர் செய்யும் செயல்களைப் போலவே நாங்கள் செய்யவும் எங்களுக்கு உதவி செய்யும். வன்முறை, சுரண்டல் மற்றும் அவநம்பிக்கை மத்தியில் வாழும் எங்களை நீதி மற்றும் அமைதியின் கருவிகளாக மாற்றுமாறு நாங்கள் உம்மிடம் மன்றாடுகிறோம், இதன் மூலம் நாங்கள் அனைவரும் உம்மோடு இப்போதும் எப்போதும் ஆட்சி செய்யும், தூய ஆவியாரின் ஒற்றுமையில் வாழத் துணைபுரியுமாறு வேண்டுகிறோம் ஆமென்.

உயர்வருளும் ஆண்டவர்

1அர. 3: 3-13

“ . . . உனக்கு நிகராக, உனக்கு முன்னே எவரும் இருந்ததில்லை. உனக்குப் பின்னே இருக்கப் போவதுமில்லை” (1 அர. 3: 12).

வானவியல் வல்லுநர்களின் முன்னோடியாகத் திகழ்ந்தவர் ஜேம்ஸ் பிளமஸ்டீட். இவர் ஒரு ஆங்கிலேயர். சிறு அகவை முதல் உடல்நலக்குறைவினால் பாதிக்கப்பட்டவர். ஒருகாலகட்டத்தில் படுக்கையை விட்டு எழுந்து நடக்க முடியாத நிலை. அச்சூழலை மாற்றப் பல்வேறு நூல்களைப் படித்தார். நூல்கள் அவரது ஆர்வத்தைத் தூண்டின. வானவியல் பற்றி அதிகம் தெரிந்து கொள்ள விரும்பி, வானவியல் சார்ந்த நூல்களைத் தேடித் படித்தார். தன் பலவீனமான உடல் நிலையிலும் வானவியல் பற்றிய ஆராய்ச்சிகளைச் செய்தார். கோள்கள், கிரகங்கள் பற்றியெல்லாம் பலவற்றை ஆராய்ந்து கட்டுரையாக வடித்தார். அவரது கட்டுரைகள் பிற்காலத்தில் ஐன்ஸ்டீன் போன்ற விஞ்ஞானிகளுக்கும் வானவியல் வல்லுநர்களுக்கும் உதவியாகக் காணப்பட்டது. ஜேம்ஸ் பிளம்ஸ்டீட் வானவியல் முன்னோடிகளுள் ஒருவராக இன்றளவும் போற்றப்படுகின்றார். ஜேம்ஸ் பிளம்ஸ்டீட்டின் தன்னம்பிக்கையும், உழைப்பும், முயற்சியும் அவர் வாழ்வில் உயர்வையும், புகழையும் கொடுத்தது.

உயர்வு என்ற சொல்லுக்கு “சிறப்பு” “மேல்நிலை” “புகழ்” “மதிப்புமிக்க வாழ்வு” “மேன்மை” “பெருமை” “மகிமை” என பல விளக்கங்கள் உண்டு. உயர்வு, புகழ் தேடி சென்று பெற்றுக்கொள்வது அல்ல, வாழ்வியல் சார்ந்த பண்புகளினாலும், திறமைகளினாலும் ஏற்படுவது. கவிஞர் அப்துல் ரகுமான் “உன் தலையைப் புகழால் அலங்கரி; மகுடங்களால் அலங்கரிக்காதே! ஏனென்றால் . . . மகுடங்கள் தலைமாறக் கூடியவை!” என்று சொல்லுகிறார். உலகம் போற்றும் புகழோடு, உயர்வைப் பெற்றவர் சாலமோன் அரசர். 1அரசர்கள் 3:3-13 வரை உள்ள திருமொழிகளில் இறையவர் சாலமோனுக்கு “உயர்வு” “புகழ்” பற்றி சொல்லிய வாக்குறுதியாகக் காணப்படுகிறது. அக்கால உலக வரலாற்றிலும், இக்காலத்திலும் இவரின் புகழ் சிறப்புற்றுக் காணப்படுகின்றது. “கடவுள் சாலமோனுக்கு மிகுந்த ஞானத்தையும் அறிவுக்கூர்மையையும் கடற்கரை மணலெனப் பரந்த அறிவாற்றலையும் அளித்திருந்தார்” (1அர. 4: 29). இவர் சிறப்புற்று வாழ இறையவர் இவரில் கண்ட

சிறப்புகளைத் தியானிப்பது நம் உயர்வுக்கும், புகழுக்கும் உந்துதலாக அமையும்.

1. ஆண்டவருக்குகந்த அன்பு (1அர. 3: 3(a))

"ஆண்டவர் மீது சாலமோன் அன்புகொண்டு . . .". இறை அன்புடையவராய் வாழ்ந்தவர் சாலமோன் அரசர். இறையவரை அன்பு செய்கிறவர்கள் மண்ணுலகில் உயர்வும், மேன்மையும் பெறுவர். இறைஅன்பின் முழுமை என்பது இறையவர் மீதும், மண்ணுலக மக்கள் மீதும், இறையவருடைய ஏனைய படைப்புகள் மீதும் அன்பு செலுத்துவதாகும். 1அரசர்கள் 3: 9-இல் அரசர் சாலமோன் இறையவர் மீதும், தன் நாட்டு மக்கள் மீதும் அன்பு கொண்டிருந்தார் என்பதைத் தெளிவுப்படுத்துகிறது. எல்லா உயிர்களையும் தன்னுயிராக எண்ணி, மறந்தும் பிறருக்குக் கேடு செய்யாமல், தன்னலம் கருதாமல், அன்பு செய்கிறவன் உயர்ந்த மாமனிதர். கடவுள் மீது கொண்ட அன்பால் திருக்கோவில் கட்டினார் (1அரசர்கள் 6-ஆவது பிரிவு). சாலமோன் தன் வீட்டில் பணி செய்த பணியாளர் அனைவருக்கும், உணவு கொடுத்துத் தன் அன்பை வெளிப்படுத்தினார் (1அர. 4: 22-27). ஆண்டவருக்குகந்த அன்பில் நிலைத்திருக்கிறவர்கள் "சிறப்புற்று" வாழ்ந்திருப்பார்கள்.

2. ஆண்டவருக்குகந்த வழிபாடு (1அர. 3: 3)

".....சாலமோன் தொழுகை மேடுகளில் பலியிட்டுத் தூபம் காட்டிவந்தார்". சாலமோன் அரசராக இருந்தபோதிலும், ஆண்டவரை வழிபடுவதில் ஆர்வம் காட்டினார். ஆண்டவருக்குகந்த வழிபாடு என்பது "வாழ்வோடு இணைந்த வழிபாடாக" அமையவேண்டும். சாலமோன் காலத்தில் எருசலேமில் கோவில் இல்லை. ஆனால், வழிபாட்டு மேடுகள் காணப்பட்டன. கிபியோனிலுள்ள வழிபாட்டு மேட்டில் காணப்பட்ட பலிபீடத்தின் மேல் ஆயிரம் எரிபலிகளைச் செலுத்தினார். ஆண்டவருக்குகந்த எரிபலியாக இருந்தப்படியால், அன்றிரவு ஆண்டவர் சாலமோனுக்குக் கனவில் தோன்றினார். "தம் தந்தையான தாவீது விதித்த நியமங்களின்படி நடந்துவந்தார்" (1அர. 3: 3) என்று சொல்லப்படுகின்றது. ஆண்டவர் தந்த நியமங்களின்படி வாழ்வதும் உண்மையான வழிபாடாக உள்ளது. வழிபாடு என்பது மனிதர்களுக்கு உகந்ததாய் இல்லாமல், ஆண்டவருக்குகந்ததாய் அமையவேண்டும். வழிபாட்டின் கூறுபாடு முக்கியம். சாலமோன் நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காய் ஆண்டவரை வழிபட்டார். வழிபாட்டில் சுயநலம் அல்ல, பொதுநலம் மேலோங்க வேண்டும். சுயநல வழிபாடு அல்ல, பொதுநல வழிபாடே ஆண்டவருக்கு உகந்தது.

3. ஆண்டவருக்குகந்த வேண்டுதல் (1அர. 3: 10)

"சாலமோன் இவ்வாறு கேட்டது ஆண்டவருக்கு உகந்ததாய்க் காணப்பட்டது". வேண்டுதல் என்ற சொல்லுக்கு "கேட்டல்" "இறைஞ்சுதல்" போன்ற விளக்கங்கள் உள்ளன. ஆண்டவருக்குகந்த வேண்டுதல் என்பது "பொதுநல வேண்டுதல்" ஆகும். சாலமோன் ஆண்டவரிடத்தில் கேட்டது பொதுநல வேண்டுதலாகும். 1அர. 3: 8-9 ஆகிய இருதிருமொழிகளிலும் சாலமோனின் பொதுநல வேண்டுதல் பற்றி சொல்லப்பட்டுள்ளது. ".... உம் மக்களுக்கு நீதி வழங்கவும் நன்மை தீமை பகுத்தறியவும் தேவையான ஞானம் நிறைந்த உள்ளத்தை அடியேனுக்குத் தந்தருளும்". கடவுளின் மறுமொழி 1அர. 3: 11 இல் ".... நீடிய ஆயுளையோ, செல்வத்தையோ நீ கேட்கவில்லை. உன் எதிரிகளின் சாவையும் நீ விரும்பவில்லை. மாறாக, நீதி வழங்கத் தேவையான ஞானத்தை மட்டுமே கேட்டிருக்கிறாய்" என்று கூறுகிறார். திருக்கோவில் அர்ப்பணம் முடிந்தபின் சாலமோன் கோவிலில் ஏறெடுத்த இறைவேண்டல் பொருள் பொதிந்த பொதுநல வேண்டுதலாய் உள்ளது. 1அர. 8: 22-61 வரை உள்ள திருமொழிகள் மக்களின் நலத்திற்கான வேண்டுதலாய்க் காணப்பட்டது.

நவம்பர் மாதம் பல சிறப்பு நாட்களை உள்ளடக்கியது. அவைகளில் சில..... நவம்பர் 1 "தேசிய ஒற்றுமை நாள்", நவம்பர் 13 "உலகக் கருணை நாள்", நவம்பர் 16 "உலக சமய சகிப்பு நாள்". ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும், உயர்வுக்கும் ஒற்றுமை, கருணை, சகிப்பு இன்றியமையாதவை. அதுபோல தான், தனிமனித உயர்வுக்கும், புகழுக்கும் ஆண்டவருக்குகந்த அன்பு, வழிபாடு, வேண்டுதல் இன்றியமையாதவையாகும். சாலமோன் ஆண்டவர் அருளும் உயர்வைப் பெற்றவர். அவரைப்போல, ஞானத்தில் சிறந்தவரைக் காண்பது அரிது. 1அரசர்கள் 4: 34 -இல் -சாலமோனின் ஞானத்தைக் கேட்கப் பல்வேறு இனத்தைச் சார்ந்தவர் அவரை நாடி வந்தனர். அவரது ஞானத்தைப் பற்றிக் கேள்வியுற்ற பின்னர் அவரைத் தேடி வந்தனர்". உயர்வருளும் ஆண்டவரை அன்புசெய்து, வழிபட்டு, இறைவேண்டல் ஏறெடுப்போம். இறையவர் அருளும் உயர்வைப் பெற்றுக்கொள்வோம், ஆமென்.

ப	ஞா. 35	கீர். 429

அருள்திரு. **M. ஜெஸ்லின் ஸ்டீபன்**

ஆயர், சகாயநகர்

இந்தக் குழந்தை என்னவாகப் போகிறதோ?

What this Child is Going to be?

நீ.த. 13: 1-14 எபே. 6: 1 - 4

தி.பா. 119: 9-16 லூக். 1: 57-66

"இக்குழந்தை எப்படிப்பட்டதாக இருக்குமோ?" என்று சொல்லிக் கொண்டார்கள். ஏனெனில் அக்குழந்தை ஆண்டவருடைய கைவன்மையைப் பெற்றிருந்தது" (லூக். 1: 66).

"பிள்ளைகள் குடும்பங்களுக்கு கடவுள் அருளும் அருள்கொடை. கடவுளின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற அருளப்படும் பெரும் செல்வம்; மக்கட்பேறு அவர்அளிக்கும் பரிசில்" (தி.பா. 127: 3).

ஒரு குழந்தை உலகில் பிறக்கும்போது பலவிதமான எதிர்பார்ப்புகள் ஏற்படுகின்றன. தோற்றத்தில் யாரைப்போல் இருக்கிறது? செயல்பாடுகளில் யாரைப்போல் இருக்கிறது? பண்பு நலனில் யாரைப்போல் இருக்கிறது? என குழந்தை வளர வளர அதன் எதிர்பார்ப்புகள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

முன் காலங்களில் குழந்தைகளுக்கு முதல் பிறந்தநாளைக் கொண்டாடும்போது குடும்பங்களில் சில சம்பிரதாய முறைகளைச் செய்வார்கள். அவைகளில் ஒன்று சோறு ஊட்டுதல். இலைபோட்டுச் சோறு, கூட்டு என சாப்பாடு வகைகளை வைத்துவிட்டுப் பணம், நகை, பென், புத்தகம் பைபிள் போன்ற பொருட்களையும் இலையில் வைப்பார்கள். அதன்பின் குழந்தையை இலைக்கு முன் உட்கார வைப்பார்கள். எந்தப் பொருளைக் குழந்தை எடுக்கிறதோ அதை வைத்து ஒரு கதை கட்டுவார்கள். இந்தக் குழந்தை எப்படிபட்டதாயிருக்குமோ? என்று ஆளாளுக்குத் தீர்மானிப்பார்கள்.

திருமறை ஒரு குழந்தையைக் குறித்து, இந்தக் குழந்தை எப்படிப்பாட்டாயிருக்குமோ? என்ற வியப்பு வினாவோடு விவரிக்கிறது. அக்குழந்தை ஆண்டவரால் அருள்கொடையாகக் கொடுக்கப்பட்டக் குழந்தை. சகரியா எலிசபெத் தம்பதியர்களுக்கு ஆண்டவர் கொடுத்தது. செக்கரியா அபியா என்னும் ஆசாரிய வகுப்பைச் சார்ந்தவர். இருவரும் முதிர் வயதாயிருந்தனர். பிள்ளைச் செல்வம் இல்லை. ஆசாரியப் பணிசெய்யும் முறையைப் பெற்றுப் பணியாற்றுகிறார் சகரியா. மக்கள் ஆலயத்தின் வெளியே நின்று சேர்ந்து ஜெபித்துக் கொண்டிருக்கிறார்கள். செக்கரியா தூப பீடத்தின் முன்நின்று தூபம்

காட்டுகிறார். கடவுளின் தூதன் செக்கரியாவைச் சந்திக்கிறார். தூதனைக் கண்டு அச்சம் கொண்ட செக்கரியாவிடம், "அஞ்சாதீர், உமது மன்றாட்டு கேட்கப்பட்டது. உம் மனைவி எலிசபெத்து உமக்கு ஒரு மகனைப் பெற்றெடுப்பார்; அவருக்கு யோவான் என்று பெயரிடுவீர்" (லூக். 1: 13) என்று குறிப்பிட்டு அந்தக் குழந்தையைக் குறித்த விரிவான செய்தியையும் விவரித்துச் செல்கிறார்.

இந்தக் குழந்தை பிறந்து, எட்டாம் நாளில் அதற்கு பெயர் சூட்டும் விழா நடைபெற்றது. உறவினர்கள் புடைசூழ யோவான் என்று பெயரிட்டார் செக்கரியா. தூதனின் வாக்கில் சந்தேகம் எழுப்பியதால் வாய் பேச இயலாதிருந்த செக்கரியாவின் நாவு கட்டவிழ்ந்தது; வாய்திறந்து பேசினார். சுற்றியிருந்தோர் இதனைக் கண்டபொழுது ஆச்சரியத்துடன் "இந்தக்குழந்தை எப்படிப்பட்டதாயிருக்குமோ?" என வினா எழுப்பினர். இந்தக் குழந்தையைக் குறித்து திருமறை குறிப்பிடுவதைத் தொடர்ந்து கற்றுக் கொள்வோம்.

1. கடவுளின் திட்டத்தை நிறைவேற்ற வந்த குழந்தை

எந்தக் குழந்தைக்கும் அது உலகில் பிறப்பதற்கு முன் அதன் எதிர்கால வரலாறு ஒருபோதும் எழுதப்படுவதில்லை. ஆனால் யோவானின் பிறப்பு அப்படியல்ல அனைத்தும் முன்கூட்டியே தீர்மானிக்கப்படுகிறது. உலகில் பிறக்கும் ஒவ்வொரு மனிதரிலும் கடவுளின் திட்டம் ஒன்று உண்டு. கற்றவர் கல்லாதவர், உயர்ந்தவர் தாழ்ந்தவர், ஆண் பெண், ஏழை செல்வந்தர் என்ற வேறுபாடு இதில் வெளிப்படுவது இல்லை. கடவுளின் திட்டம் அனைவரிலும் வெளிப்படுகிறது. அது நிறைவேற அர்ப்பணிப்போரை ஆற்றலோடு பயன்படுத்துகிறார்.

அடிமைத்தனத்தில் பிறந்த மோசே கடவுளின் அழைப்புக்குத்தன்னை அர்ப்பணித்தபோது இஸ்ரயேல் மக்களை அடிமை வாழ்விலிருந்து விடுவிக்கும் விடுதலைத் தலைவனாய் தம் திட்டத்திற்குக் கடவுள் பயன்படுத்துகிறார். சாதாரணக் குடும்பத்தில் அன்னாளின் நம்பிக்கைமிகு இறைவேண்டலில் பிறந்த சாமுவேல் கடவுளின் வாக்குக்குத் தன்னை அர்ப்பணித்த போது கடவுளின் திட்டம் நிறைவேற அவனைப் பயன்படுத்துகிறார். கடவுளின் வாக்குப்படியே பிறந்த யோவான் உலகின் மீட்பருக்கு வழியை ஆயத்தப்படுத்தும் முன் தூதனாக இறைவனின் திட்டத்தை உள்ளபடியே நிறைவேற்றுகிறார். மட்டுமல்ல அவனில் கடவுள் வைத்திருந்த முழு திட்டத்தையும் இங்கே வெளிப்படுத்துகிறார்.

"நீர் மகிழ்ந்து பேருவகை கொள்வீர்.

அவரது பிறப்பால் பலரும் மகிழ்ச்சியடைவர்.

அவர் ஆண்டவர் பார்வையில் பெரியவராயிருப்பார்

திராட்சை மதுவோ வேரு எந்த மதுவோ அருந்தமாட்டார்.

தாய் வயிற்றில் இருக்கும்போதே தூய ஆவியால் முற்றிலும்

ஆட்கொள்ளப்படுவார். அவர் இஸ்ரயேல் மக்களுள் பலரைத் தம் கடவுளாகிய ஆண்டரிடம் திரும்பி வரச்செய்வார்" (லூக். 1: 14, 15, 16). மனமாற்றம் பெற்ற ஒரு புது சமூகத்தை உருவாக்கும் கடவுளின் திட்டம் இங்கே முன் குறிக்கப்படுகிறது.

கடவுள் இன்று நம் குடும்பங்களில் செல்வமாகக் கொடுத்திருக்கும் ஒவ்வொரு குழந்தைகளலும் கடவுளின் திட்டம் வெளிப்படையாய் இருந்து கொண்டிருக்கின்றன. அதனை நாம் அடையாளம் கண்டு கடவுளின் நோக்கத்தை நிறைவேற்றுவதில் முன்னுரிமை அளிக்க வேண்டும். கடவுளின் நியமங்களில் வாழும் பெற்றோரால் இதனை நிறைவேற்றிட இயலும். திருமுழுக்குநர் யோவானின் பெற்றோர் செக்கரியா, எலிசபெத் "இருவரும் கடவுள் பார்வையில் நேர்மையானவர்களாய் விளங்கினார்கள். ஆண்டவருடைய அனைத்துக் கட்டளைகளுக்கும் ஒழுங்குகளுக்கும் ஏற்பக் குற்றமற்றவர்களாய் நடந்து வந்தார்கள்" (லூக். 1: 6). பெற்றோர், ஆசிரியர்கள் நல் மாதிரிகளாய் வாழ்ந்து கடவுளின் திட்டம் நிறைவேற குழந்தைகளை உருவாக்குவோம்.

2. கடவுளின் ஆற்றலை வெளிப்படுத்திய குழந்தை

கடவுளின் ஆற்றல் அளவிட இயலாதது. அவரது ஆற்றலைத் தமதாக்கியவர்கள் உலகின் சவால்களை எதிர்கொள்ளும் துணிச்சலைப் பெற்றுக் கொள்கின்றனர். யோவானைக் குறித்து ஆண்டவர் சொன்ன அற்புதமான உண்மை அவன் இறையாற்றலோடு உலகில் பிறப்பான் என்பதுதான். எலியாவின் உளப்பாங்கையும் வல்லமையையும் உடையவராய் அவருக்கு முன் செல்வார்; தந்தையரும் மக்களும் உளம் ஒத்துபோகச் செய்வார் (லூக். 1: 17). அவர் ஆண்டவர் பார்வையில் பெரியவராயிருப்பார்; தாய் வயிற்றில் இருக்கும்போதே தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்படுவார் (லூக். 1 : 15). இயேசு கிறிஸ்துவே யோவானைக் குறித்து, மனிதராய்ப் பிறந்தவர்களுள் யோவானை விடப் பெரியவர் ஒருவரும் இல்லை (லூக். 7: 28) எனச் சான்று பகர்கிறார்.

இறை நீதியை வெளிப்படுத்தும் ஆற்றல் யோவானிடம் வெளிப்பட்டது. உண்மையையும் நீதியையும் வெளிப்படையாய் சொல்லும் சுதந்திரம் இல்லாத காலச்சூழலிலும் மன்னன் ஏரோதின் முறைகேடான வாழ்வை கண்டிக்கும் ஆற்றல் உடையவராயிருந்தார். அதற்கான பரிசு சிறையும் மரணமும் என்றாலும் துணிச்சலோடு ஏற்றுக்கொண்டார். அநீதிக்கு அஞ்சாத ஆற்றல் ஆண்டவரிடமிருந்து மட்டுமே வருகிறது.

3. பெற்றோரின் சான்று வாழ்வுக்குப் பரிசான குழந்தை

பெற்றோர் எப்போதுமே பிள்ளைகளுக்கு நன்மாதிரிகள். பெற்றோரின் அறிவுரைகளில் மட்டும் அல்ல பெற்றோரின் வாழ்வைப் பார்த்தே ஒவ்வொரு குழந்தைகளும் உலகில் வளர்கிறது. யோவானின் பெற்றோர் செக்கரியா, எலிசபெத் அவர்கள் இருவரும் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும்

நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து கடவுளுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாய் இருந்தார்கள் (லூக். 1: 6). செக்கரியா எலிசபெத் தம்பதியரின் வாழ்வுமுறை முதிர்ந்த வயதில் ஒரு மகனைப் பெற்றுக்கொள்வதற்கும் இறைவனின் திட்டத்தை அவன்வழி நிறைவாக்குவதற்கும் காரணமாய் அமைந்தது.

உலகில் ஒவ்வொரு குழந்தைகளும் கடவுளின் ஆற்றலோடு அவரின் திட்டத்தை நிறைவாக்கவே படைக்கப்பட்டவர்கள். அவர்களை உருவாக்குவதில் பெற்றோர், ஆசிரியர்களின் பங்கும் பணியும் அளவிட இயலாதது. நல்ல ஆடை, நல்ல கல்வி, நல்ல உணவு என நல்லவைகளையே குழந்தைகளுக்குக் கொடுத்து சிறப்பானவர்களாக அவர்களை உருவாக்க நினைக்கும் பெற்றோர் ஆண்டவரை, இறைவார்த்தையை அவர்களுக்குக் கொடுத்து இறையாற்றலோடு அவர்கள் வாழ உருவாக்குவதில் தவறி விடுகின்றனர்.

1780-ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் தொழிற்புரட்சியின் காலத்தில் பெற்றோரின் சரியான பராமரிப்பில்லாமல் தெருக்களில் காலத்தைச் செலவிட்ட பிள்ளைகளின் மீது கரிசனையும் தரிசனமும் உரையவாராய் ராபர்ட் ரெய்க்ஸ் அவர்கள் ஆண்டவருக்கென்று உருவாக்கி எடுத்தார்கள். அவருடைய சான்றான வாழ்வும் பணியுமே திருமறைப்பள்ளி என்னும் இயக்கம் உலகளாவிய திருச்சபையில் தூணாக நிற்க உதவியிருக்கிறது. அவர்பெற்ற இறையாற்றல் குழந்தைகளிடம் பாய்ந்து செல்லப் பிரயாசப்பட்டு வெற்றி கண்டார்.

ஆண்டவர் நம் குடும்பங்களில் தந்திருக்கும் குழந்தைகள் எப்படிப்பட்டதாயிருக்குமோ என்ற கேள்வி நமக்கும் எழுவதுண்டு. கடவுளின் திட்டத்தை நிறைவேற்ற அவர் தந்திருக்கும் குழந்தைச் செல்வங்கள் அவர் ஆற்றலோடு வளர்வதற்கு நம் வாழ்வைச் சான்றாக்குவோம். இறையாசி காண்போம், ஆமென்.

ப	ஞா. 399	கீர். 508

அருள்திரு. J. வின்சென்ட் ராபர்ட்
இயக்குநர், கிறிஸ்தவக் கல்வி வளர்ச்சித்துறை

இறைவேண்டல்

கடவுளே, உமது மகனாகிய இயேசு கிறிஸ்து எங்கள் குழந்தைகளைத் தமது அரசின் வாரிசுகளாக ஏற்றுக்கொண்டதை நினைத்து உமக்கு நன்றி செலுத்துகிறோம். எல்லா குழந்தைகளும் உமது அறிவிலும், ஞானத்திலும் வளர்ந்து அனைத்து உலகத்திற்கும் ஆசீர்வாதமாக மாறுவதற்கு அவர்களை ஆசீர்வதியும். மேலும், திருச்சபைகள் அனைத்தும் சிறியவர்களைக் கவனித்து, அவர்களை அரவணைக்க, நல்லதோர் மனதைக் கொடுக்க மன்றாடுகிறோம். உம்மோடும் தூய ஆவியரோடும் இப்போதும் எப்போதும் வாழ்ந்து ஆட்சி செய்யும் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாயிலாக வேண்டுகிறோம், ஆமென்.

திராட்சைச் செடியும் கொடிகளும்

Vine and Branches

எசே. 37:15-23 1 கொரி. 12:12-27

தி.பா. 133 யோவா. 15:1-8

"நான் உங்களோடு இணைந்து இருப்பதுபோல நீங்களும் என்னோடு இணைந்து இருங்கள்" (யோவா. 15: 4).

இஸ்ரவேலர் பாரம்பரியத்தில் திராட்சை மிகவும் மதிப்பு மிக்க ஒன்றாக காணப்படுகிறது. ஆகவே இயேசு கிறிஸ்துவும் அவர்களது நடைமுறை வாழ்வில் முக்கிய பங்கு வகிக்கின்ற திராட்சையை மைப்படுத்தி (யோவான் 15: 1-8) ஒற்றுமையைக் கற்பிக்கிறார்.

திருப்பாடல் 133-இல் குடும்ப ஒற்றுமையைக் குறித்துச் சொல்லப்படுகிறது. முதலாவது இது ஆசாரியர்களின் அருட்பொழிவிற்கு ஒப்புமைப்படுத்தப்படுகிறது திருமறையில் முதல் அருட்பொழிவு ஆரோனின் அருட்பொழிவாகக் காணப்படுகிறது இதற்குப் பயன்படுத்த வேண்டிய தூய திருப்பொழிவு எண்ணெய் செய்முறை குறித்து வி.ப. 30: 23-25-இல் சொல்லப்படுகிறது. 500 சேக்கல் எடையுடைய உயர்த்தர வெள்ளைப்போளம், 250 சேக்கல் எடையுடைய மணங்கமழும் கருவாப்பட்டை, நறுமண வசம்பு, 500 சேக்கல் எடையுடைய இலவங்கப்பட்டை, மற்றும் 1 கலயம் ஒலிவ எண்ணெய் ஆகியவை பயன்படுத்தி தயாரிக்கப்படுகிற வாசனை மிகுந்த எண்ணெயாகக் காணப்படுகிறது, இது இறையாசிக்கு அடையாளமாகக் கருதப்பட்டது.

இரண்டாவது இயற்கை அழகிற்கும் இணையாக ஒப்பிடப்படுகிறது. பொதுவாக மக்கள் குளிர்ச்சியான இடங்களை விரும்பி சுற்றுலாச் செல்வது வழக்கம். 3-ஆவது வசனத்தில் குறிப்பிடப்படுகிற இரண்டு இடங்களும் ஒன்றுக்கொன்று முரணானவை சீயோன் உயர்ந்த குளிர்ச்சியான மலைப் பகுதியாகவும், எர்மோன் வறண்ட வெப்பம் அதிகமுள்ள நிலப்பகுதியாகவும் காணப்படுகிறது. ஆனால் குளிர்ச்சி எங்கும் பரவும்போது மக்கள் மனதில் புத்துணர்ச்சியையும், மகிழ்ச்சியையும் உருவாக்குகிற நல் வாழ்வைக் குறிப்பிடுகிறது.

இவ்வளவு சிறப்பு மிக்க கூட்டு வாழ்வு தற்காலத்தில் சிதைவுப்பட்டு ஆதரவற்ற தனிமை வாழ்வே மேலோங்கிக் காண்படுகிறது. ஆனால் கடவுள் ஒற்றுமையின் வாழ்வுக்கு நம்மை அழைக்கிறார் என்பதைத் திருமறையின் அடிப்படையில் தியானிப்போம்.

1. இணைத்து அரவணைக்கும் இறைவன்

யோவான் 15: 2-இல் தந்தையாகிய கடவுள் திராட்சைத் தோட்டத்தை நட்டு வளர்ப்பவராக ஒப்புமைப்படுத்தப்படுகிறார். பொதுவாகத் திராட்சைக் கொடியானது நடப்பட்ட பின் தானாக படர்ந்து கனிக்கொடுப்பது அரிது. அதைப் பராமரிக்கிறவர்கள் அருகில் ஊன்றுகோலை நாட்டிக் கொடி அதில் படரும்படியாக இரண்டிற்கும் ஒரு இணைப்பை ஏற்படுத்தி பராமரிப்பர். இதே செயலினை எசே. 37: 15-23 திருமறைப்பகுதி நமக்கு விவரிக்கிறது. சாலமோன் அரசரின் காலத்திற்குப் பின்பு ஒன்றுபட்ட இஸ்ரவேல், யூதேயா மற்றும் இஸ்ரவேல் (சமாரியா); என்னும் இரண்டு நாடுகளாகப் பிளவுபட்டது. இவ்விரு நாட்டு மக்களும் வெவ்வேறு காலங்களில் சிறைப்பிடிக்கப்பட்டு அடிமைகளாய் வாழ்ந்தபோதும் முந்திச் சிறைப்பட்டவர்கள் ஆண்டவரின் பிள்ளைகள் என்கிற வேற்றுமை எண்ணங்கள் காணப்படுகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் எசேக்கியேலிடம் ஆண்டவர் பிரிந்துகிடக்கின்ற இரண்டு மக்கள் கூட்டங்களையும் ஒன்றாக்குவேன் என்று வாக்களிக்கிறார். பொதுவாகக் கொடியும் அதன் ஊன்றுகளும் இணைந்தபின் அவை இரண்டாகச் சொல்லப்படுவதில்லை அல்லது பார்க்கப்படுவதில்லை. இரண்டும் ஒன்றாகவே கருதப்படுகிறது. இதனை எசே. 37: 19 மற்றும் 22 ஆகிய வசனங்கள் தெளிவுபடுத்துகிறது.

திருத்தூதுவராகிய பவுல் கொரிந்தியருக்கு எழுதும் போது “உடல் ஒன்றே; உறுப்புகள் பல” என்று ஒன்றிணைந்த மக்களை சரீரத்தோடு ஒப்பிடுகிறார். இப்படி ஒன்றினைக்கப்பட்ட மக்களுக்குக் கடவுளே தலைவராக இருந்து அரவணைப்பேன் என்று எசே. 37: 22-23-இல் வாக்குப்பண்ணுகிறார்.

2. இணைய அழைக்கும் இறைவன்

திருமறை முழுவதுமே கடவுள் தம்மோடு இணைந்து வாழும்படியாக மக்களை அழைக்கும் குரல் பதிவுசெய்யப்பட்டுள்ளது. யோவான் நற்செய்தி நூலிலும் திருமைந்தன் இயேசு கிறிஸ்து சீடர்களைத் தம்மோடு இணைந்து பலன் கொடுக்கும்படியாக அழைக்கிறார் (யோவான் 15: 5).

கிரேக்க இலக்கணத்தில் காய் (Kai) என்கிற சந்திச்சொல் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. இது மூன்று விதமான பொருள்கொள்ள இடமளிக்கிறது.

I. நான் உங்களில் நிலைத்திருப்பது போல நீங்களும் என்னில் நிலைத்திருங்கள்.

II. நீங்கள் என்னில் நிலைத்திருந்தால் நானும் உங்களில் நிலைத்திருப்பேன்.

III. என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்.

இவை மூன்றும் திருமைந்தன் தம்மோடு இணைந்து வாழ அழைக்கும் அழைப்பின் குரலாக பதிவுசெய்யப்படுகிறது. இதில் மறை முகமாக ஒரு எச்சரிப்பின் செய்தியும் சொல்லப்படுகிறது.

பொதுவாகத் தோட்டப் பராமரிப்பாளர்கள் கொடிக்கும் ஊன்றுக்கும் பிணைப்பை ஏற்படுத்த முயற்சிப்பது அக்கொடிக்குத் தரப்படும் வாய்ப்பாக கருதப்படுகிறது. ஆனால் கொடியானது ஊன்றுகளிலே படருவதும் அல்லது படராமலிருப்பதும் கொடியினுடைய விருப்பமே அது படர்ந்தது என்றால் மதிப்புமிக்கதாக மாற்றம் பெறுகிறது இல்லையென்றால் அது பயனற்றுப் போகிறது. கடவுள் அவரில் இணைந்து பலன் தரும்படி யாவரையும் அழைக்கிறார்.

3. இணைந்து ஆற்றல்ப்படுத்தும் இறையடியவர்கள்

கிறிஸ்தவ வாழ்வு என்பது ஒன்றினைந்து பலப்படுகிற வாழ்வாகவே இருக்கிறது. திப. 4: 32-இல் “நம்பிக்கையுடைய மக்கள் அனைவரும் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்தனர். அவர்களுள் எவரும் தமது உடைமைகளைத் தம்முடையதாகக் கருதவில்லை; எல்லாம் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது” என்று முதல் கிறிஸ்தவ ஐக்கியத்தைப் பற்றிக் குறிப்பிடப்படுகிறது.

நீதி. 17: 17-இல் “நண்பன் எப்போதும் அன்பு காட்டுவான்; இடுக்கணில் உதவுவதற்கே உடன் பிறந்தவன் இருக்கிறான்” என்று சாலமோன் அரசர் பதிவிடுகிறார். தமிழில் “தம்பி உடையான் படைக்கு அஞ்சான்” என்கிற பழமொழி உண்டு. பொதுவாக நமக்குத் துணையாக ஒருவர் இருக்கிறார் என்னும்போது மிகப் பெரிய காரியங்களையும் எனிதாகச் செய்து முடிக்கும் மன உறுதி பெறுகிறோம்.

திருதூதுவரான பவுல் கொரிந்து பட்டணத்தாருக்கு ஆலோசனை சொல்லும்போது நாம் கிறிஸ்துவுக்குள் ஒரே உடலாக இருக்கிறோம் (1கொரி. 12: 12-13) என்று சொல்லுகிறார். இதன் பின்பகுதி உடலுடன் ஒப்பிடப்படுகிறது. பொதுவாக நம் உடலில் பெலன் குறைந்த உறுப்புகள் மற்ற உறுப்புகளால் பாதுகாக்கப்படுகிறது. அதைப்போல் காயப்பட்ட உறுப்பு குணமடைந்து ஆறுதல் பெறும்போது மற்ற உறுப்புகளும் அக்காயத்தின் வேதனை மறந்து செயல்படுகிறது (1கொரி. 12: 22-26).

திராட்சைக் கொடிக்குத் தானாக நிமிர்ந்து நிற்கும் திறன் கிடையாது. அதேபோல் ஊன்றுக்கு கனிகொடுக்கும் தன்மை கிடையாது ஆனால் இரண்டும் இணைந்து இருக்கும்போது நிமிர்ந்து நின்று கனிக்கொடுக்கிறது. இரண்டாலும் தனித்தனியே பலன் கொடுக்க இயலாது ஒன்றின் இயலாமை மற்றொன்றால் நிவிர்த்தி செய்யப்படுகிறது (யோவான் 15: 4-5).

முடிவுரை :

இவ்வுலக வாழ்வில் எல்லாரும் (மனிதர்களும், இறைவனும்) இணைந்து வாழ வேண்டும் என்பது இறை விருப்பம். ஆனால், மனிதன் தன் சுய ஆதாயத்திற்காகத் தனிமையையே விரும்பி ஆதரவற்றவனைப்போல வாழ்கிறான். தனி மரம் ஒரு நாளும் தோப்பாக எண்ணப்படுவதில்லை. அதைப்போல் ஊன்றுகள் இல்லாத கொடிகளும் பலன் தருவதில்லை என்பதைப் புரிந்து கொள்கிறவர்களாய் பெற்றோர்கள், உடன் பிறந்தவர்கள், நண்பர்கள் உற்றார் மற்றும் உறவினார்களோடு இணைந்து வாழ்வதுபோல இறைவனோடும் இணைந்து வாழ்ந்து மற்றவர்கள் துவழும்போது அவர்களைத் திடப்படுத்தி யாவரும் இணைந்து பூரண வாழ்வு காணத் தூய ஆவியானவர் நம் அனைவரையும் ஆட்கொள்வாராக, ஆமென்.

அருள்திரு. **J.S. ஜெய்சிங்**
ஆயர், சீயோன்புரம்

ப	ஞா. 2	கீர். 206

இறைவேண்டல்

எல்லாம் வல்ல கடவுளே, உமது ஆற்றலையும் ஞானத்தையும் வெளிப்படுத்தும் படைப்பின் பன்முகத்தன்மைக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். எங்கள் தனித்துவமான திறன்களை உறுதிப்படுத்தவும், கொண்டாடவும் எங்களுக்கு உதவி செய்யும். உம் படைப்புகள் அனைத்தின் நல்வாழ்வுக்காக, எங்கள் இதயமும் மனமும் ஒருமைப்பட உம்மிடம் வேண்டுகிறோம். உம்மோடும் தூய ஆவியரோடும் இப்போதும் எப்போதும் வாழ்ந்து ஆட்சி செய்யும் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாயிலாக வேண்டுகிறோம், ஆமென்.

பெண் குழந்தையின் மதிப்பை உறுதி செய்தல்

Affirming the Worth of the Girl Child

எண். 27: 1 -11 தி.ப. 21: 7 - 14

தி.பா. 71: 1 - 12 மாற். 5: 35 - 43

இயேசு சிறுமியின் கையைப் பிடித்து அவளிடம் "தலித்தா கூம்" என்றார் அதற்கு, "சிறுமி, உனக்குச் சொல்லுகிறேன், எழுந்திடு" என்பது பொருள் (மாற். 5: 41).

"பெண் குழந்தை என்பது கடவுளின் பெண் முகமாகும்" பெண்கள் இல்லாத உலகத்தை யாராலும் கற்பனை செய்து பார்க்க முடியாது. இது சாத்தியமில்லை. ஒரு பெண் பூமிக்கு உயிரைக் கொண்டுவரும் விலைமதிப்பற்ற ஆன்மா. ஒவ்வொரு பெண் குழந்தையும் முறையாகப் படித்தால், உலகில் கல்வியறிவின்மை இருக்காது. இந்தியாவில் கல்வி உரிமை, பாதுகாப்பிற்கான உரிமை, பங்கேற்பதற்கான உரிமை, வளர்ச்சிக்கான உரிமை என நான்கு முக்கியமான குழந்தை உரிமைகள் உள்ளன.

கல்வி, அதிகாரமளித்தல், தலைமைத்துவம் மற்றும் சமூகப் பொறுப்பு ஆகியவற்றைத் செயல்படுத்துவதன் மூலம், பெண்கள் தங்களுக்கும் தங்கள் சமூகங்களுக்கும் பிரகாசமான எதிர்காலத்திற்கு பங்களிக்க முடியும். இந்தப் பொறுப்புகளை அவர்கள் நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆதரவையும் வாய்ப்புகளையும் சமூகம் அவர்களுக்கு வழங்குவது முக்கியம். திருமறையில் இந்த வாய்ப்புகள் வழங்கப்பட்ட, வாய்ப்புகளைப் பெற்றுக்கொண்ட பெண்களைக் குறித்து தியானிப்போம்.

1. சொத்துரிமை பெற்ற மகள்கள் : (எண். 27 :1 -11)

இந்தியாவில் மதம் மற்றும் சமூகத்தின் அடிப்படையில் பெண்களுக்குச் சொத்துரிமை 1937 ஆம் ஆண்டு வரையிலும் மறுக்கப்பட்டிருந்தது. பல ஆண்டுகளாக நடந்த போராட்டங்களினாலே 1937 ஆம் ஆண்டில் இந்துப் பெண்கள் சொத்துரிமை சட்டம், 1956-ஆம் ஆண்டில் இந்து வாரிசு சட்டம், 2005 ஆம் ஆண்டில் இந்து வாரிசு திருத்தச் சட்டம், என சட்டங்கள் கொண்டுவரப்பட்டு சீர்திருத்தங்களும் செய்யப்பட்டன. 2005 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இந்து வாரிசுரிமைச் சட்டத்தில் ஆண்களுக்கு நிகராகப் பெண்களுக்கும் சொத்தில் சம உரிமை உண்டு என திருத்தம் செய்யப்பட்டது.

திருமறையில் பழைய தலைமுறையிலிருந்து புதிய தலைமுறையினராக வனாந்தரத்திற்குச் சென்ற அனைவருக்கும் வாக்குறுதியளிக்கப்பட்ட தேசத்தில் புதிய வாழ்க்கையை மட்டுமல்ல, குறிப்பாகப் பெண்களுக்கு உரிமைக்கான குரல் எழுப்ப வாய்ப்பு கொடுக்கப்பட்டது (எண். 27: 4). இது சமத்துவத்திற்கான சாத்தியக்கூறுகளுக்கு வழிவகுத்தது. சட்ட மற்றும் பொருளாதார சமத்துவமின்மைக்கு நிவாரணம் கோரிப் பெண்கள் மோசேயிடம் எப்படி மனு கொடுக்க முடிந்தது என்பதையும் இந்த நிகழ்வு காட்டுகிறது. செலொபுகாத்தின் ஐந்து மகள்களான மக்லா, நோகா, ஒக்லா, மில்கா, திர்சா இவர்களின் வரலாறு இஸ்ரேலியப் பெண்களுக்கு நிலத்தை வாரிசு செய்வதற்கான வரையறுக்கப்பட்ட உரிமையைச் சட்டப்பூர்வமாக்குகிறது. ஆப்பிரிக்க பழமொழி உண்டு, "வேகமாக செல்ல விரும்பினால் தனியாக செல்லுங்கள். நீங்கள் வெகுதூரம் செல்ல விரும்பினால், ஒன்றாகச் செல்லுங்கள்". செலொபுகாத்தின் மகள்கள் வெகுதூரம் சென்று, மோசேயின் கண்களில் தயவையும், கடவுளின் அங்கீகாரத்தையும் பெற்றனர், ஏனென்றால் அவர்கள் ஒன்றாக வேலை செய்தனர். கூட்டுறவில் பெரும் சக்தி இருக்கிறது. ஒத்துழைக்க கடவுளால் அழைக்கப்பட்டுள்ளோம்.

நம்பிக்கையின் மகள்களாகிய செலொபுகாத்தின் இந்த மகள்களைப் பின்பற்றும்படி நாம் அறிவுறுத்தப்படுகிறோம். அசாதாரணமான ஒன்றைக் கேட்பதன் வாயிலாக, இந்த ஐந்து இளம் பெண்கள் செயல்களில் நம்பிக்கையினைக் காண முடிகிறது. அவர்களுடைய தந்தை வனாந்தரத்தில் இறந்துவிட்டார் என்பதையும், அவர் கோராகைச் சார்ந்தவர்களின் கிளர்ச்சியின்போது அவர்களோடு இருக்கவில்லை என்பதையும் மோசேக்கு நினைவூட்டுகிறார்கள். எனவே அவர்கள் தந்தையின் பாகத்தைக் கேட்கிறார்கள்.

இஸ்ரவேலர்கள் வாக்களிக்கப்பட்ட தேசத்திற்குள் நுழைவதற்கு சற்று முன்பு, இந்த நிகழ்வு வனாந்தரத்தில் நடைபெறுகிறது. எனவே, செய்யப்படும் அனைத்தும், நம்பிக்கையில் செய்யப்படுகின்றன; இஸ்ரேலுக்கு இன்னும் ஒரு அங்குல நிலம் இல்லை. இஸ்ரவேலர்கள் தங்களுக்கு நிலம் கிடைக்கும் என்ற கடவுளின் வாக்குறுதியை வெறுமனே நம்பி, விசுவாசத்துடன் செயல்பட்டு, அதைத் தங்களுக்குள் ஏற்கனவே பிரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் கோத்திரங்கள் மற்றும் மனாசேயின் வம்சத்தினரிடையே செலொபுகாத்தின் பெயர் இழக்கப்படும் அபாயம். அவருடைய மகள்கள் எல்லாம் தங்களுக்கு எதிராக இருப்பதாக உணர்கிறார்கள். இருப்பினும், இதுபோன்ற ஒரு சூழ்நிலையை யாரும் இதுவரை சந்தித்ததில்லை. தைரியம் மற்றும் நம்பிக்கை ஆகியவற்றால் தூண்டப்பட்ட இளம் பெண்கள், அவர்கள் கேட்டால், தங்களுடைய வாரிசைப் பெறுவதற்கு ஒரு வாய்ப்பு இருக்கலாம் என்பதை உணர்கிறார்கள். நம்பிக்கை இங்கே முக்கியமானது. எந்த வயதிலும், நம்பிக்கை என்பது ஆசீர்வாதத்திற்கான குறிச்சொல். ஒருவருடைய வாழ்க்கையில் விசுவாசம் இல்லாமல் கடவுளிடமிருந்து எதுவும் பெற்றுக் கொள்ள முடியாது (கலா. 3: 11).

இஸ்ரவேலருக்குக் கானான் தேசம் சுதந்தரமாக வாக்களிக்கப்பட்டதை இந்த இளம் பெண்கள் அறிந்திருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த வரலாறு தெரியும், அறிவே இவர்களுடைய சக்தி. அந்த வாக்குறுதி பாலும் தேனும் ஓடும் நிலம் சம்பந்தப்பட்டது என்பதை இவர்கள் அறிந்திருந்தார்கள்; பாலும் தேனும் ஓடுகிற ஆசீர்வாதங்களின் வாக்குதத்த நிலத்தின் ஒரு பகுதியை அவர்கள் பெற விரும்புகிறார்கள். இஸ்ரவேலின் சட்டம் மற்றும் பழக்கவழக்கங்களில் கலாச்சார பாலினப் பாகுபாடு, தந்தைக்கு ஆண் குழந்தை இல்லாதது ஆகியவை இவர்கள் தங்கள் பங்கைப் பெறுவதற்குத் தடையாக இருந்தாலும், தகப்பனாரின் உரிமைச் சொத்தைப் பெறுவதில் இவர்கள் உறுதியாக இருந்தார்கள். இந்தப் பெண்களின் நம்பிக்கையின் செயல் ஒரு புதிய சட்டத்தின் அடிப்படையை உருவாக்கியது.

2. இறைப்பணிக்கான உரிமைபெற்ற மகள்கள்: (தி.ப. 21: 7 - 14).

செசரியா பட்டணத்தில் நற்செய்தி அறிவிப்பவரான பிலிப்பு என்பவருக்குத் திருமணம் ஆக நான்கு பெண் மக்கள் இருந்தனர் அவர்கள் இறைவாக்குரைத்து வந்தார்கள் (தி.ப. 21 : 9). பெண்களின் பெயர்கள் சொல்லப்படவில்லை. பழைய ஏற்பாட்டு காலத்தில் கர்த்தருடையப் பணியைப் பல பெண்கள் செய்ததாகத் தகவல்கள் திருமறையில் இடம் பெற்றுள்ளன. பழைய ஏற்பாட்டில் பெண் இறைவாக்கினர் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (மிரியாம் (விப. 15: 20, 21), தெபோரா (நீதி 4: 4), குல்தா (2 அர 22: 14)).

இறைவாக்கு உரைக்கும் வரம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் கொடுக்கப்பட்டிருந்தது. இறுதி நாள்களில் நான் மாந்தர் யாவர்மேலும் என் ஆவியைப் பொழிந்தருள்வேன் உங்கள் புதல்வரும் புதல்வியரும் இறைவாக்கு உரைப்பார்..... அந்நாட்களில் உங்கள் பணியாளர் பணிப்பெண்கள் மேலும் ஆவியைப் பொழிந்தருள்வேன் அவர்களும் இறைவாக்கு உரைப்பர் (யோவே. 2: 28-32; தி.ப. 2: 17, 18). கர்த்தருடைய பணி இருபாலருக்கும் பொதுவானது. ஆரம்பகால தேவாலயத்தில் பெண்கள் வகித்த முக்கியமான பங்கை எடுத்துக்காட்டுகிறது. பாலினம் பாராமல் அனைத்து விசுவாசிகளும் தங்கள் திறமைகளையும் வரங்களையும் கடவுளுடைய சேவை செய்ய, இரட்சிப்பின் செய்தியைப் பிரகடனப்படுத்த அழைக்கப்படுகிறார்கள் என்பதை இது நினைவூட்டுகிறது. பொதுவெளியில் பெண்கள் பேசக்கூடாது என்கின்ற பழைமை வாதத்தைத் தவிர்த்து பிலிப்புவின் பெண் பிள்ளைகள் நான்கு பேரும் இறைவாக்குரைக்கும் வரம் பெற்று கடவுளின் வார்த்தையைப் பேசுகின்ற உரிமையையும் பெற்றுச் செயல்பட்டு இருக்கிறார்கள்.

3. வாழ்வுரிமைப் பெற்ற மகள் : (மாற். 5: 35 - 43)

தொழுகைக் கூடத் தலைவர்களுள் ஒருவரான யாயிர் என்பவர் வந்து, இயேசுவைக் கண்டு அவரது காலில் விழுந்து, என் மகள் சாகும் தருவாயில் இருக்கிறாள் நீர் வந்து அவள் மீது உம் கைகளை வையும் அப்பொழுது அவள் நலம் பெற்றுப் பிழைத்துக் கொள்வாள் என்று அவரை வருந்தி வேண்டினார் (மாற் 5: 22). சிறிது நேரத்தில் தொழுகைக் கூடத் தலைவருடைய மகள் மரித்துப்

போனாள் என்ற செய்தி வருகின்றது. அப்பொழுது இயேசு, அஞ்சாதீர் நம்பிக்கையை மட்டும் விடாதீர் என்று கூறித் தன்னுடைய சீடர்களாகிய பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் அழைத்துக் கொண்டு ஜெப ஆலயத் தலைவருடைய இல்லத்திற்குச் செல்லுகின்றார். பிள்ளையின் தகப்பனையும் தாயையும் தம்மோடு வந்த சீடர்களையும் அழைத்துக் கொண்டு பிள்ளை இருந்த இடத்திலே பிரவேசித்து சிறுமியை உயிர் பிழைக்கச் செய்கின்றார் . எழுந்து நட என்று சொல்லுகின்றார் அந்த சிறுமி எழுந்து நடந்தாள். அவளுக்கு வயது பன்னிரண்டு. சிறுமிக்கு உணவு கொடுக்கும்படி சொல்லுகின்றார். பலவீனமாக இருந்த சிறுமியைப் பலப்படுத்துகிறவராக இயேசு செயல்படுகிறார்.

"விண்ணுலகிலும் மண்ணுலகிலும் அனைத்து அதிகாரமும் இயேசுவுக்கு அருளப்பட்டிருக்கிறது" (மத் 28:18). இதன் பொருள் என்னவென்றால், நீங்கள் இப்போது உங்கள் வாழ்க்கையில் என்ன செய்தாலும், நீங்கள் என்ன சவால்களை எதிர்கொண்டாலும், என்ன தடைகள் உங்களுக்கு முன்னால் இருந்தாலும், விண்ணுலகிலும் மண்ணுலகிலும் எல்லா அதிகாரமும் கொண்டவர் நமக்கு இருக்கிறார். அவர் மீது நம்பிக்கை வைத்த அனைவரும் வாழ்வைப் பெறுவர். ஆண்கள் உடல் வலிமை மிக்கவர்கள் ஆனால் மன வலிமை குறைந்தவர்கள்; பெண்கள் உடல் வலிமை குறைந்தவர்கள் மன வலிமை மிக்கவர்கள். எத்தகைய குறைபாடாக இருந்தாலும் கடவுளிடம் அர்ப்பணித்து நம்பிக்கை வைக்கும்போது நம்மை வலிமையுடையவராக மாற்றுவார்.

பெண்கள் மதிக்கப்பட வேண்டும். இயேசு தம் ஊழியத்தில் பெண்களை மதிப்பது போல், இன்று திருச்சபையும் மதிக்க வேண்டும். பெண்கள் தலைமைத்துவத்தில் சேர்க்கப்பட வேண்டும். பெண்களின் பங்களிப்புகள் அங்கீகரிக்கப்பட வேண்டும். இவ்விதமான செயல்பாடுகளால் பெண் குழந்தைகளின் மதிப்பு உறுதி செய்யப்படும். கடவுள் தாமே நம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக; ஆமென்.

ப	ஞா. 13	கீர். 289

அருள்திருமதி. J. இராஜலின் ஜெயம்
ஆயர், காட்டுப்புதூர்

இறைவேண்டல்

எல்லாம் வல்ல கடவுளே, பூவுலக வாழ்வில் சிறு குழந்தைகளை ஆசீர்வதித்த உமது மகனாகிய இயேசு கிறிஸ்துவின் பெயரில், சமத்துவமின்மை மற்றும் ஒடுக்குமுறைக்கு ஆளான குழந்தைகள், உமது மென்மையான தொடுதலால், வாழ்க்கையின் புதிய நம்பிக்கையைப் பெற வேண்டுதல் செய்கிறோம். குறிப்பாக, பெண் குழந்தைகளுக்கு சமூகத்தில் நீதியும், கண்ணியமும், அன்பும் கிடைக்க வேண்டும் என்று உம்மிடம் வேண்டுகிறோம். குழந்தைககளின் வாழ்வு மலர்ந்து, உமது படைப்பில் நறுமணம் வீச வேண்டுகிறோம். உம்மோடும் தூய ஆவியரோடும் இப்போதும் எப்போதும் வாழ்ந்து ஆட்சி செய்யும் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாயிலாக வேண்டுகிறோம், ஆமென்.

23.11.2025

வன்முறைச் சூழலில் அமைதி

Peace in the Context of Violence

1 சாமு. 24: 1-12 உரோ. 12: 14-21

தி.பா. 52 மத். 5: 38-48

> *"ஆனால், நான் உங்களுக்குச் சொல்கிறேன்: உங்கள் பகைவரிடமும் அன்புகூருங்கள்; உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்"* (மத். 5: 44).

எழுத்தாளர் ஒருவர் பூங்கா ஒன்றில் குழந்தைகள் விளையாடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தார். சிறிது நேரத்திற்குப் பின்னர் அவர்களை அணுகி என்ன விளையாடிக் கொண்டிருக்கிறீர்கள்? என்று கேட்டார். நாங்கள் ஒருவரோடொருவர் சண்டையிட்டு விளையாடிக் கொண்டிருக்கிறோம் என்றனர் குழந்தைகள். எதற்காக எப்பொழுதும் சண்டையிடுதலை அல்லது போரிடுதலை ஒரு விளையாட்டாகத் தெரிந்துகொண்டு அதை விளையாடிக் கொண்டிருக்கிறீர்கள்? சண்டையிடுதல் ஒரு தீமையான செயல் என்பது உங்களுக்குத் தெரியாதா? அதற்குப் பதிலாக ஒருவரோடொருவர் சமாதானத்தை (அமைதி) ஏன் விளையாடக் கூடாது?

இப்போது குழந்தைகள் சமாதானத்தை விளையாடுவதாக ஒப்புக்கொண்டனர். குழந்தைகள் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு கூடி ஆலோசனை செய்தனர். சிறிதுநேரம் அமைதி நிலவியது. கடைசியில் ஒரு சிறுவன் எழுத்தாளரிடம் வந்து, ஐயா எங்களுக்குச் சண்டை விளையாட்டு தெரியும். ஆனால், சமாதானத்தை எப்படி விளையாடுவது?

விளையாட்டுகளில் கூட சண்டையிடவும் போர் புரியவும் கற்றுக் கொடுக்கும் நாம், சமாதானத்திற்கும் நல்லுறவு உள்ளிட்ட விழுமியங்களுக்கும் முக்கியத்துவம் தருவதில்லை. உலகமெங்கும் நடைபெறும் வன்முறைகள், வன்முறைகள் வழி வாழ்வை அணுகும், வன்முறைகளை வளர்த்தெடுக்கும் ஒன்றாக இந்தச் சமூகம் மாறிவிட்டதோ? என்கிற ஐயத்தை ஏற்படுத்துகின்றன. வன்முறை தனிநபரால் அல்லது சில குழுக்களால் திட்டமிட்டு உருவாக்கப்படுகிறது என்று அதைச் சுருக்கிப் பாராமல், உலகம் முழுவதிலும் வன்முறையின் ஆதிக்கம் மேலோங்கியிருப்பதை, உலகம் வன்முறை மயமாக்கப்பட்டிருப்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். மேலும், வன்முறையைச் சண்டையிடுதலோடும் போர்புரிவதோடும் மட்டும் தொடர்புபடுத்திப் பார்க்காமல் அநீதியான, ஒழுக்கத்திற்கு எதிரான, அறமற்ற எல்லாச் செயல்களையும் வன்முறையாகக் காணும் விரிந்த பார்வை நமக்கு வேண்டும். அதேவேளையில் வன்முறையை வெறுக்கும், வேரறுக்கும்

பொறுப்பும் கடமையும் நமக்கு இருக்கிறது என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

திருமறையில் கடவுள் தம்மை வன்முறைக்கு எதிரானவராக, வன்முறையைத் தம் இயல்புக்கு அப்பாற்பட்ட ஒன்றாகக் காட்டுகின்றார் (எசா. 53: 9; 1கொரி. 14: 33). கடவுள், அமைதியின் கடவுள், நீதியை விரும்புகிறவர், நிறைவாழ்வை மானிடர் பெறுவதற்காகத் தம் ஒரே மகனை உலகிற்கு அனுப்பினவர். அவருடைய மக்களாகிய நாம் பெருகிவரும் வன்முறைச் சூழலில் அமைதியை ஏற்படுத்த அழைக்கப்பட்டுள்ளோம் (மத். 5: 9). திருமறையின் வெளிச்சத்தில், வன்முறைச் சூழலில் அமைதியை எவ்வாறு ஏற்படுத்துவதென நாம் தியானிப்போமாக!

1. பொறுமையால் பொறாமையை மேற்கொள்ளுதல்: (1 சாமு. 24: 1 - 12)

1 சாமுவேல் 24 - 26 வரையுள்ள அத்தியாயங்களில் தனக்கு எதிரானோரை, திருப்பித் தாக்குவதற்கான வாய்ப்புகள் இருந்தும் வன்முறைக்குத் துணை போகாமல் பொறுமையைக் கடைப்பிடித்த தாவீதின் முன்மாதிரியைக் காண்கின்றோம். நாட்டிற்காகவும் இறைமக்களுக்காகவும் போர்புரிந்த, சண்டையிட்ட தாவீது, தனிப்பட்ட நபராகத் தனக்கு எதிரிட்டு வந்த வன்முறைச் செயல்களுக்குப் பதில் வன்முறையை நாடாமல் கடவுள் செயல்படட்டும் என்று விட்டுவிட்டது வன்முறைச் சூழலில் அமைதி உருவாவதற்குக் காரணமாக அமைந்திருந்தது.

சவுலுக்கும் தாவீதுக்கும் இடையேயான அமைதி சிதைவதற்கு சவுலுக்குள் இருந்த பொறாமையே காரணமாகும். கோலியாத்தை வென்ற பின்னர், "சவுல் ஆயிரம் பேரைக் கொன்றார்; தாவீதோ பதினாயிரம் பேரைக் கொன்றார்" என்ற பெண்களின் பாடல் சவுலுக்குப் பொறாமையை வரவழைத்தது. தீய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட சவுல், தாவீதைக் கொல்ல முயன்று வந்தார் (சாமு. 18: 6 - 11). சவுலின் தொடர் துரத்துதல்கள் காரணமாக தாவீது ஏன்கேதிப் பாலைநிலம் (The wilderness of En-gedi) வந்தடைந்தார். இதைக் கேள்வியுற்ற சவுல் தாவீதைத் தேடிக் கொலை செய்ய அங்கு வருகின்றார். இத்தருணத்தில் தன்னைக் கொல்ல வரும் சவுலைத் தாக்குவதற்கு தாவீதிற்கு வாய்ப்பு கிடைக்கிறது. தாவீதின் ஆள்கள் அவரிடம், நீர் எதிரியைப் பழிவாங்க கடவுள் ஏற்படுத்திய தருணம் இது என வன்முறைக்குத் தூண்டிய போதும் அதற்குத் தாவீது துணைபோகாமல், பகைப்பதற்கும் பழிதீர்ப்பதற்கும் சூழ்நிலைகளைச் சாதகமாகப் பயன்படுத்தவில்லை (1 சாமு. 24: 4, 5). தன்னைக் கொல்ல வருபவரையும் வணங்கும் மாண்பு தாவீதுக்கு இருந்தது (1 சாமு.24: 8). பொறாமையால் தன்னைப் பகைப்பவரையும் பொறுமையோடு "தந்தையே" என அழைத்து அன்பு பாராட்டும் தகைமை உடையவராக விளங்கினார் (1 சாமு. 24: 11). தனக்கும் மற்றவருக்குமான பிரச்சனைகளில் தன்னை அன்று, கடவுளை நீதி செய்யும் நடுவராகக் கொண்டார் தாவீது (1சாமு. 24: 12).

கடவுள் தன்னை சாமுவேல் இறைவாக்கினர் வழியாக அரசராகத் திருப்பொழிவு செய்திருந்தும் (1 சாமு. 16: 1 - 13), கடவுளின் ஆவி தன்மேல் நிறைவாக இருக்கிறது என்பதை உணர்ந்திருந்தும் (வ. 13), கடவுளின் ஆவி சவுலை விட்டு நீங்கியது என்பதைத் தெரிந்திருந்தும் (வ.14), தொடர்ச்சியாக சவுல் தன்னைக் கொலை செய்யத் துரத்தியபோதும் பொறாமைக்கு எதிராகத் தன் பொறுமையைக் காட்டின தாவீதின் முன்மாதிரி இன்றைய வன்முறைச் சூழலில் அமைதியை ஏற்படுத்துவதற்கு ஒரு சிறந்த பாடமாக உள்ளது. இத்தகைய பொறுமையை நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் தம் துன்பத்தின் வழியாக நமக்கு முன்மாதிரியாகக் காட்டியுள்ளார் (1 பேது. 2:21- 23).

தென்னாபிரிக்க அதிபராக இருந்த நெல்சன் மண்டேலா, கால் நூற்றாண்டுக்கு மேலாக, கறுப்பின மக்களின் விடுதலை வாழ்வுக்காகச் சிறையிலேயே தன் வாழ்வைக் கழித்தவர். சிறையிலிருந்து விடுதலை பெற்ற பின்னர், அதிபராகும் தருணத்தில், தான் சிறை செல்லக் காரணமாய் இருந்தோர் எல்லோருக்கும் தனது பதவியேற்பு விழாவிற்கு அழைப்பு கொடுத்து அவர்களைப் பங்கேற்கச் செய்து தன்னைப் பகைத்தோரிடமும் பொறுமையுடன் நல்லுறவு பாராட்டினார். அவர் சிறையிலிருந்து வெளியேறும்போது சொன்ன வாசகம்: நான் விடுவிக்கப்பெற்றுச் சிறையிலிருந்து வெளியேறும்போது என்னிலுள்ள கசப்பு, வெறுப்பு இவற்றை நான் விட்டுவிடவில்லையெனில், இன்னும் நான் சிறையில் இருப்பதாகவே கருதுவேன் என்றார். அன்பு பொறுமையுள்ளது ... பொறாமைப்படாது (1 கொரி. 13: 4) என்னும் பவுலாரின் கூற்றுக்கிணங்க நம் அன்புச் செயல்களால் பொறாமையை மேற்கொள்வோம்.

2. நன்மையால் தீமையை வெல்லுதல்: (உரோ.12: 14 -21)

உரோமையில் வாழ்ந்த முதலாம் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களுக்கு வன்முறைச் சூழலில் அவர்கள் வாழ்வியல் நெறியாக கடைப்பிடிக்க வேண்டிய விழுமியங்களை (Values) 12 மற்றும் 13- ஆம் அத்தியாயங்களில் பவுலார் விவரித்துப் பேசுகின்றார். குறிப்பாக, 12: 14 -21 வரையுள்ள வசனங்களில் வன்முறையை மேற்கொள்வதற்கான வழிமுறைகளைப் பட்டியலிடுகின்றார். கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்படுகின்ற, ஒடுக்கப்படுகின்ற சூழலில் கிறிஸ்தவர்களுக்கு எதிராகத் தொடுக்கப்படும் வன்செயல்களில் இறைமக்கள் தளர்ந்து போகாமல் அதே வேளையில், வன்முறைகளுக்கு எதிராக வன்முறையைக் கையிலெடுக்காமல் நற்பண்புகளை வெளிப்படுத்தும் நன்முறையின் வாயிலாக வன்முறையை வென்றெடுக்க ஆலோசனை வழங்குகின்றார். அதன் உச்சமாக விருந்தோம்பலைக் குறிப்பிடுகிறார்.

விருந்தோம்பல் என்பது உணவு தந்து உபசரிப்பது மட்டுமல்ல; நேர்மறை, எதிர்மறை என வாழ்வின் எல்லாச் சூழல்களிலும் ஒருவரோடு இருப்பது, உதவுவது, மன்னிப்பது, ஏற்றுக்கொள்வது, உறவைப் பகிர்வதுமாகும். உரோ. 12: 14 - 21 வரையுள்ள வசனங்களில் பட்டியலிடப்பட்டிருக்கும் விழுமியங்கள் எல்லாம் விருந்தோம்பலின் பல்வேறு

பரிமாணங்களாக இருக்கின்றன. பகைப்போருக்கும், வன்முறையைத் தொடுப்போருக்கும் விருந்தோம்பல் செய்வது அவர்கள் தலைமேல் எரிதழலைக் குவிப்பதாகும் என்று குறிப்பிடுகின்றார் (உரோ. 12: 20). இதை நீதிமொழிகளிலிருந்து பவுல் இங்கு எடுத்தாளுகின்றார் (நீ.மொ. 25: 21, 22). அக்காலத்தில் பொதுவாக, ஒருவர் தான் செய்த பாவத்திற்குக் கழுவாயாகப் பலி செலுத்தும்போது, தன் குற்றத்தை உணர்ந்து மனம் வருந்துவதன் அடையாளமாக எரிதழல் கொண்ட மண்பாண்டத்தைத் தலையில் சுமந்தவாறு பலிபீடத்தை நோக்கிச் செல்வது வழக்கம். அதை மனதில் வைத்து ஒருவர் நமக்கு எதிராகச் செய்த குற்றத்தை, தீமையை அவருக்கு உணர்த்துவதற்க்கு நாம் நன்மை செய்ய வேண்டும். அந்த நன்மை விருந்தோம்பலின் வழியாக வெளிப்பட வேண்டும் என்கிறார் பவுலார். இதுவே நன்மையால் தீமையை வெல்வதற்கான வழி.

காற்றில் தூவப்படும் தூசி, வீசியவனிடமே திரும்பி வருவதுபோல தீமை செய்தவனுக்குத் தீமையே திரும்பி வருகிறது. கோபம், கோபமாய் இருப்பவனுக்கே அதிகமான தீங்கிழைக்கும் என்கிறார் டால்ஸ்டாய். நாம் பிறரைப் பழிவாங்க எண்ணுவது நமது காயங்களை அதிகப்படுத்திக் கொள்ளும், ஆழப்படுத்திக் கொள்ளும் முயற்சியாகும். அதேவேளையில், பழிவாங்குதலை விட்டுவிட்டால் நம் காயங்கள் விரைவில் ஆறிவிடும்.

1951 ஆம் ஆண்டு "பரபாஸ்" (Barabbas) என்கிற நாவலுக்காக இலக்கியத்திற்கான நோபல் பரிசு, பேர் லாகர்குவிஸ்ட் (Park Lagerkvist) என்ற சுவீடன் எழுத்தாளருக்கு வழங்கப்பட்டது. இயேசு கிறிஸ்துவுக்குப் பதில் உரோமை அரசால் விடுதலை செய்யப்பட்ட பரபாசைப் பற்றியது அந்நாவல். அதில் ஒரு பகுதி: கிறிஸ்துவின் மரணத்திற்குப் பின்னர் மனம்மாறிய பரபாஸ், அவருடைய மரணத்திற்குக் காரணமானோரை அழிக்க வேண்டும் என முடிவுசெய்து உரோமையில் பல பகுதிகளுக்குத் தீ வைத்தார். இதனால், பரபாஸோடு சேர்த்துக் கிறிஸ்தவர்கள் பலரும் கைது செய்யப்பட்டனர். சிறையில் காவலாளி ஒருவர், பரபாஸ் கழுத்தில் அணிந்திருந்த சங்கிலியின் டாலரில் பொறிக்கப்பட்டிருந்த இயேசுவின் பெயரைச் சுட்டிக்காட்டி, கிறிஸ்தவனாகிய பரபாஸ்தான் உரோமைக்கு நெருப்பிட்டது என்று சிறையிலிருந்த மற்ற கிறிஸ்தவர்களுக்குப் பரபாசை அறிமுகம் செய்து வைத்தார். கிறிஸ்தவர்கள் பரபாசை ஒரு கிறிஸ்தவனாக ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். அதற்கு அவர்கள் சொன்ன காரணம்: பரபாஸ் கிறிஸ்தவனாக இருக்க முடியாது. நீ சொல்வதுபோல் இவன் செய்திருந்தால், இவன் கிறிஸ்தவன் அல்லன். கிறிஸ்தவனாயிருக்கிற ஒருவன் சக மனிதனுக்கும் அவன் உடைமைக்கும் எப்படி நெருப்பு வைக்க முடியும்? நாங்கள் பின்பற்றும் எங்கள் தலைவரின் வழி அன்புவழி. அது தீமைக்குத் தீமை செய்யும் வழி அன்று; தீமைக்கு நன்மை செய்யும் வழியாகும் என்றனர். இறைமக்களாகிய நாம், நம் தலைவர் இயேசு கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றித் தீமை ஒருபோதும் நம்மை வென்றுவிடாதபடி நன்மையால் தீமையை வெல்லுவோம்.

3. அன்பினால் பகைமையை அழித்தல்: (மத். 5: 38 - 48)

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம் அடியவர்களை உட்படுத்தி உருவாக்கும் அன்பாலான புதிய சமூகமான இறையரசின் சமூகத்திற்கான வாழ்க்கைமுறையை மலைப்பொழிவில் கற்பிக்கின்றார். பழைய ஏற்பாட்டுச் சட்டங்களுக்கு மலைப்பொழிவில் புதுவடிவம் தருகின்றார் (மத். 5: 21 - 48). குறிப்பாக, மத். 5: 38 - 48 வரையுள்ள பகுதியில் பகைப்பவருக்கும் தம் அடியவர் காட்ட வேண்டிய பண்புநெறிகளைப் பாங்காக உரைக்கின்றார்.

மத்தேயு 5:39- இன்படி, ஒருவர் தன் எதிரே இருப்பவரின் வலக் கன்னத்தில் அறைந்து விட முடியாது. அவருக்குப் பின்பக்கமாக நின்று அறைய வேண்டும். இல்லையென்றால் புறங்கையாலோ அல்லது இடக்கையாலோ தான் அறைய முடியும். இம்மூன்று நிலைகளும் பகைமை உணர்வோடு மட்டுமல்ல, ஒருவரைத் தாழ்வாகவும் இழிவாகவும் கருதித் தாக்குவதாகும். அத்தருணத்திலும் மறு கன்னத்தைக் காட்ட வேண்டும். மத். 5: 40-இல் குறிப்பிடப்பட்டிருப்பதன் விளக்கம் யாதெனில், திருச்சட்டத்தின்படி அங்கி ஒருவர் வாங்கும் கடனுக்கு அடகாகப் பெறப்பட்டால், அதைக் கதிரவன் மறையுமுன் அவரிடம் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். ஏனெனில், அது ஒன்றே அவருக்குப் போர்வை (விப. 22: 25 - 27; இச. 24: 12, 13). இப்படிச் சட்டத்தின்படி தன்னுடையதைப் பெற்றுக்கொள்வதற்கு உரிமையிருந்தும் வழக்கு மன்றத்தை நாடாமல் மேலுடையையும் எடுத்துக்கொள்ள விட்டுவிட வேண்டும். மத். 5:41- இன்படி, அன்றைய உரோமைய வல்லாதிக்கச் சூழலில் உரோமை இராணுவ வீரர்களின் சுமையை யூதர்களில் யாரைச் சுமக்கப் பணிக்கின்றார்களோ அவர்கள் அதைச் சுமந்துகொண்டு அவர்களுடன் மைல் தூரம் நடந்துசெல்ல வேண்டும். இது எழுதப்படாத விதி (மத். 27: 32; மாற். 15: 21). இத்தகைய அடக்குமுறைகளை எதிர்த்துதான் செலோத்தேயர் உள்ளிட்ட கலகக் குழுக்கள் செயல்பட்டன. ஆனால் ஆண்டவர் அத்தகையோருடன் இரு மைல் தூரம் நடக்க வலியுறுத்துகின்றார். அநீதியின்பாற்பட்ட எதிர்பார்ப்புகளுக்கு நடுவில் நம்முடைய மறுமொழி அதைத் தாண்டிச் செல்லவேண்டும் என ஆண்டவர் போதிக்கின்றார்.

மேலும், "உனக்கு அடுத்திருப்பவரிடம் அன்புகூருவாயாக; உன் பகைவரிடம் வெறுப்புக் கொள்வாயாக" என்னும் சட்டத்திற்குப் புது வடிவமாக, "உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள்; உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்" (மத். 5: 43, 44) என அன்பினால் பகைமையை அழிப்பதற்கான புதிய பரிமாணத்தை ஆண்டவர் தருகின்றார். முன்னர் குறிப்பிட்டவை எல்லாமும் நம்மைப் பகைப்போருக்கு வெறுப்பினாலோ அல்லது நமது இயலாமையினாலோ செய்ய வேண்டியவை அல்ல; மாறாக, பகைப்போருக்கு நேரான அன்புச் செயல்களாக அவை வெளிப்பட வேண்டும். அதை ஆண்டவர் இயேசு கிறிஸ்து கற்பித்ததோடு மட்டுமல்லாமல் சிலுவையில் செய்தும் காட்டினார் (எபே. 2: 16). "வன்முறைக்கு

எதிராகக் கூடுதல் வன்முறை அல்ல; மாறாக, கிறிஸ்துவின் சிலுவையே வன்முறைக்கு எதிரான கடவுளின் மறுமொழியாகும் (God's answer to violence is not more violence but the Cross of Christ) என்கிறார் ஸ்டேன்லி ஹௌர்வாஸ் (Stanley Hauerwas).

எல் - சல்வதோர் நாட்டில் வன்முறைக்கு நேராகத் தன் அன்புச் செயல்களை வெளிப்படுத்தியவர் பேராயர் ஆஸ்கர் ரோமேரோ (Oscar Romero). இறைவழிபாடு நடத்திக் கொண்டிருக்கும்போதே வன்முறையாளர்களால் சுட்டுக்கொலை செய்யப்பட்டவர். அவர் எழுதிய நூல், "அன்பின் வன்முறை" (The Violence of Love) என்பதாகும். அதில் அவர் குறிப்பிட்டுள்ள ஒரு வாசகம்: கிறிஸ்து சிலுவையில் அறையப்பட தம்மைத் தந்த அன்பின் வன்முறையைத் தவிர, வேறு வன்முறையை நாம் போதிக்கவில்லை. நமக்குள் இருக்கும் தன்னலத்தையும் ஏற்றத்தாழ்வுகளையும் மேற்கொள்ள நமக்குநாமே செய்யும் வன்முறையைத் தவிர, வேறு வன்முறையை ஒருபோதும் நாம் கற்பிக்கவில்லை. நாம் பயிற்றுவிக்கும் வன்முறை வாளால் விளையும் வன்முறை அன்று; வெறுப்பினால் நிகழும் வன்முறையும் அன்று. இது அன்பின் வன்முறை, சகோதரத்துவத்தின் வன்முறை, இது அழிவுக்குரிய ஆயுதங்களை ஆக்கத்திற்கான கருவிகளாக மாற்ற விரும்புகிற வன்முறையாகும் என்கிறார்.

நாம் வாழும் காலத்தில் பகைமைகள், விரோதங்கள், வன்முறைகள், போர்கள், தீவிரவாதங்கள் மலிந்து காணப்படுகின்றன. இச்சூழலில், பொறுமையால் பொறாமையை மேற்கொண்டு, நன்மையால் தீமையை வென்று, அன்பினால் பகைமையை அழித்து அமைதியை உருவாக்குவோம். அமைதியின் கடவுள் அமைதியின் கருவிகளாய் நம்மைப் பயன்படுத்துவாராக! ஆமென்.

ப	ஞா. 455	கீர். 344

அருள்திரு. B. சாம் ஜெபசிங்

ஆயர், வில்ஸ்நகர்

இறைவேண்டல்

அமைதியின் கடவுளே, உமது நிலையான அன்புக்கும் அரவணைப்புக்கும் நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். எங்களுடைய எல்லா அக்கிரமங்களிலும் பலவீனங்களிலும் நீர் எங்களை நேசித்ததைப் போல நாங்களும் எங்கள் எதிரிகளை நேசிக்க எங்களுக்கு மனதை தர உம்மிடம் மன்றாடுகிறோம். நீர் உமது மகன் இயேசு கிறிஸ்துவை உலகத்திற்கு அனுப்பி எங்களுக்கு பூமியில் அமைதியைக் தந்தீர். வன்முறையின் போது மற்றவர்களை மன்னிக்க எங்களுக்கு ஆற்றல் தாரும். எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்துவின் மூலம் வன்முறையை சமாதானமாக மாற்ற எங்களுக்கு உதவி செய்யும். உம்மோடும் தூய ஆவியரோடும் இப்போதும் எப்போதும் வாழ்ந்து ஆட்சி செய்யும் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாயிலாக வேண்டுகிறோம், ஆமென்.

கடவுளின் பேரருள்: தாழ்நிலையிருக்கான நம்பிக்கை

(மரியாள் - எலிசபெத் சந்திப்பு)

Grace of God: The Hope for the Lowly (Meeting of Mary with Elizabeth)

வி.ப. 2: 1 - 10 2தெச. 2: 13 - 17

தி.பா. 30 லூக். 1: 46 - 59

> *"அவர் தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார். இது முதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர்"*
> (லூக். 1: 48).

இறை இயேசுவில் பிரியமானவர்களே! இன்று நாம் வருகைக் காலத்தில் காலடி வைக்கிறோம். வருகைக் காலத்தின் முதலாம் ஞாயிறன்று, புதிய திருவழிபாட்டு ஆண்டைத் தொடங்குகிறோம்.

இலத்தீன் மொழியில் adventus என்பதற்கு வருகை என்பது பொருள். மொத்தம் 28 நாட்கள் (கிறிஸ்து பிறப்பு தினத்திற்கு முந்தைய நான்காம் ஞாயிறு முதல் கிறிஸ்துமஸ் தினத்திற்கு முந்தைய நாள் வரை) ஆகும். வரலாற்றில் மனிதராகப் பிறந்த கடவுளின் மகனாகிய இயேசுவின் முதல் வருகையைச் சிறப்பிக்கவும், உலக முடிவில் அவர் மாட்சியுடன் வரவிருக்கின்ற இரண்டாம் வருகையை எதிர்நோக்கவும் தயார் செய்கின்ற காலமாக அமைந்துள்ளது.

காணமுடியாத கடவுள் மனித வரலாற்றில் காணும் கடவுளாக நுழைந்தார். ஒரு மனிதராக நம் நடுவே வாழ்ந்தார். இந்த மாபெரும் மறையுண்மையைக் கொண்டாடும் நாம், இயேசுவின் இரண்டாம் வருகைக்கும் நம்மைத் தயார்படுத்த அழைப்பு விடுக்கும் காலம்தான் இவ்வருகைக் காலம்.

இன்றைய நற்செய்திப் பகுதியில் (லூக். 1: 46-59) கடவுளின் பேரருளால் தாழ்நிலையிலுள்ளோர் பெறும் விடுதலைக்கான மகிழ்ச்சியின் எதிர்நோக்கே மரியாளின் பாடலாக இடம்பெறுவது சிறப்பானது. கடவுளின் பேரருள் (Grace of God) என்பது "மனிதர்களால் முடியாது என்ற நிலை வரும்போது கடவுளால் அருளப்படும் கொடை" என்று பொருளாகும். கடவுளின் பேரருள் எப்படி தாழ்நிலையிலுள்ளோரின் நம்பிக்கையாக விளங்குகிறது என்று சிந்திப்போம்.

1. தாழ்நிலையோரை வழிநடத்தும் பேரருள் (வி.ப. 2: 1-10)

இத்திருமறைப் பகுதி மோசேயின் பிறப்பைக் குறித்து நமக்குக் கற்று தருகிறது. மோசேயின் பிறப்பு இயல்பான ஒரு வரலாற்றில் கடவுளின் இயல்பு கடந்த செயல்பாட்டைச் சுட்டிக்காட்டுகிறது. அதாவது சாதகமற்ற சூழலில் கடவுளின் பேரருள் வழிநடத்துகிறது.

எபிரேயர் என்று எகிப்தியரால் தாழ்வு நோக்குடன் அழைக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட, நிலமற்ற, நாடற்ற, சட்ட ஒழுங்கற்ற, கூலிக்குப் போரிடுகின்ற ஏழை மக்கள்தான் இந்தத் தாழ்நிலை மக்கள்.

எபிரேயரை ஒழித்துக்கட்ட பார்வோன் மூன்று முறைகளை கையாளுகிறார். 1. வேலைப் பளுவைக் கூட்டி, கடினப்படுத்தி வாழ்வைக் கசந்துப்போக பண்ணுகிறார். 2. எபிரேய மருத்துவ பெண்கள் இருவரிடம் ஆண்பிள்ளைகள் பிறந்தவுடன் அழித்துவிடும்படி கூறினார். 3. ஆண் மகவு அனைத்தையும் நைல் நதியில் எறிந்துவிடும்படி எகிப்திய குடிகளுக்கு கட்டளையிடுகிறார். இந்த மூன்று முறைகளும் அடுத்தடுத்து நடந்தன. ஆகவே எபிரேயர்கள் வாழ்வின் நம்பிக்கை இழந்தனர். இச்சுழலில்தான் கடவுளின் பேராருள் வழிநடத்துகிறது. லேவி குலப்பெண் கருவுற்று ஒரு ஆண்மகவைப் பெற்றெடுக்கிறார். மூன்று மாதங்கள் குழந்தையை மறைத்து வைத்துவிட்டு பின் நாணல் பெட்டி செய்து அதில் கீல் பூசிப் பிள்ளையை அதில் வைத்து நதியில் விடுகிறார். (வச. 1-4) இதை நாம் தொ.நூல் 6: 14-ஐ ஒப்பிடும்போது நோவாவுக்குக் கடவுள் பெரிய பேழை செய்ய நேரடியாக வழிநடத்துகிறார். அவர் கோபார் மரத்தில் பேழை செய்தார். இங்கு இந்தத் தாய்க்குக் கடவுளின் வழிநடத்துதல் நேரடியாக இருந்ததாக குறிப்பிடப்படாமல் இருந்தாலும் கடவுளின் பேரருள் வழிநடத்தியதின் விதமாக மென்மையான குழந்தைக்கு நாணற்புல்லினால் சிறிய பேழை செய்கிறார். இரண்டிற்கும் மீட்பின் பேழை என்பது பொருந்தும்.

குழந்தைகளின் படுகொலை சூழலில் ஒரு குழந்தை பாதுகாக்கப்படுகிறது. சூழலுக்கு வெளியிலிருந்து அல்ல; அதற்குள்ளிருந்தே நம்பிக்கையின் புதுமை பிறக்கிறது. நாணற் பெட்டியைப் பார்வோனின் மகள் கண்டதும் அதிலிருந்த எபிரேய குழந்தை அழுதது. அதன்மேல் இரக்கம் கொண்டாள். கடவுளின் இரக்கத்தைப் பார்வோனின் மகள் வெளிப்படுத்துகிறார்.(வச. 5-6) துன்பத்தின் நடுவிலும் எதிர்பாராத இடத்திலிருந்து எதிர்பாராதவர்கள் மூலம் கிடைக்கும் வழிநடத்துதல் கடவுளின் எல்லை கடந்த பேரருளுக்கும், மானிடப் பண்பிற்கும் சான்றாக விளங்குகிறது.

முன்பின் தெரியாத ஒரு பெண்ணின் ஆலோசனையை ஏற்றுப் பாலூட்டி வளர்ப்பதற்கு இன்னொரு பெண்ணிடம் ஒப்படைப்பதில் கடவுளின் உள்ளார்ந்த வழிநடத்துதலும், மானிடத்தின் உயரிய பண்பும் வெளிப்படுகிறது. தண்ணீரிலிருந்து எடுத்ததினால் மோசே என்று அக்குழந்தைக்குப் பேர் சூட்டி மகிழ்ந்தனர். ஆம், துன்ப வேளைகளில் கடவுள் நம்முடன் உடன் இருந்து, நம்மை வழிநடத்துகிறார்.

2. தாழ்நிலையோரை மகிழ்விக்கும் பேரருள் (லூக் 1: 47)

எலிசபெத், மரியாள், மோசேயின் குடும்பம் கடவுளின் பேரருளால் மகிழ்ந்தது. தாழ்நிலையோரை வழிநடத்தும் பேரருள் அவர்களை மகிழ்விக்கும்.

எலிசபெத் என்றால் என் கடவுளின் ஆணை (God is my Oath). செக்கரியா என்றால் கடவுள் நினைவுகூர்ந்தார் (God Reminisced) எனப் பொருள். செக்கரியா என்ற குரு அபியா என்ற ஆரோனின் மகன் எலியேசரின்

மகன் வழிமரபினர் (1குறி. 24: 10) எலிசபெத்தும் ஆரோனின் குடும்பத்தைச் சார்ந்தவரே (லூக் 1: 5). ஆரோனின் குடும்பம் திருப்பணிக்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட குடும்பம். எலிசபெத் ஆசாரியனின் மனைவி மட்டுமல்ல; ஆசாரியனின் மகள். ஆசாரியப் பணியைச் செய்யும் இவர்கள் நேர்மையானவர்கள், நீதி சட்டத்தின் எல்லா ஒழுங்குகளையும் முறையே கடைபிடித்தவர்கள் என்பதால் குற்றமற்றவர்களாயிருந்தனர். இவர்களுக்குப் பிள்ளை இல்லாதிருந்தது. இது நமக்கு ஆபிரகாம், சாராளை நினைவுக்குக் கொண்டுவருகிறது. பல ஆண்டுகள் இறைவேண்டல் செய்தும் குழந்தை இல்லை. ஆகவே எலிசபெத் பிள்ளையில்லாதவள் என்ற பேரோடு மற்றவர்கள் இவரைத் தாழ்நிலைக்குக் கொண்டு சென்றனர். இப்போது செக்கரியாவும், எலிசபெத்தும் இயற்கையாகக் குழந்தை பெற்றுக்கொள்ளும் நிலையில் இல்லாமல் இருந்தார்கள். மனிதனால் முடியாது என்று சொல்லும்போது தான் கடவுளின் பேரருள் வெளிப்படுகிறது. இங்குக் கடவுளின் பேரருள் செக்கரியாவையும் எலிசபெத்தையும் குழந்தை பெற்றெடுக்க வழிநடத்துகிறது. இறைப்பணி செய்ய அபியாவின் வழிமரபினருக்குச் சீட்டு விழுந்தபோது செக்கரியா தெரிவு செய்யப்பட்டு கடவுளின் பணிவிடைக்காக அனுப்பபட்டார். அப்போது கடவுளின் பேரருளால் தூதன் செக்கரியாவை வலப்பக்கத்தில் நின்று சந்திக்கிறார். உடனே செக்கரியா அச்சப்படுகிறார். செக்கரியாவும், எலிசபெத்தும் வயது முதிர்ந்த நிலையிலும், ஆபிரகாமுக்கும், சாராளுக்கும் கடவுள் காலங்கடந்து குழந்தை கொடுத்ததுபோல தங்களுக்கும் தரமாட்டாரா என்று நீண்ட நாட்களாக வேண்டுதல் செய்துகொண்டு வந்திருக்கலாம். ஏனெனில், பிள்ளைபேறு அற்ற நிலை ஏளனத்தையும், சாபத்தையும் கொண்டு வந்திருக்கலாம். ஆகவேதான் தூதன் உடனடியாக செக்கரியாவே "உன் மன்றாட்டு கேட்கப்பட்டது" உன் மனைவி எலிசபெத் உனக்கு ஒரு மகனைப் பெற்றெடுப்பார். அவருக்கு யோவான் என்று பெயரிடுவாயாக என்றுவழிநடத்துகிறார்(லூக். 1: 13). குழந்தையைப் பெற்றெடுத்து மகிழ்கின்றனர். கடவுளின் அருள்கொடை என்னும் பொருள்கொண்ட யோவான் என்ற பெயர் குழந்தைக்கு சூட்டி மகிழ்ந்தார். ஆண்டவர் அவருக்குப் பெரிதும் இரக்கம் காட்டினார் என்பதைக் கேள்விப்பட்டுச் சுற்றி வாழ்ந்தோரும் உறவினரும் அவரோடு சேர்ந்து மகிழ்ந்தனர் (லூக் 1: 58). இன்றும் தாழ்நிலையினரை மகிழ்விக்கும் கடவுளின் பேரருள் நம்மை சந்திக்கிறது.

3. தாழ்நிலையோரை உயர்த்தும் பேரருள் (லூக். 1: 50-53)

மரியாள் எலிசபெத்தைச் சந்தித்தல் என்பது லூக்கா நற்செய்தி 1: 39-56-இல் விவரிக்கப்படும் ஒரு நிகழ்வாகும். இயேசு பிறப்பின் முன்னறிவிப்பின்போது தனது உறவினராகிய எலிசபத்து கருவுற்றிருப்பதைக் கபிரியேல் தூதர் மூலம் மரியாள் அறிந்தார். கருவுற இயலாதவர் என்று சொல்லப்பட்ட எலிசபெத்து தம் முதிர்ந்த வயதில் ஒரு மகனைக் கருத்தரித்திருக்கிறார் எனவும் இது அவருக்கு ஆறாம் மாதம் எனவும் கபிரியேல் மரியாவுக்கு அறிவித்திருந்தார்.

இதனால் மரியாள் புறப்பட்டு யூதேய மலைநாட்டில், 100 மைல் தொலைவில் உள்ள எலிசபத்தின் ஊருக்கு விரைந்து சென்றார். அங்கு இருவரும் ஒருவருக்கொருவர் வாழ்த்துதலைப் பகிர்ந்துகொண்டனர்.

எலிசபத்தின் வாழ்த்துதலைக் கேட்ட மரியா கடவுளை போற்றி ஒரு பாடல் பாடினார். அப்பாடல் மரியாவின் பாடல் என அழைக்கப்படுகின்றது.

யாருக்கும் தெரியாமல் எந்த நன்மையும் வராத ஊரில் வாழ்ந்து கொண்டிருந்த மரியாள் கடவுளின் பேரருளால் உயர்த்தப்படுகிறார். மரியாளின் பாடல் மிக முக்கியமானதாக உள்ளது. கடவுள் அடிமையின் தாழ்நிலையை நோக்கிப் பார்த்தார், இது முதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர் (வசனம். 48). கடவுளின் வருகை தாழ்நிலையோரை உயர்த்தும்.

மரியாளின்பாடல் 1 சாமு 2: 1-10 இல் இடம்பெறும். சாமுவேலின் தாய் அன்னாளின் பாடலை எதிரொலிக்கிறது. மரியாளைப்போல அன்னாளும் கடவுளின் பேரருளால் உயர்த்தப்பட்டவர். குழந்தையில்லாதவர் என்ற பெயரிலிருந்து முப்பெருந்தலைவரின் தாய் என உயர்த்தப்பட்டவள். ஆனால், கடவுளின் பேரருள் மரியாளில்தான் நிகழ்ந்தது. உலகக் கணிப்புகளின்படி அவர் மிக எளிமையானவர். அவர் இன்னாருடைய மகள் என்றுகூடக் குறிப்பிட்டுச்சொல்லப்படாதவர். அந்நிலையி#ருந்து பெண்கள் எல்லாரிலும் அதிகப் பேறுபெற்றவர் என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டவர். அவரில் நிகழ்ந்த இந்த மாபெரும் அருங்செயல் கடவுள் எவ்வாறு தாழ்நிலையிலுள்ளோரை உயர்த்துகிறார். வலியோரை எவ்வாறு தாழ்த்துகிறார் என்ற செய்திக்கு நிரந்தரச் சான்று பகருகிறது.

அருமையானவர்களே! நாமும் கடவுளின் பேரருளால் உயர்த்தப்பட வேண்டுமானல் நம்மில் கடவுள் செயல்படுவதற்கு நம்மைக் கையளிக்க வேண்டும். மரியாள் தன்னை நான் ஆண்டவருக்கு அடிமை என கையளித்ததினால் தன் நிலையிலிருந்து உயர்த்தப்பட்டர். நீங்களும் உயர்த்தப்படுவீர்கள். இந்த வருகைக் காலத்தில் கிறிஸ்து எங்கே இருக்கிறார்? எப்போது வருவார்? என்றெண்ணிக் காலம் தாழ்த்தாமல், கிறிஸ்து நமக்குள்ளே இருக்கிறார், நம் சகோதர, சகோதரிகளிடத்தில் இருக்கிறார் என்று உணர்ந்து வாழ அழைப்பு விடுக்கப்படுகிறது. நீதியையும், நேர்மையையும் நிலைநாட்டும் ஆண்டவர் நம்மிடையே மீட்பராகப் பிறக்க உள்ளார். விடுதலை உறுதி என நம்பிக்கை தருகின்ற வார்த்தைகளோடு வருகைக் காலத்தை பயனுள்ளதாக்குவோம்.

ஆம்! பிரியமானவர்களே, வருகையின் காலம் கடவுளின் பேரருள் வெளிப்படுகின்ற காலம். தாழ்நிலையிலிருப்போருக்கான நம்பிக்கையைக் கடவுளின் வருகையின் முலம் நமக்கு அருளுகிறார். ஆகவே, கடவுளின் பேரருள் நம்மை வழிநடத்தி அவரில் நாம் மகிழ்ந்து கடவுளின் பேரருளால் உயர்த்தப்பட நம்மை அர்ப்பணிப்போம். ஆமென்.

ப	ஞா. 82	கீர். 87

அருள்திரு. W. டொனால்டு ஸ்டாலின்

DMPB

இருளில் ஒளியாகும் ஆண்டவர்

ஏசா. 9: 1-8

"காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள்; சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர்மேல் சுடர் ஒளி உதித்துள்ளது" (ஏசா. 9: 2).

ஆழத்தின் மீது இருள் பரவி இருந்த சூழலில் அனைத்து ஆற்றலும் நிறைந்த ஆண்டவர் துவக்கத்திலே பூமியைப் படைத்து, அது நல்லது எனக் கண்டார் (தொ.நூ. 1: 2, 3). மானிடரையும் தமது உருவிலும், தமது சாயலிலும் உருவாக்கினார் (தொ. நூ. 1: 27). அவர்களை மனதளவிலும், உடலளவிலும் ஒளிமிக்கோராய்ப் படைத்தார். ஆனால் ஒரு கட்டத்தில் தீயவனால் ஒளி இழந்தனர். அந்த இழப்பு மனுக்குலத்தையே பாதித்தது. இந்நிலையில் ஆண்டவர் தமது திருமைந்தன் மூலமாக ஏற்படுத்தப்போகும் பூமியினைக் குறித்தே ஏசாயா குறிப்பிடுகிறார். அந்த பூமியின் முக்கியத்துவத்தையும் அந்த ஒளிக்கு நாம் தரவேண்டிய மறுமொழி (Respond) என்ன என்பதையும் விளக்கமாகப் பார்க்கலாம்.

1. காரிருளிலும் சாவின் நிழலிலும் இருப்போர் மீது சுடர் ஒளி :

(ஏசா. 9: 1, 2)

கி.மு. 8-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட அசீரியப் படையெடுப்பினால் மிகவும் அதிகமாகப் பாதிப்பினைக் கண்ட நாடு நப்தலி ஆகும் (2 சாமு. 15: 29). குறிப்பாகக் காரிருள் சூழ்ந்த வாழ்வு எனச் சொல்லுமளவிற்கு இந்தப் படையெடுப்பு நப்தலி மக்களை வெகுவாகப் பாதித்தது. அதுபோல செபுலோன் வம்ச மக்களும் வெகுவாகப் பாதிப்பிற்குள்ளாயினர். அடிமைத்தன வாழ்விலிருந்து யார் எங்களை மீட்டு வாழ்வு தருவது என ஏங்கித் தவிக்கும் சூழலுக்குத் தள்ளப்பட்டனர். இப்படிக் கடினமான வாழ்வு நிலையை எதிர்கொண்டு வாழ்ந்து கொண்டிருந்த மக்களைப் பார்த்துத்தான் ஏசாயா கூறுகின்றார்: "நீங்கள் பேரொளியைக் காண்பீர்கள்" என்று.

இந்தத் தீர்க்கதரிசன உரையின் நிறைவேறுதலை மத்தேயு நற்செய்தி நூலின் 4: 15, 16-இல் காண்கிறோம். அதாவது நப்தலி நாட்டின் மற்றொரு பெயர்தான் "கலிலேயா" ஆகும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என்னும் பேரொளி இங்கு அதிகமாகப் பிரகாசித்தது. கிறிஸ்துநாதரின் திருப்பணியின் மைய இடமாக இந்தக் கலிலேயா காணப்பட்டது. அவரோடு இருந்த சீடர்களும்

நெருக்கமானவர்களும் இந்தப் பகுதியைச் சார்ந்தோர் ஆவர். ஆம்! அப்படி ஏசாயா தீர்க்கரின் உரை இயேசு கிறிஸ்து மூலமாக நிறைவேறிற்று.

"கலிலேயா" என்பது இஸ்ரவேலரின் "கலிலேயா" மட்டுமல்ல, உலககெங்கும் காரிருளில் வாழ்வோரையும் உள்ளடக்கி நிற்பதாகும். ஐரோப்பா கண்டத்தைச் சார்ந்த நாடுகளின் அருட்பணியாளர்கள் இப்பகுதிகளுக்கு ஆவியானவரால் அனுப்பிவைக்கப்பட்டதால் இந்நாட்டு மக்கள் நற்செய்தியின் மூலமாகப் பேரொளியைக் கண்டனர்.

C.T. Studd 1860-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 2-ஆம் நாள் இங்கிலாந்தில் பிறந்தார். சிறந்த Cricket விளையாட்டு வீரரான இவர் மனந்திரும்பி அருட்பணியாளர் ஆனார். அப்படி அவர் இந்தியாவின் வடஇந்தியப் பகுதியிலே மிகவும் பின்தங்கிய பழங்குடி இனத்தவர் மத்தியில் அருட்பணிக்காய்ச் சென்றார். அவர்களோ வேற்று இன மக்களைக் கண்டால் தங்களுக்கு உணவாக்கிக் கொள்பவர் ஆவர். அப்படி C.T. Studd அவர்களைத் தங்கள் தலைவரோடுத் தாக்க வருகையில், C.T. Studd அவர்கள் சற்றுப் பொறுக்கச் சொல்லித் தன் கையில் இருந்த வயலின் இசைக்கருவியில் Christian Anthem என அழைக்கப்படும் "எல்லாருக்கும் மா உன்னதா" எனும் பாடலின் இசையை மீட்டினார். அவர் இசைத்து முடிக்கவே, மீண்டும் ஒருமுறை இசைக்க அம்மக்கள் தங்கள் தலைவரோடு இணைந்து கேட்டனர். இரண்டாவதும் அப்பாடல் இசைக்கப்பட்டது. இப்பொழுது அந்த மக்களின் முகத்தில் இனம்புரியாத ஒருவித அமைதி நிலவியது. அந்நேரத்தில் C.T. Studd அவர்களுக்கு நற்செய்தி அறிவித்தார். அம்மக்களும் பேரொளியைக் கண்டனர்.

ஆம்! இன்றும் அநேகர் காரிருளிலும் சாவின் நிழலிலும் காணப்படுகின்றனர். அவர்களில் இந்த மாபெரும் பேரொளியைக் கொண்டு சேர்க்க வேண்டியது நம் கடமை ஆகும்.

2. மானிடரை ஒளிரச்செய்யும் சுடர் ஒளி : (ஏசா. 9: 6)

இந்தப் பிரபஞ்சத்தில் அல்லது விண்ணில் தானாக ஒளிரும் கோள்களும் உள்ளன. பிரதிபலிப்பினால் ஒளிரும் கோள்கள், விண்மீன்களும் உள்ளன. சூரியன் தானாக ஒளிர்கிறது. அந்த பிதிபலிக்கின்ற ஒளியினால் பூமி என்கின்ற கிரகம் வெளிச்சத்தைப் பெறுகிறது.

இயேசு கிறிஸ்து "நான் இந்த உலகிற்கு ஒளி" என்றார் (யோவா. 9: 5). அவர் தானாக ஒளிரும் நீதியின் சூரியன். அந்த நீதியின் சூரியனாகிய கிறிஸ்து சீடர்களிடம் சொன்னார்: "நீங்கள் இந்த நீதியின் ஒளி" என்று, (மத். 5: 14). அதாவது தமது ஒளியை உள்வாங்கிப் பிரதிபலிக்க வேண்டியவர்கள். ஆண்டவருடைய வார்த்தையின்படி மனந்திரும்பி தூய ஆவியினால் வழிநடத்தப்படுவோர் ஒளி வீசுவர். அதாவது நீங்கள் உலகிற்கு ஒளி என்று ஆண்டவர் கூறினார். உலகம் எனும்போது யோவான் நற்செய்தியாளரைப்

பொறுத்தவரையில் “தீமைக்கு அடிமைப்பட்டிருக்கும் உலகம்” என்பதாகும் இதனால் உலகம் என்பது ஒளியின் தேவையில் இருக்கும் ஒன்றாகும்.

திருத்தூதுவர் பவுல் சந்தைவெளியில் எதிர்பட்டவரோடு நற்செய்தியைக் கூறினார் என்று திருமறை கூறுகின்றது (தி.ப. 17: 17). இதற்குக் காரணம் மனக்கண்களில் பார்வையற்றோராய் இருளில் வாழ்வோர் பாதை காண வேண்டும் என்பதாகும் (2 கொரி. 4: 6). இதனால்தான் ஆண்டவர் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின் தம் சீடர்களோடு சொன்னார்: வானத்திலும் பூமியிலும் அனைத்து அதிகாரத்தையும் பெற்றுள்ளேன்; உலகெங்கும் சென்று நற்செய்தியைக் கூறி அனைவரையும் சீடராக்குங்கள் (மத். 28: 18, 19).

“என் ஆத்துமா நற்செய்தி அறிவிக்கப்படாத 180 மில்லியன் ஜனங்களுக்கான வார்த்தையாயிருக்கிறது. ஆ! எனக்கு நூறு வாழ்க்கை இருந்திருந்தால் அவர்கள் நலனுக்காய் செலவழிக்கலாமே”.

-Hudson Taylor, June 1874

ஆண்டவரின் ஒளியினால் வெளிச்சத்தைப் பெற்றோர் மனக்கண்கள் பிரகாசிக்கப்பட்டோரின் ஏக்கமெல்லாம் இப்படித்தான் இருக்க வேண்டும். இவ்வித ஏக்கத்தோடு திருத்தொண்டர்களும் அருட்பணியாளர்களும் ஆர்வத்தோடு செயல்பட்டனர். ஆம்! ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தனி மனித வாழ்வை ஒளிரச் செய்யும் சுடர்ஒளி ஆவார்.

தற்கால செய்தித்தாள்களின் செய்திகளையும் மாற்று ஊடகங்கள் மூலம் பெறும் செய்திகளையும் பார்க்கும்போது, நாம் வாழும் உலகம் எந்த அளவிற்கு ஒளியின் தேவையில் இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியும். மனக்கண்களில் ஒளியிழந்தோராய் வாழ்வோர் அநேகர், அவர்கள் நன்மை காண நாம் காரணமாக வேண்டும். தற்கொலை எண்ணங்களோடு சாவின் நிழலில் வாழ்வோர் பலர். அவர்கள் புது வாழ்வு காண நாம் முனைப்புடன் செயல்பட வேண்டும். எனவே, கிறிஸ்துவாகிய ஒளியினால் பிரகாசத்தைப் பெற்றுப் பிறருக்கு ஒளி வீசுவோம்.

அப்படி வாழத் தூய ஆவியார் ஆற்றல் அருளுவாராக! ஆமென்.

அருள்திரு. J.T. ஜெரோம்

இரண்டாம் ஆயர், கோடியூர்

ப	ஞா. 2	கீர். 85

இருப்புநிலையை சவால் செய்யும் இறைவாக்கு

God's Word Challenges the Status Quo

2 அர. 22: 1-13 எபி. 4: 12-16

தி.பா. 119: 33-40 லூக். 1: 67-80

"பிள்ளையின் தந்தை செக்கரியா தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு உரைத்த இறைவாக்கு: இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவரைப் போற்றுவோம். ஏனெனில், அவர் தம் மக்களைத் தேடி வந்து விடுவித்துள்ளார்" (லூக். 1: 67, 68).

மேசியா வருகை குறித்த எதிர்பார்ப்பு நீண்டகால இருப்புநிலையாக இஸ்ரயேலருக்குள் இருந்த சூழலில் யோவான் பிறப்பு குறித்த இறைவாக்கு சகரியாவுக்குக் கொடுக்கப்பட்டது.

லூக்கா 1: 14 - அவன் பிறப்பால் அநேகர் மகிழ்ச்சியடைவர்

1: 15 - ஆண்டவர் பார்வையில் பெரியவர்

1: 16 - பலரை ஆண்டவரிடம் திருப்புவார்

1: 17 - முன்நடப்பவர்

இத்தனை நம்பிக்கையூட்டும் இறைவாக்கு வானதூதரால் சகரியாவுக்கு கொடுக்கப்பட்டாலும் சகரியா இதை நான் எதினால் அறிவேன் என இருப்பு நிலையிலேயே இருக்கின்றார் (லூக். 1: 18). சகரியாவின் விசுவாச குறைவு யோவான் பிறப்பு வரை அவரை பேசக்கூடாமல் மாற்றியது. ஏறத்தாழ ஒன்பது மாதம் பேசமுடியாதிருந்த சகரியாவுக்கு யோவான் பிறந்து எட்டாம் நாளில் யோவான் என பெயரிட்டபோது, நாவு கட்டவிழ்க்கப்பட்டு, ஆவியரால் நிரப்பப்பட்டு இறைவாக்குரைத்தார்.

சகரியாவின் இறைவாக்கு, சகரியாவின் துதிபாடல், நன்றிப் பாடல், தீர்க்கதரிசனப் பாடல், யோவானைக் குறித்த வருங்காலப் பாடல் எனப்படுகின்றது (67-79). சகரியாவின் பாடல் இருப்பு நிலையிலிருந்த இஸ்ரவேலருக்கு சவால் தந்து மேசியா குறித்த இறை நம்பிக்கையில் துளிர்விட ஆயத்தப்படுத்தியது.

1. முதுமையில் சவால் செய்த புதுமையின் வார்த்தை : (லூக். 1: 67)

"பிள்ளையின் தந்தை செக்கரியா தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு உரைத்த இறைவாக்கு"

சகரியா முதுமை வயது வரை ஆசாரியராக இறைப்பணிவிடை செய்தார் (லூக். 1: 18). சகரியா அபியா வகுப்பைச் சார்ந்த ஆசாரியர் (1: 5). தாவீது அரசர் ஆரோனின் குமாரர், எலியாசார், இத்தாமார் என்பவர்களை 24 குழுவாகப் பிரித்தார். இதில் எலெயாசாரின் புத்திரரில் 16 பேரும், இத்தமாரின் புத்திரரில் 8 பேரையும் பிரித்தார். இதில் 8-ஆவது பேராக அபியாவுக்கு விழுந்தது (1 குறி. 24: 10, 19). இந்தப் பிரிவுகள் சிறையிருப்பு காலத்தில் அழிந்தது. பின்னர் இதிலிருந்த 4 வகுப்புக்கள் 24-ஆக எஸ்றா காலத்தில் பிரிக்கப்பட்டது (எஸ்றா 2: 36-39). இவற்றுள் ஒன்றான அபியா வகுப்பைச் சார்ந்தவரே சகரியா.

யோசிபஸ் 20000 ஆசாரியர்கள் இக்காலத்தில் உண்டு என்கின்றார். இவர்கள் 840 பேர் வீதம் 24-ஆக பிரிக்கப்பட்டு ஆண்டில் இருமுறை ஆலயப் பணிவிடை செய்ய வாய்ப்பு பெறுவர். வாழ்வில் ஒரே ஒரு முறையே தூபம் காட்டும் வாய்ப்பு கிடைக்கும். இந்த வாய்ப்பு பலருக்கு கிடைக்காது. சகரியாவுக்கு முதிர் வயதில் இந்த வாய்ப்பு கிடைத்தபோது தூபப் பீடத்தில் தூதரால் தரிசனம் பெற்றார் (லூக். 1: 11).

ஆபிரகாம், அன்னாள் போன்று சகரியாவும் நீண்ட காலம் காத்திருந்தார். முதுமை வரை வாழ்ந்து, மேசியாவைக் காணாமல் மறைந்தவர்கள் பலர். சகரியா, சிமியோன் முதுமையில் இந்த அனுபவங்களைக் கண்டனர். சகரியா குறைவுடையவராயிருந்தும் குற்றமற்றவராயிருந்தார். முதுமை வரை நம்பிக்கையுடன் இருந்தார். இறைவாக்கு முதுமை சூழலில் சவாலைத் தந்தது. எப்படி இறைவாக்கு சவாலைத் தந்தது.

லூக். 1: 67 - ஆவியரால் நிரப்பப்பட்டு

1: 8 - ஆன்மிகத்தால்

1: 9 - ஆலய பணிவிடையால்

1: 13 - வேண்டுதலால் பெற்ற இறைவாக்கு முதுமை நிலையிலும் நிறைவேறியது. முடியாது என்ற சூழலிலும் நிறைவேறியது. முடிந்துபோனது என்ற கடைசி நிலையிலும் நிறைவேறியது (லூக். 1: 45). கர்த்தராலே அவருக்குச் சொல்லப்பட்டது நிறைவேறும் என்று எலிசபெத்து கூறுகிற விசுவாச அறிக்கை நம்மிலும் இருந்தால் இறையாசி பெறுவோம்.

2. முற்காலத்திற்கு சவாலாக வரும் காலத்தை இணைத்த வார்த்தை : (லூக். 1: 69-75)

முற்கால வரலாற்றைச் சில வார்த்தைகள் வழியாக சகரியாவின் பாடலில் காணமுடிகின்றது.

லூக்கா 1: 69 - பிதாக்கள் - எபி. 7: 21, 22

1: 70 - உடன்படிக்கை - உரோ. 9: 5

1: 72 - ஆபிரகாம் - கலா. 3: 16

லூக்கா 1: 73 - தீர்க்கதரிசிகள் - உரோ. 1: 4, 5
1: 75 - தாசனாகிய தாவீது - தி.வெ. 22: 16

ஆதிகால முதல் அரசாட்சி காலம் வரை உள்ள முற்கால வரலாற்றை சகரியா தனது பாடலில் இணைத்து வரும்கால மேசியாவை விளக்குகின்றார். சகரியாவின் வார்த்தை எதிர்பார்த்திருந்தவர்களுக்கு எதிர்கால வாக்காக அமைந்தது. பல சூழலில் மேசியா எதிர்பார்ப்பு இருந்தது. சம காலத்தில் வாழ்ந்த யூதர்கள் எதிரிகளின் ஆட்சியிலிருந்து மீட்பவராக மேசியாவை எதிர்பார்த்தனர். எனவே, மேசியாவைப் பாவத்திலிருந்து மீட்பவராகக் காணத் தவறினர். யூதர்கள் தங்களை சொந்த ஜனம், பரிசுத்த ஜனம், பிரித்தெடுக்கப்பட்ட ஜனம் என தங்களை மிகைப்படுத்திப் புரிந்த சூழலில் சகரியா மேசியா நமக்குரியவர் என்பதோடு அனைவருக்கும் உரியவர் என்கின்றார்.

லூக்கா 1: 74 - நமது ஜனம், நம்மை இரட்சிக்க

1: 75 - நமக்கு இரட்சணியக் கொம்பு

1: 77 - அவருடைய ஜனம் என யூதர்களின் மீட்பை குறிப்பிட்டு 1: 78-இல் அந்தகாரத்திலிருக்கும் அனைவருக்கும் அருணோதயமாக மேசியா வருகிறார் என பொதுவான மேசியா சிந்தனையை குறிப்பிடுகின்றார். யோவான் முற்காலத்தையும் வரும்கால மேசியாவையும் இணைக்கும் பாலமாகத் தன்னைக் கிறிஸ்து அல்ல (யோவான் 1: 20), எலியா அல்ல, வழியை ஆயத்தப்படுத்துபவன், வனாந்தரத்தின் சத்தம் என சகரியாவிற்கு கொடுக்கப்பட்ட இறைவாக்கின்படித் தன் பணிவிடையை நிறைவேற்றினார். எனவே, சகரியாவின் இறைவாக்கின்படி யோவான் முற்காலத்தையும் வரும்காலத்தையும் இணைக்கும் பாலமாக இறைபணியாற்றினார்.

3. முன்னோடிக்கு சவால்விடுத் முன்னுரைக்கப்பட்ட வார்த்தை : (லூக். 1: 76, 77)

"குழந்தாய் நீ உன்னத கடவுளின் இறைவாக்கினர் எனப்படுவாய்... வழியைச் செம்மைப்படுத்த அவர் முன்னே செல்வாய்".

மேசியா வரும்முன் வழியை ஆயத்தப்படுத்த முன்னோடியாய் எலியா வருவார் என புரிந்திருந்தனர் (மல். 4: 5). இந்தப் புரிதலுக்கு, காத்திருத்தலுக்கு சவாலாக எலியாவின் ஆவியும் பலமும் உடையவராய் முன் நடப்பவர் என யோவானின் பிறப்பு அமையும் என தூதன் கூறினார் (லூக். 1: 17). யோவான் பிறந்த பின்பு சகரியா வழியை ஆயத்தம் பண்ண வந்தவர் என் மகன் என்கின்றார் (1: 76).

யோவான் பிறந்து 8-ஆம் நாளில் யோவான் எனப் பெயரிட்டபோது சகரியாவின் வாய் திறக்கப்பட்டு இறைவாக்குரைத்தார். யோவானை உன்னதமான தீர்க்கதரிசியாக, வழியை ஆயத்தப்படுத்துபவராக,

முன்நடப்பவராக முன்னுரைப்பார். இந்த சகரியாவின் இறைவாக்கு நிறைவேறும்படி யோவானின் பணி அமைந்தது (லூக்கா 3: 3-18).

பாதைகளைச் செவ்வைபண்ணுங்கள். பள்ளங்கள் நிரப்பப்படும், மலைகள் தாழ்த்தப்படும் என யோவான் தனது செய்தியை முன்னுரைத்தார். சகரியாவாகிய தன் தந்தையின் வழியாக உரைக்கப்பட்ட இறைவாக்கை யோவான் நிறைவேற்றினார். யோவானின் இறைவாக்கு இருப்பு நிலையில் வாழ்ந்த மக்களுக்கு சவாலாக, "மனம் திரும்புங்கள்" என்ற அழைப்பைத் தந்தது (3: 7), இருப்பு நிலையில் வாழ்ந்த ஆயக்காரருக்கு சவாலாக அதிகமாய் வாங்க வேண்டாம் என்றது (3: 12, 13), இருப்பு நிலையில் வாழ்ந்த போர்ச் சேவகருக்குச் சவாலாகப் பொய்க் குற்றச்சாட்டு வேண்டாம், போதும் என்ற மனம் வேண்டும் என்றது (3: 14).

இருப்பு நிலையில் வாழ்ந்த இஸ்ரவேலருக்கு யோசியா காலத்தில் கண்டெடுக்கப்பட்ட நியாப்பிரமாண புஸ்தகத்தின் இறைவாக்கு தங்களைத் தாழ்த்த, கற்பனைக்குக் கீழ்ப்படிய வழிகாட்டியது (II அர. 2: 13, 3: 2, 3). இன்று நமது வாழ்வின் இருப்புநிலைக்கு இறைவாக்கு சவாலாக அமைகின்றது. எனவே,

முடிவு பரியந்தம் இறைவாக்கைக் காத்துக்கொள்வோம் (தி.பா. 119: 3).

முழு இதயத்தோடு இறைவாக்கைக் காத்துக்கொள்வோம் (தி.பா.119: 34).

உயிருள்ளதும் ஆற்றல்வாய்ந்ததுமான இறைவாக்கில் நம்பிக்கை கொள்வோம் (எபி. 4: 12). சகரியாவைச் சந்தித்த இறைவாக்கு நம்மையும் சந்திக்க நம்பிக்கையுடன் காத்திருப்போம், ஆமென்.

ᄇ	ஞா. 93	கீர். 84

அருள்திரு. அறிவர். **I. ரெஞ்சித் வேதகுமார்**
ஆயர், மருதூர்குறிச்சி

அச்சத்தின் பிடியிலிருந்து விடுதலை

Deliverance from the Grip of Fear

யோசு. 1: 1-9 1 யோவா. 4: 13-21

தி.பா. 27 மத். 1: 18-25

"இதோ! கன்னி கருவுற்று ஓர் ஆண் மகவைப் பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு இம்மானுவேல் எனப் பெயரிடுவர்" என்று இறைவாக்கினர் வாயிலாக ஆண்டவர் உரைத்தது நிறைவேறவே இவை யாவும் நிகழ்ந்தன. இம்மானுவேல் என்றால் கடவுள் நம்முடன் இருக்கிறார் என்பது பொருள் (மத். 1: 22, 23).

ஏதேன் தோட்டத்தில் ஆண்டவராகிய கடவுளின் குரல் ஒலியைக் கேட்ட ஆதாம், ஏவாள் அச்சமடைந்தனர் (தொ.நூ. 3: 10). காரணம் அவர்களது கீழ்ப்படியாமை. அவர்களது செயலுக்குக் கடவுள் வழங்கும் தீர்ப்பு எதிர்பாராத நெருக்கடியை அவர்களுக்கு ஏற்படுத்தியது. ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர் (தொ. நூ. 3: 16-24). எதிர்கால வாழ்வு குறித்த அச்சம் அவர்களை ஆட்கொண்டது. தொடக்கப்பெற்றோருக்குப் பிறந்த பிள்ளைகளில் மூத்தவராக காயீன், தம்பி ஆபேலிடம் பொறாமை கொண்டு அவரை கொலை செய்கிறார். கடவுளின் தண்டனை காயீனுக்கு வருகிறது. நாடோடியாக நான் அலையவேண்டுமே, என்னைக் காண்போர் என்னைக் கொன்றுவிடுவார்களே எனக் கடவுளிடம் அச்சத்துடன் பேசுகிறார் காயீன் (தொ. நூ. 4: 1, 14).

ஆண்டவரை விட்டு அகலுவதும் அநியாயமான செயல்கள் புரிவதும் அச்சத்துக்கு ஆதாயமாகிவிடுகிறது. அசட்டுத் தைரியம் பாவத்துக்கு வழிகோலுகிறது. பாவத்தின் பாதகம் அச்சத்தையும் அழிவையும் கொண்டுவருகிறது. அவசியமற்ற முறையில் அச்சத்தை வருவித்துக் கொள்வது வாழ்வின் தொடர்பயணத்துக்குப் பெரும் முட்டுக்கட்டையாகிவிடும். அச்சப்படுத்தும் அசுத்தத்தின் பிடியிலிருந்து மானுடரை விடுவிக்கும் மாபெரும் இறைத்திட்டமே இயேசுவின் பிறப்பு. அச்சத்தின் பிடியிலிருந்து நம்மை விடுவிக்கும் கடவுளின் அருட்செயல் குறித்து இன்றைய திருமறைப்பாடங்கள் வழியாகத் தியானிப்போம்.

1. அச்சம் அகன்றிட தீங்கைக் களைவோம்.

மோசேயின் இறப்புக்குப்பின் இஸ்ரயேல் மக்களை வழிநடத்தும் பொறுப்பை நூனின் மகன் யோசுவாசிடம் ஒப்படைத்த கடவுள், அவரது அச்சத்தை அகற்றிட யோசுவாவுடன் உரையாடுகிறார்; உடனிருப்பேன் என

உறுதிமொழிகிறார் (யோசு. 1: 2-5). அவசியமற்ற தீமைகள் எதுவும் அணுகிடாமல் காக்கப்படுவதற்காக மோசே வழியாக வழங்கப்பட்ட திருச்சட்டங்களைக் கவனமாய் கடைபிடிக்க வேண்டுமென அறிவுறுத்து கின்றனர். அதுவே, நீ உன் செயல்களிலெல்லாம் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பாடு என்று வலியுறுத்திக் கூறுகிறார் கடவுள் (யோசு. 1: 7, 8).

கடவுளின் கற்பனைகள் வரையறுக்கப்பட்ட வழியிலிருந்து வழுவாதபடி நம்மைக் காக்கின்றன. உரிய இலக்கை அடைய துணைபுரிகின்றன. கடவுளிடம் அன்பு செலுத்துவோர் தம் சகோதரர் சகோதரிகளிடமும் அன்பு செலுத்தவேண்டும். இதுவே அவரிடமிருந்து நாம் பெற்ற கட்டளை (1 யோவா. 4: 1). தம் சகோதர, சகோதரிகளிடம் அன்பு செலுத்தாமல், நான் கடவுளிடம் அன்பு செலுத்துகிறேன் எனக் கூறுவது ஏற்க முடியாத ஏமாற்று வேலையும், மிகப் பெரிய பொய்க் கூற்றமுமாகும் (வ. 20). கடவுள் சமூகத்தில் சென்று காணிக்கைச் செலுத்த நிற்கும்போது சகோதர, சகோதரிகளிடம் மனத்தாங்கல் உண்டென உணர்ந்தால் உடனே அவர்களிடம் சென்று ஒப்புரவாக வேண்டும். அதன் பின்னர் திரும்பி வந்து காணிக்கை செலுத்த வேண்டும் (மத். 5: 2, 4).

நம்மிடையே எழும் கருத்து வேற்றுமைகளும், பதவி பெறும் போட்டிகளால் உருவாகும் பிணக்குகளும் அடுத்த நாள், அடுத்த ஞாயிற்றுக்கிழமை என்ன பிரச்சனை, என்ன வழக்கு வருமோ என்ற அச்ச உணர்வை நிரந்தரமாகவே மனதில் ஏற்படுத்தி விடுகிறது. ஆகவே, மன அமைதியைக் கெடுக்கும் பகைமையையும், பழிவாங்கும் உணர்வையும் வேரறுத்து அழித்திடவும், அச்சப்படுத்தும், அச்சப்படும் நிலையிலிருந்து மீண்டு அமைதி பெறவும் இயேசுநாதர் தரும் புதிய கற்பனையை (லூக். 6: 38-48) வாழ்வில் கடைபிடிப்போம்.

2. அச்சம் அகன்றிட இறைவழி நாடுவோம்

மரியாவுக்கும், யோசேப்புக்கும் திருமண ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த நிலையில், தூய ஆவியால் மரியா கருவுற்றிருந்ததை யோசேப்பு அறிகிறார் (மத் 1: 18). யூதத் திருமணங்கள் மூன்று நிலைகளாக நடைபெற்று முழுமைபெறும். முதல் நிலையாக ஆண், பெண் இருவரும் குழந்தைகளாக இருக்கும்போதே பெற்றோர் மற்றும் உறவினர்களால் மண ஒப்பந்தம் நிறைவேற்றப்படும். இதில், சம்மந்தப்பட்ட குழந்தைகள் ஒருவரையொருவர் சந்திக்காமலும், அறியாமலும்கூட இருக்கலாம். இரண்டாம் நிலையாக சம்மந்தப்பட்ட ஆண், பெண் இருவருக்குமிடையேயான திருமண ஒப்பந்தம் நடைபெறும். இதற்கு இருவருடைய ஒப்புதலும் அவசியம். இருவரும் இணைந்து வாழாத இந்த நிலை ஒரு வருட காலம் தொடரும். ஆனால், சட்டத்தின் அடிப்படையில் அவர்கள் கணவன் மனைவியாகவே கருதப்படுவர். ஆகவே, பிரிந்து செல்ல விரும்பினால் சட்டப்படியிலான மணமுறிவின் வழியாகவே அது சாத்தியமாகும்.

மரியா கருவுற்றிருந்த செய்தியறிந்த யோசேப்பு அவரை இகழ்ச்சிக்குள்ளாக்கவும், தான் இகழ்ச்சியடையவும் விரும்பவில்லை. ஆகவே, முறைப்படி மரியாவை விலக்கிவிடலாம் என அவர் திட்டமிட்டார் (வ. 19). யோசேப்பின் இகழ்ச்சி நிலை பற்றிய அச்சத்தைப் போக்க ஆண்டவரின் தூதர் கனவில் தோன்றித் தைரியப்படுத்துகிறார் (வ. 20).

உம் மனைவி மரியாவை ஏற்றுக்கொள்ள அஞ்சவேண்டாம். ஏனெனில், அவர் கருவுற்றிருப்பது தூய ஆவியால்தான் என்ற கனவு வழியான இறைச்செய்தி தூக்கத்திலிருந்து விழித்த யோசேப்புக்குத் தெளிவை ஏற்படுத்தியது. தடுமாற்றத்திலிருந்த யோசேப்பு தனது பயணத்துக்கான தடத்தைக் கடவுள் சரியாக ஏற்படுத்தியுள்ளார் என்ற தெளிந்த மனநிலையுடன் செயல்படுகிறார் (மத். 1: 24, 25).

நமது சுயமான சிந்தனைகளும், தீர்மானங்களும், தடுமாற்றத்தையும், அச்சத்தையும் ஏற்படுத்தும். இறைவழிகாட்டுதலை எதிர்நோக்கி, அதனைப் பெற்றுக்கொள்வதும் திறந்த மனதுடன் ஏற்றுக்கொண்டு கீழ்ப்படிவதும், அச்சம் அகன்று நம்பிக்கையுடன் வாழும் வாய்ப்பை ஏற்படுத்தும். ஆகவே, வாழ்வில் எதிர்கொள்ளும் எதிர்மறையான சூழ்நிலைகளைப் பார்த்து அச்சமடையாமல் கடவுள் காட்டும் வழியில் நம்பிக்கையுடன் பயணிப்போம்.

3. அச்சம் அகன்றிட தூய கடவுளுடன் இணைவோம்.

இஸ்ரயேல் மக்களைத் தனிநபராக வழிநடத்திட இயலும் என ஏக்கமுற்றார் யோசுவா. பயணப்பாதையில் நடந்த சம்பவங்கள் அவரது மனதில் நிழலாடின. பசியால் நாங்கள் சாகவா அழைத்து வந்தீர்கள் என முறுமுறுப்பு (வி.ப. 16: 3), மோசேயைக் கல்லெறிய முயற்சித்தல் (வி.ப. 17: 3, 4), பொற்கன்றுக்குட்டி வணக்கம் (வி.ப. 32: 4, 5). இத்தகு போராட்ட குணம் படைத்த மக்களை எப்படி வழிநடத்துவது என்ற அச்சம் யோசுவாவை வெகுவாய் ஆட்கொண்டது. கடவுள் யோசுவாவிடம், உன் பயணமும், மக்களை வழிநடத்துவதும் என்னுடன் இணைந்து செயல்படுவதாக அமையட்டும் எனக் கூறி, அவருக்குள் எழுந்த அச்சத்தை முழுமையாக அகற்றி, ஆசுவாசப்படுத்தினார் (யோசு. 1: 5, 6, 9).

இம்மானுவேல் என்றால் கடவுள் நம்முடன் இருக்கிறார் என்பது பொருள் (மத். 1: 3). நம்முடன் இருப்பதற்காக அவர் தமது சிறப்பு நிலையைத் துறந்தார். அவர் கடவுளுக்கு இணையாய் இருக்கும் நிலையை வலிந்து பற்றிக்கொண்டிராமல், தம்மை வெறுமையாக்கி அடிமையின் வாழ்வை ஏற்று மனிதருக்கு ஒப்பானார் (பிலி. 2: 6, 7). பாவம் நமது எதிர்கால வாழ்வைக் கேள்விக்குறியாக்கியது. உடனிருப்பவராகவும், உலக மக்களைப் பாவங்களிலிருந்து மீட்பவராகவும் இயேசு கிறிஸ்து வெளிப்பட்டார் (மத். 1: 21-23). அமைதியிழந்த மக்களுக்கு அமைதி அருள்பவராக அவர் அடையாளப்படுத்தப்பட்டார் (லூக். 2: 14, 8-31).

நம்முடன் இணைந்திருந்து அச்சம் அகற்றத் தமது சிறப்பு நிலையைத் துறந்து வந்தவருடன் நம் உள்ளம் இணைய வேண்டும். அவரது பண்புகளும், தன்மைகளும் நம்மில் நிறைந்திட வேண்டும். அப்பொழுதுதான் ஒன்றிப்பு உருவாக இயலும். இம்மானுவேலாய் உடனிருக்க இறங்கிவந்த கடவுளுடன் இசைந்து வாழ ஆணவம், பெருமை, பகைமை போன்ற தீய குணங்களை விடுத்துப் பொறுமை, தாழ்மை, நல்லுறவு என்னும் நற்தகவுகளை நமதாக்குவோம். அச்சத்தின் ஆதிக்கத்தை ஒழித்து அமைதியின் ஆளுகையை நிலைநாட்ட நாம் கடவுளுடன் செயல்படுவோம்.

இனிய கப்பல் பயணம், எழிலாய்ச் சென்று கொண்டிருந்தபோது, திடீரென எழுந்த சூறாவளிக்காற்று கப்பலை தடுமாற்றமடையச் செய்தது. அனைவரும் பயத்தில் உறைந்து செய்வதறியாது திகைத்தனர். மாலுமி திடீரென அறிவிப்பொன்றை வெளியிட்டார். என்னால் இயன்றதை செய்கிறேன், கடவுளிடம் மன்றாடுங்கள். எல்லோர் மனதிலும் மேலும் அதிக பயம் தொற்றிக்கொண்டது. இத்தருணத்தில் குழந்தையொன்று எந்த சலனமும், அச்சமுமின்றி மகிழ்ச்சியாக ஆடிப்பாடிக் கொண்டிருந்தது. உடன் பயணிகள் அக்குழந்தையிடம் வினவினர் - கப்பல் அமைதியாகப் பயணிக்க முடியவில்லை, நாம் அனைவரும் மிகப் பெரும் ஆபத்தில் இருக்கிறோம், உனக்குப் பயமில்லையா? இந்த கப்பலின் மாலுமி என் அப்பாதான், அவர் என்னுடன் இருக்கும்போது எனக்கென்ன அச்சம் என பதிலளித்தது குழந்தை. அச்சத்தின் பிடியிலிருந்து விடுபடுவோம். இறைவன் நம்மோடு, ஆமென்.

ப	ஞா. 84	கீர். 86

அருள்திரு. **R. ஹென்சிலின் நேசராஜ்**
ஆயர், திற்பரப்பு

ஆண்டவரே வருக: காத்திருத்தலில் வாழ்வு

Maran - atha: Life in Waiting

எசா. 2: 2-5 தி.வெ. 22: 10-21

தி.பா. 75 லூக். 12: 32-40

"ஆண்டவராகிய இயேசுவே, வாரும்" (தி.வெ. 22: 20).

'மாரநாதா' என்பது அரமேய வார்த்தை. இதன் பொருள் 'என் ஆண்டவரே வாரும்' அல்லது 'என் ஆண்டவர் வந்திருக்கிறார்' என்பதாகும். ஆரம்ப காலக் கிறிஸ்தவர்கள் இயேசு கிறிஸ்து திரும்பி வருவார் என்று தங்களிடம் இருந்த நம்பிக்கையை வெளிப்படுத்த இந்த வார்த்தையைப் பயன்படுத்தினர். துவக்க காலத்திருச்சபையானது உரோமருடைய ஆட்சியில் பல துன்பங்களுக்கு உள்ளாகியது (எபி. 11: 36-38). இக்காலத்தில் ஆண்டவருடைய வருகைக் குறித்த எதிர்பார்ப்பு (Parousia) ஆறுதலையும், நம்பிக்கையையும் கொடுத்தது. அன்று இறைமக்கள் ஆண்டவராகிய கிறிஸ்துவை எதிர்நோக்கி, நம்பிக்கையோடு காத்திருந்தனர். இன்று நாம் ஆண்டவரின் இரண்டாம் வருகையை எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம். 'ஆண்டவரே வாரும்' என்ற காத்திருத்தலின் வாழ்வு 'ஆண்டவர் வருகிறார்' என்ற திருச்சபையின் பற்றுறுதியையும், 'ஆண்டவரே வாரும்' என்ற இறைவேண்டலையும் சுட்டிக்காட்டுகிறது. ஆண்டவர் வந்தார், ஆண்டவர் வருகிறார், ஆண்டவர் வருவார் என்பதும் திருவருகையின் மூன்று அம்சங்களாக உள்ளது. இன்றைய திருமறைப் பகுதிகளின் அடிப்படையில் காத்திருந்தலின் வாழ்வில் நாம் அடைய வேண்டிய அனுபங்களைச் சிந்திக்கும்போது :

1. காத்திருத்தலில் ஆயத்தம் தேவை (லூக். 12: 40)

"நீங்களும் ஆயத்தமாய் இருங்கள். ஏனெனில் நீங்கள் நினையாத நேரத்தில் மானிட மகன் வருவார்."

ஆண்டவரின் வருகைக்காக இறைமக்களாகிய நம் வாழ்வில் ஆயத்தம் தேவை. லூக். 12: 35-40-இல் மானிட மகன் எப்பொழுது வருவார் என அறியாத படியால் விழிப்பாயிருக்கக் கூறுகிறார். ஆண்டவரது இரண்டாவது வருகை தங்கள் வாழ்நாட்களிலேயே இடம்பெறும் என்று இயேசுவின் சீடர்களும், இறை மக்களும் எதிர்பார்த்துக் காத்திருந்தனர். அதற்குரிய ஆயத்தங்களோடும் இருந்தனர். எல்லா உடைமைகளையும் பொதுவாக வைத்திருந்தனர் (தி.ப. 2: 4-45). வருகை தாமதமாகிக் கொண்டே போனபோது, இரண்டாம் வருகை பற்றி ஏற்பட்ட புரட்டு போதனைகள், திரிபுக் கொள்கைகளுக்குப் பதில் கூறி

விளக்கமளிக்க வேண்டிய கட்டாயம் அப்போஸ்தலர்களுக்கு ஏற்பட்டது. (2 பேது. 3: 8-16). திருச்சபைக்கு ஏற்பட்ட துன்புறுத்தல்களால், இறைமக்கள் "எதுவரைக்கும் இப்பாடுகள் ஆண்டவரே?" என்ற பற்றுறுதிக் கேள்வியை எழுப்பினர். மத் 24: 44-இல் "நீங்களும் ஆயத்தமாயிருங்கள் ஏனெனில் நீங்கள் நினையாத நேரத்தில் மானிட மகன் வருவார்." 10 கன்னிகைகளில் 5 பேர் எல்லா நிலைகளிலும் ஆயத்தப்பட்டு இருந்ததைப் போலிருக்க அழைக்கிறார்.

இறைவாக்கினர்கள் ஆண்டவரின் வருகையை முன்னறிவித்து, அவரின் வருகைக்காய் ஆயத்தப்படுத்தினர் (ஏசாயா 40: 3). முழுக்கு முனிவர் யோவான் ஆண்டவரின் வருகைக்கான வழியை ஆயத்தம் செய்தார் (மத். 3: 1-17). வருகைக்கான ஆயத்தப்படுதலில் வலியுறுத்தப்படும் செய்திகள் என்னவெனில் "பள்ளத்தாக்கு எல்லாம் நிரப்பப்படும், மலை, குன்றுகள் யாவும் தாழ்த்தப்படும். கோணலானது நேராக்கப்படும். கரடு, முரடுகள் சமமாக்கப்படும்." அதாவது ஏற்றதாழ்வு இல்லாத ஒரு சமூகம். எனவே தான் தொடக்க கால திருச்சபையார் அனைத்தையும் பொதுவாய் அனுபவித்து இறை வருகைக்காய்க் காத்திருந்தனர். இன்று சமுதாயத்தில் காணப்படும் அநீதிகள், ஊழல், பயங்கரவாதம், போர், ஓரங்கட்டப் படுதல், ஒதுக்கப்படுதல், ஏமாற்றப்படுதல், தனித்துவிடப்படுதல் இவைகள் வேரறுக்கப்பட்டு, ஒரு சமுக நீதி காக்கப்படும் தன்னிகரில்லா சமூகம் ஏற்படவேண்டும். ஆண்டவரின் எதிர்பார்ப்பு அது. அவர் வருகைக்காய் அத்தகைய ஆயத்தங்களுடன் காத்திருப்போம்.

2. காத்திருத்தலில் சிந்தனைகளில் மாற்றங்கள் தேவை (ஏசா. 2: 3)

" . . . அவர் தம் வழிகளை நமக்குக் கற்பிப்பார். நாமும் அவர் நெறிகளில் நடப்போம்."

ஏசாயா 2: 1-4-இல் 'இறுதி நாட்களில்' என்பது எதிர்காலத்தைக் குறிக்கிறது. 'இனிவரும் நாட்களில் யாவே ஆண்டவரைத்தேடி மக்களினங்கள் வருவார்கள்' என்பதில் 'யாவே அனைவருக்கும் ஆண்டவர்' என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது. ஆண்டவரின் வருகையை எதிர்நோக்கிக் காத்திருக்கும் மக்களிடம் இந்த எண்ணம் வலுவடைய வேண்டும். நம்முடைய எண்ணங்களில் மாற்றம் தேவை. சிந்தனை, செயல்பாடுகளில் மாற்றம் தேவை. தவறான சிந்தனைகளைக் களையவும், கிறிஸ்துவின் சிந்தைக்கேற்ப வாழ்வில் மாற்றங்கள் தேவை. அனைவரையும் நியாயம் தீர்க்க வரும் கடவுள் 'அனைவருக்கும் உரிய ஆண்டவர்', என்ற மனநிலை அனைவருக்கும் வேண்டும். சிந்தனைகளில் மாற்றம் தேவை. ஏசா. 2: 4-இல் "அவர் வேற்றினத்தாரிடையே உள்ள வழக்குகளைத் தீர்த்து வைப்பார். பல இன மக்களுக்கும் தீர்ப்பளிப்பார்" என்பவை அனைத்து மக்களிடமும் கரிசனை கொண்டு, பாரபட்சமின்றி நீதி வழங்கும் நீதிபரர் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

வன்முறை சிந்தனைகளிலிருந்து மனமாற்றம் தேவை, போர் கருவிகள் அல்லது பிறரைக் காயப்படுத்த பயன்படுத்தப்படும் ஆயுதங்கள், பிறருக்கு பயன்படும் கருவிகளாக மாற்றி அமைக்கப்படும் அனுபவங்கள் ஏற்பட வேண்டும். ஏசா. 2: 4-இல் ". . . அவர்கள் தங்கள் வாள்களைக் கலப்பைக் கொழுக்களாகவும், தங்கள் ஈட்டிகளைக் கருக்கரிவாள்களாகவும் அடித்துக் கொள்வார்கள். ஓர் இனத்திற்கு எதிராக மற்றோர் இனம் வாள் எடுக்காது". போர், வன்முறை, அடக்குமுறை, ஆதிக்க எண்ணங்கள் இவைகளிலிருந்து இத்தனை மாற்றம். ஒரு முடிவில்லாத அமைதிக்கு நேரான பயணம். மீக்கா 4: 4 "அவர்களுள் ஒவ்வொருவரும் தம் திராட்சைத் தோட்டத்தின் நடுவிலும், அத்தி மரத்தின் அடியிலும் அமர்ந்திருப்பர் அவர்களை அச்சுறுத்துவார் எவருமில்லை." நாம் ஆண்டவரின் இரண்டாம் வருகையை எதிர்பார்த்து நல்லெதிர் நோக்குடன் காத்திருக்கிறோம்.

காத்திருத்தலின் வாழ்வில் சிந்தனைகளில் மாற்றம் தேவை. உயிரோடு எழுந்து, விண்ணுக்கேறி, தந்தையின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கும் 'ஆண்டவர் மீண்டும் வருவார்' என்ற நல்லெதிர் நோக்கு நம் எதிர்பார்ப்பு மட்டுமல்ல; 'மீண்டும் வருவேன்' என்பது இயேசுவின் வாக்குறுதி. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் கடவுள் அனைத்திலும் அனைத்துமாயிருப்பார். அனைவருக்கும் கடவுளாயிருப்பார். நாம் கிறிஸ்துவைப் போலிருப்போம். 1 யோவா. 3: 2 ". . . இனி எத்தன்மையராய் இருப்போம் என்பது இன்னும் வெளிப்படவில்லை. ஆனால் அவர் தோன்றும்போது நாமும் அவரைப்போல் இருப்போம். ஏனெனில் அவர் இருப்பதுபோல் அவரைக் காண்போம்."

3. காத்திருத்தலில் ஆண்டவரைக் குறித்த அறிவு தேவை (தி.வெ. 22: 13)

"அகரமும், னகரமும், முதலும் இறுதியும், தொடக்கமும் முடிவும் நானே."

வாக்குரைக்கப்பட்ட, வாக்குமாறா ஆண்டவரின் வருகைக்காகக் காத்திருக்கிறோம். வரவிருக்கும் ஆண்டவரின் வருகைக்காய் ஆயத்தத்தோடு, காத்திருக்கும் நம்மில் ஆண்டவரைக் குறித்த முழுமையான அறிவு தேவை. படைப்பாளராகிய ஆண்டவர், மீட்பராகிய கிறிஸ்து, தேற்றரவாளராகிய தூய ஆவியானவர் இவ்வுலகின் மீதும், உலக மக்கள் மீதும் கரிசனை உடையர். அவர் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர். அவர் அல்பாவும் ஓமேகாவுமானவர். முதலும் இறுதியுமானவர். அவரவர் செயல்களுக்கு ஏற்ப அவரவருக்குக் கைமாறு அளிப்பவர் (தி.வெ. 22: 12). நீதியாக நியாயம் தீர்ப்பவர். நடத்தை கெட்டோர், சூனியக்காரர், பரத்தைமையில் ஈடுபடுவோர், கொலையாளிகள், சிலை வழிபாட்டினர், பொய்ம்மை நாடி அதன்படி நடப்போருக்கு அவரது வருகையில் அவரிடம் இடமில்லை (தி.வெ. 22: 15). ஆண்டவரைக் குறித்த இந்த அறிவு கடவுளின் வருகைக்காகக் காத்திருப்போருக்குத் தேவை. தங்கள் சுய விருப்பப்படி வாழுகிறவர்கள் அப்படியே வாழலாம். ஆனால் அவர்களுக்கு நியாயத் தீர்ப்பு உண்டு என்ற

உணர்வு தேவை (தி.வெ. 22: 11, 12). ச.உ. 11: 9 “ . . . மனம் விரும்புவதைச் செய்யுங்கள். கண்களின் நாட்டத்தை நிறைவேற்றுங்கள். ஆனால் நீங்கள் செய்கிற ஒவ்வொரு செயலுக்கும் உரிய தீர்ப்பைக் கடவுள் வழங்குவார் என்பதை மறவாதீர்கள்.”

‘மீண்டும் வருவேன்’ என்பது இயேசுவின் வாக்குறுதி (யோவா. 14: 3). இயேசு கிறிஸ்து விண்ணுக்கேறிய போதும் இவ்வுறுதி தரப்பட்டது. “இந்த இயேசு உங்களிடமிருந்து விண்ணேற்றமடைந்ததைக் கண்டீர்களல்லவா? அவ்வாறே அவர் மீண்டும் வருவார்” (தி.ப. 1: 11). திருவெளிப்பாடு நூல் இயேசு மீண்டும் வருவேன் என்ற வாக்குறுதியை மீண்டும் குறிப்படுகிறது (3: 11; 22: 7, 20). “ஆமென், ஆண்டவராகிய இயேசுவே வாரும் என்ற எதிர்நோக்கோடு, விண்ணப்பத்தோடு, வாஞ்சையோடு அழைப்போடு திருவெளிப்பாடு நூல் நிறைவுபெறுகிறது. (22: 20). ‘மீண்டும் வருவேன்’ என்ற தமது வாக்குறுதியை இயேசு கிறிஸ்து நிச்சயம் நிறைவேற்றுவார். அதற்காக நாம் ஆயத்தமாகி, சிந்தனை மாற்றம் பெற்று, ஆண்டவரைக் குறித்த சரியான அறிவைப்பெற்று நம்பிக்கையோடு அவர் வருகைக்காய்க் காத்திருப்போம். வந்தவர் இனியும் வருவார். முதல் வருகையில் வந்தவரும், இரண்டாம் வருகையில் வர வேண்டியவருமான ஆண்டவர் வருகிறார் அதற்காய் ஆயத்தமாவோம், ஆமென்.

அருள்திரு. T. டேவிட் கிளேட்சன்

இரண்டாம் ஆயர், நாகர்கோவில் கஸ்பா சபை

ᴜ	ஞா. 85	கீர். 88

உலகிற்கு மகிழ்ச்சி

Joy to the World

1 குறி. 16: 23 - 34 பிலி. 4: 4-9

தி.பா. 98 லூக். 1: 67-79

“. . . விண்ணிலிருந்து விடியல் நம்மைத் தேடி வருகிறது” (லூக். 1: 79).

மகிழ்ச்சி என்பது வலுவான நிறைவின் உணர்வு. கவலைகள் அல்லது போராட்டங்கள் இல்லாத வாழ்க்கை என்பதல்ல. ஓர் ஆடம்பரமான மாளிகையில் பிறப்பதும் ஆசைகளில் திருப்தியடைவதும் நிலையான மகிழ்ச்சியைத் தராது. உண்மையான மகிழ்ச்சி என்பது, புகழ், அந்தஸ்து, செல்வம் போன்ற மேலோட்டமான காரணிகளால் ஏற்படாமல், கள்ளம் கபடில்லாத உயிர்களிடத்தில் கொட்டிக் கிடப்பதாகும். எவ்வளவு கடினமான சூழ்நிலையிலும், கவலையிலும் இருக்கும் ஒருவர் ஒரு குழந்தையைக் கையில் ஏந்திக் கொஞ்சும்போது அவருடைய கவலை காணாமல் போய்விடும். இதற்குக் காரணம் குழந்தையின் கள்ளமில்லாச் சிரிப்பு. இயேசு என்ற குழந்தையின் பிறப்பு தற்காலிகமான மகிழ்ச்சியாக அல்லாமல் நிரந்தரமான நிறைவான மகிழ்ச்சியைத் தருகிறது.

சார்லி சாப்ளின் பிறரைத் தனது நகைச்சுவைச் செயல்களால் சிரிக்க வைத்தவர். அதனால் அவரது புகழ் வானமளவு வளர்ந்தது. இந்தக் காலகட்டத்தில் சாப்ளினைப்போல தோற்றமளிப்போருக்கான போட்டிகள் பல நடத்தப்பட்டு வந்தன. சார்லி சாப்ளின் ஒருமுறை அப்போட்டி ஒன்றில் ரகசியமாகப் பங்கு பெற்றார். இதில் இவரால் மூன்றாம் பரிசையே வெல்ல முடிந்தது. இது தான் உலக மதிப்பீடுகளால் கிடைக்கும் மகிழ்ச்சி.

1 குறிப்பேடு 16-ஆம் அத்தியாயத்தில் தாவீது அரசரின் நன்றித் திருப்பாடல் நான்கு முக்கியமான அம்சங்களைக் கொண்டுள்ளன.

i) கடவுள் செய்த வல்ல செயல்களை நினைத்துப் பார்த்தல். ii) கடவுளின் செயல்களைப் பிறரிடம் எடுத்துரைத்தல். iii) கடவுளின் மாட்சிமையையப் புகழ்தல், iv) கடவுளுக்குத் தனது உடைமைகளையும், நேரத்தையும் கூடவே தன்னையும் காணிக்கையாக்குதல்.

இவையனைத்தும் எல்லோரும் மகிழ்வதற்கான கடவுளின் வல்ல செயல் என்று புகழ் பாடுகிறார். பிலிப்பியர் 4-இல் எப்போதும் மகிழ்வுடன் இருக்க பவுலார் ஆலோசனை வழங்குகின்றார். இதற்கு அவர் தன்னுடைய தனிப்பட்ட வாழ்வை சான்றாக்கிச் சொல்லும்போது,

i) எப்போதும் எந்நிலையிலும் மனநிறைவுடன் வாழ கிறிஸ்துவிடமிருந்து கற்றுக் கொண்ட அனுபவப் பாடம். ii) தனக்கு எத்தகைய ஆற்றல் தேவையோ அதைக் கொடுப்பதற்கு கடவுள் வல்லவர் என்ற அசையாத நம்பிக்கை. இவையனைத்தும் தற்காலிக மகிழ்ச்சியாக இல்லாமல் நிறைவான நிரந்தமான மகிழ்ச்சியை உறுதிப்படுத்துகிறது. லூக்கா. 1: 67-79 திருமுழுக்கு யோவான் பிறந்தபோது அவரது தந்தை சகரியா ஆட்கொள்ளப்பட்டுப் பாடுகின்ற பாடல்;

i) மேசியா எதிர்பார்ப்பு நிறைவேறுகிறது. ii) கடவுளின் ஆணை நிறைவேறுகிறது. iii) தாவீதின் ஆட்சி மீண்டும் உருவாகிறது.

இது உலகளாவிய பரந்துபட்ட மகிழ்ச்சிக்கான நேரம் உதயமானது என்ற பேருண்மையின் சாட்சிப் பிரமாணமாக அறிவிக்கப்படும் அறிவிப்பாகும். இந்தப் பின்னணியத்தோடு உலகிற்கான மகிழ்ச்சி எப்படி உருவாகிறது என்பதைத் தியானிப்போம்.

1. விடுதலையினால் மகிழ்ச்சி (லூக். 1: 68)

"இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவரைப் போற்றுவோம். ஏனெனில் அவர்தம் மக்களைத்தேடி வந்து விடுவித்தருளினார்."

பகையுணர்வும், வெறுப்பும் பரவியிருந்த உலகில் மேசியா வருவார் என்ற எதிர்பார்ப்பில் இருந்தவர்களுக்கு விடுதலை தரப்பட்டது. பாவமன்னிப்பை உறுதி செய்வதின் வழியாக மகிழ்ச்சியைக் கடவுள் தருகிறார் என்ற நம்பிக்கை இயேசுவின் பிறப்பால் ஏற்படுகிறது. இருள் என்பது நம்பிக்கையின்மையையும் வாழ்வின் உறுதியற்ற நிலையையும், பயத்தையும் அடையாளப்படுத்தும் உருவகமாக இருக்கின்றது. அகவாழ்விலும், புறவாழ்விலும் ஆதிக்கம் செலுத்தும் இருளை அகற்றும் விடியலாகத் தோன்றுகிறார் கடவுளின் மகன். பகைமை வெறுப்பு இவைகளை மாற்றி, பாவமன்னிப்பைத் தந்து இருளகலச் செய்த கடவுளின் செயல் விடுதலையாகவும் அந்த விடுதலை நீங்காத மகிழ்ச்சியை மானிடருக்குத் தருகின்றது என்பதை உணருவோம்.

2. நீதியினால் மகிழ்ச்சி (லூக். 1: 74, 75)

" . . . தூய்மையோடும் நேர்மையோடும் வாழ்நாளெல்லாம் அச்சமின்றி அவர் திருமுன் பணி செய்யுமாறு வழி வகுத்தார்."

அச்சமின்றி அல்லது பயமின்றி வாழ்தலுக்கான சூழல் மகிழ்ச்சியைக் குறிப்பிடுகின்றது. கடவுள் வழங்கிய விடுதலைக்கு ஈடாக எதிர்பார்க்கப்படுவது அச்சமின்றி வாழ்தல் என்பதோடு நில்லாமல் தூய்மையோடும் நேர்மையோடும் செயல்படுதல் என்பதாகும். தூய்மையும் நேர்மையும் நீதியின் இருபெரும் அடையாளங்கள். இயேசு பிறப்பில் அடிக்கடி பயன்படுத்தப்படும் சொற்கள் கவனிக்கப்பட வேண்டியவை, குறிப்பாகத் தாவீதின் குடும்பம் தாவீதின் ஆட்சி இவை நீதியான ஆளுகை ஏற்படும் என்ற நம்பிக்கையின் வாக்குரைகளானவைகள்.

தாவீதின் ஆளுகை என்பது மனித இனங்களில் அல்ல மனித மனங்களில் ஏற்படுத்தும் மாற்றத்தைப் பற்றியதாகும். பிறரை வஞ்சிக்காத, சுரண்டாத, பேராசை கொள்ளாத சமுதாயத்தை உருவாக்கி அதன் மூலமான மகிழ்ச்சியை நிலைநாட்டுதல் என்ற நோக்கத்தில் மையம் கொள்கிறது.

3. வியத்தகு செயல்களால் மகிழ்ச்சி (லூக். 1: 7-9)

"நம்முடைய கால்களை அமைதி வழியில் நடக்கச் செய்யவும் நம் கடவுளின் பரிவுள்ளத்தாலும் இரக்கத்தாலும் விண்ணிலிருந்து விடியல் நம்மைத் தேடி வருகிறது."

இயேசுவின் பிறப்பின் நோக்கத்தைத் தனக்கென்று அருளப்படுகின்ற குழந்தை யோவானின் பிறப்பைக் கொண்டு சகரியாவின் உள்ளுணர்வுகளில் ஆவியானவர் உணர்த்துகின்றார். அனைவருடைய கால்களும் அமைதி வழியில் நடத்தப்படும். வன்முறையும், வகுப்புவாதமும், வல்லுறவும் ஏற்படாமல் மனிதரைக் கடவுள் நடத்துவார் இதனால் மகிழ்ச்சி ஏற்படும். கடந்த காலங்களில் கடவுள் தனது வியத்தகு செயல்களால் எப்படி மூதாதையரோடு செயல்பட்டார் என்பதனை ஒப்பீடு செய்து பேசுகின்றார். லூக். 1: 72, 73 வசனங்களில் கடவுள் தனது உடன்படிக்கையை மூதாதையரோடு ஏற்படுத்தி இரங்கினார். இந்த இரக்கத்தினால் கிடைக்கப்பெற்ற வாழ்வின் பலன்கள் வியப்பை ஏற்படுத்திற்று.

ஆபிரகாமுக்குக் கடவுள் தந்த ஆணையை ஒரு நாளும் கடவுள் மறக்கவில்லை. அனைத்தையும் நிறைவேற்றினார். வாக்குத் தத்தங்களின் வாழ்வுக்குச் சொந்தக்காரர் என்ற அடையாளத்துடன் அருள் பெற்றவரானார். கிறிஸ்துவின் பிறப்பு, பணி, வாழ்வு மகிழ்ச்சியை ஏற்படுத்தும் வியப்பான மாபெரும் கடவுளின் செயலே என்றுணர்வோம். உலகிற்கு மகிழ்ச்சி என்பது பணம், உணவு, உடை, பரிசுப் பொருட்கள் தருவதால் ஏற்படுவதைக் காட்டிலும் வாழ்வின் நல்ல செயல்களால், கடவுளின் மீது கொண்ட நம்பிக்கையால் ஏற்படுத்த முடியும்.

ஒருமுறை ஐம்பது பேர் கலந்துகொண்ட கருத்தரங்கு நடைபெற்றது. சிறப்புச் பேச்சாளர் தனது பேச்சை இடையில் நிறுத்திவிட்டுக் குழு நடவடிக்கையை (group activity) மேற்கொள்ள முடிவு செய்தார். ஒவ்வொருவர் கையிலும் ஒரு பலூனைக் கொடுத்து, மார்க்கர் பேனாவைப் பயன்படுத்தி அவரவர் பெயரை அதில் எழுதுமாறு கேட்டுக் கொண்டார். பின்னர் அனைத்து பலூன்களும் சேகரிக்கப்பட்டு மற்றொரு அறையில் வைக்கப்பட்டன. இப்போது இந்த ஐம்பது பேரும் பலூன்கள் வைக்கப்பட்ட அறைக்குள் சென்று அவர்களின் பெயர் எழுதப்பட்ட பலூனை ஐந்து நிமிடங்களுக்குள் கண்டுபிடிக்கக் கேட்டுக் கொண்டார் பயிற்சியாளர். எல்லோரும் வெறித்தனமாகத் தங்கள் பெயரைத் தேடி, ஒருவரையொருவர் மோதிக் கொண்டு மற்றவர்களை அங்கும் இங்கும் தள்ளிவிட்டுப் பெரும் குழப்பம் ஏற்பட்டது. ஐந்து நிமிடங்களின் முடிவில்

யாராலும் தங்கள் பெயர் எழுதப்பட்ட பலூனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. பேச்சாளர் இப்போது சொன்னார் : ஒவ்வொரு வரும் தற்செயலாகக் கையில் கிடைக்கும் ஒரு பலூனை எடுத்து அதில் யாருடைய பெயர் எழுதப்பட்டிருக்கிறதோ அவரிடம் கொடுங்கள் என்று சொன்னார். சில நொடிகளில் ஒவ்வொருவர் கையிலும் தங்கள் பெயர் எழுதப்பட்ட பலூன் கிடைத்தது, பெரும் மகிழ்ச்சி ஏற்பட்டது. நமது மகிழ்ச்சி என்பது மற்றவர்களின் மகிழ்ச்சியில் உள்ளது, பிறரின் மகிழ்ச்சியை அவர்களுக்குக் கொடுங்கள் நீங்கள் உங்கள் சொந்த மகிழ்ச்சியைப் பெறுவீர்கள்.

இயேசுவின் பிறப்பு, தனி ஒருவருக்கானதோ, ஒரு சிலருக்கானதோ இல்லை. எல்லோருக்குமானாது. அனைவரையும் சமமாய் நடத்தி மகிழச் செய்கிறது. அந்த மகிழ்வை வாழ்வுக்குச் சொந்தமாக்குவோம், ஆமென்.

அருள்திரு. **R.B. ஜென்கின்ஸ்**

ஆயர், தெங்கம்புதூர்

ப	ஞா. 109	கீர். 109

25.12.2025 கிறிஸ்து பிறப்புத் திருநாள்

கிறிஸ்து: வழிகாட்டும் நம்பிக்கையின் ஒளி

Christ: Guiding Light of Hope

எசா. 9 : 1-7 தீத்து 3: 4-7

தி.பா. 96 மத். 2: 1-12

“ யூதர்களின் அரசராகப் பிறந்திருக்கிறவர் எங்கே? அவரது விண்மீன் எழக்கண்டோம். அவரை வணங்க வந்திருக்கிறோம்” (மத். 2: 2).

கி.மு. 63 முதல் கி.பி. 66 வரை பாலஸ்தீனம் உரோமையர்களின் ஆளுகையில் இருந்தது. கி.மு. 63-இல் உரோமையர்கள் எருசலேமை முற்றுகையிட்டு நகரையும் கைப்பற்றினர். யூதர்கள் உரோமைச் சட்டங்களைக் கடைப்பிடிக்கவும் அவர்கள் கூறும் வரிகளை அரசுக்கு செலுத்தவும் ஆணை பிறப்பித்தது. மக்கள் சரியாக வரிகளை அரசுக்கு செலுத்துகிறார்களா என்பதைக் கண்காணிக்க ஆளுநர்களை நியமனம் செய்தனர். ஆனால் அதே நேரத்தில் யூதர்கள் தங்கள் கலாச்சாரத்தையும், வழிபாட்டு முறைகளைப் பின்பற்றவும் அனுமதிக்கப்பட்டனர். ஏழை எளிய சாதாரண மக்கள் தங்கள் வாழ்வின் தேவைகளைச் சந்திக்க உழைத்து வாழ்ந்தனர். இவர்கள் உரேமை அரசின் வரிகளால் அதிகப் பொருளாதார மனஅழுத்தத்திற்கு உள்ளானார்கள். இச்சூழலில் ஏழை எளிய மக்கள் எங்களை எவராவது விடுவிப்பார்களா என்னும் ஏக்கத்துடனும், கனவுகளுடனும் காத்திருந்தனர். இவர்களுக்குக் கிறித்துவின் பிறப்பு எப்படி நம்பிக்கையின் வழிகாட்டியாக அமைந்துள்ளது, தற்காலச் சூழலில் வாழும் மக்களுக்கு எதைச் சுட்டிக்காட்டுகிறது என்பதைச் சிந்திப்போம்.

1) வாக்குறுதிகள் வழி நம்பிக்கை (எசா. 9: 1-7) Hope Through Promise

எசாயா 7:1-9 வரையுள்ள பகுதியில் உசியாவின் பேரனும் யோதாமின் மகனுமான ஆகாசு யூதா நாட்டை ஆட்சி செய்த நாட்களில், ஏசாயா இறைவாக்கினரின் பங்களிப்பும், இரட்சின் என்னும் சிரியா நாட்டு அரசர்; இராமலியாவின் மகன் பெக்கா என்னும் இஸ்ரயேல் நாட்டு அரசருடன் இணைந்து, எருசலேமுக்கு எதிராகப் போர் தொடுத்த நிகழ்வுகளும், சிரியா எப்ராயிமோடு கூட்டணி அமைத்துக் கொண்டது என்னும் செய்தியும் தாவீதின் குடும்பத்தாருக்கு அறிவிக்கப்பட்டது. உடனே பெருங்காற்றினால் காட்டு மரங்கள் அலையதிர்வு கொள்வதுபோல் ஆகாசின் உள்ளமும் அந்நாட்டு மக்களின் உள்ளங்களும் அலைக்கழிக்கப்பட்டன (7:2). ஏசாயா இறைவாக்கினர் ஆகாசிடம் நீ அமைதியாய் இரு; அஞ்சாதிருந்து நடப்பவற்றை உற்றுப்பார். இரட்சின், பெக்கா ஆகியோரின் கடும் சினத்தைக் கண்டு மனங்கலங்காதே கடவுள் எருசலேமை விடுவிப்பார். நீ அவர் மேல் நம்பிக்கை வை என்கிறார்.

அரசர் ஆகாசு கடவுளிடம் நம்பிக்கை வைக்காமல் அசீரிய அரசர் திக்லத் பிலேசரிடம் தூதனுப்பி, "நான் உம் பணியாள், நீர் புறப்பட்டு வந்து என்னை முற்றுகையிட்டிருக்கும் சிரியா மன்னன் கையின்றும் இஸ்ரயேல் அரசர் கையின்றும் விடுவிப்பீர் என்று சொல்லி ஆகாசு ஆண்டவர் ஆலயத்திலிருந்தும், அரண்மனைக் கருவூலத்திலிருந்தும் பொன்னையும் வெள்ளியையும் எடுத்து அசீரிய அரசருக்குக் கொடுத்தார். அத்தோடு அசீரிய தெய்வங்களின் வழிபாட்டு முறைமைகளைத் தனக்கென்று எடுத்துக்கொண்டார் (2அரச 16: 7,8,10). கி.மு. 733-732-இல் ஆகாசு கேட்டதை எல்லாம் அரசர் திக்லத் பிலேசர் செய்தார். இஸ்ரயேலை முறியடித்து அதன் குடிகளைப் போர்க் கைதிகளாக்கிக் கொண்டார். இதன் விளைவு எருசலேம் அசீரியாவின் அடிமையாக மாறிவிட்டது. ஆனால் ஆண்டவர் எருசலேமைக் கைவிடாமல் பிற்காலத்தில் பெருங்கடல் வழிப்பகுதியாக யோர்தானுக்கு அப்பாலுள்ள நிலப்பரப்பு, பிற இனத்தார் வாழும் கலிலேயா நாடு ஆகிய பகுதிகளுக்கு மேன்மை வரச்செய்தார் (9: 1) ஏன்கிறார் ஏசாயா இறைவாக்கினர். ஏசாயா 7:14-இல் ஆண்டவர் கொடுத்த நம்பிக்கையின் அடையாளத்தை ஏசாயா ஆகாசு அரசரிடம் கூறுகிறார். "இதோ கருவுற்றிருக்கும் அந்த இளம் பெண் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு அவர் "இம்மானுவேல்" என்று பெயரிடுவார்" என்றார். அந்தக் குழந்தையைக் குறித்த வாக்குறுதி நாம் ஏசா. 9:6-இலும் காணலாம். ஆண்டவர் ஒரு குழந்தையை நமக்குத் தந்து அந்தக் குழந்தை ஆட்சிப் பொறுப்பேற்று நீதியையும், நியாயத்தையும், அமைதியையம் ஏற்படுத்தி மக்களுடைய பாரங்களை, சுமைகளை தம் தோளில் சுமக்கும் என்கிற வாக்குறுதி தருகிறார் அந்தப் புதிய அரசரிடம் வியத்தகு ஆலோசகர், வலிமைமிகு இறைவன், என்றுமுள்ள தந்தை, அமைதியின் அரசர் என்னும் நான்கு பண்புகள் உள்ளன.

அ) இந்தக் குழந்தை வியத்தகு ஆலோசகர் என்று கூறபட்டிருப்து ஆகாசு மன்னனின் கோழைத் தனமான தீர்மானங்களுக்கு எதிராக உள்ளது.

ஆ) வலிமைமிகு இறையவர் என்பது உண்மையோடு மக்களை நடத்தக் கடவுளின் முழு ஆற்றலினால் நிரப்பப்பெற்றவர் என்பதாகும். மேலும் இந்த அரசரிடம் தீமைகளைப் பார்த்து வேரறுக்கக் கூடிய கடவுளின் மெய்யான ஆற்றல் உள்ளது.

இ) என்றுமுள்ள தந்தை என்பது உலகத்தில் உள்ள தந்தையர் எல்லாம் குறிப்பிட்ட காலத்தில் வாழ்ந்து, அரசாட்சி செய்து இவ்வுலக வாழ்வை நிறைவுச் செய்வார்கள். ஆனால் இந்தக் குழந்தை என்றும் உள்ள தந்தையாகி முடிவு இல்லாமல் ஆட்சி செய்வார்.

ஈ) அமைதியின் அரசர் என்பது மிக அழுத்தமான பண்பு. அமைதியை ஏற்படுத்துவது மிக எளிதான ஒன்று அல்ல. இஸ்ரயேல் பாலஸ்தீன போர், இஸ்ரயேல் லெபனோன் போர், மணிப்பூர் கலவரம். இந்தச் சூழ்நிலையில் உலகத் தலைவர்களால் இன்னும் அமைதியை ஏற்படுத்த முடியவில்லை.

அரசர் ஆகாசின் அமைதியற்ற அரசாட்சிக்குப் பதிலாக இக்குழந்தை அமைதியை ஏற்படுத்தப் போராடுகிறது. அவரது ஆட்சியின் உயர்வுக்கும், அமைதிக்கும், வளர்ச்சிக்கும் என்றென்றும் நீதியோடும் நேர்மையோடும் ஆட்சிபுரிந்து அதை நிலைபெயராது உறுதிப்படுத்துவார் (ஏசா. 9: 7a). இந்தக் குழந்தையின் ஆட்சியில் அரசின் வளர்ச்சிக்கு முடிவு இராது. முடிவில்லா அமைதியும், நீதியும், நேர்மையும் காணப்பட்டு எளியோரின் உரிமைகள், மதிப்பு, பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் என்னும் வாக்குறுதிகள் தரப்பட்டு அதன் வழி நம்பிக்கை ஊட்டப்படுகிறது.

2) இரக்கத்தின் வழி நம்பிக்கை (தீத். 3: 4-7) Hope Through Mercy

தீத்து 3: 4-7 முடிய உள்ள வாக்கியங்கள் மூல மொழியாகிய கிரேக்கத் திருமறையில் ஒரே வாக்கியமாக எழுதப்பட்டுள்ளது. இதில் மீட்பு தொடர்பான பல கருத்துகள் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன. தீத். 3: 7a "நாம் செய்த அறசெயல்களை முன்னிட்டு அல்ல" . . . கிரேக்கர் தங்கள் பாரம்பரியத்தையும் கலாச்சாரத்தையும் கடைப்பிடிப்பது தான் அறச்செயல் என்று எண்ணியிருந்தார்கள். அதைப்போன்று யூதர்கள் தோராவில் சொல்லப்பட்ட சட்டங்களுக்குக் கீழ்ப்படிதல் தான் அறச்செயல் என்று ஆழமாய் நம்பிக்கை கொண்டிருந்தனர். ஆனால் இங்கே தீத்துவுக்கு எழுதிய கடிதத்தில் நம் அறச்செயல்களை முன்னிட்டு அல்ல மாறாகத் தம் இரக்கத்தை முன்னிட்டு புதுபிறப்பு அளிக்கும் நீரினாலும், புதுபிக்கும் தூய ஆவியராலும் கடவுள் நம்மை மீட்க குழந்தையாய் முழு படைப்பையும் மீட்கும் மீட்பராய் பிறந்த நம் இயேசு கிறித்துவின் வழியாய் தூய ஆவியாரை நம்மீது நிறைவாகப் பொழிந்தருளினார். அவரது அருளால் அவருக்கு ஏற்புடையவராகிய நாம் எதிர்நோக்கி இருக்கும் நிலைவாழ்வை உரிமைப்பேறாகப் பெறும் நம்பிக்கையைத் தம் இரத்தத்தின் வழியாக அனைத்து மக்களுக்கும் பாரபட்சமின்றித் தந்திருக்கின்றார். இந்தக் கிறிஸ்து பிறப்பு நாளில் அவர் இரக்கத்தின் வழி நம்பிக்கை தருகின்றார்.

3) வழிகாட்டுதல் வழி நம்பிக்கை (மத். 2: 1-12) Hope Through Guidance

வானத்தில் தோன்றிய விண்மீன் ஒன்று கிழக்கத்திய ஞானியர் சிலருக்கு ஓர் அரசர் யூதருக்குப் பிறந்திருக்கிறார் என்கிற செய்தியைத் தெரிவித்தது. யூதருக்கு அரசர் பிறந்திருக்கிறார் என்றவுடன், அவர் அரசர் அரண்மனையில் பிறந்திருக்கவேண்டும் என உடனடி முடிவுக்கு வந்தவர்களாய் ஞானியர் ஏரோது அரண்மனை வந்தடைந்தனர். கி.மு. 4-இல் பெரிய ஏரோது என்றழைக்கப்பட்ட அரசர் இயேசு கிறித்துவின் காலத்தில் இருந்த ஆலயத்தைக் கட்டினவர். இதனால் இவர் கொடுங்கோலர் என்றாலும் யூதர்கள் அவர்மீது நல்ல மதிப்பு வைத்திருந்தனர். ஆனால் அவர் தம்முடைய பதவியைத் தக்க வைத்துக்கொள்ளத் தம் மகனையும் கொலை செய்யத் தயங்காதவர். எனவே அகஸ்து என்ற உரோமைப் பேரரசர் ஏரோதின் வீட்டில் பன்றியாயிருப்பது அவர் வீட்டில் மகனாயிருப்பதை விட மேல் என்றும் சொல்லப்பட்டது. எனவே அரசராகப் பிறந்த குழந்தை உயிர் தப்பிக்கக்கூடாது என்ற அச்சத்தில்

பெத்திலகேமில் இரண்டு வயதிற்குட்பட்ட ஆண் குழந்தைகளைக் கொன்றார் என்பது வரலாற்றுப் பதிவு. மேலும் தம் கடைசி நாட்களில் பல எருசலேம் குடியிருப்பு மக்களைச் சிறையில் அடைத்து, தாம் இறந்துபோகும் நாளில் அவர்களும் கொல்லப்பட்டு எங்கும் அழுகையும், அமைதியின்மையும் காணப்படவேண்டும் என்பது அவரது விருப்பமாய் இருந்ததுமன்றி அதனை நிறைவேற்றும்படியும் செய்தார்.

கிழக்கிலிருந்து வந்த ஞானியர் ஏரோதின் அரண்மனையில் பிள்ளையைப் பார்க்க இயலாமல் என்ன செய்வது என திகைத்து நின்றபோது விண்ணில் முன்பு எழுந்த விண்மீன் தோன்றி அவர்களை வழிநடத்தியது. இயேசு என்னும் பிள்ளை இருந்த இடத்திற்கு அவர்கள் வரும்வரை அவர்களை வழிநடத்தியது. அவர்கள் பெரு மகிழ்ச்சி அடைந்து வீட்டிற்குள் சென்று பிள்ளையை அதன் தாய் வைத்திருப்பதைக் கண்டனர். பின்பு தாழ்பணிந்து பிள்ளையை வணங்கித் தங்கள் பேழைகளைத் திறந்து பொன், சாம்பிராணி, வெள்ளைப்போளம் காணிக்கையாகக் கொடுத்தனர். எரோது பிள்ளையைக் கொலை செய்யத் திட்டமிட்டிருக்கிறார் என்பதை ஞானியர்களுக்குக் கனவில் எச்சரிக்கப்பட்டு அவர்கள் வேறுவழியாக தங்கள் நாட்டிற்குத் திரும்பிச் சென்றனர். இங்கு இறையவர் விண்மீன் வழியாகவும் கனவு வழியாகவும் ஞானியருக்கு வழிகாட்டினார். இது கடும் வலிகளால் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு விடுதலையாளராகப் பிறந்த இயேசுவை மெசியாவாக மக்கள் ஏற்றுக்கொண்டு, விடுதலை வாழ்வைப் பெற, ஞானியர்களுக்கு வழிகாட்டி உலகில் நம்பிக்கை தருகிறார்.

இந்தக் கிறித்து பிறப்பு நாளை கி.பி. 2025-இல் கொண்டாடுகிற நாம் வாக்குறுதிகள் வழியாகவும், இரக்கச்செயல்கள் வழியாகவும் வழிகாட்டுதல் வழியாகவும் கிறித்து அனைவருக்கும் நம்பிக்கையின் வழிகாட்டியாக இருக்கிறார் என்ற உணர்வோடு பண்டிகையைக் கொண்டாடுவோம். அத்துடன் நம்பிக்கை இல்லாமல் இருக்கின்ற மக்களுக்கு நம்பிக்கையூட்டி நாம் எதிர்நோக்கியிருக்கும் இறையரசை உரிமைப்பேறாகப் பெற்றுக்கொள்வோம். நம்பிக்கையின் வழிகாட்டியான கிறித்துவை நம் இருதயங்களில் சொந்தமாக்குவோம், ஆமேன்.

அருள்திரு. அறிவர். முத்துசுவாமி கிறிஸ்துதாஸ்
பேராய உபதலைவர் & சேகர ஆயர், காஞ்சிரபுரம்

ப	ஞா. 107	கீர். 97

குடும்பம்: வன்முறையில்லா வாழ்விடம்

Family: Sanctuary of Non- violence

தொ.நூ. 50: 15-21 கொலோ. 3: 12-17

தி.பா. 133 லூக். 15: 11-32

"...இப்பொழுது அஞ்சவேண்டாம்; உங்களையும், உங்கள் குழந்தைகளையும் நான் பேணிக் காப்பேன் என்றார். இப்படியாக அவர் அவர்களுக்கு ஆறுதல் அளித்தார்; அவர்களுடன் இதமாகப் பேசிவந்தார்" (தொ.நூ. 50: 21).

திருமறை தொடக்கநூல் தொடங்கி திருவெளிப்பாடுநூல் முடிய திருமறை முழுவதும் பல குடும்பங்களின் சங்கமமாகக் காட்சியளிக்கிறது. கடவுள் தம் உருவில் ஆணையும், பெண்ணையும் படைத்து, முதல் மண்ணக குடும்பம் உருவாகியதைத் தொடக்கநூல் விவரிக்கிறது. இறைமகனாம் ஆட்டுக்குட்டிக்கும், அவரின் மணமகளான புதிய எருசலேம் என்கிற திருநகருக்கும் இடையே நிகழும் திருமணத்தால் உருவாகும் விண்ணகக் குடும்பத்தை விவரிக்கின்றது இறுதி நூலான திருவெளிப்பாடு (தி.வெ. 21: 2,9,17).

மட்டுமல்லாது பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு ஆகிய இரண்டு நூல்களுமே இரண்டு பெரிய குடும்பங்கள். பழைய ஏற்பாட்டு குடும்பத்திலே யாவே கணவராகவும், இஸ்ராயேல் மக்களினம் அவரின் மனைவியாகவும் அமைகிறார்கள். இஸ்ராயேல் மக்களின் ஒவ்வொரு குடும்பமும் இந்த மாபெரும் குடும்பத்தின் ஒரு சிறு அங்கமாகவே திகழ்கிறது.

புதிய ஏற்பாட்டில் இக்குடும்பத்தின் வரையறை எல்லையற்றதாக நீள்கிறது. இறைவன் இயேசு கிறிஸ்து குடும்பத்தின் தலைவராகவும், திருச்சபை அவரின் வாழ்க்கைத் துணையாகவும் காட்சியளிக்கிறார்கள். இக்குடும்பம் ஒரு குறிப்பிட்ட மக்களுக்கோ, இனத்திற்கோ உரியதன்று; மாறாக எல்லா இனத்தவரிலும் கடவுளுக்கு அஞ்சி நேர்மையாகச் செயல்படுபவர் அனைவருக்கும் இக்குடும்பம் உரியது (தி.ப. 10: 35). சுருக்கமாகச் சொன்னால் மண்ணுலகின் மாந்தர் அவைருக்கும் இக்குடும்பம் திறந்த உள்ளத்தோடு அழைப்பு விடுக்கிறது. இவ்வழைப்பிற்குச் செவிமடுத்துத் தன்னிடம் வருவோரை அன்போடு ஏற்று அரவணைக்கிறது. மண்ணுலகின் ஒவ்வொரு குடும்பமும் இந்த இறை - மனிதக் குடும்பத்தின் ஆதாரமாய் விளங்குகிறது. ஆகத் திருமறை ஒரு குடும்ப நூலாகவே திகழ்கிறது.

கடவுள் தம் சாயலில் மனிதர்களை ஆணும் பெண்ணுமாக உருவாக்கினார். அவர் ஆணையும் பெண்ணையும் உருவாக்கிய அந்த

நொடிப்பொழுதுதான் குடும்பம் உருவான நேரமாகும். இறைதிருவுளத்தின்படி, ஆணும், பெண்ணும் இணைந்து உருவாக்கும் "குடும்பம்" என்ற இருப்புப் பாதையில்தான் மனுக்குலம் என்ற தொடர்வண்டி இதுவரை பயணித்துக் கொண்டு வந்துள்ளது. படைப்பின் சிகரம் மனிதன் என்றால் அச்சிகரத்தின் மீது அசைந்தாடும் ஒரு வெற்றிக்கொடி குடும்பம். கடவுள் தம்மில் தந்தை, மகன், தூயஆவியார் என்ற மூன்று ஆள்தத்துவமாக, பரம அன்பில் ஒன்றுபட்டு வாழ்கிறார். இந்தப் பரம அன்பின் சாயலாகத்தான் கணவன் - மனைவி - பிள்ளைகள் என்று அன்பில் ஒன்றுபட்டு வாழும் குடும்பம் விளங்குகிறது.

இத்தகைய உன்னதமான உருவாக்கத்தைக் கொண்ட குடும்பம், "வன்முறையில்லா வாழ்விடம் குடும்பம்": வன்முறையில்லா வாழ்விடமாகத் திகழ குடும்பங்களில் இருக்க வேண்டிய பண்பு நிலைகளை இன்றைய திருமறைப் பகுதி சார்ந்து தியானிப்போம்"

1. பரிவான வார்த்தை : (தொ.நூ. 50: 21)

"நீங்கள் எனக்குத் தீமை செய்ய நினைத்தீர்கள். ஆனால், கடவுள் அதை இன்று நடப்பதுபோல், திரளான மக்களை உயிரோடு காக்கும் பொருட்டு நன்மையாக மாற்றி விட்டார்".

யோசேப்பின் சகோதரர்கள் யோசேப்புக்கு துரோகம் செய்தார்கள். தீங்கிழைத்தார்கள். ஆனாலும் யோசேப்பு, சகோதரர்களையும், தகப்பன் யாக்கோபையும் தன்னிடமாய் வைத்துப் பராமரித்தான். இப்போது தகப்பன் யாக்கோபு இறந்துவிடவே அவருடைய உடலைக் கானான் நாட்டிற்குக் கொண்டு சென்று அடக்கம் செய்துவிட்டு மீண்டும் எகிப்துக்கு வருகின்றனர். இப்போது யோசேப்பின் சகோதரர்களுக்கு ஒரு பயம், தகப்பன் இருக்கும்வரை நாம் தப்பித்துவிட்டோம், இப்போது தகப்பன் இறந்துவிட்டார், அவர் நம்மிடையே இல்லை. ஆகவே, யோசேப்பு நம்மைப் பழிவாங்குவார் என்று எண்ணி, யோசேப்பினிடத்தில் ஆள் அனுப்பி எங்கள் குற்றப்பழியை மன்னிக்க வேண்டும் என்று கேட்டபோது, யோசேப்பின் வார்த்தைகள் பரிவான வார்த்தைகள், இதமான சொற்கள். இந்த வார்த்தைகள் சகோதரர்களுக்குள்ளே நல் உறவை உருவாக்கியது. வன்முறைக்குப் பதில் வன்முறை அல்ல, இதமான, பரிவான வார்த்தை அப்போதுதான் உறவுகள் தழைக்கும் குடும்பம் வன்முறையில்லா இடமாகத் திகழும் என்பதை இங்கே நாம் கற்றுக்கொள்கிறோம்.

இன்று நம் குடும்பங்களுக்குள்ளே பேசும் வார்த்தைகள் எப்படி இருக்கின்றன. "சனியன் என் மகனை என்னிடமிருந்து பிரிச்சுட்டாளே! நேத்து வந்த சனியன் இன்னிக்கு எப்படி வளைச்சு போட்டுட்டா பாரு! படிச்சாளாம், என்னத்த படிச்சு கிழிச்சா! கூமுட்ட, பைத்தியம் மாதிரிதான் பேசுவா! வாயத் திறந்தாலே பொசு, பொசுன்னுதானே வருது" என்று மாமியாரும், "இவா தாயா! தாய் இப்படியா பேசுவா, இவா தாயே இல்ல, பேய்" என்று மருமகளும், வார்த்தை என்னும் வாளால் வெட்டிக்கொள்கின்ற குடும்பங்கள் ஏராளம், இவர்கள் நகோமி + ரூத் என்னும் மாமியார் + மருமகள் உறவைக் கவனிக்க வேண்டும்.

நகோமியின் கணவரும், இரு மகன்களும் இறந்துபோகிறார்கள். இளம் வயதில் விதவையாக்கப்பட்ட மருமக்களைப் பார்த்து நகோமி, "உங்கள் தாய் வீட்டிற்குச் சென்று பிழைத்துக் கொள்ளுங்கள்" என்று கூறிய மாமி நகோமியிடம், "இம்மையிலும் உம்மோடு; மறுமையிலும் உம்மோடு" (ரூத். 1: 16-17) என்று இதயம் நிறை வார்த்தைகளை இதமாக உரைத்துக் குடும்பத்தைப் புனித இடமாக்குகிறார் இல்லையா?

குடும்பங்களில் சொற்கள், உறவுச் சொற்களாக இருக்க வேண்டும். உங்க அப்பா, உங்க அம்மா, உங்க அண்ணன், உங்க தம்பி, தங்கச்சி என்றில்லாமல்; மாமா, மாமி, மைத்துனன், மச்சினிச்சி, கொழுந்தன், நாத்தனார் என்னும் உறவுச் சொற்கள்தான் குடும்பத்தை அமைதியின் இடமாக்கும். ஆம், குடும்பம் வன்முறையில்லா வாழ்விடமாக விளங்க மலிவான வார்த்தைகள் அவசியம்.

2. பரிபூரண குணம் : (கொலோ. 3: 14)

"இவையனைத்துக்கும் மேலாக அனபையே கொண்டிருங்கள். அதுவே இவையனைத்தையும் பிணைத்து நிறைவுபெறச் செய்யும்".

தூய பவுலார் குடும்ப ஒழுக்கத்தைக் குறித்து கொலோசை சபையாருக்கு குறிப்பிடும்போது, "நீங்கள் கடவுளால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள். அவரது அன்பிற்குரிய இறைமக்கள். எனவே, அதற்கிசைய பரிவு, இரக்கம், நல்லெண்ணம், மனத்தாழ்மை, கனிவு, பொறுமை ஆகிய பண்புகளால் உங்களை அணி செய்யுங்கள்". ஒருவரை ஒருவர் பொறுத்துக் கொள்ளுங்கள்... மன்னியுங்கள் (கொலோ. 3: 12, 13) என்று ஒரு நீண்ட பண்புப் பட்டியலைச் சொல்லிவிட்டு; இவையனைத்துக்கும் மேலாக அன்பையே கொண்டிருங்கள்; அன்பை அணிந்து கொள்ளுங்கள் என்கிறார்.

இந்த அன்பை அணிந்துகொண்டால் அனைத்து நற்குணங்களும் உங்களிடம் தானாக வந்துவிடும் என்று குறிப்பிடுவார். அன்புதான் எல்லாக் குணங்களிலும் பரிபூரண குணம். இந்தக் குணம் குடும்பத்தில் வந்துவிட்டால் வன்முறைக்கு அங்கு இடமில்லை. குடும்பம் அன்பின் இடமாக மாறிவிடும்.

பரிபூரண குணமாகிய அன்பைக் குறித்து இப்படி சொல்லப்படும்.

Love is (அன்பு என்பது)

Slow to suspect (சந்தேகப்பட தாமதிக்கும்) - quick to trust (நம்புவதற்கு முந்தி நிற்கும்)
Slow to condemn (நியாயம் தீர்க்க தாமதிக்கும்)-quick to justify; (நிதானிக்க முந்தி நிற்கும்)
Slow to reprimand (கண்டிக்கத் தாமதிக்கும்)-quick to forbear (கனிவோடு தாங்கி நிற்கும்)
Slow to belittle (சிறுமைபடுத்த முந்தாது)- quick to appreciate (சிறப்புற உற்சாகம் தரும்)
Slow to demand (பலவந்தம் செய்யாது) - quick to give (பரிவோடு கொடுத்து நிற்கும்)
Slow to offend (வருத்தப்படுத்தாது) - quick to defend (வாழ்வுக்கு ஆதரவளிக்கும்)
Slow to resent (கோபம் வராது தடுக்கும்) - quick to forgive (வற்றாத மன்னிப்புத் தரும்)

ஆம், பரிபூரண குணமாகிய அன்பு குடும்பங்களில் நிலைத்திருக்க வேண்டும். அப்பொழுது அந்தக் குடும்பம் புனித இடமாயிருக்கும்.

அமெரிக்காவில் ஒரு தம்பதியர் இருந்தனர். மனைவிக்கு அழகான கூந்தல் இருந்தது. கணவன் தன் முன்னோரால் வழங்கப்பட்ட ஒரு கைகடிகாரத்தைச் சட்டைப் பையில் எப்போதும் வைத்திருப்பார். கிறிஸ்மஸ் காலங்களில் அவர்கள் ஒருவருக்கொருவர் பரிசுகளைக் கொடுத்து அன்பை வெளிப்படுத்துவர். இந்தத் தம்பதியர் ஏழ்மை நிலையில் இருந்ததால் பரிசு வாங்கப் பணமின்றித் தவித்தனர். மனைவி கணவனுக்குத் தெரியாமல் தன் கூந்தலை விற்றுக் கணவனுடைய கடிகாரத்திற்கு ஒரு அழகான Watch Straps ஒன்றை வாங்கினார். கணவன் மனைவிக்குத் தெரியாமல் தன்னுடைய கடிகாரத்தை விற்றுத் தன் மனைவியின் நீண்ட கூந்தலைச் சீவுவதற்கு பொன்முனை கொண்ட "சீப்பு" ஒன்றை வாங்கினார். இருவரும் பரிசுப் பொருளைப் பறிமாறிக் கொண்டபோது ஒருவருக்காக ஒருவர் செய்துகொண்ட தியாகம் இருவரின் உள்ளங்களையும் உடைத்துவிட்டது.

குடும்பங்களில் பரிபூரண குணமாகிய அன்பு, தியாக வாழ்வுக்கு அழைத்துச் செல்லுகின்றது. அப்போது குடும்பம் வன்முறையில்லா வாழ்விடமாக விளங்குகின்றது. அங்கு வன்முறைக்கும் அடக்குமுறைக்கும் இடமில்லை.

3. பரந்த மனம் : (லூக். 15: 24)

"...என் மகன் இவன் இறந்து போயிருந்தான்; மீண்டும் உயிர்பெற்று வந்துள்ளான்; காணாமற்போயிருந்தான்; மீண்டும் கிடைத்துள்ளான் என்றார். அவர்கள் மகிழ்ந்து விருந்து கொண்டாடத் தொடங்கினார்கள்".

இன்றைய நற்செய்திப் பகுதியில் சொல்லப்பட்டுள்ள இளைய மைந்தன் உவமையில் தந்தையின் பரந்த மனம் குடும்பத்தில் கொண்டாட்டத்தைக் கொண்டு வந்தது என்று புரிந்து கொள்ளலாம். தந்தையிடம் தன் சொத்தைப் பிரித்து வாங்கிக்கொண்டு நண்பர்களுடன் ஊதாரித்தனமாய் ஊர்சுற்றி அனைத்தையும் இழந்த நிலையில் மீண்டும் தந்தையிடம் வந்து தன்னுடைய தவற்றை அறிக்கையிட்ட இளையவனைக் கூலிக்காரனாக அல்ல, வேலைக்காரனாகவும் அல்ல, சொந்த மகனாகவே ஏற்றுக்கொண்ட தந்தையின் பரந்த மனம் ஒவ்வொரு குடும்பத் தலைவர்களிடமும் இருக்கவேண்டிய குணம். அது மன்னிக்கும் குணம். மன்னிப்பின் குணம் குடும்பத்தில் வந்துவிட்டால் அது வன்முறையில்லா வாழ்விடமாகிவிடும். குடும்ப உறவுகள் இறையரசின் தகவுகளாகிய அன்பு, அமைதி, மன்னிப்பு, பகிர்வு போன்ற நற்செயல்களை வெளிப்படுத்தக் கடமைபட்டுள்ளது.

யாக்கோபு தனது சகோதரனை ஏமாற்றிய தவறை உணர்ந்து தனக்கு இருக்கும் செல்வங்களையும் பகிர்ந்து கொடுத்தால் குடும்பத்தில் அமைதி நிலவும், வன்முறை அகலும், தன் சகோதரனின் பார்வையில் தயை கிடைக்கும் என நினைத்துத் தனது மந்தைகளோடு வருகை தந்தார் (தொ.நூ. 33: 1, 2). இந்த நற்செயலைக் கண்ட ஏசா, யாக்கோபிடம் "என் சகோதரனே எனக்கு எதிர்கொண்டு வந்த பரிவாரம் எதற்கு? ஏற்கெனவே என்னிடம் மிகுதியாக உள்ளது உன்னுடையதை நீயே வைத்துக்கொள்" என்றார் (தொ.நூ. 33: 8, 9).

இந்த நற்செயல் வழியாகப் பகை மாறியது, பாசம் மலிந்தது. பகிரக்கூடிய பரந்த மனம் உதயமானது. மொத்தத்தில் யாக்கோபு, ஏசா சகோதர குடும்பத்தில் பழைய வன்முறை எண்ணம், பழிவாங்கும் எண்ணம் மறைந்து குடும்பம் புனித இடமானது. நம் குடும்பங்களில் இப்படி ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்ளும் மன்னிக்கும் பரந்த மனம் வேண்டும். தூய பவுலார் "ஒருவர் மற்றவருடைய சுமைகளைத் தாங்கிக் கொள்ளுங்கள் (கலா. 6: 2). உளங்கனிந்த அன்பு காட்டுங்கள். பிறர் உங்களைவிட மதிப்புக்குரியவரென எண்ணுங்கள்" (உரோ. 12: 10) போன்ற நற்குணங்கள் குடும்பங்களில் கடைபிடிக்க வலியுறுத்துகிறார். இத்தகைய பரந்த மனம் குடும்பத்தை வன்முறையில்லா வாழ்விடமாக உருவாக்குகிறது.

மேலும் பவுலார் எபேசு சபைக்கும், கொலோசை சபைக்கும் கடிதம் எழுதும்போது குடும்ப வாழ்வில் ஒருவருக்கொருவர் நாம் கடைபிடிக்கவேண்டிய காரியங்களையும், கைவிடப்பட வேண்டிய காரியங்களையும் அழுத்தமாகக் குறிப்பிடுவார்.

ஒருவரையொருவர் அன்புடன் தாங்கி (எபே. 4: 2), ஒருவருக்கொருவர் நன்மை செய்து (எபே. 4: 32), ஒருவருக்கொருவர் மன்னித்து (எபே. 4: 32), ஒருவருக்கொருவர் பரிவு காட்டி (எபே. 4: 32), ஒருவருக்கொருவர் புத்தி சொல்லி (எபே. 5: 19), ஒருவரோடு ஒருவர் பொய் பேசாது (கொலோ. 3: 9), ஒருவருக்கொருவர் எரிச்சல் ஊட்டாமல், ஒருவர் மீது ஒருவர் பொறாமைப்படாமல் (கலா. 5: 26), என்ற பவுலாரின் பட்டியல் நீண்டுகொண்டே செல்லும்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பரிவான வார்த்தைகள் அனேகரை அவர் பக்கமாய் இழுத்துக்கொண்டது. ஆண்டவரின் வார்த்தை பரிவானது மட்டுமல்ல, வாழ்வு தரும் வார்த்தை. இதைப் பேதுரு அடிகளார் அடையாளப்படுத்தும்போது, ...ஆண்டவரே, நாங்கள் யாரிடம் போவோம்? நிலை வாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம் தானே உள்ளன (யோவா. 6: 68) என்பார்.

மட்டுமல்லாமல், ஆண்டவரால் வெளிப்பட்ட குணம் தந்தையாம் கடவுளின் குணம் பரிபூரண அன்பே அந்தக் குணம் (யோவா. 3: 16). ஆண்டவரின் மனம் பாவிகளையும் ஏற்றுக்கொள்ளும் மனம், எதிரிகளையும் மன்னிக்கும் மனம், எல்லோரையும் ஏற்றுக்கொள்ளும் மனம் (லூக். 23: 34). நம் குடும்பமும் இத்தகைய தன்மைகளைத் தாங்கி வாழும் குடும்பமாக

* பட்சமாய்ப் பேசுவோம்!
* பரிபூரண குணமாகிய அன்பை அணிந்து கொள்வோம்!!
* பரந்த மனதுடன் அனைவரையும் ஏற்றுக்கொள்வோம்!!!

அப்போது நம் "குடும்பம் வன்முறையில்லா வாழ்விடம்".

ப	ஞா. 12	கீர். 307

அருள்திரு. **S.M. டேனியல் தேவதாசன்**
சேகர ஆயர், களியங்காடு

கடவுளின் ஆசிகளை எண்ணிப்பார்த்தல்

Counting God's Blessings

புல. 3: 21 - 31 பிலி. 4: 10 - 23

தி.பா. 66 லூக். 7: 1 - 17

"நீர் எங்களைப் பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு வந்து சேர்த்தீர்"

தி.பா. 66: 12.

ஒரு காலத்தில் அமெரிக்காவின் மிசிசிபி மாகாணத்தில் வேகமாக ஓடும் ஓர் ஆற்றின் கரையில் பழங்குடி மக்கள் வாழ்ந்து வந்தார்கள். இவர்களை வேற்றுப் பழங்குடி மக்கள் தாக்குவதற்காக வந்தபோது அவர்களிடமிருந்து தங்களைத் தப்புவித்துக் கொள்வதற்காக ஓடினார்கள். அவர்கள் தப்பித்துக் கொள்வதற்கு ஒரே ஒரு வழிதான் தென்பட்டது, வேகமாக ஓடுகின்ற ஆற்றைக் கடந்து செல்வதுதான் அது. அப்பழங்குடி மக்களில் சிறுகுழந்தைகள், பலவீனமானவர்கள், வயதானவர்கள் இருந்தார்கள். உயிர் பிழைக்க நினைக்கிறவர்கள் இவர்களை ஒரு பொருட்டாக நினைக்காமல் ஓடியிருக்கலாம். ஆனால், இங்கு ஓர் உண்மையைக் காண முடிந்தது. துன்பச் சூழலில் தங்களைத் தப்புவித்துக் கொள்ள முயன்றபோது பாரமாக எண்ணிய வயதானோரை, குழந்தைகளை, பலவீனர்களைத் தங்கள் தோள்களில் சுமந்து விரைந்து ஓடுகின்ற ஆற்றைக் கடந்தார்கள். யாருடைய தோள்களில் அதிகமான பாரம் இருந்ததோ அவர்களால் ஆற்றில் காலூன்றி நிற்க முடிந்தது. எளிதாக ஆற்றைக் கடக்கவும் முடிந்தது. 2025- ஆம் ஆண்டில் கனமான சுமைகள், அழுத்தும் பாரங்கள், போராட்டங்கள், துன்பங்கள் என நாம் எதிர்கொண்டாலும் அவற்றின் வழியாகக் கடவுள் நம் நடைகளை உறுதிப்படுத்தினார்; தடுமாறாமல் முன்னோக்கி நடக்கச் செய்தார். திபா. 66: 9, 11, 12 ஆகிய வசனங்களில் திருப்பாடலாசிரியர்,

"அவர் நம் கால்களை இடறவிடவில்லை..... பளுவான சுமைகளை எங்கள் முதுகின் மீது சுமத்தினீர்..... ஆயினும் நீர் எங்களைப் பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு வந்து சேர்த்தீர்." இந்த ஆண்டில் சுமைகள் சுகங்களாயின! அவமானங்கள் வெகுமானங்களாயின! அழுகையின் பள்ளத்தாக்கு களிப்பின் கருவூலமாயிற்று! ஆண்டின் இரவிலே வந்து நிற்கின்ற நாம் இதுகாறும் கடவுளிடமிருந்து பெற்ற ஆசிகளை எண்ணிப் பார்க்கவும் கடவுளுக்கு நன்றி சொல்லவும் கடனாளிகளாயிருக்கிறோம். எவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்துக் கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டும் என்பது குறித்து தியானிப்போமாக!

1. இறையருளை எண்ணிப்பார் (புல. 3: 31)

"என் தலைவர் என்றுமே கைவிடமாட்டார்"

இஸ்ரயேல் மக்கள் கடவுளின் கட்டளையை மீறிப் பாவத்தில் விழுந்தபோது கடவுள் அவர்களைத் தண்டிக்கிறார். பாபிலோனியச் சிறையிருப்பு இஸ்ரயேல் மக்களின் வாழ்வில் வந்து சேர்ந்தது. இழப்புகள் ஏராளம். கடவுளோடுள்ள உறவில் விரிசல் ஏற்பட்டது. இத்துன்பச் சூழலில் நாங்கள் கைவிடப்பட்டு இருக்கின்றோம் என்பதை உணர்ந்து புலம்பினர். அடிமைத்தனத்தின் அவலத்தைக் காட்டிலும் ஆண்டவரின் அருள் (பேரன்பு) முந்திச் செயல்படவல்லது. -அவரது இரக்கம்தீர்ந்து போகவில்லை (புல. 3: 22). நிந்தைகள் சூழ வந்தாலும் அவர் கைவிடமாட்டார் (புல. 3: 31) எனக் கடவுளின் அருட்செயல்களை எரேமியா இறைவாக்கினர் உரைக்கின்றார்.

இந்த ஆண்டில் நாம் எதிர்கொண்ட இடுக்கண்கள், பேரிடர்கள், நோய்மை, இழப்புகள், ஏமாற்றங்கள் போன்றவைகளை கடவுளின் அருளால் கடந்து வந்திருக்கின்றோம். அவரது அருளை எண்ணிப் பார்த்து அவருக்கு நன்றி செலுத்துவோம்.

2. இறையாற்றலை எண்ணிப்பார் (பிலி. 4: 13)

"எனக்கு வலுவூட்டுகிறவரின் துணைகொண்டு எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு"

தூய பவுலார் இக்கடிதத்தை சிறையில் இருந்து பிலிப்பித் திருச்சபை மக்களுக்கு எழுதுகிறார். பொதுவாக இவ்வுலகில் சிறைத் தண்டனை ஒருவருக்குக் கொடுக்கப்பட்டால் மன ரீதியாக, உடல் ரீதியாகப் பல பாதிப்புகளுக்கு உள்ளாக்கப்படுவார்கள். ஆகவே சிறைக்கு வெளியே இருப்பவர்கள் அவர்களைச் சந்திக்கின்றபோது ஆறுதல் சொல்வது வழக்கம். ஆனால்இ இங்கு சிறைக்குள் இருக்கின்ற பவுலார் சிறைக்கு வெளியே இருக்கின்ற பிலிப்பித் திருச்சபை மக்களுக்கு ஆறுதல் கூறுகிறார்.

தன்னுடைய சிறைத் துன்பத்தினால் ஏற்பட்ட பலவீனங்களில், திருப்பணியில் ஏற்பட்ட கடினங்களில் இறையாற்றலைச் சார்ந்து நின்ற தன்னுடைய வாழ்வை மாதிரியாகக் காட்டுகின்றார். "எனக்கு வறுமையிலும் வாழத் தெரியும், வளமையிலும் வாழத்தெரியும், வயிறார உண்ணவோ பட்டினி கிடக்கவோ, நிறைவோ குறைவோ எதிலும் எந்தச் சூழலிலும் வாழப் பயிற்சி பெற்றிருக்கிறேன். பிலி. 4: 12, 13 ஆகிய திருவசனங்களில் இறையாற்றலோடு சிறையை ஒரு பயிற்சிக் கூடமாகக் கருதியதாகக் கூறுகிறார்.

பழைய ஏற்பாட்டில் நீ.த. 6. 1 - 18- இல் இஸ்ரயேலர் விக்கிரக ஆராதனை நிமித்தம் கடவுளைக் கோபமூட்டியபோது, கடவுள் அவர்களை ஏழு வருடம் மீதியானியர் கையில் ஒப்புக்கொடுத்தார். தங்கள் விளைச்சல்களை மீதியானியரிடம் பறி கொடுத்தார்கள். இத்துன்பச் சூழலில் அவர்கள் கடவுளை நோக்கி முறையிட்டதன் பலனாய்க் கடவுள் அவர்களை விடுவிக்க "வலிமை கொண்ட வீரரான கிதியோனைத் தெரிந்து கொண்டார். கிதியோன் தன் சொந்த

ஆற்றலால், வலிமையினால் மீதியானியரை எதிர்க்க முடியாது என்று எண்ணிய போது, "ஆண்டவர் அவர் பக்கம் திரும்பி, "உன்னுடைய இதே ஆற்றலுடன் செல்லுவாய். மீதியானியர் கையிலிருந்து இஸ்ரயேலை நீ விடுவிப்பாய். உன்னை அனுப்புவது நான் அல்லவா?" (நீத. 6: 14) என மீதியானியரை முறியடிக்க அழைப்பு விடுப்பதைக் காண முடிகின்றது. அதனால் கிதியோன் வெற்றி பெற்றார். நமது வாழ்வில் எதிர்கொண்ட கடினங்கள், துன்பங்கள், போராட்டங்கள் போன்றவற்றை மேற்கொள்ளக் கடவுள் தந்த ஆற்றலை எண்ணிப் பார்த்து அவருக்கு நன்றி செலுத்துவோம்.

3. இறையாறுதலை எண்ணிப்பார் (லூக் 7: 13)

"அவரைக் கண்ட ஆண்டவர், அவர் மீது பரிவு கொண்டு, "அழாதீர்."

இயேசு கிறிஸ்து தம் பணிவிடைக் காலத்தில் ஆறுதலற்றோரை, கைவிடப்பட்டோரை, பெலவீனர்களைக் கண்ணுற்றபோது பரிவு கொண்டார் என்பதை நற்செய்தி நூற்களில் நாம் காணலாம். தூய லூக்கா நற்செய்தி நூல் 7- ஆம் அத்தியாயத்தில், நயீன் ஊர் வாயிலில் இறந்த ஒருவரைத் தூக்கிக்கொண்டு வந்தோருக்கு இயேசு எதிர்கொண்டு சென்றதைத் திருமறை அறிஞர்கள் இவ்வாறு விளக்குகின்றனர்: வாழ்வின் வழி சாவின் வழியைச் சந்தித்தது (The way of Life meets way of death). கணவரை இழந்த இக்கைம்பெண்ணுக்கு இவ்வுலகில் ஒரே உறவாக, அடைக்கலமாக, அனைத்துமாக இருந்த ஒரே மகனும் இப்பொழுது இல்லை. அத்தாயின் ஆதரவற்ற நிலையை உணர்ந்து அவருக்கு ஆறுதல் தந்திட ஆண்டவர் தாமாக முன்வந்தார். "இளைஞனே, நான் உனக்குச் சொல்கிறேன், எழுந்திடு" என்றார் (லூக்: 7:14). அவ்விளைஞனை உயிரோடே எழுப்பி ஆறுதலற்று நின்ற தாயிடம் ஒப்படைத்தார். கிறிஸ்து சிலுவையிலும் அதை நிறைவேற்றினார். தம்மை இழந்து ஆறுதலற்று நின்ற தம் தாய்க்கு உரிய பராமரிப்பையும் ஆறுதலையும் அளிப்பதற்குத் தம் அன்புச் சீடரை அவருக்கு மகனாகக் கையளித்தார் (யோவா. 19: 26 - 27).

நமது வாழ்விலும் இவ்வாண்டில் ஆறுதலற்று அல்லலுற்ற வேளைகளில் கடவுள் நம்மைக் கைவிடாமல் தம் அருளை, ஆற்றலை, ஆறுதலை, தந்து நம்மை கரைச் சேர்த்திருக்கின்றார். பவுலாரைப் போன்று "கடவுளின் சொல்லொண்ணாக் கொடைக்காக அவருக்கு நன்றி உரித்தாகுக" (கொரி. 9: 15) என நாமும் கடவுளுக்கு நன்றி சொல்லுவோம்! இறையாசியைத் தொடர்ந்து பெறுவோம், ஆமென்.

அருள்திரு. **G. மாணிக்கராஜ்**

ஆயர், மணவாளபுரம்

ப	ஞா. 320/465	கீர். 395

பெருந்தன்மையோடு ஆண்டவருக்குக் கொடுத்தல்

Giving God with Generosity

1 குறி. 29: 10-17 | 2 கொரி. 9: 6-15

தி.பா. 118 | லூக். 21: 1-4

"ஒவ்வொருவரும் தம்முள் தீர்மானித்தபடியே கொடுக்கட்டும் . . .முகமலர்ச்சியோடு கொடுப்பவரே கடவுளின் அன்புக்குரியவர்" (2 கொரி. 9: 7).

"சங்கப் பண்டிகை" திருச்சபை ஒழுங்கு முறையில் April மற்றும் October மாதங்களிலே வருகின்றது. வருடத்திற்கு இரண்டுமுறை வயல்களின் விளைச்சலை ஆண்டவர் பாதம் கொண்டுவந்து நன்றி செலுத்தும் திருவிழா. ஆதித் திருச்சபையிலே ஒருமனப்பட்டுக் கூடிவருதல் காணப்பட்டது. தி.ப. 2: 46, 47-இன் படி விசுவாசிகள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே தரித்திருந்து, வீடுகள்தோறும் அப்பம் பிட்டு, மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி தேவனைத் துதித்தபோது இரட்சிக்கப்படுகிறவர்கள் அநுதினம் சபையிலே சேர்க்கப்பட்டார்கள். விசுவாச வீட்டாராய் ஆண்டவர் பாதம் சங்கமிக்கும் சங்கத் திருநாளிலே பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காய் நன்றி செலுத்தும் அதே வேளையில், கர்த்தருடைய சமூகத்தில் நாம் கொண்டுவரும் காணிக்கைகளைக் குறித்து சிந்திப்பதும் அவசியம். இன்றைய திருமறைப் பகுதிகளை அடிப்படையாக கொண்டு, பெருந்தன்மையோடு கர்த்தருக்குக் கொடுத்தலின் மூன்று மிக முக்கிய அம்சங்களை தியானிப்போம்.

1. உற்சாகமாய்க் கொடுத்தல் - Giving cheerfully (II கொரி. 9: 7)

"அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல", "உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்". பெருந்தன்மையோடு கர்த்தருக்குக் கொடுத்தல் உற்சாகமாய் அமைய வேண்டும். முறுமுறுப்போடு, கடமைக்காக கொடுப்பது அவசியமற்றது. அப்படிக் கொடுப்பதை ஆண்டவர் ஏற்றுக்கொள்வதில்லை. நான் கர்த்தருக்குக் கொடுப்பதினால் எனக்கு என்ன கிடைக்கும் என்ற எதிர்பார்ப்போடு கொடுப்பதும் தேவனுக்கு பிரியமில்லாத கொடையாய் மாறிவிடும். தாவீது ஆண்டவரால் தெரிவு செய்யப்பட்டு அபிஷேகம் செய்யப்பட்டபோது, அவர் ஏழ்மை நிலையில் இருந்தார். குடும்பத்தில் கூடச் சரியான அங்கீகாரம் இல்லை. ஆடுகளின் பின்பாகச் சென்று கொண்டிருந்தவர் அரியணையில் அமர்த்தப்பட்டபோது, நன்றி உணர்வு அவரிடம் மிகுதியாய் வெளிப்பட்டது. மட்டுமின்றி, மனத்தாழ்மையும்

தாவீதிடம் காணப்பட்டது. I குறி. 9: 11, 12 திருவசனங்களிலே "மாட்சிமையும், வல்லமையும், மகிமையும், ஜெயமும், மகத்துவமும்" ஆண்டவராலே வருகிறது என்பதை அறிக்கை செய்த தாவீது, அடுத்துச் சொல்கிறார், "ஐசுவரியமும், கனமும் உம்மாலே வருகிறது" என்று. நாம் பெற்றிருக்கும் கல்வி, அந்தஸ்து, ஆஸ்தி, புகழ் அனைத்தும் ஆண்டவரால் என்கிற உணர்வு நம்மில் இருந்தால் "உற்சாகமான கொடை" நம்மிலிருந்து வெளிப்படும்.

Apple நிறுவனத்தின் தலைவரும் தலைமை ஆட்சியரும், கணினித் துறையின் குறிப்பிடத்தக்க ஓர் ஆளுமையாளருமான ஸ்டீவ் ஜொப்ஸ் 2011, அக்டோபர் 5 தனது மரண படுக்கையிலிருந்து எழுதிய வார்த்தைகள் பின்வருமாறு : "வணிக உலகில் வெற்றியின் உச்சத்தை அடைந்தேன், மற்றவர்கள் பார்வையில், என் வாழ்க்கை வெற்றியின் சுருக்கமாக இருப்பினும், வேலையைத் தவிர எனக்கு சிறிது மகிழ்ச்சி இல்லை. இறுதியில், என் செல்வம், எனக்குப் பழக்கப்பட்ட வாழ்க்கையின் உண்மை மட்டுமே. இந்த நேரத்தில், என் படுக்கையில் படுத்து, என் வாழ்க்கையை நினைவுபடுத்தும்போது, நான் மிகவும் பெருமையாகக் கருதிய அங்கீகாரம் மற்றும் செல்வம் அனைத்தும் என் மரணத்தின் முன் வெளிறிப்போய் அர்த்தமற்றதாகிவிட்டதை உணர்கிறேன்".

சர்வ வல்லமையுள்ள ஆண்டவர் ஜீவன், சுகம், பெலன், கல்வி, அந்தஸ்து, ஆஸ்தி, மேன்மைகள் மற்றும் அங்கீகாரம் தந்துள்ளபோது நமது கொடைகள் உற்சாகமாய் அமைதல் வேண்டும்.

2. உள்ளத்தைக் கொடுத்தல் - Giving what we have (லூக். 21: 1-4)

ஆலயத்திலே அமர்ந்திருந்த இயேசு ஜனங்கள் காணிக்கை போடுவதைக் கவனிக்கின்றார். என்ன மனநிலையோடு கொடுக்கிறார்கள் என்பதையும் பார்க்கின்றார். செல்வந்தர்கள் கொடுத்ததைவிடக் குறைவாகக் கொடுத்த ஒரு ஏழை விதவையை இயேசு பாராட்டிப் பேசுகிறார். அந்தப் பாராட்டுதலுக்கு இயேசு சொல்லும் காரணம் வ. 4-இல் தரப்பட்டுள்ளது. "அவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்தெடுத்து கடவுளுக்கென்று காணிக்கை போட்டார்கள்; இவளோ தன் வறுமையிலிருந்து, தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள்".

எவ்வளவு கொடுக்கிறோம் என்பதல்ல; என்ன மனநிலையோடு கொடுக்கிறோம் என்பதே முக்கியமானது. Whatever we give should be out of love for the Lord, not for self - gratification. பெருந்தன்மையோ, நமது பெயர் பிரஸ்தாபத்திற்கென்றோ கொடுக்காமல், நமக்கு ஆண்டவர் தந்துள்ளதில் ஒரு பகுதியை அவருடைய நாம மகிமைக்காய் முழு மனதோடு கொடுக்க வேண்டும்.

மல்கியா 3: 8-இல் நாம் தேவனுக்குக் கொடுக்கும் விஷயத்தில் அவரை வஞ்சிக்கிறோம் என்ற குற்றசாட்டு சொல்லப்பட்டுள்ளது. தசமபாகமும் காணிக்கையும் ஆண்டவருக்குரியது. நாம் ஆண்டவருக்குக் கொடுக்க வேண்டியதை மனப்பூர்வமாய் மன உற்சாகத்தோடு கொடுக்க வேண்டும். யோவான் 6: 8, 9 வசனங்களில் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும், இரண்டு

மீன்களும் வைத்திருந்த சிறுவன் குறித்த குறிப்பு தரப்பட்டுள்ளது. பெற்றோர் அவனுடைய பசியைப் போக்கக் கொடுத்து அனுப்பிய அந்த உணவு இயேசுவின் கரங்களிலே கொடுக்கப்பட்டபோது அனேகர் போஷிக்கப்பட்டதுமல்லாமல்; "நீங்களே அவர்களுக்குப் போஜனம் கொடுங்கள்" என்ற இயேசுவின் கட்டளையும் நிறைவேறியது.

நம்மிடம் உள்ளதை நமக்கு தரப்பட்டுள்ள வாய்ப்புகளை, செல்வங்களை நாம் ஆண்டவருக்கென்று கொடுக்கும்போது, அவருடைய நாமம் மகிமைப்படுகிறது. சங்கத் திருநாளிலே உற்சாகமாய் கொடுப்போம், உள்ளதைக் கொடுப்போம்.

3. உகந்ததைக் கொடுத்தல் - Giving appropriately (தொ.நூ. 4: 4)

கர்த்தருக்குக் கொடுப்பது உகந்ததாய், சிறந்ததாய்க் காணப்பட வேண்டும். திருமறையிலே முதல் சகோதரர்கள் காயீன், ஆபேல் கர்த்தருக்குக் காணிக்கை கொடுத்ததை தொ.நூ. 4-ஆம் அதிகாரத்தில் வாசிக்கின்றோம். இரண்டு பேரும் காணிக்கை கொண்டு வந்தனர். காயீனின் காணிக்கை நிராகரிக்கப்பட்டது. ஆபேலின் காணிக்கை அங்கீகரிக்கப்பட்டது. ஆபேல் தன் மந்தையின் தலையீற்றுகளிலும், அவைகளில் கொழுமையானவைகளிலும் கர்த்தருக்கென்று கொண்டு வந்தான் (தொ.நூ. 4: 4). அதைக் கர்த்தர் உகந்த காணிக்கையாய் ஏற்றுக்கொண்டார். காயீன் உகந்ததைக் கொடுக்காததால் ஏற்பட்ட நிலை என்ன? அவனது காணிக்கை நிராகரிக்கப்பட்டது. அவனுக்கு எரிச்சல் உண்டாயிற்று, அவனது முகநாடி வேறுபட்டது. அவன் தேவசாயலை இழந்தான், தனது சகோதர உறவை இழக்கும் நிலையில் தன் சகோதரனையே கொன்றுபோட்டான்.

The greatest disregard that anyone can face is to be rejected by God. ஆண்டவரால் நிராகரிக்கப்படுவது, வெறுக்கப்படுவது, தள்ளப்படுவது மிகமிக கொடுமையான நிலை. ஆண்டவருக்கு நமது வாழ்வை உகந்ததாய்க் கொடுப்போம், நமது தாலந்துகளை உகந்ததாய்க் கொடுப்போம், நமது நேரத்தை உகந்ததாய்க் கொடுப்போம்.

அர்த்தமிக்க பாடலின் வரிகள் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது,

வாழ்வின் முதன்மை இயேசுவுக்கே
வாழ்வின் முழுமையும் இயேசுவுக்கே
நானும் என் எல்லாமும்
இயேசுவுக்கே சுவிசேஷத்திற்கே

ஆண்டவர் தந்த வாழ்வை உகந்ததாய் அவருக்காய் அவருடைய பணிக்காய்க் கொடுப்போம். சங்கப் பண்டிகையாய் ஆண்டவரின் திருப்பாதம் சங்கமித்து நிற்கும் நாம் பெருந்தன்மையோடு கர்த்தருக்குக் கொடுக்கும் நிலையினை உற்சாகமாய், உள்ளதை, உகந்ததைக் கொடுப்போம் ஆண்டவர் அருளும் ஆசிகளைப் பெற்று மகிழ்வுடன் வாழ்வோம், ஆமென்.

அருள்திரு. P. சாம் பிளசிங்
ஆயர், குளத்துவிளை

சங்க நாளில் சிந்தியுங்கள்

இ.ச. 26: 1-11 கொரி. 8: 1-7

தி.பா. 112 லூக். 21: 1-4

"...ஆண்டவரே, இதோ நீர் எனக்குக் கொடுத்த நிலத்தின் முதற்பலனைக் கொண்டு வந்துள்ளேன் என்று சொல்லி, அதை உன் கடவுளாகிய ஆண்டவர் முன்னிலையில் வைத்து, அவரைப் பணிந்து தொழுவாய்".

"பின்னர், நீயும் லேவியரும், உன்னோடு உள்ள அன்னியரும், கடவுளாகிய ஆண்டவர் உனக்கும் உன் வீட்டாருக்கும் செய்த அனைத்து நன்மைகளை முன்னிட்டு அக்களியுங்கள்". (இ.ச. 26: 10, 11)

பண்டிகை, இஸ்ரவேல் மக்களின் வாழ்வுடன் இணைந்த கொண்டாட்டமாகக் காணப்பட்டது. ஒவ்வொரு பண்டிகைக்கும், ஒவ்வொரு பின்னணியம் காணப்பட்டது. எனவே, கடவுள் இஸ்ரவேல் மக்களுக்கு, பொருள் உணர்ந்து பண்டிகை கொண்டாட அழைப்பு கொடுத்தார். சங்கம் என்பது சங்கமிப்பது என்பதை கூறும் பண்டிகை ஆகும். இத்துடன் கொடுத்தலைக் கூறும் பண்டிகையும் ஆகும். இத்தனை சிறப்புமிக்க சங்கப் பண்டிகை நாளில் சிந்திக்க வேண்டிய உண்மைகளை இணைச்சட்டம் 26: 1-11 வழியாகத் தியானித்து, இறைவன் பக்கம் திரும்ப அழைக்கப்படுகிறோம்.

1. என் வரலாறு என்ன? What is my History? : (இ.ச. 26: 5-9)

பண்டிகை நாளில் இஸ்ரவேல் மக்கள், தங்கள் வரலாற்றைச் சிந்திக்க வேண்டும் என்று கடவுள் கூறினார். இந்த வரலாறு என்ன? எங்கள் முன்னோர் நிரந்தரக் குடியற்றவர்கள். அன்னியர்கள், ஒடுக்கப்பட்டவர்கள், துண்புறுத்தப்பட்டவர்கள், கடினமான வேலைகளைச் செய்த அடிமைகள், துன்பம், வருத்தம் அடைந்தவர்கள். ஆனால் குரல் எழுப்பிய எங்கள் குரலைக் கர்த்தர் கேட்டார். கடினங்களைப் பார்த்தார், விடுதலை தந்தார், வளமான தேசத்தைக் கொடுத்தார். பண்டிகைதோறும் இஸ்ரவேல் மக்கள் தங்கள் வரலாற்றைச் சிந்தித்தனர்.

நாமும், சங்கப் பண்டிகை நாளில் நம் வரலாற்றைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அடிமைத்தனம், பலவரிகள், தடைகள், முகவரி இழந்த நிலை, இப்படிப்பட்ட துன்ப வரலாற்றில், மேலைநாட்டு மிஷினெறிகளின் மூலம் நம் முன்னோர் விடுதலை பெற்றனர். இதை மறவாமல், தவறாமல் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இணைச்சட்டம் 3:7-இன் படி பண்டைய நாள்களை நினைத்துப் பார்க்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, கிறிஸ்தவர்களாகிய நாம் ஒவ்வொருவரும், நம் தனிப்பட்ட வரலாற்றையும் (Personal History) சிந்தித்துப் பார்க்கவேண்டும். என் வரலாற்றில் உள்ள கறுப்பு பக்கங்கள் எத்தனை? என் வரலாற்றில் உள்ள அலங்கோலமான நிகழ்வுகள் எத்தனை? என் வரலாற்றில் உள்ள சகப்பான அனுபவங்கள் எத்தனை? என் வரலாற்றில் உள்ள "சீ" என்று அருவருக்கத்தக்க நிகழ்வுகளின் பதிவுகள் எத்தனை? என் வரலாறு என்ன?

லூக்கா 16: 8-இல் சகேயு தன் வரலாற்றைக் கூறுகிறார். எனினும் இயேசுவிடம், தன் வரலாற்றில் ஒரு புதிய துவக்கத்தை ஏற்படுத்தி உரையாடுகிறார். ஏசாயா 6: 5-இல் ஏசாயா தன் வரலாற்றைக் கூறுகிறார். எனினும், இறைவனிடம், தன் வரலாற்றில் ஒரு புதிய பக்கத்தை ஏற்படுத்தும் என்று கேட்கிறார்.

நம் வரலாறு என்ன? என்பதை சிந்தித்து, நம் வரலாற்றில் புதிய பக்கத்தை உருவாக்கும் ஆண்டவரே, என்று இறைவனிடம் மன்றாடுவோம்.

2. என் வரவு என்ன? What is my Income? : (இ.ச. 26: 10)

பண்டிகை நாளில் இஸ்ரவேல் மக்கள், ஆண்டவருக்கு நிலத்தில் முதற்பலனைக் கொடுக்க வேண்டும் என்று ஆண்டவர் கூறினார். ஆண்டவருக்குக் கொடுப்பது என்பது ஆண்டவரைக் கனம் பண்ணுவது ஆகும் (நீ.மொ. 3: 9). ஆண்டவரும் ஒரு கணக்கை வைத்திருக்கிறார் (தி.பா. 56: 8b). அவரது கணக்கின், வரவு பகுதியில் நாம் எதைக் கொடுத்திருக்கிறோம் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம்மை ஆண்டவருக்குக் கொடுக்க வேண்டும் (II கொரி. 8: 5). நல்ல கனியைக் கொடுக்க வேண்டும் (யோவா. 15: 16b). தாலந்துகளைக் கொடுக்க வேண்டும் (மத். 25: 14, 15). தசமபாகத்தைக் கொடுக்க வேண்டும் (மல். 3: 10). ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக் கொடுக்க வேண்டும் (நீமொ. 11: 30b). ஏழை, எளிய மக்களுக்குக் கொடுக்க வேண்டும் (மத். 25: 40).

1965-இல் "Less Girls" என்ற நாவலை ஒருவர் எழுதினார். அந்தப் பெயர், ஹாலிவுட் திரைப்பட இயக்குநர் ஒருவரைக் கவர்ந்தது. எனவே, அந்தப் பெயருக்காக அந்த நாவலின் உரிமையை, திரைப்பட இயக்குநர் விலை கொடுத்து வாங்கினார். அதன் மதிப்பு சுமார் 50 இலட்சம்.

ஆண்டவருக்காகக் கொடுக்க வேண்டியவைகளைக் கொடுக்காமல், பல நேரங்களில் மாய்மாலமான முத்தம் கொடுக்கிறோம், காறித் துப்பிய உமிழ்நீரைக் கொடுக்கிறோம், கசப்பான காடியைக் கொடுக்கிறோம், அவமானத்தைக் கொடுக்கிறோம், முள்ளால் ஆன முடியைக் கொடுக்கிறோம், பல நேரங்களில் ஆண்டவருக்கு ஒன்றும் கொடுக்காமலும் வாழ்ந்திருக்கிறோம்.

நம்மை உருவாக்கிய இறைவனுக்கு, நமக்கு உயிர்தந்த இறைவனுக்கு, நம்மை உயர்த்தியிருக்கிற இறைவனுக்கு நாம் என்ன கொடுத்திருக்கிறோம்? நம் வரவு என்ன? சிந்திப்போம்.

3. என் வர்த்தமானம் என்ன? (or) நிகழ்காலச் செய்தி என்ன? What is my Present day News? : (இ.ச. 26: 11)

பண்டிகை நாளில் இஸ்ரவேலர் கடவுளின் மகிமை நிறைந்த இடத்திற்கு வரவேண்டும்; தங்கள் ஆண்டவரைப் பணிந்து கொள்ள வேண்டும்; தங்கள் காணிக்கையை ஆண்டவரே ஏற்றுக்கொள்ளும் என்று கூறவேண்டும். வாழ்க்கை சுழன்று கொண்டிருக்கும்போது, பண்டிகை நாளில் இஸ்ரவேலரின் நிகழ்காலச் செய்தி சிந்தித்துப் பார்க்கப்பட வேண்டும் என்பது ஆண்டவரின் விருப்பம் ஆகும். இஸ்ரவேலருக்கும், இறைவனுக்கும் இடையே உள்ள உறவு சிறப்பாக இருக்க வேண்டும் என்பது கடவுளின் எதிர்பார்ப்பு ஆகும்.

சங்க நாளிலும், நம்முடைய நிகழ்கால நிலையைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆபிரகாமின் வாழ்வை ஆய்வு செய்த ஆண்டவர், நீ கடவுளுக்கு அஞ்சுபவன் என்று கூறினார் (தொ.நூ. 22: 12b). யோபுவின் வாழ்வை ஆய்வு செய்த ஆண்டவர், யோபு மாசற்றவர், நேர்மையானவர், கடவுளுக்கு அஞ்சித் தீமையானதை விலக்கி நடப்பவர் என்று கூறினார் (யோபு 1: 8).

நம் வாழ்க்கையை இன்று கடவுள் ஆய்வு செய்தால், கவனித்தால், கடவுள் கூறும் நிகழ்காலச் செய்தி என்ன? நம்மை சிந்திப்போம்.

அன்னை தெரசா அவர்கள் கூறுகின்றார், கடவுள் உன்னைப் பயன்படுத்துவதற்கு, உன்னிடம் நீ ஆலோசிக்காமல் அனுமதி (Allow God to use you without consulting you).

அன்பானவர்களே, பண்டிகையில் கொண்டாட்டம் முக்கியம் அல்ல. நம் வாழ்வு திண்டாட்டமாக மாறிவிடக் கூடாது என்பது முக்கியம். எனவே, நம் வரலாறு என்ன? நம் வரவு என்ன? நம் வர்த்தமானம் என்ன? என்பதைச் சிந்தித்துப் பார்த்து, நம் வாழ்வைச் சரிசெய்வோம், கடவுள் தரும் ஆசியைப் பெறுவோம், ஆமென்.

அருள்திரு. P. பிரின்ஸ்லி சாம் ஏசுதாஸ்

ஆயர், கன்னங்குளம்

பற்றுறுதியில் கட்டப்படும் திருச்சபை

இ.ச. 32: 7-14 யூதா 20-25

தி.பா. 65 மத். 16: 13-19

"அன்பானவர்களே, தூய்மை மிகு விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டு உங்கள் வாழ்வைக் கட்டி எழுப்புங்கள்; தூய ஆவியின் துணையுடன் வேண்டுதல் செய்யுங்கள், கடவுளது அன்பில் நிலைத்திருங்கள் என்றுமுள்ள நிலைவாழ்வை பெற நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இரக்கத்தை எதிர்பார்த்திருங்கள்" (யூதா 20, 21).

திருச்சபை என்பது இறைமகன் இயேசுவின் திருஉடல். இது பற்றுறுதியாளர்களின் கூட்டம். Fr. தியாகு அவர்கள் தனது இறையியல் பார்வையில் திருச்சபையைப் பற்றி கூறும்போது "ஆதி மனிதன் ஆதாமின் அயர்ந்த நித்திரையின் வழியாக ஏவாள் வெளிப்பட்டதுபோல், இறைமைந்தன் இயேசுவின் மூன்று நாள் உறக்கத்தின் வழியாக திருச்சபை உருவாகியது" என்று குறிப்பிடுகிறார்.

மீட்பையும், தூய ஆவியையும் பெற்ற குடும்பம்தான் திருச்சபை. இறைவன் நமது வாழ்வில் செயல்படுகின்றவர் என்பதைப் புரிந்துக்கொள்ளும் இடம் திருச்சபை. இயேசு கிறிஸ்து சிலுவையில் சிந்திய இரத்தத்தின் மூலம் தன் பாவங்கள் மன்னிக்கப்பட்டவர்கள் இணைந்து தொழுகை செய்யும் இடம்தான் திருச்சபை.

1 கொரி. 12:12-இல், உடல் ஒன்றே; உறுப்புகள் பல. உடலின் உறுப்புகள் பலவாயினும் உடல் ஒன்றாயிருப்பதுபோல கிறிஸ்துவும் இருக்கிறார். திருச்சபை ஆண்டவரின் சரீரம், அமைதியின் இடம். இறைமக்கள் அனைவரும் ஒற்றுமையுடனும், ஒப்புரவுடனும், நீதியுடனும், வாழக் கற்றுக்கொள்ளும் இடம். திருச்சபையில் நடக்கும் தொழுகையின் வழியாக அமைதி, சமாதானம், சந்தோஷம், இறைநம்பிக்கை உருவாகிறது. யாக். 2: 8-இல் உன் மீது நீ அன்பு கூர்வதுபோல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக!

திருச்சபையில் எவருக்கும் முன்னுரிமையோ பட்சபாதமோ இல்லை. ஆண்டவரின் இல்லத்தில் வருவோர் இறைவனைத் தரிசிக்கவும் சேவிக்கவும் உரிமைப்பட்டவர்களாக இருக்கிறார்கள். தொழுகையில் காணப்படும் அனைத்தும் ஆண்டவரை மகிமைப்படுத்த வேண்டும். மனித மேன்மைகளைப் பட்டியல் போட்டுக் காட்டும் இடமல்ல திருச்சபை. சிலுவையில் இயேசு கிறிஸ்து சிந்திய இரத்தத்தின் வழியாகப் பாவங்கள் மன்னிக்கப்பட்டவர்கள் சேர்ந்து

வாழ்கின்ற இடம்தான் திருச்சபை. எனவேதான் பவுல் அடிகளார் எபே. 2: 20-இல் "திருத்தூதர்கள், இறைவாக்கினர்கள் ஆகியோர்களை அடித்தளமாகவும், கிறிஸ்து இயேசுவையே மூலைக்கல்லாகவும் கொண்டு அமைக்கப்பட்ட கட்டடமாய் இருக்கிறீர்கள்" என்று கூறுகிறார். கிறிஸ்துவின் உறவில் திருச்சபை முழுவதும் இணைந்து தூய சபையாய் வளர்ச்சி பெறுகிறது. இத்திருச்சபை எம் முறைகளில் கட்டப்படுகிறது.

1. கிறிஸ்துவால் கட்டப்படுதல் : (யோவா. 16: 8)

அவர் வந்து பாவம், நீதி, தீர்ப்பு ஆகியவை பற்றி உலகினர் கொண்டுள்ள கருத்துகள் தவறானவை என கூறுவார். இச்சை, இறைகட்டளைகளை மீறுதல், கீழ்ப்படியாமை, பெற்றோரையும் கடவுளையும் ஏமாற்றுதல், தீய வாழ்வு, தீய செயல்கள் மூலம் நமது வாழ்வை இழந்துபோகின்ற வாழ்வு இவைகள் கலந்த கலவைதான் பாவ வாழ்க்கை. யோவா. 5: 14-இல் "இதோ பாரும், நீர் நலமடைந்துள்ளீர்; இதைவிடக் கேடானது எதுவும் உமக்கு நிகழாதிருக்க இனிப் பாவம் செய்யாதீர்". 1 யோவா. 3: 4-இல் பாவம் செய்யும் அனைவரும் சட்டத்தை மீறுகின்றனர். சட்டத்தை மீறுவதே பாவம். 1 யோவா. 3: 9-இல் கடவுளிடமிருந்து பிறந்தவர் எவரும் பாவம் செய்வதில்லை; ஏனெனில் கடவுளின் இயல்பு அவரிடம் இருக்கிறது. அவன் இறைவனால் பிறந்தபடியால் பாவம் செய்வது இல்லை. உரோமர் 3: 23, 24-இல் எல்லாருமே பாவம் செய்து கடவுள் கொடுத்த மேன்மையை இழந்து போயினர். பாவம் நம்மை இறைவனிடமிருந்து பிரிக்கிறது. நீதி. 1: 8-இல் குற்றம் செய்வர் வழி கோணலானது, குற்றமற்றவர் செய்கை நேர்மையானது. 1 பேதுரு 1: 15-இல் உங்களை அழைத்தவர் பரிசுத்தராய் இருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலும் பரிசுத்தராயிருங்கள்.

2. தூயாவியாரால் கட்டப்படுதல் : (1 யோவா. 2: 27)

நீங்கள் அவரிடமிருந்து பெற்றுக்கொண்ட அருள்பொழிவு உங்களுள் நிலைத்திருக்கிறது. அதனால் உங்களுக்கு எவரும் கற்பிக்க வேண்டிய தேவையில்லை. மாறாக, நீங்கள் அவரிடமிருந்து பெற்றுக்கொண்ட அருள்பொழிவால் அனைத்தையும் கற்றுக்கொள்கிறீர்கள். அவ்வருள்பொழிவு உண்மையானது, பொய்யானது அல்ல; நீங்கள் கற்றுக்கொண்டதற்கேற்ப அவரோடு இணைந்து வாழுங்கள்.

தி.ப. 1:8-இல் தூய ஆவி உங்களிடம் வரும்போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று எருசலேமிலும், யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடையெல்லை வரைக்கும் எனக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள். ரோமர் 8: 26-இல் இவ்வாறு தூய ஆவியார் நமது வலுவற்ற நிலையில் நமக்குத் துணைநிற்கிறார். எப்படி நாம் இறைவனிடம் வேண்டுவது என்று நமக்குத் தெரியாது. தூய ஆவியார் தாமே சொல்வடிவம் பெறமுடியாத நம்முடைய பெருமூச்சுகளின் வழியாக நமக்காய்ப் பரிந்து பேசுகிறார்.

திருச்சபையைக் கட்டி எழுப்ப தூய ஆவியும் இணைந்து செயல்பட வேண்டும் என்பதை உணரமுடிகிறது (லூக். 24: 49).

3. ஐக்கியத்தில் கட்டப்படுதல் : (எபே. 4: 23-24)

உங்கள் மனப்பாங்கு புதுப்பிக்கப்பட வேண்டும். கடவுளது சாயலாகப் படைக்கப்பட்ட புதிய மனிதருக்குரிய இயல்பை அணிந்துகொள்ளுங்கள். அவ்வியல்பு உண்மையான நீதியிலும், தூய்மையிலும் வெளிப்படும். தூய ஆவியானவரின் ஒருமைப்பாடு வலிமையையும், சரியான பாதையையும், வளர்ச்சி அடைவதற்கான அருளையும் தருகிறது (எபே. 4: 1b). நாம் எல்லோரும் இறைமகனைப் பற்றிய அறிவிலும் நம்பிக்கையிலும் ஒருமைப்பாட்டை அடைவோம். கிறிஸ்துவிடம் காணப்பட்ட நிறைவைப் பெறுமளவுக்கு நாம் முதிர்ச்சியடைவோம்.

உரோமர் 12: 10-இல் உடன்பிறப்புகள் போன்று ஒருவருக்கொருவர் உளங்கனிந்த அன்பு காட்டுங்கள். பிறர் உங்களைவிட மதிப்புக்கு உரியவரென எண்ணுங்கள். கொலோ. 2: 2-இல், என் உழைப்பால் உள்ளங்கள் யாவும் ஊக்கமடைய வேண்டும். அன்பினால் அனைவரும் ஒன்றாய் இணைக்கப்பட வேண்டும். கடவுளுடைய மறைபொருளாகிய கிறிஸ்துவை யாவரும் அறிந்து உணரவேண்டும். அந்த அறிவுத் திறனால் உறுதியான நம்பிக்கையை நிறைவாய்க் கிறிஸ்துவிடமிருந்து பெறவேண்டும். 1 பேது. 1: 2-இல் கிறிஸ்துவின் திருத்தூதனாகிய பேதுரு எழுதும்போது அருளும், அமைதியும் உங்களிடம் பெருகுக! கடவுளின் முன்னறிவிப்பின்படி இயேசு கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியவும், அவரது இரத்தத்தால் தூய்மையாக்கப்படவும் நீங்கள் தூய ஆவியால் இறைமக்களாய்த் தேர்வு செய்யப்பட்டீர்கள். கிறிஸ்துவின் ஆழமான அன்பு, ஐக்கியம், விட்டுக்கொடுத்தல், நேசித்தல், மன்னித்தல் கிறிஸ்தவ ஒருமைப்பாட்டை வலுப்படுத்தும். இந்த நாட்களில் திருச்சபையின் சாட்சியில், ஒருமைப்பாடு குடும்பங்களில் தோன்றி, திருச்சபையில் வளர்ந்து, சமூகத்தில் பரவ வேண்டும். இந்த அன்புதான் கிறிஸ்தவர்களை அடையாளப்படுத்த வேண்டும், ஆமென்.

அருள்திரு. P. பால் சேம்சன்

ஆயர், அம்மாண்டிவிளை

LITURGICAL COLOURS
2025

December 24 Evening to January 6	White (Christmas Season)
January 7 to March 4	Green (Epiphany Season)
March 5 to April 19	Purple (Lenten Season)
April 20 to June 7	White (Easter Season)
June 8	Red (Pentecost Sunday)
June 9 to June 14	Green (Pentecost Season)
June 15	White (Trinity Sunday)
June 16 to November 29	Green (Pentecost Season)
November 30 to December 24 Morning	Purple (Advent Season)

திருவெளிப்பாடு நூலில் குறிப்பிடப்பட்டுள்ள
ஆசியாவின் ஏழு திருச்சபைகள்
(திவெ. 1: 4 — 3:22)

வெளியீடு

தொடர்புத்துறை
கன்னியாகுமரிப் பேராயம்